இஸ்லாமிய வரலாறு

பாகம்-1 - பகுதி -1



ஏ.எம்.அபூபக்கர்

இஸ்லாமிய வரலாறு

பாகம் 1 பகுதி 1

ஏ.எம்.அபூபக்கர்

இஸ்லாமிய ஆராய்ச்சிக் கழகம்
62, ஒஸ்மன் வீதி, சாய்ந்தமருது-5

Title:- **ISLĀMIYA WARALĀRU**
(History of Islam)
Vol. I Part. i

Author:- A.M. ABOOBUCKER

Publisher:- Islamic Research Academy
62,Osman Road,
Sainthamaruthu-5
Sri Lanka

Printer:- ***An - Noor Graphics Offset,***
Kalmunai. T.Phone : 067-20336

Firts Edltion:- October 1977

Second Edition:- June 1982

Revised Edition:- December 1998

Copy Right:- © Author

Pages:- vi + 234 = 240

Copies:- 2000

Price:- [redacted]

ISBN 955 - 96577 - 0 - 4

முதலாம் பதிப்பின் முன்னுரை

ஏக காலத்தில் உலகின் பெரும் பகுதியை ஆட்சி செய்த சில மக்கட் சமூகங்களை வரலாறு தன் பக்கங்களிலே பதிந்து வைத்திருக்கிறது. அத்தகைய மக்களுள் முன்னிற்போர் அறேபிய முஸ்லிம்களாவர்.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன், பண்பாடோ நாகரிகமோ தெரியாத நாடோடிகளாகத் திரிந்த அறேபியர், பிற்காலத்தில் இஸ்லாம் மத போதனைகளால் நாகரிகச் சிறப்புமிக்கவர்களாய் மாறியிருந்ததோடு, உலகின் பெரும் பகுதியை ஆட்சி செய்யும் வலிமையையும் பெற்றிருந்தனர். உலகின் நாகரிக, பண்பாட்டு வளங்களுக்காகப் பெரும் பணியாற்றிய மக்கள் உலகில் அவர்களைப் போல் வேறு எவருமே இல்லை எனலாம். அவர்கள் தம் பிற்காலச் சந்ததியினருக்காக விட்டுச் சென்ற கலை, கல்வி, கலாசாரச் செல்வங்களைப் பற்றித் தற்கால ஆய்வுலகு ஆய்வுகள் செய்யுமளவுக்கு அவர்களின் பணி மேலோங்கி இருந்தது. இத்தகைய பெருமைக்குரிய சமூகத்தாரின் வரலாற்றை விளக்குவதே இந்நூலாகும்.

வரலாறு என்பது மக்கட் சமூகத்தின் கண்ணாடியாகும். அதன் மூலம் தம்மையும், தம் முன்னோரின் குறைநிறைகளையும் பார்க்கமுடியும். ஆனால் கண்ணாடி கீறல்கள், விரிசல்கள் அற்றதாயும், களங்கமற்றதாயும் இருக்க வேண்டியது அவசியம். அவ்வாறின்றேல், அது யதார்த்தமான உருவத்தைப் பிரதிபலிக்க இயலாது.

இந்த வகையில் நோக்கும் போது, வரலாறு எழுதுவோனின் பணி மிகப் பொறுப்பு வாய்ந்தது. களங்கமற்ற வரலாற்றுக் கண்ணாடியை உருவாக்கி அளிக்க வேண்டிய பொறுப்பு அவனைச் சார்ந்தது. உண்மையை அறிவதும் அதனை வெளிப்படுத்துவதுமே அவனது நோக்கமாய் இருக்க வேண்டும். காய்தல், உவத்தலின்றிச் சம்பவங்களை நோக்கவும், உணர்ச்சிகளுக்கு அடிமைப்படாதிருக்கவும் அவன் முயல வேண்டும். இந்த நிலையில் வரலாறு உருவாக்கப்படும் போது தான், மக்கள் அதன் மூலம் தம் இனத்தின் கடந்த கால, நிகழ் கால உருவத்தை யதார்த்த பூர்வமாகப் பார்க்க முடியும்.

இந்த அடிப்படையிலேயே இவ் வரலாற்று நூலை எழுத முயன்றுள்ளேன். இஸ்லாமிய வரலாறு எழுதிய பலர் பக்கச் சார்புடையோராய் இருப்பதை அவர்களின் நூல்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். இதற்குக் காரணம் குறிப்பிட்டதொரு வர்க்கத்தாரை அவர்கள் ஏதோ ஒரு வகையில் சார்ந்திருந்தமையே ஆகும். ஆனால், நான் முடிந்தவரை, எவரையும் சாராமல் நடுநிலை நின்று, இந்த வரலாற்றை எழுத முயன்றுள்ளேன்.

இந்நூல் எழுதப்படுவதற்கு மிக முக்கிய காரணம் ஆங்கிலம், அறபு, பிரஞ்சு, ஜேர்மன் போன்ற மொழிகளில் உள்ளது போலத் தமிழில் இத்தகைய வரலாற்று நூல்கள் அதிகமில்லாமை என்பதே ஆகும். தமிழில் வெளிவந்த இரண்டொரு நூல்கள் கூட சுருக்கமாயும் படிப்பவர்க்கு அலுப்பூட்டாத வகையிலும் எழுதப்படவில்லை. அத்தோடு அவை வெறும் இராணுவ நடவடிக்கைகளின் விவரணமாகவே அமைந்துள்ளன. இஸ்லாமிய வரலாறு, இஸ்லாமிய நாகரிகம் முதலான துறைகள், இலங்கையில் உயர்கல்வி பெறும் மாணவர்களுக்குப் பாடங்களாக இருக்கும் இவ்வேளையில், இஸ்லாத்தின் அரசியல் வரலாற்றை மட்டுமன்றி அக்கால முஸ்லிம்களின் உள்ளார்ந்த வாழ்வு, அவர்களின் சமூக, பொருளாதார, நாகரிக வளர்ச்சி போன்ற அம்சங்களையும் சுருக்கமாக, முரண்பாடின்றிக் கூறும் ஒரு நூல் அவசியம் என்பதை உணர்ந்தே இந்நூலை எழுதத் துணிந்தேன்.

இஸ்லாத்தின் ஆரம்பகாலம் முதல் இந்திய உபகண்டத்தில் மொகலாயர் ஆட்சி ஏற்பட்டது வரையிலான இஸ்லாமிய வரலாற்றைக்கூறும் இப் பெருநூலைத் தனிநூலாக வெளியிடத் துணிவேற்படவில்லை. வாசகர்களின் வசதி கருதி ஐந்து பாகங்களாகப் பிரித்து வெளியிட எண்ணியுள்ளேன். தற்போது உங்கள் கரங்களிலிருக்கும் இம் முதலாம் பாகத்தில் இஸ்லாத்தின் தோற்றம் முதல் 'குலபாயே ராஷிதீன்'களின் இறுதிக் கலீபாவான ஹஸரத் அலீயின் ஆட்சிக்காலம் ஈறாகவுள்ள வரலாறு எழுதப்பட்டுள்ளது. ஏனைய பாகங்களையும் மிக விரைவில் வெளியிட எண்ணியுள்ளேன்.

இந்நூல் குறுகிய கால முயற்சியின் பெறுபேறல்ல. சுமார் பத்தாண்டுகால முயற்சியின் விளைவு இது. ஆயினும் இந்நூலில் என்னை அறியாமலேயே பல குறைகள் நிகழ்ந்திருக்கலாம். பிழை காணும் சான்றோர் அவற்றை எனக்கு அறிவிப்பின் அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்வேன்.

இந்நூலாக்கத்திற்கு பலர் எனக்கு ஒத்தாசை புரிந்துள்ளனர். அவர்களுள் காலஞ்சென்ற பேரறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். அவ்வப்போது ஊக்கமும் ஆலோசனைகளும் வழங்கி உற்சாகமூட்டிய அவருக்கு நன்றியோடு கூடிய அஞ்சலி செலுத்துகிறேன்.

இந்நூலுக்கு அட்டை அமைத்துதவிய ஓவிய நண்பர் எம்.எம்.ஏ.கரீம் அவர்களுக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன். இந்நூலை அழகிய முறையில் அச்சிட்டுத்தந்த சாவகச்சேரி மட்டுவில் திருக்கணித அச்சகத்தாருக்கும் என் நன்றிகள்.

''வாஹித் லொட்ஜ்'' **ஏ.எம். அபூபக்கர்**
பிரதான வீதி, சாய்ந்தமருது-3
15-10-1977

மூன்றாம் பதிப்பின்

முன்னுரை

இஸ்லாமிய வரலாறு முதலாம் பாகத்தின் மூன்றாம் பதிப்பு சுமார் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போது வெளிவருகிறது. பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பு, பட்டப் பின் படிப்பு வகுப்புக்களில் இஸ்லாமிய கலாசாரத்தைப் பயிலும் மாணவர்களின் நலன்கருதி இந்நூலை விரிவாக எழுதும் தேவை ஏற்பட்டது. அவ்வாறு எழுதிவிட்டுப் பார்த்தபோது, இந்நூல் மிகப்பெரிய அளவில் இருக்கக் கண்டேன்.

அதனால், வாசகர்களின் வசதி கருதி இந்த முதலாம் பாகத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்து வெளியிடத் தீர்மானித்தேன்.

இஸ்லாமிய யுகத்திற்கு முற்பட்ட அறியாமைக் காலத்தையும் நபி முஹம்மத் (ஸல்) அவர்களது காலத்தையும் உள்ளடக்கியதாக முதலாவது தொகுதியின் இந்த முதலாவது பகுதி வெளிவருகிறது. இரண்டாவது பகுதி நேர்வழி காட்டப்பெற்ற கலீபாக்களின் காலத்தை உள்ளடக்கியதாக அமையும்.

இந்த நூல் தொடரின் மற்றத் தொகுதிகளையும் இவ்வாறே எதிர்காலத்தில் புதிதாகவும் விரிவாகவும் எழுதி வெளியிட எண்ணியிருக்கிறேன்.

புதிய இப்பதிப்புக்கு வாசகர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் என்று நம்புகிறேன்.

ஏ. எம். அபூபக்கர்

"போஸ்தான்"
62,ஒஸ்மான் வீதி,
சாய்ந்தமருது-5
15 - 11 - 98

பொருளடக்கம்

1. அறபு நாடும் அறேபியரும் ●1

நிலமும் மக்களும்
அறபு மக்கள்
புவியியற் செல்வாக்கு
சர்வதேசத் தொடர்புகள்

2. அறியாமைக்கால அறேபியா 3●

சமய நிலை
சமூக நிலை
பொருளாதார நிலை
கலாசார நிலை
அரசியல் நிலை

3. நபி முஹம்மதும் இஸ்லாத்தின் தோற்றமும் 110

தியானமும் வேதவெளிப்பாடும்
மதீனாவுக்கு ஹிஜ்ரத்
மதீனா வெற்றி
போர்கள்
பிரியாவிடை ஹஜ்
பிணியும் மரணமும்
ஒரு மதிப்பீடு
தேசப்படங்கள்
உசாத்துணை நூல்கள்

1. அறபு நாடும் அறேபியரும்

அறபு நாடு ஆசியாக் கண்டத்தின் தென் மேற்குப் பக்கமாக உள்ள ஒரு தீபகற்பம். ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களும் சந்திக்கும் இடத்தில் இந்த தீபகற்பம் அமைந்திருக்கிறது. இந்தப் புவியியல் அமைப்பே உலகளாவிய பேரரசு ஒன்றை இஸ்லாம் கட்டி எழுப்புவதற்குக் காரணமாக இருந்தது. அறேபியாவின் சுமார் மூன்றில் ஒரு பகுதி மணற் பாங்கான பாலைவெளிகளால் மூடப்பட்டிருக்கிறது. இங்கே உள்ள குன்றுகள் பாழடைந்தவையாயும் பள்ளத்தாக்குகள் இறந்துபட்ட ஆறுகளின் உலர்ந்த பாதைகளாயும் காணப்படுகின்றன. தென்மேற்குப் பிரதேசத்தைத் தவிர வருடம் முழுக்க ஓடக்கூடிய ஆறுகள் இங்கு இல்லை. ஆயினும், சிறிய அருவிகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இந்த நாட்டின் நிலப்பரப்பு உலகிலேயே மிகப் பெரியதாயினும், சுமார் மூன்றரைக் கோடி மக்களே அறேபியாவிலுள்ள நாடுகள் அனைத்திலும் வாழ்கின்றனர். கிழக்கு எல்லையாக பாரசீக விரிகுடா, உம்மான் (ஓமான்) விரிகுடா ஆகியவற்றையும் தெற்கு எல்லையாக இந்து சமுத்திரத்திலுள்ள அறபுக் கடலையும் மேற்கு எல்லையாகச் செங்கடலையும் வடக்கு எல்லையாக சிரியப் பாலைவனத்தையும் கொண்ட இந்த நிலப்பரப்பை அறேபியர் 'ஜஷீரதுல் அறப்' (அறபுத் தீவு) என்றே அழைத்து வந்தனர்.

இந்தப் பெருநிலப்பரப்பை அறேபியர் ஜஷீரதுல் அரப் (அறபுத் தீவு) என்று அழைத்தமைக்குக் காரணம், அறேபியாவின் வடக்கே யூபிரதிசு (புராத்) நதி அமைந்திருந்தமை ஆகும். கடலால் அல்லது நீரால் முற்றிலும் சூழப்பட்ட ஒரு நிலப்பரப்பையே தீவு (ஜஷீரா) என்பர். சின்னாசியாவில் உற்பத்தியாகி தென் கிழக்கே சிரியா, இராக் ஆகிய நாடுகளின் ஊடாக ஓடி, தைகிரிசு (தஜ்லா) நதியில் கலந்து 'ஷத்துல் அறப்' என்ற நதியாக உருவெடுத்து, பாரசீக விரிகுடாவில் விழும் யூபிரதிசு நதியை அவர்கள் தமது நாட்டின் வடக்குப் புற எல்லையைச் சூழ்ந்திருக்கும் நீராகக் கருதியமையாலேயே இவ்வாறு அழைத்துவந்தனர்.[1] இந்தக் கணிப்பின் அடிப்படையிலேயே மகா அலெக்ஸாந்தரின் எழுச்சியோடு அறிமுகமான கிரேக்க எழுத்தாளர் பலர் அறேபியாவின் வடக்கு எல்லையாக யூபிரதிசு நதியைக் குறிப்பிட்டிருக்கின்றனர். ஆனால் அக்கால அறேபியரின் கணிப்பு தவறானது ஆகும். ஏனெனில், யூபிரதிசு நதிக்கும் அறேபியாவுக்கும் இடையில் அமைந்திருந்த சிரியாப் பாலைவனமும் பண்டைய பாரசீகத்தின் சில பகுதிகளும் அறேபியாவின்

1. மு. ஜமுல் புல்தான் - யாகூத் ஹமவீ பாகம் ii பக்கம் 137

பகுதிகளாக ஒருபோதும் கருதப்படவில்லை. அவர்கள் ஒரு யுகத்திலேயே அறேபியாவை ஒரு தீவு என்று அழைத்தனர். உண்மையில் அது மூன்று பக்கங்களில் நீராலும் ஒரு பக்கத்தில் நிலத்தாலும் சூழப்பட்ட ஒரு தீபகற்பமே ஆகும்.[2]

நிலமும் மக்களும்

அறபு நாடு, அறேபியா (அறப்) என்ற பெயரைப் பெற்றமைக்குப் பல காரணங்களும் விளக்கங்களும் கூறப்படுகின்றன. 'அறப்' என்ற சொல் 'இ.ராப்' என்ற சொல்லிலிருந்து பிறந்தது. 'இ.ராப்' என்பதன் கருத்து 'பிழையின்றி தெளிவாகப் பேசுதல்' என்பது ஆகும். அறேபியர் தங்களை நல்ல பேச்சாற்றல் உடையவர்களாகவும் தூய மொழி பேசுபவர்களாகவும் கருதியமையால், அவர்கள் 'அறப்' என்ற பெயரைத் தமக்கும் அறேபியா என்ற பெயரைத் தமது நாட்டிற்கும் இட்டனர். தாம் அல்லாத மற்றவர்களை அவர்கள் 'அஜம்' (ஊமை) என்று கருதினர். இது சிலரது கருத்து.

நாட்டின் பெயர்

கஹ்தான் என்பாரின் புதல்வரும் யமன் அறேபியரின் மூலவருமான ய.ருப் என்பாரே இப்போது அறேபியா என அழைக்கப்படும் நாட்டில் முதன் முதலாகக் குடியேறி வசித்து வந்தவர் என்றும் அவரே தமது பெயரை முழு நாட்டிற்கும் அங்கு வாழ்ந்த மக்களுக்கும் இட்டார் என்றும் அதிலிருந்தே 'அறப்' என்ற பெயர் ஏற்பட்டது என்றும் பரம்பரையியலில் ஆற்றலுடைய சிலர் கூறுகின்றனர். ஆனால், இந்தக் கருத்து வரலாற்றுச் சான்றுகளுக்கும் பொதுவான ஒப்பு விதிக்கும் முரணானது என்று ஸய்யித் முழப்பருத்தின் நத்வீ கூறுகின்றார். அறேபியாவில் முதலில் குடியேறி வசித்தவர் ய.ருப் அல்லர் என்றும் எந்த மொழியியல் விதியின் கீழும் 'அறப்' என்ற சொல் 'ய.ருப்' என்ற சொல்லிலிருந்து பிறந்தது என்பதை நிரூபிக்க முடியாது என்றும் அவ்வாறு ய.ருபின் பெயர் இடப்பட்டிருந்தால் அது முதலில் அவர் வாழ்ந்த யமன் நாட்டிற்கே இடப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் வாதித்து இந்தக் கருத்தை மறுத்துரைத்திருக்கிறார்.[3]

வேறு சிலர், சில நாடுகள் ரூம், துர்க் முதலான பெயர்களால் அழைக்கப்படுவது போல இந்த நாடும் 'அறப்' என்ற பெயரால் காரணம் எதுவும் இல்லாமல் அழைக்கப்படுகிறது என்றும் இது ஒரு பண்பை அல்லது நிலைமையை உணர்த்தும் சொல் அன்று என்றும் கருதுகின்றனர்.

பொதுவாக, புவியியலாளர்கள் இந்த நாட்டின் முதலாவது பெயர்

2. *ஜஸீரா என்பதற்கு 'தீபகற்பம்' என்ற பொருளும் உண்டு. (Lane's Arabic English Lexicon, II. 419*
3. *Dr.S.M. Nadvi, A Geographical History of the Quran, p. 31*

அரபா (ARABAH) என்றும் அதுவே காலக்கிரமத்தில் அறப் (அறேபியா) என ஆயிற்று என்றும் பின்னர் அங்கு வாழ்ந்த மக்கள் நாட்டின் பெயரால் அறேபியர் என்று அழைக்கப்பட்டனர் என்றும் கூறுகின்றனர். பெரும்பாலும் செமித்திய குடும்பத்தைச் சேர்ந்த எல்லா மொழிகளிலும் 'அறபா' என்றால் பாலைவனம் என்று பொருள். (ஹீப்ரு மொழியில் கானகம் என்று பொருள்) அறபு நாட்டின் பெரும்பகுதி பாலைவனமாகவும் போதிய நீரோ பசுந்தரைகளோ இல்லாத கானகமாகவும் இருந்தமையால், அந்த நாடு அறபா என அழைக்கப்படலாயிற்று என்பது அவர்களது கருத்து.

இப்போதுள்ள அறேபியரின் முன்னோரும் மக்காப்பள்ளத்தாக்கில் வாழ்ந்தவருமான நபி இஸ்மாஈல் வாழ்ந்த பகுதியை அல்குர்ஆன் 'விவசாயம் செய்யப்படாத நிலம்' என்று குறிப்பிட்டு (14:37), அவர் வாழ்ந்த பகுதியின் இயல்பை மட்டும் சுட்டிக்காட்டுகின்றது. இது 'அறபா' என்ற சொல் உணர்த்தும் பொருளையே உறுதிப்படுத்துகின்றது. நபி இஸ்மாஈல் அக்காலத்தில் வாழ்ந்த நிலப்பகுதிக்குப் பெயர் எதுவும் வழங்காத காரணத்தால், அல்லாஹ் அதனை இவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம். தௌராத் வேதத்தில் (வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில்) அவர் வாழ்ந்த பகுதியைச் சுட்ட பாலைவனம் அல்லது மலட்டு நிலம் என்ற கருத்தைத் தரும் 'மித்பர்' என்ற ஹீப்ரு மொழிச் சொல் ஆளப்பட்டிருக்கின்றது. எனவே, பாலைநிலம் என்ற கருத்தைத் தரும் 'அறபா' என்ற சொல்லிலிருந்தே அறேபியா என்ற நாட்டுப் பெயர் வந்திருக்கவேண்டும் என்பதே அதிகமானோரின் கருத்து. அறபு நாட்டின் பெயர் சம்பந்தமாக வேறு சில கருத்துக்களும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

மிகப் புராதன எழுத்தாளர்கள் - குறிப்பாக எரொதோஸ்தீனஸ், ஸ்ட்ராபோ, பிளினி முதலானோர் அறேபியாவைத் தென்பகுதி, வட பகுதி என இரண்டாகப் பிரித்திருந்தனர். ஆனால், பண்டைய கிரேக்க, எகிப்திய வானியலாளரான தொலமி கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அறேபியா பீட்ரா, அறேபியா பீலிக்ஸ், அறேபியா டிஸேர்டா என மூன்று பிரதேசங்களாக அதனைப் பிரித்திருந்தார். அவரது கணிப்பின் படி அறேபியா பீட்ரா, எகிப்தின் எல்லை முதல் புஸ்ரா வரையிலான பிரதேசத்தையும் தத்மூர், யஹூதியா, பலஸ்தீன் ஆகிய பகுதிகளையும் கொண்ட வடமேற்கு எல்லையையும் அறேபியா டிஸேர்டா, யூபிரதிசு நதியிலும் மெஸொபோதேமியாவிலும் ஆரம்பித்து அறேபியா பீட்ராவின் வடமேற்கு எல்லையில் முடிவுற்ற வடகிழக்குப் பிரதேசத்தையும் அறேபியா பீலிக்ஸ், அறபுத் தீபகற்பத்தின் எஞ்சிய பிரதேசங்கள் முழுவதையும் உள்ளடக்கி இருந்தன. ஆனால், அறபுப் புவியியலாளர்கள் கால நிலை, மண்ணின் இயல்பு, மக்கள் தோற்றம் முதலியவற்றைப் பொறுத்து, இந்தத் தீபகற்பத்தை அரூழ், நஜ்த், யமன், ஹிஜாஷ், திஹாமா என ஐம்பெரும்

மாகாணப் பிரிவுகள்

மாகாணங்களாகப் பிரித்திருக்கின்றனர்

நஜ்த் மாகாணத்தின் வடகிழக்கு எல்லைகளில் உள்ள இராக்கிற்கும் பாரசீக வளைகுடாவுக்குமிடையில் அமைந்து கிடக்கும் பிரதேசம் அரூழ் என அழைக்கப்படுகிறது. அரூழ் என்றால் ஓரம் அல்லது பக்கம் என்று பொருள். அறேபிய தீபகற்பத்தின் கிழக்குப் பக்கமாக - ஓரப்பிரதேசமாக - இந்த மாகாணம் அமைந்திருப்பதால், இது இவ்வாறு அழைக்கப்படுகிறது. இந்த மாகாணம் யமாமா, பஹ்ரைன், உமான் (ஓமான்) ஆகிய மாவட்டங்கள் மூன்றையும் உள்ளடக்கியது. யமாமா மாவட்டம் கிழக்கே உமான், பஹ்ரைன் ஆகிய மாவட்டங்களையும் தெற்கே அஹ்காப் பாலைவனத்தையும் மேற்கே ஹிஜாஷ், யமனின் ஒரு பகுதி ஆகியவற்றையும் வடக்கே நஜ்த் மாகாணத்தையும் எல்லைகளாகக் கொண்டது. இந்த மாவட்டத்தின் வட பகுதி மிகவும் செழிப்பு வாய்ந்த பிரதேசம் ஆகும்.

அரூழ்

பண்டைக் காலத்தில் யமாமாப் பிரதேசம் தஸ்ம், ஜதீஸ் ஆகிய வர்க்கங்களைச் சேர்ந்த மக்களின் வாழிடமாக இருந்தது.[5] ஹிஜ்ர் (அல்லது கரிஆ), ஜ.்.தா ஆகியவை அவர்களது புகழ் பெற்ற நகரங்களாக விளங்கின.அவர்களது கட்டடங்கள், கோட்டைகள் ஆகியவற்றின் இடிபாடுகள் இஸ்லாத்தின் தோற்றகாலம் வரை யமாமாவில் காணப்பட்டன. இஸ்லாம் தோன்றுவதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு, பக்ர் பின் வாஇல் வர்க்கத்தின் கிளைக்குலமான பனூ ஹனீபா வர்க்கத்தினரின் வாழிடமாக யமாமா இருந்து வந்தது. இந்த வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு தூதுக்குழுவினர் ஹி. 8இல் மதினாவுக்கு வந்து இஸ்லாத்தைத் தழுவினர். போலித் தீர்க்கதரிசியாகத் தன்னைப் பிரகடனம் செய்திருந்த முஸைலமா இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவனே.

'அல் இஹ்ஸா.்.' என்றும் அழைக்கப்படும் பஹ்ரைன் மாவட்டம் ஒரு கரையோரப் பிரதேசம் ஆகும். இது கிழக்கே பாரசீக வளைகுடாவையும் தெற்கே உமானையும் மேற்கே யமாமாவையும் எல்லைகளாகக் கொண்டது. இந்த மாவட்டம் முத்துக்குளிப்புக்கு புகழ் பெற்ற இடமாக விளங்கி வருகிறது.

புராதன காலத்திலிருந்தே பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த மக்களின் வாழிடமாக இருந்து வந்த இந்த மாவட்டத்தின் வரலாறு பெரும்பாலும் யமாமாவின் வரலாறாகவே இருக்கிறது. யமாமாவில் வாழ்ந்த ஜதீஸ் வர்க்கத்தினர், யமாமாவின் அரசன் ஹிஸான் என்பானால் துரத்தப்படவே, அவர்கள் இங்கு வந்து வாழலாயினர். பின்னர், அத்னானின் மரபில் தோன்றிய

4. இஸ்லாமிய வரலாற்றை எழுத முனைந்த ஆங்கில எழுத்தாளர்கள் அறேபியாவை ஹிஜாஷ், நஜ்த், உம்மான், ஹழ்ரமவ்த், யமன் என ஐந்து மாகாணங்களாகப் பிரித்திருக்கின்றனர். இந்த ஒழுங்கே எமது நூலின் முதலாம், இரண்டாம் பதிப்புக்களில் பின்பற்றப்பட்டிருக்கிறது.

5. இந்த வர்க்கங்களின் மூலவர்களான தஸ்ம், ஜதீஸ் ஆகியோர் அல் அஷ்த் பின் இரம் பின் அவ்த் பின் ஸாம் பின் நூஹ் என்பாரின் வழித்தோன்றல்கள் ஆவர்.

அப்துல் கைஸ் வர்க்கத்தினர் இந்த மாவட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். ரபீஆ வர்க்கத்தாரும் இங்கு வாழ்ந்தனர். இஸ்லாத்திற்கு முந்திய பஹ்ரைனில் இவர்களே அதிகமாகக் காணப்பட்டனர். கி.பி. 6ஆம் நூற்றாண்டில், பாரசீக ஆட்சியாளர்களின் ஆதரவாளர்களால் இந்த மாவட்டம் ஆளப்பட்டது.இதற்கு பஹ்ரைனின் ஆட்சியாளனான அம்ர் பின் ஹின்த் என்பானால் கொல்லப்பட்ட அறபுக் கவிஞர் தரபாவின் கொலை விவரணம் சான்றாக இருக்கிறது. ஹி.6 (கி.பி. 630) இல், பஹ்ரைன் ஆட்சியாளர் முன்திர் பின் ஸாவீ தமது குடிகளோடு இஸ்லாத்தைத் தழுவினார். பிற்காலத்தில், கரமிதா இயக்கத்தாரின் எழுச்சிக்கும் நடவடிக்கைகளுக்கும் மத்திய தலமாக இந்த மாவட்டமே இருந்தது. இப்போது இந்த மாவட்டம் குவைத், கத்தர் (கட்டார்), அபுதாபீ, துபாய் என பல சிறு துண்டுகளாகப் பிரிந்து, மன்னர்களின் ஆட்சியின் கீழ் ஆளப்பட்டு வருகிறது.

உமான் (ஓமான்) மாவட்டம் இந்து சமுத்திரத்தின் ஒரு கிளையான உமான் விரிகுடாக் கரையில் அமைந்திருக்கிறது. இது, கிழக்கே உமான் விரிகுடாவையும் தெற்கே அறபுக் கடலையும் மேற்கே அஹ்காப் பாலைவனம், ஹழ்ரமௌத் ஆகியவற்றையும் வடக்கே பாரசீக விரிகுடா, பஹ்ரைன் மாவட்டம் ஆகியவற்றையும் எல்லைகளாகக் கொண்டிருக்கிறது. கரையோரங் களிலுள்ள நிலங்கள் செழிப்பானவை. இங்குள்ள மலைகளுள் மிகப்பெரியது அக்ழர் என்ற மலையாகும். இந்த மாவட்டத்திலுள்ள மலைகளில் சுரங்கங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. ஆறுகளில் இரத்தினக்கற்களும் பள்ளத்தாக்குகளில் தானியப்பயிர்கள், பழமரங்கள், நறுமணச்செடிகள் முதலியனவும் பெருமளவில் உள்ளன. இந்த மாவட்டம் நல்ல இனக்குதிரை கள், பசுக்கள், வெள்ளாடுகள் ஆகியவற்றுக்குப் பிரபல்யம் வாய்ந்தது. இஸ்லாத்திற்கு முன்பு இங்கே அஷ்த் வர்க்கத்தினர் வாழ்ந்தனர். இப்போது தனிநாடாக இருக்கும் இந்த மாவட்டம் உமான் ஸுல்தானால் ஆளப்படுகிறது. மஸ்கத் இதன் தலைநகராகும்.

அறேபியாவின் மத்திய பகுதியில் நஜ்த் மாகாணம் அமைந்திருக்கிறது. கடல் மட்டத்திலிருந்து சுமார் 1200 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ள இந்த மாகாணம் பாலைவனங்களும் மலைக்கணவாய்களும் நிறைந்த செழிப்பான ஓர் உயர் நிலமாகும். இடையிடையே பாலைவனச் சோலைகள் (Oases) என்று அழைக்கப்படும் பச்சைப் பெருந்தோட்டங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. இந்த மாகாணம் கிழக்கே அஹ்காப் பாலைவனம், பஹ்ரைன் ஆகியவற்றையும் தெற்கே யமாமாப் பிரதேசத்தையும் மேற்கே ஹிஜாஷ் பாலைவனத்தையும் வடக்கே சிரியாப் பாலைவனத்தையும் எல்லைகளாகக் கொண்டிருக்கிறது. இது மூன்று பக்கங்களில் பாலைவனங்களால் சூழப்பட்டிருக்கும் காரணத்தால் வெளியாரின் படையெடுப்புக்களில் இருந்து பாதுகாப்புப் பெற்ற ஒரு பிரதேசமாக இருந்து

நஜ்த்

வருகிறது. இங்கு ஈச்சமரச் செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்படுகிறது.

ஆரம்பத்தில் இங்கே பக்ர் பின் வாஇல் வர்க்கத்தினர் குலைப் என்பாரின் தலைமையில் வாழ்ந்து வந்தனர். ஐந்தாம் நூற்றாண்டுகளில் இங்கே கின்தா அரசு நிலைபெற்றிருந்தது. மிகப் பூர்வீக காலத்தில் இங்கே அத்னானின் வழித்தோன்றல்கள் வாழ்ந்து வந்தனர். பின்னர், பனூ தய் என்ற கஹ்லானீ வர்க்கக்கிளையினர் இங்குள்ள மலைப்பகுதிகளில் குடியேறி வாழ்ந்து வரலாயினர். பனூ ஹத்தீம், பனூ ஹத்பான், பனூ ஹவாஷின், பனூ ஸலீம் ஆகிய வர்க்கத்தினரும் இங்கு குடியேறி இருந்தனர். இப்போதைய ஸுஊதீ அறேபியாவின் தலைநகரமாக விளங்கும் ரியாழ் நகரம் இங்கேயே இருக்கிறது.

அறேபியாவின் தென்மேற்கு மாகாணம் யமன் என்று அழைக்கப்படுகிறது. இந்தச் சொல் செழிப்பு என்று பொருள் தரும் 'யும்ன்' என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. இந்த மாகாணம் மிகச் செழிப்பு வாய்ந்த ஒரு பிரதேசமாக இருந்தமையால், இவ்வாறு அழைக்கப்பட்டிருக்கலாம். யமன், அதிக செழிப்பும் நாகரிகச் சிறப்பும் மிகுந்த ஒரு அறேபிய மாகாணமாகும். விவசாய விருத்திக்குப் போதுமான மழை இங்கு பெய்கிறது. பண்டைக்காலத்தில் இந்த மாகாணம் 'அறேபியா பீலிக்ஸ்' (செழிப்பு வாய்ந்த அறேபியா) என அழைக்கப்பட்டது. இந்த நிலத்தின் செழிப்பும் இங்கு காணப்பட்ட செல்வங்களுமே இதற்கு இந்தப் பெயரைப் பெற்றுக் கொடுத்தன. இஸ்லாம் தோன்றுவதற்கு முன்னரும் தோன்றிய பின்னரும் இந்த மாகாணம் சிறந்த நாகரிகத்தின் மத்திய நிலையமாக விளங்கியது. பெருமளவில் இங்கே காணப்படும் கட்டடங்களினதும் கோட்டைகளினதும் சிதைவுகள் இதன் கடந்தகால மகிமைக்குச் சான்றாக இருக்கின்றன.

யமன்

இந்த மாகாணம் கிழக்கே உமான் பிரதேசத்தையும் தெற்கே அறபுக்கடல், 'அதன்' (ஏடன்) விரிகுடா ஆகியவற்றையும் மேற்கே செங்கடலையும் வடக்கே ஹிஜாஷ், நஜ்த், யமாமா ஆகிய பிரதேசங்களையும் எல்லைகளாகக் கொண்டிருக்கிறது. பண்டைக்காலங்களில் பல அரசுகளாகப் பிரிக்கப்பட்டிருந்த இந்தப் பிரதேசத்தில் அமாலீக்குகள், மாஈனீகள், ஆதுகள், ஸபஇயர், ஹிம்யரியாக்கள் முதலான பல்வேறு வர்க்கத்தினர் காலத்திற்குக் காலம் தத்தமது அரசுகளை நிறுவி இருந்தனர். இந்த மாகாணத்தின் ஊடாகவே இந்தியா, பாரசீகம், அபிசீனியா (எதியோப்பியா), எகிப்து, மெஸொபோதேமியா முதலான நாடுகள் அறேபியருடன் வர்த்தகத் தொடர்புகள் வைத்திருந்தன. வாசனைச் சரக்குகள், கனிப் பொருட்கள் ஆகியவற்றின் வர்த்தக மையமாகவும் இது விளங்கியது. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட தங்கம், செம்பு, சாம்பிராணி முதலான பொருட்கள் பிற நாட்டு வணிகர்களைப் பெரிதும் கவர்ந்தன. நாகரிகவிருத்தி அடைந்த பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்த வர்த்தகர்கள் இந்த மாகாணத்தின் உற்பத்திகளாலும் கனிப்பொருட்களாலும் கவரப்பட்டு,

தென் அறேபியாவுக்கு வருகை தந்தனர். இன்றும் கூட இந்த மாகாணம் அறேபியச் செல்வங்களின் களஞ்சியமாகக் கருதப்படுகிறது.

இஸ்லாத்தின் தோற்றகாலத்திற்குச் சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் அபிசீனியர் இந்த மாகாணத்தைக் கைப்பற்றி, எழுபது ஆண்டுகள் ஆட்சி செய்தனர். பின்னர், அவர்கள் பாரசீகரால் தோற்கடிக்கப்பட்டனர். ஹி.7 இல், யமனின் பாரசீக ஆளுனர் பாதான் இஸ்லாத்தைத் தழுவினார். ஹி 10 இல், யமனின் குடியிருப்பாளர் அனைவருமே இஸ்லாத்தைத் தழுவினர்.

இந்த மாகாணத்தில் பெரிய ஆறுகள் இல்லை. ஆயினும், சிற்றருவிகளும் சிற்றாறுகளும் அதிக அளவில் காணப்படுகின்றன. மலைகளிலிருந்து ஓயாமல் ஓடும் அருவிகள் இந்த மாகாணத்தைச் செழிப்பு நிறைந்ததாக வைத்துக் கொண்டிருக்கின்றன. யமனின் பண்டைய நகரங்களுள் அதிகமானவை மண்ணில் புதையுண்டோ பாழ்பட்டோ காணப்படுகின்றன. சில நகரங்களில் மக்கள் வசித்த போதிலும், அவற்றின் பெயர்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. இந்த மாகாணம் இப்போது இரு குடியரசு நாடுகளாகப் பிரிக்கப்பட்டு வெவ்வேறு ஜனாதிபதிகள் இருவரால் ஆட்சி செய்யப்பட்டு வருகிறது. இந்த மாகாணத்தின் மாவட்டங்களுள் ஹழ்ரமௌத், அஹ்காப் நகரங்கள் (ருப்உல் காலீ), ஸன்ஆ, நஜ்ரான் ஆகியவை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

இந்து சமுத்திரக் கரையில் அமைந்துள்ள யமனின் கிழக்கு மாவட்டம் ஹழ்ரமௌத் என அழைக்கப்படுகிறது. கிழக்கே உமான், தெற்கே இந்து சமுத்திரம், மேற்கே ஸன்ஆ மாவட்டம், வடக்கே ருப்உல் காலீ பாலைவனம், அஹ்காப் பாலைவனம் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டது இந்த மாவட்டம். யமன் அறேபியரின் தந்தையான கஹ்தான் என்பாரின் தாயகம். இதுவே கிறித்தவரின் வேதநூலான வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் (தவ்ராத் வேதத்தில்) கஹ்தானின் புதல்வர் பன்னிருவருள் ஒருவர் 'ஹஷரமவத்' என்று பெயரிட்டிருந்தார் எனக்குறிப்பிடப்பட்டிருக்கிறது. (ஆதியாகமம் 10 : 26). எனவே இதன் முதலாவது குடியிருப்பாளரின் பெயரால் இந்த நிலப்பகுதி 'ஹழ்ரமௌத்' எனப் பெயரிடப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆதுகளினதும் தமூதுகளினதும் ஆரம்ப வாழிடம் இதுவே. பின்னர், ஆதுகள் அஹ்காப் பிரதேசத்திற்கு இடம் பெயர்ந்து சென்று, அங்கே குடியேறி விட்டனர். இங்கு தேன் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இப்போது ஒரு தனிநாடாக இருக்கும் இந்த மாவட்டத்தின் தலைநகரமாக 'அதன்' (ஏடன்) இருந்து வருகிறது.

யமன் மாகாணத்தின் இதயமாகவும் அறேபிய நாகரிகத்தின் மையமாயும் விளங்குவது ஸன்ஆ மாவட்டமாகும். இந்து சமுத்திரத்தினதும் செங்கடலினதும் கரையில் அமைந்திருக்கும் இந்த மாவட்டத்தை தலைநகராகக் கொண்டே மாஈனீகளும் ஹிம்யரிய்யாக்களும் ஸபஇயர்களும் தத்தமது

அரசுகளை யமனில் நிறுவி இருந்தனர். இங்கேயே உலகப் புகழ் பெற்ற ம.ரிப் அணை கட்டப்பட்டிருந்தது. அரசி ஷபா இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவரே. புகழ் பெற்ற கோட்டைகளான கும்தான், நாஇத், ருப்தா, ஸர்வாஹ், மதர் என்பனவும் இங்கேயே அமைக்கப்பட்டிருந்தன.

'அஹ்காப்' பாலையின் நகரங்களை உள்ளடக்கிய மாவட்டம் உலகிலேயே மிக உலர்ந்த பாலைநிலமான 'ருப்உல் காலீ 'என்ற பாலைவெளியில் அமைந்திருக்கிறது. யமாமா, உமான், பஹ்ரைன், ஹழ்ரமௌத், யமனின் மேற்குப் பகுதி ஆகிய பிரதேசங்கள் வரைநீண்டு கிடக்கும் இந்தப்பாலை நிலம் மக்கள் வசிப்பதற்குப் பொருத்தம் இல்லாதது. ஆயினும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் - குறிப்பாக ஹழ்ரமௌத்திலிருந்து நஜ்ரான் வரை நீண்டு கிடக்கும் பகுதியில் - மக்கள் குடியேறி வாழ்ந்தனர். இறைவனின் சாபத்திற்கு ஆட்பட்டு அழிந்து போன ஆதுகள் தமது அழிவின் போது இங்கேயே வாழ்ந்து வந்தனர். இப்போது இது மக்கள் நெருங்க அஞ்சும் பயங்கரப் பாலைவனமாக இருந்து வருகிறது. இப்போது இதன் பெரும் பகுதி ஸஊதி அறேபியாவின் எல்லையுள் இருக்கிறது.

நஜ்ரான் என்பது அஹ்காப் பாலைவனத்திற்கும் அஸீர் மேட்டு நிலத்திற்கும் இடையே அமைந்துள்ள மிகச்சிறிய ஒரு மாவட்டமாகும். மிகப்புராதன காலத்தில், இங்கு முதன் முதலில் குடியேறி வசித்த நஜ்ரான் பின் ஷைதான் பின் ஸபா பின் யஷ்ஜுப் பின் ய.ருப் பின் கஹ்தான் என்பாரின் பெயரிலேயே இது நஜ்ரான் என அழைக்கப்பட்டது என்று அல் கல்பீ கூறுகிறார்.[6] பின்னர், நபி இஸ்மாஈலின் வழித்தோன்றல்களுள் ஒருவரான பஜீலா பின் நஸார் இங்கு குடியேறினார். இஸ்லாத்தின் தோற்றகாலத்திற்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்கள் கிறித்தவர்களாக இருந்தனர். உரோமர் களினதும் அபிசீனியர்களினதும் இடையறாத உழைப்பால் கிறித்தவ மதத்தைத் தழுவியிருந்த அவர்களை மீண்டும் யூத மதத்தில் சேர்க்க யமனின் யூத அரசு பெரிதும் முயன்றது. அரசின் முயற்சி தோல்வியுறவே யூத மதத்தைத் தழுவ மறுத்த நஜ்ரானீகள் தீயில் எரிக்கப்பட்டனர். (இது பற்றி அல்குர்ஆனிலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது 85:2-8) ஆயினும், உரோமப் பேரரசும் அபிசீனிய அரசும் தலையிட்டு, நஜ்ரானீகளைக் காப்பாற்றி, இங்கு மீண்டும் கிறித்தவ மதம் வளர உதவின. ஹி. 10 இல் நஜ்ரானீகள் இஸ்லாத்தைத் தழுவினர். இப்போது இந்த மாவட்டம் ஸஊதி அரசின் ஒரு பகுதியாக இருக்கிறது.

அறேபியத் தீபகற்பத்தின் வடக்கே - நபூத் பாலைநிலம், ஷம்மர் மலை ஆகியவற்றிற்கு மேற்கே - உள்ள குன்றுகள் செறிந்த பகுதி ஹிஜாஷ் மாகாணம் என்று அழைக்கப்படுகின்றது. ஹிஜாஷ் என்றால் திரை அல்லது தடுப்பு என்பது பொருள். அறேபியாவின் தாழ்நிலப் பிரதேசமான

6. யாகூத் ஹமவீ, பாகம் V பக்கம் 266

திஹாமாவுக்கும் உயர்நிலப் பிரதேசமான நஜ்துக்கும் இடையே இந்த மாகாணம் ஒரு தடுப்பாக அமைந்திருப்பதால் இது இவ்வாறு அழைக்கப்படு கிறது. இன்ஜீல் வேதத்தில் இந்தப் பிரதேசம் 'பாரான்' என்ற பெயரால்

ஹிஜாஷ்

குறிப்பிடப்பட்டிருக்கிறது. செங்கடலுக்கும் ஜபலுஸ் ஸராத் மலைத்தொடருக்குமிடையே வடக்கிலிருந்து தெற்காக நீண்டு, சூயஸ் பூ சந்தி முதல் இந்து சமுத்திரம் வரை செல்லும் இந்த மாகாணத்தின் பெரும் பகுதி மலைப்பாங்கானது; சிறு பகுதி மணற்பாங்கானது. இங்கு ஆறுகள் இல்லை. ஆங்காங்கே மலைகளின் ஊடாக ஓடும் அருவிகள் இந்த மாகாணத்தைச் செழிப்புள்ளதாக வைத்திருக்கின்றன. செங்கடற்கரை யோரமாக உள்ள பகுதி மிகச் செழிப்பானது; மற்றப்பகுதிகள் விவசாயத்திற்குப் பொருத்தமற்ற மணற்பாங்கான பாலைநிலம் ஆகும். கிழக்கே நஜ்த் பிரதேசமும் தெற்கே அஸீர் மேட்டு நிலமும் மேற்கே செங்கடலும் வடக்கே சிரியாப் பாலைவனமும் இந்த மாகாணத்தின் எல்லைகளாக இருக்கின்றன.

மிகப் பழங்காலத்தில், இஸ்ரவேலரின் வேத காலத்தைச் சேர்ந்த எதோமியர்களும் மீதியானிகளும் இந்த மாகாணத்தில் குடியேறி வாழ்ந்து வந்தனர். கடந்த பதினான்கு நூற்றாண்டு காலமாக இந்த மாகாணம் அறேபியர்களுக்கு மட்டுமன்றி, அகில உலக முஸ்லிம்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரதேசமாக இருந்து வருகிறது. ஏனெனில், இப்புண்ணிய பிரதேசத்திலிருந்தே சத்திய சன்மார்க்கமான இஸ்லாம் உதயமாயிற்று; நபி (ஸல்) அவர்களின் தாயகமான மக்கா, அவர்கள் தமது வாழ்வை முடித்து அடங்கப்பெற்ற புனித நகரமான மதீனா, 'ஹிஜா'ஷின் சுவனம் என வருணிக்கப்படும் தாஇப், முஸ்லிம் யாத்திரிகர்கள் தரையிறங்கும் இடமான ஜித்தா, ஹிஜாஷின் இரண்டாவது பெரும் கரையோர நகரமான யன்பூ. முதலான மாநகரங்களும் ஜவ்ப் அல்லது வாதீஉல் குரா, தபூக், கைபர், மிதியன் முதலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பட்டினங்களும் இங்கேயே இருக்கின்றன. ஒவ்வோராண்டும் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காகவும் உம்ரா செய்வதற்காகவும் உலகின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் வரும் இலட்சக்கணக்கான யாத்திரிகர்கள் புனிதம் மிகுந்த இந்த மாகாணத்தைத் தரிசித்துச் செல்கின்றனர்.

- இந்த மாகாணத்தின் பழம்பெரும் நகரங்களுள் மக்கா தலையானது. உம்முல் குரா (பட்டினங்களின் தாய்) என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் இந்த நகரின் புராதனப்பெயர் பக்கா என்பதாகும். ஹிஜாஷ் மாகாணத்தின் தலைமையகமாக விளங்கும் இந்த நகரம் நபி இப்றாஹீம் (அலை) அவர்களால் நிறுவப்பட்டது. பின்னர், அவரது மகன் நபி இஸ்மாஈல் (அலை) இங்கு குடிபெயர்ந்து வந்து வாழலானார். கடல் மட்டத்திலிருந்து சுமார் 300 மீட்டர் உயரத்தில் அமைந்திருக்கும் இந்த நகரம் கி.மு.2500 ஆம் ஆண்டளவில், வர்த்தகக் கூட்டங்களின் முக்கிய நிலையமாக விளங்கியது.

கி.மு. 2000 ஆண்டளவில் நபி இப்றாஹீம் (அலை) இறைவணக்கத்திற்காக க.ாபா என்ற ஆலயத்தை இங்கே நிறுவினார். இந்த நகரில், கஹ்தானியரின் எழுச்சி ஏற்படும் வரை, நபி இஸ்மாஈலின் வழித்தோன்றல்களே மேலாதிக்கம் பெற்றிருந்தனர். பிற்காலத்தில் நபி இஸ்மாஈலின் வழித்தோன்றலும் குறைஷ் வர்க்கத்தாரின் மூலவருமான குஸய் என்பார் இங்கு ஒரு அரசை நிறுவினார். பல நூற்றாண்டுகள் வரை குறைஷ்களே இந்த நகரைப் புரந்து வந்தனர்.

ஹிஜாஷின் மற்றொரு முக்கிய நகரமான மதீனா ஆரம்பத்தில் யத்ரிப் என்றே அழைக்கப்பட்டு வந்தது. பின்னர், நபி(ஸல்) அவர்கள் தமது வாழிடத்தை இங்கே அமைத்துக் கொண்டதைத் தொடர்ந்து 'மதீனதுந் நபி' (நபியின் நகரம்) என்ற பெயரால் இது அழைக்கப்படலாயிற்று. அந்தப் பெயரே சுருங்கி, மதினா ஆயிற்று. கடல் மட்டத்திலிருந்து சுமார் 620 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இந்த நகரில், ஆரம்பத்தில் அமாலிக்குகள் குடியேறி வாழ்ந்து வந்தனர். பின்னர் யூதர்களும் அவர்களுக்குப் பின் அஷ்த் வர்க்கத்தைச் சேர்ந்த அவ்ஸ், கஷ்ரஜ் குலத்தினரும் குடியேறி வாழலாயினர். இஸ்லாம் தோன்றிய பின்னர் அவ்ஸ், கஷ்ரஜ் ஆகிய இந்த வர்க்கத்தினர் இஸ்லாத்தின் வளர்ச்சிக்குத் துணை நின்று, 'அன்ஸார்' (உதவியாளர்) கள் என்ற பெயரைப் பெற்று சிறப்படைந்தனர்.

தாஇப் நகரம், ஹிஜாஷின் மிகச் செழிப்பான ஒரு நகரம் ஆகும். கடல் மட்டத்தில் இருந்து 1800 மீட்டர் உயரத்தில், மக்காவுக்குத் தென்கிழக்கே அமைந்துள்ள இந்த நகரிலேயே ஹிஜாஷின் செல்வர்கள் தமது கோடைகாலத்தைக் கழித்து வருகின்றனர். மிகப் பழைய நகரங்களுள் ஒன்றான தாஇபில், ஹி. 59 (கி.பி. 680) இல் கட்டப்பட்ட புராதன அணை ஒன்று காணப்படுகின்றது. ஹி. 9 இல் இந்த நகரத்தவர்கள் இஸ்லாத்தைத் தழுவினர்.

சிரியாப் பாலைநிலம் முதல் யமன் வரைசெங்கடல் ஓரமாக நீண்டு கிடக்கும் பகுதி திஹாமா என்று அழைக்கப்படுகிறது. திஹாமா என்றால் தாழ்நிலம் என்று பொருள். இதன் கிழக்கு எல்லையாக அறேபியாவின் மிகப்பெரும் மலைத் தொடரான ஜபலுஸ் ஸராத் அமைந்திருக்கிறது. அறேபியாவின் வடஎல்லை முனையில் ஆரம்பித்து, அறேபியாவின் தென் எல்லை (யமன்) முனையில் முடிவடையும் இந்த மலைத்தொடர் தீபகற்பத்தைக் கிழக்குப்பகுதி, மேற்குப் பகுதி என இரண்டு பாகங்களாகப் பிரிக்கிறது. மலைத்தொடரின் கிழக்குப்பக்கமாக உள்ள நிலம் மேடாக இருப்பதால், அது நஜ்த் (உயர் நிலம்) என்று அழைக்கப்படுகிறது; மேற்குப் பக்கமாக உள்ள நிலம் தாழ்பகுதியாக இருப்பததால், அது திஹாமா (தாழ் நிலம்) என்று அழைக்கப்படுகிறது. மலைத்தொடரின் மேற்குப்பக்கம் (திஹாமா) கிழக்குப்பகுதியை (நஜ்தை) விடவும் பரப்பளவில் மிகச்சிறியது; சிரியாவின் எல்லையிலிருந்து யமனின் எல்லை வரை நீண்டும் ஸராத் மலைத் தொடரிலிருந்து செங்கடல்

திஹாமா

வரை அகலத்தில் குறுகியும் கிடக்கிறது. தற்காலப் புவியியலாளர் பலர் ஹிஜாஷின் தெற்கு எல்லை வரை நீண்டு கிடக்கும் தாழ் நிலத்தை (திஹாமாவை) அதன் ஒரு பகுதியாகவே கருதுகின்றனர். சில சமயங்களில், ஹிஜாஷின் தெற்கு எல்லை முதல் யமனின் தெற்கு எல்லை வரை நீண்டு கிடக்கும் தாழ்நிலத்தை திஹாமா என்பர். வேறு சிலர் இதனை யமனின் ஒரு பகுதியாகக் கருதுவர். ஆயினும், திஹாமாவை தனிப்பிரதேசமாக அல்லது மாகாணமாகக் கருதிய சந்தர்ப்பங்கள் மிகக்குறைவு ஆகும்.

அறபு மக்கள்

பண்டைய காலத்திலிருந்தே அறேபியா பல இன மக்களின் வசிப்பிடமாக இருந்து வந்திருக்கிறது. மிகப் புராதன காலத்தில்,நபி நூஹ் (அலை) அவர்களின் மூத்தபுதல்வர் ஷாம் என்பாரின் வழித்தோன்றல்களான செமித்தியரே (Semites) அறேபியாவில் குடியேறி இருந்தனர். அறேபியாவின் பெரும்பகுதி பாலைநிலமாகவும் குறுகிய ஒரு பகுதியே குடியிருப்புக்கு ஏற்ற பிரதேசமாகவும் இருந்தமையால் குடிப்பெருக்கம் ஏற்பட்ட போது, அவர்களுள் ஒரு பகுதியினர் தீபகற்பத்தின் மேற்குக் கடற்கரையினூடாக வடக்கு நோக்கி இடம் பெயர்ந்து சென்று, நைல் நதி பாயப்பெற்ற பள்ளத்தாக்குகளில் குடியேறினர். கி.மு.3500 ஆம் ஆண்டளவில், இந்தக் குடியேற்றம் நிகழ்ந்தது. அவர்கள் எகிப்தில் ஏற்கனவே வாழ்ந்து வந்த - நபி நூஹ் அவர்களின் மற்றொரு புதல்வர் ஹாம் என்பாரின் வழித்தோன்றல்களான - ஹாமியரோடு (Hamites) இணைந்து வாழ்ந்து, எகிப்திய நாகரிகத்திற்கு வித்தூன்றினர். இதே காலப்பகுதியில், தீபகற்பத்தின் கிழக்குப் பாதை வழியாக வடக்கு நோக்கிய மற்றொரு சமாந்தர குடிப்பெயர்ச்சியும் நிகழ்ந்தது. அறேபியாவில் வாழ்ந்த செமித்தியர்களுள் பெரும் தொகையானோர் தைகிரிசு, யூபிரதிசு நதிகள் பாயப்பெற்ற பள்ளத்தாக்குகளில் குடியேறி வாழலாயினர். அங்கே அவர்கள் மெஸொபோதேமியாவில் வாழ்ந்த சுமேரியர்களுடன் இணைந்து, பாபிலோனிய நாகரிகத்தின் தோற்றத்திற்கு வித்தூன்றினர். இவ்வாறு அறேபியாவிலிருந்து பல செமித்தியக் குடிப்பெயர்ச்சிகள் தென்மேற்காசியாவில் உள்ள செழிப்பான நிலங்களில் (Fertile Crescent) நிகழ்ந்தன. இந்தக் குடிப்பெயர்ச்சிகள் பல்வேறு புதிய கிளை இனங்களும் வர்க்கங்களும் தோன்ற வழிவகுத்தன.

செமித்தியர்

செமித்திய இன மக்களிடையே தோன்றிய வர்க்கங்களுள் ஆத், தமூத், தஸ்ம், ஜதீஸ் முதலான வர்க்கங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை; அல்குர்ஆனின் சமுதாயங்களோடு தொடர்புடையவை. புராதன அறேபிய சமுதாயத்தை உருவாக்கிய இந்த அறபு வர்க்கங்களும் கிளை இனங்களும் பின்னர் முற்றாக அழிந்து போயின. அதனால், இப்புராதன மக்களை அறபு வரலாற்றாசிரியர்கள் 'அல் அறபுல் பாஇதா' (அழிந்து

போன அறேபியர்) அல்லது 'உமமுல் பாஇதா' (அழிந்து போன இனங்கள்) என்று அழைப்பர்.

செமித்தியர்களுக்குப் பின்னர் அறேபியாவில் குடியேறி வாழ்ந்தவர்கள் கஹ்தானியர் ஆவர். செமித்தியருள் ஒரு வர்க்கத்தினரான இந்த கஹ்தானியரே அவர்கள் கட்டி வளர்த்த பண்பாட்டின் அழிவுக்குக் காரணமாக அமைந்தனர்.

கஹ்தானியர்

யூபிரதிசு நதியின் கிழக்கே இருந்து இடம்பெயர்ந்து வந்த இவர்கள் அறபு நாட்டின் செழிப்பான பிரதேசங்களான யமன், ஹழ்ரமௌத் ஆகிய பகுதிகளில் குடியேறி வாழ்ந்து வந்தனர். பிற்காலத்தில் ஹிம்யரிய்யாக்கள் என்று அழைக்கப்பட்ட யமன் அறேபியரின் முன்னோரான இவர்கள் நபி நூஹ் (அலை) அவர்களது நான்காம் தலைமுறைப் பௌத்திரரான கஹ்தான் (யோக்தான்) என்பாரின் வழித்தோன்றல்கள் ஆவர். கஹ்தானின் புதல்வர்களுள் ஒருவரான ய.ஃருப் என்பார் திஹாமாவின் தென் கிழக்கே உள்ள சிறிய மாவட்டத்திற்குத் தமது பெயரை இட்டார். அதுவே பின்னர் திரிந்து, அறப் என வழங்கப்படலாயிற்று என்பர். இப்புதிய குடியேற்ற வாசிகளே இப்போதைய அறேபியரின் மூதாதையர் ஆவர். இவர்களை அறபு வரலாற்றாசிரியர்கள் 'அல் அறபுல் ஆரிபா' (உண்மையான அறேபியர்) என்று அழைக்கின்றனர்.

இந்த மரபில் தோன்றிய ஆட்சியாளர்கள், ஸப.ஃ. என்ற மறுபெயரால் அறிமுகமாகி இருந்த ய.ஃருபின் இரண்டாவது புதல்வர் அப்துஷ் ஷம்ஸ் என்பாரின் பெயரால் ஸபஇயர் (Sabaeans) என அழைக்கப்படுகின்றனர்.[7] கஹ்தானிய அரசர்கள் பெரும் வெற்றியாளர்களாயும் புதிய நகரங்களை நிருமாணிப்பவர்களாயும் விளங்கினர். யமனிலும் அறேபியாவின் வேறு பகுதிகளிலும் நிலவிய இவர்களது ஆதிக்கம் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், இஸ்லாம் தோன்றும் வரை நீடித்திருந்தது.

அறேபிய தீபகற்பத்தில் இறுதியாகக் குடியேறியவர்கள் இஸ்மாஈலீகள் ஆவர். யூதர்களின் நபியான இப்ராஹீம் (அலை) அவர்களது புதல்வரான இஸ்மாஈல் (அலை) அவர்களின் வழித்தோன்றல்கள் இவர்கள். சுமார் 4000

இஸ்மாஈலீகள்

ஆண்டுகளுக்கு முன்னர் நபி இப்றாஹீம் (அலை) தமது எகிப்திய மனைவிஹாஜராவையும் குழந்தை இஸ்மாஈலையும் அறேபியாவுக்கு கூட்டி வந்து, மக்காவின் சுற்றுப்புறத்தில் விட்டுச்சென்றார். பலஸ்தீனத்திலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக வந்த இவர்களை ஹிஜாஷில் வாழ்ந்த கஹ்தானியக் கிளைக் குலத்தினரான

7. கஹ்தானின் மற்றொரு புதல்வரான ஜுர்ஹும் என்பார் ஹிஜாஷில் குடியேறி, அங்கே ஒரு அரசை நிறுவியிருந்தார். இவரது வழித்தான்றல்கள் ஜுர்ஹுமீகள் என்று அழைக்கப்பட்டனர். நபி இஸ்மாஈல் (அலை) , ஜுர்ஹுமின் குடும்பத்திலேயே பெண் ஒருவரைத் திருமணம் செய்திருந்தார். இஸ்லாம் தோன்றிய காலத்தில் இந்த மரபைச் சேர்ந்த சிலர் ஆங்காங்கே விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் காணப்பட்டனர்.

இளவல் இஸ்மாஈல் ஜுர்ஹுமீகளிடையே வாழ்ந்து, அவர்களது மொழியான அறபையும் பிற கலைகளையும் கற்றுக்கொண்டதோடு, அவர்களுக்குள்ளேயே ஒரு பெண்ணைத் தெரிவு செய்து திருமணம் புரியவும் விரும்பினார். அவ்வாறே அவர்கள் கஹ்தானின் ஒன்பதாவது தலைமுறையில் தோன்றிய முழாழ் என்ற பெண்ணை அவருக்குத் திருமணம் செய்து வைத்தனர். இந்தத் திருமண பந்தத்தின் மூலம் அவருக்கு பிள்ளைகள் பன்னிருவர் பிறந்தனர். நபி இப்றாஹீம் மரணித்த பின்னர், நபி இஸ்மாஈலின் சந்ததியினர் ஹிஜாஷிலும் அறேபியாவின் வேறு பகுதிகளிலும் பரந்து வாழலாயினர். இவர்கள் கஹ்தானியர்களோடு - குறிப்பாக ஜுர்ஹுமீகளோடு, மாற்றுத் திருமண உறவை விருத்தி செய்து கொண்டு, அவர்களோடு இணைந்து, ஒரு தேசத்தவராக வாழ்ந்து வந்தனர். அறபு வரலாற்று ஆசிரியர்கள் இந்த இனத்தவரை 'அல் அறபுல் முஸ்த.ஃரிபா' (கலப்பு அறேபியர்) என்று அழைக்கின்றனர். நபி (ஸல்) அவர்களைத் தோற்றுவித்த குறைஷ் குலம் இஸ்மாஈலீகளின் வர்க்கங்களுள் ஒன்றே ஆகும்.

அறேபியர், அவர்களது வாழ்க்கை முறையையும் நிலத்தின் இயல்பையும் பொறுத்து இரு பிரதான மக்கள் கூட்டமாகப் பிரிக்கப்படுகின்றனர். ஒரு கூட்டத்தினர் 'அஹ்லுல் ஹழரா' (நகரங்களில் நிரந்தரமாகத் தங்கி

நகர வாசிகள்

வாழ்பவர்கள்) என்றும் மற்றக் கூட்டத்தினர் 'அஹ்லுல் பாதியா' (பாலைவன நாடோடிகள்) என்றும் அழைக்கப்படுகின்றனர். எமது வரலாற்றுக் காலத்தில், நகரவாசிகள் தென்அறேபியாவின் நகரங்களிலும் கிராமங்களிலும் குடியேறி, தமது வீடுகளில் குடும்பத்தாரோடு நிரந்தரமாகத் தங்கி வாழ்ந்து வந்தனர். இவர்கள் நாகரிகச் சிறப்பும் பண்பாட்டு முதிர்ச்சியும் உடையவர்களாய் இருந்தனர். வாழ்க்கை வசதிகளைப் பொறுத்தவரை, அவை இவர்களுக்குத் தாராளமாகக் கிடைத்து வந்தன. இவர்களுக்குப் போதிய ஓய்வு நேரம் கிடைத்து வந்தமையால், சமூக வாழ்வில் ஈடுபடவும் தங்கள் தகைமைகளை விருத்தி செய்து கொள்ளவும் தங்களது ஆத்மீகத் தேவைகளைத் திருப்திப்படுத்தவும் இவர்களால் முடிந்தது. இவர்களது வாழ்க்கையின் மேம்பாட்டுக்குத் தென் அறேபியாவின் செழிப்பும் வெளிநாடுகளோடு இவர்கள் வைத்திருந்த வர்த்தகத் தொடர்புகளும் போக்குவரத்து வசதிகளும் காரணங் களாய் அமைந்தன. இவர்களது மொழி, வட அறேபியரின் மொழியிலிருந்து வேறுபட்டதாக இருந்தது. இவர்கள், மொழிபேத மாறல்களுடனான - தங்களுக்கென சொந்தமான - செமித்திய மொழியைப் பேசினர்.

நகரவாசிகளும் தென் அறேபியாவும் அடைந்திருந்த நாகரிகச் சிறப்புப் பற்றி ஜெர்மனிய அறிஞர் ஜோசப் ஹெல் என்பார் தமது 'அறபு நாகரிகம்' என்ற ஜெர்மன் நூலில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்: ''தென் மேற்கு அறேபியாவில் நாங்கள் மிக ஆரம்பகால கலை வேலைப்பாடுகளைச்

சந்திக்கிறோம். அது, 'கட்டடங்களுக்குரிய கருங்கல், பழுப்புக் கல், சலவைக்கல் முதலியவற்றை வினியோகம் செய்தது. கொள்ளையிடும் நாடோடிகள் அண்மையில் வாழ்ந்தமை, நல்ல பாதுகாப்பான வாழிடங்களை அமைத்துக் கொள்ளும் தேவையை மக்களுக்கு ஏற்படுத்தியது. இவ்வாறு தென்அறேபியா, கோட்டைகளும் நகரரண்களும் நிறைந்த ஒரு நிலையமாயிற்று. இவற்றின் சிதைவுகள் இன்றும் இங்கே காணப்படுகின்றன. ஸன்ஆவில் இருந்த இருபது மாடிகளைக் கொண்ட கோம்டம் கோட்டை, ஒன்பதரை மீட்டர் உயரமும் நீள்வளைய உருவிலான சுவர்களும் கொண்ட ம.ரிப் நகரக் கோயில், அதே நகரில் இருந்த பிரமாண்டமான அணை முதலியன தென் அறேபியாவின் கட்டடக்கலை அபிவிருத்திக்குச் சிறந்த சான்றுகள் ஆகும்".[8]

பாலைவன வாசிகளான 'அஹ்ஃலுல் பாதியா' (பதவீகள்) நாடோடிகளாகவும் மற்ற அறேபியர்களிலிருந்து எளிதில் பிரித்தறியத்தக்க இயல்புகள் உடையவர்களாகவும் இருந்தனர். வட அறேபியாவில் வாழ்ந்த

நாடோடிகள்

இவர்கள் நிரந்தரமான வாழிடம் இன்றி பாலை நிலங்களில் சுற்றித்திரிந்தனர். ஆயினும், இலட்சியம் எதுவும் இல்லாமல், சுற்றித்திரிதலை மட்டும் நோக்கமாகக் கொண்டு அலையும் ஜிப்ஸி (Gypsy) என்ற நாடோடிகளாக இவர்கள் இருக்கவில்லை. இவர்களது நிலத்தியல்பு இவர்களை இவ்வாறு நாடோடிகள் ஆக்கிற்று. வட அறேபியா பாழடைந்த - மலட்டு - நிலமாக இருந்தமையால், மந்தை மேய்த்தலைப் பிரதான தொழிலாகக் கொண்டிருந்த இவர்கள், மேய்ச்சல் நிலமும் நீரும் தேடி, பாலை நிலங்களிலும் பீட பூமிகளிலும் தமது குடும்பங்களோடும் மந்தைகளோடும் இடைவிடாமல் அலைய வேண்டியதாயிற்று. செழிப்பான தரை காணப்பட்ட இடங்களிலெல்லாம் இவர்கள் தமது கூடாரங்களை நிறுவினர்; இடம்பெயர்ந்த போதெல்லாம் தமது குடும்பத்தையும் ஆடு, மாடு, ஒட்டகம் முதலான கால்நடைகளையும் ஏனைய உடைமைகளையும் தம்மோடு எடுத்துச் சென்றனர். ஒட்டகை மயிர்களாலான கூடாரமே இவர்களது இல்லமாக இருந்தது. நாடோடி வாழ்க்கையைச் சுவன வாழ்வு போலக் கருதிய இவர்கள் கால்நடை வளர்ப்பு, வேட்டையாடுதல், கொள்ளையடித்தல், வழிப்பறி முதலியவற்றை மிக உயர்ந்த தொழில்களாக மட்டுமன்றி, மனிதனுக்குப் பொருத்தமான வேலைகளாகவும் எண்ணினர். அவர்களது வாழ்வில் நாகரிகச் சிறப்பும் பண்பாட்டு விருத்தியும் பொருந்திய வாழ்க்கையின் பண்புகளுள் ஒன்றுகூட இருக்கவில்லை. சமயம், கல்வி முதலியனவும் அவர்களிடம் காணப்படவில்லை. அறபு இனத்தில் இவர்களது எண்ணிக்கையே மிகுதமாக இருந்தது.

அறபு நாட்டில் வாழ்ந்த மக்களை - குறிப்பாக பாலைநிலங்களில் நாடோடிகளாக வாழ்க்கை நடத்திய மக்களை - கிரேக்கரும் உரோமரும்

8. Joseph Hell, The Arab Civilization (Eng.Trans) p,8

சரசானியர் (Saracens) என்றே அழைத்தனர். உலகத்தை வெற்றி கொள்வதற்காக அவர்கள் தமது தாயகமான அறேபியாவிலிருந்து புறப்பட்டபோது, மேற்குலகில் வாழ்ந்த மக்களுக்கு அவர்கள் இந்தப்

சரசானியர்

பெயராலேயே அறிமுகமாகி இருந்தனர். இந்தச் சொல் 'ஸஹ்ரா' (பாலைவனம்), 'நஸ்ஹின்' (வாசிகள்) ஆகிய சொற்களிலிருந்தோ 'ஷர்கிய்யீன்' (கிழக்கைச் சேர்ந்தோர்) என்ற சொல்லிலிருந்தோ வந்திருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. ஆயினும், கிழக்கு என்ற பொருளைத் தரும் 'ஷர்க்' என்ற சொல்லிலிருந்தே இது வந்திருக்க வேண்டும் என்று மொழியியலாளர் பலர் திடமாகக் கூறுகின்றனர். வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் கிழக்கு நாட்டையும் கிழக்கு நாட்டைச் சேர்ந்த மக்களையும் குறிப்பிட 'கெதெம்', 'பனு கெதம்' என்ற சொற்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. (ஆதியாகமம் 29:1, எண்ணாகமம் 23:7, ஏசாயா 11:14, எசேக்கியேல் 25:4) கிழக்கு என்றும் கிழக்குத் தேசத்தார் என்றும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் இந்தச் சொற்கள் குறிப்பாக, நிலத்தையும் பலஸ்தீனின் நாடோடிக் கிழக்கையும் பொதுவாக, அறேபியாவையும் அறேபியரையும் குறிக்கும். ஒன்பதாம் நூற்றாண்டளவில், பழைய ஆங்கில மொழியில் அறேபிய முஸ்லிம்களைக் குறிப்பிட சரசானியர் என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டது.

சொல்லியல் ஆய்வாளர் சிலர், நபி இப்றாஹீம் (அலை) அவர்களது மனைவியருள் ஒருவரான 'ஸாரா' என்பாரின் பெயரிலிருந்து இந்தச் சொல் வந்திருக்கலாம் என்று கூறுகின்றனர். கிறித்தவ எழுத்தாளர்களே நபி (ஸல்) அவர்களது சன்மார்க்கத்தைப் பின்பற்றும் முஸ்லிம்களைக் குறிப்பிட சரசானியர் என்ற இந்தச் சொல்லைப் பயன்படுத்தினர். அவர்களால் அறேபிய முஸ்லிம்கள் மட்டுமன்றி துருக்கியர், பாரசீகர் முதலான பிறதேசத்து முஸ்லிம்களும் இப்பெயர் கொண்டே அழைக்கப்பட்டனர். இந்தச் சொல் புழக்கத்திற்கு வருவதற்கு முன்னால், மேலைத்தேச எழுத்தாளர்கள் அறேபியரை ('கூடாரங்களில் வாழும் அறேபியர்') 'Scenite Arabs' என்றே அழைத்து வந்தனர். இது கூடாரம் என்ற பொருளைக் கொண்ட 'ஸ்கீனி' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து பிறந்தது. ஆயினும், அறபு மக்கள் இன்று பொதுவாக அறேபியர் என்றே அழைக்கப்பட்டு வருகின்றனர்.

புவியியற் செல்வாக்கு

ஒரு நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களையும் சீலங்களையும் உருவாக்குவதில் அந்த நாட்டின் புவியியல் அமைப்பு மிக முக்கியமான பங்கு வகிக்கிறது; அந்த நாட்டின் வரலாற்றிலும் அதன் இயற்கை அமைப்பு மிகுந்த செல்வாக்கு செலுத்துகிறது. அறேபியாவைப் பொறுத்தவரையிலும் இதுவே உண்மை ஆகும். அறேபியர் எப்போதும் தமது நாட்டை மக்கள்

குடியிருப்பின் மத்திய தலமாகக் கருதி வந்திருக்கின்றனர். ஸர்.வில்லியம் முயிர், ஹொகார்த் முதலான இக்கால அறிஞர்கள் கூட அறேபியாவைப் பழைய உலகத்தின் மையமாகவே வருணித்திருக்கின்றனர். அறேபியாவின் இந்தப் புவியியல் அமைப்பு ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களிலும் தங்களது செல்வாக்கைப் பரப்புவதற்கும் உலகளாவிய பேரரசு ஒன்றை நிறுவுவதற்கும் அறேபியருக்கு உதவிற்று.

அறேபியா ஒரு பாலைவனத் தீவு; மிகக் குறைவான மழை வீழ்ச்சியைக் கொண்ட வெப்பவலய நாடுகளுள் ஒன்று. எமது வரலாற்றுக்காலத்தில், வாழ்க்கை வழிக்குரிய போதிய வசதிகளோ திரவியங்களோ அங்கே இருக்க வில்லை. தங்களுக்கு ஒரு வாழ்க்கை வழியை அமைத்துக் கொள்வதற்காக அறேபியர் எண்ணற்ற இடைஞ்சல்களுக்கு எதிராகத் தினமும் இயற்கையோடு போராட வேண்டியவர்களாய் இருந்தனர். உயிர் வாழ்வதற்காக ஆயுள் முழுவதிலும் அவர்கள் மேற்கொண்ட இந்த வாழ்க்கைப்போராட்டம் அவர்களை உலகிலேயே மிகச் சிறந்த போர் வீரர்களாய் மாற்றிவிட்டது. இன்றுகூட அறேபியரைப் போன்று வலுவார்ந்த வீர இனம் ஒன்றை உலகில் எங்குமே பார்க்கமுடியாது.

வலுவார்ந்த வீர இனம்

அறேபியாவின் மண் வளமற்றதாக இருந்தமையால், அங்கு உற்பத்தி செய்யப்பட்ட விவசாய விளை பொருட்கள் மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானவையாய் இருக்கவில்லை. எனவே, அறேபியருட் பலர் மந்தை மேய்த்தலைத் தமது தொழிலாகவும் வாழ்க்கை வழியாகவும் தெரிவு செய்து கொண்டனர். ஆனால், கால்நடைகளுக்குத் தேவையான நிலங்கள் அறேபியாவில் போதியளவு இல்லாமையால், அவர்கள் புல்தரைகளும் நீரும் தேடி, பாலை நிலங்களிலும் பீட பூமிகளிலும் ஓயாமல் அலைய வேண்டியவர்களாய் இருந்தனர். இந்த வாழ்க்கை அலைச்சல், அறேபியர் என்றாலேயே நாடோடிகள் என்று பொதுவாகக் கருதப்படும் அளவுக்கு அவர்களது வாழ்க்கைப் பாங்கின் ஒரு விசேட அம்சமாயிற்று.

நாடோடி வாழ்க்கை

மண்ணின் மலட்டுத்தன்மை காரணமாக, நாடோடி அறேபியர் வாழ்க்கை வசதிகளைத் தேடி, பாலை நிலங்களிலும் பீட பூமிகளிலும் அலைந்தனர். அவர்களுக்கென நிரந்தர வசிப்பிடம் இருக்கவில்லை. ஒருநாள், அவர்கள் நாட்டின் ஒரு மூலையில் வாழ்ந்தனர்; மறுநாள், நாட்டின் பிறிதொரு மூலையில் வாழ்ந்தனர். இந்தக் காரணத்தால், இஸ்லாத்திற்கு முந்திய அறேபியாவில், அறேபியரை ஒன்றிணைக்கவல்ல உறுதியான அரசாங்கம் ஒன்று விருத்தியாக முடியவில்லை. உறுதியான ஆட்சி இல்லாத இந்த நிலைமை ,

சுதந்திர உணர்வு

அறேபியருக்கு - குறிப்பாக நாடோடி அறேபியருக்கு - தமது சுதந்திர உணர்வை வளர்த்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தை அளித்தது. '(தமது) பேரரசின் இருப்பிடமாக அறேபியாவை மாற்றத்திட்டமிட்டிருந்த மகா அலெக்ஸாந்தரிடம் தமது தூதமைச்சரை அனுப்பாத மக்கள் அறேபியரே' என்று பண்டைய கிரேக்க வரலாற்றாசிரியரான ஸ்ட்ராபோ (Strabo) தமது புவியியல் நூலில் வருணிக்கும் அளவுக்கு அவர்களது சுதந்திர காதலும் விடுதலை உணர்வும் உச்சநிலையை அடைந்திருந்தன.

அறேபியா, மணற்பரப்பைக் கொண்ட ஒரு திறந்த வெளிப் பிரதேசம். அறேபியரின் பாதுகாப்புக்கு எத்தகைய இயற்கைத் தற்காப்பு அமைப்பும் அங்கில்லை. பிற மனிதர்களைப் போலவே உணவு, உறையுள் முதலியவற்றின் தேவைகள் அவர்களுக்கும் இருந்தன. அதனால், அவர்கள் உயிர் வாழ்வதற்காகச் செழிப்பான நிலத்துண்டு ஒன்றைச் சொந்தமாக்கிக் கொள்ளப் போராட வேண்டியவர்களாய் இருந்தனர். ஒவ்வொரு அறேபியனும் செழிப்பான ஒரு அங்குல நிலத்தையேனும் தமது உடைமையாக்கிக் கொள்ள ஆவல் கொண்டிருந்தான்; அதற்காகத் தன்னிடமிருந்த அனைத்தையும் இழப்பதற்குக் கூட அவன் ஆயத்தமாய் இருந்தான். இஸ்லாத்திற்கு முந்திய அறேபியாவில்,பல்வேறு இடங்களைச் சேர்ந்த அறேபியர் வேட்டையாடுவதற்காகவும் தங்கள் எதிரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் வலிமை வாய்ந்த தத்தமது வர்க்கத் தலைவர்களின் கீழ் ஒன்றுபட்டு வாழவேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டது. காலக்கிரமத்தில் அவர்கள் வர்க்கத் தலைவர்களது வழிகாட்டலிலும் நிருவாகத்திலும் வாழப் பழகிக் கொண்டனர். இது அவர்களது குருதியோடு ஒட்டிய குணமாகவும் மாறிற்று. இந்த வழக்கம் அறேபியரிடையே ஒருவகைப் பற்றுணர்வை விருத்தி செய்தது. இந்த வர்க்கப்பற்றின் விளைவாக அவர்கள் இஸ்லாமிய யுகம் தோன்றும் வரை தங்களுக்கென ஒரு ஐக்கிய தேசத்தை உருவாக்க இயலாதிருந்தனர்.

வர்க்கப்பற்று

கடுங்காற்றுகள் பாலைவனத்தின் குணவியல்புகளுள் ஒன்று ஆகும். அறேபியாவின் பாலைநிலங்களின் ஊடாகப் பயணம் செய்யும் பிரயாணிகள் உயர்ந்த வெப்பநிலை, குளிரான இரவுகள், நீரின்மை ஆகிய நிலமைகளை மட்டுமன்றி, சுழலும் மணல் திணிவால் வளியை நிரப்பும் பயங்கரமான மணற்புயலையும் சந்திக்க வேண்டும். அப்போது, மனிதர் மட்டுமன்றி, விலங்குகள் கூட புயல் ஓயும் வரை புகலிடம் ஒன்றைத் தேடிக்கொள்ளுதல் வேண்டும். இந்தப் புயலோடு உயர்ந்து வீசும் காற்றும் இணைந்து கொண்டால், புயல் குறுகிய ஆயுள் உடையதாய் இருந்தாலன்றி, நாடோடிகளின் பங்காகக் கிடைப்பது மரணமாகவே இருக்கும். இத்தகைய அபாயங்களிலும் ஆபத்துக்களிலும் ஒவ்வொரு அறேபியனும் நல்ல பரிச்சயம் பெற்றிருந்தான். தவிர்க்க முடியாதவாறு திடீரென ஏற்படும்

துணிச்சல்

இந்த ஆபத்தின் காரணமாக அறேபியர் எப்போதும் விழிப்போடிருக்கும் இயல்புள்ளவர்களாகவும் தங்களையும் தங்களது கால்நடைகளையும் எந்தக் கணத்திலும் பாதுகாத்துக் கொள்ள ஆயத்தமாக இருக்கும் சுபாவம் உடையவர்களாகவும் இருந்தனர். இயற்கையின் சீற்றத்திற்கு எதிரான - ஓய்வில்லாத - இந்தப் போராட்டம் அறேபியரில் வீரதீரச்செயல்கள் இயற்றும் பண்பை விருத்தி செய்ததோடு, உலகிலேயே துணிச்சல் மிகுந்த ஓர் இனத்தினராயும் அவர்களை மாற்றியது.

வர்த்தக ஆவல்

அறேபியாவில், வாழ்க்கைக்கு இன்றியமையாத வசதிகளும் திரவியங்களும் மிகக் குறைவாக இருந்தமையால், அறேபியர் பல்வேறு தூர நாடுகளுக்குச் சென்று, தமது உற்பத்திப் பொருட்களை கொடுத்து விட்டுத் தமக்குத் தேவையான உணவுப் பொருட்கள், ஆடைகள் முதலானவற்றைப் பெற்றுக் கொண்டனர். இப்பண்ட மாற்று வியாபாரத்தைத் தொடர்ந்து, அறேபியர் வர்த்தகத்தினதும் வணிகத்தினதும்பால் ஈர்க்கப்பட்டு, பிற்காலத்தில் நீரிலும் நிலத்திலும் வர்த்தக மன்னர்களாக விளங்கலாயினர். ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களினதும் வர்த்தகப் பாதைகள் சந்திக்கும் இடத்தில் அறேபியா அமைந்திருந்தமையே அறேபியர் வர்த்தகத்திலும் வணிகத்திலும் நாட்டம் செலுத்தியமைக்கு முக்கிய காரணமாக இருந்தது. அறேபியர் என்றால் வர்த்தகரே என்று பிற இனத்தவர்கள் கருதும் அளவுக்கு அவர்களது வணிக ஈடுபாடு மேலோங்கியும் குருதியோடு இணைந்தும் காணப்பட்டது.

சுருங்கச் சொன்னால், அறேபியாவின் புவியியல் அமைப்பே அறேபியரின் பாரம்பரியக் குணவியல்புகளையும் அவர்களது பேச்சின் தூய்மையையும் பேணிப்பாதுகாப்பதற்கு உதவியது எனலாம். இந்த அமைப்பே ஒரு பாதுகாப்புக்கோடாக இருந்து, பிற நாட்டு ஆட்சியாளர்களினதும் படையெடுப்பாளர்களினதும் கரங்களிலிருந்து அறேபியாவைப் பாதுகாத்தது. மேலும், அறேபியாவின் புவியியல் அமைப்பும் அறேபியரின் நாடோடி வாழ்க்கைமுறையும் அவர்களது வர்க்கப்பற்றும் அவர்களது மனநிலையைப் பெரிதும் மாற்றிவிட்டன. அவர்கள் எளிய இயல்பும் அபாரத் துணிச்சலும் உடையவர்களாக இருந்த அதேவேளையில், அவர்களது மனநிலை கல்லைப் போலக் கடினமானதாயும் இரக்கமற்றதாயும் இருந்தது. இந்த நிலைமை பல நூற்றாண்டுகள் வரை நீடித்தது. ஆனால், இஸ்லாம் உதயமானதும், அதன் போதனைகளால் அவர்களது மனப்போக்கு மாற்றமடைந்து, இயக்கமும் சீர்திருத்தமும் பெற்றது; இறுதியில், உலக வரலாற்றிலே மிகுந்த வெற்றி வாய்ந்த ஓர் இனத்தினராக அவர்கள் மாறினார்கள்.

சர்வதேசத் தொடர்புகள்

அறேபியர் பூர்வீக காலத்திலிருந்தே உலகின் பல்வேறு நாடுகளோடும் நாகரிகங்களோடும் உறவு வைத்திருந்தனர். இந்தச் சர்வதேச உறவுகளுக்கு அறேபியாவின் புவியியல் அமைப்பும் தென் அறேபியாவின் செழிப்பும் முக்கிய காரணங்களாக அமைந்தன. இந்தக் காரணியே உலகின் நாற்பெரும் பண்டைய நாகரிகங்களான எகிப்திய நாகரிகம், சுமேரிய நாகரிகம், பாபிலோனிய நாகரிகம், சிந்துவெளி நாகரிகம் ஆகியவற்றோடு அறேபியா - குறிப்பாக தென் அறேபியா - மிகப் பழங்காலத்திலிருந்தே தொடர்புகளை வைத்துக்கொள்ள உதவியது.

எகிப்திய தொடர்பு

மிக ஆரம்ப காலத்தில் அறேபியாவுடன் தொடர்பு வைத்திருந்த நாடுகளுள் எகிப்தும் ஒன்று. கி.மு. 2000 ஆம் ஆண்டுக்கு முன்பேயே, எகிப்து, அறேபியாவுக்கு அறிமுகமாகி இருந்தது. புண்ட் (இப்போதைய சோமாலியா), நூபியா ஆகிய நாடுகளோடு எகிப்தியர் வணிக உறவுகளை விருத்திசெய்ய ஆரம்பித்ததிலிருந்து இந்தத் தொடர்பும் அறிமுகமும் உருவாகலாயிற்று. தென் அறேபியாவில் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்ட நறுமணப் பொருட்களே எகிப்தியர் தென் அறேபியாவில் நாட்டம் கொள்வதற்குக் காரணமாய் அமைந்தன. இந்தப் பொருட்கள் கோயில்களில் பயன்படுத்துவதற்கும் இறந்து போனவர்களின் சடலங்களைக் கெடாமல் பாதுகாப்பதற்கும் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கும் அவர்களுக்குத் தேவைப்பட்டன.

எகிப்தின் தெற்கே உள்ள நூபியா வெற்றிகொள்ளப்பட்டு, புண்ட் பிரதேசம் எகிப்தியப் பேரரசின் வணிக வட்டத்துள் கொண்டுவரப்பட்டபோது, அந்தப் பிரதேசங்களில் உற்பத்தியான சாம்பிராணி, குங்கிலியம், நறுமணப்பசைகள், நறுமணப்பட்டைகள் முதலியவற்றைப் பெற்றுக் கொள்வதற்காகச் செங்கடல் வழியாகப் பல படையெடுப்புக்கள் மேற்கொள்ளப் பட்டன. வரலாற்றில் புகழ்பெற்ற முதற்பெண்மணியும் எகிப்தின் இராணியுமான ஹற்ஷெப்ஸுற் (மரணம் கி. மு. 1470) என்பாளின் காலத்தில், இத்தகைய படையெடுப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இந்தப்படையெடுப்பு பற்றிய விவரங்கள் தார் அல் பஹ்ரீ என்ற இடத்தில் அவளால் நிறுவப்பட்ட கோயிற் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

அவளுக்குப் பின்னர் ஆட்சி பீடமேறியவனும் 'பண்டைய எகிப்தின் நெப்போலியன்' என்று வருணிக்கப்படுபவனுமான மூன்றாம் துட்மோஸ் (மரணம் கி. மு. 1436) என்பானின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பின்

போதும் எகிப்தின் தெற்கே உள்ள பிரதேசங்களிலிருந்து யானைத்தந்தம், புலித்தோல்கள், கருங்காலி மரங்கள், மணப்பொருட்கள் முதலியவற்றோடு அடிமைகளும் எகிப்துக்குக் கொண்டுவரப்பட்டார்கள்.இந்தப் பொருள்கள் 'அதன்' (ஏடன்) விரிகுடாவுக்கும், செங்கடலுக்கும் இடையே உள்ள 'பாபுல் மன்தப்' வாயிலின் இருபக்கங்களிலும் பரந்து கிடக்கும் நாடுகளில் தாராளமாகக் கிடைத்தன. இந்த வாயிலின் மேற்கே புண்ட் பிரதேசமும் கிழக்கே யமனும் இருக்கின்றன. ஆயினும், இந்த இரண்டு பிரதேசங்களையும் எகிப்தியர் 'புண்ட்' என்றே அழைத்தனர்.இவ்வாறு , கடல்வழியாக தென் அறேபியாவுடன் ஏற்பட்ட வணிகத்தொடர்பும் நறுமணப்பொருள்கள் வர்த்தகமும் மத்திய எகிப்துக் கரையோரத்தில் உள்ள 'வாதீ அல் ஹம்மாமாத்' ஊடாகவே நிகழ்ந்தன. இதுவே தென் அறேபியாவை எகிப்தோடு இணைக்கும் முக்கியத்துவம் வாய்ந்த மத்திய பாதையாக விளங்கியது.

எகிப்தியர் தென்அறேபியாவோடு மட்டுமன்றி, வடஅறேபியா வுடனும் தொடர்பு வைத்திருந்தனர். தென்அறேபியத் தொடர்பு செங்கடல் வழியாக நிகழ்ந்த அதேவேளையில், வடஅறேபியத் தொடர்பு தரைமார்க்கமாக நடைபெற்றது. ஸினாய் பாலைவனத்தில் இருந்த செம்புச் சுரங்கங்களையும் நீலக்கற் சுரங்கங்களையும் அடைவதற்காக எகிப்தியர் பாலைவனத்தினூடாகப் பாதை அமைத்த போது, ஹிஜாஷுடனான இந்தத் தொடர்பு ஆரம்பமாயிற்று. ஸினாய் பாலைவனத்தினூடாகச் சென்ற இந்தப் பயணப்பாதை வட ஹிஜாஷினூடாகத் தொடர்ந்து தய்மா.'.வினூடாக பாபிலோனுக்குச் சென்ற பாதையோடும் ஹிஜாஷிலிருந்து யமனுக்குச் சென்ற பாதையோடும் இணைந்தது. ஹிஜாஷுக்குக் கீழாக யமன் நோக்கிச் சென்ற பாதையில் எகிப்தியக் குடியேற்றம் ஒன்றும் நிகழ்ந்தது. அதுவே பின்னர், யத்ரிப் (மதினா) ஆக உருவெடுத்தது. ஆயினும், இந்தக் குடியேற்றம் எப்போது நிகழ்ந்தது என்பதைச் சரியாகத் துணிவதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

வட ஹிஜாஷுடனான எகிப்தியத் தொடர்பு மிகப் புராதன காலத்திலேயே ஏற்பட்டிருக்க வேண்டும் என்றும் ஹிஜாஷினூடாக ஒழுங்கான வணிகர்க் குழு வழி உருவாகுவதற்கு முன்பே எகிப்தியச் செல்வாக்குகள் வட அறேபியா வினுள் ஊடுருவி இருக்க வேண்டும் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அறேபியாவின் பிரிக்க முடியாத ஒரு பகுதியான சிரியப் பாலைவனத்திலும் எகிப்தியச் செல்வாக்கு சுதந்திரமாக ஊடுருவி இருந்தது. தனது பேரரசின் ஒருபுற எல்லையாக யூபிரதிசு நதியைக் கருதிய எகிப்திய மன்னன் முதலாம் துட்மோஸ், கர்னக் கோயிற்சுவர்களில் உள்ள பொழிப்பின்படி, சிரியாப் பாலைவனத்தையும் தனது ஆதிக்கத்திலுள்ள ஒரு பகுதியாகக் கருதினான் என்று தெரிகிறது. அக்காடியப் பொறிப்புக்களில் மிஸ்ர் (அல்லது முஸ்ர்) என்ற சொல் வடஅறேபியாவையும் சிரியாவையும் உள்ளடக்கிய எகிப்தைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது, கி. மு. 7 ஆம் நூற்றாண்டில்

அசீரியரின் ஆதிக்கம் நிறுவப்படுவதற்கு முன்னால் இந்த நிலப்பகுதிகள் எகிப்தின் பிரதேசங்களாகவே கருதப்பட்டன என்பதையே காட்டுகிறது.[9] ஆயினும், இந்தப் பிரதேசங்களில் எகிப்தியர் படையெழுச்சிகள் நடத்தியமைக்கோ இராணுவ வெற்றிகள் பெற்றமைக்கோ ஆதாரம் இல்லை. எகிப்தியர் வட அறேபியாவினுள் ஊடுருவ வணிக முயற்சிகளே காரணமாக அமைந்திருக்க வேண்டும்.

கி. மு. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எகிப்தில் குடியேறி, கி. மு. 1674 ஆம் ஆண்டளவில் அங்கே புதிய அரச மரபொன்றை நிறுவி, கி. மு. 1570 கள் வரை எகிப்தை ஆட்சிசெய்த ஹிக்ஸோஸ் (Hyksos) என்ற இனத்தினர் அறேபியரே என்ற உண்மை பல்வேறு சான்றுகளால் நிறுவப்பட்டிருக்கின்றது. இவர்கள் அறேபியாவிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற செமித்தியரே என்பதை மேலைத்தேச வரலாற்றாசிரியர்கள் கூட உறுதிப்படுத்தி இருக்கின்றனர். மேலும், அறேபியாவுக்கும் எகிப்துக்கும் மிகப்புராதன காலத்திலிருந்தே தொடர்பு இருந்தது என்பதை வேதாகமத்தின் பழைய ஏற்பாடும் நிரூபித்து நிற்கிறது. நபி இப்றாஹீமின் மனைவியும் நபி இஸ்மாஈலின் அன்னையும் ஹிஜாஷில் குடியேறி வாழ்ந்தவருமான ஹாஜரா ஓர் எகிப்தியர் ஆவர் (ஆதியாகமம் 16:3). இஸ்மாஈலின் ஒரு மனைவியும் எகிப்தைச் சேர்ந்தவர் ஆவர் (ஆதியாகமம் 21:21). நபி ய.'.கூபின் காலத்திலேயே அறேபிய வர்த்தகக் குழுக்கள் எகிப்தில் வர்த்தகப் பயணங்களை மேற்கொண்டு வந்தன (ஆதியாகமம் 37:25). குழியிலிருந்து மீட்கப்பட்டு, மீதியானிய வர்த்தகர்களால் இருபது வெள்ளிக் காசுகளுக்காக விற்கப்பட்ட நபி யூஸுபை வாங்கி, அவரை எகிப்துக்குக் கொண்டு சென்றவர்களும் அறேபியரே (ஆதியாகமம் 37:28). நபி யூஸுபின் காலத்தில், எகிப்திலும் அதனைச் சூழவிருந்த நாடுகளிலும் பெரும் பஞ்சம் ஏற்பட்டபோது, யமனின் இராணியாக இருந்த தஜா பின்த் தூ ஷபார் என்பாள் கோதுமை கேட்டு நபி யூஸுபுக்குத் தூது அனுப்பினாள். இது பற்றி ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டில் யமனில் கண்டுபிடிக்கப்பட்ட பொறிப்பு ஒன்று கூறுகிறது.[10] இவையெல்லாம் மிகப் பழங்காலத்திலிருந்தே அறேபியாவுக்கும் எகிப்துக்கும் இடையே இருந்து வந்த நெருங்கிய உறவுகளுக்குச் சான்று பகர்கின்றன.

மெஸொபோதேமியத் தொடர்பு

அறேபியர் மெஸொபோதேமியாவோடும் தொடர்பு வைத்திருந்தனர். கிழக்கு அறேபியாவின் எல்லையாக அமைந்திருந்த மெஸொபோதேமியாவில் சுமேரியர்களும் அக்காடியர்களும் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்கும் அறேபியருக்கு மிடையே, போக்குவரத்துப் பாதைகள் தோன்றுவதற்கு முன்பே தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. மிகப்புராதன காலத்தில்,

9. *De Lacy O`Leary, History of Arabia Before Muhammad p.37*
10. *J.Forster, Historical Geography of Arabia, Vol. II. pp.102-103*

தெற்கு மெஸொபோதேமியாவில் இருந்த பாபிலோன் நகரத்தைச் சிறிது காலம் அறேபியரே ஆட்சி செய்தனர் என்பதை பாபிலோனியச் சான்றுகள் மட்டுமன்றி, நவீனகால எழுத்தாளர்களின் ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன. ஷாம் பின் நூஹ் என்பாரின் சமகாலத்தவரான ஜம்ஷீத் என்பாருக்குப் பின்னர் பாபிலோனையும் தெற்கு மெஸொபோதேமியாவையும் ஆட்சி செய்த ழஹ்ஹாக் பின் அல்வான் ஒரு அறேபியரே என்று பாரசீகச் சான்றுகள் கூறுகின்றன. பாரசீகக் கவிஞரான பிர்தவ்ஸீ, இவரது ஆட்சிக் காலம் ஆயிரம் ஆண்டுகள் நீடித்தது என்று தமது 'ஷாஹ் நாமா'வில் குறிப்பிட்டிருக்கிறார்.[11]

கி. மு. 4000 ஆண்டுகளுக்கு முன்பே, மெஸொபோதேமியாவில் ஆதிக்கம் பெற்றிருந்த சுமேரியர் அறேபியருடன் தொடர்பு வைத்திருந்தனர் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்தத் தொடர்பின் முக்கியகாரணம் சுமேரியருக்குத் தேவையான செம்பு தென் கிழக்கு அறேபியாவில் உள்ள உம்மானில் கிடைத்து வந்தமை ஆகும். ஆயினும், மெஸொபோதேமியாவுக்கும் அறேபியாவுக்கும் இடையில் இருந்த தொடர்பு சம்பந்தமான முதலாவது சான்று கி. மு. 2870 இல், செமித்திய மதகுருவான ஸர்ஜொன் என்பான் அகேட் (அக்காட்) என்ற இடத்தைத் தலைநகரமாகக் கொண்டு, கீழை மெஸொபோதேமியாவில் புதிய அரசு ஒன்றை நிறுவியதோடு தொடர்புடைய சூழல்களிலிருந்தே தெரிய வருகிறது. அவன் தனது அரசை எலம் (கூஷிஸ்தான்) முதல் மத்திய தரைக்கடற்கரை வரை விஸ்தரித்திருந்தான். இந்த ஆள்புலப் படர்ச்சியின்போது, அவனுக்கு சிரியாப் பாலைவனத்தின் அறேபியரோடு தொடர்பு கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

ஸர்ஜொனுக்குப் பின்னர் அவனது புதல்வன் ரிமுஷ் என்பானும் அவனுக்குப் பின்னர், கி. மு. 2795 இல், அவனது புதல்வன் நராம் ஸின் என்பானும் ஆட்சிபீடம் ஏறினர். நராம் ஸின் தனது ஆள்புலப்பரப்பை விரிவுபடுத்தும் எண்ணத்தோடு பல படையெடுப்புக்களை நடத்தி, பல புதிய பிரதேசங்களை வெற்றிகொண்டான். அவன் வெற்றிகொண்ட பகுதிகளுள் மகன் (Magan) என்பதும் ஒன்று. இதன் ஆட்சியாளனான மனியம் என்பானைத் தோற்கடித்து, இந்த இடத்தை அவன் கைப்பற்றினான்.

இதே சமயம், அகேட் (அக்காட்) அரசின் தெற்குப்பக்க அயலில் லகுஷ் என்ற நகரைத் தலைநகராகக் கொண்டு சுமேரியரின் மற்றொரு அரசு நிலவி வந்தது. இந்த அரச மரபின் மன்னர்கள் மதகுருக்களாகவும் இருந்தனர். இந்த மரபைச் சேர்ந்த அரசர்களுள் கி. மு. 2600 ஆம் ஆண்டளவில் ஆட்சிபீடமேறிய குடியா (Gudea) என்பான் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவன். அவன் லகுஷ் நகரில் பாரிய கோயில் ஒன்றை நிறுவினான். இந்தக் கோயில் நிருமாணத்திற்குத் தேவையான மரங்களையும்

11. S.M.Nadvi, A Geographical History of the Quran, pp.78-79

கற்களையும் அவன் 'மகன்' என்ற இடத்திலிருந்தும் மெலுக்கா என்ற இடத்திலிருந்துமே பெற்றுக்கொண்டான். இதற்காக அவன் அந்த இடங்களுக்குப் படையெடுத்துச் சென்றான். 'மகன்', 'மெலுக்கா' ஆகிய இந்த இரு சுமேரிய இடப்பெயர்களும் முதலில் கிழக்கு அறேபியாவிலும் மத்திய அறேபியாவிலும் உள்ள பிரதேசங்களைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டன.[12] மகன் என்பது இப்போது அல் ஹஸா.'. என்று அழைக்கப்படும் பண்டைய ஜெர்ஹா பிரதேசத்தையும் மெலுக்கா என்பது உம்மானை உள்ளடக்கிய - இப்போதைய பஹ்ரைனுக்கு (பண்டைய தில்முனுக்கு) அப்பாலுள்ள - பிரதேசத்தையும் குறித்து நின்றன என்றும் அபிசீனியரின் ஆட்சிக்காலத்திலேயே இந்த இடப்பெயர்கள் முறையே எதியோப்பியா, ஸினாய் தீபகற்பத்தை உள்ளடக்கிய மேற்கு அறேபியா ஆகியவற்றைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டன என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதனை உறுதிப்படுத்தும் பொறிப்புக்களும் வரலாற்றுச் சான்றுகளும் கிடைத்திருக்கின்றன. இவையெல்லாம் கி. மு. 3000 ஆண்டிலேயே அறேபியாவின் கிழக்குப்பகுதி சுமேரியருடனும் அக்காடியருடனும் நீராலும் நிலத்தாலும் தொடர்பு கொண்டிருந்தது என்பதற்குச் சான்றாக இருக்கின்றன.[13]

மெஸொபோதேமியாவை உள்ளடக்கிய மேற்கு ஆசியாவில் நிறுவப்பட்டிருந்த அசீரியப் பேரரசோடும் அறேபியர் தொடர்பு வைத்திருந்தனர். அசீரிய இராச்சியத்தை ஒரு பேரரசாக மாற்றிய இரண்டாம் அஷுர்னசிர்பால் (கி. மு. 884 - 859) என்பானுக்குப் பின்னர், அவனது மகன் மூன்றாம் ஷல்மனிஸர் (கி. மு. 859 - 824) என்பான் ஆட்சிபீடம் ஏறினான். இவன், தமஸ்கஸின் அரமிய அரசனுக்கும் அவனது நட்பாளரான அஹப், ஜுன்துப் என்ற அறபு ஷைகுகளுக்கும் எதிராகப் படைநடத்திச் சென்றான். கி. மு. 853 இல் ஹமாஹ் நகருக்கு வடக்கே உள்ள கர்கர் என்ற இடத்தில் நடைபெற்ற சண்டையில், ஆயிரக்கணக்கான அறேபியரோடு இரதங்கள், குதிரைகள், ஒட்டகைகள் முதலியனவும் அழிக்கப்பட்டன என்று அவனது பொறிப்பு ஒன்று கூறுகிறது. அசீரியருடன் அறேபியருக்கு ஏற்பட்ட முதலாவது தொடர்பு இதிலிருந்தே ஆரம்பமானது.

அசீரியத் தொடர்பு

இரண்டாம் அசீரியப் பேரரசை நிறுவிய மூன்றாம் திஜ்லத் - பைலஸர் (கி. மு. 745- 727) என்பான் தனது பேரரசின் தூரப் பிரதேசங்களினூடாகச் சென்ற வர்த்தக நெடுஞ்சாலைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கத்தோடு சிரியாவின் மீதும் அதனைச் சூழஇருந்த பிரதேசங்கள் மீதும் பல படையெடுப்புக்களை நடத்தினான். இந்தப் படையெடுப்புக்களின் போது, பல அறபுப் பிரதேசங்கள் அவனால் வெற்றி கொள்ளப்பட்டன. கி. மு. 728

12. Philip K.Hitti, History of the Arabs, p.36
13. De Lacy O`Leary, op.cit. p.51.

இல், த.'.மா.'. வர்க்கத்தினரும் ஸப.'. வர்க்கத்தினரும் தங்கம், ஒட்டகைகள், நறுமணப்பொருட்கள் ஆகியவற்றை அவனுக்குத் திறையாகச் செலுத்தினர். இவர்கள் ஸினாய் தீபகற்பத்திலும் வடகிழக்கே உள்ள பாலைவனத்திலும் வாழ்ந்து வந்தனர். இவ்வாறு, மூன்றாம் திஜ்லத் - பைலஸர் அறேபியர் மீது தனது ஆதிக்கத் தளையை முதன்முதலில் இறுக்கினான்.

இஸ்ரவேலை வெற்றிகொண்டு, அதற்கு ஸமரியா என்று பெயர் சூட்டியவனும் அசீரியப் பேரரசை உச்சநிலைக்குக் கொண்டுவந்தவனும் ஸர்ஜோனியர் என்ற புதிய அரச மரபை நிறுவியவனுமான இரண்டாம் ஸர்ஜோன் (கி. மு. 722-705) என்பான் கி. மு. 715ஆம் ஆண்டளவில், யமனிலிருந்தும் ஹழ்ரமவ்த்திலிருந்தும் சென்ற வர்த்தகப் பாதைகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாய் அமைந்திருந்த அறேபிய வர்க்கங்கள் மீது படையெடுப்பு நடத்தினான். இந்தப்படையெடுப்பின் போது மூன்றாம் ஸர்ஜோனால் அடிமைப்படுத்தப்பட்ட மக்களுள் கய்அபா, தமூத், இபாதித், மர்ஸிமனி முதலான வர்க்கங்களைச் சேர்ந்தோரும் அடங்குவர். இந்தப் படையெடுப்பைத் தொடர்ந்து வடஅறேபியப் பாலைவனத்தைச் சேர்ந்த அறேபியரின் இராணியான ஷம்ஸி, ஸப.'.வின் ஆட்சியாளனான இத்அமரா (யத்அமரா), எகிப்திய ஆட்சியாளன் முதலானோர் தங்கம், மலைவிளை பொருட்கள், இரத்தினக்கற்கள், யானைத்தந்தம், மூலிகைகள், குதிரைகள், ஒட்டகைகள் முதலானவற்றைத் திறையாக அவனுக்கு அனுப்பிவைத்தனர்.

இரண்டாம் ஸர்ஜோனுக்குப் பின்னர் ஆட்சி பீடமேறிய அவனது மகன் சென்னசெரிப் (கி. மு. 705-681) என்பான் நைனவா நகரத்தை அசீரியப் பேரரசின் தலைநகராக்கிக் கொண்டான். அவன் கி. மு. 690 ஆம் ஆண்டளவில், அறேபியா மீது படையெழுச்சி நடத்தி, 'அதுமு' கோட்டையைக் கைப்பற்றியதோடு, அதன் இராணியையும் அங்கிருந்த கடவுட் சிலைகளையும் நைனவாவுக்கு எடுத்துச் சென்றான். இந்த அதுமு என்பது இஸ்லாமிய காலத்தில் தூமதுல் ஜன்தல் என்று அழைக்கப்பட்ட வட அறேபிய பாலைவனச் சோலை ஆகும். இந்தப்படையெடுப்பின் காரணம் அசீரியரின் மேலாதிக்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்த பாபிலோனியரோடு அறேபியர் நட்பு கொண்டிருந்தமை ஆகும். அவனுக்குப்பின்னர் ஆட்சிபீடமேறிய எசர்ஹட்டோன் (கி. மு. 681-668) என்பானும் கி. மு. 676 இல் அறேபியா மீது படையெடுத்தான். அவனுக்குப் பின்னர் பதவி ஏற்ற அஷர்பனிபால் (கி. மு. 668- 626) என்பான் கி. மு. 648 ஆம் ஆண்டளவில் அறேபியா மீது மிகக் கடுமையான கட்டுப்பாட்டைப் பிரயோகிக்க ஆரம்பித்தான். இது, நபஅய்தீ (நெபாயோத்) என்பாரின் தலைமையில் ஒன்று திரண்டு, அசீரியருக்கு எதிராகப் பொதுக் கிளர்ச்சி ஒன்றில் இறங்க அறேபியரைத் தூண்டியது. ஆயினும், அவன் இந்தக் கிளர்ச்சியை அடக்கிவிட்டதோடு, கி. மு. 641 க்கும் 638 க்கும் இடைப்பட்ட காலத்தில் பெரும் படை ஒன்றை அனுப்பி, வடஅறேபிய

எல்லைகளில் இருந்த பல இடங்களையும் கைப்பற்றினான்.

இவ்வாறு இரண்டாம் ஸர்ஜோன், சென்னசெரிப், எஸர்ஹெட்டோன், அஷர்பனிபால் ஆகியோர் அறேபியா மீது ஒன்பது படையெழுச்சிகளை நடத்தி, சிரியாவில் இருந்த அசீரிய மாகாணங்களுக்கும் வர்த்தகப் பாதைகளுக்கும் அச்சுறுத்தலாக அமைந்திருந்த அறேபியரை அடக்கி ஆதிக்கம் கொள்ள முயன்ற போதிலும், அந்த நாட்டை முழுமையாக வெற்றி கொள்ளவோ தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கவோ அசீரியரால் முடியவில்லை. வட அறேபியாவில் வாழ்ந்த சில வர்க்கங்களைச் சேர்ந்தவர் களையும் பாலைவனச்சோலைகள் சிலவற்றையுமே அவர்களால் தமது ஆதிக்கத்தின் கீழ் சிறிது காலம் வைத்திருக்க முடிந்தது.

அசீரியரின் வீழ்ச்சிக்குப் பின்னர் மெஸொபோதேமியாவின் அதிபதிகளாக மாறிய கல்திய (நவபாபிலோனிய) மக்களோடும் அறேபியர் தொடர்பு கொண்டிருந்தனர். நான்காம் திஜ்லத்- பைலஸர் என்பானின் பொறிப்பு ஒன்றில்,

கல்தியத் தொடர்பு

வட அறேபியாவில் உள்ள தய்மா.'. என்ற இடம் பற்றிய ஒரு குறிப்பு காணப்படுகிறது. வட ஹிஜாஷில் உள்ள பாலைவனச் சோலையில் காணப்படும் இந்தப் பட்டினத்தை புராதன காலத்திலிருந்தே எகிப்துக்கும் அசீரியாவுக்கும் இடையே பிரயாணம் செய்த வர்த்தகக் கூட்டத்தினர் தரிசித்து வந்தனர். ஹிஜாஷிலிருந்து சிரியாவுக்குச் சென்ற வர்த்தகப் பாதையையும் எகிப்துக்கும் மெஸொபோதேமியாவுக்கும் இடையில் இருந்த வர்த்தகப்பாதையையும் கட்டுப்படுத்தும் விதத்தில் அமைந்திருந்த இந்தப் பட்டினத்தில் அசீரிய, எகிப்திய செல்வாக்குகள் படிந்திருந்தன. இதனை கூகி என்பார் மேற்கோளாகக் காட்டும் பொறிப்பு ஒன்று உறுதிப்படுத்துகின்றது.[15]

கி. மு. 552 இல், கடைசி நவ பாபிலோனிய (கல்திய) அரசனான நபோடினஸ் (கி. மு. 556-539) என்பான் தய்மா.'. நகரத்தின் மீது படையெடுப்பு நடத்தி, அதன் இளவரசனைக் கொன்று, அந்த நகரத்தை வெற்றி கொண்டான்; அங்கே அவன் மாளிகை ஒன்றை நிறுவி, பாபிலோனியரையும் சிரியரையும் உள்ளடக்கிய மெய்ப்பாதுகாவலர் படை ஒன்றோடு அந்த நகரத்தில் குடி அமர்ந்தான். இவ்வாறு அவன் கி. மு. 544 வரை அங்கே தங்கி இருந்தான். அதேசமயம் அவனது புதல்வன் பல்ஷஷ்ஷாரும் படை வீரர்களும் பாபிலோனியாவில் இருந்தனர்.

கல்தியருக்குப் பின்னர் மெஸொபோதேமியாவில் பண்டைய பாரசீகப் பேரரசை நிறுவிய பாரசீகரோடும் அறேபியர் தொடர்பு கொண்டிருந்தனர். பண்டைய பாரசீகப் பேரரசைத் தோற்றுவித்த மகா சைரஸ் (கி. மு. 600 -

14 *Philip K. Hitti, op.p.37*

15 *De Lacy O`Leary, op.cit, p.53*

பாரசீகத் தொடர்பு

529) என்பான் கி. மு. 540 - 539 இல், அறேபியா மீது படையெடுப்பு ஒன்றை நடத்தினான். இந்தப்படையெடுப்பின் நோக்கம், தய்மா.·. நகரிலிருந்து நபதிய (அறேபிய) ரை வெளியேற்றுதல் ஆகும் என்று கூறப்படுகிறது. இவனுக்குப் பின்னர், பாரசீக ஆட்சியாளர் எவருமே அறேபியாவில் ஆதிக்கம் கொள்ள முயலவில்லை.

மகா சைரஸுக்குப் பின்னர் ஆட்சி பீடமேறிய அவனது மகன் இரண்டாம் காம்பிஸொஸ் (கி. மு. 529-521) என்பான் கி. மு. 525 இல், எகிப்தை வெற்றிகொள்ளப் புறப்பட்டுச் சென்ற வழியில் வட அறேபியாவினூடாகப் பிரயாணம் செய்து, அங்கு வாழ்ந்த மக்களோடு நட்புறவை ஏற்படுத்திக் கொண்டான். இது பற்றி ஹிரதோஸ் குறிப்பிடுகையில் 'பாரசீக அரசன் டாரியஸ் (கி. மு. 521-486) என்பானின் ஆணிலம் அறேபியாவைத் தவிர முழு ஆசியாவிலும் வியாபித்திருந்தது. அறேபியா பாரசீகரால் ஒரு போதும் அடிமைப்படுத்தப்படவில்லை. ஆனால், இரண்டு நாடுகளுக்கும் இடையே நட்பு ரீதியான உறவு, மன்னன் காம்பிஸொஸை அவனது எகிப்தியப் படையெடுப்பின் போது தமது நாட்டினூடாகக் கடந்து செல்ல அறேபியர் அனுமதித்தது முதல் தொடர்ந்தது. ஏனெனில், இந்த உதவி இல்லாமல் எகிப்தியப்படையெடுப்பு அவனுக்கு சாத்தியமற்றதாக இருந்தது' என்று கூறுகின்றார்.[16]

அறேபியருடன் புராதன கிரேக்கரும் உரோமரும் தொடர்பு கொண்டிருந்தனர். இதனைத் தொடர்பு என்பதிலும் பார்க்க அறிமுகம் என்று கூறுதலே மிகப்பொருத்தமானது. இந்த அறிமுகத்துக்கு அறபு நாடு

கிரேக்க அறிமுகம்

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் சென்ற பாதையில் குறுக்காக அமைந்திருந்தமையும் மேற்கு உலகச் சந்தைகளில் மிகவும் வரவேற்கப்பட்ட பண்டங்களை அந்த நாடு உற்பத்தி செய்தமையுமே முக்கிய காரணங்களாக அமைந்தன. தொன்முறை கிரேக்க, உரோம எழுத்தாளர்கள் அறேபியாவை அறேபியா பீலிக்ஸ், அறேபியா பீட்ரா, அறேபியா டெஸெர்ட்டா என மூன்று பிரதேசங்களாகப் பிரித்தனர். அவர்களது பிரிப்பின் படி, அறேபியா டெஸெர்ட்டா சிரிய - மெஸொபோதேமியப் பாலைவனத்தையும் (அல்பாதியா) அறேபியா பீட்ரா ஸினாய் பிரதேசம், நபதிய இராச்சியப் பிரதேசம் ஆகியவற்றையும் அறேபியா பீலிக்ஸ் அறேபிய தீபகற்பத்தின் எஞ்சிய பிரதேசங்கள் அனைத்தையும் உள்ளடக்கியவையாய் இருந்தன. அவர்கள் அறேபியரை சரசென்ஸ் என்று அழைத்தனர்.

அறேபியரைப் பற்றிய முதலாவது குறிப்பு கிரேக்க இலக்கியத்தில்,

16. Herodotus, The Histories, p.240

கி. மு. 5ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே காணப்படுகிறது. புகழ்பெற்ற பண்டைய கிரேக்க நாடக ஆசிரியரான எஸ்கீலஸ் (கி. மு. 525-456) என்பார் கி. மு. 472இல் எழுதிய 'பாரசீகர்' (The Persians) என்ற நாடகத்தில் பாரசீக மன்னனான ஷேர்க்ஸீஸ் (கி. மு. 486-465) என்பானின் படையில் பணியாற்றிய அரும் திறமை வாய்ந்த அறபுப்படை அலுவலர் ஒருவரைப் பற்றிக் குறிப்பிட்டார். இதுவே அறேபியரைப் பற்றி கிரேக்க இலக்கியத்தில் இடம் பெற்ற முதற் குறிப்பு ஆகும். இதனைத் தொடர்ந்து புகழ்பெற்ற கிரேக்க வரலாற்றாசிரியரான ஹிரோதோதஸ் (கி. மு. 484-425) தமது வரலாறுகள் (The Histories) என்ற நூலில் அறேபியரைப்பற்றிய பல குறிப்புக்களையும் தகவல்களையும் தந்தார்.

கிரேக்கப் புவியியலாளரான எரொதோஸ்தினஸ் (கி. மு. 276-194) முதல் உரோம அறிஞரான மூத்த பிளினி (கி. பி. 23-79) வரை மேற்கு உலகில் வாழ்ந்த தொன்முறை எழுத்தாளர்களுக்கு அறேபியா செல்வங்களும் வாசனைத்திரவியங்களும் நிறைந்த ஒரு நாடாகவே இருந்து வந்தது. அங்கு வாழ்ந்த மக்கள், அவர்களது பார்வையில் காதல் உணர்வும் சுதந்திர காதலும் உடையவர்களாகத் தோன்றினர். அறேபியரின் காதல் உணர்வும் சுதந்திர நுகர்ச்சியுமே மேலைத்தேச எழுத்தாளர்களை வெகுவாகக் கவர்ந்தன. புராதன காலம் முதல் எட்வர்ட் கிப்பன் (1737-1794) என்பாரின் காலம் வரை வாழ்ந்த ஐரோப்பிய எழுத்தாளர்களுக்கு அறேபிய மக்கள் வியத்தகு கருப்பொருள் ஒன்றை உருவாக்கிக் கொடுத்தனர்.[17]

அறேபியாவைப்பற்றி கிரேக்க எழுத்தாளர்கள் பல வியப்பான தகவல்களைத் தந்துள்ளனர். ஹிரோதோதஸுக்கு அறபு நாடு முழுவதும் வாசனைத் திரவியங்களை உற்பத்தி செய்யும் நறுமண நாடாகவே இருந்தது. அவரது கருத்துப்படி, 'அறேபியாவே சாம்பிராணி, காஸியா, கறுவா, லெடனோன் (Ledanon) முதலான நறுமணப்பொருட்களை விளைவிக்கும் ஒரேநாடாக விளங்கியது'.[18] கிரேக்கப் புவியியலாளரான ஸ்ட்ராபோ (கி. மு. 63 - கி. பி. 24) என்பாருக்கும் அந்த நாடு 'வாசனைத்திரவிய நாடா'கவே இருந்தது. அவர் தமது புவியியல் நூலிலே அந்த நாட்டில் காணப்பட்ட 'மனிதனின் இடுப்பளவு உயரத்திற்குப் பாயும்' ஒருசாண் நீளமுடைய பாம்பைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். ஹிரோதோதஸும் அறேபியாவின் பறக்கும் பாம்புகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். தையோ தொரஸ்ஸி கியூலஸ் என்பாரும் அறேபியாவை வாசனைத்திரவிய நாடாகவே குறிப்பிட்டு, அதன் மண்ணே நறுமணம் வீசியது என்கிறார். அறேபியாவில் தங்கச் சுரங்கங்கள் காணப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறு கிரேக்க, உரோம எழுத்தாளர்கள் அனைவரும் அறேபியாவை வாசனைத் திரவியங்களுக்குப்

17. Hitti, op.cit., p.45
18. Herodotus,op.cit. p.248

புகழ்பெற்ற ஒரு நாடாகவே இனம் கண்டனர்.

ஒரு காலத்தில் உலகின் எசமானர்களாகக் கருதப்பட்ட உரோமர்கள் வெறும் அறிமுகத்தோடு மட்டும் அறேபியாவுடன் இருந்த இந்தத் தொடர்பை நிறுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் அறேபியா மீது படையெழுச்சியும் நடத்தினர். முதலாவது உரோமப் பேரரசனான ஒகஸ்டஸ் சீஸர் (கி. மு. 63- கி. பி. 14) என்பானின் ஆட்சிக்காலத்தில், அவனது தளபதியான ஈலியஸ் கல்லஸ் என்பானின் தலைமையில் 10,000 வீரர்களைக் கொண்ட ஒரு படை கி. மு. 24ல் எகிப்திலிருந்து அறேபியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. தென் அறேபியரின் தனியுரிமையில் இருந்து வந்த போக்குவரத்துப் பாதைகளைக் கைப்பற்றுதலும் யமனின் மூலவளங்களைத் தங்களது நன்மைக்காகப் பயன்படுத்தலுமே உரோமர் மேற்கொண்ட இந்தப் படையெடுப்பின் முக்கிய நோக்கமாக இருந்தன. நபதிய நேசர்களின் ஆதரவோடு மேற்கொள்ளப்பட்ட இந்தப்படையெடுப்பு உரோமரின் வரலாற்றில் மிக முக்கியமான ஒரு நிகழ்வு ஆகும். பல மாத முயற்சியின் பின்னர், பல நூற்றுக்கணக்கான வீரர்களைப் பலிகொடுத்த உரோமப் படையினர், இந்தப்படையெடுப்பின் போது ஏற்கனவே அவர்களால் கைப்பற்றப்பட்டிருந்த நஜ்ரானுக்கு வந்து, அங்கிருந்து கப்பல் ஏறிச் செங்கடல் வழியாக எகிப்தியக் கரையை அடைந்தனர். முதலும் கடைசியுமாக நிகழ்ந்த இந்தப்படையெழுச்சி உரோமருக்குப் பெரும் இழப்புக்களையும் துயரங்களையும் பரிசாக அளித்தது. இதன் பின்னர் எந்த ஒரு ஐரோப்பிய ஆதிக்கமும் அறேபியாவின் உள்நாட்டில் படையெழுச்சி நடத்த முயலவில்லை.

உரோமப் படையெடுப்பு

அறேபியரோடு இந்தியர், சீனர் ஆகியோரும் புராதன காலத்திலிருந்தே தொடர்புகள் வைத்திருந்தனர். பெரும்பாலும் இவை வணிகத் தொடர்புகளாகவே இருந்தன. இந்த வணிகத் தொடர்புக்கு அறபுக்கடல் பெரும் பங்களிப்புச் செய்தது. அறபுக்கடல் வழியாக பாரசீக விரிகுடாவுக்கு வந்த இந்திய, சீன வர்த்தகர்கள் அங்கிருந்து அறேபியாவின் ஊடாகத் தரைப்பாதை வழியாகவும் செங்கடல் வழியாகவும் மேற்கு உலகிற்குத் தங்கள் வர்த்தகப் பயணங்களை மேற்கொண்டனர். கஸ்பியன் கடலிலிருந்து இந்து கூஷ் கணவாய் ஊடாக இந்தியாவின் மேற்கு வடிநிலம் வரை நீண்டு கிடந்த பாதை, எல்பேசு (Elburz) மலையடிவாரத்திலிருந்து இந்து கூஷ் ஊடாக சிந்து வடி நிலம் வரை நீண்டு கிடந்த பாதை, தஷ் - இ - லூத் (பாரசீகத்தின் உப்புப் பாலைவனம்) என்ற இடத்திற்குக் குறுக்காக வட மேற்கு வரை நீண்டு கிடந்த பாதை, பலுசிஸ்தான் ஊடாக இந்து ஆற்றுப் பள்ளத்தாக்கின் தென் பகுதி வரை நீண்டு கிடந்த பாதை ஆகிய தரைப்பாதைகளும் இந்தத் தொடர்புகளுக்குப் பெரிதும் உதவின. ஆயினும், இந்து கூஷ்

இந்தியத் தொடர்பு

கணவாய்களின் ஊடாக வடமேற்கிலிருந்து இந்தியாவை அடைந்த முதல் இரண்டு பாதைகளே இந்தியரின் வடமேற்கு நோக்கிய பயணங்களுக்கு மிக முக்கிய தரைப்பாதைகளாக அமைந்தன. இந்தப்பாதைகள் வழியாகவே இந்தியாவின் மீதான வெளிநாட்டுப் படையெடுப்புக்கள் அவ்வப்போது நிகழ்ந்து வந்தன.

இவ்வாறு, புராதன உலகில் புகழ்பெற்றிருந்த எல்லா நாடுகளோடும் பேரரசுகளோடும் - அறேபியா தொடர்பு கொண்டிருந்தது. இந்தத் தொடர்புகளுக்கு அறேபியாவின் புவியியல் அமைப்பும் அதன் விளைபொருள்களுமே முக்கிய காரணமாக அமைந்தன. இந்தத் தொடர்புகளின் விளைவாகப் பல சமய, கலாசாரத் தாக்கங்கள் அறேபியாவிலும் அறேபியரிலும் ஏற்படுதல் தவிர்க்க முடியாததாயிற்று.

2.அறியாமைக்கால அறேபியா

சமயங்களின் வரலாற்றில் நபி மூஸா (அலை) அவர்களின் மறைவுக்கும் இஸ்லாத்தின் தோற்றத்திற்கும் இடைப்பட்ட காலம் மனித வரலாற்றிலே இருண்ட யுகம் (Dark age) என்று கருதப்படுகின்றது. இக்காலப்பகுதியில் அறேபியா மட்டுமன்றி, முழு உலகமும் அனாச்சார இருளில் புதையுண்டு கிடந்தது. அக்காலத்தில் முழு ஆசியாவையும் ஆட்சி செய்த ஈரானிய நாகரிகமும் புராதன காலத்திலிருந்தே மேற்குலகில் புகழ்பூத்து விளங்கிய கிரேக்க, உரோம நாகரிகங்களும் ஆபிரிக்கா முழுவதிலும் வேரூன்றி இருந்த எகிப்திய நாகரிகமும் புதிதாகத் தோன்றிய மிலேச்சர்களின் அட்டூழியங்களால் அழிந்து போயிருந்தன. பௌத்த மதத்தாலும் கிறித்தவ மதத்தாலும் போதிக்கப்பட்ட சமூக, சமயக்கோட்பாடுகள் உதறித் தள்ளப்பட்டன. பௌத்தம், இந்து, கன்பூஸிய வாதம் முதலான சமய நெறிகள் போதித்த சமூக, ஒழுக்க போதனைகள் கூடப் புறக்கணிக்கப்பட்டன. இறைவனால் அருளப்பட்ட சமயங்கள் யாவும் மூடநம்பிக்கைகளாலும் மனிதனின் மனோ இச்சைகளாலும் கற்பழிக்கப்பட்டு, தமது புனிதத் தன்மையை இழந்திருந்தன. மனித ஒழுக்கம், புனிதமாகக் கருதப்பட்ட தீயொழுக்கத்தின் சாக்கடையிலே வீசப்பட்டுக் கிடந்தது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, விபசாரம், உருவத்தொழும்பு முதலான தீவினைகள் உலகின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் மலிந்து பரவி இருந்தன. இவ்வாறு, அறியாமையும் தீயொழுக்கமும் இணைந்து, முழு உலகிலும் கட்டற்ற ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தன.

இருண்ட யுகம்

அறேபியாவைப் பொறுத்த வரை, இஸ்லாத்திற்கு முந்திய ஒரு நூற்றாண்டு காலப்பகுதி 'அய்யாமுல் ஜாஹிலிய்யா' (அறியாமைக் காலம்) என்று வரலாற்றாசிரியர்களால் வருணிக்கப்படுகிறது. இந்தக்காலப்பகுதியை வரலாற்றாசிரியர்கள் சிலர் 'அய்யாமுல் பத்ரத்' (இடைநிறுத்தக் காலம்) என்றும் வேறொரு பொருளில் அழைக்கின்றனர். இது நபி ஈஸா (அலை) அவர்களின் மறைவுக்கும் இஸ்லாத்தின் தோற்றத்திற்கும் இடைப்பட்ட காலத்தைக் குறிக்கும். இந்தக் காலத்தில் நபி ஈஸா (அலை) அவர்களுக்குப் பின்னர் சுமார் ஐந்து நூற்றாண்டுகளாக மனித இனத்தின் நேர்வழி காட்டலுக்காக தீர்க்கதரிசியோ ஒரு தூதரோ ஒரு வேதமோ அருளப்படவில்லை. இதனாலேயே அக்காலப்பகுதி 'இறைவழிகாட்டல் இடைநிறுத்தப்பட்ட காலம்' என்ற கருத்தில் 'அய்யாமுல் பத்ரத்' என்று அழைக்கப்படுகின்றது.

அய்யாமுல் ஜாஹிலிய்யா

'ஜாஹிலிய்யா' என்ற சொல்லால், கிறித்தவ மதம் தோன்றுவதற்கு முன்பிருந்த காலம் வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டில் 'அறியாமை உள்ள காலம்' என்று குறிப்பிடப்படுவதைப் போல (அப்போஸ்தலர் 17:30) இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பிருந்த காலப்பகுதியே சுட்டப்படுகிறது என்றே பொதுவாகக் கூறப்படுகின்றது. ஏனெனில், அதனை அடுத்து வந்த இஸ்லாமிய யுகம் அறிவும் தெளிவும் உள்ள ஒரு காலப்பகுதியாக விளங்கியது. இந்தச் சொல்லின் வேர்ச்சொல்லாகக் கருதப்படும் 'ஜஹில' (அறியாதிருத்தல்) என்பது அறிதல் என்ற கருத்தைத் தரும் 'அலிம' என்ற சொல்லின் எதிர்ச் சொல் ஆகும். இதே பொருளில் இந்தச் சொல் பண்டைய அறபு மொழியிலும் அன்தரா முதலான பண்டைய அறபுக் கவிஞர்களின் கவிதைகளிலும் ஆளப்பட்டிருக்கிறது. ஆனால் கோல்ட்ஷிஹெர் (Goldziher) என்பார் 'அறியாதிருத்தல்' என்பது 'ஜஹில' என்ற வேர்ச் சொல்லின் இரண்டாந்தரக் கருத்தே என்றும் இதன் முதற் கருத்து சாந்தமாய் இருத்தல், பொறுமை, மிதமாயிருத்தல் முதலான கருத்துக்களைத் தரும் 'ஹலும' என்ற சொல்லின் எதிர்க்கருத்தான மூர்க்கமாய் இருத்தல் அல்லது முரட்டுத்தனமாய் இருத்தல் அல்லது பட்டிக் காட்டுப் பாங்காய் இருத்தல் என்பதே என்றும் பல பண்டைய அறபுச் செய்யுள்களை ஆதாரமாகக் காட்டிக் கூறுகிறார்.[1] 'ஜாஹிலிய்யா' என்ற சொல் அல்குர்ஆனிலும் சில இடங்களில், இஸ்லாத்திற்கு முந்திய அறேபியரின் மௌட்டீகப் பாங்கை உணர்த்தும் கருத்தில் ஆளப்பட்டிருக்கிறது. (3:154, 5:50, 33:33, 48:26)

உண்மையில், மௌட்டீக அறேபியன் (Pagan Arab) என்ற பொருளில் வழங்கப்படும் 'ஜாஹிலீ' என்ற அறபுச் சொல்லின் தொகைப் பெயர் (இஸ்முஜம்ஈ) தான் 'ஜாஹிலிய்யா' என்பதாகும். இந்தச் சொல்லுக்குப் பொதுவாக ('இல்ம்' - அறிவு - என்ற பண்புக்கு எதிரான) அறியாமை என்ற பொருள் கொள்ளப்படுகிறது. இது 'ஜஹ்ல்' என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. அறிவு இன்மை என்பது இதன் பொதுவான கருத்து; முட்டாள்தனம், தவறான நடத்தை முதலான கருத்துக்களும் இந்தச் சொல்லுக்கு உள்ளன. அறியாமை இருவகைப்படும். ஒன்று எளிய அறியாமை (ஜஹ்ல் அல் பஸீத்); மற்றது சிக்கலான அறியாமை (ஜஹ்ல் அல் முகர்ரப்). எளிய அறியாமை என்பது தெரிந்திருக்க வேண்டிய ஒன்றைப்பற்றிய அறிவு இல்லாதிருப்பதைக் குறிக்கும்; சிக்கலான அல்லது கலப்பு அறியாமை என்பது உண்மையோடு அல்லது யதார்த்தத்தோடு ஒத்துவராத முடிவான நம்பிக்கையைக் குறிக்கும். அல் றாஃபிப் என்ற நிகண்டாசிரியர் இது பற்றிக் குறிப்பிடுகையில், அறியாமை மூவகைப்படும் என்கிறார். 'மனம் அறிவின்றி வெறுமையாக இருத்தல் (பொதுவான அறிவின்மை) என்பது ஒரு வகை; இதுவே இந்தச் சொல்லின் முதற் கருத்து. ஒரு விடயத்தை உண்மையில் அது இருப்பதற்கு முரணாக

1. Shoter Encyclopaedia of Islam (Ed.Gibb & kramers) p.82

நம்புதல் என்பது இரண்டாவது வகை. ஒரு விடயத்தை உண்மையில் அதனைச் செய்ய வேண்டியதற்கு முரணான முறையில் செய்தல் என்பது மூன்றாவது வகை' என்று அவர் குறிப்பிடுகிறார்.[2]

இவற்றையெல்லாம் கூட்டுமொத்தமாக ஆராய்கையில், இஸ்லாத்திற்கு முந்திய அறேபியரைச் சுட்டும் 'அல் ஜாஹிலிய்யா' என்ற சொல் குறித்து நிற்கும் கருத்து நம்பிக்கை சார்ந்த அறியாமை, செயல் சார்ந்த அறியாமை ஆகியனவே ஆகும் என்பதை அறிந்து கொள்ளலாம். முதற்கருத்தான அறிவு சார்ந்த அறியாமையை இது குறிக்காது. ஏனெனில், அக்காலச் சூழலும் வாய்ப்புக்களும் இடம் அளித்த அளவுக்கு அறேபியர் எழுத வாசிக்கக் கற்றவர்களாயும் இலக்கிய ஆர்வம் உடையவர்களாயும் பொருள்களைப் பற்றிய அறிவு உடையவர்களாயும் இருந்தனர். குறிப்பாக, மற்ற அறேபியர் களை விடவும் தென் அறேபியர் நல்ல அறிவாற்றலும் நாகரிகச் சிறப்பும் உடையவர்களாக விளங்கினர். சில சமயங்களில், சமகால ஐரோப்பியரின் அறிவு நிலையை விடவும் அறேபியரின் அறிவு நிலை மேம்பட்டதாய் இருந்ததை அவதானிக்க முடியும். ஆனால், அறேபியர் மூடநம்பிக்கைகள், மடமை, வீண் பெருமை முதலானவற்றில் ஊறியவர்களாயும் அர்த்தமில்லாமல் போர் செய்யும் மூர்க்க சுபாவம் உடையவர்களாயும் இருந்தனர். அவர்களிடம் அறிவு இருந்த போதிலும், அந்த அறிவில் தெளிவு இருக்கவில்லை. அவர்களிடம் சில நல்ல பண்புகள் இருந்த போதிலும், ஆன்மீக விருத்தியோ பண்பாட்டு விழுமியங்களோ காணப்படவில்லை. அவர்களுள் மேல்மட்ட சமுதாயத்தாரிடம் நாகரிகச் சிறப்பு காணப்பட்டபோதிலும்,மனிதனின் அந்தஸ்தை உயர்த்தக்கூடிய சாந்தம், அமைதி, பொறுமை, மென்மை, அடக்கம், சிந்தனை முதலான குணங்கள் இருக்கவில்லை. இவை எல்லாம் 'ஜாஹிலிய்யத்' என்ற மௌட்டியத்தின் பண்புகளாக இருந்தமையால், இஸ்லாத்திற்கு முந்திய அறேபியர் இப்பெயரால் அழைக்கப்பட்டனர்.

நன்கு கற்றறிந்த ஒருவர் உண்மைக்கு மாற்றமான ஒரு செயலைச் செய்து விட்டால் அல்லது பாமரன் ஒருவனிடம் இருக்கும் ஒரு மூடநம்பிக்கையை உடையவராக இருக்கக்காணப்பட்டால், அவரைப்பார்த்து 'ஜாஹில்' (மடையன்) என்று கூறுதல் சாதாரணமான ஒரு வழக்கம். இங்கே இந்தச் சொல், அவர் கல்வியறிவு இல்லாதவர் என்ற பொருளில் பயன்படுத்தப்படுவதில்லை. அவரது செயல்சார்ந்த அல்லது நம்பிக்கைசார்ந்த முட்டாள்தனத்தைச் சுட்டிக்காட்டவே இப்படி அவரை அழைக்கிறோம். ஏனெனில், அவரது இத்தகைய செயலும் நம்பிக்கையும் ஒருவகை அறிவுச் சூன்யத்தின் விளைவே ஆகும். இதே போலவே 'ஜாஹிலிய்யத்' என்ற சொல், இஸ்லாத்திற்கு முந்திய அறேபியரின் செயல், நம்பிக்கை அல்லது கொள்கை சார்ந்த அறியாமையைக் குறிப்பிடவே பயன்படுத்தப்படுகிறது.

2. Lane`s Arabic English Lexicon. Part. II. p.477

இத்தகைய ஒரு அறியாமை நன்கு கற்றறிந்த ஒருவரில் வெளிப்படுமாயின், அவர் கற்ற கல்வி பெறுமானம் அற்றதாகப் போய்விடுகிறது. கற்ற கல்வி பெறுமானம் அறறுப் போய்விட்டால் அங்கே எஞ்சுவது அறியாமையே தான். ஆகவே, 'அய்யாமுல் ஜாஹிலிய்யா' என்ற சொற்றொடரால் உணர்த்தப்படுவது, இஸ்லாத்திற்கு முந்திய அறேபியரின் உண்மைக்கு மாறான செயற்பாடுகளையும் நம்பிக்கைகளையும் தோற்றுவிக்கக் காரணமாக இருந்த அறியாமையே அன்றி, அறிவு அல்லது கல்வி சார்ந்த அறியாமை அன்று என்பதை நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

இந்த அறியாமை யுகத்தில் அறேபியர் சமயம், ஒழுக்கம், குடும்பம், சமுதாயம், அரசியல், பொருளாதாரம் முதலான எல்லாத் துறைகளிலும் பின்தங்கியவர்களாயும் நெறி பிறழ்ந்தவர்களாயுமே காணப்பட்டனர். இந்தக் காலப்பகுதியைப் பற்றிய உண்மைகளை வரலாறு தன் இதழ்களிலே பக்கம் பக்கமாகப் பதிந்து வைத்துள்ளது.

சமய நிலை

இஸ்லாத்திற்கு முந்திய அறேபியாவில் யூதம், கிறித்தவம், மஜூஸிய்யா முதலான பெயர்களில் சில மதங்கள் மிகக் குறைந்த செல்வாக்கோடு நிலை பெற்றிருந்தன. நெருப்பு வழிபாடும் அங்கே இருந்தது. ஆயினும், அறேபியரின் பல்வேறுபட்ட வழிபாட்டு முறைகளிடையே உருவ வழிபாடே முதலிடம் வகித்தது. அறேபியரின் சமய - வழிபாட்டு முறைகளைப் பொறுத்தவரை, அவற்றில் புராதன வெளிநாட்டு நாகரிகங்களின் செல்வாக்கு படிந்திருந்தமையை அவதானிக்க முடியும்.

உருவ வழிபாடு

நபி முஹம்மது (ஸல்) அவர்கள் பிறப்பதற்குச் சுமார் முந்நூற்றெழுபது ஆண்டுகளுக்கு முன்பே உருவ வழிபாடு அறேபியாவில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் தூய மார்க்கத்தை மாற்றி, உருவ வழிபாட்டை கி. பி. 200இல் அறேபியருக்கு அறிமுகம் செய்துவைத்த முதல் அறேபியன் குஷாஆ வர்க்கத்தைச் சேர்ந்த அம்ர் பின் லுஹை என்பவன் ஆவான்.[3] அப்போது புனித க.'.பாவின் பாதுகாவலனாக இருந்த அவன் ஒருமுறை, சொந்த அலுவல் காரணமாக சிரியாவுக்குச் சென்றிருந்தான். அங்கே பல்கா.'. பிரதேசத்தில் உள்ள மஆப் என்ற இடத்தை அடைந்த

3. புனித கஃபா ஆரம்பத்தில் நபி ஆதம் (அலை) அவர்களால் கட்டப்பட்டது. நபி நூஹ் (அலை) அவர்களது காலத்தில் ஏற்பட்ட பிரளயத்தின் பின்னர், நபி இப்ராஹீம் (அலை) அவர்களாலும் நபி இஸ்மாஈல் (அலை) அவர்களினாலும் அது மீளக்கட்டப்பட்டது. அந்த ஆலயத்தின் பாதுகாவலராக நபி இஸ்மாஈலின் சந்ததியினரே இருந்து வந்தனர். பின்னர், ஜுர்ஹும் வர்க்கத்தினர் அதன் பாதுகாவலர்களாகி சுமார் 1000 ஆண்டுகள் அதனை நிர்வகித்தனர். பின்னர் குஷாஆ வர்க்கத்தாரின் கைகளுக்கு அது மாறியது. 300 ஆண்டுகள் அவர்கள் அதனை நிருவகித்து வந்தனர். கிபி 200இல் அதன் பாதுகாவலனாக இருந்தவன் அப்போதைய குஷாஆ வர்க்கத் தலைவனான அம்ர் பின் லுஹை என்பானே. பின்னர் கஃபாவின் பாதுகாவல் பொறுப்பு குஸை (குறைஷ்) வர்க்த்தாரின் கைகளுக்கு மாறியது.

போது, அங்கு வாழ்ந்த மக்கள் சிலைகளை வணங்கிக் கொண்டிருந்ததைக் கண்ட அவன் அது பற்றி அவர்களை விசாரித்தான்.' இவை சிலைகள்; இவற்றை நாங்கள் வணங்கி வருகின்றோம்; இவை எமக்கு மழை தருகின்றன; உதவிகள் செய்கின்றன, என்று அவர்கள் கூறியதும், அவன் அவர்களிடமிருந்து ஒரு சிலையை வாங்கி வந்து, அதனை மக்காவின் புனித ஆலயத்தில் வைத்தான்.[4] அவனது முயற்சியின் விளைவாக, நபி (ஸல்) அவர்களைத் தோற்றுவித்த குறைஷ் குலத்தார் உட்படப் பெரும்பான்மையான அறேபியர் தங்கள் முன்னோரின் மார்க்கத்தைத் துறந்து, சிலைகளை வழிபடும் வழக்கத்தைப் பின்பற்றலாயினர்.

க∴பாவும் சிலைகளும்

சுதந்திரமான உருவ வழிபாட்டுப் பழக்கத்தைத் தொடர்ந்து, உண்மையான ஏக இறைவனின் வணக்கத்திற்காகக் கட்டப்பட்ட க∴பா என்ற புனித ஆலயம் சிலைகளின் வடிவத்தைப் பெற்ற ஆண் - பெண் பொய்த் தெய்வங்கள் வாழும் வீடாக மாற்றப்பட்டது. அறேபியர் வழிபட்டு வந்த பல்வேறு கடவுள்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முந்நூற்றறுபது விக்கிரகங்கள் அந்த ஆலயத்தினுள் வைக்கப்பட்டிருந்தன. அந்தச் சிலைகளின் தலைமை விக்கிரகமான ஹுபல் என்ற பெயர் கொண்ட சிலை வைக்கப்பட்டிருந்தது.[5] மனித உருவில், 'கார்னீலியன்' (Carnelian) என்ற விலை உயர்ந்த செந்நிறக் கல்லிலே செதுக்கப்பட்டிருந்த இந்தச் சிலை புனித க∴பாவினுள்ளே குழிவின் மேல் நிறுத்தப்பட்டிருந்தது. இதற்கு அருகிலே, ஆலயப் பூசாரி தெய்வத்தின் பெயரால் குறி சொல்லப் பயன்படுத்திய அம்புகள் வைக்கப்பட்டிருந்தன. இந்தச் சிலையின் இருமருங்கிலும் பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட இரண்டு மான் குட்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. இவற்றைச் சூழவே ஏனைய முந்நூற்றறுபது விக்கிரகங்களும் வைக்கப்பட்டிருந்தன.

அறேபியர், சூரிய வருடத்தை முந்நூற்றறுபது நாள்களாகத் தவறான முறையில் கணித்து, ஒரு நாளுக்கு ஒரு விக்கிரகம் என்ற ரீதியில், இந்தச் சிலைகளை வழிபட்டு வந்தனர். இந்தச் சிலைகளைக் கொண்ட க∴பாவைத் தரிசித்து, கற்பனைத் தெய்வங்களை வழிபடுவதற்காக ஆண்டு தோறும் ஹஜ் காலத்தில் மக்கள் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரக் கணக்கில் மக்காவுக்குத் திரண்டு வந்தனர். அவர்கள் பால்வேறுபாடின்றி முழுநிர்வாண கோலத்தில் க∴பாவை இடம்சுற்றிச் சிலைகளை வழிபட்டதோடு, அவற்றிற்கு உயிர்ப்பலிகளும் செய்தனர்.க∴பாவைத் தரிசிக்க இயலாதோர் தத்தம் வீடுகளிலும் இடங்களிலும் சிலைகளை நிறுவி வழிபட்டுவந்தனர்.

4. இப்ன் ஹிஷாம், அஸ்ஸீரதுன் நபவிய்யா, பாகம் I. பக்கம் 94-95

5. ஹுபல் என்பது ஆவி அல்லது ஆன்மா என்ற பொருளைக் கொண்ட ஒரு அரேபிய மொழிச் சொல்லாகும். அம்ர் பின் லுஹை என்பான் சிரியாவிலிருந்து கொண்டு வந்து, க∴பாவில் வைத்த விக்கிரகம் இதுவே.

அல்லாத்

அறேபியர் வழிபட்டுவந்த சிலைகளுள் அவர்களால் பெண் தெய்வங்கள் என கருதப்பட்ட அல்லாத், அல் உஷ்ஷா, அல் மனாத் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. புனித க∴பாவில் முக்கிய இடம் வகித்த இவற்றை அவர்கள் அல்லாஹ்வின் புதல்விகள் என்று கருதினர். இறைவி என்ற பொருளில் வழங்கப்பட்ட அல் லாத் என்ற கடவுள் அறேபியரிடையே மிகுந்த பிரபல்யமும் முக்கியத்துவமும் பெற்றிருந்தது.[6] இந்தக் கடவுளைப் பற்றி பண்டைய கிரேக்க வரலாற்றாசிரியரான ஹிரதோதஸ் தமது வரலாற்று நூலிலே குறிப்பிட்டிருக்கிறார். நபதியர்கள் இதனை அலிலாத் என்ற பெயரில் வழிபட்டு வந்தனர் என்று அவர் குறிப்பிடுகிறார். பண்டைய அறபுப் பொறிப்புக்களிலும் இஸ்லாத்திற்கு முற்பட்ட காலக் கவிதைகளிலும் இந்தத் தெய்வத்தைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. நபதியப் பொறிப்புக்களில் இந்தக் கடவுள் பற்றிய குறிப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த விக்கிரகம் பெரும் பெண் கடவுளாக வெவ்வேறு பெயர்களில் உலகெங்கும் வணங்கப்பட்டது. இக்கடவுள் வழிபாடு புராதன உலகெங்கும் பரவி இருந்த சூரிய வணக்கத்தின் மற்றொரு பிரதிமுறையாகவே இருந்தது. தகீப் குலத்தாரின் விருப்புக்குரிய தெய்வமாக அல்லாத்தே விளங்கியது: மக்காவுக்கு அண்மையில் உள்ள தாஇப் நகரம் இக்கடவுள் வழிபாட்டின் மத்திய தலமாகத் திகழ்ந்தது. தாஇபில் இந்த விக்கிரகம் நிறுவப்பட்டிருந்த இடத்தைச் சூழவிருந்த பிரதேசம் புனித பூமியாகக் கருதப்பட்டது. அங்கே வேட்டையாடுதலும் பசுமரங்களை வெட்டுதலும் மனித இரத்தம் சிந்தப்படுதலும் விலக்கப்பட்டிருந்தன.

அல் உஷ்ஷா

'வலிமை வாய்ந்தது' என்ற கருத்தைக் கொண்ட அல் உஷ்ஷா என்ற பெண் தெய்வம் மக்காவில் அதிகமாக வழிபாடு செய்யப்பட்டது. மக்காவுக்கு அருகே உள்ள நக்லா என்ற இடம் இவ்வழிபாட்டு மரபின் மத்திய தலமாக இருந்தது. கத்பான் குலத்தாரின் விருப்புக்குரிய தெய்வமாக விளங்கிய இந்தக் கடவுளின் வழிபாடு வெள்ளிக் கிரக வணக்கத்தின் பிரதிமுறையாக இருந்தது. கி.பி. 4ஆம் நூற்றாண்டிலிருந்து இத் தெய்வ வழிபாடு அதன் உச்ச நிலையை அடைந்திருந்தது. இந்தத் தெய்வத்திற்கு மனிதப் பலிகளும் கொடுக்கப்பட்டன. அத்தகைய ஒரு மனிதப் பலியைப் பற்றி நைலஸ் என்ற கிறித்தவ எழுத்தாளர் விரிவாக விவரித்திருக்கிறார். குறைஷ் குலத்தாரும் இதனை மிகுந்த மரியாதைக்குரிய ஒரு விக்கிரகமாகக் கருதி வழிபட்டுவந்தனர் என்று அல் கல்பீ கூறுகிறார். இந்த விக்கிரகத்தை வழிபாட்டுக்குரிய கடவுளாக எடுத்துக் கொண்ட முதல் அறேபியன் தாலிம் பின் அஸ்அத் என்பானே என்று கூறப்படுகிறது. வெண்கல்லில் செதுக்கப்பட்டிருந்த இந்த விக்கிரகத்தின் கோயில் நக்லா பள்ளத்தாக்கில் உள்ள ஹுரத் என்ற இடத்தில் அமைந்திருந்தது.

6. அல்லாத் என்ற சொல் இறைவி அல்லது பெண் கடவுள் என்ற பொருளைத் தரும் அல் இலாஹா என்ற சொல்லிலிருந்து பிறந்தது.

ஷைபான் வர்க்கத்தினர் இதன் பாதுகாவலர்களாக இருந்தனர். இந்தக் கோயில் வளவினுள் மூன்று மரங்களும் இருந்தன. மக்கள் ஆயுதங்கள், துணிகள் ஆகியவற்றின் வடிவில் தமது காணிக்கைகளைச் செலுத்தி, அவற்றை இந்த மரங்களில் தொங்கவிட்டனர்.

அல் மனாத்

அல் மனாத் என்ற பெண் தெய்வம் மனிதரின் ஊழுக்குரிய கடவுளாகக் கருதப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது.[7] செல்வத்திற்கும் வறுமைக்கும் பொறுப்பானது என்று கருதப்பட்ட இந்தத் தெய்வமே மனிதனின் செல்வத்தோடு தொடர்புடைய தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றி வைக்கிறது என்று அறேபியர் நம்பினர். சில சமயங்களில் குல தெய்வமாக வழிபடப்பட்ட இந்த விக்கிரகம் ஹுதைல், குஷாஆ கிளைக் குலங்களின் விருப்புக்குரிய தெய்வமாக இருந்தது. மதீனாவில் வாழ்ந்த அவ்ஸ், கஷ்ரஜ் முதலான வர்க்கத்தினர் இந்தத் தெய்வச் சிலைக்கு உயிர்ப்பலிகளும் கொடுத்து வந்தனர். கருங்கல் ஒன்றைக் கொண்டிருந்த இந்த விக்கிரகத்தின் பிரதான ஆலயம் மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையே இருந்த பாதையில், குதைத் என்ற இடத்தில், செங்கடற் கரைக்கு அருகே அமைந்திருந்தது. ஹஜ் காலத்தில், ஹஜ் கடமையை முடித்துக் கொண்ட அறேபியர் 'லப்பைக்', லப்பைக்' என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்து நேராக இந்த ஆலயத்திற்குச் சென்று, இந்த விக்கிரகத்தைத் தரிசித்து வந்தனர். இதனை அவர்கள் இரண்டாவது ஹஜ் என்றும் கருதினர். ஒரு சுயேச்சையான தெய்வம் என்ற வகையில் இதன் பெயர் 'துல் ஷரா' என்ற பெயருடன் இணைக்கப்பட்டு, அல் ஹிஜ்ர் என்ற இடத்தில் உள்ள நபதியப் பொறிப்புக்களில் காணப்படுகிறது.[8] அறேபியரின் விக்கிரகங்கள் அனைத்திலும் மிகப் புராதனத் தன்மை வாய்ந்தது இதுவே என்று கருதப் படுகிறது. அல் லாத், அல் உஷ்ஷா, அல் மனாத் ஆகிய இம்மூன்று பெண் விக்கிரகங்கள் பற்றி அல்லாஹ்வும் தனது அல்குர்ஆனிலே குறிப்பிட்டிருக்கிறான். (53:9) இந்தப் பெண் தெய்வங்களை நிறுவி, ஆலயங்கள் அமைத்தவன் அம்ர் பின் லுஹை என்பானே என்று கூறப்படுகிறது.

வேறு சிலைகள்

இவற்றைத் தவிர வேறு விக்கிரகங்களையும் அறேபியர் வழிபட்டு வந்தனர். அவற்றுள் வத்த், ஸுவா.·., யகூத், யஊக், நஸ்ர் ஆகிய ஐந்து விக்கிரகங்களும் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை. இவற்றைப் பற்றி அல்லாஹ்வும் தனது அல் குர்ஆனிலே பிரஸ்தாபித்திருக்கிறான் (71:23). இவை யாவும் நூஹ் (அலை) அவர்களது சமுதாயத்தைச் சேர்ந்த மக்களால் வழிபடப்பட்டவை. பின்னர், இஸ்லாத்திற்கு முந்தியகால அறேபியர் இவற்றிற்கென நாடெங்கும் ஆலயங்கள் நிறுவி வழிபடலாயினர். பெரும்பாலும் இவை

7. 'மனாத்' என்பது ஊழ் அல்லது விதி என்ற பொருளைத் தரும் 'மனிய்யா' என்ற அறபுச் சொல்லிலிருந்து பிறந்தது.

8. துல் ஷரா என்பது அறேபியா பீ.ராவில் வழிபடப்பட்டு வந்த ஒரு விக்கிரகம். நான்கு அடி உயரமும் இரண்டு அடி அகலமும் உள்ள நாற்கோண வடிவக் கருங்கல் ஒன்றால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட இந்த விக்கிரகம் தவ்ஸ் வர்க்கத்தாராலும் வழிபடப்பட்டது.

நாடோடி அறேபியர்களாலேயே வணங்கப்பட்டன. 'வத்த்' என்ற விக்கிரகம் (குழாஆ வர்க்கத்தின் கிளையான) கல்ப் குலத்தாரால் வழிபாடு செய்யப்பட்டது. மிகப் பாரிய தோற்றத்தைக் கொண்ட ஆணின் உருவத்தில் அமைந்திருந்த இந்த விக்கிரகத்தின் ஆலயம் தூமதுல் ஜன்தல் பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்தது. சந்திரனைப் பிரதிநிதித்துவப்படுத்திய இந்தத் தெய்வம், பண்டைய அறேபியர் பொறிப்புக்களில் 'வத்தம் அபம்' (தந்தை வத்த்) என்ற பெயரால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறைஷ் குலத்தவரும் இந்தத் தெய்வத்தை ஏற்று, இதற்கு 'வுத்த்' என்று பெயரிட்டு வழிபட்டு வந்தனர். இதற்கு குறைஷியரிடையே மாமல்லனாகப் புகழ் பெற்றிருந்த அப்த் வுத்த் (வுத்தின் அடிமை) என்பானின் பெயரே சான்றாக இருக்கிறது. பெண்ணின் உருவத்தில் வழிபடப்பட்ட 'ஸுவா.·.' என்ற விக்கிரகம் ஹுதைல், ஹம்தான் ஆகிய வர்க்கங்களைச் சேர்ந்த மக்களின் விருப்புக்குரிய பெண் தெய்வமாக இருந்தது. இந்த விக்கிரகத்தின் ஆலயம் யன்பூ.·. நகருக்கு அருகே உள்ள ருஹாத் என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. சிங்கத்தின் உருவில் வடிவமைக்கப்பட்டிருந்த 'யகூத்' என்ற விக்கிரகம் (தய்ய் வர்க்கத்தின் கிளையான) அன்உம் குலத்தாராலும் மத்ஹிஜ் வர்க்கத்தாராலும் வழிபடப்பட்டது. மத்ஹிஜ் வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள் இந்தத் தெய்வத்தின் ஆலயத்தை யமனுக்கும் ஹிஜாஷுக்கும் இடையே உள்ள ஜுரஷ் என்ற இடத்தில் நிறுவியிருந்தனர். குறைஷியரும் இந்தத் தெய்வத்தை ஏற்றுக் கொண்டிருந்தனர் என்பதற்கு அவர்களிடையே வழக்கில் இருந்த அப்த் யகூத் என்ற பெயரே சான்றாகும். குதிரையின் வடிவில் வணங்கப்பட்ட 'யஊக்' என்ற விக்கிரகம் (ஹம்தான் வர்க்கத்தின் ஒரு கிளையான) கய்வான் குலத்தாரின் விருப்புக்குரிய தெய்வமாக இருந்தது. இதன் ஆலயம் யமனுக்கு அருகே, யமனிலிருந்து மக்காவுக்குச் சென்ற பாதையில் இருந்த ஹம்தான் பிரதேசத்தில் அமைந்திருந்தது. கழுகின் உருவத்தில் செய்யப்பட்டிருந்த 'நஸ்ர்' என்ற விக்கிரகம் (ஹிம்யர் வர்க்கத்தின் கிளையான) துல் கலா.·. குலத்தாரால் வழிபடப்பட்டது. இதன் ஆலயம் பல்க.·. என்ற இடத்தில் நிறுவப்பட்டிருந்தது. பண்டைய ஸபஇயப் பொறிப்புக்களில் இந்த விக்கிரகம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவற்றில் இதன் பெயர் 'நஸொர்' என்றும் இதன் ஆலயம் 'பைத் நஸொர்' என்றும் இதன் பக்தர்கள் 'அஹ்ல் நஸொர்' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த ஐந்து விக்கிரகங்களையும் பற்றிக் குறிப்பிடுகையில் அல்குர் ஆன் விரிவுரையாளர்கள் இந்தப் பெயர்களுக்கு உரியவர்கள் நபி ஆதம், நபி நூஹ் ஆகியோரின் காலங்களில் வாழ்ந்த நல்லடியார்கள் என்றும் பிற்காலத்தில் வாழ்ந்த மக்கள் ஷைத்தானின் தூண்டுதலால் சிலைகளின் வடிவில் இவர்களை வழிபட்டு வந்தனர் என்றும் கூறுகின்றனர்.[9]

அறேபியரால் வணங்கப்பட்ட கற்சிலைகளும் இஸாப், நாஇலா

9. அல் ஷவ்கானீ, ஷுப்ததுத் தப்ஸீர், பக்கம் 769

என்பனவும் குறிப்பிடத்தக்கவை. இஸாப் என்ற சிலை ஸபா குன்றிலும் நாஇலா என்ற சிலை மர்வா குன்றிலும் வைக்கப்பட்டிருந்தன. வேதம் எதனையும் பின்பற்றாத அறேபியர் தமது ஹஜ் சடங்குகளுள் ஒன்றாக இந்தச் சிலைகள் இரண்டையும் தமது கரங்களால் தொட்டு வந்தனர். இந்தச் சிலைகள் வழிபாட்டின் ஆரம்பம் பற்றிப் பின்வருமாறு கூறப்படுகிறது: இந்தப் பெயர்களுக்கு உரியவர்கள் அறியாமைக் காலத்தில் வாழ்ந்த ஓர் ஆணும் ஒரு பெண்ணும் ஆவர். ஆணின் பெயர் இஸாப்: பெண்ணின் பெயர் நாஇலா. ஜுர்ஹும் வர்க்கத்தைச் சேர்ந்த இவர்கள் இருவரும் ஒரு நாள் புனித க.்.பாவினுள் நுழைந்து, அங்கே விபசாரம் செய்து விட்டனர். அதனால், இவர்கள் இருவரையும் இறைவன் அதே கணத்தில் கற்சிலைகளாக மாற்றி விட்டான். இவர்களுக்கு ஏற்பட்ட கதியை அறிந்து மக்கள் படிப்பினை பெறட்டும் என்ற நோக்கத்தில் அப்போது வாழ்ந்தவர்கள் கற்சிலைகளாக மாறிவிட்ட இவர்களை க.்.பாவுக்கு வெளியே நிறுத்தி வைத்தனர். சில காலத்தின் பின்னர் வாழ்ந்த மக்கள் க.்.பாவுக்கு அண்மையிலுள்ள குன்றுகளான ஸபாவில் இஸாபின் கல்லுருவத்தையும் மர்வாவில் நாஇலாவின் கல்லுருவத்தையும் தூக்கி வைத்து விட்டனர். அத்தோடு அவர்கள் எந்த நோக்கத்திற்காக இவை க.்.பாவுக்கு வெளியே முற்காலத்தவரால் வைக்கப்பட்டனவோ அந்த நோக்கத்தை மறந்து, அவர்களால் வணங்கப்பட்ட ஏனைய விக்கிரகங்களைப் போல இவற்றையும் வழிபட ஆரம்பித்து விட்டனர். ஹஜ் யாத்திரையின் போது ஸபா, மர்வா குன்றுகளுக்கிடையே தொங்கோட்டம் ஓடிய சமயமெல்லாம் இந்தச் சிலைகள் இரண்டையும் தொட்டுத் தடவுதலை அவர்கள் வழக்கமாகக் கொண்டனர். இதனை ஹஜ்ஜின் சடங்குகளுள் ஒன்றாகவும் கருதினர். ஹிஜ்ரி 8இல், மக்கா நகரம் முஸ்லிம்களால் கைப்பற்றப்படும் வரை இந்தச் சிலைகள் அம்மலைக் குன்றுகளில் வழிபாட்டுருவங்களாக இருந்தன.

இவற்றைத் தவிர, வேறு பல விக்கிரகங்களையும் அறேபியர் வழிபட்டனர். அவர்களால் வழிபடப்பட்ட விக்கிரகங்களைப் பற்றி இப்ன் ஹிஷாம் தமது ஸீராவிலே குறிப்பிட்டிருக்கிறார்.[10] ஒவ்வொரு குடும்பத்தினரும் தமது வீட்டில் ஒரு விக்கிரகத்தை வைத்து வழிபட்டு வந்தனர். ஒருவன் எங்காவது பிரயாணம் செய்யப்புறப்பட்டால், அவன் அந்தச் சிலையில் தன்னைத் தேய்த்துக் கொண்ட பின்னரே வீட்டை விட்டுப் புறப்படுவான். வீட்டிலிருந்து புறப்படுகையில் அவன் கடைசியாகச் செய்யும் செயல் அதுவாகவே இருந்தது. அவ்வாறே அவன் பிரயாணத்திலிருந்து திரும்பும் போதும் அந்தச் சிலையில் தன்னைத் தேய்த்துக் கொண்ட பின்னரே அவன் தனது குடும்பத்தாரிடம் செல்வான்.

10. பார்க்க: இப்ன் ஹிஷாம், பாகம் i பக்கம் 96-105

இயற்கைப் பொருள் வழிபாடு

இஸ்லாத்திற்கு முந்திய அறேபியர் கற்சிலைகளை மட்டுமன்றிச் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், நெருப்பு, மணற்குவியல்கள்,கற்கள், கற்றூண்கள், தாவரங்கள், விலங்குகள், கிணறுகள், நீரூற்றுக்கள் முதலான இயற்கைப் பொருள்களையும் வணங்கி வந்தனர். ஏனெனில், ஒவ்வொரு பொருளிலும் ஒரு தெய்வம் இருக்கிறது என்று அவர்கள் நம்பினர். மேலும், இவற்றையெல்லாம் ஊடகங்களாகக் கருதிய அவர்கள் இவற்றை ஒருவர் வழிபடுவதன் மூலம் அவர் இறைவனோடு நேர்தொடர்பு கொள்ள முடியும் என்று எண்ணினர். மனிதன் மட்டுமன்றி விலங்குகள், தாவரங்கள் முதலியனவும் உயிர் வாழ்வதற்கு ஆதாரமாக இருக்கும் சூரியனின் வழிபாடு பெரும்பாலும் விவசாய சமூகத்தாரிடையே காணப்பட்டது. அறேபியா பீட்ரா, பல்மேரா ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்த ஹிம்யரியாக்களும் சூரிய வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டினர். அறேபியரின் வழிபாட்டில் சூரியன் மிக முக்கிய இடம் வகித்தது என்பதற்கு அவர்களிடம் அதிக வழக்கில் இருந்து வந்த அப்துஷ் ஷம்ஸ் (சூரியனின் அடிமை) என்ற பெயரே சான்றாக இருக்கிறது.

சந்திரனை வழிபடும் வழக்கம் நாடோடி அறேபியரிடையே அதிகமாகக் காணப்பட்டது. சந்திரனின் ஒளியிலே தங்களது மந்தைகளைப் புல் மேயவிட்டு வந்த அவர்கள் சந்திரனே தங்களது வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகிறது என்றும் அதுவே நீரின் ஆவியைக் கெட்டியாக்கிப் பனியாகப் பெய்வித்து, தாவரங்களின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைகிறது என்றும் நம்பி அதனைத் திருப்தி செய்வதற்காக வழிபடலாயினர். சந்திரனை யமனியர் ஸீன் என்ற பெயரிலும் மானீகள் வத்த் என்ற பெயரிலும் ஸபாக்கள் அல்மகா என்ற பெயரிலும் கதபானியர் அம்ம் என்ற பெயரிலும் வழிபட்டு வந்தனர்.[11] கைஸ் வர்க்கத்தினர் அக்கினி நட்சத்திரத்தையும், அஸத் வர்க்கத்தினர் புதன் கிரகத்தையும் குறைஷ், லக்ம், ஜுதாம் ஆகிய வர்க்கங்களைச் சேர்ந்தவர்கள் சுக்கிரன் (வெள்ளி) கிரகத்தையும் ஜுர்ஹும் வர்க்கத்தினர் வியாழன் கிரகத்தையும் வழிபட்டனர். மழை தரும் கடவுளாகக் கருதப்பட்ட அல் துரய்யா என்ற கிருத்திகை நட்சத்திரக் கூட்டமும் பலரால் வழிபடப்பட்டது.

இஸ்லாத்திற்கு முந்தியகால அறேபியரின் தெய்வங்களை உருவச் சிலைகள், புனித கற்கள் அல்லது கற்றூண்கள் முதலான பொருள்களே பிரதிநிதித்துவப்படுத்தின. அஸ்னாம் (ஒருமை: ஸனம்) என்றும் அவ்தான் (ஒருமை: வதன்) என்றும் அழைக்கப்படும் உருவச் சிலைகள் பல்வேறு வடிவங்களில் கல்லில் அல்லது மரத்தில் செதுக்கப்பட்டிருந்தன. உலோகச் சிலைகள் பயன்படுத்தப்பட்டமைக்குப் போதிய சான்று எதுவும் இல்லை. பெரும்பாலும் இந்தச் சிலைகள் கலை நுட்பங்களைப் பெறாதவையாகவே

11. Philip K. Hitti, History of the Arabs , p. 60

இருந்தன. அன்ஸாப் (ஒருமை: நுஸுப்) என்று அழைக்கப்பட்ட புனித கற்கள் அல்லது கற்றூண்கள் வழிபடப்பட்ட அதேவேளையில் கடவுள்களுக்காகப் பலியிடப்பட்ட பிராணிகளின் பலி பீடங்களாகவும் பயன்படுத்தப்பட்டன. இந்தப் பீடங்களில் பலி விலங்குகளைக் கொன்று அவற்றின் குருதியைக் கற்றூண்களில் பூசிவந்தனர். அறேபியர் தங்கள் தெய்வங்களுக்காகப் பலியிட்டு வந்த பிராணிகளுள் ஒட்டகை, செம்மறிஆடு, வெள்ளாடு, (மிக அரிதாக) பசுக்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவ்வாறு பலியிடப்பட்டவற்றின் இறைச்சியை வழிபடுவோர் உண்டனர். குருதியோடு மட்டும் கடவுள் திருப்தியடைந்து கொள்ளும் என்ற நம்பிக்கையில் அதனை வணக்கத்திற்குரிய கற்களில் பூசி வந்தனர். இந்தப் பலிகள் குறிப்பிட்ட தெய்வத்தைச் சாந்தப்படுத்தவும் பலி கொடுப்பவரை அந்த தெய்வத்திடம் நெருங்க வைக்கவும் உதவும் என்று அவர்கள் நம்பினர். இதனாலேயே நெருங்குதல் அல்லது அருகிலாதல் என்ற பொருளைத் தரும் குர்ப் என்ற சொல்லிலிருந்து பிறந்த குர்பா அல்லது குர்பான் என்ற சொல் அறபு மொழியில் பலி கொடுத்தலைக் குறிப்பதாயிற்று.

மரங்களை வழிபடும் வழக்கமும் அக்கால அறேபியரிடம் பரவலாகக் காணப்பட்டது. இப்னு ஹிஷாம் நஜ்ரானில் வழிபடப்பட்டு வந்த ஒரு பெரும் மரத்தைப் பற்றியும் அந்த மரத்தில் ஆடைகளையும் பெண்களின் நகைகளையும் தொங்கவிடும் நிகழ்ச்சியை நஜ்ரான் மக்கள் ஆண்டு தோறும் திருவிழாவாகக் கொண்டாடிவந்தமை பற்றியும் குறிப்பட்டிருக்கிறார்.[12] தாத் அன்வாத் (தொங்க விடப்படும் பொருள்களைக் கொண்டது) என்ற பெயரால் அழைக்கப்பட்ட பெரிய பசுமரம் ஒன்று அறேபியரின் சமய வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம் பெற்று விளங்கியது. இந்த மரத்தடிக்கு ஆண்டு தோறும் மக்கள் வந்து அதில் தமது போராயுதங்கள், ஆடைகள் முதலியவற்றைத் தொங்கவிட்டதோடு, அதற்கு அருகே உயிர்ப் பலிகள் கொடுத்து ஒருநாளை பக்தி சிரத்தையுடன் கழித்தும் சென்றனர்.[13] இந்த மரம் நக்லா என்ற இடத்தில் அல் உஷ்ஷா தெய்வத்தின் ஆலய வளவில் இருந்த மரமாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

கடவுள்களாகக் கருதப்பட்டு வணங்கப்பட்ட உருவச்சிலைகள் ஆலயங்களில் வைக்கப்பட்டிருந்தன. சில ஆலயங்களில் பல்வேறு கடவுள்களின் சிலைகள் வைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்பட்டது இதற்கு உதாரணமாகப் புனித க.ஃபாவைக் குறிப்பிடலாம். ஆயினும் பல ஆலயங்கள் குறிப்பிட்ட ஒரு கடவுளுக்காக நிறுவப்பட்டு, அங்கு அந்தக் கடவுளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உருவச்சிலைகளே வைக்கப்பட்டிருந்தன. வழிபாட்டிடங்களாகப் பணியாற்றிய

ஆலயங்கள்

12.. இப்ன் ஹிஷாம், பாகம் I பக்கம் 47

13.. மேற்படி பாகம் IV பக்கம் 86

இந்த ஆலயங்களில் மக்கள் தமது வணக்கச் சடங்குகளைச் செய்து வந்ததோடு, தமது நேர்ச்சைகளையும் சத்தியங்களையும் கூட நிறைவேற்றினர். இந்த ஆலயங்கள் அக்கால எகிப்திய அல்லது கிரேக்க ஆலயங்களைப் போன்ற பாரிய கட்டட அமைப்புகளைக் கொண்டிருக்கவில்லை. எளிய அமைப்பில் காணப்பட்ட இந்த ஆலயங்கள் சில சமயங்களில் வெறும் சுவர்களை அல்லது சுற்று மதில்களை மட்டும் கொண்டவையாய் இருந்தன. ஆலயங்கள் மட்டுமன்றி, ஆலயங்களைச் சூழவிருந்த மேய்ச்சல் தரைகளும் புனித இடங்களாக மதிக்கப்பட்டன. 'ஹிமா' என்று அழைக்கப்பட்ட இந்த புனித மேய்ச்சல் தரைகளை அறேபியர் ஆலயத்தில் பள்ளி கொண்ட கடவுளின் விஷேட பாதுகாப்பில் உள்ள பிரதேசங்களாகக் கருதினர். இந்த நிலங்களில் குறித்த கடவுளின் பெயரால் விடப்பட்ட விலங்குகள் மட்டுமே புல் மேய அனுமதிக்கப்பட்டன.

இந்த ஆலயங்கள் 'ஸாதானா' (ஒருமை: ஸாதின்) என்று அழைக்கப்பட்ட ஆலயப் பாதுகாவலரின் பொறுப்பில் இருந்து வந்தன. பூசகர்களாகவும் கடமையாற்றிய இவர்களே பக்தர்களை வரவேற்று, ஆலயத்தினுள் பிரவேசம் செய்ய அவர்களை அனுமதித்து வந்தனர். இவர்களது பதவி பரம்பரை முறையை அடியொற்றியதாய் அமைந்திருந்தது. அக்காலத்தில் வாழ்ந்த எல்லாச் சமுதாயங்களிலும் காணப்பட்டது போன்ற பூசகர் அல்லது ஆலயப் பாதுகாவலர் குடும்ப அமைப்பு முறை, அறேபியர் சமுதாயத்திலும் தோன்றி வளர்வதற்குப் பரம்பரை பரம்பரையாக வகிக்கப்பட்டு வந்த இந்தப் பதவியே வழி வகுத்தது. சில ஆலயங்களில் பூசகர், குறி சொல்வோராகவும் தொழிற்பட்டார். 'காஹின்' (குறி சொல்வோர்) என்று அழைக்கப்பட்ட இவர்கள் தெய்வங்களின் செல்வாக்கு உள்ளவர்கள் என்று மக்கள் நம்பினர். இவர்கள் வழிபாட்டுச் சடங்குகளை நிறைவேற்றப் பக்தர்களுக்கு உதவியதோடு, மக்களின் விவகாரங்களில் கடவுளின் விருப்பம் என்ன என்பதைப் பல்வேறு கற்பனையான முறைகளால் அறிந்து, அவர்களுக்குக் கூறி வந்தனர். குறி சொல்வதற்குப் பலமுறைகள் பின்பற்றப்பட்டன. அம்புகளைக் கொண்டு குறிபார்க்கும் முறையே அதிகமாகப் பின்பற்றப்பட்டது. இந்த 'காஹின்'கள் குறி சொல்கையில் மொழிந்த வார்த்தைகள், எதுகை மோனை அமைப்புக் கொண்ட ஒரு வகைச் செயற்கையான உரைநடையில் வெளிப்பட்டன. மிகச் சிறிய சொற்களையும் குறுகிய வசனங்கள் சிலவற்றையும் கொண்ட இந்தச் சொல்வெளிப்பாட்டு முறை ஸஜ்.ஃ. என்று அழைக்கப்பட்டது.[14]

அறியாமைக் கால அறேபியர் எண்ணற்ற கடவுள்களில் மட்டுமன்றி பேய்கள், பிசாசுகள் முதலியவற்றிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

14. பிற்காலத்தில் நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட ஆரம்பகால அல் குர்ஆன் வசனங்கள் பெரும்பாலும் 'ஸஜ்ஃ' என்ற இந்த மொழி நடையிலேயே அமைந்திருந்தன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. மக்கள் இந்த மொழிநடைக்கு அதிகம் பரிச்சயமானவர்களாக இருந்தமை இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

அவற்றை அவர்கள் ஜின்கள் என்று அழைத்தனர். அவை மனிதர்க்குத் தீமை செய்யும் ஆற்றல் வாய்ந்தவை என்றும் மனிதர் நடமாட அஞ்சும் பாலைவனம், காடு முதலான நிலப் பகுதிகளிலேயே அவை வாழ்கின்றன

சமயம் சார்ந்த மூடநம்பிக்கைகள்

என்றும் இறைவனுக்கும் இந்த ஜின்களுக்கும் இடையே நெருக்கமான உறவு உண்டு என்றும் அவர்கள் நம்பினர். மனிதனுள் ஜின் பிரவேசம் செய்து அவனில் ஆதிக்கம் செலுத்தும் போதுதான் அவன் பைத்தியமாகிறான் என்று கருதிய அவர்கள் ஜின்களைச் சாந்தப்படுத்துவதற்காகப் பூசைகளும் பலிகளும் செய்து, அவற்றிடம் உதவிகளும் தேடினர். பெரும்பாலும் நகரங்களில் வாழ்ந்தவர்களை விடவும் நாடோடியாக வாழ்ந்த அறேபியரிடமே ஜின்களைப் பற்றிய மூடநம்பிக்கைகளும் அச்சமும் அதிகமாகக் காணப்பட்டன. பாலைவனங்கள் ஜின்களுக்கு உரியவை என்று நம்பிய அவர்கள் தமது பாலைவன வாழ்வில் தெய்வங்களை விடவும் இந்த ஜின்களைத் திருப்தி செய்வதிலேயே அதிக அக்கறை காட்டி வந்தனர்.

விலங்குகளுக்கும் அவர்கள் தெய்விக அந்தஸ்தை அளித்து வந்தனர். சில விலங்குகள் அவர்களால் புனித உயிர்களாக மதிக்கப்பட்டன. இவ்வாறு அவர்களால் மதிக்கப்பட்ட விலங்குகளுள் மான் (ளப்யு), சிங்கம் (அஸத்). நாய் (கல்ப்), சிறுத்தை (பஹ்த்) முதலியவை குறிப்பிடத்தக்கவை. இவற்றின் பொதுப் பெயர்களைத் தங்களது வர்க்கங்களுக்கும் அவர்கள் சூட்டியிருந் தனர். மானை அவர்கள் மிகுந்த தெய்விகமுடைய ஒரு விலங்காகக் கருதினர். மான் இறந்தால், அதனைத் துணியால் போர்த்தி அடக்கம் செய்வதும் அதற்காகச் சில தினங்கள் துக்கம் அனுட்டிப்பதும் அறேபியரின் குறிப்பாக ஹாரிதாக் குலத்தாரின் வழக்கமாக இருந்தன. பாம்பின் உருவத்தில் ஜின்கள் வரலாம் என்று நம்பிய அவர்கள் அதனைக் கொல்ல அஞ்சினர். சில பிராணிகளின் அலறலை துர்ச்சகுனமாகக் கருதிய அவர்கள் காகம் கரைதலும் புறா அகவுதலும் விரும்பத்தகாத நிகழ்வுகளின் முன்னறிவிப்புக்கள் என்று நம்பினர். பெரும்பாலும் அறேபியரின் விலங்குகள் பற்றிய நம்பிக்கைகள் ஆரியரின் நம்பிக்கைகளை ஒத்திருந்தன.

மனித உயிர், அவனது உடலிலிருந்து முற்றிலும் வேறுபட்ட- வளியை ஒத்த - பதார்த்தத்தால் ஆனது என்று நம்பிய அவர்கள் சுவாசத்தையே உயிராகக் கருதினர். மனிதன் இயற்கை மரணம் அடைகையில், அவனது உயிர் வாய் அல்லது மூக்குத் துவாரங்கள் வழியாக வெளியேறி விடுகிறது என்றும் அவன் கொல்லப்பட்டு உயிர் துறக்கையில் அவனது உயிர் மரணத் திற்குக் காரணமான பெரும் காயம் வழியாக வெளியேறுகிறது என்றும் அவர்கள் கருதினர். ஒருவன் கொல்லப்பட்டு உயிர் நீத்தால், கொன்றவனைப் பழிவாங்கும் தாகத்தால் அவன் துடித்துக் கொண்டிருப்பான் என்றும் பழிக்குப்பழி

வாங்கப்படாவிட்டால் அவனது உயிர் ஆந்தையின் வடிவில் அவனது அடக்கத் தலத்தின் மீது தோன்றி, 'இஸ்கூனீ ' (குடிப்பதற்குத் தா) என்று பழிக்குப்பழி வாங்கப்படும் வரை அலறிக்கொண்டே இருக்கும் என்றும் அவர்கள் நம்பினர்.

மரணத்திற்குப் பின்னர் மனிதனுக்கு ஒரு வாழ்க்கை உண்டு என்ற கருத்தில் அவர்கள் நம்பிக்கை கொள்ள அவர்களது புறச் சமயவாதத்தில் இடம் இருந்ததா என்பதை அறிந்து கொள்வதற்கு உதவக் கூடிய போதிய ஆதாரங்கள் இல்லை. ஆயினும், மரணித்தவர்களைப் புதைக்கும் விடயத்தில் அவர்கள் நிறைவேற்றி வந்த சில சடங்குகள், மரணத்திற்குப் பின்னரும் மனித உயிருக்கு ஒரு வகை இருப்புண்மை உண்டு என்று அவர்கள் நம்பினர் என்பதைக் காட்டி நிற்கின்றன. அவர்களது தலைவர்களுள் ஒருவர் மரணமாகி அடக்கம் செய்யப்பட்டு விட்டால், பின்தொடைநாண்தசை வெட்டப் பட்டு முடமாக்கப்பட்ட ஒட்டகை ஒன்றை அவரது அடக்கத்தலத்தின் மீது கட்டிவைத்து, அதனைப் பட்டினி கிடந்து சாக விட்டுவிடுதலை அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். இந்த ஒட்டகம் இறந்தவர் சவாரி செய்வதற்குப் பயன்படலாம் என்ற கருதுகோளிலேயே அவர்கள் இவ்வாறு செய்திருக்கலாம். இறந்தவர்களின் ஆன்மாக்கள், அலறும் ஆந்தையின் வடிவத்தில் அவர்களது அடக்கத்தலங்கள் மீது வட்டமிட்டுக் கொண்டே இருக்கும் என்ற அவர்களின் நம்பிக்கையும் இந்தக் கருத்திற்கு வலுவூட்டுகிறது. இறந்தவர்களுக்காக அவர்களது அடக்கத்தலங்கள் மீது விலங்குகளைப் பலி கொடுக்கும் வழக்கமும் அக்கால அறேபியரிடம் இருந்தது. அக்கால அறபுக் கவிஞர்கள் தங்களது விருப்புக்கும் அன்புக்கும் உரியவர்களின் அடக்கத்தலங்கள் மீது மழை பொழிவதையும் பசு மரங்கள் பூத்துக் குலுங்குவதையும் விரும்பித் தமது வேட்கையைக் கவிதைகளில் வெளியிட்டு வந்தனர். அவ்வாறே பல சமயங்களில் இறந்தவர்களின் அடக்கத்தலங்களுக்கு முன்னால் நின்று, அவர்களை விழித்து வாழ்த்துக்கள் கூறியும் வந்தனர். இவை எல்லாம் உலகை விட்டுப் பிரிந்தவர்கள் உயிர் வாழ்கின்றனர் என்ற கருத்தில் அவர்களுக்கு இருந்து வந்த நம்பிக்கையையே காட்டுகின்றன.

மரணத்திற்குப் பின்னரும் மனித ஆன்மா வாழ்கிறது என்று அக்கால அறேபியர் ஓரளவுக்கு நம்பியிருந்த போதிலும், மரணத்திற்குப் பின்னர் உள்ள வாழ்க்கை பற்றிய தெளிவான கருத்து அவர்களிடம் காணப்படவில்லை. பிற்காலத்தில் யூத, கிறித்தவ மதங்களின் செல்வாக்கினால் இத்தகைய கருத்திற்கு அவர்கள் ஓரளவு பரிச்சயமானவர்களாக இருந்த போதிலும் மனிதன் மரணித்து மண்ணோடு மண்ணாகிப்போன பின்னர் அவன் எவ்வாறு மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவான் என்பது அவர்களது புத்திக்கு எட்டாத விடயமாகவே இருந்து வந்தது. அதனாலேயே மறுமையில் மனிதர் மீள எழுப்பப்படுதல் சம்பந்தமாக அல்குர்ஆன் வசனங்கள் அருளப்பட்டபோது மக்கா நகர குறைஷியர் நையாண்டி செய்தனர். அவர்களது கவிஞர்களுள்

ஒருவரான ஷத்தாத் பின் அல் அஸ்வத் என்பார் ''இந்தத் தூதர் (மரணத்திற்குப் பின்னரும்) நாங்கள் வாழ்வோம் என்று தெரிவிக்கிறார்; ஆனால் (இறந்த) உடல்களும் உயிர்களும் எப்படிச் சந்திக்க முடியும்? " என்று பாடி அவர்களின் கருத்திற்கு அழுத்தம் கொடுத்தார்.[15] மரணத்திற்குப் பின்னர் உள்ள வாழ்க்கை அவர்களது அறிவுக்கும் கற்பனைக்கும் எட்டாத சங்கதியாக இருந்தமையால், மனிதனின் செயல்களுக்கு கூலி வழங்கப்படுதல் பற்றிய பிரச்சினை அவர்களது உள்ளங்களில் எழுவதற்கு வாய்ப்பில்லாது போயிற்று.

பெரும்பாலும் அக்கால அறேபியர் ஊழ்வாதிகளாகவே இருந்தனர். மனித வாழ்வில் நிகழும் சகல சம்பவங்களும் ஊழால் முன்கூட்டியே விதிக்கப்பட்டவை என்றும் அதனால் அவை மனித முயற்சியால் தவிர்க்க முடியாதவை என்றும் அவர்கள் நம்பினர். அதேசமயம், நிகழ்வுகளின் தொடர் 'தஹ்ர்' என்று அழைக்கப்படும் காலத்தாலேயே தீர்மானிக்கப்படுகிறது என்றும் அவர்கள் நம்பினர். இதனாலேயே 'ஸுரூப் அல் தஹ்ர்' (காலத்தால் விளைவிக்கப்பட்ட மாற்றங்கள்) என்ற சொற்றொடர் வாழ்க்கைச் சூழலில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிக்க அறேபியராலும் அவர்களது கவிஞர்களாலும் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. இந்தக் கருத்து அவர்களது சொந்த வாழ்க்கை அனுபவங்களின் வாயிலாகவே ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், உலகின் வேறு எந்த நாட்டிலும் வாழ்ந்த மக்களை விடவும் அறேபியரே இயற்கையின் பெரும் அளவிலான சலனத்திற்கு அதிகமாக ஆட்பட நேர்ந்தது. பகை வர்க்கம் ஒன்றின் திடீர்த் தாக்குதல் அல்லது மந்தைகளிடையே திடீரெனப் பரவிய கொள்ளை நோய் பெரும் செல்வனைக் கூட இரவோடிரவாகப் பிச்சைக்காரனாக்கிற்று; நீடித்த வரட்சி பயங்கரமான பஞ்சத்திற்கும் மரணத்திற்கும் அவர்களை முகம் கொடுக்க வைத்தது. இவை எல்லாம் அவர்களது கட்டுப்பாட்டிற்குள் அடங்காத நிகழ்வுகளாக இருந்தன. பாலைவன வாழ்வின் இத்தகைய தனித்தன்மை வாய்ந்த சூழ்நிலை, ஊழ்வாத நாட்டங்களின் வளர்ச்சியை அறேபியரிடையே தூண்டி இருக்கலாம். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் ஏற்பட்ட கதியின்மையும் அவர்களது ஊழ்வாத நாட்டமும் பரித்தியாக உணர்வை அவர்களுள் தோற்றுவித்தன. இந்தப் பண்பின் காரணமாக அவர்கள் பாலைவன வாழ்வில் இயற்கை தோற்றுவித்த பாதிப்புகளையும் துயரங்களையும் - பழியை ஊழ்மீது சுமத்தி விட்டு - பொறுமையோடு தாங்கிக் கொண்டு வாழப்பழகிக் கொண்டனர்.

சுருங்கச் சொன்னால், இஸ்லாத்திற்கு முற்பட்ட கால அறேபியரின் தெய்வக் கோட்பாடுகளும் சமய நம்பிக்கைகளும் நாகரிக பண்பாட்டுவிருத்தி இல்லாத பழைய - புதிய கற்கால மனிதரின் நம்பிக்கைகளையே பெரிதும் ஒத்திருந்தன. அச்சம், வியப்பு முதலான மனவெழுச்சிகளைத் தோற்றுவிக்கக் கூடிய பொருள்கள் அனைத்தையும் அவர்கள் வழிபடு தெய்வங்களாகக்

15. இப்ன் ஹிஷாம், பாகம் ii பக்கம் 375

கொண்டார்கள். தங்களது கற்பனைக்குச் சரியாகவும் நியாயமாகவும் தோன்றியவற்றில் எல்லாம் நம்பிக்கை வைத்தார்கள். அவர்களது தெய்வ வழிபாட்டிலும் சமய நம்பிக்கைகளிலும் சிரிய - ஹெல்லனிய, இந்தோ - ஆரிய, பாபிலோனிய- ஆபிரிக்க கலாசாரங்களின் தாக்கங்கள் பெரிதும் காணப்பட்டன. அவர்களது இத்தகைய உருவ வழிபாட்டுப் பாரம்பரியத்திற்கும் சமய நம்பிக்கைகளுக்கும் அறேபியா பல்வேறு கலாசாரங்களைக் கொண்ட மக்கள் ஊடறுத்துச் செல்லும் பாதையில் அமைந்திருந்ததையும் அவர்களோடு அறேபியருக்கு இருந்து வந்த நெருங்கிய பரிச்சயமுமே முக்கிய காரணங்களாக அமைந்தன.

ஆயினும், தனிப்பெரும் சக்தியாக அல்லாஹ் ஒருவன் இருக்கிறான் என்பதை அந்த அறேபியர் ஏற்றுக் கொண்டே இருந்தனர். அவர்கள் கற்சிலை களையும் பிற சிருட்டிப்பொருள்களையும் தொழுது வந்த போதிலும், அல்லாஹ் ஒருவன் இல்லை என்று ஒருபோதும் மறுத்ததில்லை: எல்லாவற்றிற்கும் மேலாக ஓர் இறைவன் இருக்கிறான் என்றும் அவனே யாவற்றையும் சிருட்டித் தவன் என்றும் அவர்கள் நம்பி வந்தனர். இந்த உண்மையை அல்குர்ஆனே உறுதி செய்கிறது (அல்குர் ஆன் 13:16, 29:61, 39:38, 29:63, 43:87, 63:9). அவர்கள் உருவச் சிலைகளையும் வேறுபொருள்களையும் வணங்கி வந்த போதிலும், மிகவும் இக்கட்டான வேளைகளிலும் பேராபத்தான வேளைகளிலும் அல்லாஹ்வையே உதவிக்கு அழைத்தனர் (அல்குர்ஆன் 10:22, 16:53, 31:32). சில சமயங்களில், அவர்கள் சத்தியம் செய்ய நேர்ந்தால் அல்லாஹ்வின் மீதே சத்தியம் செய்தனர் (அல்குர் ஆன் 6:109, 16:38, 35:42). அல்லாஹ்வால் ஏவப்படாத சிலவற்றை அல்லாஹ்வால் ஏவப்பட்டவை என்றும் அவர்கள் கூறி வந்தனர் (அல்குர் ஆன் 5:103, 6:136).

தெய்வ நம்பிக்கை

'அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியவை: அவனே விளைபொருள் களையும் கால்நடைகளையும் சிருட்டிக்கிறான்' என்று நம்பிய அவர்கள் தங்களது விவசாய விளைபொருள்கள், கால்நடைகள் ஆகியவற்றின் ஒரு பகுதியை அல்லாஹ்வுக்காக ஒதுக்கி வைத்தனர்: மற்றொரு பகுதியை அவர்கள் வழிபட்டு வந்த பொய்த்தெய்வங்களுக்காக ஒதுக்கிவைத்தனர். ஏனெனில், அல்லாஹ் அவற்றின் மீது அருள் புரிகிறான் என்றும் அவற்றைத் திருப்தி செய்வதன் மூலம் அவை தமக்கு அல்லாஹ்விடமிருந்து அருளைப் பெற்றுத்தரும் என்றும் அவர்கள் நம்பி இருந்தனர். இவ்வாறு ஒதுக்கப்பட்டவற்றுள் அல்லாஹ்வுக்காக ஒதுக்கிவைத்தவற்றை விருந்தாளி களுக்கும் ஏழைகளுக்கும் கொடுத்தனர்: விக்கிரகங்களுக்காக ஒதுக்கப்பட்ட வற்றை அவை வைக்கப்பட்டிருந்த இடங்களில் வேலை செய்த ஊழியர்களுக் குக் கொடுத்து வந்தனர். அல்லாஹ்வுக்காக ஒதுக்கப்பட்டவற்றிலிருந்து ஏதாவது

விக்கிரகங்களுக்காக ஒதுக்கப்பட்டவற்றோடு சேர்ந்து விட்டால், அதனை எடுத்து அல்லாஹ்வுக்குரிய பங்கோடு சேர்க்காமல் அப்படியே விட்டுவிட்டனர். 'அல்லாஹ் தேவையற்றவன்' என்று தங்கள் செயலுக்குச் சமாதானமும் கூறிக்கொண்டனர். ஆனால், விக்கிரகங்களுக்காக ஒதுக்கப்பட்டவற்றிலிருந்து ஏதாவது, அல்லாஹ்வுக்குரிய பங்கோடு சேர்ந்து கொண்டால், உடனே அதனைப் பிரித்தெடுத்து, விக்கிரகங்களின் பங்கோடு சேர்த்து விட்டனர். 'அவை தேவையுடையவை' என்று சமாதானமும் கூறிக் கொண்டனர். அவ்வாறே அல்லாஹ்வுக்குரிய பங்கில் ஏதாவது அழிந்து விட்டால், அதனைப் பொருட்படுத்தாமல் விட்டனர். ஆனால், விக்கிரகங்களுக்குரிய பங்கில் எதாவது அழிந்துவிட்டால், அதற்குப் பதிலாக மற்றொன்றைச் சேர்த்து வைத்தனர். (அல்குர் ஆன் 6:136)[16]

எல்லாவற்றையும் படைத்த தனிப்பெரும் கடவுளாக அல்லாஹ் ஒருவன் இருக்கிறான் என்று நம்பிய அதே வேளையில், அவர்கள் அல் லாத், அல் உஷ்ஷா, அல் மனாத் ஆகிய மூன்று பெண் தெய்வங்களை அல்லாஹ்வின் புதல்விகள் என்றும் இன்னும் சில போலித் தெய்வங்களை அல்லாஹ்வின் புதல்வர்கள் என்றும் கருதினர் (அல்குர் ஆன் 6:100, 16:57, 53:19-21). அமரர்களையும் அவர்கள் அல்லாஹ்வின் புதல்விகள் என்று நம்பினர். தாம் வணங்கும் கற்பனைத் தெய்வங்கள் அல்லாஹ்வுக்கு மிக நெருங்கியவை என்றும் அவை தங்களுக்காக அல்லாஹ்விடம் பரிந்து பேசும் என்றும் நம்பியே அவர்கள் அவற்றை வழிபட்டும் அவற்றிற்குப் பலிகள் கொடுத்தும் வந்தனர் (அல்குர்ஆன் 10:18). மேலும், அல்லாஹ்வுக்கும் 'ஜின்'களுக்குமிடையே நெருங்கிய பந்தம் இருக்கிறது என்று கருதிய அவர்கள் அவற்றை அல்லாஹ்வின் பங்காளர்களாக்கி, அவற்றிற்குப் பலிகள் கொடுத்து, அவற்றிடம் உதவியும் கோரிவந்தனர் (அல்குர்ஆன் 6:100,128; 37:158; 72:6)

இவ்வாறு அவர்கள் அல்லாஹ்வுக்கு இணைகளைக் கற்பித்த போதிலும், அல்லாஹ் ஒருவன் இருக்கிறான் என்ற கொள்கையில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தனர். எதனை எழுதும் போதும் 'பிஇஸ்மிக அல்லாஹும்ம' (அல்லாஹ்வே! உனது பெயரால்) என்ற வாசகத்துடனேயே ஆரம்பித்தனர். இதற்கு நபி முஹம்மத் (ஸல்) அவர்களையும் அவர்களது குடும்பத்தாரையும் ஒன்றியொதுக்கல் செய்த சமயம், மக்கா குறைஷ்கள் எழுதிய கூட்டிணைப்புப் பத்திரமும் ஹி.6 இல் எழுதப்பட்ட ஹுதைபியா உடன்படிக்கைப் பத்திரமும் சான்றாகும். நபி அவர்களின் குடும்பத்தாரை ஷி.ப் அபீதாலிப் என்ற இடத்திலிருந்த மலைக் கோட்டைக்கு குறைஷ்கள் ஒன்றியொதுக்கிய சமயம், குறைஷ் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எழுதிய பிரசித்த ஆவணத்தை அவர்கள் 'பிஇஸ்மிக அல்லாஹும்ம' என்று

16. இப்ன் கதீர், தப்ஸீருல் குர்ஆனுல் அழீம், பாகம் ii பக்கம் 171

குறிப்பிட்டே எழுத ஆரம்பித்தனர்.[17] ஹுதைபியா உடன்படிக்கை எழுதப்பட்ட சமயமும் நபி அவர்கள் 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' என்று எழுதப் பணித்தபோது, குறைஷ் தலைவர்கள் அதற்கு ஆட்சேபனை தெரிவித்து, 'பிஇஸ்மிக அல்லாஹும்ம' என்று தங்கள் பாரம்பரிய வழக்கப்படி எழுதுமாறே கோரினர். அவ்வாறே எழுதப்பட்டது.

அறியாமைக் கால அறேபியர் ஏகனான அல்லாஹ்வை ஓரளவு அறிந்து, அவனில் நம்பிக்கை வைத்திருந்தனர் என்பதற்குப் பண்டைய பொறிப்புக்கள், இஸ்லாத்திற்கு முற்பட்டகால அறபுக்கவிதைகள் என்பனவும் சான்றாக இருக்கின்றன. தென் அறேபியாவில் கண்டெடுக்கப்பட்ட பொறிப்புக்கள் இரண்டில் அல்லாஹ்வைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அவற்றுள் ஒன்று வட அறேபியாவில் தய்மாவுக்கும் கைபருக்கும் இடையே உள்ள அல் உலா என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட மஈனீ (கி.மு. 1400-700) பொறிப்பு: மற்றது யமனில் கண்டுபிடிக்கப்பட்ட ஸபஈ (கி.மு. 950-115) பொறிப்பு. தொல் பொருள் ஆராய்ச்சியின் விளைவாக யமனில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி. 4ஆம், 5ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பொறிப்புக்களும் அக்கால அறேபியாவில் ஏகத்துவக் கோட்பாட்டில் நம்பிக்கையுடையோரும் வாழ்ந்தனர் என்பதற்கு ஆதாரமாக இருக்கின்றன. யமனில், ஆலயம் ஒன்றின் இடிபாடுகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட கி.பி. 378ஆம் ஆண்டைச் சேர்ந்த பொறிப்பு ஒன்றில், 'வானங்களின் இரட்சகனாக இருப்பவனின் வழிபாட்டிற்காக இந்த ஆலயம் கட்டப்பட்டது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கி.பி. 465 ஆம் ஆண்டிற்குரிய பொறிப்பு ஒன்றில் ஏகத்துவக் கோட்பாட்டைத் தெளிவாகச் சுட்டும் வார்த்தைகள் காணப்படுகின்றன. அலெப்போ (ஹலப்) நகருக்குத் தென் கிழக்கே ஷபத் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி. 512 ஆம் ஆண்டிற்குரிய பொறிப்பு ஒன்றில், 'பிஸ்மி இலாஹு லா இஷ்ஷ இல்லா லஹு, லா ஷுக்ர இல்லா லஹு' என்ற வார்த்தைகள் காணப்படுகின்றன.

அறியாமைக்கால அறபுக் கவிஞர்கள் பலரின் கவிதைகளில் அல்லாஹ்வைப் பற்றிய குறிப்புக்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. அபீத் பின் அப்ரஸ் (மரணம் கி.பி. 554), உமய்யா பின் அபூ ஸல்த் (மரணம் கி.பி. 628), லபீத் பின் ரபீஆ (மரணம் ஹிஜ்ரி 41)[18] முதலான அறபுக் கவிஞர்களின் கவிதைகளில் ஏகத்துவக் கோட்பாட்டையும் அதனோடு சம்பந்தமுடைய விடயங்களையும் பற்றிய கருத்துக்கள் மிகுதமாகக் காணப்படுகின்றன. இவ்வாறு, அறியாமைக் கால அறேபியர் அல்லாஹ்வைப் பற்றிய கருத்தைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருந்தமைக்கும் அந்தக் கருத்தோடு பரிச்சயமுற்றிருந்தமைக்கும் அவர்களது முன்னோருட் பலர்

17. அபுல் ஹஸன் அலீ அல் நத்வீ, அஸ்ஸீரதுந் நபவிய்யா, பக்கம் 161

18. தமது வாழ்வின் பெரும் பகுதியை அறியாமைக் காலத்தில் கழித்த லபீத் பின் ரபீஆ பின்னர், இஸ்லாத்தைத் தழுவி, தமது 145 ஆம் வயதில் மரணித்தவர்.

வேதத்தையுடைய நபிமார்களைப் பின்பற்றி வாழ்ந்தமை, வேதத்தையுடைய யூதரோடும் கிறித்தவரோடும் அவர்களுக்கு இருந்து வந்த நெருங்கிய தொடர்பு, வேதங்களைப் படித்துணர்ந்த மக்கள் சிலர் அவர்களிடையே இருந்தமை ஆகியவற்றைக் காரணங்களாகக் கூறலாம்.

உருவத் தொழும்பு வேரூன்றி வளர்ந்திருந்த அக்கால அறேபியாவில், யூத மதத்தைப் பின்பற்றி வாழ்ந்த மக்களும் இருந்தனர். நபி ஈஸா (அலை) அவர்கள் பிறப்பதற்குச் சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே யூத மதம் அறேபியாவில் பரவ ஆரம்பித்தது என்று கூறப்படுகிறது. கி.மு. 332இல்,

யூத மதம்

இஸ்ரவேலரின் பூமியில் யூதர்கள் அமைத்திருந்த ஜுதியா அரசை கிரேக்க ஆட்சியாளரான மகா அலெக்ஸாந்தர் வெற்றிகொண்டு, அவர்களை அடிமைப்படுத்தினார். இதனைத் தொடர்ந்து, அங்கு வாழ விரும்பாத யூதர்கள் அறேபியா உட்படப் பல்வேறு நாடுகளுக்குப் புகலிடம் தேடிக் குடிபெயர்ந்தனர். கி.பி. 44இல், அவர்களது ஜுதியா அரசை உரோமர்கள் கைப்பற்றி, யூதர்களை அதிகம் கொடுமைப்படுத்தினர். யூதர்களுக்கும் உரோமர்களுக்கும் இடையே மோதல்களும் போர்களும் நிகழ்ந்தன. அதனால் அவர்களின் இடப்பெயர்ச்சி மேலும் தீவிரமாயிற்று. பலர் அறேபிய தீபகற்பகத்துக்கு வந்து, வட அறேபியாவிலும் வட அறேபியாவின் வடமேற்கு எல்லைப் புறங்களிலும் குடியேறி வாழலாயினர். ஆரம்பத்தில் வந்த யூதர்கள் (எதோமியர்) வட அறேபியாவில் குடியேறி, அறேபியரைப் போல் அவர்களது பழக்கவழக்கங்களை ஏற்று வாழ்ந்தனர். இப்போது வந்த யூதர்களோ தங்களது தனித்துவத்தைப் பேணி வாழ்ந்ததோடு, தமது மதத்தை அறேபியரிடையே பரப்பும் முயற்சியிலும் ஈடுபடலாயினர்.

Akurana Public Library

இஸ்லாம் தோன்றுவதற்குச் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே யமனை ஆட்சி செய்த துப்ப. மரபு ஆட்சியாளனான திபான் அஸ்வத் அபூ கரிப் என்பான் அங்கு யூத மதத்தைப் பரப்பும் பணிக்குப் பெரும் பங்களிப்புச் செய்தான். ஒருமுறை, அவன் மதீனா (யத்ரிப்) நகருக்கு வந்திருந்த போது, அங்கு வாழ்ந்த குறைளா வர்க்கத்தைச் சேர்ந்த யூத மத குருமார் இருவரின் பேச்சால் கவரப்பட்டு, அந்த மதத்தைத் தழுவிக் கொண்டான்: அந்த யூத மத குருமார் இருவரையும் தன்னோடு யமனுக்கு அழைத்துச் சென்றதோடு, தனது நாட்டு மக்களையும் யூத மதத்தைத் தழுவுமாறு தூண்டினான். பலர் அவனது ஆணையை ஏற்று, அந்த மதத்தைத் தழுவினர்.[19] அவனுக்குப் பின் வந்த யமனின் துப்ப. மரபு ஆட்சியாளர்களும் அவனது முன்மாதிரியைப் பின்பற்றி, யூத மதத்தைப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டனர். அந்த மரபின் கடைசி மன்னனான தூ நுவாஸ் என்பான் யூத மதத்தைப் பரப்புவதில் மிகக் கடுமையான போக்கைக் கடைப்பிடித்தான். இவனது ஆட்சிக் காலத்தில் யமன் நாட்டின் நகரங்களுள் ஒன்றான நஜ்ரானில், பைமியூன் என்ற

19. இப்ன் ஹிஷாம், பாகம் i பக்கம் 37, 41-42

பெயரையுடைய கிறித்தவத் துறவி ஒருவர் அங்கு கிறித்தவ மதத்தைப் பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்தார். அவரது முயற்சியால் அங்கு வாழ்ந்த மக்கள் கிறித்தவ மதத்தைத் தழுவினர். இதனை அறிந்து ஆத்திரமடைந்த தூ நுவாஸ் , ''எல்லாரும் யூத மதத்தைத் தழுவ வேண்டும்: இல்லையேல் அனைவரும் கொல்லப்படுவர்" என்று அறிவித்தான். நஜ்ரான் மக்கள் அவனது ஆணைக்குப் பணியமறுக்கவே, அகலமான அகழ் ஒன்றை அங்கு வெட்டுமாறும் அதனைத் தீயால் நிரப்புமாறும் தனது பணியாளர்களுக்கு அவன் உத்தரவிட்டான். அவ்வாறே அகழ் வெட்டப்பட்டு, அதில் தீ மூட்டப்பட்டது. கிறித்தவ மதத்தைத் துறந்து, யூத மதத்தைத் தழுவ மறுத்தோர் அனைவரும் பால், வயது வித்தியாசமின்றித் தீயிலே வீசப்பட்டுக் கொல்லப்பட்டனர்.[20] வரலாற்றாசிரியர்களின் கருத்துப்படி சுமார் இருபதினாயிரம் மக்கள் இவ்வாறு கொல்லப்பட்டனர். இது கி.பி. 6ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிகழ்ந்தது. இந்தச் சம்பவம் பற்றி அல் குர்ஆனிலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

இஸ்லாத்திற்கு முற்பட்ட காலத்தில் யமனில், ஒரு பெரும் யூதக் குடியேற்றம் இருந்தது. இஸ்லாத்தின் தோற்றம் நிகழும் வரை அவர்கள் நன்கு வேரூன்றிய ஒரு சமுதாயத்தினராக வாழ்ந்து வந்தனர்: அறேபியாவில் அவர்கள் மிக ஆழமான செல்வாக்கையும் பெற்றிருந்தனர். இஸ்லாத்தின் தோற்றம் நிகழ்ந்த காலத்தில், மதினாவில் வாழ்ந்த யூதர்களே ஹிஜாஷின் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தனர். பதக், தைமா., கைபர், வாதிஉல் குரா முதலான பாலைவனச் சோலைகளில் இருந்த செழிப்பான நிலங்களெல்லாம் அவர்களுக்கே சொந்தமானவையாய் இருந்தன. மதீனாவில் இருந்த யூத வர்க்கங்களுள் கைனூகா, நழீர், குறைளா ஆகிய வர்க்கங்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தன. ஹிம்யர், கன்ஆன், ஹாரித், கின்தா முதலான வர்க்கங்களைச் சேர்ந்த அறேபியர் பெரும்பாலும் யூத மதத்தைப் பின்பற்றியவர்களாகவே இருந்தனர். மதீனாவில் யூதர்களின் கையே ஓங்கி இருந்தது. 'பைதுல் மதாரிஸ்' என்று அழைக்கப்பட்ட பாடசாலைகளை அவர்கள் அங்கு நிறுவி, தமது வேத நூலை மக்களுக்குக் கற்றுக் கொடுத்து வந்தனர். மதீனாவின் சனத்தொகையில் பாதிப் பேர் யூதர்களாகவும் யூத மதத்தைத் தழுவியவர்களாகவுமே இருந்தனர். மதீனாவில் வாழ்ந்த யூதர்கள், யூத மதத்தைத் தழுவிய அறேபியரே என்று யாகூத் அல் ஹமவீ கூறுகிறார்.[21] மதீன யூதர்களுட் பலர் நல்ல விவசாயிகளாயும் கைப்பணியாளர்களாயும் புகழ் பெற்ற பொற்கொல்லர்களாயும் விளங்கினர். வட்டி மூலம் அவர்கள் பெரும் செல்வம் ஈட்டி வந்தனர். அவர்களது சமயம் ஒழுங்கை இழந்ததாயும் ஊழல் நிறைந்ததாயும் இருந்தமையால், அறேபியரின் ஒழுக்க, ஆன்மீக

20. இப்ன் ஹிஷாம், பாகம் i பக்கம் 44-48

21. As quoted in De Lacy O'Leary's History of Arabia Before Muhammad, p.173

உயர்ச்சிக்காக அந்தச் சமயத்தால் எத்தகைய பங்களிப்பையும் செய்யமுடியவில்லை. மேலும், வேரூன்றிய விக்கிரகத் தொழும்பின் காரணமாக யூத மதம் அறேபியரோடு வைத்திருந்த உறவைப் படிப்படியாக இழந்து விட்டது.

இஸ்லாம் தோன்றுவதற்கு முன்னால், கிறித்தவ மதத்தின் செல்வாக்கும் அறேபியாவில் ஓரளவுக்கு வேரூன்றி இருந்தது. கி.பி. 4ஆம் நூற்றாண்டில், உரோமப் பேரரசன் இரண்டாம் கொன்ஸ்தந்தைன் (334-61) என்பானின் ஆட்சிக்காலத்திலேயே கிறித்தவ மதம் அறேபியாவுக்கு அறிமுகம் செய்து

கிறித்தவ மதம்

வைக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. ஆயினும், இந்தக் காலப்பகுதியில் எந்த ஒரு அறேபியரும் கிறித்தவ மதத்தைத் தழுவியிருந்தமைக்கு ஆதாரம் இல்லை. இதற்குப் பிற்பட்ட ஒரு காலத்திலேயே கிறித்தவ மதம் அறேபியா வினுள் நுழைந்திருக்க வேண்டும் என்று வரலாற்றாசிரியர்கள் அபிப்பிராயப் படுகின்றனர். அறேபிய வரலாறு, பைமியூன் என்ற சிரிய கிறித்தவத் துறவியின் முயற்சியினாலேயே கிறித்தவம் தென் அறேபியாவுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது என்று கூறுகிறது. இவரது காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியாகும். ஆயினும், கிறித்தவ மதத்தைத் தழுவி இருந்த அறேபியாவின் வடக்கு எல்லைப் புற நகரங்களின் வாயிலாக இதற்கு முற்பட்ட காலத்திலேயே கிறித்தவ மதம் அறேபியாவுக்கு அறிமுகம் செய்யப்பட்டிருக்கலாம் என்று யூகிக்க இடமுண்டு.

கி.பி. 5 ஆம் நூற்றாண்டில், சிரியாவின் ஆட்சியாளர்கள் கிறித்தவ மதத்தைத் தழுவி இருந்தனர்: அபீசீனியாவிலும் இதே காலப்பகுதியில் கிறித்தவ மதம் ஓரளவுக்குப் பரவி இருந்தது. இவர்களது செல்வாக்கால் அறேபியாவினுள் அந்தச் சமயம் மெல்ல மெல்ல நுழைய ஆரம்பித்தது. கிறித்தவ பிரசாரகர்கள் நஜ்ரான் உட்படப் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று, கிறித்தவ மதத்தைப் பரப்பும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். இதன் விளைவாக கல்ப், தனூக், தங்லிப், ஹாரித், ஹனீபா முதலான சிறிய - பெரிய வர்க்கங்களைச் சேர்ந்தவர்களும் தய்இ வர்க்கத்தவர்களுட் சிலரும் தனிமைப்படுத்தப்பட்ட நகரக் குழுக்களைச் சேர்ந்தவர்களும் கிறித்தவ மதத்தால் கவரப்பட்டு, அந்த மதத்தைத் தழுவிக் கொண்டனர். ஆயினும், அறேபிய தீபகற்பத்தின் வடக்கிலும் வடகிழக்கிலும் இருந்த ஙஸ்ஸான், ஹீரா ஆகிய எல்லைப் புற நகரங்களில் கிறித்தவம் செல்வாக்குப் பெற்றிருந்த அளவுக்கு நஜ்ரானைத் தவிர அறேபியாவின் வேறு எந்தப் பகுதியிலும் கிறித்தவ மதம் வேரூன்ற முடியவில்லை.

அறேபிய தீபகற்பத்தில், கிறித்தவ சமயத்தின் மிக முக்கியமான உறைவிடமாகத் தென் அறேபியாவில் உள்ள நஜ்ரான் நகரமே திகழ்ந்தது.

சிரியத் துறவியான பைமியூன் என்பாரின் முயற்சியாலும் அபீசீனிய அரசின் ஆதரவாலும் இங்கு கிறித்தவம் நன்கு காலூன்றி இருந்தது. பெரும்பாலும் இங்கு வாழ்ந்த கிறித்தவர்கள் யாகூபியப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருந்தனர். நஜ்ரானில், பனூ அப்துல் முதான் பின் தய்யூன்அல் ஹரீதீ குடும்பத்தாரால் மக்காவில் உள்ள க.ஃபாவுக்குப் போட்டியாகக் கட்டப்பட்டிருந்த ஆலயத்தைப் பின்னர், அங்கு வாழ்ந்த மக்கள் கிறித்தவ தேவாலயமாக மாற்றினர். கிறித்தவ மதத்தைத் தழுவியிருந்த அறேபியருட் சிலர் துறவற வாழ்க்கையை மேற்கொண்டனர். தய்இ வர்க்கத்தைச் சேர்ந்த ஹன்ளலா என்பார் கிறித்தவ துறவியாகி, யூபிரதிசு நதிக்கரையில்துறவு மடம் ஒன்றை அமைத்துத் தமது மரணம் வரை அங்கேயே வாழ்ந்து வந்தார். அந்தத் துறவு மடம் 'தய்ர் ஹன்ளலா' என்று அழைக்கப்பட்டு வந்தது. அறபுக் கவிஞரான குஸ் பின் ஸாஇதா அல் இபாதீ என்பார் துறவற வாழ்வை மேற்கொண்டு, தெருக்களையும் பாலைவனங்களையும் தமது வசிப்பிடம் ஆக்கிக்கொண்டார். ஹீராவை ஆட்சி செய்த லக்மிய மரபு மன்னனான மூன்றாம் நு.ஃமான் என்பான், அறபுக் கவிஞரான அதீ பின் ஷைத் என்பாரின் தூண்டுதலால் கிறித்தவ மதத்தைத் தழுவியதோடு, முடி துறந்து, மலைகளிலே தவ வாழ்க்கையை மேற்கொண்டிருந்தான்.

வாதிஉல் குரா என்ற இடத்தில் துறவு மடங்களை அமைத்திருந்த கிறித்தவத் துறவிகளும் மத குருக்களும் அறேபியாவில் சந்தை கூடும் இடங்களைத் தமது பிரசார மேடைகளாக்கி, மக்களுக்கு கிறித்தவ மதக் கோட்பாடுகளையும் ஒழுக்கங்களையும் போதித்தனர். அவர்களின் இத்தகைய முயற்சிகளாலேயே இஸ்லாத்திற்கு முற்பட்ட கால அறேபியர் மறுமைநாள், நீதி விசாரணை, சுவனம், நரகம் முதலியவை பற்றிய கருத்துக்களோடு பரிச்சயம் உடையவர்களாக இருந்தனர். கிறித்தவ மதத்தைத் தழுவி இருந்த குஸ் பின் ஸாஇதா அல் இபாதீ, அதீ பின் ஷைத் முதலான அறபுக் கவிஞர்களின் கவிதைகளும் வேதத்தையுடைய சமயம் ஒன்றின் கோட்பாடுகளை அறேபியருக்கு அறிமுகம் செய்து வைக்கும் பணிக்கு உதவின. ஆயினும், யூத மதத்தைப் போலவே கிறித்தவ மதமும் அறேபிய மண்ணிலும் அறேபியரின் வாழ்விலும் வேரூன்றி வளரத் தவறி விட்டது. நன்கு காலூன்றி, இறுக்கமாகவும் அடர்த்தியாகவும் வளர்ந்திருந்த உருவத்தொழும்பு அதற்கு இடம் அளிக்கவில்லை.

ஷொராஸ்ட்ரியனிஸம் (Zoroastrianism) என்று அழைக்கப்படும் மஜூஸிய்யா மதமும் அறியாமைக் கால அறேபியாவின் சில பகுதிகளில் வழக்கில் இருந்தது. இந்த மதத்தைப் பின்பற்றியோர் மஜூஸிகள் என்று

மஜூஸிய்யா

அழைக்கப்பட்டனர். ஆரம்பத்தில் இந்த மதம், விண் பொருள்களை ஆராய்ச்சி செய்வதில் தமது நேரத்தின் பெரும் பகுதியைச் செலவிட்டுக் கொண்டிருந்த மிகப் புராதன தத்துவஞானிகளின்

கோட்பாட்டுப் பிரிவாகவே தோன்றியது. அவர்களும் அவர்களைப் பின்பற்றியோரும் தீயின் வடிவத்தில் கடவுளை வழிபட்டு வந்தனர். இந்த மதப் பிரிவு கி. மு. 7ஆம் நூற்றாண்டில், அஸர்பைஜானில் வாழ்ந்த ஷராதுஷ்த் (ஷொராஸ்டர்) பின் இஸ்பீமான் என்பாரால் சீர்திருத்தி அமைக்கப்பட்டு, பின்னர் இந்த மதம் அவரது பெயராலெயே ஷொராஸ்ட்ரியனிஸம் என்று அழைக்கப்பட்டது. தம்மை ஒரு நபி என அழைத்துக் கொண்ட அவரையும் அவரது புதிய சிந்தனைகளையும் பல்க் நாட்டின் ஆட்சியாளரான பிஷ்தாஸ்ப் (விஷ்தாஸ்ப்) என்பான் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, இப்புதிய மார்க்கம் பல்க்கிலிருந்து பாரசீகம் முழுவதிலும் பரவி வேரூன்றத் தொடங்கிற்று. பிற்காலத்தில், இதுவே பாரசீகத்தின் அரச மதமாகவும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

பாரசீகம், அறேபியாவுக்கு அண்மையில் இருந்தமையாலும் யமன், உம்மான் முதலான அறேபிய மாகாணங்களுட் சில பாரசீக ஆட்சியாளரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டிருந்தமையாலும் இந்த மதத்தைப் பின்பற்றிய அறேபியர் சிலர் ஆங்காங்கே காணப்பட்டனர். அல் பலாதுரீயின் கூற்றுப்படி, இஸ்லாம் அறேபியாவில் தோன்றிய காலப்பகுதியில் யமன், உம்மான், பஹ்ரைன் ஆகிய பிரதேசங்களில் இந்த மதத்தைப் பின்பற்றிய மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களின் எண்ணிக்கை யூதம், கிறித்தவம் ஆகிய மதங்களைத் தழுவியிருந்தோரின் எண்ணிக்கையை விடவும் மிகக் குறைவாகவே இருந்தது.

இவற்றைத் தவிர, பாரசீகத்தில் மானிகியனிஸம், ஸாபிஈனிஸம், மஷ்தகிஸம் முதலான பெயர்களில் அறிமுகமாகி இருந்த சமய நெறிகளைப் பின்பற்றிய மக்களும் மிக மிகக் குறைந்த எண்ணிக்கையில் இஸ்லாத்திற்கு முந்திய கால அறேபியாவில் காணப்பட்டனர். ஆயினும், இவை இறைவனால் அருளப்பட்ட வேதங்களையுடைய யூதம், கிறித்தவம் ஆகிய மதங்களைப் போலன்றி, உருவ வழிபாட்டை அடிப்படையாகவும் பிரதான அம்சமாகவும் கொண்ட புறச் சமயவாதத்தின் (Heathenism) மறு வடிவங்களாகவே இருந்தன. அதனால், இந்தச் சமய நெறிகள் யாவும் அறேபியரிடையே ஏகத்துவக் கொள்கையும் நல்லொழுக்க ஆசாரங்களும் பொதிந்த ஒரு சீரிய வாழ்க்கை முறையை அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக அவர்களது உருவத்தொழும்பையும் தீயொழுக்கத்தையும் ஊக்குவிப்பவையாகவே அமைந்தன.

இவ்வாறு, சமயங்களின் செல்வாக்கை விடவும் உருவ வழிபாட்டினதும் மூட நம்பிக்கைகளினதும் செல்வாக்கிற்கு அதிகமாக உட்பட்டிருந்த அறியாமைக்கால அறேபியாவில் நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் சன்மார்க்கத்தைப் பின்பற்றிய மக்களும் மிக மிகக்குறைந்த எண்ணிக்கை யில் காணப்பட்டனர். இந்த மார்க்கம் ஹனீபிய்யா என்றும் இந்த மார்க்கத்தைப் பின்பற்றியோர் ஹனீப்கள் என்றும்

ஹனீபிய்யா

அழைக்கப்பட்டனர். புத்திஜீவிகளாயும் நல்ல சிந்தனைப் போக்கு உடையோராயும் இருந்த இந்த நெறியைப் பின்பற்றியோர் யூதர், கிறித்தவர் ஆகியோரை விடவும் மேம்பட்டவர்களாயும் சத்தியத்தை மிக அண்மித்தவர் களாயும் காணப்பட்டனர். ஏனெனில், இஸ்லாம் தோன்றும் வரை, மனிதரின் கையாடல்களுக்கும் கற்பழிப்புக்களுக்கும் உள்ளாகாத ஒரே தூய நெறியாக இப்றாஹீமின் மார்க்கம் ஒன்றே இருந்து வந்தது. பின்னர், அதுவே இஸ்லாமாகப் புதிய பரிணாமம் அடைந்தது. இந்த நெறியைப் பற்றி இறைவனும் தனது அல் குர்ஆனிலே பிரஸ்தாபித்திருக்கிறான். (10:105, 22:31, 30:30, 2:129, 3:60, 98:4)

இந்த நெறியைப் பின்பற்றியோர் யூத மதத்தையோ கிறித்தவ மதத்தையோ பின்பற்றாமல், உருவ வழிபாட்டை முற்றாகக் கைவிட்டு, நபி இப்றாஹீமின் ஒரே இறைவனான அல்லாஹ்வையே வணங்கி வந்தனர். மதுபானம் அருந்துதல், தாமாகச் செத்த பிராணிகளையும் இரத்தத்தையும் விக்கிரகங்களுக்காக அறுக்கப்பட்டவற்றின் மாமிசத்தையும் உண்ணுதல், பெண் குழந்தைகளை உயிரோடு புதைத்தல் முதலான அறியாமைக் கால அறேபியரின் மூடச் செயல்களிலிருந்தும் அவர்கள் தம்மை முற்றாக விடுவித்திருந்தனர். இவ்வாறு ஹனீபிய்யா நெறியைப் பின்பற்றி வாழ்ந்தவர்களுள் வரகா பின் நவ்பல், உமய்யா பின் அபீ அல் ஸல்த், உத்மான் பின் அல் ஹுவைரித், ஷைத் பின் அம்ர், உபைதுல்லாஹ் பின் ஜஹ்ஷ், அபூ கைஸ் பின் அபூ அனஸ் பின் ஸிர்மா முதலானோர் குறிப்படத்தக்கவர்கள். இவர்கள் தெளிந்த சிந்தனையும் ஆத்மீக விழிப்பும் உடையவர்களாக இருந்தனர். இறைவனால் அருளப்பட்ட பண்டைய வேதங்களில் நல்ல பரிச்சயம் உடையவர்களாய் இருந்த இவர்களுட் சிலர் துறவிகளைப் போல மக்களை விட்டும் ஒதுங்கி வாழ்ந்து வந்தனர்.

ஒருமுறை, குறைஷ்கள் அவர்களது திருநாள் ஒன்றில் கூடி, அவர்கள் வழிபட்டு வந்த விக்கிரகத்தைச் சுற்றி வந்தனர். இவ்வாறு அவர்கள் ஆண்டுதோறும் செய்து வந்தனர். அந்த விக்கிரகத்துக்குப் பலிகளும் கொடுத்து வந்தனர். அப்போது, அவர்களுள் இருந்த வரகா பின் நவ்பல், உபைதுல்லாஹ் பின் ஜஹ்ஷ், உத்மான் பின் அல் ஹுவைரித், ஷைத் பின் அம்ர் ஆகிய நால்வரும் இரகசியமாக அவர்களை விட்டு விலகிச் சென்று, தங்களுக்குள் நட்புறவுப் பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டனர். தங்களது சமுதாயத்தினர் நபி இப்றாஹீமின் மார்க்கத்தை மாசுபடுத்தி விட்டனர் என்றும் அவர்கள் சுற்றி வருவது கேட்கவும் பார்க்கவும் நன்மையோ தீமையோ செய்யவும் முடியாத வெறும் கல்லே என்றும் கருதினர். எனவே, அவர்களுள் ஒருவர் மற்றவர்களிடம், ''உங்களுக்காக ஒரு மார்க்கத்தைத் தேடிக் கொள்ளுங்கள்: அல்லாஹ்வின் மீது சத்தியமாக நீங்கள் எந்த மார்க்கத்திலும் இல்லை''

என்று கூறினர். பின்னர், அவர்கள் இப்ராஹீமின் மார்க்கமான ஹனீபிய்யாவைத் தேடி, பல்வேறு நிலங்களுக்குப் பிரிந்து போயினர்.[22]

இவ்வாறு சத்திய நெறியைத் தேடுவதிலும் அந்த நெறியைப் பின்பற்றுவதிலும் ஆர்வம் கொண்டிருந்த இவர்கள் யூத மதத்தாலோ கிறித்தவ மதத்தாலோ தங்களின் ஆத்மிக வேட்கையைத் தணிக்க முடியாது என்பதை உணர்ந்திருந்தனர். இவர்களுட் பலர் தவ்ராத், இன்ஜீல் ஆகிய வேதங்களில் நல்ல பரிச்சயம் உடையவர்களாய் இருந்தமையால், அந்த வேதங்களால் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட மற்றொரு சத்திய மதத்தின் தோற்றத்தையும் இறுதித் தீர்க்கதரிசியின் வரவையும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

சமூக நிலை

இஸ்லாத்திற்கு முந்திய கால அறேபியாவின் மக்கள் தொகை சுமார் 1,50,000 ஆகும். குடிகளுள் அதிகமானோர் பாலைவனங்களில், கூடாரங்களில் வாழ்ந்த நாடோடிகளாகவே இருந்தனர். இவர்கள் 'அஹ்லுல் பாதியா' ('பதவீ'கள் - பாலைவன நாடோடிகள்) என்று அழைக்கப்பட்டனர். கிராமங்களிலும் நகரங்களிலும் குடியேறி, நிரந்தரமான வீடுகளில் வாழ்ந்தோர் சிறு தொகையினராகவே இருந்தனர். இவர்கள் 'அஹ்லுல் ஹழரா' (நிரந்தரக் குடியேற்றவாசிகள்) என்று அழைக்கப்பட்டனர். தீபகற்பத்தில் வாழ்ந்த அறேபியர் சுதந்திர ஆண்-பெண்களையும் அடிமைகளையும் கொண்ட வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். ஓர் அன்னியன் திருமண உறவின் மூலம் ஒரு வர்க்கத்தின் நிரந்தரமான சுதந்திர உறுப்பினனாக முடிந்தது. ஒரு வெளிநாட்டான் அல்லது விடுதலை பெற்ற அடிமை கூட பாதுகாப்பிற்காகத் தன்னை வர்க்கம் ஒன்றோடு கூட்டிணைத்துக் கொள்ள முடிந்தது. அத்தகைய மனிதன் 'மவ்லா' (சாருனன்) என்று அழைக்கப்பட்டான்.

அக்கால அறேபியரிடையே நன்கு நிறுவப்பட்ட ஒரு சமூக அமைப்பு எதுவும் இருக்கவில்லை. முழு அறேபியாவையும் குலங்களின் அமைப்புக்களே நிறைத்திருந்தன. அறேபியரின் - குறிப்பாக நாடோடி அறேபியரின் - சமுதாய

வர்க்க அமைப்பு

அடிப்படையாக வர்க்க அமைப்பே இருந்தது. ஒவ்வொரு கூடாரமும் அல்லது வீடும் ஒரு குடும்பத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. ஒரு குடும்பம் கணவன், மனைவி,

22. இப்ன் ஹிஷாம், பாகம் i பக்கம் 251–252
இவர்களுள் வரகா, கிறித்தவ மதத்தைத் தழுவி வேதங்களைக் கற்றுணர்ந்தவர்: உத்மானும் கிறித்தவராகி, பைஸாந்தியப் பேரரசில் நல்லபதவி வகித்தார். உபைதுல்லாஹ் ஒரு 'ஹனீப்' ஆக இருந்து, முஸ்லிம் மனைவியான உம்மு ஹபீபாவோடு வாழ்ந்து பின்னர், அபிசீனியாவில் கிறித்தவராக மரணித்தார். ஸைத் பின் அம்ரோ இறுதி வரை ஒரு 'ஹனீ'பாக இருந்து மரணித்தார். (மேற்படி, பாகம் i பக்கம் 252–261)

கணவனின் பெற்றோர், அவனது திருமணமாகாத சகோதர சகோதரிகள், அடிமைகள் ஆகியோரைக் கொண்டதாய் இருந்தது. கூடாரங்களின் கூட்டம் அல்லது முகாம் 'ஹய்ய்' (சிறுகுலப் பிரிவு) என்று அழைக்கப்பட்டது. சிறு குலப்பிரிவின் உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பு 'கவ்ம்' (குலம்) என்றும் இனக்குலங்கள் பலவற்றின் உறுப்பினர்களைக் கொண்டஅமைப்பு 'கபீலா' (கோத்திரம்) என்றும் அழைக்கப்பட்டன. குலத்தை அல்லது கோத்திரத்தைச் சார்ந்தவர்களைக் குறிப்பிட குலப்பெயருக்கு முன்னால் 'பனூ' (பிள்ளைகள்) என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. ஒரு குலத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒரே இரத்தத்தை உடையவர்களாகக் கருதப்பட் டனர். ஒவ்வொரு குலத்தினரும் அந்தக் குலத்தின் மூத்த உறுப்பினர் ஒருவரின் தலைமையை ஏற்று, அவருக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடந்தனர். ஸய்யித் அல்லது ஷைக் என்று அழைக்கப்பட்ட குலத்தலைவராக வயதில் மட்டுமன்றி அறிவு, அனுபவம், செல்வாக்கு முதலான ஆள்தகைமைகளிலும் முதிர்ச்சி அடைந்த ஒருவரே தெரிவுசெய்யப்பட்டார். நீதி, படையெடுப்பு முதலான பொது விவகாரங்களில் தன்னிச்சையாக நடந்து கொள்ளும் உரிமை குலத்தலைவருக்கு இருக்கவில்லை. குடும்பத் தலைவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்த மன்றத்தோடும் மற்றக் குலத்தலைவர்களோடும் கலந்தாலோசித்தே இந்த விவகாரங்களில் அவர் முடிவெடுத்தார். குல உறுப்பினர்களின் நன்மதிப்பு இருந்த வரை அவர் பதவி வகித்தார். அவரது இடம் வெறுமையான போது, அந்த இடத்திற்குத் தகுதியான வேறு ஒருவர் தெரிவு செய்யப்பட்டார்.

ஒரு குலத்தோடு வேறு குலங்கள் நேச ஒப்பந்தமும் செய்திருந்தி ருந்தன. அதனால், நேசக் குலங்கள் தங்களுக்குள் ஒருவர் மற்றவர்க்கு உதவியாகச் செயலாற்றக் கடமைப்பட்டிருந்தனர். பொது விவகாரங்களில் நேசக்குலங்கள் அனைத்தும் ஒரே குலமாக நடந்து கொண்டன. ஒரு நேசக் குலத்தார் தாம் ஏற்றுக் கொண்ட மற்றொரு நேசக்குலத்தாரின் உரிமைகளை மதித்து செயற்பட்டு வந்தனர். ஆயினும், ஒரு கோத்திரத்தாருக்கும் அதன் நேசக்குலங்களுக்கும் இடையே போர் நிகழ்ந்த சந்தர்ப்பங்களும் இஸ்லாத்திற்கு முந்திய கால அறேபியரின் வரலாற்றில் காணப்படுகின்றன.

ஒரு கோத்திரத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் ஒரே மனிதனாகச் செயற்பட்டு, தமது வர்க்கத்தைச் சேர்ந்த தனி மனிதன் ஒருவனைப் பாதுகாப்பதில் இணைந்து கொண்டனர். தனி மனிதன் ஒருவனின் மாண்பையும்

வர்க்க உணர்வு

இழுக்கையும் அவர்கள் வர்க்கத்தின் மாண்பாகவும் இழுக்காகவுமே கருதினர். ஒவ்வொரு குலத்தினனும் தனது குலப்பெருமையைப் பேணிப் பாதுகாப்பதி லேயே கண்ணுங்கருத்துமாய் இருந்தான். அறேபியரின் குருதியோடும் இயல்போடும் உறைந்து போயிருந்த வர்க்க உணர்வு (அஸபிய்யா) வேறு எந்தச் சமுதாயத்தினரிடமும் காணப்பட முடியாத அளவுக்கு ஆழமாயும் மிக இறுக்கமாயும் வேரூன்றி இருந்தது. இந்தக் காலத்தில் தேசப்பற்று (Patriotism) என்று கூறப்படும் உணர்வுக்கு அறேபியரின் இந்த, வர்க்க

உணர்வை ஒப்பிடலாம். ஆயினும் 'அஸபிய்யா' என்ற இந்த வர்க்க உணர்வு வரம்புகள் அனைத்தையும் மீறியதாக இருந்தது. அவர்களது கருத்தில் இந்த உணர்வு, சக குலத்தவர்க்கு எல்லையில்லாமலும் நிபந்தனையில்லாமலும் விசுவாசமாக இருத்தலையே குறித்து நின்றது. ''உனது வர்க்கத்திற்கு விசுவாசமாக இரு: அதன் உறுப்பினர் மீது அதற்கு உள்ள உரிமைக்கோரிக்கை கணவன் ஒருவன் அவனது மனைவியைக் கைவிட்டுவிடச் செய்யும் அளவுக்கு மிகப் பலமானது'' என்று அக்கால அறபுக் கவிஞர் ஒருவர் இந்த வர்க்க உணர்வு பற்றிப் பாடியிருக்கிறார். ஒவ்வோர் அறேபியனும் தன்னை ஓர் அறேபியன் என்று சொல்லிக்கொள்வதிலும் பார்க்க இன்ன குலத்தினன் என்று சொல்வதிலேயே பெருமைப்பட்டுக் கொண்டான். தான் சார்ந்த அல்லது பிறந்த வர்க்கத்திற்காகத் தனது சொந்தம், பந்தம், உடைமைகள், உயிர் முதலான அனைத்தையும் இழக்க ஆயத்தமாக இருந்தான்.

இந்த வர்க்க உணர்வு நன்மை செய்ததிலும் பார்க்கத் தீமையே அதிகம் செய்தது என்று கூற வேண்டும். இந்த உணர்வின் காரணமாக அவர்களது சமுதாயத்திலே வர்க்கப் பகைமை வளர்ந்தது: அதன் விளைவாகக்

வர்க்கப் பகைமை

குலங்களுக்கிடையில் ஒற்றுமையின்மையும் அமைதியின்மையும் உருவாகி இருந்தன. ஒரு குலம் அல்லது கோத்திரம் மற்றொரு குலத்தை அல்லது கோத்திரத்தைப் பகைக் கண் கொண்டே நோக்கியது. அதனால் வர்க்கங்களுக்கு இடையிலான தொடாச் சண்டைகளும் போர்களுமே அக்கால அறேபியர் சமுதாயத்தில் சட்டமாயும் ஒழுங்காயும் இருந்தன. ஒரு கோத்திரத்தார் மற்றொரு கோத்திரத்தாரின் உடைமைகளைச் சூறையாடுதலும் அற்ப காரணங்களுக்காக அவர்களோடு சண்டையிடுதலும் அன்றாட அலுவல்களாயின. ஒவ்வொரு கோத்திரத்தாரும் தமது கோத்திரப் பெருமையையும் கௌரவத்தையும் பாதுகாப்பதில் எந்த எல்லையையும் தாண்டிச் செல்லத் தயங்கவில்லை. அவர்களது கோத்திரச் சண்டைகள் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்தன.

பெரும்பாலும் அவர்களது போர்கள் கால்நடைகள், மேய்ச்சல் நிலங்கள், நீரூற்றுக்கள், எல்லைகள் முதலியவற்றோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால், தனிமனிதர் இருவருக்குள் அல்லது சிலருக்குள் ஏற்பட்ட

அய்யாமுல் அறப்

சிறு சண்டைகளாகவே ஆரம்பித்தன. பின்னர், பரஸ்பரம் கொள்ளையடித்தல், வசைக் கவிதைகள் பரிமாற்றம், டம்பப் பேச்சுக்கள், ஆட்கடத்தல், சிறு கைகலப்புகள் முதலியற்றின் மூலம் இந்தப் பிணக்குகள் வளர்ந்து, முழு வர்க்கமும் பங்குபற்றும் போர்களாக மாறி, ஆண்டுக்கணக்கில் தொடர்ந்தன. அறேபியரின் வரலாற்றில் இந்தப் போர்கள் 'அய்யாமுல் அறப்' (அறேபியரின் நாள்கள்) என்று அழைக்கப்படுகின்றன. பெரும்பாலும் ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர் நிகழ்ந்த இத்தகைய போர்கள் பற்றியே எமக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில், வட, கிழக்கு அறேபியாவில் வாழ்ந்த பக்ர் வர்க்கத்தாருக்கும் அவர்களது இனத்தினரான தங்லிப் வர்க்கத்தாருக்கும் இடையே மூண்ட பஸூஸ் போர் (ஹர்புல் பஸூஸ்) நாற்பது ஆண்டுகள் வரை தொடர்ந்தது. கிறித்தவ மதத்தைத் தழுவியிருந்த இவ்விரு வர்க்கத்தாரும் நேசர்களாயும் உறவினர்களாயும் இருந்தனர். பக்ர் வர்க்கத்தைச் சேர்ந்த ஜஸ்ஸாஸ் என்பாரின் சகோதரி ஹலீமா பின்த் முர்ரா என்பாளையே தங்லிப் வர்க்கத்தலைவரான குலைப் பின் ரபீயா என்பார் திருமணம் செய்திருந்தார். ஒருநாள் ஜஸ்ஸாஸின் மாமி பஸூஸ் என்பாளுக்குச் சொந்தமான பெண் ஒட்டகை ஒன்று குலைபின் நிலத்தில் கூடு கட்டியிருந்த ஒரு பறவையின் முட்டைகளை மிதித்துச் சிதைத்து விட்டது. அதனால், குலைப் அந்த ஒட்டகையை அம்பால் அடித்துக் காயப்படுத்தி விட்டார். இதனைத் தொடர்ந்து, ஜஸ்ஸாஸ் ஒருநாள் குலைப்பைக் கொன்றுவிட்டார். இதன் விளைவாக இரு வர்க்கங்களுக்குமிடையே மூண்ட போர் நாற்பது ஆண்டுகள் வரை தொடர்ந்தது. இந்தப் போரில் பெண்களும் தமது குழந்தைகளோடு சென்று பங்குபற்றினர். இறுதியில், இந்தப் போர் ஹீராவின்மன்னன் மூன்றாம் முன்திர் மேற்கொண்ட சமாதான முயற்சியைத் தொடர்ந்து கி.பி. 525 இல் முடிவுற்றது.[23]

பஸூஸ் போர் முடிவுற்று அதிக காலம் செல்வதற்கு முன்பே மத்திய அறேபியாவில் மற்றொரு போர் வெடித்தது. அங்கு வாழ்ந்த ஃபதபான் கோத்திரத்தின் சகோதரக் குலங்களான அப்ஸ் வர்க்கத்தாருக்கும் துப்யான் வர்க்கத்தாருக்கும் இடையே கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் மூண்ட இந்தப் போருக்குக் குதிரைப் பந்தயம் ஒன்று காரணமாக அமைந்தது. அப்ஸ் வர்க்கத்தலைவர் கைஸ் பின் ஷுஹைர் என்பாரிடம் 'தாஹிஸ்' என்ற பெயரையுடைய பந்தயக் குதிரை ஒன்று இருந்தது. அவ்வாறே துப்யான் வர்க்கத் தலைவர் ஹுதைபா பின் பத்ர் என்பாரிடமும் ஃபப்ரா.'. என்ற பெயரையுடைய மற்றொரு குதிரை இருந்தது. ஒரு முறை, இரண்டு குதிரைகளுக்குமிடையே பந்தயம் ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டது. வெற்றி பெறும் குதிரையின் சொந்தக்காரருக்கு நூறு ஒட்டகைகள் வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன் படி பந்தயம் நடைபெற்றபோது, தாஹிஸ் வெற்றிக் கம்பத்தை நெருங்கிக் கொண்டிருக்கக் கண்ட துப்யானீகள் சிலர் ஒளிந்திருந்து, அதன் பாதையைத் திசை திருப்பி விடவே, ஃபப்ரா.'. முந்திச் சென்று விட்டது. இதனை அறிந்த தாஹிஸின் உரிமையாளரான கைஸ் ஒட்டகங்கள் தமக்கே தரப்பட வேண்டும் என்று வாதிட்டார். துப்யான் வர்க்கத்தினரோ ஒரு ஒட்டகை கூட கொடுக்க மறுத்து விட்டனர். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கைகலப்பில், ஹுதைபாவின் சகோதரர் ஒருவரை கைஸ் கொன்று விட்டார். பின்னர், ஹுதைபா பதிலுக்கு கைஸின் சகோதரர் மாலிக்

23. *R.A. Nicholson, A Literary History of the Arabs, pp. 55-60*

என்பாரைக் கொன்று விட்டார். இவ்வாறு ஆரம்பித்த இந்தச் சண்டை 'ஹர்புல் தாஹிஸ் வல் ஃபப்ரா.:.' என்ற போராக மாறி, சுமார் நான்கு தசாப்தங்கள் வரை தொடர்ந்தது. இருபக்கத்திலும் பெரும் இழப்புக்களை எற்படுத்திய இந்தப் போர் பின்னர், துப்யான் வர்க்கத்தின் இரு தலைவர்களான ஹாரித் பின் அவ்ப், ஹரிம் பின் ஸினான் ஆகியோரின் பெரு முயற்சியால் சமாதானமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.[24]

மதீனாவில் வாழ்ந்த அவ்ஸ் வர்க்கத்தாருக்கும் கஷ்ரஜ் வர்க்கத்தாருக்குமிடையே வெடித்த 'புஆத்' போர் சில தலைமுறைகள் தொடர்ந்தது. இந்தப் போரில், அவ்ஸ் வர்க்கத்தார் தமது நேசர்களான குறைழா, நளீர் ஆகிய வர்க்கங்களைச் சேர்ந்த யூதர்களின் உதவியோடு கஷ்ரஜ் வர்க்கத்தாருக்கு மிகுந்த இன்னல்கள் இழைத்து வந்தனர். நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செல்லும் வரை இந்தப் போரால் விளைந்த கசப்பும் பகையுணர்வும் இரு வர்க்கத்தாரையும் பிரித்து வைத்திருந்தன.[25] நபி (ஸல்) அவர்கள் சுமார் பதினைந்து வயதுச் சிறுவராய் இருந்த போது, குறைஷ் கோத்திரத்தாருக்கும் அவர்களது நேசர்களான கினானா, கைஸ் அய்லான் ஆகிய குலங்களுக்குமிடையே ஒரு கொலை காரணமாக வெடித்த 'பிஜார்' போர் (ஹர்புல் பிஜார்), ஹவாஷின் வர்க்கத்தாருக்கு எதிரான சண்டையாகப் பல ஆண்டுகள் வரை நீடித்தது. குருதி சிந்த விலக்கப்பட்ட புனித மாதங்களில் நிகழ்ந்த இந்தப் போரில் நபி (ஸல்) அவர்களும் தமது பெரிய தந்தை அபூ தாலிபோடு பங்கு பற்றியிருந்தார்கள். அந்தப் போரில் தாம் எதிரிகள் விட்டெறிந்த அம்புகளைப் பொறுக்கித் தமது பெரிய தந்தையிடம் கொடுத்து வந்ததாக அவர்கள் குறிப்பிட்டார்கள்.[26]

அறியாமைக்கால அறபுக் கவிதை இலக்கியம் இத்தகைய குலப் போர்கள் பற்றிய அழகான விவரணங்களைப் பாதுகாத்துத் தந்திருக்கிறது. இஸ்லாம் தோன்றுவதற்கு முந்திய ஐம்பது ஆண்டுகளில் மட்டும் அறேபியா 132 போர்களைக் கண்டிருக்கிறது என்று அறபு வரலாறுகள் கூறுகின்றன. ஜோசப் ஹெல் என்பார் தமது 'அறபு நாகரிகம்' என்ற ஜெர்மன் நூலில் கூறுவது போல 'அறேபியரிடம் தேசிய ஒற்றுமை உணர்வு இருக்கவில்லை. ஏனெனில், அவர்களிடம் வர்க்கமும் குடும்பமும் இருந்தனவே அன்றி, அறபு தேசம் என்று ஒன்று இருக்கவில்லை'.[27]

இஸ்லாத்திற்கு முந்தியகால அறேபியரின் சமுதாயத்தில், ஒழுக்காறு

24. Ibid, pp. 61-62
25. அபுல் பரஜ்அல் இஸ்பஹானி, கிதாபுல் அகானி, பாகம் ii பக்கம் 162
26. இப்ன் ஹிஷாம், பாகம் i பக்கம் 208-211: இப்ன் ஸ.'த், தபகாதுல் குப்ரா, பாகம் i பக்கம் 126- 128
27. Joseph Hell, the Arab Civilization (Eng.trans) pp.14-15

களுக்கோ ஒழுக்கத்திற்கோ இடம் இருக்கவில்லை. துன்னடத்தைகளும் ஒழுக்கநிலை இறக்கமுமே அவர்களது சமுதாயத்தில் ஆழமாக வேரூன்றியிருந்தன. அவர்களது பால்சார் ஒழுக்கம் அதன் மிகத் தாழ்ந்த

பாலியல் ஒழுக்கம்

வற்றல் நிலையை அடைந்திருந்தது. அவர்கள் ஒரு முறைக்கு அதிகமாகத் திருமணம் செய்தனர். கட்டுப்பாடில்லாத பலதார மணத்தையும் சுதந்திரமும் பட்டவர்த்தனமும் உடைய கூட்டுறவையும் (Concubinage) அவர்கள் பழக்கப்படுத்திக் கொண்டனர். தாம் விரும்பிய எவரையும் எத்தகைய வேறுபடுத்தலுமின்றி, அவர்கள் திருமணம் செய்து வந்தனர். மறுதாரத் தாய்மார், தந்தையர்களின் மரணத்திற்குப் பின்னர், பிற சொத்துக்களோடு அவர்களையும் மரபுரிமையாக அடைந்து கொண்ட அவர்களது மறுதாரப் பிள்ளைகளுக்கு மணம் செய்து வைக்கப்பட்டனர். விரும்பியவாறு எத்தனை பெண்களைத் திருமணம் செய்யவும் ஆண்கள் முழுச் சுதந்திரம் பெற்றிருந்தனர். அவ்வாறே, பெண்களும் தாம் விரும்பிய எண்ணிக்கையில் வம்புச் சிசுக்களைப் பெற்றெடுக்க அனுமதிக்கப்பட்டனர். சில சமயங்களில் திருமணமான பெண்கள் கூட சந்ததி விருத்திக்காக அல்லது உபசாரத்தின் அடையாளமாகப் பிற ஆண்களுடன் உடலுறவு கொள்ள அவர்களது கணவர்களால் அனுமதிக்கப்பட்டனர். அறேபியாவின் சில பகுதிகளில் பல்புருட மணமும் வழக்கில் இருந்தது. ஒவ்வொரு செல்வ அறேபியனும் ஒரே நேரத்தில் மனைவியர் பலரின் கணவனாக இருந்தான். ஒருவனது மனைவிகளினதும் வைப்புகளினதும் எண்ணிக்கைப் பெருக்கம் அவனது தகுதியையும் அந்தஸ்தையும் உயர்த்தும் காரணிகளுள் ஒன்றாகக் கருதப்பட்டது. திருமணம் என்பது அறேபியர்களுக்கு மிக எளிய ஒரு சடங்காகவே இருந்தது. அவர்களது சமுதாயத்தில் விபசாரம் சாதாரணமான ஒரு குற்றமாகக்கூடக் கருதப்படவில்லை.

இஸ்லாத்திற்கு முந்திய அறேபியாவில் ஆண் ஒருவனுக்கும் பெண் ஒருத்திக்கும் இடையிலான உடலுறவை நியாயப்படுத்தக் கூடிய பல்வேறு திருமண முறைகளும் உறவு வழிகளும் இருந்தன. அவற்றைப் பின்வருமாறு சுருக்கி விளக்கலாம்.

1. **ஒப்பந்த முறையிலான திருமணம் :**

   இது இந்தக் காலத்தில் நிகழும் திருமண ஒப்பந்தத்தைப் போன்றது. இதில், ஆண்கள் பெண்களை அவர்களது தந்தையரின் அல்லது பாதுகாவலரின் அனுமதியோடு அவர்களுக்கு 'மஹ்ர்' கொடுத்துத் திருமணம் செய்து கொண்டனர்.

2. **'இஸ்திப்ழா.:.' உடலுறவு:**

   நல்ல சந்ததியை உருவாக்கும் நோக்கத்தோடு இந்த உடலுறவு

மேற்கொள்ளப்பட்டது. இதில், கணவன் தனது மனைவியை வீரம், துணிவு, அறிவு முதலான பண்புகளிற் சிறந்த அன்னியன் ஒருவனோடு உடலுறவு கொள்ள விட்டு வந்தான். அந்த அன்னியன் மூலம் அவள் கருவுறும் வரை அவளது கணவன் அவளை நெருங்குவதில்லை. பெரும்பாலும், பிள்ளைகள் இல்லாத கணவர்களே தமது மனைவியரை இத்தகைய உடலுறவுக்கு அனுமதித்து வந்தனர். இந்த உறவின் மூலம் பிறந்த குழந்தை கணவனுக்குரியதாகவே கருதப்பட்டது.

3. **'முத்ஆ' திருமணம்:**

இது ஒரு குறிப்பிட்டகாலத்திற்கு மட்டும் மேற்கொள்ளப்பட்ட திருமணம். இந்தத் தற்காலிகத் திருமணத்தில் ஒருவன் பெண் ஒருத்தியை 'மஹ்ர்' கொடுத்து, ஒரு வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மனைவியாக்கிக் கொண்டான். குறித்த காலம் முடிந்ததும் இருவரும் பிரிந்து விடுவர். பெரும்பாலும், இந்தத் திருமணம் பிரயாணிகள், அந்நிய நாட்டார், தூர இடங்களில் போர் செய்த வீரர்கள் முதலானோரால் பிரயாணங்களின் போதும் போர்களின் போதும் செய்யப்பட்டது.

4. **'அக்தான்' உறவு:**

ஒருவரை ஒருவர் காதலிக்கும் இருவர் எத்தகைய திருமண ஒப்பந்தமும் இல்லாமல், தங்களுக்குள் இரகசியமாக உடலுறவு வைத்துக் கொண்டமை 'அக்தான்' (காதலர்) உறவு என்று அழைக்கப்பட்டது. அவர்கள் தாம் விரும்பிய காலம் வரை தங்களுக்குள் உடலுறவு வைத்துக் கொள்ள அறியாமைக் கால அறேபியர் சமுதாயம் அனுமதித்திருந்தது. ஆனால், அவர்களுக்கிடையில் உள்ள உறவு ஒருமுறை அம்பலமாகி விட்டால், அது இழிவாகக் கருதப்பட்டதோடு உறவையும் அத்துடன் முடித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. இந்தக் கள்ள உறவு அந்தரங்கமாக இருந்த வரையிலேயே அனுமதிக்கப்பட்டது.

5. **'ஷிஙார்' திருமணம்:**

ஒருவர் தமது புதல்வியை அல்லது சகோதரியை மற்றொருவருக்கு அவரது புதல்விக்கு அல்லது சகோதரிக்குப் பதிலாக 'மஹ்ர்' எதுவும் பெறாமலும் கொடுக்காமலும் திருமணம் செய்து வைத்தல் 'ஷிஙார்' என்று அழைக்கப்பட்டது. இந்த வகையில் சிலர் தங்களது மனைவியரையும் மாற்றுத் திருமணம் செய்து கொண்டனர்.

6. **மரபுரிமைத் திருமணம்:**

(சொந்தத் தாய் அல்லாத) விதவைப் பெண்கள் அவர்களது இறந்துவிட்ட கணவர்களின் வாரிசுகளால் மரபுரிமைச் சொத்துக்களாக அடையப் பெற்றனர். இவ்வாறு விதவை ஒருத்தியைத் தமது சொத்தாக அடைந்த ஒருவர் அவளைத் திருமணம் செய்ய விரும்பினால், அவளது கணவனால் கொடுக்கப் பட்ட அதே அளவு 'மஹ்ர்' தொகையைக் கொடுத்து, அவளைத் திருமணம் செய்து கொள்ள முடிந்தது. சில சமயங்களில் அவன் அவளை 'மஹ்ர்' தொகையைப் பெற்றுக் கொண்டு வேறொரு வனுக்கும் மணம் செய்து கொடுத்தான். அவளை மறுமணம் செய்யாமல் நிரந்தரமாக விதவைக் கோலத்தில் வைத்திருக்கவும் அவளை மரபுரிமையாக அடைந்தவனுக்கு உரிமை இருந்தது.

7. **'மக்தி' திருமணம்:**

ஒருவர் தமது தந்தையின் மனைவியை அவர் இறந்து விட்ட பின்னர் அல்லது அவர் அவளை விவாக விலக்கு செய்துவிட்ட பின்னர் மணம் செய்து கொள்தலே இவ்வாறு அழைக்கப்பட்டது. இது மிகவும் வெறுக்கத்தக்க ஒரு திருமணமாக இருந்தமை யாலேயே 'நிகாஹுல் மக்தி' (மிகவும் வெறுக்கத்தக்க திருமணம்) என்று அழைக்கப்படுகிறது. ஆயினும், அக்கால அறேபியர் சமுதாயம் இந்தத் திருமணத்தை ஏற்றுக் கொண்டிருந்தது.

8. **சேவைத் திருமணம்:**

சில வர்க்கங்களிடம் இந்தத் திருமண முறை காணப்பட்டது. ஒருவர் பெண் ஒருத்தியை 'மஹ்ர்' கொடுத்துத் திருமணம் செய்ய வசதியற்றிருந்தால், அவர் அவளது தந்தைக்கு அல்லது உறவினர்க்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு - 'மஹ்ர்' தொகையைச் சம்பாதித்துக் கொள்ளும் அளவிற்கு - ஊழியம் செய்ய இணங்கி, அவளைத் திருமணம் செய்து கொள்ள முடிந்தது.

9. **'எர்ரீபு' திருமணம்:**

இது ஒருவகை செமித்திய திருமணம். செமித்தியத் தந்தை ஒருவருக்கு ஆண் மக்கள் இல்லாத போது, அவர் இளைஞன் ஒருவனைத் தத்தெடுத்துத் தமது சொந்த மகனாகக் கருதி வளர்த்து வந்ததோடு, அவனைத் தமது புதல்விகளுள் ஒருத்திக்குத் திருமணமும் செய்து வைத்தார். பிதா வமிசவழிப் பாரம்பரியத்துக்குப் பழக்கப்பட்டிருந்த அறேபியர் சமுதாயத்தில், இவ்வாறு தத்தெடுத்து வளர்க்கப்பட்ட மணமகன் சுவீகாரத் தந்தையாக இருந்து, பிதா வமிசவழியைப் பேணுவதோடு,

குடும்பப் பெயரையும் பாதுகாத்து வருவான் என்ற நோக்கத்திலேயே இந்த செமித்திய முறை அறேபியராலும் பின்பற்றப்பட்டது.

10. **பரிசோதனை உடலுறவு:**

'ஸிபாஹ்' (Sifah) என்று அழைக்கப்பட்ட இந்த விபசாரமும் சட்டரீதியான உடலுறவு முறையாக அக்கால அறேபியர் சமுதாயத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தது. சில வர்க்கத்தினர் தமது வர்க்கங்களில் இருந்த இளம் பெண்களோடு அவர்களைத் திருமணம் செய்ய விரும்பிய ஆண்கள் உடலுறவு கொள்ள அனுமதித்து வந்தனர். திருமணத்திற்கு முன்னால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பரிசோதனை உடலுறவின் போது அந்தச் சோடிகளுக்குப் பரஸ்பர திருப்தியும் பிடிப்பும் ஏற்பட்டுவிட்டால், அவர்கள் பின்னர் சட்டரீதியாக மணம் செய்து வைக்கப்பட்டனர். அவர்களுக்குள் பரஸ்பர திருப்தியும் பிடிப்பும் ஏற்படாவிட்டால், அவர்கள் திருமணம் செய்யாமலேயே பிரிந்து போயினர். இந்த உடலுறவில், ஆண் 'இன்கிஹ்னீ" (என்னை மணம் செய்து கொள்) என்று கேட்பதற்குப் பதிலாக 'ஸாபிஹ்னீ" (என்னோடு பரிசோதனை உடலுறவு கொள்) என்றே கேட்டுவந்தான்.[28]

11. **விலைக்கு வாங்கும் திருமணம்:**

பெண் ஒருத்தியைச் சாதாரணமான ஒரு 'மஹ்ர்' தொகையை அவளது தந்தைக்கு அல்லது பாதுகாவலனுக்குக் கொடுத்து மணம் செய்து கொள்ளுதலே அக்கால அறேபியரின் பொதுவான வழக்கமாக இருந்தது. மேலும், அவர்கள் தமது பெண்மக்களை தத்தமது வர்க்கங்களைச் சேர்ந்த ஆண்களுக்கே திருமணம் செய்து வைத்தனர். ஆயினும், சிலர் மிகக் கூடுதலான விலை தருபவர் எவராக இருந்தாலும், அவருக்குத் தமது புதல்வியரை மணம் செய்து கொடுத்தனர். தமது புதல்விகளின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டும் அதிக விலை கொடுத்து மணம் செய்து கொண்டவளை அவளது கணவன் மிகுந்த கரிசனையோடு கவனித்து வரலாம் என்ற நம்பிக்கையிலுமே அவர்கள் இவ்வாறு அதிக விலைக்குத் தம் புதல்விகளை மனைவிகளாக விற்று வந்தனர். இதனால், அவர்களது பாரம்பரிய வழக்கத்திற்கு மாறாகத் தம் பெண்களைச் சொந்த வர்க்கங்களுக்கு வெளியே உள்ளவர்களுக்குத் திருமணம் செய்துவைக்கும் புதிய

28. Lane's Arabic - English Lexicon , IV / 1369

பராம்பரியம் ஒன்று உருவானது.

12. **பல்புருட மணம்:**

இது பலதார மணத்தின் எதிர் வடிவம் ஆகும். இதில், பெண் ஒருத்தியே ஆண்கள் பலரை மணந்திருந்தாள். திருமண ஒப்பந்தம் இல்லாமலும் ஒருத்தி ஒரே நேரத்தில் பலரைத் தனது ஆசை நாயகர்களாகக் கொண்டிருந்தாள். அவள் கருவுற்றுக் குழந்தையைப் பெற்றெடுத்ததும் அங்க சாத்திரத்தில் தேர்ச்சியுடையோர் வரவழைக்கப்பட்டு, குழந்தையின் அங்க இலட்சணங்களைக் கொண்டு தந்தை யார் என்பதை அறிந்து கூறுமாறு கேட்கப்பட்டனர். அவ்வாறே அவர்களால் தந்தை எனப் பிரகடனப்படுத்தப்பட்ட நபர் அவர்களது தீர்ப்பை ஏற்றுக் குழந்தைக்குத் தந்தையானார். இத்தகைய பெண்களுக்கு அறேபியர் சமுதாயத்தில் போதிய மதிப்பு இருக்கவில்லை. அதனால், அவர்கள் ஒதுங்கியே வாழ்ந்து வந்தனர்.

13. **குழு உடலுறவு:**

இதுவும் ஒருவகைப் பல்புருட உடலுறவே ஆகும். பெண் ஒருத்தி பத்திற்கு உட்பட்ட எண்ணிக்கை கொண்ட ஆண்களின் குழு ஒன்றுடன் உடலுறவு கொள்ளும் இந்த வழக்கம் சில இடங்களில் காணப்பட்டது. இந்த உடலுறவால் கருவுற்று, அவளுக்குக் குழந்தை பிறந்ததும், அவள் அவர்கள் அனைவரையும் தனது இல்லத்திற்கு வரவழைத்து, அவர்களிடம் குழந்தை பிறந்த செய்தியைச் சொல்வாள். பின்னர், அவளே அவர்களுள் ஒருவரைச் சுட்டிக் காட்டி, அவரே அந்தக் குழந்தைக்குத் தந்தை என்று பிரகடனம் செய்வாள். அவளது இந்தத் தீர்மானத்தை எவராலும் தட்டமுடியவில்லை.

14. **பலதார மணம்:**

ஒருவர் பெண்கள் பலரை மணந்து, ஒரே நேரத்தில் அவர்கள் எல்லாருடனும் வாழும் வழக்கம் அறேபியரிடையே மிக ஆழமாக வேரூன்றி இருந்தது. ஒவ்வொரு அறேபியனும் தனது ஆற்றலுக்கு ஏற்றவாறு குறிப்பிட்ட எண்ணிக்கை இல்லாமல் பெண்கள் பலரைத் திருமணம் செய்திருந்தான்.[29]

29. அக்கால அறேபியாவில் இருந்த திருமண வகைகள் பற்றிய விரிவான தகவல்களுக்குப் பார்க்க: அலீ வாபி, அல் உஸ்ரா வல் முஜ்தம.:, பக்கம் 72-3, 78, 83-4, 88: ஜர்ஜி, அல் நுஸூமுல் இஸ்திமாஈயா வல் ஸியாஸிய்யா இன்த குதமா அல் அறப். பக்கம் 40-67:
Smith, W. Robertson: Kinship and Marrige in Early Arabia, pp.74-6, 80-7, 286:
Patai, Raphael: Sex and Family in the Bible and the Middle East, pp.98-103

பெண்களின் நிலைமை

இஸ்லாத்திற்கு முந்திய அறேபியரின் சமுதாயத்தில் பெண்களின் நிலை நிச்சயமற்றதாயும் வேதனைக்குரியதாயும் இருந்தது. அவர்களது சமுதாய அமைப்பின் பிதாமுதன்மைப்படிவம் பெண்களை ஆண்களுடைய உடைமைகளின் ஒரு பகுதி ஆக்கிற்று. நித்தியமான ஒரு வகை அடிமைத் தளையினால் பிணைக்கப்பட்டிருந்த அவர்கள் விலங்குகளாகவும் அசையும் சொத்துக்களாகவும் ஆண்களின் காமப்பசியைத் தணிக்கும் கருவியாகவுமே மதிக்கப்பட்டனர். அவர்களுக்கெனச் சிறப்புரிமை எதுவும் இருக்கவில்லை. பெண் குழந்தை பிறத்தல் குடும்பத்திற்கு மட்டுமன்றிச் சமுதாயத்திற்கும் ஏற்படும் பெரும் சாபக்கேடாகக் கருதப்பட்டது. அதனால், பிறந்த உடனேயே பெண் குழந்தைகள் உயிருடன் மண்ணில் புதைக்கப்பட்டன. பனூ தமீம், பனூ முழர் ஆகிய வர்க்கங்களைச் சேர்ந்த அறேபியரிடையே இந்தப் பழக்கம் அதிகமாகக் காணப்பட்டது. பெண்களுக்குத் தங்கள் பெற்றோரினதும் கணவர்களினதும் சொத்துக்களை மரபுரிமையாக அடையும் உரிமை இருக்கவில்லை. மாறாக, அவர்களே ஏனைய சொத்துக்களோடு மரபுரிமையின் ஒரு பகுதியாக ஆண்களால் அடையப்பட்டனர்.

இதுவே அறேபியாவில் வாழ்ந்த பெண்களின் பொதுவான நிலையாக இருந்த போதிலும்,சில சமயங்களில் அவர்கள் அவர்களது சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தும் செல்வாக்கும் பெற்று விளங்கினர். அவர்களுட் சிலர் தாமே தமது கணவர்களைத் தெரிவு செய்து கொள்ளவும் அதிருப்தி அல்லது பிணக்கு ஏற்பட்ட வேளைகளில் தமது சொந்தக் குடும்பத்தாரிடம் திரும்பிச் செல்லவும் வேண்டாதபோது விவாகவிலக்கு பெறவும் சில சமயங்களில் தாமே தம்மைத் திருமண பந்தத்தில் இணைத்துக் கொள்ளவும் உரிமை பெற்றிருந்தனர். பல சமயங்களில் அவர்கள் ஆண்களுக்குச் சமமானவர்களாயும் கூட்டாளிகளாயும் கருதப்பட்டனர். கவிஞர்களைக் கவிதை பாடவும் வீரர்களைப் போராடவும் அவர்கள் தூண்டிவந்தனர். பல சமயங்களில் ஆண்களின் பழிவாங்கும் உணர்வைத் தூண்டி அவர்களை வீராவேசம் கொள்ளச் செய்யும் பெரும் சக்தியாகப் பெண்களே இருந்தனர். சில சமயங்களில், பெண்களே துணிந்து, நேரிற் சென்று போராடித் தம்மையும் தம் வர்க்கத்தையும் காத்துக் கொள்ளும் அளவுக்கு வீரம் மிகுந்தவர்களாக விளங்கினர். இத்தகைய பெண்களுள் பாத்திமா பின்த் குர்ஸுப், புகைஹா, உம்ம் ஜமீலா முதலானோர் அறேபியரின் வீர வரலாற்றில் இடம்பிடித்துக் கொண்டவர்கள் ஆவர். அவர்களுட் சிலர் கவிதை இயற்றும் ஆற்றல் கைவரப்பெற்றவர்களாயும் நுண்ணறிவு படைத்தவர்களாயும் விளங்கினர். அறேபியர் சமுதாயத்தில் பெண்கள் மதிக்கப்பட்டனர் என்பதற்கு அறபுக் கவிஞர்களால் இயற்றப்பட்ட எந்தக் கவிதையும் பெண்களின் அழகையும் சுபாவங்களையும் மெச்சும் குறிப்புக்கள் இல்லாமல் இருக்கவில்லை என்ற உண்மை ஒன்றே போதிய சான்றாகும். ஆயினும், இந்த மதிப்பும

மரியாதையும் அறேபியர் சமுதாயத்தில் வாழ்ந்த எல்லாப் பெண்களுக்கும் கிடைத்து வந்தன என்று கூறிவிட முடியாது. உயர் குடிப்பிறப்பு, செல்வ மிகுதி, கவர்ச்சி முதலான தகைமகளைக் கொண்ட பெண்கள் மட்டுமே அவர்களால் மதிக்கப்பட்டுவந்தனர். அந்த மதிப்புககுக் கூட தசைக் கவர்ச்சியும் செல்வ வேட்கையுமே பின்னணிக்காரணங்களாக அமைந்திருந்தன.

அடிமைகளின் நிலை

இஸ்லாத்திற்கு முந்திய கால அறேபிய சமுதாயத்தில், அடிமை முறை பொதுவான ஒரு பழக்கமாக இருந்து வந்தது. அடிமைகள் போர்கள், கொள்ளை, விற்பனை ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டனர். போர்களில் கைதிகளாகப் பிடிக்கப்பட்டோர் பால், வயது, இன வேறுபாடின்றி அடிமைகளாக்கப்பட்டனர். கொள்ளைக்காரர்கள் சிறுவர் - சிறுமியரைப் பிடித்துச் சென்று, தூர இடங்களில் இருந்த அடிமைச் சந்தைகளில் விற்றனர். அறேபியாவில் இருந்த அடிமைகள் வெள்ளை நிறத்தவராயும் கறுப்பு இனத்தவராயும் காணப்பட்டனர். வெள்ளை நிற அடிமைகள் உரோம, பாரசீக நாடுகளையும் கறுப்பு இன அடிமைகள் ஆபிரிக்க நாடுகளையும் சேர்ந்தவர்கள். அறேபியாவின் எல்லா இடங்களிலும் அடிமை வர்த்தகம் சுதந்திரமாக நடைபெற்று வந்தது. அறேபிய நகரங்களுள் வர்த்தக முயற்சிகளுக்குக் கேந்திர நிலையமாக விளங்கிய மக்காவிலேயே மிக அதிகமான அடிமைகள் வாழ்ந்தனர். அங்கிருந்த உகாள், துல் மஜாஷ் ஆகிய சந்தைகளில் அடிமை விற்பனை கிரமமாக நடந்து வந்தது.

ஒவ்வொரு அறேபியனும் அடிமை வியாபாரத்திற்கு பழக்கப்பட்டவனாக இருந்து வந்தான். அடிமைகள் அவர்களது எசமானர்களால் மிக மோசமாகவும் மனித நேயமில்லாமலும் நடத்தப்பட்டனர். அவர்கள் மனித இனத்திலுள்ள மிகத் தாழ்ந்த சிருட்டிகளாகக் கருதப்பட்டனர். எசமானர்களுக்காக ஊழியம் செய்தல், போர்களிற் பங்குகொண்டு சண்டையிடுதல், பணம் சம்பாதித்துக் கொடுத்தல் முதலியன அவர்களது கடப்பாடுகளாக இருந்தன. அடிமைப் பெண்கள் எசமானரின் காமப்பசியைத் தணிப்பதற்காகவும் விபசாரத்தின் மூலம் பொருளீட்டிக் கொடுப்பதற்காகவும் குற்றேவல் செய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டனர். அடிமைகள் தங்களுக்குள் திருமண உறவை ஏற்படுத்திக் கொள்வதை எசமானர்கள் விரும்பவில்லை. அதனால், மண வாழ்க்கை அவர்களுக்கு எட்டாக் கனியாகவே இருந்தது. எத்தகைய நியாயமான காரணமும் இல்லாமல் அடிமைகளைக் கொல்வதற்குக் கூட அவர்களது எசமானர்களுக்கு உரிமை இருந்தது. அப்பாவி அடிமைகள் கூட அவர்களது எசமானர்களால் கொடூரமாக வதை செய்யப்பட்டனர். அறேபியரின் சமுதாயத்தில் அவர்களுக்கு எந்த உரிமையும் அளிக்கப்படவில்லை. சமகால உலகின் வேறு பகுதிகளில் வாழ்ந்த அடிமைகளின் நிலையை விடவும் அறேபியரின் சமுதாயத்தில் வாழ்ந்த அடிமைகளின் நிலை மிக மோசமானதாய் இருந்தது.

துன்னடத்தைகள்

மதுபானம் அருந்துதல், சூதாடுதல், கொள்ளையடித்தல் முதலிய துன்னடத்தைகள் இஸ்லாத்திற்கு முந்திய கால அறேபியருடைய சமூக வாழ்வின் பிரதான குணவியல்புகளாக இருந்தன. அறபு நாடெங்கும் மதுக்கடைகளும் மதுபானச் சாலைகளும் நிறைந்து காணப்பட்டன. அவற்றின் எண்ணிக்கை அறேபியர் வழிபட்டு வந்த சிலைகளின் எண்ணிக்கையை விடவும் அதிகமாக இருந்தது. அவற்றில் இரவு - பகல் என்றில்லாமல் வியாபாரம் நடைபெற்று வந்தது. மதுக் கடைகளை மற்றக் கடைகளிலிருந்து வேறுபடுத்திக்காட்ட விசேடமான கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மதுபானங்களுக்கு அவற்றின் உற்பத்தி இடம், மதுசாரச் செறிவு விகிதம், மூலப் பொருட்கள் (பழங்கள்), தாக்க திறன், தூய்மை, நிறம், சுவை, தயாரிக்கப்படும் விதம் முதலான தன்மைகளுக்கு ஏற்ப நூற்றுக்கணக்கான பெயர்களை அறேபியர் சூட்டி இருந்தனர். மதுச்சாடிகள் இல்லாத எந்த வீடும் அங்கு இருக்கவில்லை. ஒவ்வொரு அறேபியனும் மதுவுக்கு அடிமையாகி இருந்தான். அதிகமாகக் குடித்தலும் மதுபானங்களை நண்பர்களுக்குப் பரிமாறலும் மாண்பு, வீரம், ஒழுக்கம், பெருந்தன்மை முதலான அவர்களது பண்புகளின் சின்னங்களாக இருந்தன. மதுபானம் அருந்துதலைக் கைவிட்ட தமது சொந்தக் குலத்தைச் சேர்ந்த மக்களைக் கூட அவர்கள் நிராகரித்தனர். 'பிஜார்' சண்டைகளின் காரணகர்த்தாவான பர்ராழ் பின் கைஸ் என்பார் மது அருந்துதலையும் கற்பழித்தலையும் கைவிட்டமைக்காக அவரது சொந்தக் குலமான ழம்ரா வர்க்கத்தாலும் பின்னர் அவர் அபயம் தேடிய மற்றொரு வர்க்கத்தாலும் துரத்தப்பட்டார்.[30]

சூதாட்டமும் அவர்களால் விருப்புக்குரிய ஒரு பொழுதுபோக்காகவும் தொழிலாகவும் கருதப்பட்டது. பணத்தையும் ஏனைய பண்டங்களையும் மட்டு மன்றித் தங்கள் மனைவிகளையும் பணயமாக வைத்து அவர்கள் சூதாடினர். கொள்ளையடித்தலும் அவர்களால் விழுமிய தொழிலாகவும் ஆண்மையின் அடையாளமாகவும் கருதப்பட்டது. அறபு நாடோடிகளைப் பொறுத்த வரை, கொள்ளையடித்தலே அவர்களது பிரதான தொழிலாக இருந்தது. உடைமை களை மட்டுமன்றிக் குழந்தைகளைக் கூட அவர்கள் அபகரித்துச் சென்று, அடிமைச் சந்தைகளில் விற்றனர். முழுச் சமுதாயமும் மூடநம்பிக்கை, துன்ன டத்தை, மிலேச்சம் ஆகியவற்றின் சகதியில் மூழ்கிக் கிடந்தது. குறிகேளாமலும் சகுனம் பார்க்காமலும் எந்த வேலையையும் மேற்கொள்ளாத அளவுக்கு அவர்கள் மூடநம்பிக்கை உடையவர்களாக இருந்தனர். அம்புகள், எதிர்வு காண்டல், மாந்திரீகம், பறவைகள், பாசிமணிகள் முதலியவற்றைக் கொண்டும் மறைவானவற்றைப் பற்றி அறிவுடையவை என்று அவர்களால் கருதப்பட்ட பிற பொருள்களைக் கொண்டும் குறிபார்த்தே அவர்கள் தமது அலுவல்களை ஆரம்பித்தனர்.

30. S. Khuda Bukhsh, Contribution to the History of Islamic Civilization, Vol. I p. 168

விழுமிய பண்புகள்

இத்தகைய ஒழுக்க சீர்கேட்டிற்கிடையிலும் அறியாமைக் கால அறேபியர் சிறந்த மொழி ஆற்றல், விருந்தோம்பல், வீரம் முதலான விழுமிய பண்புகளின் சொந்தக்காரர்களாயும் விளங்கினர். அறபு மொழியில் விழுமிய ஆற்றல் பெற்றிருந்த அவர்களுட் பலர் நல்ல மேடைப் பேச்சாளர்களாக இருந்தனர். அவர்களது பேச்சுமொழி திருத்தமும் தூய்மையும் உடையதாய் இருந்தது. விருந்தோம்பலும் அறேபியரின் குறிப்பிடத்தகுந்த குணவியல்பாக இருந்தது. அது அவர்களது இயற்கைக் குணங்களுள் ஒன்றாகவும் விளங்கியது. 'நீ பட்டினி கிடந்தாலும் உனது விருந்தினனுக்கு உணவளி' என்பது விருந்தோம்பலைப் பொறுத்தவரை அவர்களது பூட்கையாக இருந்தது. தங்கள் குழந்தைகளை விடவும் அதிகமாக நேசித்து வளர்த்த ஒட்டகைகளைக் கூட அவர்கள் தங்கள் விருந்தினர் களுக்காகக் கொல்வதற்கு ஆயத்தமாக இருந்தனர். இக்கால அறேபியாகூட விருந்தோம்பும் பண்பில் இணையற்றவர்களாகவே காணப்படுகின்றனர். அறேபியரைப் போல விருந்தோம்பலுக்குப் புகழ்பெற்ற வேறெந்த மக்கள் கூட்டத்தையும் உலகிலே பார்க்கமுடியாது. ஸ்டான்லீ லேன் பூல் என்பார் கூறுவது போல, ''அறேபியரின் விருந்தோம்பல் ஒரு பழமொழியாக இருக்கிறது. ஆனால், அது பல மொழிகளைப் போலன்றி, நிச்சயமான ஒரு உண்மை ஆகும்.''[31]

வீரமும் சுதந்திர காதலும் அறேபியரின் விழுமிய இயல்புகளாக இருந்தன. சுதந்திர உணர்வையும் வீரத்தையும் அவர்கள் வெகுவாகக் கண்ணியப்படுத்தினர். சுதந்திரத்திற்காக அவர்கள் ஆவி உட்பட அனைத்தை யும் தியாகம் செய்ய ஆயத்தமாக இருந்தனர். பல சமயங்களில், அவர்களுள் ஒரு சிறிய குழுவினரே சக்தி மிகுந்த உரோமர்களுக்கும் ஆற்றல் வாய்ந்த படையெடுப்பாளர்களுக்கும் எதிராகத் துணிச்சலோடு போரிட்டு, அவர்களை அறேபியாவிலிருந்து துரத்தினர்.

மேலும், போர்களில் வீரத்தைக் காட்டுதல், ஆபத்துக்களில் சகிப்புத்தன்மையோடிருத்தல், நண்பர்களுக்கு விசுவாசமாக இருத்தல், வாக்குறுதிகளை நிறைவேறுதல், செல்வத்தைத் தாராளமாகச் செலவிடுதல், பலவீனரைப் பாதுகாத்தல், பலமுடையோர்க்குப் பணியமறுத்தல், யாத்திரிகர்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் உதவுதல், தன்மதிப்புணர்வு, பழிவாங்க அஞ்சாமை முதலியனவும் அறேபியரின் இயற்கையான இயல்புகளாக இருந்தன. இவை 'முரூஆ' அல்லது 'முரூவா' (ஆண்மை) என்று அழைக்கப்பட்டன.

நண்பர்களுக்கு நண்பராயும் பகைவர்க்குப் பகைவராயும் வாழ்ந்த அறேபியரின் பழிவாங்கும் சுபாவம் வரலாற்றுப் பிரசித்தம் வாய்ந்தது. நண்பர்களுக்காகத் தம் இன்னுயிரைக் கூட அர்ப்பணிக்கச் சித்தமாக இருந்த அவர்கள் பகைவர்களை மன்னிக்க எந்தச் சமயத்திலும் ஆயத்தமாக இருக்கவில்லை. அடித்தவனைத் திருப்பி அடிக்காதவன் கோழை என்பது

31.S. Lane Poole, The Table - Talk of Prophet Muhammad, p.7

அவர்களின் கருத்தாக இருந்தது. கௌரவமான எந்த மனிதனும் பகைவனை மன்னிக்கவோ பழிவாங்கத் தவறவோ மாட்டான் என்று அவர்கள் கருதினர். பழிவாங்கல் பெரும்பாலும் அவர்களது உடல் ரீதியான ஒரு தேவையாக இருந்தது. நிறைவேற்றப்படாத சமயங்களில் அது அவர்களது தூக்கத்தையும் பசியையும் தேக நலத்தையும் பறித்துக் கொண்டது. குருதியைத் தவிர வேறு எதனாலும் தணிக்கமுடியாத ஒரு துன்புறுத்தும் தாகமாக இருந்த அவர்களது பழிவாங்கும் இயல்பு பைத்தியம் என்று வருணிக்கும் அளவுக்கு ஒரு கௌரவ நோயாக இருந்தது.பல சமயங்களில் பிரச்சினையை முடித்து வைக்கும் காரணியாக அமைந்த அவர்களது இந்தச் சுபாவம் சில சமயங்களில் நீடித்த போர்களின் ஆரம்பமாகவும் இருந்தது. பழிக்குப்பழி வாங்கும் விடயத்தில், ஒரு குலத்தின் உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மனிதனாக இணைந்து செயற்பட்டனர். இவ்வாறு, அறியாமைக்கால அறேபியரின் சமுதாய நிலைமை அமைந்திருந்தது.

பொருளாதார நிலை

அறியாமைக்கால அறேபியாவில், ஏக காலத்தில் பொருளாதாரச் செழிப்பும் பொருளாதார மந்தமும் காணப்பட்டன. அறேபியாவின் வட பகுதியில் பொருளாதார மந்தம் நிலவிய போது, அறேபியாவின் தென் பகுதியில் பொருளாதாரச் செழிப்புக் காணப்பட்டது. ஆயினும், சமகால உலகின் ஏனைய நாடுகளில் நிலவிய பொருளாதார நிலையை விடவும் முழு அறேபியாவினதும் பொருளாதார நிலை மிக வறியதாகவே இருந்தது. ஏனெனில், அறேபிய தீபகற்பம் பொருளாதார விருத்திக்குப் பொருத்தமற்ற வரண்ட மணற்பாங்கான பாலை நிலமாகவே இருந்தது. அங்கே பொருளாதார விருத்திக்குத் தேவை யான இயற்கை வளங்களோ வாய்ப்புக்களோ இருக்கவில்லை.

அறேபியாவின் வட பகுதி, அறேபியாவின் தென் பகுதியை விடவும் புவியியல் ரீதியில் முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது.அங்கு எத்தகைய பொதுவான பொருளாதார விருத்தியும் காணப்படவில்லை. நீர்ப்பாசனத்துக்குப்

வட அறேபியா

போதுமான மழை வீழ்ச்சியோ நீரைப் பெறுவதற்குரிய வேறு வசதிகளோ இருக்கவில்லை. ஆங்காங்கே சில சிற்றருவிகளே அரிதாகக் காணப்பட்டன. சில கரையோர பிரதேசங்கள் மட்டும் மிகக் குறைந்த மழை வீழ்ச்சியை ஒழுங்காகப் பெற்று வந்தன. அதனால், வட பகுதியைச் சேர்ந்த அறேபியர் வேளாண்மை செய்வதில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள இயலாதவர்களாய் இருந்தனர். கப்பலோட்டத்திற்கு வசதியான கால்வாய்களோ பெரிய ஆறுகளோ வட அறேபியாவில் இல்லாமையால், வளமான வாணிபத்திற்கும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் கூட அங்கே வாய்ப்பில்லாமற் போயிற்று.

அதேசமயம், அறேபியாவின் தென் பகுதி கணிசமான வளமுடையதாய்

விளங்கியது. அங்கே ஒழுங்கான மழை வீழ்ச்சி கிடைத்துவந்தமையால், அந்தப் பிரதேசத்தின் மண், வளம்மிக்கதாயக் காணப்பட்டது. ஹிஜாஷ் மாகாணத்திற்குத் தெற்கே இருந்த பிரதேசம் பேரீத்த மரச் செய்கைக்கு

தென் அறேபியா

வசதியானதாயும் பிரபல்யம் பெற்றதாயும் இருந்தது. உம்மான் பிரதேசத்தில் நெல் பயிரிடப்பட்டது. யமன் மாகாணம் வாற்கோதுமை, கோப்பி ஆகிய பயிர்ச் செய்கைகளுக்குப் பொருத்தமான பிரதேசமாக இருந்தது. சில பகுதிகளில் ஆப்பிள், ஆப்ரிகொட், திராட்சை, தோடை, எலுமிச்சை, கரும்பு, வாழை முதலான பயிர்கள் பெருமளவில் பயிரிடப்பட்டன. மணப் பொருள்களும் தென்அறேபியாவில் உற்பத்தி செய்யப்பட்டன. சர்வதேச வர்த்தகத்திலும் தென்அறேபியர் கொடிகட்டிப் பறந்தனர்.

இஸ்லாத்திற்கு முந்திய கால அறபியாவில் வாழ்ந்த மக்களைப் பொருளாதார அடிப்படையில் பணக்கார வியாபாரிகள், அவர்களுடைய வேலையாள்கள், நாடோடி மந்தை மேய்ப்பாளர்கள், விவசாயிகள் அல்லது

செல்வர்கள்

கைவினைஞர்கள் என நால்வகையினராகப் பிரிக்கலாம். பணக்கார வியாபாரிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. அவர்கள் உள்நாட்டு - வெளிநாட்டு வர்த்தகத்திலும் பணம் கடன் கொடுக்கும் வியாபாரத்திலும் ஈடுபட்டு வந்தனர். அவர்கள் தேவையுடைய மக்களுக்கு மிகக் கூடிய வட்டி விகிதத்தில் பணத்தைக் கடனாகக் கொடுத்துப் பெரும் செல்வம் சேர்த்தனர். கடன் நியதிகள் அனுகூலமானவையாய் இருக்கவில்லை. கடன் வாங்கியவன் கடனை வட்டியோடு உரிய தவணையில் திருப்பிச் செலுத்தத் தவறியபோது, அவனது உடைமைகள் கடன் கொடுத்தவனால் பறிமுதல் செய்யப்பட்டன. சில சமயங்களில், பெற்ற பணத்தைத் திருப்பிச் செலுத்தத் தவறிய கடனாளி அவனது குடும்பத்தாரோடு கடன் கொடுத்தவனால் அடிமையாக்கப்பட்டான்.

வேலையாள்கள், பணக்கார வியாபாரிகளுக்கு ஊழியம் செய்வதற்காக அவர்களால் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். இவர்களது எண்ணிக்கையும் செல்வர்களின் எண்ணிக்கையைப் போலவே குறைவானதாய் இருந்தது.

வேலையாள்கள்

இவர்கள் பணக்கார வியாபாரிகளின் வர்த்தக நடவடிக்கைகளிலும் பிற அலுவல்களிலும் அவர்களுக்கு உதவினர். இவர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்பட்டது. இவர்கள் தொழில்கொள்வோரால் நன்கு நடத்தப்பட்டனர்: நல்ல வருமானமும் ஈட்டி வந்தனர்.

நாடோடி மந்தை மேய்ப்பாளர் என்ற வகுப்பார் பொருளாதாரத்தைப் பொறுத்த வரை முழு இருட்டிலேயே வாழ்ந்தனர். இவர்களது வாழ்க்கை வழி முழுக்க முழுக்க கால் நடைகளிலேயே தங்கியிருந்தது. இவர்களுக்குத் தங்களது வாழ்க்கை வழியை ஈட்டிக் கொள்வதற்கு நிரந்தரமான - இலகுவான-

வழி எதுவும் இருக்கவில்லை. கொள்ளையடித்தல், வழிப்பறி செய்தல், சூதாடுதல், கால்நடை வளர்ப்பு, வேட்டையாடுதல் முதலியனவே இவர்களது சம்பாத்தியத்திற்குரிய வழிகளாக இருந்தன. ஒட்டகம் இவர்களது விருப்புக்குரிய

மந்தை மேய்ப்பாளர்

விலங்காக இருந்தது. பாலைவன வாழ்க்கைக்கு அதுவே மிகப் பொருத்தமான வாகனமாக அமைந்தது. இவர்களைப் பொறுத்தவரை, ஒட்டகம் இல்லாத வாழ்க்கை ஒரு சூன்யமாகவே இருந்தது. அது இவர்களது உணவாகவும் ஏற்றி இறக்கும் வாகனமாகவும் மாற்று ஊடகமாகவும் மணமகளின் சீதனமாகவும் இரத்தத்தின் விலையாகவும் சூதாட்டத்தில் ஈட்டப்படும் இலாபமாகவும் இருந்தது. பாலைவனத்தில் துணையாக நடக்கும் நண்பனாகவும் நாடோடிகளின் வளர்ப்புப் பெற்றோராகவும் ஒட்டகமே விளங்கியது. நாடோடிகள் நீருக்குப் பதிலாக அதன் பாலை அருந்தினர்: அதன் இறைச்சியை விருந்தாகப் படைத்தனர்: அதன் தோலை ஆடையாக அணிந்தனர்: அதன் மயிர்களால் கூடாரம் செய்தனர். அதன் சாணத்தை எரிபொருளாகவும் அதன் மூத்திரத்தை மருந்தாகவும் பயன்படுத்தினர். 'பாலைவனக் கப்பல்' என வருணிக்கப்பட்ட ஒட்டகையோடு நாடோடி அறேபியரின் வாழ்க்கை பின்னிப் பிணைந்திருந்தது. ஸ்பிரங்கர் என்பாரின் வார்த்தைகளிற் சொல்வதாயின், நாடோடி மந்தை மேய்ப்பாளர்கள் 'ஒட்டகை யின் ஒட்டுண்ணி'களாக இருந்தனர். இன்றைய அறபு நாடோடிகள் கூட 'அஹ்லுல் பஈர்' (ஒட்டகையை உடையவர்கள்) என்று தம்மை அழைத்துக் கொள்வதிலேயே பெருமை அடைகின்றனர். மேலும், நாடோடி மந்தை மேய்ப்பாளர்களின் பொருளாதார நிலை மிக மோசமாக இருந்தது. இவர்களது வறுமை காரணமாக, தமக்குச் சமமானவர்களைத் திருமணம் செய்வதற்குக் கூட இவர்களால் முடியவில்லை. அதனால், பலர் அடிமைப் பெண்களையே திருமணம் செய்தனர்.

விவசாயிகளும் கைவினைஞர்களும் சுமாரானதும் நிரந்தரமானதுமான பொருளாதார நிலையை அடைந்திருந்தனர். இவர்களது வாழ்க்கைத்தரம் ஓரளவு மேம்பட்டதாக இருந்தது. விவசாயிகள் நல்ல மண்வளமுள்ள

கைவினைஞனும் விவசாயியும்

பகுதிகளிலும் கைவினைஞர்கள் விருத்தியடைந்த நகரப்பகுதிகளிலும் நிரந்தரமாகக் குடியேறி வாழ்ந்து வந்தனர். விவசாயிகள் பசுமையான நிலங்களில் வேளாண்மை செய்வதில் ஈடுபட்டிருந்த வேளையில், கைவினைஞர்கள் நெசவு, கொல்ல வேலை, மட்பாண்டங்கள் செய்தல், ஆபரணங்கள் தயாரித்தல் முதலான கைத்தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். தத்தமது தொழில்கள் மூலம் பெரும் வருமானத்தை ஈட்டி வந்த இவர்கள் சமுதாயத்தில் செல்வர்களுக்கு அடுத்த ஸ்தானத்தை வகித்தனர்.

தென் அறேபியாவில் ஏற்பட்ட வர்த்தக வீழ்ச்சியின் பின்னர், வடஅறேபியர் - குறிப்பாக குறைஷ் குலத்தவர் - வர்த்தகத் துறையில்

பிரவேசித்து, கணிசமான விருத்தியும் வளமும் பெற்றனர். ஹிஜாஷ் மாகாணமும் அங்குள்ள மக்கா நகரமும் வர்த்தகக் கேந்திர நிலையமாய் விளங்கலாயின. யமன், அபீசீனியா முதலான பகுதிகளிலிருந்து வர்த்தகப் பொருட்களை

வர்த்தக முயற்சி

மக்காவில் குறைஷியர் பெற்று, வடக்கே இருந்த சிரியா, எகிப்து, பாரசீகம் முதலான நாடுகளுக்கு அவற்றைத் தம் பொறுப்பில் எடுத்துச் சென்று வியாபாரம் செய்தனர். சில வேளைகளில், மக்கா வர்த்தகர்கள் யமனுக்குச் சென்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டனர். ஆயினும், அவர்கள் மக்காவுக்குக் கொண்டுவரப்பட்ட வணிகப் பொருட்களைப் பெற்று, வடக்கே வர்த்தகப் பயணங்கள் செய்வதிலேயே தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனர். மக்காவிலிருந்து வடக்கே சென்ற வர்த்தகப் பாதை மக்காவாசிகளின் ஏகவுரிமையிலேயே இருந்தது. வணிகப்பொருள்கள் யாவும் மக்கா வர்த்தகர்களின் கரங்களுடாகச் செல்ல வேண்டிய நிலையே உருவாகி இருந்தது. பிறருடைய வர்த்தகப் பொருட்களை வெளியே கொண்டுசென்று விற்பனை செய்வதற்காகப் பொருள்களின் பெறுமதியைப் போன்ற தொகை கூலியாக எதிர்பார்க்கப்பட்டது. பாரசீக விரிகுடாக் கரைகளில் இறக்கப்பட்ட இந்திய வர்த்தகப் பொருட்கள்கூடப் பல சமயங்களில் மக்காவுக்குக் கொண்டு வரப்பட்டு, அங்கிருந்தே கிரேக்க - உரோம நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இத்தகைய வர்த்தக முயற்சிகளால் மக்கா மிக விரைவிலேயே பல்வேறு தூர இடங்களுக்கெல்லாம் பணக் கொடுப்பனவுகள் செய்யும் வங்கி நிலையமாகவும் சர்வதேச வர்த்தகத்தின் கேந்திரத் தலமாகவும் மாறிற்று.

மற்றெல்லாக் குலத்தவர்களை விடவும் குறைஷ் குலத்தாரின் கைகளே வர்த்தகத் துறையில் ஓங்கி இருந்தன. இவர்களுக்கு அறபு நாட்டில் மட்டுமன்றித் தூர நாடுகளிலும் நல்ல மதிப்பும் மரியாதையும் இருந்தன. அதனால், மற்றக் குலத்தவர்களும் தமது வணிகப் பொருள்களை இவர்களிடமே வியாபாரத்திற்காக ஒப்படைத்தனர். பெரும்பாலும், குளிர்காலத்திலும் கோடைகாலத்திலுமாக ஆண்டுக்கு இருமுறை வர்த்தகப் பயணங்களை மேற்கொண்ட இவர்கள் பிறரின் பொருள்களை மட்டுமன்றித் தமது சொந்தப்பொருள்களையும் வர்த்தகத்திற்காக எடுத்துச் சென்றனர். 'காபிலா' என்று அழைக்கப்பட்ட வணிகர் குழுக்களின் வர்த்தகப் பயணங்கள் பரும்படியாக மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு பயணத்திலும் வணிகப் பொருள்களை ஏற்றி இறக்க ஆயிரக்கணக்கான ஒட்டகைகள் பயன்படுத்தப்பட்டன. ஸ்ட்ராபோ என்ற கிரேக்க வரலாற்றாசிரியர், பீட்ரா நகரத்தில் தாம் கண்ட வணிகர் குழு ஒரு படையை ஒத்திருந்தது என்றுகுறிப்பிட்டிருக்கிறார். அறபு வரலாற்றாசிரியரான அல் தபரீயும் 2500 ஒட்டகைகளைக் கொண்ட ஒரு வணிகர் குழுவைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[32]

32. *De Lacy O'Leary, op. cit. p.185*

இந்த வர்த்தகக் குழுக்கள் பெரும் பாதுகாப்புடன் தமது பயணங்களை மேற்கொண்டன. வர்த்தகக் குழுவுக்குப் பாதுகாப்பு வழங்க 'அஹபிஷ்' என்று அழைக்கப்பட்ட அபீசீனியக் கூலிப்படை ஒன்றை அவர்கள் நியமித்திருந்தனர். போர் முனைக்குச் செல்லும் படையணிகளைப் போலபயணம் மேற்கொண்ட இந்த வணிகர் குழுக்கள் தமது பயணங்களின் போது 'தலீல்' என்று அழைக்கப்பட்ட வழிகாட்டிகள், 'கபிர்' என்று அழைக்கப்பட்ட காவற்படை வீரர் முதலானோரின் சேவைகளையும் பெற்றுவந்தன.

இவ்வாறு, அறேபியாவின் பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வு காணப்பட்ட போதிலும், சமகால உலகில் ஓரளவு விருத்தி பெற்று விளங்கிய பிறநாடுகளின் பொருளாதார நிலையை விடவும் அறியாமைக்கால அறேபியாவின் பொருளாதார நிலை மிகத் தாழ்ந்ததாகவே இருந்தது. இத்தகைய ஒரு பொருளாதார மந்தம் அறேபியாவில் காணப்பட்டமைக்குப் பின்வருவனவற்றைக் காரணங்களாகக் குறிப்பிடலாம்:

1 அறேபியாவின் மண் விவசாயத்திற்குப் பொருத்தமற்றதாக இருந்தது. அங்கே போதிய மழை வீழ்ச்சியோ நீர்ப்பாசனத்துக்குரிய வேறு வசதிகளோ இருக்கவில்லை.

2. அறேபியாவின் பெரும்பகுதி வரண்ட பாலைநிலமாக இருந்தமையால், கைத்தொழில் முயற்சிகளுக்கு இன்றியமையாத மூலவளங்கள் அங்கு கிடைக்கவில்லை. நல்ல மூலதனம், கைத்தொழில்கள் பற்றிய அறிவு என்பனவும் அறேபியரிடம் போதிய அளவில் இருக்கவில்லை.

3. வெளிநாடுகளுடன் ஒழுங்கான வர்த்தகத் தொடர்புகளைப் பேணுவதற்குத் தேவையான வசதிகளும் போதிய அளவில் அறேபியாவில் இருக்கவில்லை. முறையான போக்குவரத்தை மேற்கொள்வதற்கான நெடுஞ்சாலைகளோ கால்வாய்களோ அங்கு அமைக்கப்பட்டிருக்கவில்லை.

4. பண்டைய அறபு சமுதாயத்தினர் மற்ற சமூகங்களைச் சேர்ந்த மக்களை விடவும் இயல்பிலும் பழக்க வழக்கங்களிலும் வேறுபட்டவர்களாக இருந்தனர். பெரும்பான்மையான அறேபியர் வெளிநாடுகளோடு எத்தகைய தொடர்பும் அற்றவர்களாகவே வாழ்ந்தனர். இத்தகைய காரணங்களால், அக்கால அறேபியர் வாழ்வில் பொருளாதார வளம் காணப்படவில்லை.

கலாசார நிலை

இஸ்லாத்திற்கு முந்திய கால அறேபியாவில், அறேபியரது வாழ்வின் ஏனைய அம்சங்களை விடவும் அவர்களது கலாச்சார நிலை ஓரளவு மேம்பட்டதாக இருந்தது என்றே கூறவேண்டும். அறேபியா அறியாமையின் முழு ஆதிக்கத்தின் கீழ் இருந்த போதிலும், அறேபியரிடையே எழுத, வாசிக்கத் தெரிந்த சிலர் இருந்தனர். இஸ்லாம் தோன்றுவதற்குச் சற்று முன்னர் உள்ள காலப் பகுதியில், மக்காவில் மட்டும் எழுத, வாசிக்கத் தெரிந்தோர் பதினேழு பேர் இருந்தனர். பண்பாட்டுவிருத்தி அடைந்தோரின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும்,அவர்களின் அறிவும் இரசனையும் ஏழ்மைப்பட்டு இருக்கவில்லை. பண்பாட்டு விருத்தியும் கல்வியறிவும் பெற்றிருந்தோரை மதிக்கும் பண்பும் அந்த அறேபியரிடத்தில் இருந்தது.

கவிதை

அறேபியர் தமது கலாசார வாழ்வில், கவிதையின்பால் பெருவேட்கையும் உளச்சார்பும் கொண்டிருந்தனர். கவிதை அவர்களது பிரதான இலக்கிய ஊடகமாக மட்டுமன்றி, அவர்களது சமுக, கலாசார, அறிவியல் நிலைமைகளைப் பிரதிபலிக்கும் ஓர் ஆடியாகவும் இருந்தது. அவர்களது சமுதாயத்தில், கவிஞனுக்கு மிக உன்னதமான இடம் அளிக்கப்பட்டிருந்தது. அவன் மிகுந்த சிறப்புக்கும் புகழுக்கும் உரிய ஒரு மனிதனாக விளங்கினான். தான் விரும்பும் திசையில் மக்களின் பற்றுணர்வை அசைத்துவிடும் ஆற்றல்வாய்ந்தவனாகவும் அவன் இருந்தான். கவிஞனில் ஆவி குடிகொண்டிருக்கிறது என்று மக்கள் நம்பினர். அதனால், அவர்கள் கவிஞனின் ஆற்றல், அழகிய கவிதைகள் ஆகியவற்றிற்காக அவனுக்கு மதிப்பளித்து வந்த அதேவேளையில்,அவனை அஞ்சியவர்களாகவும் இருந்தனர். ''அறேபியரின் வர்க்கம் ஒன்றில் கவிஞன் ஒருவன் தோன்றினால், நேச வர்க்கங்களைச் சேர்ந்த மக்கள் அந்த வர்க்கத்தாரிடம் சென்று, அவர்களுக்கு நல்லதிர்ஷ்டம் ஏற்பட வாழ்த்துவார்கள்: விருந்து ஏற்பாடுகள் நடைபெறும்: அந்த வர்க்கத்தின் பெண்கள் கூட்டமாகக் கூடி, திருமண விழாக்களில் செய்வதைப் போல வீணை மீட்டுவார்கள்: ஆண்களும் சிறுவர்களும் ஒருவரை மற்றவர் வாழ்த்திக் கொள்வார்கள். இத்தனையும் அவர்கள் அனைவரினதும் கௌரவத்தைப் பாதுகாக்கும் அரணாகவும் அவர்களது நற்பெயரிலிருந்து அவமானத்தை அகற்றும் ஆயுதமாகவும் அவர்களது புகழார்ந்த செயல்களை நினைவுபடுத்தி, அவர்களது கீர்த்தியை எக்காலமும் நிலைநிறுத்தும் கருவியாகவும் கவிஞன் இருக்கிறான் என்பதற்காகவே நிகழும்.''[33]

33. இப்ன் ரஷீக், அல் உம்தா, பாகம் i பக்கம் 65

ஒவ்வொரு வர்க்கத்திற்கும் அதன் வீர நாயகர்களின் கீர்த்தியைப் பாடவும் அதனோடு பகை கொண்ட வர்க்கங்களுக்கு எதிராக வசைக் கவிதைகள் இயற்றவும் சொந்தமாகக் கவிஞர்கள் இருந்தனர். ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்துடன் கவிதையில் மேலாதிக்கம் பெறுவதற்காகப் போட்டியிட்டது. கவிஞன், அறேபியர்களால் அவர்களது கண்ணியத்தைக் காப்பவனாகவும் அவர்களது நற்பெயருக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்கும் ஆயுதமாகவும் அவர்களது புகழார்ந்த செயல்களை அழியாமற் பாதுகாக்கும் கருவியாகவும் அவர்களது பலவீனமுற்ற இதயத்தையும் நரம்புகளையும் தூண்டி உற்சாகமூட்டும் ஔடதமாகவும் அவர்களுக்கு ஏற்பட்ட இழிவைப் போக்கி, அவர்களது பெருமையைச் சமுதாயத்தில் நிலைநிறுத்தும் தெய்வ தூதனாகவும் கருதப்பட்டான். அவன் அவனது வர்க்கத்தின் அசரீரி வாக்காகவும் இருந்தான். இன்று கூட கவிஞன் அறேபியரின் சமுதாயத்தில், மிகவும் மதிப்பு வாய்ந்த இடத்தை வகித்து வருகிறான். திருமணம் முதலான விழாக்களில, அந்தச் சந்தர்ப்பங்களைக் கௌரவிக்கும் விதத்தில், கவிதையில் பேசுவதற்கு கவிஞனின் தேவை மிக வேண்டிய ஒன்றாக உணரப்பட்டிருக்கிறது.

இஸ்லாத்திற்கு முற்பட்ட காலக் கவிதையை முற்றுப் பெறாதது, முற்றுப்பெற்றது என இரு வகைப்படுத்தலாம். முதல் வகைக் கவிதையை ஸஜ்.ஃ., ரஜஷ் என இருவகையாகப் பிரிப்பர். 'ஸஜ்.ஃ.' செய்யுள் அமைப்பும்

'ஸஜ்ஃ' வும் 'ரஜ' ஷும்

ஒழுங்கான சந்தமும் பெறாத - எதுகை மோனையும் மூன்று நான்கு வார்த்தைகளை உள்ளடக்கிய சிறு சிறு வசனங்களையும் - கொண்ட ஒருவகைச் செயற்கையான உரைநடை ஆகும். இது குறிசொல்வோரின் மொழிநடையை ஒத்தது. இந்த நடையையே அவர்கள் தமது மந்திர உச்சாரனங்களிலும் தீர்க்கதரிசன மொழிகளிலும் பயன்படுத்தினர். இதனை அறபுச் செய்யுள் வடிவ வளர்ச்சியின் முதற்கட்டமாகக் குறிப்படலாம். இந்த வகைக் கவிதை செய்யுள் அமைப்புப் பெறாத போதிலும், இசையோடு பாடக் கூடியதாய் அமைந்திருந்தது. அக்கால அறேபியர், நபி (ஸல்) அவர்களைக் கவிஞர் என்று குறிப்பிட்டமைக்குக் காரணம் இந்த ஸஜ்.ஃ. வடிவில் அமைந்திருந்த ஆரம்பகால அல் குர்ஆன் வசனங்களை அந்த மக்களுக்கு ஓதிக் காட்டியமையே ஆகும்.

'ரஜஷ்' என்பது 'ஸஜ்.ஃ.' கவிதையின் திருத்திய வடிவம் ஆகும். எதுகை, மோனை கொண்ட இதன் அடிகள் சீர், தளை ஒழுங்கைப் பெற்றவையாயும் தற்காலிகமான மனவெழுச்சிகளை வெளிப்படுத்தப் பொருத்த மானவையாயும் அமைந்திருந்தன. இந்தச் செய்யுள் வடிவம் செவிக்கு இனியதாயும் உள்ளத்தில் படியத்தக்கதாயும் இருந்தது. அறேபியர் தமது அன்றாட வேலைகளின் போதும் இந்த வகைக் கவிதைகளைப் பாடி வந்தனர்.

இஸ்லாத்திற்கு முந்திய கால அறேபியரின் 'முற்றுப் பெற்ற' கவிதைகள்

'முஅல்லகாத்', 'முபழ்ழலியாத், 'ஹமாஸா' முதலான அறபுக் கவிதைத் தொகுதிகளில் பாதுகாக்கப்பட்டி ருக்கின்றன. 'கஸீதா'க்களைக் கொண்ட இந்த வகைக் கவிதை பெரும்பாலும் 'அய்யாமுல் அறப்' எனப்படும் அறேபியர்

முற்றுப் பெற்ற கவிதை

செய்த போர்களின் தொடர்பிலேயே விருத்தியடைந்தது. இத்தகைய முதலாவது நீண்ட 'கஸீதா'வை இயற்றியவர் தங்லிப் வர்க்கத்தைச் சேர்ந்தவரும் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்தவருமான முஹல்ஹில் பின் ரபீஆ என்பவர் ஆவார். அவர் தமது சகோதரார் குலைப் கொல்லப்பட்டபோது நீண்ட இரங்கல் 'கஸீதா' ஒன்றை இயற்றினார்.[34] இந்த வகைக் கவிதை அக்கால அறேபியரின் சமய, சமூக, கலாசார நிலைமைகளைப் பிரதிபலிக்கும் ஆடியாக விளங்குகிறது. இந்தக் கவிதையின் மூலம் கவிஞர்கள் தங்களது ண்ணப்பற்றுக்களையும் கருத்துக்களையும் வெளியிட்டனர்; அபாயம் அல்லது இக்கட்டு சூழ்ந்த வேளைகளில், தாம் சார்ந்த வர்க்கத்தின் அபிப்பிராயங்களையும் அவர்கள் இதன் மூலம் வெளிப்படுத்தினர்.

அறேபியரின் நோக்குகளும் மனநிலைகளும் வேறுபட்டுக் காணப்பட்டமை போலவே இஸ்லாத்திற்கு முந்திய அறபுக் கவிதையின் கருப்பொருள்களும் பல்வேறுபட்டவையாய் இருந்தன. இந்த வேற்றுமையின் சான்றுகள் பண்டைய அறபுக் கவிதையில் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆயினும், இப்போது கிடைக்கக்கூடிய பண்டைய அறபுக் கவிதைகளுள் அதிகமானவை பெருமை (பக்ர்), வீரம் (ஹமாஸா), காதல் (நஸீப்), புகழ் (மத்ஹ்), கையறு நிலை (ரிதா.ஃ.), வசை (ஹிஜா.ஃ.), விவரணம் (வஸ்ப்) ஆகிய ஜனரஞ்சகமான கருப்பொருள்களைக் கொண்டிருக்கக் காணலாம். அவர்களது கவிதைகள் பெரும்பாலும் தன்னுணர்ச்சிப்பாடல்களாகவே இருந்தன. தன்னுணர்ச்சிப் பாடல் வடிவம் இசைப் பாடலாகப் பாடுவதற்கும் பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் பொருத்தமானதாயும் தங்களது மனக்கிளர்ச்சிகள், சொந்த நெருக்கிடைகள், அருட்டல்கள் ஆகியவற்றைத் தணித்துக் கொள்வதற்கேற்ற திறனார்ந்த கருவியாகவும் இருந்தமையினாலேயே அக்கால அறபுக் கவிஞர்கள் இந்த வடிவத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். இஸ்லாத்திற்கு முந்தியகால அறபு இலக்கியத்தில் நீண்ட காவியங்களோ சிறுகாப்பியங்களோ இயற்றப் பட்டமைக்குப் போதிய ஆதாரம் இல்லை. ஆயினும் ,'முஅல்லகாத்' கவிதைகளுள் ஒன்றை இயற்றிய கவிஞரான அம்ர் பின் குல்தூம் ஆயிரம் அடிகள் கொண்ட ஒரு நீண்ட கவிதையை இயற்றினார் என்றும் காலப்போக்கில் அதன் பெரும்பகுதி மறக்கப்பட்டு, இன்று கிடைக்கக்கூடிய நூறு அடிகளைக் கொண்ட 'முஅல்லகாத்'தாக மாறிற்று என்றும் அறபு இலக்கிய விமர்சகர்கள் சிலர் கூறுகின்றனர்.[35]

34. R.A. Nicholson, op. cit., p.76

35. வைதான், ஆதாபுல் லுகதுல் அறபிய்யா, பாகம் i பக்கம் 110

சந்தை கூடும் இடங்களில் கவிதைப் போட்டிகளையும் அரங்கேற்றங்களையும் தவறாமல் ஒழுங்கு செய்யும் அளவுக்கு அறேபியர் கவிதை மேல் கொண்டிருந்த காதல் அதிகமானதாயும் தீவிரமானதாயும் இருந்தது. ஆண்டு தோறும் துல் க.ஃதா, துல் ஹிஜ்ஜா, முஹர்ரம் ஆகிய மாதங்களில், தாயிபுக்கும் நக்லாவுக்கும் இடையில் உள்ள உகாள் என்ற சிறு நகரத்திலும் மக்காவில் உள்ள துல் மஜாஷ் என்ற இடத்திலும் கூடிய சந்தைகளில் கவிதைப் போட்டிகளும் அரங்கேற்றங்களும் நடத்தப்பட்டன. தீபகற்பத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த கவிஞர்கள் வந்து, போட்டிகளில் பங்கு கொண்டு, தத்தம் கவிதைகளை அரங்கேற்றினர். மிகச் சிறந்தது எனத் தெரிவு செய்யப்பட்ட 'கஸீதா' எகிப்தியப் பட்டுத் துணியில் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டு, புனித க.ஃபாவின் சுவரில் தொங்க விடப்பட்டது. இத்தகைய 'கஸீதா'க்கள் 'முஅல்லகாத்' (தொங்கவிடப்பட்டவை) என்று அழைக்கப்பட்டன. நபி (ஸல்) அவர்களது காலத்தில் இம்ரு உல் கைஸ், தரபா, அம்ர் பின் குல்தூம், ஹாரித் பின் ஹில்லிஷா, அன்தரா, ஷுஹைர், லபீத் ஆகிய அறபுக் கவிஞர்களால் இயற்றப்பட்ட ஏழு 'முஅல்லகாத்'துகள் க.ஃபாவின் சுவர்களில் தொங்கவிடப்பட்டிருந்தன. இடைக்கால அறபு இலக்கிய விமர்சகர்கள் இந்த 'முஅல்லகாத்'துகளை இஸ்லாத்திற்கு முந்திய அறபுக் கவிதையின் மிகச் சிறந்த இலக்கியப் படைப்புக்களாகக் கருதினர். இன்று கூட அவை அறபு இலக்கிய விமர்சகர்களால் சிறந்த படைப்புக்களாகப் போற்றப்படுகின்றன.

'முஅல்லகாத்'

இஸ்லாத்திற்கு முந்திய அறேபியாவில், ஏழு 'முஅல்லகாத்'துகளை எழுதிய கவிஞர்களோடு நாபி஘ா, அ.ஃஷா, அல்கமா, கன்ஸா முதலான பலர் புகழ்பெற்ற அறபுக்கவிஞர்களாக விளங்கினர். அவர்களுள் மகா கவியாக விளங்கிய இமருஉல் கைஸ் அக்கால அறபுக் கவிஞர்களின் மன்னராகக் கருதப்பட்டார். முதல் 'முஅல்லகாத்'தை இயற்றிப் பரிசில் பெற்ற பெருமையும் இவரையே சாரும். இன்று கூட அறபு இலக்கிய விமர்சகர்களாலும் வாசகர்களாலும் போற்றப்படும் இவரது கவிதைகள் இஸ்லாத்திற்கு முந்திய கால அறபுக் கவிதை இலக்கியத்தின் வளர்ச்சியையும் மறுமலர்ச்சியையும் அளவிட உதவும் கருவியாக விளங்குகின்றன. இவருக்கு அடுத்த தரங்களிலேயே மற்றக்கவிஞர்கள் மதிக்கப்படுகின்றனர்.

பண்டைய அறபுக் கவிதையைப் பொறுத்தவரை, சுமார் 125 அறபுக் கவிஞர்களின் கவிதைகள் தொகுக்கப்பெற்று, இன்று கிடைக்கக் கூடியனவாய் இருக்கின்றன. 'தீவான்' (தொகுப்பு) என்று பொதுவாக அழைக்கப்படும் இந்தக் கவிதைத் தொகுதிகள் பல்வேறு பெயர்களில் பிற்காலத்தில் தொகுத்து வெளியிடப்பட்டவை. அவற்றுள் 'முஅல்லபாத்' கவிதைகள் ஏழும் உமய்யாக்கள் காலத்தில்

கவிதைத் தொகுதிகள்

வாழ்ந்து அப்பாஸியாக்கள் காலத்தில் மரணமான ஹம்மாத் அல் ராவியா (மரணம் கி.பி.772) என்பாரால் தொகுக்கப்பட்டன. இந்தத் தொகுதி இன்று பல ஐரோப்பிய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டிருக்கிறது. அப்பாஸிய கலீபா அல் மன்ஸூரின் சமகாலத்தவரான முபழ்ழல் அல் ழப்பீ என்பார் 47 பண்டைய அறபுக் கவிஞர்களின் 'கஸீதா'க்களைத் தொகுத்து 'அல் முபழ்ழலிய்யாத்'என்ற பெயரில் ளெியிட்டார். அறபுக் கவிஞரான ஷன்பரா என்பாரின் புகழ்பெற்ற 'லாமிய்யதுல் அறப்' (லாமிய்யா) என்ற கவிதை உட்பட நாபி஘ா, அ.ஃஷா, அல்கமா முதலானோரின் 128 கஸீதாக்கள் இந்தத் தொகுப்பில் காணப்படுகின்றன. இந்தக் கவிதைத் தொகுதி ஸர். சார்லஸ் லையால் என்பாரால் மூன்று பாகங்களில், ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

அப்பாஸிய கலிபாக்களான அல் ம.ஃமூன், மு.ஃதஸிம் ஆகியோரின் சம காலத்தவரான அபூ தம்மாம் (மரணம் கி. பி. 850) என்பார் 'அல் ஹமாஸா' (வீரம்) என்ற பெயரில் மற்றொரு கவிதைத் தொகுதியைத் தொகுத்துத் தந்திருக்கிறார். பத்துப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும் இந்தத் தொகுதியின் முதற் பகுதியான 'பாபுல் ஹமாஸா' மற்றப் பகுதிகளை விடவும் நீளமானது. ஏழாம், எட்டாம் பகுதிகள் மிகக் குறுகியவை; சில பக்கங்களை மட்டும் கொண்டவை. வீரம் (ஹமாஸா), கையறு நிலை (மராதீ), ஒழுக்கம் (அதப்), காதல் (நஸிப்), வசை (ஹிஜா.ஃ), விருந்தோம்பலும் புகழ்ச்சியும் (அழ்யாப் வல் மதீஹ்), வருணனைகள் (ஸிபாத்), பிரயாணமும் தூக்கமும் (ஸய்ர் வல் நுஆஸ்), கதைகள் (முலஹ்), பெண்களின் நிந்தனை (மதம்மதில் நிஸா.ஃ) முதலான தலைப்புக்களில் பண்டைய அறபுக் கவிஞர்களின் முழுமையான கவிதைகளும் நீண்ட கவிதைகளிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளும் சிறிய கவிதைகளும் இதில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. 'அல்ஹமாஸா' என்ற இதே பெயரில் அபூ தம்மாமின் இளைய தலைமுறையைச் சேர்ந்த புஹ்துரீ (கி. பி. 820-97) என்பாரும் பண்டைய அறபுக் கவிதைகளைத் தொகுத்திருக்கிறார். ஆயினும், அபூதம்மாமின் தொகுப்பை விடவும் இது தரத்தில் குறைந்தது என்பதே விமர்சகர்களின் கருத்து ஆகும். ஸ்பானிய மொழியியலாளரான அல் அ.ஃலம் (மரணம் கி.பி. 1083) என்பார் நாபி஘ா, அன்தரா, தரபா, ஷுஹைர், அல்கமா, இம்ருஉல் கைஸ் ஆகிய கவிஞர் அறுவரினதும் கவிதைகளை ஒரு 'தீவா'னாகத் தொகுத்திருக்கிறார். மற்றொரு மொழியியலாளரான அல் ஸுக்கரீ (மரணம் 888) என்பார் ஹுதைல் வர்க்கத்தைச் சேர்ந்த அறபுக் கவிஞர்களின் கவிதைகளை 'அஷ்ஆருல் ஹுதலிய்யீன்' என்ற பெயரில் தொகுத்துத் தந்திருக்கிறார். கி.பி. 1000ஆம் ஆண்டளவில், அபூ ஷைத் முஹம்மத் அல் குரஷீ என்பாரால் தொகுக்கப்பெற்ற 'அல் ஜம்ஹரது அஷ்ஆரில் அறப்' என்ற கவிதைத் தொகுதியில் பண்டைய அறபுக் கவிஞர்களின் 49 கஸீதாக்கள் காணப்படுகின்றன.

இவற்றைத் தவிர வாழ்க்கை வரலாறு, மொழியியல் முதலான துறைகளில், பிற்காலத்தில் எழுதப்பட்ட பல நூல்களிலும் பண்டைய அறபுக் கவிதைகள் மேற்கோள்களாகக் காட்டப்பட்டிருக்கின்றன.அத்தகைய நூல்களுள் அபுல் பரஜ் அல் இஸ்பஹானீ எழுதிய 'கிதாபுல் அஃனீ', அபூ அலீ அல் காலீ எழுதிய 'கிதாபுல் அமாலீ', அல் முபர்ரத் எழுதிய 'அல் காமில்', அப்துல் காதிர் அல் பங்தாதீ எழுதிய 'கிஷானதுல் அறப்' ஆகியவை குறிப்பிடத்தக்கவை.இவ்வாறு தொகுக்கப்பட்ட கவிதைகளை இயற்றிய அறபுக் கவிஞர்கள் அனைவருமே கி. பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். அவர்களுட் சிலர் பின்னர் இஸ்லாத்தை ஏற்று, முஸ்லிம்களாக வாழ்ந்தவர்கள்.

இந்தக் கவிதைகள் அனைத்துமே அக்காலத்தில் எழுத்துருப் பெறாதவை. ஏனெனில், அப்போது எழுதும் கலை அறேபியரிடையே பொதுப்புழக்கத்திற்கு வந்திருக்கவில்லை. இந்தக் கவிதைகள் யாவும் வாய் மொழி வழியாகவே பாதுகாக்கப்பட்டு வந்தன. இதற்கு அறேபியரில் இயல்பாக அமைந்திருந்த அபார நினைவாற்றல் பெரிதும் உதவியது. ஒவ்வொரு கவிஞருக்கும் சொந்தமாக 'ராவீ' (அறிவிப்பவர் அல்லது ஓதுபவர்) ஒருவர் இருந்தார். கவிஞர் சென்ற இடமெல்லாம் இந்த 'ராவீ'யும் கூடவே சென்று, கவிஞர் அவ்வப்போது இயற்றிப் பாடிய கவிதைகளை மனனஞ் செய்து, மற்றவர்களுக்கு அறிவித்து வந்தார். அவற்றை மக்கள் மனனமிட்டு, சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் அவற்றைத் தாம் பாடியும் மற்றவர்களுக்கு அறிவித்தும் வந்தனர். சில சமயங்களில் ஒரு கவிஞரே மற்றொரு கவிஞரின் 'ராவீ'யாக இருந்து வந்தார். கவிஞர் ஷுஹைர், அவரது வளர்ப்புத் தந்தையும் கவிஞருமான அவ்ஸ் பின் ஹஜர் என்பாருக்கு 'ராவீ'யாக இருந்தார். அதேசமயம், கவிஞர் அல்ஹுதய்ஆ, ஷுஹைரின் 'ராவீ'யாக இருந்தார். இவ்வாறே, அக்கால அறேபியரின் கவிதை மட்டுமன்றி, உரை நடை இலக்கியங்களும் பிற தகவல்களும் எமக்குக் கிடைத்திருக்கின்றன. ஆயினும், இந்த வாய் மொழிமரபில் காணப்படும் இயல்பான குறைபாடு காரணமாக, கலப்படம் செய்யப்பட்ட கவிதைகளும் பண்டைய அறபுக்கவிதை இலக்கியத்தில் புகுந்துவிடாமல் இல்லை.

பண்டைய கவிதையின் மரபு

அறியாமைக் கால அறேபியரின் இலக்கியத்தில் கவிதை சிறப்பிடம் பெற்ற அளவுக்கு உரைநடை இலக்கியம் முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. எழுதும் கலை போதிய அளவுக்கு அவர்களிடையே அறிமுகம் பெறாமையே இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. ஆயினும், அறபு உரைநடை இலக்கியத்திற்கு அவர்களது காலத்திலேயே வித்திடப்பட்டது என்று கூறினால் அது மிகையான கூற்றாக இருக்காது. ஏனெனில்,

உரை நடை இலக்கியம்

உரைநடை சார்ந்த சில துறைகளில் அவர்களுக்கு இயல்பாக இருந்து வந்த ஆர்வம் பிற்காலத்தில், அந்தத் துறைகளில் நல்ல இலக்கியங்களை அவர்கள் படைப்பதற்குக் காரணியாக அமைந்தது. இதற்கு உதாரணமாகக் கதை சொல்லும் கலையைக் கொள்ளலாம். இந்தக்கலையில் அவர்கள் காட்டிய ஆர்வம் பிற்காலத்தில், வரலாற்றுத்துறையில் ஈடுபாடு கொள்ளவும் புகழ்பெற்ற வரலாற்று நூல்களை ஆக்கவும் அவர்களைத் தூண்டியது.

அக்கால அறேபியர் பேச்சுக்கலையில் வல்லவர்களாக இருந்தனர். அறபு நாடோடிகள் கூட மொழித் தூய்மையோடு நன்கு பேசும் ஆற்றல் பெற்றிருந்தனர். அந்த அறேபியரிடையே நல்ல நாவலர்கள் பலர் இருந்தனர். பேச்சுவன்மை ஒரு மாபெரும் அருளாகவும் மற்றவர்களிடம் பெருமையடித்துக் கொள்வதற்குரிய தகுதியாகவும் அவர்களால் கருதப்பட்டது. 'மனிதனது அழகு அவனது நாவன்மையிலேயே இருக்கிறது' என்று அவர்களது பழமொழி ஒன்று கூறுகிறது. நாவன்மையும், வில்லெறிதல், குதிரைச் சவாரி செய்யும் திறன் ஆகியனவும் 'சம்பூரண மனிதன்' (காமில்) ஒருவனின் மூன்று அடிப்படைப் பண்புகளாகக் கருதப்பட்டன. ஒவ்வொரு வர்க்த்திற்கும் அவர்கள் சார்பில் கவிதை பாடக் கவிஞர்கள் இருந்ததைப் போல பேச்சாளர்களும் இருந்தனர். அவர்கள், கவிஞர்கள் கவிதையிற் செய்த பணியை உரைநடையிற் செய்தனர்.

மரபுவழியாக வழக்கில் இருந்து வந்த பழமொழிகளும் அக்கால அறேபியரின் உரைநடை இலக்கியத்தில் பரவலாகக் காணப்பட்டன. பெரும்பாலும் 'ஸஜ்.' என்ற எதுகை - மோனை அமைந்த உரைநடையைக் கொண்டிருந்த இந்தப் பழமொழிகள் அவர்களது மனப்பாங்கையும் அனுபவங் களையும் காட்டி நிற்கின்றன. அவர்களிடையே வாழ்ந்த அக்தம் பின் ஸய்பி, ஹாஜிப் பின் ஷுராரா, ஹின்த் பின்த் அல்குஷ் முதலான புத்திஜீவிகள் பலர் அறிவார்ந்த பொன்மொழிகள் பலவற்றையும் விட்டுச் சென்றிருக்கின்றனர். மரபு வழியாக அவர்களிடையே வழக்கில் இருந்து வந்த பழமொழிகளும் பொன்மொழிகளும் அல் மய்தானீ (மரணம் கி. பி. 1124) என்பார் தொகுத்த 'மஜ்மஉல் அம்தால்' என்ற தொகுப்பிலும் அல் முபழ்ழல் பின் ஸலமா (மரணம் கி. பி. 920) என்பார் தொகுத்த 'அம்தாலுல் அறப்' என்ற தொகுப்பிலும் காணப்படுகின்றன.

அறியாமைக் கால அறேபியரின் உரைநடை இலக்கியத்தில் பேச்சுக்கள் (குத்பா), பழமொழிகள் (அம்தால்) ஆகியவற்றை மட்டுமன்றி வரலாற்றுத் துணுக்குள், கதைகள், உருவகக் கதைகள் முதலியவற்றையும் காணமுடிகிறது. பெரும்பாலும் இந்தக்கதைகள் அவர்களது வமிசாவழி, வர்க்கங்களுக்கு இடையில் நிகழ்ந்த போர்கள், அறேபியரல்லாதோருடன் நடைபெற்ற சண்டைகள் ஆகியவற்றோடு சம்பந்தமுடையனவாகவே இருந்தன. காதல் அனுபவங்கள், அவதூறு கூறுதல் ஆகியவற்றின் பெயராலும் பல கதைகள் அவர்களிடையே வழங்கப்பட்டன. இந்தக் கதைகளில் எல்லாம்

பொய்யான கற்பனை பெருமளவுக்கு விரவிக் கிடந்த போதிலும், இவை அவர்களது உரைநடை இலக்கியத்தை அணிசெய்யத் தவறவில்லை. இத்தகைய பல கதைகள் அபுல் பரஜ் அல் இஸ்பஹானீ தொகுத்த 'கிதாபுல் அகானீ' என்ற நூலிலும் பிற்காலத்தில் எழுதப்பட்ட அறபு வரலாற்று நூல்களிலும் காணப்படுகினறன.

இஸ்லாத்திற்கு முந்திய கால அறேபியர் - குறிப்பாகத் தென் அறேபியர் - கட்டடக்கலை, சிற்பம் முதலான கலைகளிலும் ஓரளவுக்குச் சிறந்து விளங்கினர். வட அறேபியரைப் பொறுத்தவரை, இந்தத் துறைகளில் அவர்களிடம் எத்தகைய விருத்தியும் காணப்படவில்லை. வட அறேபியாவில் இருந்த குறிப்பிடத்தக்க ஒரே ஒரு கற்கட்டடம் புனித க.்பாவே ஆகும். அதுவும் ஆளுயரத்திற்கு நாற்புறமும் முரட்டுக்கற்களால் கட்டப்பட்ட சுவர்களைக் கொண்ட கூரையற்ற ஒரு கட்டடமாகவே இருந்தது. அங்கு காணப்பட்ட சிலைகள் கூட, பெரும்பாலும் கலைநுட்பம் இல்லாத சிற்பங்களாகவே இருந்தன. வடஅறேபியாவில் வாழ்ந்த மிக அதிகமான மக்கள் ஒட்டகை மயிர்களாலான கூடாரங்களிலும் ஓலைக்குடிசைகளிலுமே வசித்து வந்தனர். களிக் கற்களால் கட்டப்பட்ட சிறு வீடுகள் மிகச் சிலவே காணப்பட்டன. ஆயினும், மிகப்புராதன காலத்தில் வாழ்ந்த அறேபியரின் மூதாதையினர் வட அறேபியாவில் கலைநுட்பம் பொருந்திய பலகட்டடங்களை நிறுவியிருந்தனர். வட கிழக்கு அறேபியாவில் வாழ்ந்த ஆத் வர்க்கத்தினர் மிக உயர்ந்த தூண்களைக் கொண்ட மாளிகைகளையும் கட்டடங்களையும் அமைத்திருந்தனர். இதற்கு அல்குர்ஆனே சான்றாக இருக்கிறது. (அல் குர்ஆன் 89:6-8; 26:128-129).அவர்களுக்குப் பின்னர் வடமேற்கு அறேபியாவில் வாழ்ந்த தமூத் வர்க்கத்தினர் சம வெளிகளில் பெரும் கோட்டைகளையும் மலைகளைக் குடைந்து அழகிய மாளிகைகளையும் நிறுவியிருந்தனர். இதற்கும் அல்குர்ஆனே சான்றாக இருக்கிறது (அல் குர்ஆன் 7:74; 15:82; 89:9). அவர்கள் நிறுவிய கோட்டைகள், மாளிகைகள், சமாதிகள் முதலியவற்றின் சிதைவுகள் இப்போது மதாஇன் ஸாலிஹ் என்று அழைக்கப்படும் அல் ஹிஜ்ர் என்ற இடத்திலும் அல்உலா (வாதிஉல் குரா), பீட்ரா, மத்யன் ஆகிய இடங்களிலும் இன்றும் காணப்படுகின்றன.

கட்டடக் கலை

இஸ்லாத்திற்கு முந்திய அறியாமைக் காலத்தைப் பொறுத்தவரை, கட்டடக்கலைத் துறையில் தென் அறேபியாவின் நிலை வடஅறேபியாவின் நிலைக்கு முற்றிலும் மாற்றமானதாய் இருந்தது. கட்டடக்கலை, சிற்பம் ஆகிய துறைகளின் விருத்திக்குத் தேவையான வசதிகளும் வாய்ப்புகளும் அங்கு காணப்பட்டன. கட்டடங்களுக்குத் தேவையான கருங்கல், பழுப்புக்கல், சலவைக் கல் ஆகியன தென் அறேபியாவில் தாராளமாகக் கிடைத்து வந்தன. அங்கு ஆற்றல் வாய்ந்த கட்டடக் கலைஞர்கள் பலர் இருந்தனர்

அவர்கள் அங்கே அழகிய மாளிகைகளையும் கோட்டைகளையும் நீரமைப்புக்களையும் நிறுவியிருந்தனர். தென்அறேபியரின் முக்கிய நகரங்கள் அவர்களது சிற்பத்திறனுக்கு உதாரணங்களாய் விளங்கின. உரோம வரலாற்றாசிரியரான மூத்த பிளினியின் கூற்றுப்படி, தென் அறேபியாவில், கதபான் பிரதேசத்தின் தலைநகராக இருந்த தமன.்.வில் மட்டும் அறுபத்தைந்து கோயில்கள் காணப்பட்டன. அந்த நகரத்தின் தென்புற வாயிலில் பெரும் கற்றூண்களைக் கொண்ட இரண்டு கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தென்அறேபியா கோட்டைகளும் நகரரண்களும் நிறைந்த பூமியாக விளங்கியது. அவற்றின் இடிபாடுகள் இன்றும் அங்கே காணப்படுகின்றன. ஸன்ஆ நகரில் அமைக்கப்பட்டிருந்த இருபது மாடிகளைக் கொண்ட கும்தான் கோட்டை, அமெரிக்கத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட 'அவ்வாம்' கோயில், ம.்ரிப் நகரின் பாரிய அணை[36] முதலியனவும் ஏனைய கட்டடங்களின் சிதைவுகளும் அறேபியாவில் - குறிப்பாகத் தென் அறேபியாவில் - ஏற்பட்டிருந்த கட்டடக்கலை வளர்ச்சியைப் பறை சாற்றி நிற்கின்றன.

அறேபியரின் - குறிப்பாகத் தென் அறேபியரின் சிற்பக்கலை நாட்டத்திற்கு அவர்கள் பயன்படுத்தி வந்த நாணயங்களும் சான்றுபகிர்கின்றன. அறேபியாவின் பண்டைய அரசர்கள் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களாலான நாணயங்களை வெளியிட்டு வந்தனர். அந்த நாணயங்களின் ஒரு பக்கத்தில் அரசர்களின் பல்வேறு விதமான உருவங்களும் மறுபக்கத்தில் ஆந்தை, எருமைத்தலை முதலானவற்றின் உருவங்களைக் கொண்ட சின்னங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. கி. மு. மூன்றாம் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஹிம்யரிய (யமனிய) வெள்ளி நாணயம் ஒன்றின் ஒரு பக்கத்தில் அதெனா என்ற கிரேக்க இதிகாசத் தேவதையின் தலையும் அவளது கன்னத்தில் 'நூன்' என்ற ஸபாஈய எழுத்தும் மறுபக்கத்தில் ஆந்தை, இளம்பிறை, ஒலிவ மரக்கிளை ஆகியவற்றின் உருவச் சின்னங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த நாணயங்களின் அமைப்பில் கிரேக்க, உரோமச் செல்வாக்குகள் பெரிதும் காணப்படுவதை அவதானிக்க முடியும். தொல்பொருளியல் ஆராய்ச்சியாளர்களாலும் ஏனையோராலும் கணிசமான அளவில் கண்டெடுக்கப்பட்ட இந்த நாணயங்கள் அறேபியரின் சுயேச்சையான வளர்ச்சியையும் கலைத்திறனையும் வெளிப்படுத்துகின்றன.

நாணயங்கள்

இஸ்லாத்திற்கு முந்திய கால அறேபியரின் கலசார வாழ்வில் இசை முக்கிய இடம்பெற்றிருந்தது. பெரும்பாலும் மதுபானத்தோடு இணைந்து காணப்பட்ட ஆடலும் பாடலும் முழு அறேபியாவிலும் மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட பொழுதுபோக்கு அம்சங்களாக விளங்கின. மதுக்கடைகளில் மது அருந்த வருவோரை மகிழ்விக்கப் பாடகிகள்

இசை

36. இந்த அணை பற்றி அல்குர்ஆனிலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. (அல்குர்ஆன் 34:16)

இருந்தனர். இல்லங்களில் நடைபெற்ற விருந்துகளிலும் வேறு விழாக்களிலும் ஆடலுக்கும் பாடலுக்கும் முக்கிய இடம் அளிக்கப்பட்டிருந்தது. இதற்காக நகரங்களையும் பல்வேறு வர்க்கங்களையும் சேர்ந்த பெண்களும் ஆடலையும் பாடலையும் தொழிலாகக் கொண்ட பாடகி (கய்னத்) களும் இருந்தனர். இவர்களது சேவை இல்லங்களிலும் கூடாரங்களிலும் வாழ்ந்தவர்களை மகிழ்விப்பதற்காக மட்டுமன்றி, போர்மேற்செல்வோருக்குக் கிளுகிளுப்பு ஊட்டுவதற்காகவும் பெறப்பட்டது என்பதை அவர்களது போர்க் கவிதைகள் மூலம் அறிய முடிகிறது. போர்மேற்சென்ற போதெல்லாம் அவர்கள் பாடகிகளையும் அழைத்துச் சென்றனர். அவர்களது இசை (நினா.ஃ.), 'நஸ்ப்' என்று அழைக்கப்பட்ட ஒரு எளிய பாடல் வகையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இது, அவர்களது 'ஹுதா.ஃ.' என்று அழைக்கப்பட்ட ஒட்டகம் ஓட்டிகளது பாடலின் திருந்திய வடிவமாகும். அவர்களது பாடலில் யாழை (மி.ஃ.ஷபா) ஒத்த ஒருவகைக் கம்பிக் கருவி (முவத்தர்), தட்டு கழி (கழிப்), கஞ்சிரா (மிஷ்ஹர்) ஆகியன பக்க இசைக் கருவிகளாக இருந்தன.கஞ்சிரா இல்லாத சமயங்களில் துளையிடப்பட்ட தோல் சல்லடையை (நிர்பால்) அதற்குப் பதிலாக பயன்படுத்தினர்.[37]

இஸ்லாத்திற்கு முந்தியகால அறேபியர் வானியல், வளிமண்டலவியல், பரம்பரையியல், மருத்துவம், கனவுகளுக்கு விளக்கம் கூறுதல், கதை சொல்லுதல் முதலான துறைகளிலும் ஓரளவு அறிவு பெற்றிருந்தனர்.

விஞ்ஞானமும் பிற துறைகளும்

பெரும்பாலும், அக்காலத்தில் அறேபியருக்குத் தெரிந்திருந்த அறிவியல் சார்ந்த தகவல்கள் கேள்விஞானம் மூலம் பெறப்பட்டவைகளாகவும் வெறும் அவதானங்களை அடிப்படையாகக் கொண்ட ஊகங்களாகவுமே இருந்தன. சில சமயங்களில் அவை வெறும் மூடநம்பிக்கையில் வளர்ந்த கற்பனைகளாகவும் இருந்தன. இதற்கு உதாரணமாக, தென் அறேபியாவில் இருந்த ம.ஃ.ரிப் அணை உடைந்தமைக்கு அவர்கள் கூறிய காரணத்தை எடுத்துக் கொள்ளலாம். மூன்று மலைகளுக்கு நடுவே அமைந்திருந்த இந்த அணையின் நான்காவது பக்கம் நீர்ப்பெருக்கைக் கட்டுப்படுத்தும் கதவுகளைக் கொண்ட கற்களால் அணையிடப்பட்டிருந்தது. இந்தக் கற்களுள், ஐம்பது மனிதர்களால் கூட அசைக்க முடியாத கல் ஒன்றை ஒரு எலி தனது கூரிய பற்களால் அரித்து அகற்றிவிட்டதனாலேயே அணை உடைந்து, பெரும் வெள்ளம் ஏற்பட்டதென்று அவர்கள் நம்பினர்.[38] உண்மையில், அவர்களது அறிவின் பெரும்பகுதி, இமாம் அல் ஷஹ்ரஸ்தானீ தமது 'கிதாபுல் மிலல் வல் நிஹல்' என்ற நூலில் கூறுவது போல, இயற்கை பற்றிய சலன எண்ணங்களையும் திடீர்ச் சிந்தனையின் கீற்றுக்களையுமே

37. *M.M.Sharif, History of Muslim Philosophy, Vol.II p.1129*
38. *R.A.Nicholson, op.cit, p15-16*

உள்ளடக்கி இருந்தது. கிரேக்கர்களைப் போலப் பிரபஞ்சத்தின் அமைப்பு பற்றியோ காரண-காரியத் தொடர்புகள் பற்றியோ சிந்திக்கும் மனப்பக்குவம் அவர்களிடம் இருக்கவில்லை. அதனால், ஆதி கிரேக்கர்களைப்போல அறிவியல் சார்ந்த துறைகளுக்கு அவர்களால் ஆக்கபூர்வமான பங்களிப்பு செய்ய முடியவில்லை.

மருத்துவம் பற்றிய அக்கால அறேபியரின் அறிவு கற்கால மனிதரின் மருத்துவ அறிவையே ஒத்திருந்தது. நோய்களுக்குக் காரணம் மனிதன் மீது ஆதிக்கம் செலுத்தும் கண்களுக்குப் புலனாகாத ஒரு தீய சக்தியே என்று அவர்கள் நம்பினர். பெரும்பாலும் பேய், பிசாசு, ஜின் முதலான படைப்புக்களையே அவர்கள் தீய சக்தியாகக் கருதினர். மனிதனின் நோயை மருத்துவ சிகிச்சையால் குணப்படுத்துவதற்கு முன்னால் அவனை இந்தத் தீய சக்தியிடமிருந்து விடுவிக்க வேண்டியிருந்தது. அதன் பின்னரே அவர்கள் நோயாளிக்கு மருத்துவ சிகிச்சை அளித்தனர். மருத்துவ சிகிச்சையின் போது, ஒவ்வொரு வர்க்கத்தாரிடமும் பாரம்பரியமாக இருந்து வந்த நடைமுறைகளுக்கும் நம்பிக்கைகளுக்குமே முக்கியத்துவம் வழங்கப்பட்டது. உதாரணமாக, நீர்வெறுப்பு நோய்க்கு வர்க்கத்தலைவரின் குருதியே மருந்து என்ற நம்பிக்கை சில வர்க்கங்களில் காணப்பட்டது. அதனால், நீர் வெறுப்பு நோயால் பீடிக்கப்பட்டவர்க்கு வர்க்கத்தலைவரின் குருதியைக் கொண்டே சிகிச்சை அளிக்கப்பட்டது. அக்கால அறேபியரின் மருத்துவ அறிவைப் பற்றி இப்னு கல்தூன் குறிப்பிடுகையில், ''நாடோடி அறேபியரிடம் மருத்துவ அறிவு இருக்கவில்லை. அவர்களது மருத்துவ அறிவு சிலரால் மேற்கொள்ளப்பட்ட தவறான பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டது. வர்க்கத்தின் வயது முதிர்ந்த பாமரர்களிடமிருந்தும் அவர்கள் மருத்துவ அறிவை மரபு வழியாகப் பெற்றிருந்தனர். அவர்கள் பயன்படுத்திய மருந்துகளுட் சில பயனுள்ளவையாக நிறுவப்பட்டிருந்த போதிலும், சட்டப்பிரமாணங்களின் விளைவாகப் பெறப்பட்டவையாக இருக்கவில்லை. அவை எல்லாம் தனியாள்களையும் விசேட நிலைமைகளையும் பொறுத்தவையாய் இருந்தன. அவர்களிடையே அல் ஹாரித் பின் கலதா முதலான மருத்துவர் சிலரும் இருந்தனர்'' என்று கூறுகிறார்.[39] அறியாமைக் காலத்தின் கடைசிப் பகுதியில் வாழ்ந்த இந்த அல் ஹாரித் பின் கலதா என்பவர் ஜுன்திஷாபூரில் இயங்கி வந்த மருத்துவக்கழகத்தில் முறையாக மருத்துவம் பயின்றவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

அக்கால மருத்துவத்தில், மருத்துவ சிகிச்சையை விடவும் தாயத்துக் கட்டுதல், பேயோட்டுதல், மந்திர உச்சாடனம் செய்தல் முதலான மூடப் பாரம்பரிய நடைமுறைகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. அவர்களது மருத்துவ சிகிச்சையில் தேன், பேரீத்தம் பழம், ஒட்டகத்தின்

39 *Quoted in Afzal Iqbal's Culture of Islam pp.35-6*

சிறுநீர், கருஞ்சீரகம், கறியுப்பு, உள்ளி, கஸ்தூரி, முலாம்பழம், திராட்சை, வினாகிரி முதலான மருந்துப் பொருள்களும் இரத்தம் குத்தி வெளியேற்றல், சூடிடுதல் முதலான சிகிச்சை முறைகளும் இடம் பெற்றிருந்தன. விலங்கு மருத்துவத் துறையில் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களும் அவர்களிடையே இருந்தனர்.

வானியல், வளிமண்டலவியல் ஆகிய துறைகளில் அவர்களது அறிவு பரிசோதனைகள் மூலமும் ஆராய்ச்சிகள் மூலமும் பெறப்பட்ட அறிவாக இருக்கவில்லை. இந்தத் துறைகளில்,வெறும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு மரபுவழியாகக் கிடைத்த மிக ஆரம்ப அறிவையே அவர்கள் பெற்றிருந்தனர். மழைக்கும் காற்றுகளுக்கும் காரணமானவை என்று அவர்கள் நம்பிய நட்சத்திரங்களை 'அல் அன்னவா.'.' (சந்திரனின் வீடுகள்) என்று அழைத்தனர். இந்த நட்சத்திரங்கள் இருந்த இடங்களைக் கொண்டு அவர்கள் வளிமண்டலத்தில் நிகழவிருந்த மாற்றங்களை அறிந்து கொண்டனர். ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்தை மழை வீழ்ச்சிக்கு காரணமானது என்று கருதிய அவர்கள் முட்டாள்தனமாகத் தெய்விகப் பண்புகளை விண்மீன்களுக்கும் கிரகங்களுக்கும் கற்பித்து, அவற்றை வழிபட்டும் வந்தனர்.

புகழ்பெற்ற வர்த்தகர்களாயும் கடலோடிகளாயும் விளங்கிய அக்கால அறேபியர் புவியியல் துறையிலும் ஓரளவு நாட்டம் கொண்டிருந்தனர். அவர்களது வாழ்க்கை முறையும் தரை - கடற் பயணங்களும் புவியியல் சம்பந்தமான சில அடிப்படை உண்மைகளைத் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை அவர்களுக்கு ஏற்படுத்தி இருந்தன. அமாவாசை இருளில் கூட நட்சத்திரங்களைக் கொண்டு திசைகளை அறிந்து கொள்ளும் ஆற்றல் அவர்களுக்கு இருந்தது. அவர்களிடமிருந்த அனுபவ ரீதியான புவியியல் அறிவே மணற் புயல்களின் வடிவத்தில் வெடித்த இயற்கையின் கோரத்தாண்டவத்தை முன்கூட்டியே அறிந்து, அந்த ஆபத்துகளிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள அவர்களுக்கு உதவியது. நீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிய பாலைநிலத்தில் வாழ்ந்த அவர்கள் பூமிக்கடியில் உள்ள நீரூற்றுக்களை அறிந்து கொள்ளும் ஆற்றலையும் பெற்றிருந்தனர்.

அறேபியரது சமுதாயத்தில் கனவுகளுக்குப் பொருள் கூறும் ஆற்றல் பெற்றவர்களும் பலர் இருந்தனர். அங்கசாத்திரத்தில் ஆற்றல் வாய்ந்தவர்களும் அவர்களிடையே இருந்தனர். ஒருவரின் உருவ அமைப்பு, நிறம், அங்க அடையாளங்கள், தலைமயிர், விரல்கள், நகங்கள், பேச்சு முதலியவற்றைப் பார்த்து, அவரது வமிசவழி, பிறப்பு, பண்புகள் முதலியவற்றைக் கூறும் திறமை இவர்களிடம் இருந்தது. பெரும்பாலும், இவர்களது சேவை குழந்தைகளின் பிறப்பு மூலத்தை அறிவதற்கே நாடப்பட்டது. ஒரு முறை, நபி (ஸல்) அவர்களது பாட்டனார் அப்துல் முத்தலிப் யமனுக்குச் சென்றிருந்தபோது, அங்கே வயோதிபர் ஒருவர் அவரது மூக்கு மயிர் ஒன்றைப் பரிசோதனை

செய்து விட்டு, 'நான் உங்களில் நபித்துவமும் இறைமையும் இருக்கக் காண்கிறேன்; ஆனால், அவற்றுள் ஒன்று ஷுஹ்ராக் குலத்தாரால் பகிர்ந்து கொள்ளப்படும்' என்று கூறினார் என அல் ஷுஹ்ரீ அறிவித்திருக்கிறார்.[40] இந்தச் சம்பவம் அங்க சாத்திரத்தில் அவர்கள் பெற்றிருந்த திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும்.

தங்களது சொந்தக் குலங்களையும் குடும்பங்களையும் பற்றிப் பெருமை பேசிக்கொள்ளுதலை வழக்கமாகவும் பண்பாடாகவும் கொண்டிருந்த அக்கால அறேபியர் தத்தமது பரம்பரை பற்றி முழுமையாக அறிந்து வைத்திருந்தனர். பரம்பரையியல் பற்றிய அறிவில் அறேபியர்களுக்குச் சமமானவரோ அவர்களை மிகைத்தவரோ அக்கால உலகில் எவரும் இருக்கவில்லை. அறேபியரின் பரம்பரையியல் சம்பந்தமான பெறுமதிமிக்க பல தரவுகள் அபுல் பரஜ் அல் இஸ்பஹானீயின் 'கிதாபுல் அஃகானீ என்ற நூலிலும் இப்ன் துரைத் (மரணம் கி. பி. 934) என்பாரின் 'கிதாபுல் இஸ்திகாக்' என்ற நூலிலும் காணப்படுகின்றன. கதை சொல்லும் கலையிலும் அவர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். எல்லாக் காலத்திலும் அவர்கள் கதை சொல்லும் பெரும் கலைஞர்களாக இருந்து வந்திருக்கின்றனர். மாலை வேளைகளில், தங்களது கூடாரங்களில் ஒன்று கூடி அசாதரணமான செயல்கள் பற்றிய கதைகளைக் கேட்டுவருதலை அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். பரம்பரையியல், கதை சொல்லுதல் ஆகியவற்றில் அவர்களிடம் இயல்பாகக் காணப்பட்ட ஆர்வமே பிற்காலத்தில் அவர்களைப் பெரும் வரலாற்றாசிரியர்களாக மாற்றியது.

இவ்வாறு அமைந்திருந்த அக்கால அறேபியரின் கலாசார நிலை இஸ்லாத்திற்கு முந்திய கால அறேபியர் முழுக்க முழுக்க பண்பாட்டுச் சூன்யம் உடையவர்களாக இருக்கவில்லை என்பதற்கு ஆதாரமாக இருக்கிறது. மக்ஸைம் ரொடின்ஸன் என்ற பிரஞ்சு எழுத்தாளர் கூறுவது போல ''மிகவும் விருத்தி அடைந்த நாகரிகம் ஒன்றை அறேபியர் - குறிப்பாகத் தென் அறேபியர் நுகர்ந்து வந்தனர்''.[41] இஸ்லாத்திற்கு முற்பட்டகால அறபு நாகரிகம் பற்றி ஜோசேப் ஹெல் என்ற ஜெர்மனிய எழுத்தாளர் குறிப்பிடுகையில், ''நாங்கள் அங்கே (தென் அறேபியாவில்) காணும் நாகரிகம் அவர்களது சொந்த - பிற நாகரிகங்களின் தாக்கங்களுக்கு உட்படாத - உள்ளூர் நாகரிகமே ஆகும்" என்று எழுதுகிறார்.[42] ஏனெனில், சமகால உலகின் ஏனைய சமுதாயங்களில் நிகழ்ந்ததைப் போல அறேபியரின் நாகரிகம் மற்றொரு நாகரிகத்தின் தாக்கத்திற்கு உள்ளாகவில்லை. அது அவர்களது சொந்தப் பண்பாடாகவே இருந்தது.

40. இப்ன் ஸஃத். தபகாதுல் குப்ரா பாகம் 1, பக்கம் 86
41. Naxime Rodinson, Mohammed (Eng.trans) p.22
42. Joseph Hell, op.cit. p.6

அரசியல் நிலை

இஸ்லாத்திற்கு முந்திய கால அறேபியாவில் அரசியல் நிலை சமகால உலகின் பிற நாடுகளில் காணப்பட்ட அரசியல் நிலையிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. அறபு நாடோடிகளிடையே எத்தகைய அரசியல் தாபனமும் இருக்கவில்லை. ஆனால், அறேபியாவில் வாழ்ந்த நிரந்தரக் குடிகளிடையே - குறிப்பாகத் தென் அறேபியரிடையே - நிறுவன ரீதியிலான ஒருவகை அரசாங்க அமைப்பு காணப்பட்டது. நாடோடிகள், வர்க்கத் தலைவர்களது ஆதிக்கத்தின் கீழ் வாழ்ந்தனர். நிரந்தரக்குடிகள் அரசர்களது ஆதிக்கத்தின் கீழ் வாழ்ந்தனர். எனவே, பண்டைய அறேபியரின் அரசியல் நிறுவகத்தை அரசர்களின் ஆட்சி, வர்க்கத் தலைவர்களின் ஆட்சி என இரு வகைப்படுத்தலாம்.

பண்டைய அறேபியாவில் - குறிப்பாகத் தென் அறேபியாவில் - நாகரிகப் பண்புகளை உடைய பேரரசுகள் சில இருந்தன. அவற்றுள் வரலாற்றுக்குத் தெரிந்த மிகத் தென்மையான பேரரசு மஈனீ பேரரசு ஆகும்.

மஈனீ அரசு

இந்தப் பேரரசு பற்றி இரதோஸ்தினெஸ், ஸ்ட்ராபோ, தொலமி, பிளினி முதலான கிரேக்க எழுத்தாளர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். மஈன் என்பதன் சரியான அறபு வடிவம் மஆன் என்பதாகும். ஊற்றுநீர் என்பது இதன் கருத்து. இந்த நகரம் யமனில், கிழக்கே ஹழரமவ்த், தென் மேற்கே ஸபா (இப்போதைய ஸன்ஆ) ஆகிய நகரங்களுக்கிடையே அமைந்திருந்தது. இந்தப் பேரரசு தென் அறேபியாவில், நஜ்ரானுக்கும் ஹழ்ரமவ்துக்கும் இடையே, யமனில் உள்ள அல் ஜவ்ப் பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்தது. இதன் சுபீட்ச காலத்தில் கதபான், ஹழ்ரமவ்த் ஆகிய பகுதிகள் உட்படத் தென் அறேபியாவின் பெரும் பகுதியையும் மத்திய, வடமேற்கு அறேபியா, மெலுக்கா மாவட்டம் ஆகியவற்றையும் இந்தப் பேரரசு உள்ளடக்கியதாய் இருந்தது. இப்போது மஈன் என்று அழைக்கப்படும் கர்னாவ் நகரம் இதன் தலைநகராயும் இப்போது பராகிஷ் என்று அழைக்கப்படும் யதீல் நகரம் சமயத் தலைநகராயும் இருந்தன. இது நன்கு அமைக்கப்பட்ட அரசாங்கம் ஒன்றையும் செல்வ விருத்தியையும் உடைய ஒரு பேரரசாக விளங்கியது.

இந்தப் பேரரசு, முழு அறேபியாவிலும் சிரியாவினதும் எகிப்தினதும் எல்லைப்புறங்கள் வரை வியாபித்திருந்தது என்று சாமுவல் லயின்க் என்பார் மஈனியப் பொறிப்புக்களை ஆதாரமாகக் காட்டிக் குறிப்பிடுகிறார்.[43] இவர்கள் வட அறேபியாவில், அல் உலா மாவட்டத்தில் குடியேற்றம் ஒன்றையும் நிறுவி இருந்தனர் என்பது அந்தப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட

43. *Samuel Laing, Human Origin, p.89*

பொறிப்புக்களிலிருந்து தெரிகிறது. இந்தக் குடியேற்றப் பிரதேசம் வர்த்தகத் தலமாக மட்டுமன்றி, மஈனீ அரசனின் சார்பில் போர்களில் பங்கு கொள்ளும் அரசியல் நகராகவும் இருந்தது.

இந்தப் பேரரசு நிலைபெற்றிருந்த காலம் குறித்து வரலாற்றாசிரியர் களுக்குள் கருத்தொற்றுமை இல்லை. ஏனெனில், யமனில் கண்டுபிடிக்கப்பட்ட சுமார் இரண்டாயிரம் பொறிப்புக்களில் இந்தப் பேரரசின் காலத்தைத் துணிவதற்கு உதவக் கூடிய குறிப்புக்களோ திகதிகளோ இல்லை. இந்தப் பேரரசு மிகத் தொன்மையானது என்றும் கி.மு. 20ஆம் நூற்றாண்டில் ஆரம்பமானது என்றும் சிலர் கூறுகின்றனர். இந்தப் பேரரசு கி. மு. 1400 முதல் கி. மு. 700 வரை நீடித்திருந்தது என்று ஜெர்மனியத் தொல்பொருளிய லாளர்கள் கருதுகின்றனர்; கி.மு. 800ஆம் ஆண்டளவில் ஆரம்பித்தது என்று பிரஞ்சுத் தொல்பொருளியலாளர்களும் ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள் சிலரும் கூறுகின்றனர். கி.மு. 1700இல் ஏற்பட்ட ஆத் வர்க்கத்தாரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இந்தப் பேரரசு உதயமாகி, கி.மு. 1000ஆம் ஆண்டு வரை நீடித்திருந்தது என்று கலாநிதி ஸய்யித் முளப்பருத்தீன் நத்வீ அபிப்பிராயப்படுகிறார்.[44] ஆயினும், சுமார் 700 ஆண்டுகள் இந்தப் பேரரசு நீடித்திருந்தது என்பதில் பெரும்பாலும் ஆய்வாளர்களுக்குள் கருத்தொற்றுமை காணப்படுகிறது. இந்தப் பேரரசை ஆட்சி செய்த இருபத்தைந்து அரசர்களின் பெயர்களைத் தந்துள்ள மூல்லர் என்பார் அரசர்களைத் தெரிவு செய்வதில் பரம்பரைக் கோட்பாடே பின்பற்றப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார். சாமுவேல் லயின்கின் கூற்றுப்படி முப்பத்திரண்டு மஈனீ அரசர்களின் பெயர்கள் தெரிய வந்திருக்கின்றன. இது வரை கண்டுபிடிக்கப்பட்ட பொறிப்புக்களும் தொல்பொருள்களும் மஈனீகளின் அரசையும் அவர்களது சமய கொண்டாட்டங்கள், சடங்குகள், வாழ்க்கை முறை, வர்த்தகம், சர்வதேச உறவுகள் முதலியவையையும் பற்றிய பல தகவல்களைத் தருகின்றன.

மஈனீ பேரரசு வீழ்ச்சி அடைந்து கொண்டிருந்த காலத்தில், தென் அறேபியாவில் மற்றொரு பேரரசு தோன்றியது. இந்த அரசு, இதன் அரசர்களுள் ஒருவரும் ஸப.·. என்று அழைக்கப்பட்டவருமான அப்புஷ் ஷம்ஸ் என்பாரின்

ஸபஇ அரசு

பெயரால் ஸபஇ பேரரசு என்று அழைக்கப்பட்டது. கி.மு. 950ஆம் ஆண்டு முதல் நிலைபெற்றிருந்த இந்த அரசு மஈனீ அரசுக்குப் பிந்தியதா அல்லது இரண்டும் சமகாலத்தவையா என்பதில் ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருக்கின்றனர். கலாநிதி மூல்லர் இரண்டும் சம காலத்தவை என்கிறார். ஆனால் அறபியல் அறிஞரான மார்ட்டின் ஹார்ட்மேன் என்பார் மஈனீ அரசின் பொற்காலம் ஸபஇ அரசின் காலத்திற்கு முந்தியது என்கிறார்.[45]

44. *S.M.Nadvi, A Geographical History of the Quran, pp. 132-33*
45. *Encyclopaedia of Islam, Vol. i , p.378*

ஸபஇ அரசு, மாஈனீ அரசுக்குப் பிந்தியது என்பது கிளேஷர், ஹொம்மெல், வின்க்லெர், பார்ட்டன் முதலான தொல்பொருளியலாளர்களின் கருத்து.[46] ஸபஇ அரசு கி.மு. 750ஆம் ஆண்டளவிலேயே தோன்றியது என்றும் அப்போது மாஈனீ அரசு அதன் வீழ்ச்சிக் கட்டத்தில் இருந்தது என்றும் அது கி.மு. 1250ஆம் ஆண்டிலேயே ஆரம்பமாகிவிட்டது என்றும் கிளேஷர் குறிப்பிடுகிறார்.[47]

யமனில், ம.ரிப் நகருக்கு மேற்கே உள்ள ஸிர்வாஹ் இந்தப் பேரரசின் முதலாவது தலைநகரமாக இருந்தது. இரண்டு கட்டடங்களைக் கொண்டிருந்த இந்த அரசின் முதற் கட்ட ஆட்சிக்காலம் கி.மு. 650ஆம் ஆண்டு வரை நீடித்திருந்தது. இந்தக் காலத்தில் ஆட்சி செய்த அரசர்கள் மக்களின் சமயத்தலைவர்களாயும் இருந்தனர். அரசர்களின் இந்த குருத்துவப் பண்பு காரணமாக இக்காலகட்டத்தைச் சேர்ந்த அரசர்கள் 'முகர்ரிப் ஸப.' (ஸப. வின் குரு-அரசன்) என்று அழைக்கப்பட்டனர். இந்தப்பட்டத்தைச் சூடியிருந்த சுமார் பதினேழு அரசர்களைப் பற்றி எமக்குக் கிடைத்துள்ள பொறிப்புக்களிலும் ஏனைய சான்றுகளிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் காலத்தைச் சேர்ந்த ஸபஇ ஆட்சியாளர்கள் அசீரியப் பேரரசனான மூன்றாம் திஜ்லத் பைலஸர் (கி.மு. 745-727) என்பானுக்கும் இராணி ஸம்ஸி, இத்.அமரா (யத.அமர்) ஆகியோர் கி.மு. 710இல் பாபிலோனைக் கைப்பற்றிய அசீரிய அரசன் இரண்டாம் ஸர்ஜொன் (கி.மு. 722-705) என்பானுக்கும் விலை உயர்ந்த பொருட்களைத் திறையாகச் செலுத்தி வந்தனர். இந்தக் காலத்திலேதான் ம.ரிப் நகரத்தின் பாரிய அணை கடல் மட்டத்திலிருந்து 3900 அடிகள் உயரத்தில் கட்டப்பட்டது. 'ஸத்த் ம.ரிப்' என்று அழைக்கப்பட்ட இந்த அணை தென் அறேபியரின் தொழில்நுட்பத் திறமைக்குச் சான்றாக விளங்கியது. இத்.அமரா பய்யின் என்பானும் அவனது தந்தை ஹுஅலய் யனுப் என்பானுமே இதனைக் கட்டினர் என்று பொறிப்புக்களிலிருந்து தெரிய வருகிறது. ஆனால், அல் ஹம்தானீ, அல் மஸ்ஊதீ, அல் இஸ்பஹானீ, யாகூத் முதலான அறபு வரலாற்றாசிரியர்கள் லுக்மான் பின் ஆத் என்பாரே இதனைக் கட்டியவர் என்று கூறுகின்றனர்.[48]

இந்தக்காலத்தில் கட்டப்பட்ட கலைச் சிறப்பு வாய்ந்த கட்டடங்களுள் மற்றொன்று அவ்வாம் கோயில் ஆகும். ஸபஇகள் வழிபட்டு வந்த 'அல்மகா' என்ற சந்திரக்கடவுளுக்காகக் கட்டப்பட்ட இந்தக் கோயில் சுமார் 30 அடி உயரமும் 300 அடி நீளமும் 250 அடி அகலமும் கொண்ட முட்டை வடிவிலான மண்டபத்தையும் பல்வேறு அலங்கார வேலைப்பாடுகள் அமைந்த புறத்தாழ்வாரத்தையும் எட்டுத்தூண்களில் உருவாக்கப்பட்ட இணைப்புக் கட்டடங்களையும் உடையதாய் இருந்தது.[49] இந்தக் கோயிலின் சுற்றுச்சுவர்

46. De Lacy O'Leary, op.Cit. p.94
47. Ibid, p.95
48. Philip K.Hitt , op. Cit, p.54
49. Maxime Rodinson , op. cit.,p.21

ஆரம்பகால 'முகர்ரிப்' அரசர்களுள் ஒருவனான யத.இல் என்பானால் கட்டப்பட்டது என்று பொறிப்பு ஒன்றிலிருந்து தெரிகிறது.[50]

இந்தப் பேரரசின் இரண்டாம் கட்ட ஆட்சிக்காலம் கி.மு. 650 முதல் கி.மு. 115 வரை நீடித்திருந்தது. இந்தக் காலத்தில் ஸபஇகளின் தலைநகராக ஸன்ஆ நகரிலிருந்து சுமார் அறுபது மைல் தூரத்தில் உள்ள ம.ரிப் விளங்கியது. இக்காலத்தில் ஆட்சி செய்த ஸபஇ அரசர்களிடம் குருத்துவப் பண்பு இருக்கவில்லை. அவர்கள் ஆட்சித் தலைவர்களாக மட்டுமே இருந்தனர். அதனால், அவர்கள் 'மலிக் ஸப.' (ஸப.வின் அரசர்) என்ற பட்டத்தால் அழைக்கப்பட்டனர். இந்தக் காலம் ஸபஇகளின் மிகவும் புகழ் பூத்த யுகமாக விளங்கியது.

மாஈனீகளை விடவும் ஸபஇகள் நாகரிகச் சிறப்பும் பண்பாட்டு விருத்தியும் மிக்கவர்களாய் விளங்கினர். தொல்பொருளியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பொறிப்புக்களும் இடிபாடுகளும் அவர்களது நாகரிகச் சிறப்புக்குச் சான்று பகர்கின்றன. அவர்களது போக வாழ்க்கை பற்றியும் அவர்கள் பயன்படுத்திய ஆடம்பரமான தளபாடங்கள், தங்கத்தாலும் வெள்ளியாலுமான பாத்திரங்கள், கதவுகளையும் சுவர்களையும் கூரைகளையும் கொண்ட அவர்களது வீடுகள், அந்த வீடுகளில் தங்கம், வெள்ளி, யானைத்தந்தம், இரத்தினக்கற்கள் முதலியவற்றால் செய்யப்பட்டிருந்த அலங்கார வேலைப்பாடுகள் முதலியன பற்றியும் கி.பி. 100 ஆம் ஆண்டளவில் ஈபீஸஸ் நகரத்தைச் சேர்ந்த ஆர்ட்டெமிடோரஸ் என்பார் எழுதிய குறிப்புக்களும் அவர்கள் அடைந்திருந்த சால்புச் சிறப்பை எடுத்துரைக்கின்றன.[51]

தென் அறேபியாவில் ஸபஇகளின் ஆட்சி நடந்து கொண்டிருந்த அதே காலப்பகுதியில் கதபான், ஹழ்ரமவ்த் ஆகிய பிரதேசங்களில் வேறு இரண்டு அரசுகள் இருந்தன. இந்த இரண்டு அரசுகளையும் பற்றி அறபு

கதபான் அரசு

வரலாற்றாசிரியர்கள எதுவும் பிரஸ்தாபிக்காத போதிலும், இரதோஸ்தினஸ், தியோபிரேஸ்தஸ், ஸ்ட்ராபோ, பிளினி முதலான கிரேக்க எழுத்தாளர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். இந்த அரசுகள் பற்றிய குறிப்புக்களைக் கொண்ட பொறிப்புக்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கதபான் அரசு 'அதன்' நகருக்குக் கிழக்கே உள்ள பிரதேசத்தில் நிலைபெற்றிருந்தது. இந்த அரசு கி. மு. 400 முதல் கி. மு. 50 வரை நீடித்தது. மாஈனீகளைப் போலவே இந்த அரச மரபினரும் ஸபஇகளின் எதிரிகளாக இருந்தனர். அவ்வப்போது அவர்கள் இந்தப் பேரரசின் மீது படையெடுப்புக்கள் நடத்தி, இதனை அடிமைப்படுத்தினர். இப்போது குஹ்லான் என்று அழைக்கப்படும் தம்ன. இதன் தலை நகரமாக விளங்கியது. இந்த நகரில் மட்டும் 65 கோயில்கள் இருந்தன என்று பிளினி

50. Philip K. Hitti, op. cit., p.54
51. Maxime Rodinson, op.cit., p.21

கூறுகிறார்.[52] 'கதபானீ'கள் என்று அழைக்கப்பட்ட இந்தப்பேரரசின் குடிகள் நறுமணப்பொருள் வர்த்தகத்தில் பிரபல்யம் பெற்று விளங்கினர்.

இதே காலப்பகுதியில், தென் அறேபியாவில் நிலைபெற்றிருந்த மற்றொரு அரசு ஹழ்ரமவ்த் பேரரசு ஆகும். இந்த அரசு பற்றிய விரிவான விவரணங்களை கிரேக்க எழுத்தாளர்கள் தந்திருக்கின்றனர். ஷப்வா நகரம் (பண்டைய ஸ்போட்டா) இதன் தலைநகராக விளங்கியது. கி. மு. 5 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் கி.பி. 1 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை நீடித்த இந்த அரசு, கதபான் அரசைப் போலவே சில சமயங்களில் ஸபஇ ஆட்சியாளர்களால் வெற்றி கொள்ளப்பட்டு, அவர்களது ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. இந்த அரசும் நறுமணப்பொருள் வர்த்தகத்தில் கொடி கட்டிப் பறந்தது. இந்த அரசு நிலவிய பிரதேசத்தின் பண்டைய பெயர் 'ரய்தான்' என்பதாகும். அதனால், இதன் அரசர்கள் 'தூ ரய்தான்' (ரய்தானின் எசமானர்) என்று அழைக்கப்பட்டனர்.

ஹழ்ரமவ்த் அரசு

கி. மு. 115 ஆம் ஆண்டளவில், தென் அறேபியாவில் தோன்றி வளர்ந்த ஹிம்யரிய மரபாரின் புதிய ஆட்சி ஸபஇகளின் அரசுக்கும் கதபான், ஹழ்ரமவ்த் ஆகிய இடங்களில் நிலைபெற்றிருந்த அரசுகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தது. இவர்கள் ஸபஇகளின் அதே இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களைப் பற்றிய மிக ஆரம்பகாலக் குறிப்புக்கள் பிளினியின் வரலாற்று நூலிலேயே காணப்படுகின்றன. இவர்களது நாடு ஸப.'.வுக்கும் கடலுக்கும் இடையே நீண்டு கிடந்தது என்று அவர் குறிப்பிடுகிறார்.[53] ஆரம்பத்தில் இவர்கள் கதபான் பிரதேசத்திலேயே தமது அரசை நிறுவியிருந்தனர். பின்னர் ஸப.'., ரய்தான் ஆகிய பிரதேசங்களிலும் தமது ஆதிக்கத்தை விரிவாக்கம் செய்து கொண்டனர். இப்புதிய மரபைச் சேர்ந்த அரசர்கள் 'மலிக் ஸப.'.', 'தூ ரய்தான்' என்ற பட்டப் பெயர்களால் அழைக்கப்பட்னர். இந்த அரச மரபில் இருபத்தாறு அரசர்கள் இருந்தனர் என்று பெறிப்புக்களிலிருந்நு தெரிய வருகிறது.

ஹிம்யரிய அரசு

இவர்களது ஆட்சி இரண்டு கால கட்டங்களைக் கொண்டது. முதற் கட்ட ஆட்சி கி.மு. 115 முதல் கி.பி. 300 வரை நீடித்திருந்தது. ஸன்ஆவுக்குச் செல்லும் பாதையில், இப்போதைய 'முகா' நகருக்கு வடகிழக்கே சுமார் நூறு மைல் தொலைவில் உள்ள ளபார் (பண்டைய ஸப்பர்) என்ற பட்டினமே ஹிம்யரிய அரசின் தலைநகராக இருந்தது.இப்போதைய யரிம் பட்டினத்திற்கு அருகே உள்ள வட்டக் குன்றின் உச்சியில் இந்த நகரின் இடிபாடுகளை இன்றும் காணலாம். ஹிம்யரியரின் முதற்கட்ட ஆட்சியின் போதேதான் கி.மு. 24 இல், உரோமர் ஹிம்யரின் செல்வங்கள் மீது ஆசை கொண்டு,

52. *De Lacy O'Leary , op.cit. p.97*
53. *Ibid , p.101*

ஈலியஸ் கல்லஸ் என்பானின் தலைமையில் அறேபியாவின் மேல் படையெடுத்து வந்தனர். ஆனால், முதலாவதும் கடைசியானதுமான அவர்களது இந்தப் படையெடுப்பு முழுத் தோல்வியிலேயே முடிந்தது. அப்போது இலிஷரிஹா யஹ்ழுப் என்பான் ஹிம்யரிய மரபு அரசனாக இருந்தான்.[54]

இவர்களது முதற்கட்ட ஆட்சியின் ஆரம்ப காலத்தில், யமனிலிருந்தும் ஹழ்ரமவ்த்திலிருந்தும் அறேபியர் மேற்கு நோக்கி இடம் பெயர்ந்து சென்று, 'குஷ்களின் நாடு' என அழைக்கப்பட்ட அபிசீனியாவில் குடியேற்றம் ஒன்றை அமைத்துக் கொண்டனர். இந்த அறபுக் குடியேற்றவாசிகள் அங்கே அபிசீனிய இராச்சியத்திற்கும் நாகரிகத்திற்கும் வித்திட்டதோடு, உள்நாட்டு நீக்ரோக்கள் முன் ஒருபோதும் அடைந்திராத ஒரு கலாசாரத்தையும் விருத்தி செய்தனர். இவர்களது குடியேற்றத்தைத் தொடர்ந்து கிழக்கு ஆபிரிக்கக் கரை முழுவதிலும் அறேபியரின் பரம்பல் நிகழலாயிற்று.[55] இந்தக் காலத்தில் ஹம்யரியர் பல கோட்டைகளை யமனில் நிறுவியிருந்தனர். இந்தக் கோட்டைகளைப் பற்றிய விரிவான விவரணங்களை அறபுப் புவியியலாளரான அல் ஹம்தானீ தமது 'அல் இக்லீல்' என்ற நூலில் தந்திருக்கிறார். நாடோடி அறேபியரின் கொள்ளைத் தாக்குதல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஹிம்யரியர் இந்தக் கோட்டைகளை நிறுவினர். அவற்றுள் ஒன்று ஸன்ஆ நகரில் அமைந்திருந்த பாரிய கும்தான் கோட்டை ஆகும். இதனைக் கட்டியவன் லீஷர்ஹ் பின் யஹ்ஸுப் (இலிஷரிஹா யஹ்ழுப்) என்ற அரசனே என்று யாகூத் கூறுகிறார். ஒவ்வொன்றும் பத்து முழ உயரத்தை உடைய இருபது மாடிகளைக் கொண்ட இந்தக் கோட்டை கருங்கல், போர்பெரிக் கல், பளிங்குக் கல் முதலியவற்றால் கட்டப்பட்டிருந்தது. அரசனின் அரசவை இருபதாவது மாடியில் அமைந்திருந்தது. அங்கிருந்த அறைக்கு கருங்காலி, 'பிளேன்' மரம் ஆகியவற்றால் சட்டம் இடப்பட்ட பளிங்குச் சாளரங்கள் இருந்தன. அதன் கூரை ஆகாயம் தெரியக் கூடியவாறு ஊடுகாட்டும் ஒருவகை 'பெல்லூசிய' பளிங்குக்கற் பலகையால் வேயப்பட்டிருந்தது. கோட்டையின் நான்கு முகப்புகள் வெள்ளை, கறுப்பு, பச்சை, சிவப்பு முதலான பல்வேறு வண்ணங்கள் கொண்ட கற்களால் அமைக்கப்பட்டிருந்தன. அந்த அறையின் ஒவ்வொரு மூலையிலும் பித்தளையால் செய்யப்பட்ட சிங்கச் சிலை வைக்கப்பட்டிருந்தது. காற்று வீசிய போதெல்லாம் அது கர்ஜித்தது.[56] இஸ்லாத்தின் ஆரம்பகாலம் வரை இருந்த இந்தக் கோட்டையே வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட முதலாவது வானளாவிய கட்டடம் ஆகும். இப்போது இதன் இடிபாடுகள் காணப்படுகின்றன.

இந்த முதற் கட்ட ஆட்சிக்காலத்தில், ஹிம்யரிய அரசன் மானியப்பிரபு

54. *இவனது பெயரை ஸ்ட்ராபோ,'இலஸரஸ்' என்று குறிப்பிடுகிறார்.*
55. *Philip K. Hitti , op.cit., pp.56-7*
56. *R.A.Nicholson , op.cit., pp. 24-5: Philip K.Hitti, op.cit.,p.57*

ஒருவனைப் போலவே இருந்தான். கோட்டையில் வசித்து வந்த அவனுக்கு நிலங்கள் சொந்தமாக இருந்தன. தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களாலான நாயணயங்களையும் வெளியிட்டான். இக்கால ஹிம்யரியர் வர்த்தகத் துறையில் கொடி கட்டிப்பறந்தனர். கடல்வழி வர்த்தகத்திலும் தரைவழி வர்த்தகத்திலும் இவர்கள் ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கினர். ஐரோப்பாவை இந்தியாவோடு இணைத்த தரைவழி வணிகப்பாதைகளும் செங்கடல், அறபுக்கடல், மத்திய தரைக் கடல் ஆகியவற்றின் ஊடாகச் சென்ற கடல்வழிப் பாதைகளும் இவர்களது ஆதிக்கத்திலேயே இருந்தன. ஆயினும், ஹிம்யர்களுக்கு சர்வதேச வர்த்தகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இவர்களது காலத்திலேயே ஆரம்பித்தது. இவர்களது வீழ்ச்சியைத் தொடர்ந்து உரோமரும் தொலமிகளின் ஆட்சியின் கீழ் எழுச்சி பெற்ற எகிப்தியர்களும் சர்வதேச வர்த்தகத்தில் தனியுரிமை செலுத்தலாயினர்.

ஹிம்யரிய மரபாரின் இரண்டாம் கட்ட ஆட்சி கி. மு. 300 முதல் கி. பி. 525 வரை நீடித்திருந்தது. கி. பி. 340 முதல் கி. பி. 378 வரையிலான இடைவெளிக் காலத்தில் அபிசீனியர் தென் அறேபியாவைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர். இரண்டாம் கட்ட ஆட்சிக்காலத்தில் அரசு புரிந்த ஒன்பது ஹிம்யரிய மன்னர்களைப் பற்றிப் பொறிப்புக்கள் மூலம் தெரிய வந்திருக்கிறது. இந்த அரசர்கள் 'துப்ப.·.' என்று அழைக்கப்பட்டனர். இரண்டாம் கட்ட ஹிம்யரிய அரசர்களுள் அறபு இலக்கியத்திற்கு நன்கு அறிமுகமானவர்கள் ஷம்மர் யர்அஷ், அபூ கரிப் அஸ்அத் காமில் (கி.பி. 385-420) ஆகியோர் ஆவர். இவர்களுள் அபூ கரிப் என்பான் பாரசீகத்தின் மீது படையெழுச்சி நடத்தியவன் என்று கூறப்படுகிறது.

ஹிம்யரியர்களின் இரண்டாம் கட்ட ஆட்சிக் காலத்திலேதான் யூத மதமும் கிறித்தவ மதமும் யமனில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டன. முதலில் யூத மதத்தைத் தழுவிய அரசன் அபூ கரிப் அஸ்அத் காமில் (திபான் அஸ்அத் அபூ கரிப்) என்பானே என்று கூறப்படுகிறது. இவனது மரபில் பிறந்தவனும் இறுதி 'துப்ப.·.' ஆட்சியாளனுமான தூ நுவாஸ் அந்த மதத்தை தீவிரமாக யமனில் பரப்பினான். அவனது ஆட்சிக் காலத்தில், நஜ்ரானில் குடியேறியிருந்த பைமியூன் என்ற கிறித்தவத் துறவியின் முயற்சியால் அந்த நகரத்தில் வாழ்ந்த மக்கள் கிறித்தவ மதத்தை மிக ஆர்வத்தோடு தழுவினர். அதனால், ஆத்திரம் அடைந்த அவன் நஜ்ரானுக்குச் சென்று, அங்கு வாழ்ந்த மக்களை மீண்டும் பலவந்தமாக யூத மதத்தில் சேர்க்க முயன்றான். மதம் மாற மறுத்தவர்களைத் தீக்கிடங்கில் எறிந்து கொன்றான். இந்தச் சம்பவம் கி.பி. 523 அக்டோபரில் நிகழ்ந்தது. தூ நுவாஸின் படுகொலை முயற்சியிலிருந்து தப்பிய தவ்ஸ் தூ த.·.லபான் என்பார் உரோமப் பேரரசனும் உலகில் வாழ்ந்த கிறித்தவர்களின் பாதுகாவலனாகக் கருதப்பட்டவனுமான முதலாம்ஜஸ்டின் என்பானிடம் சென்று, நஜ்ரான் கிறித்தவர்களுக்கு நேர்ந்த

பயங்கரத்தை எடுத்தரைத்து, யமன் அரசனைப் பழிவாங்குவதற்கு அவனது உதவியைக் கோரினார். உரோம நாடு தென்அறேபியாவிலிருந்து வெகு தொலைவில் இருந்தமையால், உரோமப் பேரரசனால் நேர் உதவி எதுவும் அளிக்க முடியவில்லை. எனவே, அவன் உரோமப் பேரரசின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த அபிசீனிய சக்கரவர்த்தி கலப் எலா அஸ்பெஹா அல் நஜாஷீ என்பானுக்கு யமன் அரசனைப் பழிவாங்குமாறு எழுத்து மூலம் பணிப்புரை விடுத்தான். அவ்வாறே அல் நஜாஷீ, கி.பி. 525இல் அர்யாத் என்பானின் தலைமையில் 70,000 வீரர்களைக் கொண்ட அபிசீனியப்படை ஒன்றை தென் அறேபியாவுக்கு அனுப்பிவைத்தான். செங்கடலைக் கடந்து தென்அறேபியா வினுள் நுழைந்த அபிசீனியப்படையினர் தூ நுவாஸை தோற்கடித்து, யமனைக் கைப்பற்றிக் கொண்டனர். தனது படை வீரர்களின் தோல்வியால் ஏமாற்றமுற்ற தூ நுவாஸ் தனது குதிரையோடு கடலில் இறங்கி, அதன் அலைகளிடையே சென்று மறைந்தான்.

அபிசீனியர் ஆட்சி

இதன் பின்னர், அபிசீனியத் தளபதி அர்யாத், அல் நஜாஷீயின் பெயரால் சிறிது காலம் தென்அறேபியாவை ஆட்சி செய்தான். பின்னர், அவன் ஸன்ஆ நகரைத் தாயகமாகக் கொண்ட ஸும்யப.·. என்பானிடம் நாட்டை ஒப்படைத்து விட்டுத் தாயகம் சென்று விட்டான். அவன் தாயகம் திரும்பியபோது தனது அபிசீனியப் படையணிகளை யமனில் விட்டே சென்றிருந்தான். ஸும்யப.·. என்பவன் யூதனாக இருந்து, பின்னர் கிறித்தவ மதத்தைத் தழுவியவன்; அபிசீனியரின் படையெடுப்பின்போது அவர்களுக்கு மிகவும் உதவியாக இருந்தவன். கி.பி. 530 ஆம் ஆண்டளவில், யமனில் தங்கியிருந்த அபிசீனிய வீரர்கள் ஸும்யப.·.வுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர்; உரோம வியாபாரி ஒருவனின் அடிமையாக இருந்தவனும் அபிசீனியப் படையில் ஓர் உயரதிகாரியாகப் பணிபுரிந்தவனுமான அப்ரஹா என்பானை யமனின் ஆட்சியாளனாக்கினர். இந்தக் கிளர்ச்சியை அடக்குவதற்காக அபிசீனிய சக்கரவர்த்தி இருமுறை படைகளை அனுப்பிவைத்தார். ஆயினும், அப்படையெழுச்சிகள் தோல்வியிலேயே முடிவடைந்தன. அப்ரஹா, ஸன்ஆவைத் தனது அரசின் தலைநகராக்கினான். அங்கே அவன் அறபு வரலாற்றாசிரியர்களால் 'அல் கலீஸ்' என்று அழைக்கப்படும் பெரும் மாதாகோயில் ஒன்றைப் பண்டைய ம.·.ரிப் நகரின் இடிபாடுகள் மீது அமைத்து, அதனை மக்கா நகரின் புனித க.·.பா ஆலயத்திற்கு நிகரானதாக மாற்ற முயற்சிகள் செய்தான்.

இந்தக் காலப்பகுதியிலேயே ம.·.ரிப் நகரின் பாரிய அணை நிரந்தரமாக உடைந்து, பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதற்கு முன்பும் இந்த அணை பலமுறை உடைப்பெடுத்தது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் ஏற்பட்ட உடைவு பற்றிய குறிப்பு கிடைத்திருக்கிறது. பின்னர், கி.பி. 447 - 450 அளவிலும் இந்த அணை உடைப்பெடுத்து, யமனில் பெரு வெள்ளம்

ஏற்பட்டது. இந்த உடைப்பை அபிசீனிய ஆட்சியாளனான அப்ரஹா ஓரளவுக்கு திருத்தி அமைத்தான். இது சம்பந்தமான குறிப்பைக் கொண்ட பொறிப்பு ஒன்றையும் அவன் விட்டுச் சென்றான்.[57] பின்னர், கி.பி. 542 ஆம் ஆண்டிற்கும் கி.பி. 570 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த அணை நிரந்தரமாக உடைந்து பெரும் வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தி அழிந்து போயிற்று.[58] இறுதியான இந்தப் பேரழிவு பற்றியே அல் குர்ஆனில் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது.(34:16) இந்த அணை உடைப்புக்களையும் வெள்ளப்பெருக்கு களையும் தொடர்ந்து தென்அறேபியாவில் விவசாயம் அழிந்தது; செழிப்பும் மறைந்தது. அதனால், யமனியர் வடக்கு நோக்கி இடம்பெயர்ந்து சென்று, சிரியாவிலும் இராக்கிலும் ஹிம்யரியக் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர். இந்த அணை உடைப்புக்களுக்கு நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே இந்தப் பிரதேசங்களில் அறபு வர்க்கங்கள் வாழ்ந்து வந்த போதிலும், தென்அறேபிய வர்க்கங்களின் பரவலான குடியேற்றங்கள் அணை உடைப்புகளுக்குப் பின்னரே அதிக அளவில் இடம் பெற்றன. கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் ஏற்பட்ட உடைப்பைத் தொடர்ந்து ஙஸ்ஸான் வர்க்கத்தினர் சிரியாவில் உள்ள ஹவ்ரான் பிரதேசத்திற்குக் குடிபெயர்ந்து சென்று, உரோமரின் மேலாதிக்கத்தை ஏற்று வாழலாயினர். லக்ம் (தனூக்) வர்க்கத்தினர் யூபிரதிசு நதியின் மேற்கே கிடந்த அல் ஹீரா பிரதேசத்தில் குடியேறி வாழலாயினர். பின்னர், அணையில் ஏற்பட்ட ஒவ்வொரு உடைப்பின் போதும் தென்அறேபியாவின் பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த மக்கள் வடக்கு நோக்கிப் பெருமளவில் குடிபெயர்ந்து சென்று, தமக்கு வசதியான இடங்களில் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர்.

யமனில் அப்ரஹாவும் அவனுக்குப் பின்னர் ஆட்சிபீடம் ஏறியோரும் கொடுங்கோன்மை புரிந்தனர். அவர்களது கொடுங்கோன்மையைச் சகிக்க முடியாத மக்கள் தூ நுவாஸின் ஆதரவாளர்களுள் ஒருவனான ஸய்ப் பின் தீ யஷன் என்பானின் தலைமையில் தேசிய இயக்கம் ஒன்றை அமைத்து, அபிசீனியரிடமிருந்து தமது புராதன இராச்சியத்தை விடுவிக்கப் பல்வேறு வழிகளில் முயன்றனர். இறுதியில், அல் ஹீராவின் அறபு மன்னன் ஏற்படுத்திக் கொடுத்த அறிமுகத்தோடு பாரசீகப் பேரரசன் குஸ்ராவ் அனூஷர்வானை மதாஇன் நகரில் இருந்த அவனது அரசவையில் சந்தித்து, அவனது உதவியைக் கோரினர். ஆரம்பத்தில் சாதகமான பதில் எதுவும் அளிக்கத் தயங்கிய பாரசீகப் பேரரசன் பின்னர், புகழ்பெற்ற பாரசீகத் தளபதியான வஹ்ரிஷ் என்பானின் தலைமையில் படையணி ஒன்றை அனுப்ப இணங்கினான். அவ்வாறே, கி.பி. 575 இல் யமனினுள் பிரவேசித்த 800 வீரர்களைக் கொண்ட பாரசீகப்படை அபிசீனியரைத்

பாரசீகர் ஆட்சி

57. *De Lacy O'Leary , op.cit.,pp.49-50*
58. *Philip K.Hitti, op.cit.,p.64*

தோற்கடித்து, நாட்டை விட்டே துரத்தியது. இந்த வெற்றியின் பின்னர், முதலில் கூட்டு நிர்வாகம் ஒன்று யமனில் ஏற்படுத்தப்பட்டது. ஸய்ப் பின் தீ யஷன் யமனின் பட்டத்து ஆட்சித்தலைவனாக பாரசீகரால் பிரகடனம் செய்யப்பட்டான். அவன் அபிசீனியரின் ஆட்சியில் கைவிடப்பட்டுக் கிடந்த கும்தான் கோட்டையில் தனது வாசஸ்தலத்தை அமைத்து ஆட்சி செய்து வந்தான். ஆனால், அவன் மரணித்த சில ஆண்டுகளில், பாரசீகப் பேரரசின் ஒரு பகுதியாக யமன் இணைத்துக் கொள்ளப்பட்டது. இஸ்லாத்தின் அரசியல் எழுச்சி உருவாகும் வரை இது பாரசீகரின் ஆதிக்கத்திலேயே இருந்து வந்தது. கடைசி பாரசீக ஆளுநரான பாதான் கி.பி. 628 இல் இஸ்லாத்தைத் தழுவியதைத் தொடர்ந்து யமன் முஸ்லிம் மாகாணங்களுள் ஒன்றாயிற்று.

தென் அறேபியாவில் வலிமை வாய்ந்த அரசுகள் நிலைபெற்றிருந்த அதே காலப்பகுதியில் அறேபிய தீபகற்பத்தின் வட பகுதியிலும் மத்திய பகுதியிலும் சில சிற்றரசுகள் இருந்தன. அவற்றுள் வட அறேபியாவில் நிலைபெற்றிருந்ததும் மிகத்தொன்மை வாய்ந்ததுமான நபதிய அரசு குறிப்பிடத்தக்கது. நபதியர்கள், நபி இஸ்மாஈலின் புதல்வர்களுள் ஒருவரான நிப்த் என்பாரின் சந்ததியினர்.[59] இவர்கள் கி. மு. 6ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இப்போது ஜோர்தான் என்று அழைக்கப்படும் பகுதியிலிருந்து நாடோடி வர்க்கங்களாக எதோமியரின் நாட்டிற்கு வந்து, பின்னர் அங்கிருந்து பீட்ரா பிரதேசத்தினுள் நுழைந்து, அதனையே தமது வாழிடமாக மாற்றிக் கொண்டவர்கள். இப்போது 'வாதி மூஸா' என்று அழைக்கப்படும் பீட்ரா நகரமே இவர்களது தலைநகரமாக விளங்கியது. 3000 அடி உயரத்தில், வரண்ட மேட்டுநிலம் ஒன்றில் அமைந்திருந்த இந்த நகரத்தை அவர்கள் பாறைகளைக் குடைந்து எழிலுற நிர்மாணித்திருந்தனர். கி.மு. 4 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து சுமார் நான்கு நூற்றாண்டுகள் வரை, ஸப.'.விலிருந்து மத்திய தரைக்கடற்கரை வரை நீண்டு கிடந்த வர்த்தகப்பாதையில் இதுவே மிகப்பிரதான நகரமாக விளங்கியது. இங்கு சுத்தமான நீர் பெருமளவில் கிடைத்தமையால், வணிகக் குழுக்கள் அனைத்தும் இந்த நகரத்தினூடாகவே தமது வர்த்தகப் பயணங்களை மேற்கொண்டன. இந்த அரசின் ஆரம்ப காலம் சரியாகத் தெரியவில்லை. ஆனால், கி.மு. 312 ஆம் ஆண்டளவில் மகா அலெக்ஸான்டருக்குப் பின்னர் சிரியாவை ஆட்சி செய்த முதலாம் அன்ரிகோனஸ் (382- 301) என்பானால் நபதியர்களுக்கு எதிராக அனுப்பப்பட்ட இரண்டு படையெழுச்சிகளை எதிர்த்து நின்று முறியடிக்கும் அளவுக்கு இவர்கள் பலம்பெற்றிருந்தனர் என்று தெரிகிறது. அப்போது, இவர்கள் எகிப்தை ஆட்சி செய்த தொலமியர்களின் செல்வாக்கினுள் சிக்குண்டு கிடந்தனர். பின்னர், உரோமர்களின் நட்பாளராக மாறிய இவர்கள் கி.மு. 24 இல்,

நபதிய அரசு

59. *Syed Muzaffaruddin Nadvi , op.cit.,p42*

கல்லஸ் என்பானின் தலைமையில் உரோமரால் அறேபியா மீது மேற்கொள்ளப் பட்ட படையெடுப்பில் அவர்களுக்கு உதவினர். மூன்றாம் அல் ஹாரித் அரிதாஸ் (கி.மு. 87-62) என்பானின் ஆட்சிக்காலத்திலேயே இவர்களுக்கும் உரோமப் பேரரசுக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அப்போதுதான் நபதிய நாணயங்கள் முதன்முறையாக வெளியிடப்பட்டன. கி.மு. 47 இல் ஜுலியஸ் ஸீஸர், நபதிய அரசனான முதலாம் மாலிக் என்பானைச் சந்தித்து, அலெக்சாந்திரியப் போருக்குத் தேவையான குதிரைப் படையை அவனிடம் ஒப்படைத்தான். அவனுக்குப்பின்னர் ஆட்சி பீடமேறிய மூன்றாம் உபைதா (கி.மு.28-9) என்பானின் பதவிக் காலத்திலே தான் அறேபியாமீதான உரோமரின் படையெடுப்பு நிகழ்ந்தது. இந்த அரசின் புகழ் நான்காம் அல்ஹாரித் (கி.மு.9 - கி.பி.40) என்பானின் ஆட்சிக்காலத்திலேயே உச்சநிலை அடைந்திருந்தது. இந்தக் காலத்தில் இவர்களது அரசியல் ஆதிக்கம் அறேபியா பீட்ராவில் மட்டுமன்றி, நஜ்திலிருந்து செங்கடற்கரை வரை - வட ஹிஜாஷில் உள்ள மதாஇன் ஸாலிஹ் (ஹிஜ்ர்) முதல் தமஸ்கஸ் வரை - நீண்டு கிடந்த பகுதிகளிலெல்லாம் பரவி இருந்தது. இந்த இராச்சியத்தை ஆட்சி செய்த முதலாம் அல் ஹாரித் (கி.மு. 169) முதல் இரண்டாம் ரப்பீல் (கி.பி. 71-106) வரையிலான நபதிய மன்னர்களின் பெயர்கள் அந்தப் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட பொறிப்புக்கள் மூலமும் டையோடொரஸ் சிகூலஸ், ஜோசெபெஸ் முதலான பண்டைய எழுத்தாளர்களின் குறிப்புக்கள் மூலமும் தெரிய வந்திருக்கின்றன. கி.பி. 105இல், உரோமப் பேரரசனான ட்ராஜன் இந்த இராச்சியத்தைக் கைப்பற்றி, அடுத்த ஆண்டில் இதனைத் தனது பேரரசோடு இணைத்துக் கொண்டான். இதன் பிறகு நபதியரின் பிரதேசம் உரோமருக்கும் தென்மேற்கு ஆசியாவில் அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்த பர்தியருக்கும் இடையே ஒரு ஏம நாடாக (Buffer State) இருந்து வந்தது.

அறேபியாவின் வட பகுதியில் நிறுவப்பட்டிருந்த மற்றொரு அரசு தத்மூர் (பல்மைரா) இராச்சியம் ஆகும்.[60] சிரியாப் பாலைவனத்தின் மத்தியில், பாலைவனச்சோலை ஒன்றில் அமைந்திருந்த தத்மூர் (பல்மைரா) நகரத்தில்

தத்மூர் அரசு

நிறுவப்பட்டிருந்த இந்த அரசு எப்போது ஆரம்பமாயிற்று என்பது சரியாகத் தெரியவில்லை. இது மிகப் புராதன நகரம் என்பது அசீரிய அரசன் முதலாம் திஜ்லத் பைலஸர் (கி.மு. 1116-1077) என்பானின் பொறிப்பு ஒன்றின் மூலம் தெரிய வருகிறது. அந்தப் பொறிப்பில் இந்த நகரம் 'அமுர்ருவின் தத்மர்' என்ற பெயரால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நகரம் பற்றிய நம்பத்தகுந்த முதலாவது குறிப்பு, உரோம வீரனும் அரசறிஞனுமான மார்க் அந்தோனி (கி.மு. 83-30)

60. தத்மூர் என்பது பல்மைரா நகரின் ஆரம்பகால செமித்தியப் பெயர் ஆகும். இந்த நகரம் நபி சுலைமானுக்காக ஜின்களால் கட்டப்பட்டது என்று அறபுக்கதைகள் கூறுகின்றன. இது பற்றி அறபுக்கவிஞர் நாபி஘ா அல் துப்யானீயும் தமது கவிதை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார். (யாகூத் அல் ஹமவீ, முஃஜமுல் புல்தான், 11 / 17)

என்பான் கி.மு. 41-42 இல் அந்த நகரில் இருந்த செல்வங்களைக் கவர்ந்து செல்ல எடுத்த வீணான முயற்சி பற்றிய தகவல் மூலம் கிடைத்துள்ளது. கி. மு. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த தத்மூர் பொறிப்பு ஒன்றின் மூலம் உரோம, பர்திய அரசுகளுக்கிடையே இந்த நகரம் முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தக மையமாக விளங்கியது என்ற தகவல் காணப்படுகிறது.[61] இந்தக் குறிப்புக்களை வைத்து நோக்குகையில் இந்த அரசு கி.மு.முதலாம் நூற்றாண்டின் முதல் அரைப்பகுதியிலேயே தோன்றியிருக்க வேண்டும் என்று துணியலாம். ஆயினும், கி.பி. 272ஆம் ஆண்டு வரை இது நிலைபெற்றிருந்தது என்பது நிச்சயமாகத் தெரிகிறது.

இரண்டு பகை அரசுகளான உரோம, பர்திய இராச்சியங்களுக்கிடையே அமைந்திருந்த இந்த அரசு நடுநிலைப் போக்கு காரணமாகப் பிறநாட்டார் தொல்லை இல்லாமல் சிறப்புற்று விளங்கியது. இந்த அரசு கடைப்பிடித்து வந்த நடுநிலைக்கொள்கை இதன் பாதுகாப்பிற்குப் பெரிதும் உதவியது. ஆயினும், பின்னர் இது உரோமச் சார்புடையதாய் நடந்து கொண்டது. உரோமப் பேரரசனான ஹட்ரியன் (கி.பி. 117-38) என்பானின் ஆட்சிக்காலத்தில் தத்முரும் அதன் சார்பு நகரங்களும் உரோமப் பேரரசின் தொழும்புப் பிரதேசங்களாயின. கி.பி. 130 இல் ஹட்ரியன் இங்கு வருகை தந்ததைத் தொடர்ந்து இந்த நகரம் 'ஹட்ரியானா பல்மைரா' என்று அழைக்கப்பட்டது. செப்டிமியஸ் செவிரஸ் (கி.பி. 193-211) என்ற உரோம அரசனின் காலத்தில் இந்த அரசும் இதன் பட்டினங்களும் உரோமப் பேரரசின் மாகாண நகரங்களாக மாற்றப்பட்டன. மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், இந்த அரசு குடியேற்ற நாட்டின் அந்தஸ்தைப் பெற்றது. ஆயினும், இவர்கள் உரோம அரசின் மேலாதிக்கத்தைப் பெயரளவில் ஏற்று சுயாதீனமான நிருவாகத்தையே செய்து வந்தனர்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே நிகழ்ந்த வர்த்தகத்தின் மையத் தலமாக விளங்கிய இந்த இராச்சியம் கி.பி. 130 ஆம் ஆண்டிற்கும் 270 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், வளர்ச்சியினதும் புகழினதும் உச்சத்தை அடைந்திருந்தது. இந்தக் காலத்தில், இதன் சர்வதேச வர்த்தகம் சீனா வரை நடைபெற்றது. இந்த அரசின் ஆட்சியாளர்களுள் ஒருவனான உதைனா, கி.பி. 260இல் உரோமப் பேரரசன் வலேரியனைத் தோற்கடித்து, சிரியாவின் பெரும் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டவனும் பர்தியருக்குப் பிறகு பாரசீகத்தில் தோன்றிய ஸாஸானிய அரச மரபைச் சேர்ந்தவனுமான முதலாம் ஷாபூர் என்பானை கி.பி. 265இல், அவனது தலைநகரமான மதாஇனின் (தெசிபொனின்) சுவர்கள் வரை துரத்திச் சென்று, அவனை சிரியாவிலிருந்து விரட்டியடித்தான். இவனது துணிகரச் செயலால் கவரப்பட்ட உரோமப் பேரரசன் கல்லீனஸ் (கி.பி. 253-268) இவனுக்கு 'ஓகஸ்டஸ்'

61. Philip K Hitti,op.cit.,pp.74-75

என்ற உயர் விருதை வழங்கிக் கௌரவித்ததோடு, கிழக்குலகில் இருந்த உரோமப் படையணிகளின் தலைவனாகவும் இவனை அங்கீகரித்தான். ஆயினும், ஓராண்டின் பின்னர், 266 - 67இல், இவனும் இவனது மூத்த புதல்வனும் ஹிம்ஸ் (எமெஸ்ஸா) நகரில், உரோமரின் சூழ்ச்சியினால் கொல்லப்பட்டனர்.

உபைதாவுக்குப்பின்னர், அவனது விதவை அல் ஷப்பா.·. (ஷெனோபியா) அவளது பருவமடையாத மகன் வஹ்ப் அல்லாத் என்பானின் சார்பில் தத்முர் ஆட்சி பீடமேறினாள். மிகுந்த துணிச்சலும் ஆற்றலும் வாய்ந்த பெண்ணாக இருந்த இவள் பண்டைய எகிப்தின் இராணி கிளியோபட்ராவைப் போல ஒரு பேரரசை நிறுவ முயன்றாள். உரோமர்களுக்கு எதிராகப் படை நடத்திச் சென்று, தனது இராச்சியத்தின் எல்லைகளை எகிப்து, ஆசியா மைனர் ஆகிய பிரதேசங்கள் வரை விஸ்தரித்தாள். 270இல், இவள் அலெக்ஸாந்திரியாவைக் கைப்பற்றி, அங்கே தனது பருவமடையாத மகனை எகிப்தின் அரசனாக்கினாள். உரோமப் பேரரசன் ஓரெலியன் (270-75) என்பானின் உருவச் சின்னம் பொறிக்கப்படாத புதிய நாணயங்களையும் அங்கே வெளியிட்டாள். ஆயினும், உரோம அரசன் ஓரெலியன் இவளுக்கு எதிராகத் தானே நேரில் படை நடத்தி வந்து அன்தியொக், ஹிம்ஸ் ஆகிய இடங்களில் நடைபெற்ற சண்டைகளில் இவளைத் தோற்கடித்து, இறுதியில் கி.பி. 272 வசந்த காலத்தில், தத்முர் நகரினுள் நுழைந்தான். இராணி அல் ஷப்பா.·. சிறைப்பிடிக்கப்பட்டு, ரோம் நகருக்குக் கொண்டு செல்லப்பட்டாள். தத்முர் நகரினுள் நுழைந்த உரோம அரசன் நகரத்தை முற்றாக அழித்தான். அங்கே புகழ் பெற்று விளங்கிய 'பெல்' (சூரியக் கடவுள்) கோயிலில் இருந்த ஆபரணங்களையெல்லாம் தத்முர் இராச்சிய வெற்றியின் நினைவாகத் தான் ரோம் நாட்டில் கட்டவிருந்த சூரியக்கடவுளின் ஆலயத்திற்காக எடுத்துச் சென்றான். இந்தச் சம்பவத்தோடு தத்முர் அரசும் அதன் நாகரிகமும் ஒழிந்தன. இந்த அரசு நிலவிய காலத்தில் இங்கே புகழும் சிறப்பும் பெற்று விளங்கிய பல்மைரா நாகரிகத்தின் நினைவுச் சின்னங்களாகப் பல கட்டடங்களின் இடிபாடுகள் இன்றும் காணப்படுகின்றன. ஆயினும், அவை இன்னும் முழுமையாக அகழ்வாய்வுகள் செய்யப்படவில்லை.

தென் அறேபியாவிலிருந்து அறேபியாவின் வடக்கே குடியேறிய யமனிய வர்க்கங்களைச் சேர்ந்தவர்களும் அங்கே வலிமை வாய்ந்த இரண்டு அரசுகளை நிறுவி இருந்தனர். அவற்றுள் ஒன்று ஙஸ்ஸானிய அரசு ஆகும். ஙஸ்ஸானியர் எனப்படுவோர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில், ம.·.ரிப் நகர அணை உடைப்பெடுத்து வெள்ளம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, அம்ர் முஷைகியா.·. பின் ஆமிர் மா.·. அல் ஸமா.·. என்பாரின் தலைமையில் யமனிலிருந்து இடம் பெயர்ந்து வந்து, வடமேற்கு அறேபியாவில் உள்ள ஹவ்ரான்,

ஙஸ்ஸானிய அரசு

பல்கா.·. ஆகிய பகுதிகளில் குடியேறிய யமனிய வர்க்கம் ஒன்றின் சந்ததியினர் ஆவர். இந்த அரசின் தாபகன் அம்ர் முஷைகியா.·.வின் புதல்வன் ஜப்னா என்பவன் ஆவான். இந்த இராச்சியத்தை ஆட்சி செய்த அரசர்களின் எண்ணிக்கை முப்பத்தொன்று என்று அபுல் பிதா.·.வும் முப்பத்திரண்டு என்று அல் இஸ்பஹானீயும் பதினொன்று என்று அல் மஸ்ஊதீ, இப்ன் குதைபா ஆகியோரும் கூறுகின்றனர்.[62]

இந்த வர்க்கத்தினர் சிரியாவில் அரசு ஒன்றை நிறுவியிருந்த முதல் அறேபியர்களான அல் ஸலீஹ் வர்க்கத்தவர்களை விரட்டிவிட்டு, ஙஸ்ஸானிய அரசை அங்கு தோற்றுவித்தனர். தமஸ்கஸின் தென் கிழக்குப் பிரதேசத்தில், ம.·.ரிப் நகரை தமஸ்கஸோடு இணைத்த பெரும் போகுவரத்துப் பாதையின் வடமுனையில் அமைந்திருந்த இந்த அரசு ஆரம்பத்தில் ஸலீஹ் வர்க்கத்தைச் சேர்ந்த ழஜாஇமா குடும்பத்திற்குத் திறை செலுத்தி வந்தது. பின்னர், இரு வர்க்கத்தாருக்குமிடையே ஏற்பட்ட போராட்டத்தில் ஙஸ்ஸானியர் வெற்றி பெற்று, அந்தப் பிரதேசத்தில் தமது ஆதிக்கத்தை நிறுவி, உரோமரின் பிரதிநிதிகளாக ஆட்சி செய்து வந்தனர்.[63] ஹவ்ரான், பல்கா.·., பீனிசியா, லிபனம், பலஸ்தீன் பிரீமா, சிகுண்டா ஆகிய மாவட்டங்களை இந்த அரசு உள்ளடக்கி இருந்தது.[64] காலப்போக்கில் கிறித்தவ மதத்தைத் தழுவி சிரியமயமானவர்களாய் மாறி இருந்த ஙஸ்ஸானியர் தமது தாய்மொழியான அறபைக் கைவிட்டு, சிரியாவின் அரேமிய மொழியைப் பேசலாயினர். ஆரம்பத்தில் நடமாடும் கூடாரம் ஒன்றே இவர்களது தலைநகரமாகத் தொழிற்பட்டது. பின்னர், ஜவ்ஹான் பிரதேசத்தில் உள்ள அல் ஜாபியா இவர்களது தலைநகராக இருந்தது. சிறிது காலம் ஜில்லிக் என்ற இடமும் இவர்களது தலைநகராக விளங்கியது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில், உரோமப் பேரரசின் நேர் அரசியற் செல்வாக்கு வட்டத்தினுள் நுழைந்த இந்த அரசு உரோமரின் எதிரிகளான பாரசீகர், (அவர்களது நட்பாளர்களான) அல் ஹீரா அரசின் லக்மியர் ஆகியோரிடமிருந்து உரோமரின் எல்லைப் புறங்களைக் காவல் செய்யும் ஒரு ஏம நாடாகவே இருந்தது.

இந்த அரசைச் சேர்ந்த ஆட்சியாளர்களுள் நம்பத்தகுந்த வரலாற்றுக்குத் தெரிந்த முதலாவது அரசன் ஹாரித் பின் ஜபலா (கி.பி.529-69) என்பவன் ஆவான். அறபு வரலாற்றாசிரியர்களால் அல் ஹாரித் அல் அ.·.ராஜ் (நொண்டியான அல் ஹாரித்) என்று அழைக்கப்படும் இவனைஉரோமப் பேரரசன் முதலாம் ஜஸ்டீனியன் (527-65) கி.பி. 529இல் சிரியாவின் அறபு வர்க்கத்தவர்களுக்கெல்லாம் தலைவனாக நியமித்து, தனது அந்தஸ்துக்கும் பட்டங்களுக்கும் அடுத்த தரத்திலுள்ள அந்தஸ்தையும்

62 *Ibid ,p.78*
63 *R.A.Nicholson, op.cit,p.50*
64 *S.A.Q.Husaini, Arab Administration, p.6*

பட்டங்களையும் இவனுக்கு அளித்துக் கௌரவித்தான். இவனது ஆட்சிக் காலத்தின் பெரும் பகுதி உரோமரின் பகை அரசனான அல்ஹீராவின் மூன்றாம் முன்திரோடு உரோமருக்காகப் போராடுவதிலேயே கழிந்தது. 554இல், கின்னிஸ்ரீன் என்ற இடத்தில் நிகழ்ந்த சண்டையில் இவன் லக்மிய அரசனைக் கொன்றான். 'யவ்ம் ஹலீமா' (ஹலீமாவின் நாள்) என்று இவனது மகளின் பெயரால் அழைக்கப்படும் இந்தச் சண்டை அறேபியரின் வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இவனுக்குப் பின்னர், இவனது மகன் முன்திர் ஆட்சிபீடமேறினான். 580 இல் இவன் கொன்ஸ்தாந்தினோபிளுக்குச் சென்றபோது, அப்போதைய உரோம அரசன் இரண்டாம் திபரியஸ் (578-582) இவனை அதிக கௌரவங்களோடு வரவேற்றான். அதே ஆண்டில் லக்மியரின் தலைநகரமான அல் ஹீரா மீது படையெடுத்துச் சென்று, அந்த நகரை எரித்தான். ஆனால், இவனுக்கும் உரோம அரசுக்கும் இடையே ஏற்பட்ட சில தகராறுகள் காரணமாக இவன் அந்த அரசுக்கு எதிராகப் பகைப்போக்கைக் கடைப்பிடிக்கலானான். அதனால், இவன் 581இல் கொன்ஸ்தாந்தினோபிளுக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் சிசிலியில் சிறை வைக்கப்பட்டான். இவனுக்குப் பின்னர் பதவியேற்ற இவனது மகன் நு.'.மான் என்பானும் உரோமருக்கு எதிரான பகைப்போக்கு காரணமாக கொன்ஸ்தாந்தினோபிளுக்குக் கொண்டு செல்லப்பட்டான்.

இவர்களுக்குப் பின்னர் ஙஸ்ஸானிய இராச்சியத்தில் ஆட்சியறவு நிலை உருவானது. மக்களின் பல்வேறு பிரிவினரும் தத்தமது சொந்தத் தலைவர்களைத் தெரிவு செய்து கொண்டனர். ஆயினும், இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட உள்ளூர் ஆட்சித் தலைவர்கள் பெரும்பாலும் ஜப்னாவின் மரபைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். பாரசீகத்தின் ஸாஸானியப் பேரரசனான குஸ்ரவ் பர்வீஷ் 613-14 இல் சிரியாவையும் பலஸ்தீனையும் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஙஸ்ஸானிய அரசு முழுமையாக ஆட்டம் கண்டு, ஒழிந்து போயிற்று. அறபு வரலாற்றாசிரியர்களின் கருத்துப்படி - இந்த அரசின் இறுதி அரசன் ஜபலா பின் அல் அய்ஹம் என்பான் ஆவான். 639இல் நிகழ்ந்த யர்மூக் போரின் போது இவன் உரோமர்களின் பக்கம் நின்று முஸ்லிம்களுக்கு எதிராகப் போரிட்டான். பின்னர் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டான். ஆயினும், பின்னர் கலீபா உமர் இவனுக்கு எதிராக வழங்கிய தீர்ப்பு ஒன்றைச் சகிக்க முடியாமல், இவன் இஸ்லாத்தைத் துறந்து கொன்ஸ்தாந்தினோபிளுக்குச் சென்று விட்டான்.[65]

ஙஸ்ஸானியர் நாகரிகச் சிறப்பில் பாரசீக எல்லைப் புறத்தில் நிலைபெற்றிருந்த அல் ஹீரா அரசின் லக்மியரை விடவும் உயர்ந்தவர்களாய் இருந்தனர். அறேபிய, சிரிய, கிரேக்கப் பண்புகளின் கலப்பைக் கொண்ட தனிப்பட்ட நாகரிகமொன்றை விருத்திசெய்த அவர்கள் பாறைகளைக் குடைந்து

65. இப்ன் அப்த் ரப்பிஹி, அல் இக்துல் பரீத், பாகம் 1, பக்கம் 140–41

அழகிய மாளிகைகளையும் தங்களது இராணுவ வெற்றிகளின் நினைவுச் சின்னங்களாகப் பெரும் வில் வளைவுகளையும் நிறுவியிருந்தனர். அவர்களது ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த பகுதிகளில் பொதுக் குளியலறைகள், நீர்க் கால்வாய்கள், தேவாலயங்கள், அரங்குகள் முதலியன அதிக எண்ணிக்கையில் காணப்பட்டன. ஙஸ்ஸானிய ஆட்சியாளர்கள் கவிஞர் களையும் கலைஞர்களையும் ஆதரிக்கும் புரவலர்களாக இருந்தனர். புகழ் பெற்ற அறபுக் கவிஞர்களான நாபிஙா, லபீத் முதலானோர் அவர்களால் பெரிதும் ஆதரிக்கப்பட்டனர். 'ஹலீமா' போரின் போது, லபீத் ஙஸ்ஸானியர் களுக்காகக் களத்தில் நின்று போரிட்டார். ஹஸ்ஸான் பின் தாபித் தமது இளமைக் காலத்தில்,ஙஸ்ஸானிய அரசவையைத் தரிசித்து அவர்களது ஆதரவைப் பெற்றார். அவர்களைப் பற்றி ஹஸ்ஸான் இயற்றிய கவிதைகள் சில அவரது 'தீவா'னிலே காணப்படுகின்றன. ஒரு கவிதையிலே ஙஸ்ஸானிய மரபின் இறுதி அரசனான ஜபலாவின் அரசவையில் பாபிலோனிய இசையை இசைத்துக் கொண்டும் கிரேக்க பாடல்களைப் பாடிக்கொண்டும் இருந்த கிரேக்க, ஹீரா பாடகிகளைப் பற்றியும் மக்காவிலிருந்து வந்திருந்த அறேபிய பாடகர்களைப் பற்றியும் இசை விருந்தின் போது அரசனும் அரசவையினரும் அணிந்திருந்த ஆடைகள், பருகிய மது முதலியவை பற்றியும் குறிப்பிட்டுள்ள அவர், அரசன் தான் அணிந்திருந்த போர்வையை தமக்குத் தந்து தம்மைக் கௌரவித்தமை பற்றியும் தெரிவித்திருக்கிறார்.[66]

அறேபியாவின் வடமேற்கே ஙஸ்ஸானிய அரசு நிலவிய அதே காலப் பகுதியில், அறேபியாவின் வடகிழக்கே நிலைபெற்றிருந்த ஒரு அரசு அல் ஹீரா அரசு ஆகும். கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், யமனிய

ஹீரா அரசு

மூலத்தைக் கொண்ட சில நாடோடி வர்க்கங்களைச் சேர்ந்த அறேபியர் தங்களுக்குள் ஒரு கூட்டிணைப்பை ஏற்படுத்திக் கொண்டனர். தங்களை 'தனூக்' என்று அழைத்துக் கொண்ட அவர்களின் நோக்கம் பர்தியரின் வீழ்ச்சியையும் ஸாஸானியரின் எழுச்சியையும் தொடர்ந்து பாரசீகத்தில் உருவாகி இருந்த குழப்ப நிலையைப் பயன்படுத்தி, யூபிரதிசு நதிக்கு மேற்கே கிடந்த செழிப்பான பிரதேசத்தில் தங்களுக்கெனச் சொந்தமான குடியிருப்புக்களை அமைத்துக் கொள்ளுதல் ஆகும். இவ்வாறு குடியிருப்புக் களை அமைத்துக்கொண்ட அவர்களுள் ஒரு பகுதியினர் நாடோடி வாழ்க்கையைத் தொடர, மற்றவர்கள் நிரந்தரமாகத் தங்கி விவசாயத்தில் ஈடுபடலாயினர். காலப்போக்கில் அந்தப் பிரதேசத்தில் கிராமங்களும் பட்டினங்களும் தோன்றி வளரலாயின. இவ்வாறு உருவாகி வளர்ந்து செழிப்புற்ற நகரங்களுள் ஒன்று பண்டைய பாபிலோனுக்கு அயலில், கூபாவுக்குத் தெற்கே மூன்று மைல் தூரத்தில் அமைந்திருந்த அல் ஹீரா ஆகும். இந்த நகரைத் தலைநகரமாகக் கொண்டே ஹீரா அரசு உதயமானது.

66 R.A.Nicholson, op.cit., pp:52-3

'தனூக்' கூட்டிணைப்பைச் சேர்ந்த அறேபியரின் முதலாவது தலைவனாக இருந்தவன் அஷ்த் வர்க்கத்தைச் சேர்ந்த மாலிக் பின் ஷஹ்ஹைர் பின் அம்ர் பின் பஹ்ம் என்பான் ஆவான். அவன் தனது மகன் ஜதீமா அல் அப்ரஷ் என்பானை பாரசீகத்தின் முதலாவது ஸாஸானியப் பேரரசனான அர்தஷீர் பாபகான் (கி.பி. 226-41) என்பானின் தொழும்பன் (Vassal) ஆக்கினான். ஹீரா அரசை நிறுவியவன் இந்த ஜதீமாவின் ஊழியன் ஒருவனைத் திருமணம் செய்திருந்த அவனது சகோதரியின் மகனான அம்ர் பின் அதீ பின் நஸ்ர் பின் ரபீஆ பின் ஹாரித் .... பின் லக்ம் என்பான் ஆவான். இவன் லக்ம் என்பாரின் மரபில் பிறந்தவனாதலால், இவன் நிறுவிய அரசு லக்மிய அரசு என்று அழைக்கப்படுகிறது. இவனது பாட்டனாரின் பெயரால் நஸ்ரிய அரசு என்றும் சில சமயங்களில் அழைக்கப்படுகிறது. அல் ஹீரா நகரத்தைத் தலைகராகக் கொண்டு ஆட்சி செய்த லக்மிய அரச மரபைச் சேர்ந்த இருபது மன்னர்களின் பெயர்களை அல் கல்பி என்ற அறபு வரலாற்றாசிரியர் தந்திருக்கிறார். அம்ர் பின் அதீக்குப் பின்னர், இம்ருஉல் கைஸ் (மரணம் கி.பி. 328) என்பானின் காலம் வரை ஆண்ட ஹீரா மன்னர்களைப் பற்றி எதுவும் தெரியவில்லை. கிழக்கு ஹவ்ரானில், நமாரா என்ற இடத்தில் உள்ள அவனது சமாதியிற் காணப்படும் பண்டைய அறபு மொழிப் பொறிப்பு ஒன்று லக்மிய அரசன் இம்ருஉல் கைஸ் பற்றிய குறிப்பைத் தருகிறது. அவனுக்குப் பின்னர் அவனது மரபிற் பிறந்தவனும் அறபு இலக்கியத்தில் பெரிதும் கொண்டாடப்படுபவனும் அறபு வரலாற்றாசிரியர்களால் 'அல் அ.'.வர்' (ஒற்றைக் கண்ணன்) என்று அழைக்கப்படுபவனுமான முதலாம் நு.'.மான் (கி.பி. 400-418) என்பானிலிருந்து ஹீரா மன்னர்களின் வரலாறு பெரும்பாலும் ஒழுங்காகத் தெரிய வருகிறது. முதலாம் நு.'.மானின் பெயர், ஸாஸானியப் பேரரசன் முதலாம் யஷ்தஜிர்த் (399-420) என்பானின் புதல்வன் பஹ்ராம் கோர் தான் வசிப்பதற்காக ஹீரா நகருக்கு அண்மையில் நிறுவிய கட்டடக்கலை நுட்பங்கள் பொருந்திய 'கவர்னா'க் கோட்டைக்காக அறபுக் கவிதை இலக்கியத்தில் இன்று வரை நிலைத்து வாழ்கிறது. ஹீராவுக்கும் சிரியாவுக்கும் இடையில் உள்ள பாலைவனத்தின் மத்தியில் 'ஸதீர்' என்ற மற்றொரு கோட்டையையும் அவன் கட்டினான். இறுதிவரை புறச்சமயியாக இருந்த அவன் கிறித்தவ மதத்தைப் பெரிதும் வெறுத்தான். கிறித்தவ மதத்தைத் தழுவிய தனது குடிகளைக் கூட வதை செய்தான். ஆயினும், தனது வாழ்வின் இறுதிக் காலத்தில், கிறித்தவர்களுக்கு இரக்கம் காட்டினான்.[67]

அவனுக்குப் பின்னர், அவனது மகன் முதலாம் முன்திர் (418-62) ஹீராவின் ஆட்சி பீடமேறினான். பாரசீக அரசன் முதலாம் யஷ்தஜிர்தின்மரணத்தின் பின்னர், அவனது புதல்வன் பஹ்ராம் கோர் ஆட்சி பீடம் ஏறுவதற்குத் தடையாக இருந்து கிளர்ச்சி செய்த பாரசீக மத குருக்களைப்

67 Philip K. Hitti, op. cit.p.82

பணிய வைத்து, அவனுக்கே முடிசூட்ட அவர்களைப் பலவந்தப்படுத்தும் அளவுக்கு இவனது ஆற்றலும் செல்வாக்கும் ஓங்கியிருந்தன. 421இல், உரோமருடன் ஸாஸானியர் செய்த போரில், இவன் பாரசீகரோடு நின்று போர் புரிந்தான். இவனுக்குப் பின்னர் மூன்றாம் முன்திர் (505-54) என்பானின காலம் வரை ஆண்ட ஹீரா மன்னர்களைப் பற்றிய வரலாறு தெளிவாக இல்லை.

அறபு வரலாற்றாசிரியர்களால் 'இப்ன் மாஉஸ் ஸமா.'.' (வானத்து நீரின் மகன்) என்று அழைக்கப்படும் மூன்றாம் முன்திரின்[68] ஆட்சிக்காலம் லக்மியரின் வரலாற்றில் மிகவும் புகழ் பூத்த காலமாகும். உரோமரின் ஆதிக்கத்தில் இருந்த சிரியாவுக்கு இவன் ஒரு பெரிய சவாலாக இருந்தான். இவனது ஆட்சிக் காலத்தில், மத்திய அறேபியாவில் அரசு அமைத்திருந்த கின்தா மரபினர் மிகுந்த வலிமை பெற்றிருந்தனர். 505 ஆம் ஆண்டிற்கும் 529 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் கின்தா அரசன் ஹாரித் பின் அம்ர் என்பான் இராக்கில் படையெடுப்பு நடத்தி, இவனைத் துரத்தி விட்டு ஹீராவைக் கைப்பற்றிக் கொண்டான். ஆயினும், 531இல் பாரசீகப் பேரரசன் அனூஷிர்வான் ஆட்சிபீடம் ஏறுவதற்கு முன்பே, இவன் தனது இழந்த அரசை மீட்டெடுத்துக் கொண்டான். கிறித்தவ மதத்தை வெகுவாக வெறுத்த இவன் ஒரு முறை 400 கிறித்தவ கன்னியாஸ்திரிகளைப் பிடித்து அல் உஷ்ஷா தெய்வத்திற்குப் பலிகொடுத்தான்.[69] உரோமர்களையும் அவர்களது தொழும்பர்களாக இருந்த ஙஸ்ஸானியரையும் எதிர்ப்பதில் மிகுந்த துணிச்சலோடும் வீரத்தோடும் செயற்பட்ட இவன் அன்தியொக் நகரம் வரை படையெடுத்துச் சென்று சிரியாவை நாசமாக்கினான். 544இல், ஙஸ்ஸானியரோடு செய்த சண்டையில் ஙஸ்ஸானிய அரசன் இரண்டாம் அல் ஹாரிதின் புதல்வன் ஒருவனைச் சிறைப்பிடித்துச் சென்று, அல் உஷ்ஷா தெய்வத்திற்குப் பலியிட்டான். ஆனால், பத்து ஆண்டுகளுக்குப் பின்னர், 554இல் நிகழ்ந்த ஹலீமாச் சமரில், ஙஸ்ஸானியர் இவனைக் கொன்று விட்டனர்.

இவனுக்குப் பின்னர், இவனது புதல்வன் அம்ர் (554-69) என்பான் ஆட்சி பீடம் ஏறி, பதினைந்து ஆண்டுகள் ஆட்சி செய்தான். ஙஸ்ஸானிய ஆட்சியாளர்களைப் போலக் கவிஞர்களையும் கலைஞர்களையும் இவனும் ஆதரித்தான். அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த தரபா, அம்ர் பின் குல்தூம், ஹாரித் பின் ஹில்லிஷா முதலான அறபுக் கவிஞர்கள் இவனது ஆதரவில் வாழ்ந்தவர்களே. கொடுங்கோலனாய் இருந்த இவன், இவனால் ஆதரிக்கப்பட்டஅறபுக் கவிஞா் அம்ர் பின் குல்தூமால், அவரது தாயாரை அவமதித்ததற்காகக் கொல்லப்பட்டான்.

68. 'மாஉஸ் ஸமா.'.' என்பது இவனது தாய் மாரியா (மாவியா என்பாளின் செல்லப்பெயர்).
69. R.A.Nicholson, op.cit., p.43 Footnote No. 1

இவனுக்குப் பின்னர் ஆட்சி செய்த ஹீரா அரசர்களுள் நான்காம் முன்திரின் மகன் மூன்றாம் நு.ஃமான் என்பவன் குறிப்பிடத்தக்கவன். 580 முதல் 602 வரை ஆட்சி செய்த இவனே லக்மிய அரச மரபின் இறுதி மன்னனாவான். அறபுக் கவிஞர் அதீ என்பாரின் தந்தை ஷைத் பின் ஹம்மாதைத் தலைவராகக் கொண்ட கிறித்தவப் பிரபுத்துவக் குடும்பம் ஒன்றில் வளர்க்கப்பட்ட இவனே கிறித்தவ மதத்தைத் தழுவிய ஒரே ஒரு லக்மிய அரசனாவான். புகழ் பெற்ற அறபுக் கவிஞரான நாபி஘ா அல் துப்யானி பொய்க் குற்றச்சாட்டு ஒன்றின் விளைவாக ஹீராவிலிருந்து துரத்தப்படுவதற்கு முன்னால் அவரை இவன் பெரிதும் ஆதரித்து வந்தான். இவனுக்குப் பின்னர் பாரசீகரின் நேர் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்த ஹீராவை முஸ்லிம்கள் 633இல் கைப்பற்றிக் கொண்டனர்.

பாரசீகரின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த அல் ஹீரா இராச்சியத்தின் நாகரிகம் சிரிய - உரோம செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த நபதிய, தத்மூர், ஙஸ்ஸானிய இராச்சியங்கள் அடைந்திருந்த நாகரிகச் சிறப்பை எட்டியிருக்க வில்லை. முதலாம் நு.ஃமானின் காலத்தில் கட்டப்பட்ட சில கோட்டைகளைத் தவிர, இவர்களது நாகரிகத்தின் சின்னங்களாகக் குறிப்பிடுவதற்கு எதுவுமே இல்லை. ஹீரா அறேபியர் அறபு மொழியிலேயே பேசி வந்தனர். ஆனால், அவர்களது எழுத்து மொழி சிரியமாக இருந்தது. யூபிரதிசுவின் கீழைப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த கிறித்தவர்களே ஹீராவின் புறச் சமயிகளான அறேபியருக்கு எழுத்தறிவையும் சமயத்தையும் கற்றுக் கொடுத்து வந்தனர். அல் ஹீராவில் இருந்துதான் பாரசீக கலாசாரத்தினதும் கிறித்தவ சமயத்தினதும் செல்வாக்குகள் அறேபியாவினுள் நுழைந்தன. இங்கிருந்து தான் குறைஷ் குலத்தினர் எழுதும் கலையைக் கற்றுக்கொண்டனர் என்று மரபுவழித் தகவல்கள் கூறுகின்றன.

இதே காலப் பகுதியில், மத்திய அறேபியாவிலும் ஒரு அரசு நிலைபெற்றிருந்தது. கின்திய அரசு என்று அழைக்கப்பட்ட இந்த அரசு கின்தா வர்க்கத்தாரால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வர்க்கத்தினர் ஆரம்பத்தில், ஹழ்ரமவ்த்திற்கு மேற்கே உள்ள பிரதேசத்தில் குடியேறி வாழ்ந்து வந்தனர். இவர்களால் நிறுவப்பட்ட கின்திய அரசைத் தாபித்தவன் ஆகில் அல் முரார் என்று அழைக்கப்பட்ட ஹுஜ்ர் என்பவன் ஆவான். யமனை ஆட்சி செய்த ஹிம்யரிய அரசன் ஹஸ்ஸான் பின் அஸ்அத் காமில் (அபூ கரிப்) துப்ப.ஃ. என்பானின் மறுதாரச் சகோதரனான இவனை அவன், மத்திய அறேபியாவில் அவனால் வெற்றி கொள்ளப்பட்ட சில வர்க்கங்களின் ஆட்சித்தலைவனாக 480 ஆம் ஆண்டளவில் நியமித்தான். இவனுக்குப்பின்னர் இவனது மகன் அம்ர் ஆட்சி பீடமேறினான்.

கின்திய அரசு

இந்த அரச மரபின் மிகவும் வலிமை வாய்ந்த ஆட்சியாளனாக விளங்கியவன் அம்ருக்குப் பின்னர் பதவி ஏற்ற அவனது மகன் அல் ஹாரித்

என்பவன் ஆவான். இவன் பாரசீகப் பேரரசன் குபாத் என்பானின் மரணத்திற்குப் பின்னர், அல் ஹீரா மீது படையெடுத்துச் சென்று, அதன் அரசனான மூன்றாம் முன்திரைத் தோற்கடித்து, நகரைக் கைப்பற்றிச் சிறிது காலம் ஆட்சி செய்தான். ஆயினும், 529 ஆம் ஆண்டளவில் மூன்றாம் முன்திர் தனது அரசை இவனிடமிருந்து மீட்டெடுத்துக் கொண்டதோடு இவனையும் கொன்றான். இவனோடு கின்தா அரச குடும்பத்தைச் சேர்ந்த சுமார் ஐம்பது உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர். அல் ஹாரிதின் படுகொலையைத் தொடர்ந்து அவனது புதல்வர்களுக்குள் உருவான பதவிப்போட்டி காரணமாக கின்திய அரசு வீழ்ச்சி கண்டது. கின்தா வர்க்கத்தினர் அவர்களது தாயகமான ஹழ்ரமவ்த்திற்கு விரட்டப்பட்டனர். புகழ் பெற்ற அறபுக் கவிஞனான இம்ருஉல் கைஸ் இந்த அரச மரபைச் சேர்ந்தவனே.

இவ்வாறு மன்னராட்சி அறேபியாவின் சில பகுதிகளில் நிலைபெற்றிருந்த போதிலும், வர்க்கத் தலைவரின் ஆட்சியே பல பகுதிகளில் காணப்பட்டது. குறிப்பாக அறேபியாவின் வட பகுதியில் வர்க்கத் தலைவர் ஆட்சியே நிலை பெற்றிருந்தது. இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பு அறேபியா பல வர்க்க மாநிலங்களாகப் பிரிந்திருந்தது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு குறிப்பிட்ட வர்க்கத்தார் வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு வர்க்கத்திற்கும் அந்தந்த வர்க்கத்தைச் சேர்ந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர் ஒருவர் இருந்தார். 'ஷைக்' என்று அழைக்கப்பட்ட அவரே அந்த வர்க்கத்தாரின் ஆட்சியாளராயும் நீதி செலுத்துபவராயும் நாணயங்களின் உரிமையாளராயும் விளங்கினார். அவரது அந்தஸ்து பெரும்பாலும் ஓர் அரசனின் அந்தஸ்து போலவே இருந்தது. அவர் எப்போதும் வயது முதிர்ந்தவராயும் உயர் குடிப்பிறந்தவராயும் ஆளுமைச் சிறப்புடையவராயும் மற்றவர்களை விட வாழ்க்கைத் தரத்தில் சற்று உயர்ந்தவராயும் இருந்தார். இத்தகைய தகுதிகளை உடைய ஒருவரே வர்க்கத் தலைமைப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டார். ஆயினும், குடியாட்சியை அனுசரித்துச் செல்லும் உணர்வுடையோராய் இருந்த அறேபியர் - குறிப்பாக நாடோடி அறேபியர் - 'ஷை'க்கின் தன்னிச்சையான ஆட்சிக்கு முற்றிலும் கட்டுப்பட்டவர்களாகவோ தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர்களாகவோ இருக்கவில்லை. அதனால், வர்க்கத் தலைவர் குலத்தலைவர்களை உள்ளடக்கிய சபை (மஜ்லிஸ்) ஒன்றிலேயே தமது தீர்மானங்களை எடுக்கவேண்டியவராக இருந்தார்.

வர்க்கத் தலைவர் ஆட்சி

மேலும், வர்க்கங்களுக்கிடையில் ஐக்கியமும் அறேபியர் என்ற தேசியஉணர்வும் இருக்கவில்லை. சந்தேகமும் போலியான கௌரவ உணர்வும் அவர்களது தேசிய ஒற்றுமையை நசுக்கி விட்டிருந்தன. அதனால், ஒரு வர்க்கத்தார் மற்றொரு வர்க்கத்தார் மீது பகைமை கொண்டவர்களாகவே இருந்தனர். இந்தப் பகைமை, வர்க்கங்களுக்கிடையில் குழப்பங்களும்

குடிப்போர்களும் உருவாகக் காரணமாயிற்று. ஆயினும், வெளிநாட்டுப் பகையை அல்லது பொது எதிரியை ஒடுக்குவதில், அவர்கள் தமது சொந்தப் பகையை மறந்து ஒன்றுபட்டு நின்றனர். பெரும் வீரர்களாயும் துணிச்சல்மிக்கவர்களாயும் இருந்த அவர்கள் அறிந்து வைத்திருந்த ஒரே சட்டம் 'வலிமையே சிறந்தது' என்பதாகும்.

வர்க்கத்தலைவர் ஆட்சியில் மிகச் சில குடியியல் வழக்காடல்களே இருந்தன. குடியியற் பிணக்குகள் யாவும் பொதுவாக, இரு திறத்தாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீதிபதி ஒருவரிடமே விசாரித்துத் தீர்ப்பளிப்பதற்காக விடப்பட்டன. நிரந்தரமான நீதிபதிகள் அவர்களிடம் இருக்கவில்லை. குற்றச் செயல்களைப் பொறுத்தவரை பழிக்குப்பழி என்பதே அறேபியரின் சமுதாயத்தில் பின்பற்றப்பட்டு வந்த கொள்கையாக இருந்தது. ஒரு வர்க்கத்தைச் சேர்ந்த ஒருவன் அதே வர்க்கத்தைச் சேர்ந்த மற்றொருவனைக் கொலை செய்து விட்டால், அவன் கொலையுண்டவனின் வாரிசுகளிடம் ஒப்படைக்கப்பட்டான். அவர்கள் அவனைக் கொல்லவும் குருதிமுதல் (தியா) பெற்றுக்கொண்டு விடுதலை செய்யவும் உரிமை பெற்றிருந்தனர். ஒரே வர்க்கத்தைச் சேர்ந்த கொலையாளி தப்பியோடிவிட்டால், அவனை அந்த வர்க்கத்தினர் நாடு கடத்தப்பட்டவன் (தரீத்) என்று பிரகடனப்படுத்தினர். கொலையாளி வேறு வர்க்கத்தைச் சேர்ந்தவனாக இருந்தால், அந்தக் கொலை வர்க்கங்களுக் கிடையிலான சென்மப் பகைக்கு வழிகோலியது. வர்க்க அமைப்பை அடிப்படை யாகக்கொண்ட அவர்களது சமுதாயத்தில் எந்த ஒரு வர்க்கத்தையும் சேராதவனுக்கு எத்தகைய பாதுகாப்பும் இருக்கவில்லை. நாடோடி அறேபியன் ஒருவனைப் பொறுத்த வரை வர்க்க இணைப்பை இழப்பதை விடவும் பெரிய துரதிர்ஷ்டம் அவனுக்கு வேறு எதுவும் இருக்கவில்லை. வர்க்கத்தோடுள்ள உறவை இழந்தவன் சமுதாயத்தால் நிராகரிக்கப்பட்டவனாகி, பாதுகாப்பின் எல்லைக்கு அப்பாற்பட்டவனாகவே கருதப்பட்டான். ஒரு வர்க்கத்தைச் சேர்ந்தவனின் நடத்தைக்கு அந்த வர்க்கம் அல்லது குலம் முழுவதுமே பொறுப்புடையதாய் இருந்தது.

எதிரிகளின் பாசறைகளைச் சூறையாடுதலும் அவர்களது உடைமைகளைக் களவாடுதலும் வீரச் செயல்களாகக் கருதப்பட்டன. ஆனால், வர்க்க உணர்வு (அஸபிய்யா) அவர்களுள் ஆழமாக வேரூன்றி இருந்தமையால், ஒரே வர்க்கத்தினுள் அல்லது குலத்தினுள் இத்தகைய கொள்ளைகளும் களவுகளும் மிக அரிதாகவே நிகழ்ந்தன. களவு நிரூபிக்கப்பட்போது, களவு செய்தவன் களவாடப்பட்ட பொருளை அல்லது அதன் பெறுமதியை உரிமையாளருக்குக் கொடுக்கக் குலத்தலைவரால் நிர்ப்பந்திக்கப்பட்டான். சில சமயங்களில் கடுமையான தண்டனைகளும் அளிக்கப்பட்டன.

வட அறேபியாவில் வர்க்கத்தலைவர் ஆட்சி நிலவிய அதே வேளையில்,

மக்காவில் நிறுவனத்தன்மை வாய்ந்த நகர அரசு ஒன்று இயங்கி வந்தது. பிற்கால எழுத்தாளர்களால் 'வர்த்தகக் குடியரசு' என்று அழைக்கப்பட்ட இந்த அரசின் பதவிகள் சட்ட ஆதிக்க எல்லை இல்லாத கௌரவப்

மக்காவின் நகர அரசு

பதவிகளாகவே இருந்தன. இந்த அரசுக்கு வர்த்தகம் பொருட்செழிப்பையும் ஆதி ஆலயமான புனித க.ஃபா முழு அறேபியாவையும் தழுவிய செல்வாக்கையும் அளித்தன. சில்லோராட்சியின் (Oligarchy) தன்மையைப் பெற்றிருந்த இந்த அரசின் நிருவாகம் முதியவர்களைக் கொண்ட ஒரு சபையால் நடத்தப்பட்டது. இந்தச் சபை 'அல் மல.ஃ' (மன்றம்) என்று அழைக்கப்பட்டது. வர்க்கத் தலைவர் ஆட்சியில் காணப்பட்ட 'மஜ்லிஸ்' என்ற முதியோர் சபைக்குச் சமமான இந்த நிருவாக மன்றத்தில் மிகவும் செல்வாக்கும் செல்வச் செழிப்பும் வாய்ந்த கிளைக் குலங்களின் தலைவர்களே உறுப்பினர்களாக இருந்தனர். இந்தச் சபையில் அங்கத்துவம் பெற தேர்தலோ பிறப்பால் ஏற்பட்ட சிறப்போ தேவைப்படவில்லை. சேவை நலனும் செல்வம், திறமை ஆகியவற்றால் ஏற்பட்ட கீர்த்தியுமே இதன் உறுப்பினராவதற்குத் தேவையான தகுதிகளாக இருந்தன. இவற்றோடு வயது முதிர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.[70] ஒழுக்கம் சார்ந்த துறைகளில் மட்டும் அதிகாரத்தைக் கொண்டிருந்த இந்தச் சபை, பெரும்பாலும் வர்த்தக முயற்சிகள் சம்பந்தமாக மக்காவின் வர்த்தக சமுதாயத்தினர்க்கு ஆலோசனை வழங்குதல், வர்த்தகப் பயணங்களைத் திட்டமிடுதல், பிணக்குகளைத் தீர்த்து வைத்தல் முதலான கடமைகளையே செய்துவந்தது. மக்காவின் விவகாரங்களைப் பொறுத்தவரை இந்தச் சபையின் ஏகோபித்த தீர்மானங்களே பெரும்பாலும் சட்டங்களாகக் கருதப்பட்டன.

மக்காவில் 'தாருன் நத்வா' (மன்ற வீடு) என்ற பெயரில் ஒரு மண்டபத்தையும் மக்காவின் தலைவர்கள் நிறுவியிருந்தனர்.[71] மக்காவின் பாலன வசதிக்காக அமைக்கப்பட்ட இந்த மண்டபத்திலேயே குலத் தலைவர்கள் கூடி நகரின் முக்கிய விவகாரங்களைக் கவனித்து வந்தனர். குடிகளின் பொதுக் கூட்டம் (நாதிஉ கவ்ம்) க.ஃபாவின் முற்றத்தில் நிகழ்ந்தது. இதில் பொது விவகாரங்கள் ஆராயப்பட்டன. புனித க.ஃபாவோடும் நகரத்தோடும் தொடர்புடைய பணிகள் பல்வேறு தலைமைக் குடும்பங்களின் பொறுப்பில் விடப்பட்டிருந்தன. கொலை செய்தல், காயப்படுத்துதல் முதலான உடல் ரீதியான குற்றங்களை விசாரித்து, அவற்றிற்குரிய இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுக்கும் 'இஷ்னாக்' என்ற பதவி பனூ தய்ம் கிளைக் குலத்தாரிடம் வழங்கப்பட்டிருந்தது. இஸ்லாம் தோன்றிய ஆரம்ப காலத்தில் இந்தப் பதவியை அந்தக் குலத்தைச் சேர்ந்த ஹழ்ரத் அபூபக்ர் வகித்து வந்தார்.

70. *Shorter Encyclopaedia of Islam, p.369*
71. *அல் பலாதுரீ, புதூஹுல் புல்தான், பக்கம் 52*

வெளிநாடுகளுக்கு சூழியல் தூது சென்று, பேச்சுவார்த்தைகள் நடத்தும் 'ஸிபாரா' என்ற பதவி பனூ அதீ கிளைக்குலத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இஸ்லாம் தோன்றிய காலத்தில் அந்தக் கிளைக்குலத்தைச் சேர்ந்த ஹழ்ரத் உமர் இந்தப் பதவியை வகித்து வந்தார். இவ்வாறே மற்றப் பொறுப்புகளும் பல்வேறு கிளைக் குலங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

மிக ஆரம்ப காலத்திலேயே மக்கா நகரத்தவர்கள் அண்டை நாடுகளில் வர்த்தகம் செய்வதற்கும் குறிப்பிட்ட பாதைகளினூடாகப் பாதுகாப்பான வர்த்தகப் பயணங்களை மேற்கொள்வதற்கும் தேவையான அனுமதியை பாரசீக மன்னனோடும் உரோமப் பேரரசனோடும் செய்துகொண்ட உடன்படிக் கைகள் மூலம் பெற்றிருந்தனர். மக்காவின் வரலாற்றில் இந்த அனுமதி 'கைஸரினதும் குஸ்ரவினதும் உறுதியீடு' (Guarantee of Caesar and Chosroes) என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு அபிசீனியாவின் நஜாஷி, நஜ்தின் ஷைகுகள், யமனின் ஆட்சியாளர், ஙஸ்ஸானிய அரசன், அல் ஹீரா மன்னன் முதலானோரோடும் உடன்படிக்கைள் செய்திருந்தனர்.[72] பிறநாட்டு வர்த்தகர்களும் இவ்வாறு மக்காவோடு வர்த்தக ஒப்பந்தங்கள் செய்திருந்தனர். அவர்கள், நாட்டினுள் பிரவேசிக்க அனுமதி பெறவும் தங்கியிருக்கவும் வர்த்தகம் செய்யவும் பல்வேறு வரிகளையும் கட்டணங்களையும் மக்கா அரசுக்குச் செலுத்த வேண்டியவர்களாக இருந்தனர். வரிகளும் இறுப்புக்களும் செலுத்தப்பட்ட பின்னரே அவர்கள் நகரினுள் நுழைய அனுமதிக்கப்பட்டனர்.

மக்கா ஒரு யாத்திரைத் தலமாக இருந்தமையால், மக்காவின் நகர அரசு யாத்திரிகர்களுக்காகப் பல வசதிகளைச் செய்து கொடுத்தது. யாத்தரிகர் களுக்கு நீர் இழுத்து வந்து கொடுக்கும் பணியில் அடிமைகளும் தொண்டர் களும் ஈடுபடுத்தப்பட்டனர். யாத்திரிகர்கள் இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்காகத் தற்காலிக மலசல கூடங்களையும் மக்கா நகர அரசு அமைத்துக் கொடுத்தது. அவை கடினமான மண்ணில் தோண்டப்பட்ட குறுகிய வாயை உடைய குழிகளாக இருந்தன. நகரத்தின் தெருக்களும் ஒழுங்கைகளும் செப்பனிடப்பட்டு, துடைப்பத்தால் பெருக்கிச் சுத்தம் செய்யப்பட்டன. கூலி பெற்றுக் கொண்டு குடிகளுக்கு குடிநீர் இழுத்து வந்து கொடுக்கும் பணியில் அடிமைகளும் விடுதலை பெற்ற அடிமைகளும் ஈடுபட்டிருந்தனர்.

சுருங்கச் சொன்னால், இஸ்லாத்திற்கு முற்பட்ட கால அறேபியாவில் ஆங்காங்கே இரண்டொரு அரசுகள் இருந்த போதிலும், சமகால அறேபியாவின் அயல் நாடுகளில் காணப்பட்டது போன்ற ஸ்திரமான அரச அமையம் எதுவும் இருக்கவில்லை.

72. Shorter Encyclopaedia of Islam p.368

ஜஃபரின் வர்ணனை

இஸ்லாத்திற்கு முந்திய கால அறேபியாவின் நிலையைப்பற்றி, கி.பி. 616 இல் அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்த முஸ்லிம் அகதிகளின் சார்பில் அபிசீனிய மன்னர் அல் நஜாஷீயின் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்த ஜஃபர் பின் அபூதாலிப் மிக அழகாக் கூறினார்: ''நாங்கள் அறியாமையில் மூழ்கிக்கிடந்த மக்கள். நாங்கள் சிலைகளை வணங்கினோம்; பிணங்களை உணவாக அருந்தினோம்; மானக்கேடான செயல்களைப் புரிந்தோம்; இரத்த உறவுகளைத் துண்டித்தோம்; அயலாரைக் கொடுமைப்படுத்தினோம்; எங்களுட் பலவீனரை வலியோர் சாப்பிட்டனர்; எங்களுக்குள்ளிருந்தே ஒருவரை அல்லாஹ் நபியாக அனுப்பும் வரை நாங்கள் இவ்வாறே இருந்தோம்" என்று அவர் குறிப்பிட்டார்.[73] இத்தகைய ஒரு இழிவான அறியாமையில் அறேபியர் சிக்குண்டிருந்த சமயத்திலேதான் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராக அனைத்து உலகுக்கும் பொதுவான தூது ஒன்றோடு அறேபிய மண்ணிலே பிறந்தார்கள்.

73 இப்ன் ஹிஷாம், பாகம் 1 பக்கம் 362

3. நபி முஹம்மதும் இஸ்லாத்தின் தோற்றமும்

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறந்த சமயத்தில், மக்காவின நகர அரசு குறைஷ் கோத்திரத்தாரின் கைகளில் இருந்தது. இவர்கள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும் குறைஷ் என்ற மறுபெயரைக் கொண்டிருந்தவருமான பிஹ்ர் என்பாரின் வழித் தோன்றல்கள்.

குறைஷ் கோத்திரம்

நபி இஸ்மாஈல் (அலை) அவர்களின் சந்ததியினருள் ஒருவரான மஆத் பின் அத்னான் என்பாரின் மரபில் தோன்றிய பிஹ்ரே இந்தக் கோத்திரத்திற்கு குறைஷ் என்ற பெயரை இட்டார். குறைஷ் என்ற மறுபெயரைப் பெற்றிருந்தவரும் பிஹ்ரின் பாட்டனாருமான நள்ர் பின் கினானா என்பவரே அந்தக் கோத்திரத்திற்கு குறைஷ் என்ற பெயரை முதலிற் சூட்டியவர் என்று வரலாற்றாசிரியர்கள் சிலர் கூறுகின்றனர். அல் ஹாபிள் அல் இராகீ தமது 'ஸீரதுல் மன்ஷூமா' என்ற நூலில் இது பற்றிக் குறிப்பிடுகையில், 'பெரும்பான்மையானோர் நள்ர் என்பாரை குறைஷ்களின் மூதாதையாகக் கருதுகின்ற போதிலும், பிஹ்ர் என்பாரின் வழித் தோன்றல்களே குறைஷியர் என்று கூறுதலே மிகச் சரியானதாகும்' என்கிறார்.[1] குறைஷ் என்ற சொல்லுக்குப் பண்டைய அறபு மொழியில் 'வர்த்தகம் செய்து இலாபம் ஈட்டுதல்' என்பது பொருள். பிஹ்ர் என்பார் வர்த்தகம் செய்து இலாபம் ஈட்டும் ஒரு வணிகராக இருந்தமையால், அவர் இந்தப் பெயரால் அழைக்கப்பட்டார்.

குறைஷ் வர்க்கத்தார் ஹாஷிம், உமய்யா, நவ்பல், ஷஹ்ரா, அஸத், தய்ம், மக்ஷூம், அதீ, ஜுமஹ், ஸஹ்ம் எனப் பத்துக் கிளைக் குலங்களாகப் பிரிந்திருந்தனர். ஆரம்பத்தில் இவர்கள் மக்காவின் புனித பிரதேசத்தைச் சூழவிருந்த சனசஞ்சாரமற்ற மலைகளில் மிகவும் துன்பகரமான வாழ்க்கை நடத்தி வந்தனர். இந்த வர்க்கத்தார் அனைவரையும் ஒன்று திரட்டி, செல்வாக்கும் செல்வமும் மிகுந்த ஒரு கோத்திரத்தாராக உருவாக்கியவர் பிஹ்ரின் ஆறாவது தலைமுறையிற் பிறந்த குஸையய் பின் கிலாப் என்பவர் ஆவார். இவரது தாய் பாத்திமா பின்த் ஸ.'.த் என்பவர். அவர் குஸையய்யின் தந்தை கிலாப் மரணமான பின்னர், உத்ரா குலத்தைச் சேர்ந்த ரபீஆ பின் ஹராம் என்பாரைத் திருமணம் செய்து கொண்டார். அவருக்கு அப்போது ஷஹ்ரா, ஷைத் (குஸையய்) என்ற புதல்வர் இருவர் இருந்தனர். மறுமணமான பின்னர், அவர் வளர்ந்த மனிதராய் இருந்த ஷஹ்ராவை மக்காவிலே விட்டுவிட்டு, பாலகராய் இருந்த ஷைதை அழைத்துக்

குஸையய்

1. அல் ஷவ்கானி, ஷர்ஹ் அல் மவாஹிபுல் லதுன்யா, பாகம் 1 பக்கம் 91

கொண்டு தமது கணவரோடு அவரது தாயகமான சிரியாவின் எல்லைப்புறத்திற்குப் போய்விட்டார். ஷைத் தமது தாயாரோடு மக்காவிலிருந்து தொலைவில் உள்ள ஒரு பகுதியில் வளர்ந்து வாலிபரானார். (தூரத்திலுள்ள ஒரு பிரதேசத்தில் வளர்ந்தமையாலேயே ஷைத், குஸையய்-தூரத்திலுள்ளவர் - என்று அழைக்கப்பட்டார்) பின்னர், தமது தாயகத்தையும் கோத்திரத்தையும் பற்றி அறிந்து கொண்ட குஸையய் மக்காவுக்கு வந்து வாழலானார். அப்போது, மக்காவிலே குஷாஆ வர்க்கத்தினர் மேலாதிக்கம் பெற்றிருந்தனர். அவர்களது வர்க்கத்தலைவரான ஹுலைல் பின் ஹுப்ஸிய்யா என்பாரின் கைகளிலேயே புனித க.'.பாவின் பரிபாலனம் இருந்தது. நபி இஸ்மாஈலின் நேர் சந்ததியினரான குறைஷியரே க.'.பாவின் பாதுகாவலராக இருக்க உரித்துடையவர்கள் என்பதை உணர்ந்த குஸையய் அதனை மீட்கும் முயற்சியில் குறைஷியரினதும் கினானா, குழாஆ ஆகிய வர்க்கங்களினதும் உதவியைக் கோரினார். அவர்கள் உதவ முன்வந்தனர். அதேசமயம், ஹுலை லின் புதல்வி ஹுப்பாவையும் அவர் திருமணம் செய்தார். இந்தத் திருமணத்தின் பின்னரேனும் ஹுலைல் க.'. பாவைத் தம்மிடம் ஒப்படைப்பார் என்று அவர் எதிர்பார்த்தார். ஆனால், ஹுலைலோ தமது மரணப் படுக்கையில் அவரது உறவினருள் ஒருவனான அபூ குப்ஷான் என்பானிடம் க.'.பாவின் திறவு கோல்களை ஒப்படைத்து விட்டார். ஆயினும், அவனக்கு மதுவைக் கொடுத்துப் போதையூட்டிய குஸையய், அவன் போதையில் இருக்கையில் மது நிரம்பிய தோற்பை ஒன்றை விலையாகக் கொடுத்து, அவனிடமிருந்து க.'.பாவின் திறப்புகளை வாங்கிக் கொண்டார். இதனை ஏற்றுக்கொள்ளாத குஷாஆ வர்க்கத்தினர் குஸையய்யியோடு போர் தொடுத்தனர். குஸையய், அவர்களைப் போரிலே தோற்கடித்தார். க.'.பா அவரது நிருவாகத்தின் கீழ் வந்தது.[2]

இவ்வாறு, புனித க.'.பாவைப் பொறுப்பேற்றுக்கொண்ட குஸையய், மக்கா நகரின் பரிபாலகராயும் மாறினார். அது வரை மலைகளில் வாழ்ந்த குறைஷ் கோத்திர மக்களை நகருக்குள் வரவழைத்து, ஷம்ஷம் நீரூற்றைச் சூழவிருந்த 'பத்ஹா.'.'[3] பள்ளத்தாக்கில் குடியமர்த்தினார். இந்தப் பகுதியில் அவர்கள் நிரந்தரமாகத் தங்கி வாழ ஆரம்பித்தமையால், அவர்கள் அப்தஹீ, பிதாஹீ அல்லது குறைஷுல் பிதா.'. என்றும் அழைக்கப்படலாயினர். இவ்வாறு அவர்களை குஸையய் ஒன்று திரட்டியமையினால் அவருக்கு 'முஜம்மி.'.' (ஒன்றுசேர்த்தவர்) என்ற சிறப்புப் பெயரும் ஏற்பட்டிருந்தது. மக்காவின் பள்ளத் தாக்கிலே ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் ஒவ்வொரு பகுதி ஒதுக்கப்பட்டது. அதுவரை ஓலைக் குடிசைகளையும் கூடாரங்களையும் கொண்டிருந்த

2. R.A. Nicholson, A Literary History of the Arabs, pp.64-5,
இப்ன் ஸஃத், தபகாதுல் குப்ரா, பாகம் 1 பக்கம் 66–8

3. மணலும் சிறு கற்களும் உள்ள – நீர் ஓடக் கூடிய அகலமான கால்வாய் போல அமைந்திருக்கும் – பள்ளத்தாக்கின் அடிப்பகுதியே 'பத்ஹாஃ' அல்லது 'அப்தஹ்' என்று அழைக்கப்படுகிறது.மக்காப் பள்ளத்தாக்கிலுள்ள இந்தப் பகுதி 'மக்கா பத்ஹாய்' என்று அழைக்கப்படுகிறது. இதிலேயே புனித கஃபா அமைந்திருக்கிறது.

மக்காவிலே அவர்கள் கல் வீடுகளை அமைத்து வாழலாயினர். குஸையும் தமக்கென ஒரு மாளிகையை அமைத்துக்கொண்டார். அதன் ஒரு பகுதி மக்களின் ஆலோசனை மன்றம் கூடும் மண்டபம் (தாருன் நத்வா) ஆகப் பயன்படுத்தப்பட்டது. குறைஷ்கள் போருக்கு ஆயத்தங்கள் செய்த போதும் நகரின் முக்கிய விவகாரங்கள் சம்பந்தமாகக் கூட்டங்களை நடத்தவிரும்பிய போதும் இந்த மண்டபத்திலேயே கூடினர். அவர்களது வணிகக் குழுக்கள் இங்கிருந்தே தமது பிரயாணங்களை ஆரம்பித்தன; பிரயாணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய சமயத்திலும் அவை இங்கேயே கூடித் தமது வரவை அறிவித்தன. திருமணம் முதலான சடங்குகளும் இந்த மண்டபத்திலேயே நிறைவேற்றப்பட்டன.

குஸையின் மேலாதிக்கத்தை குறைஷ்களின் நேசக்குலத்தவரும் ஆதரித்தனர். மக்காவின் ஆட்சியாளராகத் தம்மைப் பிரகடனம் செய்திருந்த அவர் காலக்கிரமத்தில் ஹிஜாஷ் மாகாணம் முழுவதிலும் செல்வாக்கு மிகுந்த தலைவராக விளங்கலானார். மக்களின் சரியான அரசு ஒன்றுக்கும் வரிகள் அறவிடுவதற்கும் தேவையான சட்டங்களை அவர் இயற்றினார். ஹிஜாபா, ஸிகாயா, ரிபாதா, நத்வா, லிவா.·., கியாதா ஆகிய முக்கிய பதவிகளையும் அவர் உருவாக்கினார்.[4] புனித க.·.பாவைப் பரிபாலனம் செய்தலும் அதன் திறவுகோல்களைப் பாதுகாத்தலும் 'ஹிஜாபா' என்று அழைக்கப்பட்டன. மக்காவுக்கு வரும் யாத்திரிகர்களுக்கு நீர் வழங்குதல் 'ஸிகாயா' என்றும் பெருநாள்களின்போது குறைஷ்கள் தமது சொத்துக்களிலிருந்து குஸையக்கு கொடுத்து வந்த வரியிலிருந்து யாத்திரிகர்களுக்கு உணவளித்தல் 'ரிபாதா' என்றும் கூட்ட மண்டபத்தில் நிகழ்ந்த கூட்டங்களுக்கு தலைமை தாங்குதல் 'நத்வா' என்றும் போர்களுக்குத் தலைமை தாங்குதல் 'கியாதா' என்றும் போர்களின்போது கொடிகளை ஏந்திச் சென்று, களத்திலே அதனை உயர்த்திச் சண்டையை ஆரம்பித்து வைத்தல் 'லிவா.·.' என்றும் அழைக்கப்பட்டன. இந்தப் பணிகளைப் பெரும் கௌரவமாகக் கருதி குறைஷ்களே நிறைவேற்றி வந்தனர். க.·.பாவைச் சூழவிருந்த பகுதிகளில் தோலாலான நீர்த்தொட்டிகளையும் அவர் அமைத்தார். அவை மக்காவுக்கு வந்த யாத்திரிகர்களுக்கு நீர் வழங்கும் நீர்த் தேக்கங்களாகப் பயன்பட்டன. ஹஜ் காலத்தின் போது, முஸ்தலிபாவில், இரவு வேளைகளில் தீமூட்டி வெளிச்சம் ஏற்படுத்தும் முறையை அவர் அறிமுகம் செய்து வைத்தார். இந்த வழக்கம் கலீபா உத்மானின் காலம் வரை வழக்கத்தில் இருந்தது.[5]

குஸையக்கு அப்துல் தார், அப்த் மனாப், அப்துல் உஷ்ஷா, அப்து குஸையக் என்ற பெயர்களைக்கொண்ட புதல்வர்கள் நால்வர் இருந்தனர்.

4. இப்ன் ஸ.·.த், பாகம் 1 பக்கம் 70
5. மேற்படி, பக்கம் 72

கி.பி. 480ஆம் ஆண்டளவில் குஸையக் மரணமானதும், அவரது மூத்த புதல்வர் அப்துல் தார் மக்காவின் முழுப் பரிபாலனத்தையும் பொறுப்பேற்றார். குஸையக் தமது இறுதிக்காலத்தில், உயிரோடு இருந்தபோதே தமது மூத்த புதல்வரை அழைத்து, பொறுப்புக்களை அவரிடம் ஒப்படைத்திருந்தார். குஸையின் புதல்வர்களுள் மிகவும் பலவீனரான அப்துல் தார் தமது கோத்திரத்தாரின் விவகாரங்களைக் கவனிப்பதற்கு முற்றிலும் தகுதியற்றவராக இருந்தார். சில ஆண்டுகளில், அப்துல் தார் மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது புதல்வர்களுக்கும் அவரது சகோதரர் அப்த் மனாபின் புதல்வர்களுக்குமிடையே ஆதிக்கப்போட்டி உருவானது. அதனால், குறைஷியரின் வரலாற்றில் முதன்முறையாக குறைஷ் கோத்திரம் இரு பிரிவுகளாகப் பிளவுற்றது. ஒரு பிரிவினர் அப்த் மனாபின் குடும்பத்தாரையும் மற்றப் பிரிவினர் அப்துல் தாரின் குடும்பத்தாரையும் ஆதரிக்கலாயினர். இரு குடும்பத்தாரும் தத்தமது ஆதரவுக் குடும்பங்களுடன் கூட்டிணைப்பு செய்து கொண்டு, மேலாதிக்கத்தைப் பெறுவதற்காகப் போரில் குதிக்கவிருந்த வேளையில், மக்களின் தலையீட்டால் இரு குடும்பத்தாரும் அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொண்டதன் மூலம் இந்தப் பிணக்கு சமாதானமாகத் தீர்த்து வைக்கப்பட்டது. இதன்படி 'ஸிகாயா', 'ரிபாதா' ஆகிய பொறுப்புக்கள் அப்து மனாபின் புதல்வரான அப்துஷ் ஷம்ஷ் என்பாருக்கும் 'ஹிஜாபா', 'லிவா.·.', 'நத்வா' ஆகிய பொறுப்புக்கள் அப்துல் தாரின் குடும்பத்தாருக்கும் வழங்கப்பட்டன.[6]

அப்துல் தார்

அப்துஷ் ஷம்ஷ் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரப் பொறுப்புக்களை சிறிது காலமே நிறைவேற்றினார். பின்னர், அந்தப் பொறுப்புக்களை அவர் தமது சகோதரரும் மக்காவின் தலைமை வணிகருமான ஹாஷிம் என்பாரிடம் ஒப்படைத்து விட்டார். இந்த ஹாஷிம் ஹிஜாஷில் வாழ்ந்த அறேபியரிடையே மிகுந்த செல்வாக்கும் சிறந்த ஆளுமையும் வாய்ந்த மனிதராக விளங்கினார். தமது கடமைகளை வெற்றிகரமாகவும் சிறப்பாகவும் நிறைவேற்றி வந்த அவர் யாத்திரிகர்களுக்குத் தேவையான வசதிகள் அனைத்தையும் செய்து கொடுத்ததோடு, ஷம்ஷம் கிணற்றுக்கும் மினாவுக்கும் இடையே அமைக்கப்பட்டிருந்த தோல்தொட்டிகளை எப்போதும் நீர் நிறைந்தவைகளாக வைத்துக்கொள்ள ஏற்பாடுகளும் செய்தார். மற்ற வர்க்கங்களோடு சமாதான ஒப்பந்தங்களையும் அவர் செய்திருந்தார். அதனால், குறைஷியரின் வர்த்தகக் கூட்டங்கள் எத்தகைய இடையூறுகளும் இன்றி பிரயாணம் செய்தல் சாத்தியமாயிற்று. ஒருமுறை, அவர் வர்த்தகத்தின் பொருட்டு சிரியாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்; வழியில், மதினா நகரில் சில நாட்கள் தங்க நேர்ந்த போது, அங்கே ஸல்மா என்பாரைத் திருமணம் செய்து கொண்டார். திருமணத்தின் பின்னர் தமது சிரியாப் பயணத்தைத்

ஹாஷிம்

6. இப்ன் ஹிஷாம், பாகம் 1 பக்கம் 150

தொடர்ந்த அவர் கி.பி. 500 ஆம் ஆண்டளவில், தாயகம் திரும்பாமலேயே ஹுஷ்ஷா என்ற இடத்தில் மரணமானார். சில மாதங்களின் பின்னர், அவரது மனைவி ஸல்மா ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தார். அவருக்கு ஷைபா என்று பெயர் சூட்டப்பட்டது. ஷைபா எட்டுவயதுச் சிறுவராக இருந்தபோது, ஹாஷிமின் சகோதரரான முத்தலிப் என்பார் மதினாவுக்குச் சென்று, தமது சகோதரன் மகனை மக்காவுக்கு அழைத்து வந்து, அவருக்கு அப்துல் முத்தலிப் என்று பெயரிட்டுத் தமது சொந்தப் பிள்ளை போல வளர்க்கலானார்.

ஹாஷிம் மரணித்த பிறகு, அவரது சகோதரர் முத்தலிப் ஸிகாயா, ரிபாதா ஆகிய பதவிகளைப் போறுப்பேற்றார். ஹாஷிமை விடவும் வயதில் மூத்தவரான அவர் மக்களிடையே மிகுந்த மதிப்பும் செல்வாக்கும் உடையவராக இருந்தார். அவர் குறைஷ்களின் சார்பில் அவர்களது வர்த்தகம் சம்பந்தமாக அபிசீனிய சக்கரவர்த்தி அல் நஜாஷீயோடு உடன்படிக்கை ஒன்றும் செய்து கொண்டார். அவரது தாராளத்தன்மை காரணமாக மக்கள் அவரை 'அல் பய்ழ்' (அபரிதமானவர்) என்று அழைத்து வந்தனர். இயல்பாக அமையப்பெற்ற திறமையாலும் மக்களிடமிருந்து சம்பாதித்திருந்த மதிப்பாலும் இரண்டு தசாப்தங்களாகத் தமது கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றி வந்த அவர் கி.பி. 520இல் மரணமானார். அவருக்குப் பின்னர் அவரது சகோதரர் மகனும் ஷைபா என்ற இயற்பெயரைப் பெற்றிருந்தவருமான அப்துல் முத்தலிப் ஸிகாயா, ரிபாதா ஆகிய பதவிகளைப் பொறுப்பேற்றார்.

அல் முத்தலிப்

இதேவேளையில், அப்துல் தாரின் பேரர்கள் செல்வர்களாக வளர்ந்து கொண்டிருந்தார்கள். ஹாஷிம் குலத்தாரின் செல்வாக்கு பொதுமக்களிடையே வளர்ந்து வந்ததைக் கண்ட அப்துல் தாரின் பேரர்கள் அவர்கள் மீது பொறாமை கொண்டனர். அவர்களிடமிருந்து வந்த அதிகாரங்களைப் பிடுங்கிக்கொள்ளவும் மக்காவின் ஆட்சியாளர்களாகத் தம்மை மாற்றிக் கொள்ளவும் அவர்கள் முயன்றனர். இந்த முயற்சியில் அப்துல் தாரின் பேரர்களுள் ஒருவரும் அப்துஷ் ஷம்ஷின் புதல்வருமான உமையா பெரும் முனைப்புக் காட்டினார். ஆனால், குறைஷ் கோத்திரத்தார் அனைவராலும் நன்கு மதிக்கப்பெற்ற அப்துல் முத்தலிபை அவரால் தோற்கடிக்க முடியவில்லை. அவர் சுமார் 59 ஆண்டுகள் மக்காவைச் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் பரிபாலனம் செய்தார். மக்காவில் பிரதானமான பத்துக் குடும்பங்களின் தலைவர்கள் பரிபாலனக் கருமங்களில் அவருக்கு உதவி வந்தனர்.

அப்துல் முத்தலிப்

அப்துல் முத்தலிபின் ஆட்சிக்காலத்திலே, மக்காவில் உள்ள புராதன ஆலயமான புனித க.்பாவை அழித்து ஒழிப்பதற்காகவும் மக்காவைக் கைப்பற்றுவதற்காகவும் வெளியாரின் படையெடுப்பு ஒன்று நிகழ்ந்தது. கி.பி. 570இல் அல்லது 571இல், யமனை ஆட்சிசெய்த அபிசீனிய ஆட்சியாளன

அப்ரஹா என்பான் யானைகள் சிலவற்றைக் கொண்ட படை ஒன்றோடு மக்காவக்கு வந்து, க.்பாவை அழிக்க முயன்றான். யாத்திரையின் பொருட்டு அறேபியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆண்டு தோறும் வந்து, ஆயிரக்கணக்கில் மக்காவில் கூடிய யாத்திரிகர்கள் மூலம் அந்த நகரமும் அதன் ஆலயமும் அடைந்திருந்த மதிப்பையும் செல்வாக்கையும் கண்டு எழுந்த பொறாமையே அவனது படையெடுப்பின் பிரதான காரணமாக இருந்தது. மக்காவின் செல்வாக்கைக் குறைப்பதற்காக அவன் அக்கால உலகில் எங்குமே இல்லாத பிரமாண்டமான கிறித்தவ மாதாகோயில் ஒன்றை யமனில், ஸன்ஆ நகரிலே நிறுவி, ஆண்டு தோறும் அங்கே உற்சவம் நிகழ ஏற்பாடுகள் செய்திருந்தான். ஆயினும், மக்காவின் சிறப்பையும் அங்கு யாத்திரை மேற்கொண்ட மக்களின் எண்ணிக்கையையும் குறைக்க அவனால் முடியவில்லை. இதேசமயம், புகைம் கிளைக் குலத்தைச் சேர்ந்த இருவர் உற்சவகாலத்தின் போது ஒருநாள், அந்த மாதா கோயிலினுள் நுழைந்து, அங்கே மலங்கழித்து, அதனை அசுத்தப்படுத்தி விட்டனர். இந்தச் சம்பவம் அப்ரஹாவின் படையெடுப்புக்கு உடனான காரணமாக அமைந்துவிட்டது. அவனது படையெடுப்பு அவனுக்கு வெற்றியளிக்கவில்லை. அவனும் அவனது படையினரும் புனித க.்பாவின் உண்மையான பாதுகாவலனான அல்லாஹ்வால் அழித்தொழிக்கப்பட்டனர். யானை அறேபியருக்கு ஒரு புதிய பிராணியாக இருந்தமையால், அப்ரஹா மக்கா மீது படையெடுப்பு நடத்திய அந்த ஆண்டிற்கு 'ஆமுல் பீல்' (யானை ஆண்டு) என்று அவர்கள் பெயரிட்டனர். இந்தச் சம்பவம் பற்றி அல் குர்ஆனிலும் அதன் 105ஆம் அத்தியாயத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலேயே நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறந்தார்கள்.

யானை ஆண்டு

அப்துல் முத்தலிபின் பெரும் சாதனைகளுள் ஒன்று ஷம்ஷம் கிணற்றைக் கண்டுபிடித்து, அதனை மீண்டும் தோண்டி, மக்களின் பயன்பாட்டிற்காக விட்டமை ஆகும். இந்தக் கிணறு, பாலைவனத்தில் தாகத்தால் துடித்துக்கொண்டிருந்த நபி இப்ராஹீமின் மனைவி ஹாஜராவையும் அவரது பச்சிளம் புதல்வர் இஸ்மாஈலையும் காப்பாற்றுவதற்காக வானவர் ஜிப்ரீலால் தோற்றுவிக்கப்பட்டதாகும். இதனைச் சூழ கற்சுவர் ஒன்றைக் கட்டி, ஊற்றெடுத்துப் பெருகிக் கொண்டிருந்த இதன் நீரைப் பிடித்து நிறுத்திய முதல்வர் ஹாஜராவே ஆவர். இந்தக் கிணறு, மக்காவில் வாழ்ந்த மக்களுக்கும் பிராணிகளுக்கும் பயனுடையதாய் மிக நீண்டகாலமாக இருந்து வந்தது. இஸ்லாத்திற்கு முந்திய அறியாமைக் காலத்தில், ஜுர்ஹும் வர்க்கத்தவர்கள் மக்காவைத் துறந்து வெளியேறிய சமயம், அவர்கள் தமது செல்வங்களை இந்தக் கிணற்றினுள் போட்டு மூடிவிட்டுச் சென்றனர். காலப் போக்கில் இந்தக் கிணற்றினுள் சேர்ந்த மணலும் குப்பைகளும் இதனை முற்றாக மூடி, இருந்த இடம் தெரியாமற்

ஷம்ஷம் கிணறு தோண்டப்படல்

செய்து விட்டன. ஆயினும், இந்தக் கிணறு பற்றிய வரலாற்றையும் பழைய நினைவுகளையும் மறக்காத அறேபியர் இது மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டுத் தோண்டப்படல் வேண்டும் என்று விரும்பிவந்தனர். இந்த விடயத்தில் மற்றெல்லாரை விடவும் அப்துல் முத்தலிபே அதிக முனைப்பும் அக்கறையும் காட்டினார். இறுதியாக, அவர் கனவுகளின் வழிகாட்டல் மூலம் இந்தக் கிணறு புதையுண்டிருந்த இடத்தைக் கண்டுபிடித்து, இதனை மீளத்தோண்டி மக்களிடம் ஒப்படைத்தார். அவர் இந்தக் கிணற்றைத் தோண்டியபோது தங்கத்தால் செய்யப்பட்ட இரண்டு மான்களின் உருவச் சிலைகள், சில வாள்கள், போர்க் கவசங்கள் ஆகியவற்றைக் கண்டெடுத்தார். மான் உருவச் சிலைகளில் ஒன்று க.்.பாவில் இருந்த 'ஹுபல்' விக்கிரகத்திற்கு அருகே வைக்கப்பட்டது. வாள்கள், க.்.பாவுக்காக கதவு தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டன. இந்தக் கதவு, மற்ற மான்சிலையில் இருந்த தங்கத்தால் உறையிடப்பட்டு, க.்.பாவுக்குப் பொருத்தப்பட்டது. புனித க.்.பாவில் செய்யப்பட்ட முதலாவது தங்க அலங்காரம் இதுவே ஆகும்.[7]

அப்துல் முத்தலிபுக்குப் புதல்வர்கள் பன்னிருவரும் புதல்விகள் அறுவரும் இருந்தனர். புதல்வர்களுள் அபூதாலிப், அப்பாஸ், ஹம்ஸா, அப்துல்லாஹ் ஆகியோர் இஸ்லாமிய வரலாற்றில் சிறப்பிடம் பிடித்துக் கொண்டவர்கள். இஸ்லாத்தின் பரம வைரிகளாக இருந்த அபூலஹபும் அப்துல் முத்தலிபின் புதல்வர்களுள் ஒருவனே ஆவான். அப்துல் முத்தலிபின் கடைசிப் புதல்வரான அப்துல்லாஹ்வே இஸ்லாமிய வரலாற்றின் நாயகரான நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் தந்தை ஆவார்.

அப்துல் முத்தலிப் ஷம்ஷம் கிணற்றைக் கண்டுபிடித்து, அதனை மீளத் தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, அவருக்கு உதவி செய்ய ஒரே மகன் மட்டுமே இருந்தார். அப்போது அவர், அல்லாஹ் தமக்குப் புதல்வர் பதின்மரைத் தந்தால் அவர்களுள் ஒருவரை அவனுக்குப் பலியிடுவதாக நேர்ச்சை செய்து கொண்டார். அவ்வாறே அவரது விருப்பம் நிறைவேறி, அவரது புதல்வர்களின் எண்ணிக்கை பெருகிய போது, அவர் தமது புதல்வர்கள் அனைவரையும் க.்.பாவுக்கு அழைத்துச் சென்றார்; தமது புதல்வர்களுள் எவரைப் பலியிட வேண்டும் என்பதைக் குறிபார்த்துச் சொல்லுமாறு க.்.பாவின் பூசாரியைக் கேட்டார். அவனது குறியில் அவரது இறுதிப் புதல்வர் அப்துல்லாஹ்வின் பெயரே விழுந்தது. அவர் தமது இளையமகன் அப்துல்லாஹ்வை மிக அதிகமாக நேசித்தபோதிலும், தெய்வ விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் எண்ணத்தோடு மகனை அழைத்துக்கொண்டு பலி கொடுக்கும் இடத்திற்குச் சென்றார். அவர்களோடு அவரது மற்றப் பிள்ளைகளும் அங்கே சென்றனர்.

அப்துல் முத்தலிபின் நேர்ச்சை

7. இப்ன் ஹிஷாம், பாகம் 1 பக்கம் 168

அவரது புதல்விகள் கண்ணீர் சிந்தி அழுதவாறு, அப்துல்லாஹ்வை விட்டுவிட்டு, அவருக்குப் பதிலாக பத்து ஒட்டகைகளைப் பலியிடுமாறு தந்தையிடம் கூறினர். எனவே, அவர் பூசாரியிடம் சென்று, பத்து ஒட்டகைகளா அப்துல்லாஹ்வா என்பதைக் குறிபார்த்துச் சொல்லுமாறு கேட்டார். அப்போதும் அப்துல்லாஹ்வின் பெயரே விழுந்தது. ஒட்டகைகளின் எண்ணிக்கை பத்துப் பத்தாக கூட்டப்பட்டு, மீண்டும் மீண்டும் குறிபார்க்கப்பட்டது. ஒவ்வொரு முறையும் அப்துல்லாஹ்வின் பெயரே விழுந்தது. ஒட்டகைகளின் எண்ணிக்கை நூறாக உயர்த்தப்பட்ட போதுதான் குறி ஒட்டகைகள் மீது விழுந்தது. இதனால், அப்துல் முத்தலிபும் மக்களும் மகிழ்ச்சியடைந்தனர். அவ்வாறே அவர் நூறு ஒட்டகைகளைப் பலியிட்டுத் தமது நேர்ச்சையை நிறைவேற்றினார்.

வியத்தகு அழகும் சிறந்த குணங்களும் உடையவராக இருந்த அப்துல்லாஹ், யத்ரிப் (மதீனா) நகரைச் சேர்ந்த குறைஷ் கோத்திரத்தின் கிளைக்குலமான பனூ ஷுஹ்ரா குடும்பத்தில் பிறந்தவரும் வஹ்ப் பின் அப்து மனாப் என்பாரின் புதல்வியும் அப்போது அவரது சிறிய தந்தை வுஹைப் பின் அப்து மனாப் என்பாரின் இல்லத்தில் வளர்ந்து கொண்டிருந்தவருமான ஆமினா என்ற மங்கை நல்லாளுக்கு மணமுடித்து வைக்கப்பட்டார். அப்போது அப்துல்லாஹ் இருபத்தைந்து வயது இளைஞராக இருந்தார். தமது புதல்வருக்குத் திருமணம் நிகழ்ந்த அதே தினத்தில், அப்துல் முத்தலிபும் வுஹைப் பின் அப்து மனாபின் புதல்வி ஹாலாவைத் திருமணம் செய்து கொண்டார். இந்த ஹாலாவுக்கும் அப்துல் முத்தலிபுக்கும் பிறந்தவரே நபி அவர்களின் சிறிய தந்தையும் பால்குடிச் சகோதரருமான ஹம்ஸா ஆவர்.

அப்துல்லாஹ் திருமணம்

அறேபியாவின் குல வழக்கப்படி, அப்துல்லாஹ் திருமணத்தின் பின்னர், மதீனாவில் ஆமினாவின் இல்லத்தில் மூன்று தினங்கள் தங்கினார். பின்னர், தமது மனைவியோடு அவர் மக்காவுக்குத் திரும்பிவிட்டார். சில நாள்களின் பிறகு, அவர் சிரியாவில் உள்ள ஙஷ்ஷா என்ற நகருக்குச் சென்ற வர்த்தகர் குழு ஒன்றோடு வியாபாரத்திற்காகப் பயணமானார். அவர்கள் வியாபாரத்தை முடித்துக் கொண்டு திரும்பிய போது, அப்துல்லாஹ் திடீரென நோயுற்று மதினாவிலே ஒருமாதம் வரை தங்கிவிட்டார். அவரோடு சென்றிருந்தவர்கள் மக்காவுக்குத் திரும்பினர். மகனின் சுகவீனம் பற்றி அறிந்த அப்துல் முத்தலிப் அவரைப்பற்றிய தகவல்களை அறிந்து வருவதற்காகத் தமது மூத்த புதல்வர் ஹாரிதை மதினாவுக்கு அனுப்பிவைத்தார். ஆனால், அவர் மதினாவை அடைந்த போது, அப்துல்லாஹ் மரணமாகி, அங்கேயே அடக்கம் செய்யப்பட்ட செய்தியை அறிந்தார். துயரமான இந்தச் செய்தியை அறிந்து ஹாஷிம் கினைளக்குலத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் பெரும்

அப்துல்லாஹ் மரணம்

வேதனை அடைந்தனர். அவர் இறந்த போது, பிறக்கவிருந்த தமது புதல்வருக்காக ஐந்து ஒட்டகைகளையும் சில வெள்ளாடுகளையும் உம்ம் அய்மன் என்ற அடிமைப் பெண் ஒருவரையுமே மரபுரிமைச் சொத்துக்களாக விட்டுச் சென்றார்.[8]

அப்துல்லாஹ் மரணமாகிச் சில வாரங்களின் பின்னர், மக்காவில் வாழ்ந்து கொண்டிருந்த அவரது விதவை ஆமினா யானை ஆண்டில், றபிஉல் அவ்வல் மாதத்தில் ஒரு திங்கட்கிழமை அதிகாலை அழகிய ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார். இந்தக் குழந்தை பிறந்த தினம் பற்றி வரலாற்றாசிரியர் சிலருக்குள் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. கி. பி. 570ஆம் ஆண்டு றபிஉல் அவ்வல் பன்னிரண்டாம் நாள் இக்குழந்தை பிறந்தது என்று சிலர் கூறுகின்றனர். கி. பி. 571ஆம் ஆண்டு றபிஉல் அவ்வல் பன்னிரண்டாம் நாள் என்று வேறு சிலர் கூறுகின்றனர். முதலாவது கருத்தே பொதுவாக எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆயினும், புகழ்பெற்ற எகிப்திய வானியலாளரான மஹ்மூத் பல்கீ பாஷா என்பார் கணிதக் கணிப்பின் மூலம் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கி. பி. 571 ஆம் ஆண்டு (ஏப்ரல் இருபதாம் திகதிக்குச் சரியான) றபிஉல் அவ்வல் ஒன்பதாம் நாள் திங்கட்கிழமை பிறந்தார்கள் என்று நிரூபித்திருக்கிறார்.[9]

முஹம்மதின் பிறப்பு

இந்தக் குழந்தைக்கு அன்னை ஆமினா, 'அஹ்மத்' (அதிக புகழுக்குரியவர்) என்றும் பாட்டனார் அப்துல் முத்தலிப், 'முஹம்மத்' (புகழப்பட்டவர்) என்றும் பெயர் சூட்டினர். முஹம்மத் என்ற பெயர் அக்கால குறைஷிகளுக்கு முற்றிலும் அறிமுகமற்ற ஒரு பெயராக இருந்தது.[10] அதனால், பெயர்சூட்டு விழாவுக்கு வந்திருந்த குறைஷ்கள் அப்துல் முத்தலிபிடம், 'ஏன் நீங்கள் குலவழக்கத்திற்கு மாறாகக் குழந்தைக்கு பெயர் சூட்ட விரும்பினீர்கள்?' என்று கேட்க அவர், 'எனது பேரர் அல்லாஹ்வால் வானிலும் மனிதரால் பூமியிலும் புகழப்படலாம் என்று கருதியே முஹம்மத் என்று பெயரிட்டேன்' என்று கூறினார்.[11]

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறந்த அன்று சமகால உலகில் பல வியத்தகு சம்பவங்கள் நிகழ்ந்தன. பாரசீகப் பேரரசன் குஸ்ராவின் மாளிகை பலத்த சப்தத்தோடு ஆடியது; அதிலிருந்து பதினான்கு கோபுரங்கள் கீழே விழுந்து நொறுங்கின. ஆயிரம் ஆண்டுகளாக அணையாமல் தொடர்ந்துஎரிந்து கொண்டிருந்த பாரசீகரின் (வழிபாட்டிற்குரிய) நெருப்பு

8. இப்ன் ஸஃத், பாகம் 1 பக்கம் 100

9. அபுல் ஹஸன் அலீ அல் நத்வீ, அஸ்ஸீரதுந் நபவிய்யா, பக்கம் 112. அடிக்குறிப்பு இல.1

10. நபி (ஸல்) அவர்களுக்கு முன்னர், அறேபியாவில் முஹம்மத் என்ற பெயரை எவரும் அறிந்திருக்கவில்லை. மூவருக்கு மட்டுமே இந்தப் பெயர் இருந்தது. (மேற்படி, பக்கம் 112–13. அடிக்குறிப்பு இல.4)

11. இப்ன் கதீர், அல் பிதாயா வல் நிஹாயா, பாகம் 11 பக்கம் 247

நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் பரம்பரை அட்டவணை



வானம் இடையறாத ஒருவகை ஒளியால் பிரகாசித்தது. சிலைகள் எல்லாம் முகம் குப்புறக் கீழே விழுந்தன.[13]

ஆரம்பத்தில் அன்னை ஆமினாவே தமது குழந்தைக்கு இரண்டு அல்லது மூன்று தினங்கள் வரை பாலூட்டினார். பின்னர், அபூலஹபின் அடிமைப் பெண் துவைபா என்பார் சில தினங்கள் வரை பாலூட்டி வந்தார். அக்காலத்தில், நகரப் புறத்தில் பிறந்த உயர்குடிக் குழந்தைகளை நாட்டுப் புறங்களில் சுதந்திரமான சூழலில் வளர விடுதல் அறேபியரின் வழக்கமாக இருந்தது.[14] இதனால், அந்தக் குழந்தைகள் பாலைநிலத்தின் தூயகாற்றைச் சுவாசித்துத் தேகபலம் உடையவர்களாக வளர்வதோடு, சுத்தமான - திருந்திய - அறபு மொழியையும் பேசக் கற்றுக் கொள்வர் என்று அறேபியர் நம்பினர். உண்மையில், அக்காலத்தில் நகரங்களில் வாழ்ந்த அறேபியரை விடவும் நாட்டுப்புற நாடோடி அறேபியரே மிகத்திருந்திய மொழிவழக்கை உடையவர்களாக இருந்தனர். இந்த வழக்கத்தைப் பின்பற்றி, ஆமினாவும் தமது குழந்தை முஹம்மத் (ஸல்) அவர்களை ஸ.'.த் வர்க்கத்தைச் சேர்ந்த ஹலீமா பின்த் அபூ துஅய்ப் அல் ஸ.'.தியா என்ற நாடோடி அறபுப் பெண்ணிடம் பாலூட்டி வளர்ப்பதற்காக ஒப்படைத்தார். இந்தப் பெண்ணின் குடும்பத்திலேதான் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் நாடோடி அறேபியரின் தூய வழக்கில் பேசும் திறனை விருத்தி செய்து கொண்டார்கள். இதுபற்றி அவர்கள் பிற்காலத்தில் ஒருமுறை நன்றியோடு குறிப்பிட்டபோது, ''நான் உங்களுள் மிக நேர்த்தியாவன்; ஏனெனில், நான் குலத்தால் குறைஷ் குலத்தைச் சேர்ந்தவன்; மொழியால் ஸ.'.த் வர்க்த்தைச் சேர்ந்தவன்'' என்று கூறினார்கள்.[15] சர் வில்லியம் முயிர் தமது 'முஹம்மதின் வாழ்க்கை' (Life of Muhammad) என்ற நூலில் இது பற்றிக் குறிப்பிடுகையில், ''முஹம்மத் (ஸல்) நல்ல உடற்கட்டைப் பெற்றிருந்தார்; அவரது ஆசாரங்கள் சுதந்திரமானவையாயும் சுயேச்சையானவையாயும் இருந்தன. ஸ.'.த் வர்க்கத்தாரிடம் ஐந்து ஆண்டுகள் அவர் பால் குடித்து வளர்ந்து வந்தமையே இதற்குரிய காரணம். அவர் தீபகற்பத்தின் தூய மொழியைப் பேசியமைக்கும் இதுவே காரணமாக இருந்தது'' என்று எழுதியிருக்கிறார்.

ஹலீமாவின் பொறுப்பில்

இவ்வாறு, முஹம்மத் (ஸல்) அவர்கள் ஹலீமாவின் இல்லத்தில் ஐந்து ஆண்டுகள் வளர்ந்தார்கள். அவர் அவர்களைத் தமது சொந்தக் குழந்தைகளை விடவும் அதிகமாக நேசித்து வளர்த்து வந்தார். பின்னர்,

12. மேற்படி, பக்கம் 249
13. இப்ன் அல் தய்பங் , ஹதாஇகுல் அன்வார் வ மதாலிஉல் அஸ்ரார், பாகம் 1 பக்கம் 20
14. இந்த வழக்கம் இன்னும் உயர்குடி அறேபியரிடையே இருந்து வருகிறது. அவர்கள் தமது குழந்தைகளை எட்டுநாள் சிசுக்களாக இருக்கும்போதே நாட்டுப் புறங்களுக்கு அனுப்பி விடுவர். அந்தக் குழந்தைகள் தமது எட்டு வயது அல்லது பத்து வயது வரை நாட்டுப்புறங்களில் வளர்ப்புத்தாய்மாரிடம் வளர்ந்து வருவர்.
15. இப்ன் ஸஃத், பாகம் 1 பக்கம் 113

அவர்கள் அன்னையிடம் வளர்வதற்காக மக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். முஹம்மத் (ஸல்) அவர்கள் ஆறு வயதுச் சிறுவராக இருந்தபோது, ஆமினா தமது மகனை அழைத்துக் கொண்டு, கணவர் அப்துல்லாஹ்வின் அடக்கத்தலத்தையும் உறவினர்களையும் தரிசிப்பதற்காக மதீனாவுக்குச் சென்றார். அங்கே சுமார் ஒரு மாத காலம் தங்கியிருந்தார். பின்னர் அங்கிருந்து மக்காவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது மக்காவுக்கும் மதினாவுக்கும் இடையே அல் ஜுஹ்பாவிலிருந்து இருபத்து மூன்று மைல் தொலைவில் உள்ள அல் அப்வா.'. என்ற சிற்றூரில், ஆமினா திடீரென நோயுற்று மரணமானார். அங்கேயே அவர் நல்லடக்கம் செய்யப்பட்டார். இவர்களோடு துணையாகச் சென்றிருந்த அடிமைப் பெண்ணான உம்ம் அய்மன் பாலகர் முஹம்மதைப் பத்திரமாக மக்காவுக்குக் கூட்டி வந்தார்.

ஆமினா மரணம்

அன்னை ஆமினா மரணித்த பின்னர், பாட்டனார் அப்துல் முத்தலிப் அனாதையாகிவிட்ட முஹம்மத் அவர்களை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அவர் தம் பேரரை அன்போடும் அனுதாபத்தோடும் வளர்த்து வந்தார். ஆனால், அவரது வளர்ப்பும் மேற்பார்வையும் இரண்டு ஆண்டுகளுக்கே கிடைத்தன. முஹம்மத் அவர்கள் எட்டு வயதுச் சிறுவராக இருந்த போது, அப்துல் முத்தலிப் கி.பி. 579ஆம் ஆண்டளவில், தமது எண்பத்தியிரண்டாம் வயதில் இறையடி எய்தினார். மரணித்த சமயம் அவர் நூற்றிருபது வயது முதியவராக இருந்தார் என்றும் கூறப்படுகிறது.

பாட்டனாரின் பொறுப்பில்

அப்துல் முத்தலிப் மரணப்படுக்கையில் கிடந்த சமயம், தமது புதல்வர்களுள் ஒருவரான அபூதாலிபை அழைத்து, சிறுவர் முஹம்மதை வளர்க்கும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார். தாம் ஏற்றுக்கொண்ட பொறுப்பை மிகவும் சிறப்பாக நிறைவேற்றிய அவர் முஹம்மத் (ஸல்) அவர்களைத் தாம் மரணிக்கும் வரை கவனித்து வந்தார். தம் தம்பி மகனை எப்போதும் தம் அருகிலேயே வைத்திருக்கும் அளவுக்கு அவர் அவர்களை அதிகம் நேசித்து வளர்த்தார். உண்ணுதல், உறங்குதல் முதலான அன்றாட அலுவல்களின் போதெல்லாம் அவர் முஹம்மத் (ஸல்) அவர்களைத் தம்முடனேயே வைத்துக் கொண்டார்; வெளியிற் சென்றபோதெல்லாம் அவர்களையும் தம்மோடு கூட்டிச் சென்றார். அபூதாலிபும் அவரது மனைவி பாத்திமா பின்த் அஸதும் சில சமயங்களில் தமது சொந்தப் பிள்ளைகளையே புறக்கணித்து விடும் அளவுக்கு சிறுவர் முஹம்மதைத் தமது சொந்தப் புதல்வராகக் கருதி, அவர்கள் மீது மிகுந்த அன்பு செலுத்தி வந்தனர்.

இவ்வாறு, முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது சிறுபிராய வாழ்க்கையைப் பெரிய தந்தை அபூதாலிபின் இல்லத்தில், அவரது சொந்தப் பிள்ளைகளோடு கழித்து வந்தார்கள். அபூ தாலிப் அவரது முன்னோர்களைப்

போலப் பெரும் செல்வராக இருக்கவில்லை. அதனால், முஹம்மத் (ஸல்) அவர்களால் வாழ்க்கை வழிதேடும் பளுவிலிருந்து விடுபட்டவர்களாக இருக்க இயலவில்லை. வறிய குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களைப் போலவே அவர்களும் வாழ்க்கை வழியைச் சம்பாதித்துக் கொள்வதற்காக உழைக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு ஆளானார்கள். எனவே, அவர்கள் சிறுவராக இருந்தபோதே மக்காவாசிகளின் ஒட்டகைகளையும் ஆடுகளையும் கூலிக்காக மேய்த்து வந்தார்கள். சுவாரஸ்யமான இந்தத் தொழில் பற்றி நபி (ஸல்) அவர்கள் பிற்காலத்தில் ஒருமுறை குறிப்பிட்ட போது, 'நான் மக்காவாசிகளின் வெள்ளாடுகளையும் செம்மறி ஆடுகளையும் 'கராரீத்'தின் மீது மேய்த்து வந்தேன்' என்று கூறினார்கள்.(புஹாரி)[16]

முஹம்மத் (ஸல்) அவர்கள் பதின்மூன்று வயதுச் சிறுவனாக இருந்த போது, முனைப்புள்ள வர்த்தகரான அபூதாலிப் வியாபாரத்தின் பொருட்டு சிரியாவுக்குச் செல்லப்புறப்பட்டார். அப்போது, அவர் தம் தம்பி மகனையும் சிரியாவுக்குக் கூட்டிச் சென்றார். இதுவே நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் முதலாவது வெளிநாட்டுப் பயணமாகும். இந்தப் பிரயாணத்தின் போதுதான் அவர்கள் முதன்முறையாக மக்களது துயரங்களையும் அவர்களது சமய ஊழல்களையும் வேறுபட்ட வாழ்க்கை முறைகளையும் அவதானித்தார்கள். இந்தக் காட்சிகள் அவர்களது பிஞ்சு உள்ளத்திலே நிலையான பதிவுகளைப் பதித்து விட்டன. இந்தப் பயணத்தின் போது, தமஸ்கஸுக்குத் தெற்கே உள்ள புஸ்ரா என்ற இடத்தில் வாழ்ந்தவரும் இறை வேதங்களில் ஆழமான அறிவு பெற்றிருந்தவருமான பஹீரா.ஃ என்ற கிறித்தவத் துறவி முஹம்மத் (ஸல்) அவர்களையும் அவர்களிடம் தென்பட்ட நபித்துவ அடையாளங் களையும் அவதானித்து விட்டு, ''அபூ தாலிபே! இந்தச் சிறுவர்தான் உலகில் தோன்றவிருக்கும் இறுதி நபி; இவரைப் பத்திரமாக உடன் நாட்டிற்கு அழைத்துச் சென்று, யூதர்களிடமிருந்து இவரைக் கவனமாகப் பாதுகாத்துக் கொள்ளும். ஏனெனில், அல்லாஹ் மீது சத்தியமாக, அவர்கள் இவரைப் பார்த்து, இவரைப் பற்றி நான் கூறிய முன்னறிவிப்பைத் தெரிந்து கொண்டால், அவர்கள் இவரது உயிருக்குத் தீங்கு விளைவிக்கக் கூடும். ஆகவே, இவரை விரைவாக வீட்டிற்குக் கூட்டிச் செல்லும்'' என்று கூறினார் என்று

முதலாவது வெளிநாட்டுப் பயணம்

16. இந்த ஹதீதில் வரும் 'கராரீத்' என்ற சொல்லின் கருத்து சம்பந்தமாக அறிஞர்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. இமாம் இப்ன் மாஜாவின் ஆசிரியரான ஷைக் ஸுவைத் பின் ஸஈத் என்பார் 'கராரீத்' என்பது 'திர்ஹம்' என்ற பொருளைக்கொண்ட 'கீராத்' என்ற சொல்லின் பன்மை என்றும் நபி அவர்கள் கூலிக்கே ஆடு மேய்த்தார்கள் என்றும் கூறுகிறார். இமாம் புகாரீ இந்த ஹதீதை 'இஜாரா' (கூலிவேலை) என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்திருப்பதும் இங்கே நோக்கத்தக்கது. இப்ராஹீம் அல் ஹர்பீ, இப்ன் அல் ஜவ்ஷீ ஆகியோர் 'கராரீத்' என்பது அஜ்யாத் என்ற இடத்திற்கு அருகிலுள்ள ஒரு பகுதியின் பெயர் என்கின்றனர். ஸஹீஹுல் புகாரீக்கு விரிவுரை எழுதிய அல்அய்னீ பிந்திய கருத்தையே உறுதிப்படுத்துகிறார்.

சொல்லப்படுகிறது.[17] இந்தச் சம்பவத்தின் பிறகு, அபூதாலிப் அங்கே அதிக நாள் தங்காமல், தமது தம்பி மகனோடு மக்காவுக்கு திரும்பி விட்டார்.

முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு தமது வாழ்நாளில் பாடசாலைக்கு அல்லது ஆசான் ஒருவரிடம் சென்று கல்வி கற்கும் வாய்ப்போ எழுத, வாசிக்கக் கற்றுக் கொள்ளும் சந்தர்ப்பமோ கிடைக்கவில்லை. ஆயினும், பிற்காலத்தில் அல்லாஹ்வின் அருளால் மிக உயர்ந்த ஞானம் நிறைந்தவர்களாயும் முந்திய இறைமறைகள் பற்றிய வியத்தகு அறிவு உடையவர்களாகவும் இருந்தார்கள். அதனால், எழுத வாசிக்கத் தெரியாதிருந்த அவர்களை மக்கள் 'உம்மீ நபி' என்றே அழைத்தனர். இதனைப்பற்றி அல்லாஹ் தனது அல்குர்ஆனிலே, ''எழுத்தறிவில்லாத (உம்மீ) ஜனங்களுக்காக அவர்களிலேயே ஒரு தூதரை அவன் அனுப்பி வைத்தான்'' (62:2) என்று குறிப்பிட்டிருக்கின்றான்.[18]

உம்மீ

மிகச் சிறுவயதிலிருந்தே முஹம்மத் (ஸல்) அவர்களிடம் வாய்மை, ஒழுக்கத் தூய்மை, கடமையுணர்வு, நேர்மை, கட்டுப்பாடு, பிறர்க்கு உதவும் மனப்பாங்கு, நம்பிக்கைக்கு மாறுசெய்யாமை, அன்புடைமை முதலான அருங்குணங்கள் முழுமையாகக் காணப்பட்டன. அவர்களது இனிய இயல்பும் நல்ல நடத்தையும் மக்களின் கவனத்தை ஈர்த்தன. குறைஷ் கோத்திரத்தார் மட்டுமன்றி, மக்காவில் வாழ்ந்த மக்கள் அனைவரும் அவர்கள் மீது அசையாத நம்பிக்கை வைத்திருந்தனர். அந்த மக்கள் இக்கட்டான சமயங்களில், தங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு அவர்களது ஆலோசனையை நாடினர்; தங்கள் பிணக்குகளை

அல் அமீன்

17. இந்தச் சம்பவம் பற்றி ஹதீத் அறிவிப்பாளர்களும் அறபு வாரலாற்றாசிரியர்களும் பல்வேறு விதமாகக் கூறியிருக்கின்றனர். இந்தக் கதையில் முஸ்லிம்களை விடவும் கிறித்தவ எழுத்தாளர்களே அதிக ஆர்வம் காட்டி வந்திருக்கின்றனர். நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் 'ஈமான்' பற்றிய அறிவையும் அதன் அடிப்படைகளையும் இந்தத் துறவியிடமிருந்தே கற்று, அவரிடம் கற்றுக்கொண்டவற்றை அடிப்படையாக வைத்தே புதிய மதத்தை நிறுவினார்கள் என்ற கருத்தை நிறுவுவதற்கு கிறித்தவ எழுத்தாளர்கள் இந்தக் கதையையே பயன்படுத்துகின்றனர். இஸ்லாமிய கோட்பாடுகள் அனைத்துமே பஹீராஃவால் போதிக்கப்பட்ட அடிப்படைக் கருத்துக்களின் விரிவாக்கம் என்று அவர்கள் கருதுகின்றனர். முஸ்லிம் வாராற்றாசிரியர்கள் பலர் பஹீராஃ பற்றிய சம்பவம் ஆதாரமற்ற – நம்பமுடியாத – ஒரு கட்டுக்கதை என்கின்றனர். இக்கதை ஹிஜ்ரி 100ஆம் ஆண்டிலேயே எழுத்துருப் பெற்றிருக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகின்றனர். இது பற்றிய விரிவான விளக்கங்களுக்குப் பார்க்க: Khuda Bukhsh, Contribution to the History of Islamic Civilization, Vol. I pp. 186-92; Shibli Numani, Siratun Nabi. (Eng. Trans), Vol. I. pp.157-60; அபுல் ஹஸன் அலீ நத்வி, ஸீரதுந் நபவிய்யா, பக்கம் 116–118.

18. 'உம்மீ' என்ற சொல் அல்குர்ஆனில் சில இடங்களில் ஆளப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் வரும் 'உம்மீ' என்ற சொல்லுக்கு அல் குர்ஆன் விரிவுரையாளர்கள் பலர் எழுத வாசிக்கத் தெரியாதவர் என்றே பொருள் கூறியிருக்கின்றனர். நபி (ஸல்) அவர்களும் 'நாங்கள் உம்மீ' சமூகத்தவர்கள்; நாங்கள் எழுதுவதோ கணக்கு வைப்பதோ இல்லை' என்று கூறியிருக்கின்றார்கள். வேதம் அருளப்படாதோர் (அலகுர்ஆன் 3:20), கல்வி அறிவு இல்லாதவர் (2:78) ஆகிய பொருள்களிலும் இந்தச் சொல் அல் குர்ஆனிலே ஆளப்பட்டிருக்கிறது. அறேபியர் அறேபியரல்லாதோரை 'அஜமீ' என்று அழைத்தமை போல யூதர்களும், அக்காலத்தில் யூதரல்லாத மக்களை – குறிப்பாக புறச்சமயிகளாக இருந்த அறேபியரை – 'உம்மீ' என்று அழைத்து வந்தனர். 62:2 ஆவது வசனத்தில் 'உம்மீ' என்ற சொல் இந்தக் கருத்திலேயே ஆளப்பட்டிருக்கிறது என்று மௌலானா மௌதூதீ கூறுகிறார். (Abul A'la Maududi, The Meaning of the Quran, vol. xiv pp.243-44

அவர்களிடம் ஒப்படைத்து, அவர்கள் அளித்த தீர்ப்பை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டனர். நபி அவர்களின் மகோன்னதமான பண்புகளால் - குறிப்பாக, நம்பிக்கைக்கு மாறுசெய்யாத அரிய குணத்தால் - கவரப்பட்ட மக்கள் அண்ணல் அவர்களுக்கு 'அல் அமீன்' (நம்பிக்கைக்குரியவர்), 'அல் ஸாதீக்' (வாய்மையாளர்) முதலான சிறப்புப் பட்டங்களை அளித்தும் கௌரவப்படுத்தினர்.

'ஹில்புல் புழூல்' கூட்டிணைப்பு

முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது சிறுபிராயத்திலிருந்தே சமூகப் பணிகளில் அதிகம் ஆர்வம் காட்டி வந்தார்கள். ஏழைகளுக்கு இரங்குதலும் அல்லற்படுவோர்க்கு உதவுதலும் நபி அவர்களின் உயிரோடு ஒட்டிய பண்புகளாக இருந்தன. குறைஷ் கோத்திரத்தாருக்கும் ஹவாஷின் வர்க்கத்தாருக்கும் இடையே பிஜார் போர் மூண்டபோது, நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் பதினான்கு வயது இளைஞராக இருந்தார்கள்.[19] இந்தப் போரில் முஹம்மத் (ஸல்) அவர்கள் குறைஷ்களின் அணியைச் சார்ந்து நின்ற போதிலும், அவர்கள் ஆயுதம் ஏந்திச் சண்டை புரிந்ததோ எவரையேனும் தாக்கியதோ இல்லை. இந்தப் போரில் பெருந்தொகையானோர் கொல்லப்பட்டனர்; அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. இளகிய இதயம் உடையவராக இருந்த இளைஞர் முஹம்மத் (ஸல்) அவர்கள் போரையும் அதன் தீயவிளைவுகளையும் வெறுத்தார்கள். எனவே, அவர்கள் போர் முடிவுற்ற பின்னர், பிரதேசத்தில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டு வதற்காகக் கூட்டிணைப்பு ஒன்றை உருவாக்கிக் கொண்ட மக்களோடு தீவிரமாக ஒத்துழைத்தார்கள். தீமைகளையும் அநீதிகளையும் எதிர்த்துப் போராடுதல், பலவீனரையும் உதவியற்றோரையும் தீங்கிழைக்கப்பட்டோரையும் பாதுகாத்தல், திருடப்பட்ட உடைமைகளை மீளப்பெற்று உரியவர்களிடம் ஒப்படைத்தல் என்பன இந்தக் கூட்டிணைப்பின் பிரதான இலட்சியங்களாக இருந்தன. இந்தக் கூட்டிணைப்பின் பங்காளிகள் அனைவரும் தங்கள் குறிக் கோளை அடையப் பெற உழைப்பதாக அல்லாஹ்விடம் உறுதிப் பிரமாணம் செய்து கொண்டனர். இந்த உறுதிப் பிரமாணம் பற்றி அடிக்கடி நினைவுகூர்ந்து வந்த நபி (ஸல்) அவர்கள் பிற்காலத்தில் ஒருமுறை, ''அப்துல்லாஹ் பின் ஜுத்ஆன் என்பாரின் இல்லத்தில் நிகழ்ந்த கூட்டிணைப்பில் நானும் பங்கு கொண்டேன். அதற்குப் பதிலாக சிகப்பு ஒட்டகைகள் எனக்கு அளிக்கப்பட்டால் கூட நான் (அதனை

19. ஹவாஷின் வர்க்கத்தைச் சேர்ந்த உர்வா பின் உத்பா என்பார் கொல்லப்பட்டமையே இந்தப் போருக்குக் காரணமாக அமைந்தது என்று கூறப்படுகிறது. இவரை அல் ஹீராவின் அரசனான நுஃமான் விற்பனைக்குரிய ஒட்டக மந்தை ஒன்றோடு 'உகாள்' சந்தைக்கு அனுப்பி இருந்தான். குறைஷ்களின் நேசக்குலமான கினானா வர்க்கத்தைச் சேர்ந்த அல்பர்ராழ் என்பார் இவரைத் திருட்டுத்தனமாகக் கொன்றுவிட்டு, ஒட்டகங்களை ஓட்டிச் சென்று விட்டார். இந்தச் சம்பவம் குறைஷ்களின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் நிகழ்ந்தமையாலும் இதில் அவர்களது நேசக்குலம் ஒன்று சம்பந்தப்பட்டிருந்ததனாலும் குறைஷ்களுக்கும் ஹவாஷின் வர்க்த்தாருக்குமிடையே போர் மூண்டது. நான்கு ஆண்டுகள் வரை தொடர்ந்த இந்தப் போர் இறுதியில் சமாதான ஒப்பந்தம் ஒன்றின் மூலம் நிறுத்தப்பட்டது.

விட்டுக் கொடுக்க) விரும்பமாட்டேன். இஸ்லாத்தில் இருக்கும்போது அதன்பால் அழைக்கப்பட்டாலும் உடனே பதில் அளிப்பேன்'' என்று கூறினார்கள்.[20] இந்தக் கூட்டிணைப்பு 'ஹில்புல் புழூல்' (பழ்ல்களின் கூட்டிணைப்பு) என்று குறைஷ்களால் அழைக்கப்பட்டது.[21] இதுவே அறேபியரின் சமூக அமைப்பில் நல்ல மாற்றங்களைத் தோற்றுவிக்கும் எண்ணத்தோடு அண்ணல் முஹம்மத் (ஸல்) அவர்களால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது சீர்திருத்த முயற்சியாகும்.

இரண்டாவது வெளிநாட்டுப் பயணம்

முஹம்மத் (ஸல்) அவர்களின் உயர் பண்புகள் பற்றி மக்காவில் வாழ்ந்த ஒவ்வொருவரும் புகழ்ந்து பேசினர். எல்லார் வாயிலும் அவர்களது மகோன்னத குணங்கள் பற்றிய பேச்சாகவே இருந்தது. மக்காவில் வாழ்ந்த கதீஜா என்ற விதவைச் சீமாட்டியும் முஹம்மத் (ஸல்) அவர்கள் பற்றிச் செவியுற்றார். இவரும் நபி அவர்களைப் போல நல்லியல்புகளும் தூய ஒழுக்கமும் உடையவராக இருந்தமையால், மக்கள் இவரை 'தாஹிரா' (தூயர்) என்று அழைத்து வந்தனர். மக்கா நகரிலே பெரும் வர்த்தகச் சீமாட்டியாய் விளங்கிய இவர் தமது வணிகப் பொருள்களை நாட்டிற்கு வெளியே கொண்டு சென்று வியாபாரம் செய்வதற்கு நம்பிக்கைக்குரியவர்களை இலாபப் பங்கு அடிப்டையில் கூலிக்கு அமர்த்தி வந்தார். வழக்கம் போல அப்போதும் இவருக்குத் தமது வியாபாரத்தைக் கவனிக்க நம்பிக்கை வாய்ந்த ஒருவர் தேவையாயிற்று. முஹம்மத் (ஸல்) அவர்களைப்பற்றிக் கேள்வியுற்ற பின்னர், அவரே தமது வர்த்தகத்தைக் கவனிப்பதற்குப் பொருத்தமானவர் என்று கருதி, அவரைத் தமது இல்லத்திற்கு அழைத்து, தமது வர்த்தகப் பொருள்களை சிரியாவுக்கு எடுத்துச் சென்று வியாபாரம் செய்யுமாறும் மற்றவர்களுக்குக் கொடுத்த இலாபப் பங்கை விடவும் அதிக பங்கு தருவதாகவும் கூறினார். நபி (ஸல்) அவர்கள் தமது பெரிய தந்தை அபூதாலிபோடு இது பற்றி கலந்தாலோசித்த பின்னர், அவரது அனுமதியோடு கதீஜாவின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார்கள். அப்போதுதான் நபியவர்களுக்கு இரண்டாவது முறையாக சிரியாவுக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. இரண்டு அல்லது மூன்று மாதங்களின் பின்னர், அவர்கள் சிரியாவில் தமது வியாபாரத்தை முடித்துக் கொண்டு, அதிக இலாபத்தோடு மக்கா திரும்பினார்கள்.

இந்தப் பிரயாணத்தின் போது, பல அற்புதங்கள் நிகழ்ந்தன. முஹம்மத்

20. இப்ன் கதீர், பாகம் ii பக்கம் 272

21. இந்தக் கூட்டிணைப்பு குறைஷ் கோத்திரத்தைச் சேர்ந்த கொடை வள்ளலான அப்துல்லாஹ் பின் ஜுத்ஆன் என்பாரின் இல்லத்திலே நிகழ்ந்தது. இந்தக் கூட்டிணைப்பு உருவாகுவதற்கு முன்னோடிகளாக இருந்தவர்கள் அல் பழ்ல் பின் பழாலா, அல் பழ்ல் பின் விதாஆ, அல் பழ்ல் அல் ஹாரித் ஆகியோராவார். இதனாலேயே இந்தக் கூட்டிணைப்பு 'ஹில்புல் புழூல்' (பழ்ல்களின் கூட்டிணைப்பு) என்று அழைக்கப்பட்டது. 'புழூல்' என்பது 'பழ்ல்' என்ற சொல்லின் பன்மை ஆகும்.

(ஸல்) அவர்களோடு சிரியாவுக்குச் சென்றிருந்த கதீஜாவின் அடிமையான மைஸரா இந்த அற்புத நிகழ்வுகளைலெல்லாம் கவனிக்கத் தவறவில்லை. வியாபாரம் முடிந்து மக்காவுக்குத் திரும்பி வந்ததுமே, மைஸரா தாம் கண்ட அதிசயங்களை எல்லாம் கதீஜாவிடம் கூறினார். நாயகத்தின் நல்ல நடத்தையையும் விழுமிய தன்மையையும் ஆத்மிக ஆற்றல்களையும் அறிந்து கொண்டதும் கதீஜா தமது வர்த்தகம் முழுவதையும் முஹம்மத் (ஸல்) அவர்களது பொறுப்பிலேயே விட்டுவிட்டார். நபியவர்கள் மீது கதீஜா வைத்திருந்த நம்பிக்கை படிப்படியாக ஒரு பிடிப்பாகவும் காதலாகவும் மலர்ந்தது. சிரியாவிலிருந்து திரும்பிய சுமார் மூன்று மாதங்களின் பின்னர், அவர் முஹம்மத் (ஸல்) அவர்களைத் தமது இல்லத்திற்கு வரவழைத்து, தம் உள்ளத்தில் எழுந்த விருப்பத்தை நேராகவே அவர்களிடம் வெளியிட்டார். நபியவர்கள் இந்த விடயம் குறித்துத் தமது பெரிய தந்தை அபூதாலிபோடு கலந்தாலோசித்த பின்னர், கதீஜாவைத் திருமணம் செய்து கொள்ள இசைந்தார்கள். இந்தத் திருமணம் நிகழ்ந்த போது, முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வயது இருபத்தைந்து; கதீஜாவுக்கு வயது நாற்பது.

திருமணம்

குவைலித் என்பாரின் புதல்வியான கதீஜா மக்காவில் வாழ்ந்த மிக அழகிய பெண்களுள் ஒருவர். குறைஷ் குலத்தைச் சேர்ந்த இவர் குஸையின் புதல்வர்களுள் ஒருவரான அப்துல் உஷ்ஷாவின் பூட்டப் பேத்தியாவார். அறவொழுக்கம் வாய்ந்த பெண்ணாக இருந்த இவர் அறியாமைக் காலத்திலேயே தமது மகோன்னத குணங்களுக்காக மக்கா நகர மக்களிடையே மதிப்புக்குரிய ஒருவராகப் போற்றப்பட்டவர். முதலில் தமீம் வர்க்கத்தைச் சேர்ந்த அபூ ஹாலா என்பாருக்கு இவர் திருமணம் செய்து வைக்கப்பட்டார். ஆனால், குறுகிய காலத்திலேயே இவர்களது திருமண வாழ்க்கை விவாக விலக்கில் முடிவுற்றுவிட்டது. இந்தத் திருமணத்தின் மூலம் இவருக்கு ஹாலா, ஹின்த் என்ற பெயர்களை உடைய ஆண்கள் இருவர் பிறந்தனர். பின்னர், இவர் மக்ஷும் கிளைக்குலத்தைச் சேர்ந்த அதீக் என்ற வணிகச் செல்வரை மறுமணம் செய்து கொண்டார். இந்தத் திருமணத்தின் மூலம் இவர் ஹின்த் என்ற பெயரை உடைய பெண் குழந்தை ஒன்றுக்குத் தாயானார்.

கதீஜா

இரண்டாவது கணவர் இறந்த பின்னர், இவர் மீண்டும் திருமணம் செய்து கொள்ளாமல், தமது வர்த்தகத்தையே கவனித்து வந்தார். இவரது அழகாலும் செல்வத்தாலும் உயர்குணங்களாலும் கவரப்பட்ட குறைஷ் குலப் பிரமுகர்கள் பலர் இவரைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினர். ஆனால், அவர்களது மணப்பேச்சுக்களை நிராகரித்த இவர் இனிமேல் எவரையுமே திருமணம் செய்வதில்லை என்றும் தீர்மானித்துக் கொண்டார். ஆயினும், முஹம்மத் (ஸல்) அவர்களின் சந்திப்பு இவரது தீர்மானத்தைத் தகர்த்து, இவரது வாழ்வில் புதிய திருப்புமுனை ஒன்றை

ஏற்படுத்திவிட்டது. முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது நற்பண்புகளால் கதீஜாவின் விழுமிய உள்ளத்திலே அழியாத ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டார்கள். இவரும் நபியவர்களின் உயர்ந்த உள்ளத்திலே தமது அறவொழுக்கம் மூலம் நிலையான ஓர் இடத்தைத் தேடிக்கொண்டார்.

கதீஜாவுக்கும் முஹம்மத் (ஸல்) அவர்களுக்குமிடையே திருமணப் பேச்சு நிகழ்ந்தபோது, கதீஜாவின் தந்தை குவைலித் பின் அஸத் உயிரோடு இருக்கவில்லை. இதுவே பொதுவாக எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். இப்ன் ஸஃத், அல் ஸுஹைலீ, இப்ன் இஸ்ஹாக் முதலான வரலாற்றாசிரியர்களும் இப்ன் அப்பாஸ், ஆஇஷா முதலானோரும் பிஜார் போருக்கு முன்பே அவர் இறந்து விட்டார் என்று கூறுகின்றனர். ஆனால், இமாம் அல் ஷுஹ்ரீ அப்போது குவைலித் உயிரோடு இருந்தார் என்றும் இந்தத் திருமணத்தை விரும்பாதிருந்த அவருக்கு கதீஜா மது போதையை ஏற்படுத்தி, அவரது அனுமதியைப் பெற்றார் என்றும் கூறுகிறார்.[22] பெரும்பான்மையான வரலாற்றாசிரியர்களும் ஹதீஸ் கலை அறிஞர்களும் இது தவறான கூற்று என்றே கருதுகின்றனர். இந்தத் திருமணத்திற்கு அனுமதி அளித்தவர் கதீஜாவின் சிறிய தந்தை அம்ர் பின் அஸத் என்பவராவர். நபியவர்களின் பெரிய தந்தை அபூதாலிப் திருமணப் பிரசங்கத்தை நிகழ்த்தினார். மஹ்ராக ஐந்நூறு திர்ஹம்கள் கொடுக்கப்பட்டன. திருமணம் கதீஜாவின் இல்லத்திலேயே நிகழ்ந்தது.

முஹம்மத் (ஸல்) அவர்கள் கதீஜாவைத் திருமணம் செய்து கொண்டமை அவர்களது வாழ்க்கையிலே நடைபெற்ற முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும். இந்தத் திருமணம் நபியவர்களின் ஒளிமயமான - வெற்றி வாய்ந்த - எதிர்காலத்திற்கு வழிகோலியது; அவர்களது வாழ்க்கையில் புகழ்பூத்த ஓர் அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது. அவர்கள் உலகாயதக் கவலைகளற்ற ஒரு மனிதர் ஆனார்கள். செல்வச் சீமாட்டி ஒருவரை மணந்து கொண்டமையால், பொருளாதாரத் தேவைகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட அவர்கள் போதிய வசதியுடையவர்களானார்கள். இந்தத் திருமணத்தின் மூலம், பொருள் தேடுவதற்காக அதிகம் உழைக்கவேண்டிய தேவை இல்லாமற் போனமையால், நபியவர்களால் தியானத்திலும் சிந்தனையிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள முடிந்தது. இவ்வாறு, உயர் குடும்பம் ஒன்றில் ஏழையாகப் பிறந்து, மற்றவர்களுக்கு ஊழியம் செய்து, தமது வாழ்க்கை வழியைச் சம்பாதித்துக்கொண்டிருந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் இந்தத் திருமணத்தின் மூலம் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மனிதர் ஆனார்கள்.

திருமணத்தின் முக்கியத்துவம்

அன்னை கதீஜா தமது மரணம் வரை முஹம்மத் (ஸல்) அவர்களின்

22. இப்ன் கதீர், பாகம் ii பக்கம் 274-75

ஒரே மனைவியாக இருந்து வந்தார். அவர் தமது கணவருக்குத் தேவையான அன்பையும் ஆதரவையும் அளித்து, அண்ணலுக்கு ஏற்ற அருமை மனைவியாக மட்டுமன்றி, உதவிகள் புரியும் உற்ற துணைவியாகவும் விளங்கினார். நபியவர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அவர், அவர்களது ஆலோசகராகவும் ஆதரவாளராகவும் இருந்து வந்தார்; தம்மிடம் இருந்த அனைத்தையும் தியாகம் செய்து, தமது கணவரின் தூதப்பணியில், அவர்களுக்கு உதவினார். அவரது பார்வையில் அண்ணலவர்கள் அன்பும் அருளும் நிறைந்த மிக உன்னத புருடராகத் தென்பட்டார்கள். சன்மார்க்கத் தூது அருளப்பட்ட சமயம், அவர் முதன்முதலாக இஸ்லாத்தை ஏற்றுக் கணவரின் நபித்துவத்தை உண்மைப்படுத்தியதோடு, அறேபிய தீபகற்பத்தில் இஸ்லாம் பரவுவதற்குத் தம்மால் இயன்ற உதவிகள் அனைத்தையும் செய்தார். இஸ்லாத்தின் ஆரம்ப நாள்களில், முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களுக்காக மனம் வருந்தாமல், கதீஜா கூறிய ஆறுதல் மொழிகள் அவர்களின் பணிக்குப் பெரும் உதவியாக மட்டுமன்றி, அவர்களின் நொந்த நெஞ்சுக்கு ஊட்டம் தரும் உணவாகவும் அமைந்தன.

கதீஜாவின் பணிகள்

அன்னை கதீஜா சுமார் கால் நூற்றாண்டு காலமாக நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் ஆழமான பரஸ்பர அன்பின் சுகத்தையும் அளித்து வந்தார். முஹம்மத் (ஸல்) அவர்களும் அவர்மீது ஆழமான அன்பும் அபிமானமும் வைத்திருந்தார்கள். அந்த அன்பு அவரது மரணத்தின் பின்னரும் கூட அவர்களது இதயத்தில் நிலைத்திருந்தது. அவரது உன்னதமான இயல்புகளால் மிக ஆழமாகக் கவரப்பட்டிருந்த அவர்கள் அவரது மரணத்தின் பின்னர் ஒருமுறை, ''*இறைவன் மீது ஆணையாக, கதீஜாவைத் தவிர எனக்கு வேறு நல்ல துணை கிடைக்கவில்லை. ஒட்டுமொத்தமாக மக்கள் என்னை நிராகரித்த சமயம், அவர் என்னை விசுவாசித்தார்; மக்கள் என்னைப் பொய்யன் என்று கூறியபோது, அவர் எனது வாய்மையை உறுதிப்படுத்தினார்; மக்கள் எனக்குப் பொருளாதாரத் தடை விதித்தபோது, அவர் தமது திரண்ட செல்வத்தை வாரி வழங்கி, என்னை ஊக்குவித்தார். அவர் மூலமாகவே அல்லாஹ எனக்குக் குழந்தைச் செல்வத்தை அளித்தான்*'' என்று கூறினார்கள்.[23] அன்னை ஆஇஷா கூறுகிறார்; ''*நபியவர்களின் மனைவியருள் கதீஜாவின் மீது பொறாமைப்பட்டது போல நான் எவர் மீதும் பொறாமை கொள்ளவில்லை. நான் அவரை ஒருபோதும் பார்த்ததில்லை. ஆனால் நபியவர்கள் அவரை அதிகமாக நினைவு கூர்ந்தார்கள். ஆடு அறுத்தபோதெல்லாம் அதன்*

23. அல் ஹர்கானி, பாகம் iii பக்கம் 24

துண்டுகளை வெட்டி, கதீஜாவின் தோழிகளுக்கு அனுப்பி வந்தார்கள். 'கதீஜாவுக்கு நிகரான பெண் உலகிலே இல்லையா?' என்று நான் வினவிய போது அவர்கள், 'நிச்சயமாக, கதீஜா இவ்விதம் இருந்தார், அவ்விதம் இருந்தார், (என்று வருணித்து விட்டு) மேலும் அவர் மூலமே எனக்குக் குழந்தைகள் கிடைத்தன' என்று கூறினார்கள்''. (புகாரி, முஸ்லிம்)

அன்னை கதீஜா, முஹம்மத் (ஸல்) அவர்களோடு இருபத்தைந்து ஆண்டுகள் இல்லற வாழ்க்கை நடத்திய பின்னர், நபித்துவத்தின் பத்தாம் ஆண்டு றம்ழான் மாதம் பதினோராம் நாள் (டிசம்பர்,619), தமது அறுபத்தைந்தாம் வயதில் மரணமானார். இதே ஆண்டில் நபியவர்களின் பெரிய தந்தை அபூதாலிபும் மரணமானார். நபியவர்களின் பெரும் பணிக்கு இரு கரங்களையும் போலப் பக்கபலமாக இருந்த இவ்விருவரினதும் மரணங்களால் அவர்களுக்கு ஏற்பட்ட துயரம் ஆரம்பத்தில் ஆற்றொணாத தாகவே இருந்தது. இவர்கள் இருவரினதும் இழப்புக்களைத் தொடர்ந்து இஸ்லாமிய வரலாற்றில், முஸ்லிம்களுக்கு அதிக சோதனைகளும் வேதனைகளும் நிறைந்த புதிய ஒரு காலம் ஆரம்பமானது. இவர்கள் மரணமான ஆண்டுக்கு நபியவர்கள் 'ஆமுல் ஹுஷ்ன்' (துக்க ஆண்டு) என்று பெயரிட்டார்கள்.

கதீஜாவின் மரணம்

அன்னை கதீஜாவின் மூலம் நபி (ஸல்) அவர்களுக்குக் குழந்தைகள் அறுவர் பிறந்தனர். அவர்களுள் நால்வர் பெண்கள்; ஷைனப், ருகய்யா, உம்ம் குல்தூம், பாத்திமா என்பன அவர்களது பெயர்கள். ஆண் குழந்தைகள் இருவரும் குழவிப் பருவத்திலேயே இறந்து விட்டனர். பெண்களுள் பாத்திமாவைத் தவிர, மற்ற மூவரும் நபியவர்களுக்கு முன்னரேயே மரணித்து விட்டனர். பாத்திமா மட்டுமே நபியவர்களுக்குப் பின்னரும் சுமார் ஆறு மாதங்கள் வரை உயிர் வாழ்ந்தார். இவரிலிருந்தும் இவரது கணவரான ஹழ்ரத் அலீயிலிருந்துமே 'ஸய்யித்'கள் என அழைக்கப்படும் நபியவர்களின் வழித்தோன்றல்கள் தோன்றினர்.

குழந்தைகள்

தியானமும் வேத வெளிப்பாடும்

முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது சிறுபிராயத்திலிருந்தே தியானிக்கும் இயல்பை வளர்த்துக் கொண்டார்கள். தனிமையான ஓரிடத்தில் அமர்ந்திருந்து, தமது ஓய்வு நேரத்தைத் தியானிப்பதிலும் சிந்திப்பதிலும் கழிப்பதை அவர்கள் வழக்கமாக்கிக் கொண்டார்கள். தமது சமதாயத்தைச் சேர்ந்த மக்களின் ஒழுக்கச் சீரழிவும் விக்கிரகத் தொழும்பும் அவர்களது இதயத்தைக் கடுமையாக அழுத்தின; யூத

தியானமும் சிந்தனையும்

மதத்தினதும் கிறித்தவ மதத்தினதும் ஒழுங்கற்ற - மங்கிய - நிழல்கள் நபியவர்களைத் திருப்தி செய்வதற்குப் பதிலாக அவர்களது உள்ளத்திலே சந்தேகங்களை உருவாக்கின; எது உண்மையான மார்க்கம் என்பது தெரியாமல் அவர்களது இதயம் உறுதியற்ற நிலையில் குழம்பிப் போய்க்கிடந்தது. இந்த உலகின் தன்மை பற்றிய தமது மக்களின் விளக்கமும் அவர்களது சமய நம்பிக்கைகளும் வழிபாட்டு முறையும் பிழையானவை என்பதை ஏற்கனவே உணர்ந்திருந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் உண்மையைக் கண்டறிய முயன்றார்கள்; அந்த உண்மையோடு தமது ஆன்மாவைப் பிணைத்துக் கொள்ளவும் அதனை ஊடுருவிச் செல்லவும் அதன் அந்தரங்கத்தைப் பற்றிக் கொள்ளவும் விரும்பினார்கள்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் கதீஜாவைத் திருமணம் செய்த பின்னர், அவர்களுக்குத் தியானத்திலும் சிந்தனையிலும் ஈடுபடுவதற்கு அதிக நேரம் கிடைத்தது. அதனால், அவர்கள் மக்காவிலிருந்து மூன்று மைல் தூரத்தில், பாலைவனக் குன்று ஒன்றில் அமைந்துள்ள குகைக்கு அடிக்கடி சென்று, தியானத்தில் ஈடுபட்டு வந்தார்கள். அக்காலத்தில் இக்குன்று 'ஜபல் ஹிரா.', (ஹிரா. குன்று) என அழைக்கப்பட்டது. அங்கேயே பிற்காலத்தில் முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்களைச் சன்மார்க்கத்தின்பால் வழிப்படுத்திய தெய்விக ஒளியைத் தரிசித்தார்கள். அதனால், இந்தக் குன்றின் பெயர் பின்னர், 'ஜபல் அல் நூர்' (ஒளிக் குன்று) என மாற்றப்பட்டது. நபியவர்கள் இந்தக் குகையில் தனியாக அமர்ந்து, தமது சமூகத்தவர்கள் பற்றியும் அவர்களது அறியாமை, சமயநெறியற்ற வாழ்க்கை, இழிந்த நிலை ஆகியவை பற்றியும் சிந்தித்து, சத்திய வழியில் அவர்களை இட்டுச் செல்வதற்குரிய வழிகாட்டலையும் இறை உதவியையும் வேண்டிப் பிரார்த்தனை செய்து வந்தார்கள். அவர்களது இளகிய - ஆனால், முதிர்ச்சியடைந்த - இதயம் உருவத் தொழும்பர்களான அறேபியரின் சமூக, கலாசார அமைப்பைச் சீர்திருத்துவதற்கு மிகவும் விரும்பியது. சுமார் பதினைந்து ஆண்டுகாலம் இந்த ஹிரா. மலைக் குகையே அவர்களது தியான மடமாக இருந்தது.

ஹிரா: குகையில்

முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது நாற்பதாம் வயதை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில், அவர்கள் ஹிரா. குகைக்கு மிக அதிகமாயும் அடிக்கடியும் சென்று தியானத்தில் ஈடுபடலானார்கள்; அவர்களது தியானமும் சிந்தனையும் உச்ச நிலையை அடைந்தன. வேத வெளிப்பாடு நிகழ்வதற்குச் சிறிது காலத்திற்கு முன்பிருந்தே அவர்கள் குகையில், வாரக்கணக்கில் தங்கியிருந்து, இறைவழிகாட்டலுக்காக ஏங்கிக் கண்ணீர் உகுத்து, தியானம் செய்து வரலானார்கள். சில சமயங்களில், அவர்களது அன்பு மனைவி கதீஜாவும் அவர்களோடு தியானத்தில் பங்கு கொண்டார். இறுதியில், ஒருநாள்

வேத வெளிப்பாடு

அண்ணலாரின் கனவுகளும் வேணவாக்களும் உண்மையாயின; அவர்களின் உள்ளத்திலே பொங்கிய இலட்சியங்களும் கற்பனைகளும் உண்மையின் ஒளிக்கற்றைகளாக உருவெடுத்தன. கி. பி. 610ஆம் ஆண்டு றம்ழான் மாதம் புனித 'லைலதுல் கத்ர்' இரவு, முஹம்மத் (ஸல்) அவர்கள் ஹிரா. குகையில் போர்வை ஒன்றால் தம்மைப் போர்த்தியவாறு சாய்ந்திருந்த வேளையில், அமரர் ஜிப்ரீல் (அலை) ஏதோ எழுதப்பட்ட பட்டுச்சுருள் ஒன்றைப் பிடித்தவாறு அவர்கள் முன்னால் திடீரெனத் தோன்றி, *'ஓதுவீராக!'* என்று பணித்தார்.[24] 'எதை நான் ஓதுவது?' என்று முஹம்மத் (ஸல்) அவர்கள் கேட்க, ஜிப்ரீல் (அலை) நபியர்களை மூச்சு முட்டும் அளவுக்கு இறுக அணைத்து விட்டு *'ஓதுவீராக!'* என்று மீண்டும் பணித்தார். இவ்வாறு மூன்று முறைகள் நிகழ்ந்தது. மூன்றாம் முறை, நபியவர்களை ஜிப்ரீல் (அலை) மூச்சுமுட்டும்வரை இறுக அணைத்து விட்டு ஓதப் பணித்தபோது, அவர்கள் பட்டுச்சுருளில் காணப்பட்ட பின்வரும் வசனங்களை ஓத ஆரம்பித்தார்கள்:

> *"(யாவையும்) படைத்த உமது இறைவனின் திருநாமத்தால் நீர் ஓதுவீராக!*
>
> *அவனே மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான்.*
>
> *(பின்னும்) நீர் ஓதும்! உமது இறைவன் மாபெரும் கொடையாளி; அவன்தான் எழுதுகோலைக் கொண்டு (எழுதக்) கற்றுக் கொடுத்தான்.*
>
> *அன்றி, (அதன் மூலம்) மனிதன் அறியாதவைகளை எல்லாம் அவனுக்குக் கற்றுக் கொடுக்கிறான்".* (குர்ஆன் 96:1-5)

பின்னர், அச்சத்தால் பிடிக்கப்பட்ட அண்ணலவர்கள் உடல் நடுங்கியவர்களாய் இல்லத்திற்குச் சென்றார்கள்; தம்மைப் போர்வையால் போர்த்துமாறு மனைவி கதீஜாவை வேண்டிக் கொண்டார்கள். தமது கணவர் கடும் குளிர் சுரத்தால் பீடிக்கப்பட்டவரைப் போல நடுங்கிக் கொண்டிருந்ததைக் கண்ட கதீஜா திகிலுற்றார்; என்ன நிகழ்ந்தது என்பதை அறிய முடியாமல் திகைத்தார். பதற்றம் ஓரளவு தணிந்த பின்னர், நபியவர்கள் தமது மனைவி கதீஜாவை அபயம்தேடும் மனிதனின் முகபாவத்தோடு நோக்கி, நடந்தவை அனைத்தையும் எடுத்துரைத்து, *"எனக்கு என்னவோ நிகழப் போகிறது"* என்று கூறினார்கள். அப்போது அவர், *"ஒரு போதும் இல்லை; அல்லாஹ்வின் மீது சத்தியமாக, அல்லாஹ் ஒருபோதும் உங்களை இழிவுபடுத்த மாட்டான். நீங்கள் உறவினர்களோடு உறவாடி வருகிறீர்கள்; உண்மை பேசி வருகிறீர்கள்; (பிறரின்) சுமைகளைச் சுமக்கிறீர்கள்; இயலாதவர்களுக்கு உதவி செய்து வருகிறீர்கள்; விருந்தினர்களை நன்கு உபசரிக்கிறீர்கள்; மக்களின் உரிமைகளைப் பாதிக்கும் கஷ்டங்களுக்கு எதிராக உதவுகிறீர்கள்"* என்று

24. இப்ன் ஹிஷாம், பாகம் I பக்கம் 267-68

கூறி அவர்களுக்கு ஆறுதல் அளித்தார். (புகாரி, முஸ்லிம்) பின்னர், அவர் அண்ணல் அவர்களை அவரது பெரிய தந்தையின் புதல்வரும் புனித வேதங்களில் ஆழமான பரிச்சயம் உடையவருமான வரகா பின் நவ்பல் பின் அஸத் என்பாரிடம் கூட்டிச் சென்றார். அவர் அண்ணல் அவர்களிடமிருந்து குகையில் நடந்ததைக் கேட்டறிந்த பின்னர், *''நிச்சயமாக, அது மூஸா நபியிடம் அல்லாஹ் அனுப்பிய அதே 'நாமூஸ்' அமரரே தான்''* என்று கூறி அவர்களது நபித்துவத்துக்குச் சான்றுரைத்தார்.

முதன் முதலாக அருளப்பட்ட இந்த வேத வெளிப்பாட்டின் மூலம் அண்ணல் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு நபியாகவும் அல்லாஹ்வின் தூதராகவும் ஆனார்கள். இந்தச் சம்பவம் நிகழ்ந்தபோது, அண்ணல் அவர்கள் நாற்பதாம் வயதை எட்டிய - மனப்பக்குவம் வாய்ந்த - மனிதராக இருந்தார்கள். முதன்முறையாக நிகழ்ந்த இந்த வேத வெளிப்பாட்டின் பின்னர், இருபத்து மூன்று ஆண்டுகளாக அல் குர்ஆனின் வசனங்கள் யாவும் சிறிது சிறிதாக ஜிப்ரீல் (அலை) மூலம் அருளப்பட்டுப் பூர்த்தியாயிற்று. இந்த அல் குர்ஆன், அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு முழு மனித சமுதாயத்திற்குமுரிய அவர்களது புதிய தூதத்தில் அருளப்பட்ட தெய்விக வழிகாட்டலின் தொகுதியாகும். 'உலகிலே ஆத்மிகச் சுனைகளாக விளங்கும் - எல்லாத் தேசங்களினதும் எல்லாக் காலத்தினதும் - சமய ஆகமங்களுள் அல் குர்ஆன் ஒன்றே காலத்தின் ஊழல்களிலிருந்து தப்பியதாயும் அதன் தூய்மையிலும் போதனைகளின் நிறைவு, கருத்து விசாலம், கோட்பாட்டுப் பொதுமை ஆகியவற்றிலும் தனிப் பண்புடையதாகவும் ஈடிணையற்றதாகவும் இருந்து வருகிறது'.[25] மேலும், அது மனித இனத்தின் நன்மைக்காக அல்லாஹ்வால் அனுப்பி வைக்கப்பட்ட முற்கால நபிமார்களின் முயற்சிகள், செயற்பாடுகள் ஆகியவற்றின் பதிவேடாகவும் இருக்கிறது. இஸ்லாம் தோன்றுவதற்கு முன்னர் உலகிலே நிகழ்ந்த பெரும் சம்பவங்கள் அனைத்தையும் அது விவரிக்கிறது. திரு. கிரெல் (Krehl) என்பார் கூறுவது போல, 'அல் குர்ஆன் அற ஒழுக்கங்களின் முழுமையான கோவையை யும்அவற்றின் அடிப்படையில் அமைந்த சட்டங்களின் கோவையையும் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நீதித்தாபனத்திற்கும் படை அமையத்திற்கும் நிதிகளுக்கும் ஏழைகளுக்குரிய மிகக் கவனமான சட்டவாக்கத்திற்கும் கூட அது அத்திவாரம் இடுகிறது. இவை அனைத்துமே மனிதனது தலைவிதியைத் தனது கையிலே பிடித்திருக்கும் ஒரே இறைவனிலுள்ள நம்பிக்கை (ஏக தெய்வக் கோட்பாட்டின்) மீது நிறுவப்பட்டவை ஆகும்'.[26]

அல் குர்ஆன்

நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் புதிய தூதம் 'இஸ்லாம் ' என அழைக்கப்படுகிறது. இஸ்லாம் என்ற சொல்லுக்கு பணிதல் என்பது பொருள்.

25. Fazlul Karim , Al Hadith, Book 1 p.1
26 T.P. Hughes, Dictionary of Ialam, p.526

இஸ்லாம்

இந்தப் பிரபஞ்சத்தின் தனி எசமானனான அல்லாஹ்வின் சித்தத்திற்குச் சம்பூரணமாகப் பணிதலை இந்த மார்க்கம் அடிப்படையாகக் கொண்டிருப்பதனாலேயே இது இப்பெயரால் அழைக்கப் படுகிறது. இது ஏகத்துவம், சகோதரத்துவம், சமத்துவம் முதலான அடிப்படைக் கோட்பாடுகள் மீது கட்டியெழுப்பப்பட்ட ஒரு மார்க்கம்; இன, நிற வேறுபாடில்லாமல் முழு மனித சமுதாயத்திற்குமுரிய ஒரு பொது மதம். கருவறையிலிருந்து சமாதியறை வரையிலான - சமாதியறையிலிருந்து மறுவுலகு வரையிலான - மனித வாழ்வின் சகல அம்சங்களையும் உள்ளடக்கிய முழுமையான வாழ்க்கை நெறியான இஸ்லாம் ஏகமாய் இருக்கும் அல்லாஹ் ஒருவனே என்ற ஏகத்துவக் கோட்பாட்டையும் உலக மக்கள் யாவரும் சகோதர - சகோதரிகளே என்ற சகோதரத்துவக் கொள்கையையும் அல்லாஹ்வின் பார்வையில் இன, நிற, மொழி, தேசிய வேறுபாடுகளின்றி மனிதர்கள் அனைவரும் சமமானவர்களே என்ற சமத்துவச் சட்டத்தையும் போதிக்கிறது. இந்த மார்க்கம் தெய்விக வெளிப்பாட்டை ('வஹீ'யை) அடிப்படையாகக் கொண்டிருப்பதனால், இதன் அடிப்படைக் கோட்பாடுகள் அனைத்தும் மாறாத் தன்மை உடையவை. *இஸ்லாத்தால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை மார்க்கக் கடமைகள் ஐந்து. அவை ஏகத்துவப் பிரகடனம் (கலிமா), ஐவேளைத் தொழுகை, ஏழைகளுக்குரியதைக் கொடுத்தல் (ஸகாத்), றம்ழான் மாத நோன்பு, புனித க.'பாவுக்கு யாத்திரை செய்தல் (ஹஜ்) என்பனவாகும். அல்லாஹ்வால் அருளப்பட்ட இந்த வாழ்க்கை நெறியைப் பின்பற்றுபவர் முஸ்லிம் அல்லது முஸல்மான் என்று அழைக்கப்படுகிறார்.*

இந்தத் தெய்விகத் தூதத்தால் ஆணை பெற்ற நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில், ஏகத்துவக் கோட்பாட்டையும் இஸ்லாத்தின் நம்பிக்கை களையும் மிக இரகசியமாக மக்காவில் வாழ்ந்த தமது நெருங்கிய உறவினர் கள், நம்பிக்கைக்குரிய நண்பர்கள் ஆகியோரிடையே போதித்து வந்தார்கள். முதன் முதலில், அவர்களது அன்பு மனைவி கதீஜா தமது கணவர் கொண்டுவந்த தூதை ஏற்று, இஸ்லாத்தைத் தழுவி, உலகிலே முதலாவது முஸ்லிம் பெண்மணியானார். அவரைத் தொடர்ந்து நபியவர்களின் பெரிய தந்தை மகன் அலீ பின் அபூதாலிபும் அவர்களது வளர்ப்பு மகன் ஷைத் பின் ஹாரிதாவும் அவர்களது பிரிய தோழர் அபூபக்ர் பின் அபூ குஹாபாவும் இஸ்லாத்தைத் தழுவினர். பின்னர், உத்மான் பின் அப்பான், அல் ஷ'பைர் பின் அல் அவ்வாம், அப்துர் றஹ்மான் பின் அவ்ப், ஸ.'த் பின் அபீ வக்காஸ், தல்ஹா பின் உபைதுல்லாஹ் முதலானோர் முஹம்மத் (ஸல்) அவர்களின் நபித்துவத்தில் நம்பிக்கை வைத்து முஸ்லிம்களாயினர். பெரும் பாலும் இவர்களுட் பலர் ஹழரத் அபூபக்ரின் தூண்டுதலாலேயே இஸ்லாத் தைத் தழுவினர். நபியவர்களின் அணியில் இணைந்து கொண்ட இந்த நல்லோர் சிலரின் மூலம் இஸ்லாம் படிப்படியாகவும் இரகசியமாகவும் மற்ற

மனிதர்களிடையேயும் பரவ ஆரம்பித்தது. ஆயினும், இஸ்லாமியத் தூது அருளப்பட்ட பின்னர், நான்கு ஆண்டுகளாக முயற்சி செய்தும் சுமார் நாற்பது நபர்களையே நபியவர்களால் முஸ்லிம்களாக மாற்ற முடிந்தது.

நபித்துவத்தின் மூன்றாம் ஆண்டின் முடிவில் முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் பகிரங்கமாக அவர்களது உறவினர்களுக்கும் குலத்தவர்களுக்கும் போதிக்குமாறு அல்லாஹ்வால் ஆணையிடப்பட்டார்கள்.

பொதுப்பிரசாரமும் குறைஷியர் எதிர்ப்பும்

இந்த ஆணையைத் தொடர்ந்து அவர்கள் ஏகத்துவக் கோட்பாட்டைப் பகிரங்கமாகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்கள்; முட்டாள்தனமான விக்கிரக வழிபாட்டைக் கைவிடுமாறும் எல்லாவற்றையும் சிருட்டித்த அல்லாஹ் ஒருவனையே வழிபடுமாறும் மக்களுக்குப் போதித்தார்கள். ஆனால், மக்காவில் வாழ்ந்த உருவத் தொழும்பர்களான குறைஷ்களுக்கு நபியவர்களின் போதனை புதுமையாகத் தோன்றியது. முதலில், அந்த மக்கள் நபியவர்களையும் அவர்களது புதிய மார்க்கத்தையும் எள்ளி நகைத்தனர். ஆனால், அந்த மக்கள் நபியவர்கள் தமது பிரசாரத்தில் காட்டி வந்த ஆர்வமும் புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோரின் எண்ணிக்கையும் பெருகக் கண்டபோது, அவர்கள் தங்கள் நகைப்பைத் துன்புறுத்தல்களாகவும் சூழ்ச்சிகளாகவும் மாற்றிக் கொண்டனர்; அவர்களது ஏகத்துவப் பிரசாரத்தை நிறுத்துவதற்காகத் தங்களால் இயன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்தனர். குறைஷ் வர்க்கத்தின் செல்வாக்கு மிகுந்த கிளைக் குலத்தினரான உமய்யாக்கள் நபியவர்களை நல்லுள்ளம் கொண்ட ஒருவராகக் கண்டபோது, ஆசை காட்டி மோசம் செய்ய முயன்றனர். பெருமானாரின் புதிய தூதும் போதனைகளும் அவர்களது உயர்குடிமைப் போக்கைப் பெரிதும் பாதித்தன; மூட நம்பிக்கைகளின் மூலம் அவர்கள் பெற்று வந்த வருமானத்திலும் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தின. அதனால், அவர்களுட் சிலர் நபியவர்களின் பெரிய தந்தை அபூதாலிபிடம் தூது சென்று, ''உங்கள் தம்பி மகனுக்கு அவரது புதிய போதனைகளைக் கைவிடுமாறு புத்தி கூறுங்கள்'' என்று கேட்டுக் கொண்டனர். அவ்வாறே அவர் தமது சகோதரர் மகனை அழைத்து, அவரது புதிய போதனைகளால் உருவான நெருக்கடி நிலைமை பற்றி விளக்கிய போது அவர்கள், ''பெரிய தந்தையே! அல்லாஹ்வின் மீது சத்தியமாக, அந்த மக்கள எனது வலது கையில் சூரியனையும் இடது கையில் சந்திரனையும் வைத்தபோதிலும் நான் எனது தூதத்தைக் கைவிட மாட்டேன்; அந்தப் போராட்டத்தில் நான், எனது வாழ்வை இழக்க நேரிட்டாலும் சரியே'' என்று துணிச்சலோடு கூறினார்கள்.

தமது முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிந்தமையைக் கண்ட

குறைஷ்கள் துன்புறுத்தல் மூலம் நபியவர்களின் புதிய தூதத்தை நசுக்கிவிட முயன்றனர். ஆயினும், அபூதாலிப் தமது சகோதரர் மகனுக்குப் பாதுகாப்பும் அடைக்கலமும் அளித்துக் கொண்டிருந்தமையால், முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு எத்தகைய தீங்கும் செய்ய அவர்களால் முடியவில்லை. ஆனால், அவர்கள் நபியவர்களுக்கு மன வேதனைகளை அளித்தனர்; அவர்களது தோழர்களைத் துன்புறுத்தினர்; குறிப்பாக, இஸ்லாத்தைத் தழுவிய அடிமைகளை மிகக் கொடூரமாகச் சித்திரவதை செய்தனர்; அவர்களிற் சிலரை வதை செய்து கொன்றும் விட்டனர்.

இவ்வாறு, குறைஷ் குலமக்கள் நபி (ஸல்) அவர்களையும் அவர்கள் கொண்டுவந்த தூதையும் எதிர்த்தமைக்குப் பலகாரணங்கள் இருந்தன. அவற்றைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:

1. முஹம்மத் (ஸல்) அவர்களால் பிரசாரம் செய்யப்பட்ட இஸ்லாமும் அதன் போதனைகளும் குறைஷ் குல மக்களுக்குப் புதுமையானவையாகவும் அவர்களது முன்னோரின் மார்க்கத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டவையாகவும் இருந்தன. தங்களின் புராதன நம்பிக்கையைக் கைவிட்டு, மற்றொரு புதிய நம்பிக்கையைச் சீரணித்துக் கொள்வதற்கு அவர்களால் இயலவில்லை. எனவே, தங்களின் உருவ வழிபாட்டுச் சமயத்திற்கு எதிராக முஹம்மத் (ஸல்) அவர்களது தலைமையில் ஒரு புதிய இயக்கம் உதயமாகியிருக்கக் கண்டபோது, அவர்கள் பெரிதும் சினமுற்று, அதனை எதிர்க்கலாயினர்.

2. நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் விக்கிரகத் தொழும்பிலிருந்து முற்றாக விலகி இருந்ததோடு, குறைஷ்களின் பொய்க் கடவுள்களைப் பகிரங்கமாகப் பழித்தும் வந்தார்கள். குறைஷ்கள் உருவ வழிபாட்டிற்கு மிக நீண்டகாலமாகப் பழக்கப்பட்டிருந்தமையாலும் நன்மை, தீமை அனைத்திற்கும் விக்கிரகங்களே பொறுப்பானவை என்று நம்பியமையாலும், தங்கள் தெய்வங்களைக் கைவிடுதல் பற்றி எண்ணிப்பார்க்கக் கூட அவர்களால் முடியவில்லை. அவர்கள் அண்ணல் அவர்களையும் அவர்களது புதிய தூதத்தையும் தங்களது சமயத்திற்கு ஏற்பட்ட பயங்கர அச்சுறுத்தலாகவும் தங்கள் கடவுள்களுக்கு விடப்பட்ட ஒரு சவாலாகவும் கருதினர். எனவே, முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வால் அருளப்பட்ட புதிய நம்பிக்கையை அறிமுகப்படுத்திய போது, அவர்கள் அண்ணலவர்களை எதிர்க்க ஆரம்பித்தனர்.

3. குறைஷ்களுள் ஹாஷிமியாக்களும் உமய்யாக்களும் மிக முக்கியத்துவம் வாய்ந்த இரு கிளைக் குலத்தவர்களாக இருந்தனர். அவர்களுக்குள் ஒற்றுமை இருக்கவில்லை; ஒருவர் மற்றவரோடு போட்டிபோட்டுக் கொண்டும் சண்டையிட்டுக்கொண்டுமே இருந்தனர்.

அப்துல் முத்தலிப் தமது விவேகத்தாலும் கடுமையான பூட்கையாலும் ஹாஷிமியாக்களின் புகழை உயர்த்தியிருந்தார். ஆனால், அவருக்குப் பின்னர் இந்தக் கிளைக் குலத்தில் எவருக்கும் இத்தகைய செல்வாக்கு இருக்கவில்லை. இந்தக் குலத்தில் பிறந்த அப்பாஸ் செல்வராக இருந்த அதேவேளையில், செல்வாக்கற்றவராகவும் இருந்தார். அதேசமயம், அபூதாலிப் ஏழையாக இருந்தார். அபூலஹபோ தகுதியற்ற ஒரு மனிதனாக இருந்தான். இந்தக் காரணங்களுக்காக குறைஷ்களிடையே உமய்யாக்களின் கைகளே மேலோங்கியிருந்தன. எப்போதும் தங்களைப்பற்றி மேலெண்ணம் உடையவர்களாக இருந்த அவர்களால் ஹாஷிமிய்யாக்களிலிருந்து ஒருவர் தங்கள்மீது மேலாதிக்கம் செய்வதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஹாஷிமிய்யா ஒருவரின் நபித்துவ உரிமைக் கோரிக்கை தங்கள் எதிரிகளுக்குக் கிடைத்த ஒரு வெற்றியாகவே அவர்களுக்குப் பட்டது. மக்காவில் வாழ்ந்த பிற குலத்தவர்களை விடவும் உமய்யாக்கள் மிக அதிகமாக நபியவர்களை எதிர்த்தமைக்கு இதுவே காரணமாக இருந்தது. இதே காரணத்திற்காகவே குறைஷ் வர்க்கத்தின் செல்வாக்கு மிக்க பிற கிளைக் குலங்களைச் சேர்ந்த மக்களும் அண்ணலவர்களை எதிர்த்தனர்.

4. முஹம்மத் (ஸல்) அவர்கள் குறைஷ் குலத்தில் பிறந்த போதிலும், அவர்கள் செல்வராகவோ வர்க்கத்தலைவர்களுள் ஒருவராகவோ இருக்கவில்லை. அவர்களின் எளிய - வறுமை படிந்த - வாழ்வின் காரணமாக குறைஷ்கள் நபியவர்களைச் சாதாரண மக்களுள் ஒருவராகவே கருதினர். நபித்துவம் எவருக்காவது அளிக்கப்படுவதாக இருந்தால், அது மக்காவை அல்லது தாஇப் நகரத்தைச் சேர்ந்த செல்வாக்கு மிகுந்த மனிதர் ஒருவருக்கே கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது குறைஷ் வர்க்கத்தலைவர்களின் கருத்தாக இருந்தது. எனவே, அபூ ஸுப்யான் பின் ஹர்ப், உக்பா பின் அபூ முஅய்த், வலீத் பின் முஃகீரா, உமய்யா பின் கலப், ஆஸ் பின் வாஇல், அபூ மஸ்ஊத் அல் தகபீ முதலான தங்கள் தலைவர்களைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த குறைஷ்கள் செல்வமோ புதல்வர்களோ அதிகாரத்தின் வேறு உலகாயதச் சின்னங்களோ இல்லாத முஹம்மத் (ஸல்) அவர்களின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாக இருக்கவில்லை.

5. குறைஷ்கள் மக்காவில், பெருமையடித்துக் கொள்ளும் உயர்குடி வர்க்கம் ஒன்றை விருத்தி செய்திருந்தனர். அந்த வர்க்கத்தினர் தங்களது பொய்க்கடவுள்களின் பெயரால் ஒழுக்கக் கேடான வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். அவர்களது உருவ வழிபாட்டின்

மத்திய தலமாக இருந்த க.ப.ா ஆலயம் அவர்களது சமூக, பொருளாதாரத் தராதரங்களை உயர்த்திக் கொள்ள அவர்களுக்குப் பெரிதும் உதவியது. அறேபிய தீபகற்பத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து மக்காவுக்கு ஹஜ் யாத்திரை மேற்கொண்டு வந்த மக்கள் அனைவரும் தங்கள் புனித பூமியின் எசமானர்களாக அவர்களையே கருதினர். இத்தகைய வழிகளால் தங்களைப் பெரிய மனிதர்களாக மாற்றிக் கொண்ட குறைஷ்கள், முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அவர்களது மார்க்கத்திற்கும் தீபகற்பத்திலே இடம் கொடுத்தால், தங்களது பெருமையும் செல்வாக்கும் தலைமைத்துவமும் முற்றாக ஒழிந்துவிடும் என்று எண்ணினர். எனவே, அவர்கள் என்ன விலை கொடுத்தேனும் அண்ணலவர்களின் புதிய நெறியைத் தடுக்கத் தீர்மானித்து, அதனை எதிர்த்தனர்.

இத்தகைய காரணங்களால் குறைஷ்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களையும் அவர்களது சன்மார்க்க நெறியையும் எதிர்த்ததோடு, அந்த நெறியைப் பின்பற்றிய மக்களுக்குத் தொல்லைகளும் அளித்து வந்தனர்.

முதலாவது ஹிஜ்ரத்

குறைஷ்கள் புதிய முஸ்லிம்களுக்கு கொடுத்து வந்த தொல்லைகளும் கொடுமைகளும் பெருகியமையால், நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் அடக்கலுக் கெதிராகத் தம்மைக் காத்துக் கொள்வதற்கு இயலாத ஏழை முஸ்லிம்களின் பாதுகாப்புக்காக முக்கியமான தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டியவர்களாக இருந்தார்கள். *நபித்துவத்தின் ஐந்தாம் ஆண்டில், ஒரு நாள் நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம், ''**நீங்கள் அபிசீனியாவுக்குச் சென்றால் உங்களுக்கு நல்லது: அதன் அரசர் அநீதியைச் சகிக்க முடியாதவர்; மேலும், அது ஒரு நேச நாடும்கூட. ஆகவே, அல்லாஹ் உங்களைத் துயரத்திலிருந்து விடுவிக்கும் நாள் வரும்வரை, அங்கேயே தங்கியிருங்கள்**'' என்று கூறினார்கள்.* அவ்வாறே நபித் தோழர்களுள் ஒரு குழுவினர், நபித்துவத்தின் ஐந்தாம் ஆண்டு றஜப் மாதத்தில் (கி.பி.615இல்), தென் செங்கடலின் மறுகரையில் உள்ள அபிசீனியா (இக்கால எதியோப்பியா) வுக்கு ஹிஜ்ரத் சென்றனர். இந்தக் குழுவில் ஹழ்ரத் உத்மான், அவரது மனைவியும் நபிகளாரின் புதல்வியுமான ருகய்யா உட்படப் பதினொரு ஆண்களும் நான்கு பெண்களும் இடம் பெற்றிருந்தனர். அபிசீனியா குறைஷ்களின் வர்த்தக நிலையங்களுள் ஒன்றாக மிக நீண்டகாலமாக இருந்து வந்தது. அப்போது இந்த நாடு நஜாஷீ என்ற பட்டப் பெயரால் அழைக்கப்பட்ட அஸ்ஹத் பின் அம்ஜர் என்ற கிறித்தவ அரசரால் ஆளப்பட்டது. பிற்காலத்தில் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்ட அந்த மன்னர் குறைஷ்களை ஏற்கனவே அறிந்திருந்தமையால், அகதிகளாகத் தமது நாட்டுக்கு வந்த முஸ்லிம்களை

அன்போடு ஆதரித்தார். முஸ்லிம்கள் அபிசீனியாவுக்கு மேற்கொண்ட இந்த ஹிஜ்ரத் இஸ்லாத்தின் அரசியல் வரலாற்றில் நிகழ்ந்த முதலாவது ஹிஜ்ரத் ஆகக் கருதப்படுகிறது.

அபிசீனியாவுக்குச் சென்ற இந்தக் குழுவினரைத் தொடர்ந்து, அதே ஆண்டில், ஜஃபர் பின் அபூதாலிப் உட்பட வேறு முஸ்லிம்கள் சிலரும் ஒருவர் பின் மற்றவராக அபிசீனியாவுக்குப் புகலிடம் தேடிச் சென்றனர். இவ்வாறு முஸ்லிம்கள் அபிசீனியாவுக்குப் புகலிடம் தேடிச் சென்றமை பற்றிக் கேள்வியுற்ற குறைஷ் தலைவர்கள் சினமுற்றனர்; அம்ர் பின் அல் ஆஸ், அப்துல்லாஹ் பின் அபீ ரபீஆ ஆகிய இருவரையும் தங்கள் பேராளர்களாக அபிசீனிய சக்கரவர்த்தி நஜாஷீயிடம் அனுப்பி வைத்தனர். அரசனுக்கும் அரச மன்றத்தவர்களுக்கும் தனித்தனியாக விலைமதிப்பற்ற பரிசுப் பொருள்களைக் கொண்டு சென்ற அவர்கள் இருவரும் நஜாஷீயைச் சந்தித்து, அபிசீனியாவுக்குப் புகலிடம் தேடி வந்த முஸ்லிம் புறக்குடியேறிகளை மக்காவுக்குத் திருப்பி அனுப்பிவிடுமாறு கோரினர்; அவர்கள் தங்கள் முன்னோரின் மார்க்கத்தைத் துறந்து, கிறித்தவ மார்க்கத்தில் இணையாமல் புதிய மதம் ஒன்றைத் தழுவிக் கொண்டனர் என்றும் தங்கள் சொந்த நாட்டில் அவாகள் பெரும் குற்றங்களைச் செய்துவிட்டு, இங்கு ஓடி வந்திருக்கின்றனர் என்றும் அந்தப் பேராளர்கள் முஸ்லிம் அகதிகள் மீது குற்றமும் சுமத்தினர். ஆனால், புறக்குடியேறிகள் மூலம் புதிய மார்க்கத்தின் உண்மையைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்ட அபிசீனியச் சக்கரவர்த்தி, குறைஷ்களின் கோரிக்கையை நிராகரித்து, பேராளர் இருவரையும் அவர்கள் கொண்டு வந்த பரிசுப் பொருள்களோடு அங்கிருந்து விரட்டிவிட்டார்.

இந்தச் சமயத்தில், நஜாஷீயின் கேள்விகளுக்கு பதில் கூறும் முகமாக அகதிகளுள் ஒருவரும் நபியவர்களது பெரிய தந்தையின் புதல்வருமான ஜஃபர் பின் அபூதாலிப் அரிய உரை ஒன்றை நிகழ்த்தினார். வரலாற்றுப்

ஜஃபரின் உரை

பிரசித்தம் வாய்ந்த அவரது உரை இஸ்லாத்தின் சமய, ஒழுக்க, கருத்தியல் உயர்வுபற்றிய அதன் உணர்வு நிலையைப் பிரதிபலிப்பதாய் அமைந்திருந்தது. அவர் பேசினார்: ''அரசே! அறியாமைக் கால மக்கள் நாங்களே! நாங்கள் சிலைகளை வணங்கினோம் பிணங்களை உண்டோம்; இழிவான செயல்களைப் புரிந்தோம்; உறவினைத் துண்டித்தோம்; அயலவர்களைத் துன்புறுத்தினோம்; எங்களுள் பலம் வாய்ந்தோர் பலவீனரை விழுங்கினர்; எங்களுக்குள்ளிருந்தே ஒருவரை அல்லாஹ் தூதராக எங்களிடம் அனுப்பும் வரை நாங்கள் இவ்வாறே இருந்தோம். அவரது வமிசவழியை நாங்கள் அறிவோம். அவருடைய வாய்மையையும் நம்பகத் தன்மையையும் தூய்மையையும் கூட நாங்கள் அறிவோம். அல்லாஹ்வின் ஏகத்துவத்தை ஏற்று,

அவனையே வணங்குமாறும் அந்த ஏகனுக்குப் பதிலாக நாங்களும் எங்கள் முன்னோரும் வழிபட்டு வந்த கற்களையும் சிலைகளையும் கை விடுமாறும் அவர் எங்களுக்கு அழைப்பு விடுத்தார். உண்மையே பேசுமாறும் வாக்குறுதியை நிறைவேற்றுமாறும் உறவைப் பேணுமாறும் அயலவர்களோடு அன்பாக நடந்து கொள்ளுமாறும் குற்றங்கள் செய்வதிலிருந்தும் குருதி சிந்துவதிலிருந்தும் விலகியிருக்குமாறும் அவர் எங்களைப் பணித்தார். மானக்கேடானவற்றைச் செய்தல், பொய் கூறுதல், அனாதைகளின் சொத்துக்களை உண்ணுதல், கற்புடைய பெண்டிர்மீது அவதூறு சுமத்துதல் ஆகியவற்றிலிருந்து அவர் எங்களைத் தடுத்தார். அல்லாஹ் ஒருவனையே வணங்குமாறும் அவனுக்கு எதனையும் இணையாக்க வேண்டாம் என்றும் அவர் எங்களுக்கு ஏவினார். தொழுமாறும் 'ஷகாத்' கொடுக்குமாறும் நோன்பு நோற்குமாறும் அவர் எங்களுக்குக் கட்டளை இட்டார். நாங்கள் அவரை உண்மைப்படுத்தினோம்; அவரை நம்பினோம்; அவர் அல்லாஹ்விடம் இருந்து கொண்டுவந்ததில் நாங்கள் அவரைப் பின்பற்றினோம். நாங்கள் அல்லாஹ் ஒருவனையே அவனுக்கு எதனையும் இணையாக்காமல் வணங்கினோம்: எங்களுக்கு விலக்கப்பட்டவற்றிலிருந்து நாங்கள் எங்களைத் தடுத்துக் கொண்டோம்; எங்களுக்கு ஆகுமாக்கப்பட்டவற்றையே நாங்களும் எங்களுக்கு ஆகுமாக்கிக் கொண்டோம். ஆனால், எங்கள் சமுதாயத்தவர்கள் எங்களுக்கு எதிராக எழுந்தனர்; எங்களது (புதிய) சன்மார்க்கத்தைக் கைவிட்டு, அல்லாஹ்வை வழிபடுவதற்குப் பதிலாகச் சிலைகளையே மீண்டும் வழிபடுமாறும் நாங்கள் முன்பு செய்த இழிசெயல்களை ஆகுமானவையாகக் கருதுமாறும் கூறி, எங்களைத் துன்புறுத்தினர். அவர்கள் எங்களை வதை செய்து, எங்களுக்கு அநீதம் இழைத்து, எங்கள் வாழ்வைச் சுருக்கி, எங்களுக்கும் எங்கள் சன்மார்க்கத்திற்கும் இடையே அவர்கள் வரவே, மற்றவர்களிலெல்லாம் சிறந்தவராக உங்களை நாங்கள் தெரிவு செய்து, உங்கள் நாட்டுக்கு வந்தோம். இங்கே உங்கள் பாதுகாப்பில் நாங்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறோம். அரசே! நாங்கள் உங்கள் பாதுகாப்பில் இருக்கையில், நாங்கள் அநீதி இழைக்கப்படமாட்டோம் என்று நம்புகிறோம்.''[27]

நபித்துவத்தின் ஆறாம் ஆண்டில், குறைஷ் வர்க்கத்தின் மிகப்பலம் வாய்ந்த மனிதர்களான ஹம்ஷா, உமர் ஆகிய இருவரும் இஸ்லாத்தைத் தழுவினர். ஹம்ஷா நபியவர்களின் சிறிய தந்தை ஆவர். நபியவர்களும்

27. இப்ன் ஹிஷாம் பாகம் i பக்கம் 362

ஹம்ஷாவும் ஒரே வளர்ப்புத்தாயிடம் சிறிதுகாலம் பால் அருந்தி வளர்ந்தவர்கள். அதனால் அவர் அண்ணலவர்களின் பால் குடிச் சகோதரருமாவர். வீரத்திற்குப் புகழ்பெற்ற மனிதராக விளங்கிய அவர்

ஹம்ஷாவும் உமரும் முஸ்லிம்களாதல்

'அஸதுல்லாஹ்' (அல்லாஹ்வின் சிங்கம்) என்னும் சிறப்புப் பெயராலும் அழைக்கப்பட்டார். குறைஷ் வர்க்கத்தின் புகழ்பெற்ற போர் வீரரான உமர் உருவ வழிபாடு ஓங்கி வளர உழைத்தவர்களுள் ஒருவர்; நபியவர்களினதும் அவர்கள் அறிமுகப்படுத்திய சன்மார்க்கத்தினதும் மிகக் கசப்பான எதிரி. அவர் நபியவர்களைப் பிடிவாதத்தோடும் வெறித்தனத்தோடும் எதிர்த்து வந்தார். அவர் உதவியற்ற ஏழை முஸ்லிம்களை அடித்துத் துன்புறுத்தினார்; இறுதி முயற்சியாக நபியவர்களின் உயிருக்கே உலை வைக்கத் தீர்மானித்தார்; இஸ்லாத்தைத் தழுவுவதற்குச் சொற்ப நேரத்திற்கு முன்னால், அண்ணலவர்களைக் கொல்லும் எண்ணத்தோடு, உருவிய வாளைக் கையிலே ஏந்தி, இல்லத்திலிருந்து புறப்பட்டுச் சென்றார்; வழியிலே, அவரது தங்கையின் இல்லத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைத் தொடர்ந்து, அவருடைய இரும்பு இதயத்திலே மாற்றம் உருவானது; தங்கையின் இல்லத்திலிருந்து நேராக நபியவர்கள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

இந்த இரண்டு 'சிங்கங்'களினதும் மத மாற்றம் இஸ்லாத்தின் பிடியைப் பலப்படுத்தியதோடு, இஸ்லாத்தின் ஆரம்ப வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகவும் அமைந்தது. அவர்கள் இஸ்லாத்தைத் தழுவியமை பலதெய்வத் தொழும்பர்களுக்கு மரண அடியையும் ஏகத்துவவாதிகளுக்கு பலத்தோடு சேர்ந்த மனத் திண்மையையும் அளித்தது. அதுவரை பயத்தோடும் கண்ணீரோடும் வாழ்ந்த முஸ்லிம்கள் துணிவும் திறனும் பெற்றுத் தலை நிமிர்ந்து வாழலாயினர். முஸ்லிம்களின் இரகசிய சந்திப்பிடமாக இருந்த அல் அர்கம் என்பாரின் வீட்டிலிருந்து நபியவர்கள் வெளியேறி, மக்களை இஸ்லாத்தின் பால் பகிரங்கமாக அழைக்க ஆரம்பித்தார்கள்.[28] முஸ்லிம்கள் தங்கள் தொழுகையையும் புனித க.ாபாவில் பகிரங்கமாக நிறைவேற்றத் தொடங்கினர்.

முஸ்லிம்களுட் சிலர் அபிசீனியாவில் பாதுகாப்பாக வாழ்ந்து வந்தமையும் ஹம்ஷா, உமர் ஆகியோர் இஸ்லாத்தைத் தழுவியமையும் குறைஷ்களின் சினத்தைப் பன்மடங்காக்கிற்று. எனவே, அவர்கள் மக்காவில்

28. அல் அர்கம் என்பார் மிக ஆரம்பகாலத்தில் இஸ்லாத்தைத் தழுவியவர்களுள் ஒருவர். அல் அர்கம் பின் அப்த் மனாப் என்பது இவருடைய முழுப் பெயர்; மக்ஷூம் கிளைக் குலத்தைச் சேர்ந்தவர். இவரது குலத்தவர்கள் நபியவர்களை மிகக் கடுமையாக எதிர்த்த போதிலும், இவர் ஆரம்ப காலத்திலேயே இஸ்லாத்தைத் தழுவினார்; முஸ்லிம்கள் குறைஷ்களால் துன்புறுத்தப் பட்டபோது, இவர் தமது இல்லத்தை நபியவர்களுக்கு வழங்கி, மக்காவின் சிறுபான்மைச் சமூகத்தவர் கூடும் இடமாக அதனை மாற்றினார். இங்கே நபியவர்கள் சுமார் மூன்றாண்டு காலம் தங்கியிருந்து, இரகசியமாக இஸ்லாமியப் பிரசாரம் செய்து வந்தாகள்.

வாழ்ந்த முஸ்லிம்களை - குறிப்பாக உதவியற்ற ஏழை முஸ்லிம்களை - அதிக வேகத்தோடு வதை செய்யலாயினர். சிலர் அவர்களால் கொல்லப் பட்டனர். அவர்களது கருணையற்ற வதை வளரவே, நபி (ஸல்) அவர்கள்

இரண்டாம் ஹிஜ்ரத்

மக்காவில் எஞ்சியிருந்த தமது சீடர்களுட் சிலரை அபிசீனியாவுக்குச் சென்று அடைக்கலம் பெறுமாறு பணித்தார்கள். அவ்வாறே எண்பத்து மூன்று முஸ்லிம்கள் அபிசீனியாவுக்குச் சென்று அடைக்கலம் புகுந்தனர். இஸ்லாமிய வரலாற்றில் இரண்டாவது ஹிஜ்ரத் எனக் கருதப்படும் இந்தப் புலப்பெயர்ச்சி நபித்துவத்தின் ஏழாம் ஆண்டில் நிகழ்ந்தது. இவ்வாறு அபிசீனியாவுக்குச் சென்ற முஸ்லிம்களின் மொத்த எண்ணிக்கை சுமார் நூறு ஆகும். அவர்களுட் சிலர், 'மக்காவின் இறைமறுப்பாளர் அனைவரும் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டனர்' என்ற தவறான தகவலைச் செவியுற்று, மக்காவுக்குத் திரும்பி வந்து, மீண்டும் குறைஷ்களின் வதையில் மாட்டிக்கொண்டனர். திரும்பியவர்களுட் சிலர் மீண்டும் அபிசீனியாவுக்குத் தப்பிச் செல்ல, மற்றவர்கள் இரகசியமாக நகரினுள் நுழைந்தனர். நபி (ஸல்) அவர்கள் மதினாவுக்கு ஹிஜ்ரத் மேற்கொண்ட சமயம், அபிசீனியாவில் அடைக்கலம் பெற்றிருந்த முஸ்லிம்களுட் பலர் மதினாவுக்குத் திரும்பினர். ஏனையோர் ஹிஜ்ரி 7இல் நபியவர்களால் மதினாவுக்கு திருப்பி அழைக்கப்பட்டனர்.

முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் அவர்களது சீடர்களுக்கும் தாம் கொடுத்து வந்த அச்சுறுத்தல்களும் இன்னல்களும் இஸ்லாத்தின் வளர்ச்சியைத் தடுக்கத் தவறியமையையும் முஸ்லிம்களின் எண்ணிக்கை

ஒன்றியொதுக்கல்

படிப்படியாகப் பெருகிக் கொண்டிருந்தமையையும் கண்ட குறைஷ்கள் நபியவர்களைத் தோற்றுவித்த ஹாஷிம் கிளைக் குலத்தைச் சமுகரீதியில் ஒன்றியொதுக்க மற்றொரு சூழ்ச்சியை உருவாக்கி அடைகாக்கலாயினர். குறைஷ் வர்க்கத்தைச் சேர்ந்த கிளைக் குலங்கள் எல்லாம் ஒன்றுகூடி, பகைக் கூட்டிணைவு ஒன்றை உருவாக்கி, ஹாஷிம் கிளைக் குலத்தாரைச் சமுக ரீதியில் ஒன்றியொதுக்க உடன்பட்டன. அவர்கள் ஹாஷிம் கிளைக் குலத்தாருக்கு எதிராகக் கூட்டுப் பிரசித்தம் ஒன்றை வரைந்தனர். அதில், ஹாஷிம் கிளைக்குலத்தார் நபி முஹம்மத் (ஸல்) அவர்களை குறைஷ்களிடம் ஒப்படைக்கும் வரை அவர்களோடு எவரும் திருமணமோ வாங்கல் - விற்றலோ செய்யக் கூடாது என்றும் அவர்களோடு எவரும் இணைந்திருக்கவோ அவர்களுக்கு உணவுப் பொருட்கள் செல்ல அனுமதிக்கவோ கூடாது என்றும் எழுதப்பட்டிருந்தது. மன்ஸூர் பின் இக்ரிமா என்பாரால் எழுதப்பட்ட இந்தப் பிரசித்தம் அடங்கிய பத்திரம் கிளைக் குலத்தலைவர்களால் கைச்சாத்திடப்பட்டு, க.ாபாவின் உட்புறத்தே பத்திரமாக வைக்கப்பட்டது. இது நபித்துவத்தின் ஏழாம் ஆண்டு முஹர்ரம் முதலாம் நாள் நிகழ்ந்தது.[29]

29. இப்ன் அல் தைபங், பாகம் i பக்கம் 326

இவ்வாறு, குறைஷ்களின் ஒன்றியொதுக்கலுக்கு ஆட்பட்ட ஹாஷிம் கிளைக் குலத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் ஹாஷிம் கிளைக் குலத்தாருக்குச் சொந்தமானதும் மக்காவின் மலையிடுக்கு ஒன்றில் அமைந்திருந்ததுமான 'ஷி.ப் அபீ தாலிப்' என்ற மலைக் கணவாயில் அடைக்கலம் புகுந்து, தமது குலத்தில் உதித்த முஹம்மத் (ஸல்) அவர்கள் மேற்கொண்ட இஸ்லாமிய அழைப்புப் பணிக்காகத் தனிமைச் சிறைவாசம் அனுபவித்தனர்.[30] இந்தத் தனிமைவாசம் மூன்று ஆண்டுகள் வரை நீடித்தது. இக்காலத்தில் அவர்கள் சொல்லொணாத் துயரங்களை நுகர்ந்தனர். உணவும் நீரும் அவர்களை அடைவதை குறைஷ்கள் தடைசெய்தனர். அவர்கள் இலைகளை உண்டனர்; காய்ந்த மரப்பட்டைகளைக் கொதிக்க வைத்து, அவற்றின் சாற்றை அருந்தினர். ஹஜ் காலத்தில் மட்டுமே அவர்கள் வெளியே வர அனுமதிக்கப்பட்டனர். பசியால் துடித்த அவர்களது குழந்தைகளின் அழுகைக் குரல் மலைக் கணவாயின் பின்னாலிருந்து மக்காவின் பள்ளத்தாக்குகளில் எதிரொலிக்கும் அளவுக்கு அவர்கள் மீதான சமூகத்தடை மிகக் கடுமையானதாக இருந்தது. ஹாஷிமியாக் குழந்தைகளின் அவலக் குரல்களைக் கேட்டு குறைஷ்யர்களுட் பலர் மகிழ்ச்சியடைந்த வேளையில், இரக்கசிந்தை கொண்ட சிலர் வேதனைப்பட்டனர். இறுதியில், ஒன்றியொதுக்கலின் கடுமை அதன் நோக்கத்தையும் மீறி உச்சநிலை அடையவே, ஒருகாலத்தில் நபியவர்களின் நண்பர்களாகவும் அயலவர்களாகவும் இருந்த அவர்களது பகைவர்களுட் சிலர் இரக்கமுற்று, தடையை நீக்கும் முயற்சியில் இறங்கலாயினர். இந்த முயற்சியில் மிக முக்கிய பங்கேற்றவர் ஹிஷாம் பின் அம்ர் பின் ரபீஆ என்பவராவர். இவர் ஹாஷிம் பின் அப்து மனாபின் புதல்வர் நழ்லா என்பாரின் மறுதாரச் சகோதரனின் மகனாவர். இவரது இடையறாத முயற்சியால் குறைஷ்கள், ஹாஷிமியாக்கள் மீதான சமூகத் தடையைத் தளர்த்த முன்வந்தனர். இதற்காக அவர்கள் சமூகத்தடைபற்றிய பிரசித்தப் பத்திரத்தைக் கிழித்தெறியும் பொருட்டு அது வைக்கப்பட்டிருந்த புனித க.்.பாவினுள் சென்று பார்த்தபோது, 'பிஸ்மிக்க அல்லாஹும்ம' (அல்லாஹ்வே! உனது திருநாமத்தால்) என்று எழுதப்பட்டிருந்த பகுதியை மட்டும் தவிர்த்து விட்டுப் பத்திரம் முழுவதையும் ஏற்கனவே கறையான்கள் உண்டுமுடித்திருந்தமையைக் கண்டு அவர்கள் வியப்புற்றனர். இந்த விந்தையைப் பார்த்த குறைஷ் வர்க்க முதியவர்கள் சிறிதும் தாமதிக்காமல் தடையைத் தளர்த்தி, ஹாஷிமிய்யாக்களை விடுவித்தனர். இதனைத் தொடர்ந்து அவர்கள் மூன்றாண்டுகாலத் தனிமை வாசத்தின் பின்னர் தத்தமது இல்லம் திரும்பினர்.

ஒன்றியொதுக்கல் முடிவுற்ற சொற்ப காலத்தின் பின்னர் - நபித்துவத்தின் பத்தாம் ஆண்டின் (கி.பி. 619) ஆரம்பத்தில் - இருபத்தைந்து ஆண்டுகளாகத்

30. இதில் ஹாஷிம் கிளைக்குலத்தைச் சேர்ந்த அபூ ஜஹ்லும் அவனது குடும்பத்தினரும் பங்கேற்கவில்லை. காரணம், அவன் நபியவர்களின் பரம வைரியாக இருந்தமை ஆகும்.

தமது ஆலோசகராகவும் ஆதரவாளராகவும் இருந்த அன்பு மனைவி கதீஜா வையும் நாற்பத்திரண்டு ஆண்டுகளாகத் தமது இடையறாப் பாதுகாவலராக இருந்த பெரியதந்தை அபூதாலிபையும் சில வார இடைவெளியில் நபி (ஸல்) அவர்கள் இழந்தார்கள். இவர்கள் இருவரினதும் மரணங்கள் அண்ணல் நபியவர்களுக்குப் பெரும் தாக்கமாக அமைந்து, அவர்களது வாழ்க்கையில் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஒன்றை ஏற்படுத்தியதோடு, குறைஷ்கள் தமது குறிக்கோளில் உறுதியாகச் செயற்படவும் அவர்களை ஊக்குவித்தன. இவர்கள் இருவரினதும் மரணத்தின் பின்னர், பாதுகாப்பை இழந்த நபியவர்களுக்கு எதிரான குறைஷ்களின் பகைமை நெருப்பு மிகுந்த உத்வேகத்தோடு கொழுந்துவிட்டு எரியலாயிற்று. அவர்கள் தங்கள் எதிர்ப்பில் மிகுந்த உறுதியுடையவர்களாகி, நபியவர்களுக்கு அதிக இன்னல்களை அளித்துவர ஆரம்பித்தனர். நபியவர்களைத் தொடர்ந்து சென்று, கைகொட்டவும் கூக்குரலிடவும் துட்டர்கள் தூண்டப்பட்டனர்; குப்பைகளும் அழுக்குகளும் அவர்களது முகத்தில் வீசப்பட்டன; அவர்களது வழக்கமான பாதையில் முட்கள் பரப்பி வைக்கப்பட்டன. சிலர் அவர்களைக் கூடாத சொற்களாலும் கற்களாலும் அடித்தனர். சிலர் அவர்களைப் பார்த்து உமிழ்ந்தனர்.

கதீஜா – அபூதாலிப் மரணங்கள்

குறைஷ்களின் இன்னல்கள் பெருகவே, தமது சொந்த நகரத்தவர்களின் நிராகரிப்புக்கும் நகைப்புக்கும் ஆளான நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவாசிகள்மீது நம்பிக்கை இழந்த நிலையில், மக்காவுக்கு வெளியே தமது தூதத்துக்கு ஆதரவு தேடி, அயல் நகரமான தாஇபுக்குச் செல்ல எண்ணினார்கள். மக்காவுக்குக் கிழக்கே சுமார் ஐம்பது மைல் தூரத்திலுள்ள தாஇப் நகரம் செல்வத்தினதும் அதிகாரத்தினதும் இல்லமாக விளங்கியது. அங்கு வாழ்ந்த மக்கள் செழிப்பும் மகிழ்ச்சியும் உடையவர்களாக இருந்தனர். இந்த நகரத்து மக்கள் தமது போதனைகளுக்குக் கவனம் செலுத்தலாம் என்று நபியவர்கள் நம்பினார்கள். இந்த நம்பிக்கையோடு அவர்கள் நபித்துவத்தின் பத்தாம் ஆண்டு இறுதியில், தமது வளர்ப்பு மகன் ஸைத் பின் ஹாரிதா என்பாரோடு தாஇப் நகரம் நோக்கிப் புறப்பட்டார்கள். வழியிலே, மக்கள் காணப்பட்ட இடங்களிலெல்லாம் தமது தூதம் பற்றிப் பிரசாரம் செய்து கொண்டே நகரத்தை அடைந்தார்கள்.

தாஇப் நகர பிரயாணம்

முதலில், அண்ணல் அவர்கள் தகீப் வர்க்கத்தின் உமைர் கிளைக் குலத்தைச் சேர்ந்த அப்த் யாலைல், மஸ்ஊத், ஹபீப் ஆகிய சகோதரர்கள் மூவரைச் சந்தித்தார்கள். அப்போது, தாஇப் நகரத்தில் வாழ்ந்த வர்க்கங்கள் அனைத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்தியவர்கள் இவர்களேயாவர். இவர்களிடம் தமது தூதத்தைப்பற்றி விளக்கிக் கூறிய அண்ணல் அவர்கள் தமது பணிக்கு

உதவியும் ஒத்துழைப்பும் நல்குமாறு இவர்களை வேண்டிக்கொண்டார்கள். ஆனால், இவர்கள் அளித்த பதில்கள் நஞ்சு தோய்த்தெடுக்கப்பட்ட அம்புகளைப் போலிருந்தன. ''உண்மையில் அல்லாஹ் உம்மையே தனது தூதராக அனுப்பியிருந்தால், நான் க.'.பாவின் போர்வையைக் கிழித்து விடுவேன்'' என்று அவர்களுள் ஒருவர் கூறினார். ''அல்லாஹ்வுக்குத் தூதராக அனுப்ப உம்மைவிடச் சிறந்த வேறொருவர் கிடைக்கவில்லையா?'' என்று இரண்டாமவர் கூறினார். ''அல்லாஹ்வின் மீது சத்தியமாக, நான் எந்த வகையிலும் உம்மோடு பேச முடியாது. நீர் கூறுவது போல அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட ஒரு நபியாக நீர் இருந்தால், உம்மோடு பேசுதல் மரியாதைக் குறைவாகும். அவ்வாறில்லாமல் நீர் பொய் கூறியிருந்தால், உம்மோடு பேசுவதற்கு நீர் தகுதியற்றவராவீர்'' என்று மூன்றாமவர் கூறினார்.

இவர்களது இந்தப் பதில்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பெரும் மனவேதனை அளித்தபோதிலும், அதனைப் பொறுமையோடு தாங்கிக் கொண்டு, ''இப்போது நீங்கள் எனக்குக் கூறியவற்றை வேறு எவரிடமும் கூறிவிடாதீர்கள்'' என்று புகன்றார்கள். ஆனால், 'மக்காவாசிகளை விடவும் நாங்கள் மிகக்கொடியவர்கள்' என்பதை நிரூபித்துவிட்ட அந்த மனிதர்கள் நபியவர்களுக்கு எதிரான தங்கள் எதிர்ப்பை இந்தப் பதில்களோடு மட்டும் நிறுத்திவிடாமல், தெருப் பொறுக்கிகளையும் வம்புச் சிறுவர்களையும் ஏவி, கற்களாலும் சொற்களாலும் அடித்து, அண்ணல் அவர்களை நகரத்தை விட்டே துரத்தி விட்டார்கள்.

இப்ன் ஸ.'.தின் கூற்றுப்படி நபியவர்கள் பத்து நாள்கள் தாஇபில் தங்கியிருந்தார்கள். பின்னர், அவர்கள் கனத்த இதயத்தைச் சுமந்தவர்களாக மக்காவிலிருந்து சில மைல் தூரத்திலுள்ள நக்லா எனும் பள்ளத்தாக்கிற்குச் சென்று, அங்கே சில நாள் தங்கினார்கள். பின்னர், மக்காவுக்குத் திரும்பி,

மதினாவாசிகளும் அண்ணலாரும்

தோல்வியோடு தமது ஏகத்துவப் பிரசாரத்தை மீண்டும் ஆரம்பித்தார்கள். ஆனால், குறைஷ்கள் அளித்து வந்த தொல்லைகளின் வேகம் பெருகவே, நபியவர்கள் மக்காவுக்கு வெளியே சென்று, ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக வந்த பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த மக்களிடையே தமது சன்மார்க்கப் பிரசாரத்தை ஆரம்பித்தார்கள். நபித்துவத்தின் பத்தாம் ஆண்டில் (கி.பி. 619), ஹஜ்ஜுக்காக யத்ரிப் நகரிலிருந்து[31] வந்திருந்த - புகழ்பெற்ற கஷ்ரஜ் வர்க்கத்தைச் சேர்ந்த - யாத்திரிகர் அறுவரை நபியவர்கள் 'உகாள்' சந்தையில்

31. பண்டைக் காலத்தில் மதீனா நகரம் யத்ரிப் என்றே அழைக்கப்பட்டது. நபித்துவத்தின் பதின்மூன்றாம் ஆண்டில் நபியவர்கள் அந்நகரத்தைத் தமது வாழிடமாக்கிக்கொண்டபோது, அதன் பெயர் அந்த நகரத்தின் மக்களால் 'மதீனதுன் நபீ' (நபீயின் நகரம்) என்று மாற்றப்பட்டது. பின்னர், அதுவே மதீனா எனச் சுருங்கி வழங்கலாயிற்று.

சந்தித்தார்கள். அண்ணல் அவர்கள் அந்த யாத்திரிகர்களிடம் அவர்களது பெயர்களையும் அவர்கள் சார்ந்த வர்க்கத்தின் பெயர்களையும் கேட்டபோது, அவர்கள் அன்பான குரலில் சரியாகப் பதில் அளித்தனர். பின்னர், நபியவர்கள் அல் குர்ஆன் வசனங்கள் சிலவற்றை அவர்களுக்கு ஓதிக்காட்டி, இஸ்லாத்தைப் பற்றிப் போதனை செய்தார்கள். மதினாவில் வாழ்ந்த யூத அறிஞர்கள் மூலம் விரைவில் தோன்றவிருந்த நபியைப் பற்றி ஏற்கனவே அறிந்திருந்த அவர்கள் அண்ணல் அவர்களின் சொற்களில் நம்பிக்கை கொண்டு, அந்த இடத்திலேயே இஸ்லாத்தைத் தழுவினர். ''நாங்கள் எங்கள் மக்களை விட்டுவிட்டோம்; ஏனெனில், அவர்களைப் போலப் பகைமையால் பிளவுண்ட மக்கள் கூட்டம் இருக்கமுடியாது. சிலவேளை, அல்லாஹ் அவர்களை உங்கள் மூலம் மீண்டும் ஒன்றுபடுத்தலாம். எனவே, நாங்கள் அவர்களிடம் சென்று, அவர்களை உங்களின் இந்த மார்க்கத்தின்பால் அழைக்கப் போகிறோம். அவர்களை அல்லாஹ் இந்த மார்க்கத்தில் ஒன்றுபடுத்தினால், உங்களை விடவும் மாண்புடைய மனிதர் வேறு எவரும் இருக்கமுடியாது'' என்று அவர்கள் அறுவரும் அண்ணல் அவர்களுக்குக் கூறிவிட்டு, முழு நம்பிக்கையோடு மதீனாவுக்குத் திரும்பிச் சென்றனர். எதிர்பாராத இந்தச் சம்பவம், அண்ணல் அவர்களின் நபித்துவப் பணியில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

நபித்துவத்தின் பதினோராம் ஆண்டில் மி.'.ராஜ் என அழைக்கப்படும் நபி முஹம்மத் (ஸல்) அவர்களது விண்ணுலகப் பிரயாணம் நிகழ்ந்தது. இந்தப் பிரயாணம் அல் இஸ்ரா.'. (நள்ளிரவுப் பயணம்) எனவும்

மி.ராஜ்

அழைக்கப்படுகிறது. இந்தப் பயணம் றஜப் மாதம் இருபத்தேழாம் நாளிரவு நிகழ்ந்தது.[32] அன்றிரவு அண்ணல் (ஸல்)அவர்கள் க.'.பாவிலுள்ள 'அல் ஹாதிம்' என்னும் இடத்தில்[33] இரவுத் தொழுகையை நிறைவேற்றிவிட்டுத் தூக்கத்துக்கும் விழிப்புக்கும் இடைப்பட்ட நிலையில் படுத்திருந்த போது, அமரர்கோன் ஜிப்ரீல் (அலை) திடீரென அங்கே தோன்றினார்; நபியவர்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பி, 'புராக்' என்ற ஒருவகை வாகனத்தில் ஏற்றி, ஜெருசலத்திலுள்ள 'மஸ்ஜிதுல் அக்ஸா' என்ற பள்ளிவாசலுக்குக் கூட்டிச் சென்றார். பின்னர், அவர்கள் அங்கிருந்து அமரர்கோனால் விண்ணுலகுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கே நபியவர்கள் ஆதம், இப்றாஹீம், மூஸா முதலான நபிமார்களைச் சந்தித்தார்கள்; அல்லாஹ்வோடும் உரையாடினார்கள்; பின்னர், அதே இரவில் அமரர்கோனால் அவர்கள் படுத்திருந்த இடத்திற்குத் திருப்பி அழைத்து

32. அல் இஸ்ராஃ என்னும் இந்தப் பயணம் றபீஉல் அவ்வல் இருபத்தேழாம் நாளிரவு நிகழ்ந்தது என்று இப்ன் ஸஃத் கூறுகிறார். வேறு சிலர் றமழான் மாதத்தில் நிகழ்ந்தது என்கின்றனர். ஆயினும், ரஜப் மாதம் இருபத்தேழாம் நாளுக்கு முந்திய இரவே மிஃராஜ் இரவாகக் கருதப்படுகிறது.

33. 'அல் ஹாதிம்' என்பது கஃபாவின் வடமேற்குப் பக்கத்தில் உள்ள அரைவட்டச் சுவராகும். இந்தச் சுவருக்கும் கஃபாவுக்கும் இடைப்பட்ட பிரதேசம் 'அல் ஹிஜ்ர்' என்று அழைக்கப்படுகிறது.

வரப்பட்டார்கள். ஒரு நொடிக்குள் நடந்து முடிந்த இந்தப் பிரயாணத்தின் போதுதான் முஸ்லிம்கள் மீது ஐங்காலத் தொழுகை விதியாக்கப்பட்டது.[34] இந்தப் பிரயாணம் பற்றி அல்குர்ஆனிலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. (அல்குர்ஆன் 17:1)

இந்த மி.ராஜ், நபி (ஸல்) அவர்களது வாழ்க்கையில், தாஇப் சம்பவத்துக்கும் மதினா ஹிஜ்ரத்துக்குமிடையே நடைபெற்ற மிகப்பெரும் நிகழ்ச்சியாகும். இது மக்காவில் பெரும் அமளியையே தோற்றுவித்தது. எல்லார் வாயிலும் இதுவே சூடான சொல்லாட்டுக்குரிய தலைப்பாக இருந்தது. நபி (ஸல்) அவர்கள் மக்களை ஓர் இடத்தில் ஒன்று சேர்த்து, இந்தப் பிரயாணத்தின் போது தாம் கண்டவற்றையும் ஜெருசலம் வரையிலான பிரயாணம் பற்றிய திட்டமான விவரங்களையும் விளக்கிக் கூறினார்கள். சிலர் அவர்களை நம்பினர்; பலர் அவர்களை எள்ளி நகைத்தனர்.

நபித்துவத்தின் பதினோராம் ஆண்டு (கி.பி.620) ஹஜ் காலத்தின் போது, முதல் வருடம் இஸ்லாத்தை ஏற்றுச் சென்ற மதீனாவாசிகள் அறுவருள் ஐவர் வேறு எழுவருடன் நபி முஹம்மத் (ஸல்) அவர்களைச் சந்திப்பதற்காக

அகபாச் சூள் i

மக்காவுக்கு வந்தனர். அவர்களுள் இருவர் மதீனாவின் மற்றொரு புகழ்பெற்ற வர்க்கமான அவ்ஸ் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அனைவரும் மினாவுக்கும் மக்காவுக்கும் இடையேயுள்ள 'அல் அகபா' மலைக் கணவாயில் அண்ணலவர்களைச் சந்தித்த போது, புதிதாக வந்த எழுவரும் இஸ்லாத்தை ஏற்று, முஸ்லிம்களாயினர். பின்னர், அவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து, "அல்லாஹ்வுக்கு எதனையும் இணையாக்க மாட்டோம்; திருடவோ விபசாரம் புரியவோ சந்ததிகளைக் கொல்லவோ அவதூறு கூறவோ மாட்டோம்; நேரான எந்த விடயத்திலும் உங்களுக்கு மாறு செய்யமாட்டோம்" என்று அண்ணல் அவர்களின் கரத்தில் சூள் உரைத்து விட்டு, மதீனாவுக்குத் திரும்பிச் சென்றனர். இஸ்லாமிய வரலாற்றில் இது 'பைஅத் அகபதுல் ஊலா' (முதலாவது அகபாச் சூள்) என்று அழைக்கப்படுகிறது. இந்த மக்கள், இஸ்லாத்தின் கோட்பாடுகளையும் பயிற்சிகளையும் போதிப்பதற்காக ஒருவரை மதீனாவுக்கு அனுப்புமாறு கோரவே, நபி (ஸல்) அவர்கள் முஸ்அப் பின் உமைர் என்பாரை அவர்களோடு அனுப்பிவைத்தார்கள்.

முதலாவது அகபாச் சூள் நிகழ்ந்த ஓராண்டின் பின்னர் - நபித்துவத்தின் பன்னிரண்டாம் ஆண்டு ஹஜ் காலத்தின் போது - இரண்டு பெண்கள் உட்பட எழுபத்தைவரைக் கொண்ட ஒரு குழுவினர் மதீனாவிலிருந்து பிற ஹஜ் யாத்திரிகர்களோடு மக்காவுக்கு வந்திருந்தனர். மதீனாவில்

34. இது உடலோடும் உயிரோடும் நிகழ்ந்த ஒரு பயணமாகும் என்பதே பெரும் தொகையான நபித்தோழர்களின் கருத்தாகும். 'ஸுன்னத் வல் ஜமாஅத்'தைச் சேர்ந்த அறிஞர்களின் ஏகோபித்த கருத்தும் இதுவே. விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரே இது உயிரோடு மட்டும் நிகழ்ந்த ஓர் ஆன்மீகப் பிரயாணம் என்கின்றனர்.

இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டோரின் ஆணைபெற்று, அவர்களது பிரதிநிதிகளாக நபியவர்களைத் தங்கள் நகரத்திற்கு அழைப்பதற்காக வந்திருந்த இவர்களோடு, மதீனாவில் இஸ்லாமியப் போதகராகப் பணிபுரிந்த

அகபாச் சூள் ii

முஸ்அப் பின் உமைரும் இருந்தார். இவர்கள் நபியவர்களைச் சந்தித்து, அவர்களைத் தம் நகருக்கு வருமாறு அழைத்தனர். அவர்களது அழைப்புக்கு எந்தப் பதிலும் அளிக்காத நபியவர்கள் அவர்களை துல்ஹஜ் மாதம் பன்னிரண்டாம் நாளிரவு மினாவில் சந்திப்பதாக உறுதி கூறினார்கள். அவ்வாறே, குறைஷ்களின் சந்தேகத்தைத் தூண்டி அவர்களது பகைக்கு ஆட்படாத வகையில், குறிப்பிட்ட இரவில் 'அல் அகபா' மலைக் கணவாயில், அவர்கள் ஒன்றுகூடி, சிறிய தந்தை அப்பாஸோடு அங்கு வந்திருந்த நபி (ஸல்) அவர்களைத் தமது நகரத்திற்கு வருமாறு அழைத்தனர். பின்னர், அவர்கள் நபியவர்களைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொள்வதாகவும் தங்கள் மனைவி, மக்களைப் பாதுகாப்பது போலப் பாதுகாப்பதாகவும் அவர்களது கரம்பற்றிச் சூள் உரைத்தனர். இது இஸ்லாமிய வரலாற்றில் 'பைஅத் அகபதுத் தானீ' (இரண்டாவது அகபாச் சூள்) என்று அழைக்கப்படுகிறது.

மதீனாவுக்கு ஹிஜ்ரத்

மதீனா நகரத்தவர்கள் அகபா மலைக் கணவாயில் நபியவர்களைச் சந்தித்து, அவர்களை மதீனாவுக்கு அழைத்தமை பற்றியும் அவர்கள் உரைத்த சூள் பற்றியும் மக்கா நகர குறைஷ்கள் கேள்வியுற்று, ஆத்திரமும் ஆவேசமும் அடைந்தனர். நபியவர்களுக்கும் மதீனாவாசிகளுக்கும் இடையே உருவான இப்புதிய நட்புறவின் விளைவுகளை எண்ணிப் பயந்த அவர்கள் இஸ்லாத்தையும் அதன் போதகரையும் கிள்ளி எறியும் பணியிலே தீவிரமாக ஈடுபட ஆரம்பித்தனர். அதுவரை பயன்படுத்தாத கொடுமைகளையும் வசைகளையும் முஸ்லிம்கள்மீது பொழியலாயினர். நபி (ஸல்) அவர்கள் தமது சீடர்களை மினாவுக்குக் குடிபெயர்ந்து செல்ல ஆலோசனை கூறுமளவுக்கு குறைஷ்கள், உதவியற்ற முஸ்லிம்களுக்கு அளித்து வந்த இன்னல்கள் தீவிரமும் பெருக்கமும் பெற்றிருந்தன. இஸ்லாத்தின் விதையையும் அதன் மரத்தையும் அறேபியாவின் மண்ணிலிருந்து அடியோடு அழிப்பதே அவர்களது ஒரே நோக்கமாக இருந்தது.

குறைஷ்களின் கொடுமை பலமாக வளரவே, அண்ணல் நபி(ஸல்) அவர்கள் தங்கள் சீடர்களுக்கு மக்காக் குறைஷ்களின் கொடுமைக் கரங்களிலிருந்து தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மதீனாவுக்குப் புலம்பெயர்ந்து செல்லுமாறு பணித்தர்கள். அவ்வாறே அவர்கள் இருவர் இருவராகவும் மும்மூவராகவும் சென்று, மதீனாவில் குடியேறலாயினர்

மதீனா நகரத்தவர்கள் அவர்களைப் பரிவோடும் பாசத்தோடும் வரவேற்றனர். சில மாதங்களிலே மக்காவில் முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதிகள் வெறுமையாகின; பெரும்பாலும் மக்கா நகர முஸ்லிம்கள் அனைவருமே மதீனாவுக்குச் சென்றுவிட்டனர். குறைஷ்களால் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டோர், பிரயாணம் செய்ய இயலாதோர் ஆகிய சிலரும் அபூபக்ர், அலீ முதலான நபித்தோழர் சிலருமே மக்காவில் தங்கியிருந்தனர்.

நபிகளாரின் ஹிஜ்ரத்

முஸ்லிம்களின் புலப்பெயர்ச்சிபற்றி குறைஷ்கள் அறியவந்தபோது, அவர்கள் ஆத்திரத்தின் உச்சக்கட்டத்திற்கே சென்றுவிட்டனர்; அவர்கள் வழக்கமாகக் கூடும் 'தாருன் நத்வா' மண்டபத்தில் புதிய நிலைமை பற்றி ஆராய்வதற்காக ஒன்று கூடினர். பிரச்சினையைச் சமாளிப்பதற்குப் பல்வேறு எடுத்துரைகள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன. குறைஷ் தலைவர்களுள் ஒருவர், '' முஹம்மதை மக்காவிலிருந்து புறக்கழிப்புச் செய்துவிட வேண்டும்" என்று கருத்துத் தெரிவித்தார். மற்றொருவர், ''முஹம்மதை இரும்புச் சங்கிலியால் பிணைத்து மரணம் ஏற்படும் வரை சிறையில் அடைத்து விட வேண்டும்'' என்று ஆலோசனை தெரிவித்தார். அபூ ஜஹ்ல், ''ஒவ்வொரு கிளைக்குலத்திலிருந்தும் ஆற்றல் வாய்ந்த வீர இளைஞன் ஒருவன் தெரிவு செய்யப்படல் வேண்டும்; இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, முஹம்மதைத் தத்தம் வாள்களால் வெட்டிக் கொன்று விடவேண்டும்; இவ்வாறு கொல்வதால், பழி எல்லாக் குலங்கள் மீதும் விழுந்து விடும்; எல்லாரையும் பழிவாங்குதல் இயலாதது; ஆதலால், குருதி முதலை மட்டும் கொடுத்து, நாங்கள் தப்பிக் கொள்ளலாம்" என்று கருத்துக் கூறினான்.[35] இறுதியில், அபூஜஹ்லின் பயங்கர ஆலோசனையே குறைஷ் தலைவர்கள் அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்தச் சமயத்தில், நபி (ஸல்) அவர்கள் ஹழ்ரத் அபூபக்ர், ஹழ்ரத் அலீ ஆகியோரோடு, தமது சொந்த ஹிஜ்ரத்தை மேற்கொள்வதற்காக அல்லாஹ்விடமிருந்து தெளிவான ஆணையை எதிர்பார்த்துக் கொண்டிருந் தார்கள். குறைஷ்கள் அண்ணலவர்களைக் கோழைத்தனமாகக் கொல்வ தற்குத் திட்டமிட்ட சமயம், அவர்கள் அதனைச் செயற்படுத்துவதற்கு முன்பே அது பற்றி அல்லாஹ் தன் அன்புக்குரிய தூதருக்கு அறிவித்து விட்டான். குறைஷ்களது திட்டம் நிறைவேற்றப்படவிருந்த அன்றிரவு, நபி (ஸல்) அவர்கள் தமது சொந்த 'ஹிஜ்ரத்'தை மேற்கொள்வதற்கு அவசியமான தெளிவான ஆணையை அல்லாஹ்விடமிருந்து பெற்றார்கள். எனவே, அன்றிரவு, கொலைஞர்கள் நபியவர்களைக் கூட்டாகத் தாக்கிக் கொல்லும் எண்ணத்தோடு அவர்களது வீட்டைச் சூழ்ந்து நின்ற வேளையில், அண்ண லவர்கள் தமது போர்வையை ஹழ்ரத் அலீயிடம் கொடுத்து, அவரைத்

35. இப்ன் ஹிஷாம், பாகம் ii பக்கம் 123 – 4

தமது படுக்கையில் படுத்துத்தூங்குமாறு பணித்து விட்டு, எவருக்குமே தெரியாமல் அங்கிருந்து வெளியேறினார்கள். நேராக ஹழ்ரத் அபூபக்ரின் இல்லத்திற்குச் சென்ற நபியவர்கள் அவரையும் அழைத்துக் கொண்டு, மக்காவிலிருந்து சுமார் ஒரு மணிநேர நடைதூரத்தில் அமைந்துள்ள 'தவ்ர்' குகைக்குச் சென்றார்கள்; நபியவர்களின் தலைமறைவால் மக்காவில் ஏற்பட்ட சந்தடி ஓயும் வரை, மூன்று இரவுகள் அந்தக் குகையில் ஒளிந்திருந்தனர். பின்னர், அவர்கள் இருவரும் அங்கிருந்து வெளியேறி, கூலிக்கு அமர்த்தப்பட்ட அப்துல்லாஹ் பின் அர்கத் என்ற வழிகாட்டியின் உதவியோடு மதீனாவுக்குப் பயணமாகினர்.

பழக்கமற்ற பாதைகள் வழியாகப் பல நாள்கள் பயணம் செய்த பின்னர், நபியவர்களும் அவர்களது பிரிய தோழர் அபூபக்ரும் மதீனாவின் சுற்றுப்புறத்தில், சுமார் ஆறுமைல் தொலைவில் இருக்கும் குபா.·. என்ற கிராமத்தை நபித்துவத்தின் பதின்மூன்றாம் ஆண்டு ரபீஉல் அவ்வல் எட்டாம் நாள் (செப்டம்பர் 20,622) அடைந்தனர். அங்கே மக்கள் நபியவர்களை மலர்ந்த முகங்களோடு வரவேற்றனர். அங்கு பதினான்கு தினங்கள் தங்கியிருந்த நபியவர்கள் ஒரு பள்ளிவாயிலை நிறுவினார்கள். இதுவே இஸ்லாத்தில் நிறுவப்பட்ட முதலாவது பள்ளிவாயிலாகும். இப்பள்ளி வாயிலுக்குரிய முதலாவது கல்லை நபியவர்கள் தமது திருக்கரங்களால் வைத்து, 'கிப்லா' திசையையும் அடையாளமிட்டார்கள். நபியவர்கள் குபா.·. வில் தங்கியிருந்த போதுதான், அவர்கள் மக்காவிலிருந்து புறப்பட்டு மூன்று தினங்களின் பின்னர் அங்கிருந்து வெளியேறிய ஹழ்ரத் அலீ குபா.·.வை வந்தடைந்தார். இரண்டு வாரங்களின் பின்னர், நபியவர்கள் தமது தோழர்களோடு மக்காவுக்கு வடகிழக்கே சுமார் 300 மைல் தூரத்திலுள்ள மதீனா நகரத்தை ரபீஉல் அவ்வல் இருபத்திரண்டாம் நாள் (அக்டோபர் 4, 622) வெள்ளிக்கிழமை காலையில் அடைந்தார்கள். நபியவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்குப் புறப்பட்ட தினத்திலிருந்து தான் முஸ்லிம்களின் ஹிஜ்ரி ஆண்டு கணக்கிடப்பட்டு வருகிறது.

'ஹிஜ்ரத்' என்ற அறபுச் சொல்லுக்கு, 'ஒருவர் மற்றொருவரை நேச உறவிலிருந்து துண்டித்தல்' என்று பொருள். இத்தகைய ஒரு துண்டிப்பை விளைவாக அளிக்கும் புலப்பெயர்ச்சியைக் குறிப்பிடப் பொதுவாக இந்தச் சொல் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், நபி (ஸல்) அவர்களது புலப்பெயர்ச்சியைப் பொறுத்தவரை இந்தச் சொல் மிக ஆழமான கருத்துக்களைக் கொண்டது. கிறித்தவ எழுத்தாளர்கள் இந்தச் சம்பவத்தை குறைஷ்கள் மீதான அச்சத்தில் நபியவர்கள் மேற்கொண்ட தப்பிச்செல் முயற்சி என்றே விமர்சித்திருக்கின்றனர். ஆனால், இது ஹிஜ்ரத்தின் புனித நோக்கத்தையும் சிறப்பையும் நிலையிறக்கும் எண்ணத்தோடு வெளியிடப்பட்ட

ஹிஜ்ரத்தின் காரணங்கள்

ஆதாரமற்ற ஒரு கூற்றாகும். உண்மையில், இது இரண்டு ஆண்டுகளாகக் கருத்திற் கொள்ளப்பட்டு, கவனமாக ஆராயப்பட்ட ஒரு புலப் பெயர்ச்சித் திட்டமாகவே இருந்தது. இரண்டாவது அகபாச் சூள் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உதவியது.

அரசியல் நோக்கம்

நபி (ஸல்) அவர்கள் தமது தாயகமான மக்காவைத் துறந்து, மதீனாவைத் தமது வாழிடமாக்கிக்கொள்ளும் தீர்க்கமான முடிவை எடுத்தமைக்கு நியாயமான பல காரணங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று மதீன நகரத்தவர்களின் அன்பான அழைப்பாகும். அவர்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களைத் தமது நகரத்திற்கு அழைத்ததில் சமயக் காரணங்களோடு அரசியல் காரணங்களும் இருந்தன. மதீனாவின் இரு பெரும் வர்க்கங்களான அவ்ஸ், கஷ்ரஜ் வர்க்கங்களைச் சேர்ந்த மக்கள் தங்களுக்குள் பல தசாப்தங்கள் வரை போரிட்டுக் கொண்டிருந்தனர். அவர்களது பகைமையும் இடையறாச் சண்டைகளும் நகரத்தின் அமைதியைக் குழப்பி, அவர்களது சக்தியையும் செல்வத்தையும் நலிவுறச் செய்திருந்தன. மக்கள் எப்போதும் அவநம்பிக்கையிலும் அச்சத்திலுமே வாழ்ந்தனர். இத்தகைய நீண்ட காலப் போரால் அவர்கள் பலவீனமுற்றுக் களைப்படைந்த போது, அவர்கள் தங்கள் பகையை மறந்து, நிலையான சமாதானத்தில் வாழ விரும்பினர். ஆனால், அவர்களது பிணக்கை சிநேகபூர்வமான முறையில் தீர்த்து வைத்து, அவர்களிடையே சமாதானத்தை மீள ஏற்படுத்தவல்ல தகுதியான எவரும் மதீனாவில் இருக்கவில்லை. அவர்கள் முதன் முறையாக முஹம்மத் (ஸல்) அவர்களை அல் அகபா கணவாயில் சந்தித்தபோது, தங்கள் பிணக்கை நீதியாகத் தீர்த்துவைக்கும் பணியில் அவ்ஸ், கஷ்ரஜ் இரு வர்க்கத்தாரும் முழு நம்பிக்கை வைக்கவல்ல மிகத்தகுதியான ஒருவரை அவர்கள் நபியவர்களிலே கண்டார்கள். மேலும், மதீனா நகரத்தவர்கள் மக்காவில் உயர்குடி வகுப்பொன்றை உருவாக்கிப் பெருமை அடித்துக் கொண்டிருந்த குறைஷ் வர்க்கத்தார் மீது பொறாமையுற்றிருந்தனர். இந்தப் பொறாமையால் அவர்கள் குறைஷ்களின் தலைமைத்துவத்தையும் மேலாதிக்கத்தையும் ஒழித்து, மக்காவின் வளர்ந்து கொண்டிருந்த செல்வாக்கைத் துண்டித்து, முழு அறேபியாவிலும் தங்களது சொந்த ஆதிக்கத்தை நிறுவுவதற்குத் தகுந்த தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். நபி முஹம்மத் (ஸல்) அவர்களைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொள்வதன் மூலம் உயர்வான இந்த இலட்சியத்தை அடையப் பெறலாம் என்று அவர்கள் நம்பினர். எனவே, அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு இஸ்லாத்தைத் தழுவியதோடு நபியவர்களையும் தங்கள் நகருக்கு அழைத்தனர்.

மக்காவும் மதீனாவும அக்கால வடஅறேபியாவின் இரு பெரும்

முக்கிய நகரங்களாக விளங்கின. அந்த நகரங்களைச் சேர்ந்த மக்களிடையே அடிக்கடி திருமணங்களும் நிகழ்ந்து வந்தன. மதீனா மக்காவிலிருந்து சிரியாவுக்குச் செல்லும் வர்த்தகப்பாதையில் அமைந்திருந்தமையால்,

மதீனாவோடிருந்த நபிகளாரின் உறவு

சிரியாவுக்கு வர்த்தகப் பயணங்களை மேற்கொண்ட மக்காவாசிகள் மதீனா நகரத்தவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர். இந்தக் காரணங்களுக்காக இரண்டு நகரங்களிலும் வாழ்ந்த மக்கள் பரஸ்பர கவர்ச்சியும் அனுதாபமும் உடையவர்களாக இருந்தனர். மேலும், முஹம்மத் (ஸல்) அவர்களும் மதீனாவுக்கு அன்னியராக இருக்கவில்லை. அவர்களது பூட்டனார் ஹாஷிமும் தந்தை அப்துல்லாஹ்வும் மதீனாவிலிருந்தே தங்கள் மனைவியரைப் பெற்றிருந்தமையால், நபியவர்கள் மதீனா நகரத்தவர்களோடு இரத்த உறவு கொண்டிருந்தார்கள். இந்த இரத்த உறவும் பரஸ்பர கவர்ச்சியும் நபியவர்களின் மதீனப் புலப்பெயர்ச்சிக்கு ஓர் ஆதரவான சூழ்நிலையை அமைத்துக் கொடுத்தன.

உரோமப் பேரரசன் ஹட்ரிஅன் (கி.பி. 117-138) என்பானின் ஆட்சியின் கீழ் அனுபவித்த கொடுமைகளால் தங்கள் சொந்த நாட்டிலிருந்தே ஓடிவந்த யூதர்களின் வாழிடமாக மதீனா மிக நீண்ட காலமாகவே இருந்து வந்தது.

யூதரின் பகைமை

அவர்கள் அங்கே சாந்தியோடும் செழிப்போடும் வாழ்ந்து கொண்டிருந்தபோது, ம.ரிப் அணை உடைப்பெடுத்ததைத் தொடர்ந்து புலம்பெயர்ந்த தென் அறேபிய வர்க்கங்களான அவ்ஸ், கஷ்ரஜ் வர்க்கங்களைச் சேர்ந்த ஒருதொகை மக்கள் எங்கெல்லாமோ அலைந்து, இறுதியில் மதீனாவை அடைந்தனர். அவர்களை யூதர்கள் அங்கு வாழ அனுமதித்தனர். அக்காலத்தில் வாழ்ந்த மதீனா யூதர்கள் பாரசீகத்தோடு நட்புறவைப் பேணிவந்தனர். யூதர்களின் வழக்கமான நட்புறவுப் பூட்கையைப் பொறுத்தவரை, மதீனா பாரசீகரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்றும் கூறலாம். ஆரம்பத்தில், கணிசமான ஒரு காலம் வரை மதீனாவில் புதிதாகக் குடியேறிய அவ்ஸ், கஷ்ரஜ் வர்க்க அறேபியர் யூதர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் திறை செலுத்துபவர்களாகவும் இருந்தனர். அவர்கள் யூதர்களைத் தமது எசமானர்களாக ஏற்று, அவர்களுக்குச் சேவகம் செய்து வந்தனர். ஆனால் பின்னர், அவர்களது எண்ணிக்கை பெருகவே, அவர்கள் யூத எசமானர்களின் அதிகாரத்தைச் சிறிது சிறிதாகச் சுரண்டி எடுத்துக் கொள்ளலாயினர். இறுதியில், கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் முடிவில், மதீனாவின் கட்டுப்பாடு முழுமையாகவே அவர்களது கரங்களுக்கு மாறிற்று.

மதீனாவில், கணிசமான எண்ணிக்கையில் வாழ்ந்த யூதர்களும் கிறித்தவர்களும் தத்தம் சமயத்தால் ஒன்றிணைக்கப்பட்டிருந்தனர். அவர்கள்

தத்தமது சொந்த ஒழுக்க, சமயக் கோவைகளுக்கேற்ப அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்த வேளையில், மதீனா அறேபியர் தங்களுக்கென எத்தகைய சமய நெறியுமின்றி, ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழ்ந்தனர். அறேபியருட் சிலர் யூத, கிறித்தவ மதங்களைத் தழுவியும் அவர்களது பழைய எசமானர்களாக இருந்த யூதர்களுட் பலர் தங்களை வெற்றி கொண்ட மதீனா அறேபியருக்கு ஊழியம் செய்துகொண்டும் இருந்த போதிலும், யூதர்களும் கிறித்தவர்களும் உருவத் தொழும்பர்களான அறேபியரின் வழமைகளையும் ஆசாரங்களையும் வெறுத்துப் பகைத்து வந்தனர். அவர்களது இந்தப் பகைமை, மதீனா அறேபியர்களையும் அவர்களது சமயங்களுக்கு எதிரானவர்கள் ஆக்கிற்று. அதனால், அந்த அறேபியர் தங்களுக்கென மற்றொரு புதிய மதம் தேவை என்பதை உணர்ந்து, அந்த மதத்தின் தோற்றத்தை ஆவலோடு எதிர்பார்த்தனர். எனவே, நபி (ஸல்) அவர்களது புதிய தூதம் பற்றிய தகவல் கிடைத்தபோது, ஒருவகை தாழ்வுக் கோட்டத்திற்கு ஆட்பட்டிருந்த மதீனா அறேபியர் இஸ்லாத்தைத் தழுவிக் கொள்வதில் முந்திக் கொண்டதோடு, நபி (ஸல்) அவர்களையும் தங்களது நகரத்திற்கு அழைத்தனர்.

மதீனாவின் நில, காலநிலைச் செல்வாக்கு

மதீனா, பஹ்ரைன், (சிரியாவிலுள்ள) கின்னிஸ்ரின் ஆகிய நகரங்களுள் ஒன்றை 'ஹிஜ்ரத்'திற்குரிய இடமாக்கிக் கொள்ளுமாறு அல்லாஹ் நபியவர்களுக்கு 'வஹீ' அறிவித்திருந்தான்.(திர்மிதீ)[36] ஆயினும், நபியவர்கள் தமது ஹிஜ்ரத்திற்கு மதீனா நகரத்தையே தெரிவு செய்தார்கள். மதீனா வாசிகளை மக்காவாசிகளோடு ஒப்பிடுகையில், அவர்கள் உருவத் தொழும்பர்களாக இருந்த போதிலும், நல்ல பழக்கவழக்கங்களும் கலாசாரச் சிறப்பும் அறிவுத் தெளிவும் உடைய மக்களாக இருந்தனர். மதீனாவின் செழிப்பான மண்ணும் சுகந்தமான கால நிலையும் அதன் மக்களைப் பரிவும் அன்பும் விருந்தோம்பும் குணமும் உடையவர்களாக்கியிருந்த வேளையில், மக்காவின் மலட்டு மண்ணும் வெப்பமான காலநிலையும் அதன் குடிகளைக் கர்வம் மிகுந்தவர்களாகவும் இரக்கமற்றவர்களாகவும் மாற்றியிருந்தன. மதீனாவாசிகள், அவர்களது சமுதாயத்தின் ஒருபகுதியினராக அவர்களோடு வாழ்ந்த யூதர்களோடும் கிறித்தவர்களோடும் இடையறாத தொடர்பு வைத்திருந்தமையால், அவர்கள் ஏற்கனவே ஏகதெய்வக் கோட்பாடு,தெய்விக வெளிப்பாடுகள் முதலியவை பற்றிய கருத்துக்களோடு பரிச்சயமுற்றவர்களாக இருந்தனர். யூத, கிறித்தவ சமயக் குரவர்கள் மூலம் உலகிலே தோன்றவிருந்த நபியைப்பற்றியும் கூட அவர்கள் அறிந்திருந்தனர். முஹம்மத் (ஸல்) அவர்களால் போதிக்கப்பட்ட புதிய மார்க்கத்தைப்பற்றி அறிய வந்தபோது,

36. மிஷ்காதுல் மஸாபீஹ், பாகம் ii பக்கம் 839

அவர்கள் அது பற்றி ஆழமாகச் சிந்தித்தனர். இறுதியில், யூத, கிறித்தவ வேதங்களால் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட நபி இந்த முஹம்மதேதான் என்ற முடிவுக்கு வந்து, இஸ்லாத்தை மிகுந்த ஆர்வத்தோடு தழுவலாயினர். முஹம்மத் (ஸல்) அவர்களும் அவர்களது ஏழைச் சீடர்களும் மக்காவில் அனுபவித்து வந்த இன்னல்களைக் கண்டபோது, அவர்களது இதயங்கள் நெகிழ்ந்தன. எனவே, அவர்கள் நபியவர்களையும் அவர்களது சீடர்களையும் அவர்களுடைய துயரங்களைத் துடைக்கும் கருத்தோடு தங்கள் நகருக்கு அழைத்தனர். நபியவர்களும் தங்கள் 'ஹிஜ்ரத்'திற்குரிய இடமாக மதீனாவைத் தெரிவு செய்தார்கள்.

குறைஷ்களின் கொடுமை

நபி (ஸல்) அவர்களின் எழுச்சி விக்கிரகத் தொழும்பர்களான குறைஷ்களின் உயர்குடியாட்சிக்கு ஒரு சவாலாக அமைந்தது. அண்ணல் அவர்களின் புதிய தூதமும் அதன் போதனைகளும் இந்த உயர்குடி மக்களின் ஆதிக்கத்தையும் கீர்த்தியையும் பெருமளவுக்குச் சுருக்கி விட்டன. அவர்கள் தங்களுக்குச் சாத்தியமான வழிகளிலெல்லாம் நபியவர்களின் முன்னேற்றத்தைத் தடுக்கவும் அவர்களது தூதத்தைக் கிள்ளியெறியவும் எத்தனம் செய்தனர். தங்கள் இலட்சியத்தை அடைவதற்கு அவர்கள் முதலில் கையூட்டு அளிப்பதன் மூலமும் பின்னர் உடற்றல்களும் வதைகளும் செய்வதன் மூலமும் முயன்று, தோல்வியுற்றனர். பின்னர், அவர்கள் நபியவர்களையும் அவர்களது கிளைக் குலத்தாரையும் ஒன்றியொதுக்கித் தனிமைப்படுத்தினர். அவர்களது முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடியவே, நபியவர்களைக் கோழைத்தனமாகக் கொலைசெய்யச் சதித்திட்டம் தீட்டினர். இந்தச் சூழ்நிலையில், தம்மையும் தமது சீடர்களையும் காப்பாற்றிக் கொள்ளத் தகுந்த பாதுகாப்பிடமாகக் கருதப்பட்ட மதீனா நகரில் அடைக்கலம் தேடுவதைத் தவிர வேறு மாற்று வழி எதுவும் நபியவர்களுக்கு இருக்கவில்லை. எனவே, அவர்கள் தமது சீடர்களோடு மதீனாவுக்குப் புலம்பெயர்ந்து சென்றார்கள்.

முஸ்அபின் பிரசாரம்

நபியவர்கள் மதீனாவுக்குப் புலம்பெயர்ந்து செல்வதற்கு முன்பே, இஸ்லாம் ஊடுருவிப் பரவுவதற்கு நல்ல வசதியான களமொன்று அங்கே உருவாக்கப்பட்டிருந்தது. நபித்துவத்தின் பதினோராம் ஆண்டில் நிகழ்ந்த முதலாவது அகபாச் சூளில் பங்குகொண்ட பன்னிரு மதீனாவாசிகளோடு நபியவர்களால் பிரசாரப் பணிக்காக அங்கு அனுப்பிவைக்கப்பட்ட முஸ்அப் பின் உமைர் நூற்றுக்கணக்கான மதீனாவாசிகளை முஸ்லிம்களாக்கி, நபியவர்களின் ஆர்வமுள்ள சீடர்களாக மாற்றியிருந்தார். தனது உறுப்பினர்களுட் சிலரையேனும் இஸ்லாமிய அணிக்கு அளிக்காத ஒரு குடும்பம் கூட அங்கு இருக்கவில்லை என்று கூறுமளவுக்கு ஓராண்டுக்குள் மதீனாவின்

நிலையை அவர் மாற்றியிருந்தார். அங்கே ஒவ்வொரு நாளும் முஸ்லிம்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே இருந்தது. மக்கா நகர முஸ்லிம்கள் அனுபவித்து வந்த இன்னல்கள் பற்றிய செய்தி மதீனா நகர முஸ்லிம்களின் உள்ளுணர்வுகளைத் தொட்டு, தங்கள் சகோதரர்களை விடுவிக்கும் முயற்சியில் அவர்களை இறக்கிவிட்டது. எனவே, அவர்கள் நபித்துவத்தின் பன்னிரண்டாம் ஆண்டில் நபியவர்களை அல் அகபா மலைக் கணவாயில் சந்தித்த போது, தங்கள் நகருக்கு வந்து, தங்களோடு வாழுமாறு அவர்களை அன்போடு அழைத்தனர்.

அல்லாஹ்வின் ஆணை

எல்லாவற்றிற்கும் மேலாக, அல்லாஹ்வின் ஆணை அண்ணல் அவர்களின் மதீனா 'ஹிஜ்ரத்'திற்கு உடனடிக் காரணமாக அமைந்தது. அல்லாஹ் தனது மார்க்கத்தையும் தனது தூதரையும் பாதுகாப்பதற்காக மதீனாவுக்குப் புலம்பெயர்ந்து செல்லுமாறு நபி (ஸல்) அவர்களுக்கு 'வஹீ' மூலம் ஆணையிட்டான். அவ்வாறே நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது சீடர்களோடு மதீனாவுக்குப் புலம் பெயர்ந்து சென்று, அதனைத் தங்கள் வாழிடமாக்கிக் கொண்டார்கள். இது பற்றி அல்லாஹ்வே தனது அல் குர்ஆனில் *'(நபியே!) உம்மைச் சிறைப்படுத்தவோ அல்லது உம்மைக் கொலை செய்யவோ அல்லது உம்மை (ஊரை விட்டு) வெளியேற்றிவிடவோ உமக்கு விரோதமாக நிராகரிப்போர் சூழ்ச்சி செய்து கொண்டிருந்ததை நினைத்துப் பாரும். அவர்களும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தனர்; அல்லாஹ்வும் (அவர்களுக்கு எதிராகச்) சூழ்ச்சி செய்து கொண்டிருந்தான். ஆனால், சூழ்ச்சி செய்வோரிலெல்லாம் அல்லாஹ் மிக்க மேலானவன்'* (8:30) என்று கூறியிருக்கிறான்.

ஹிஜ்ரத்தின் முக்கியத்துவம்

நபி (ஸல்) அவர்களது ஹிஜ்ரத், வரலாற்றிலேயே மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும். அது இஸ்லாத்தின் வரலாற்றிலே புதிய யுகம் ஒன்றின் குறியீடாகக் கருதப்படுகிறது. உண்மையில், இந்த நிகழ்ச்சி இஸ்லாத்தின் பூர்வாங்க பலத்திற்கும் பரவலுக்கும் ஒரு படிக்கல்லாகவும் முஹம்மத் (ஸல்) அவர்களது நபித்துவப் பணியில் ஒரு திருப்புமுனையாகவும் அமைந்தது. அது இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு ஓர் உத்வேகத்தையும் முஸ்லிம்களின் ஆன்மாவுக்கு ஒரு புதிய உயிர் நிலைத்தன்மையையும் அளித்தது. அதுவரை இஸ்லாம் ஒரு கோட்பாட்டு நெறியாகவே இருந்து வந்தது. மதீனா ஹிஜ்ரத்தோடு உருவான சுதந்திரமான சூழலைத் தொடர்ந்து, அது தன்னைப் பலம் வாய்ந்த ஒரு சக்தியாக அமைத்துக் கொள்ளத் தொடங்கிற்று. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த சம்பவத்தின் பின்னர், இஸ்லாமிய இயக்கம் ஒழுங்கான ஒரு வடிவத்தைப் பெற்று, ஒரே தலைவரின் கீழ் சகோதரத்துவம், சமத்துவம், நீதி ஆகியவற்றின்

அடிப்படையில் அமையப்பெற்ற திட்டமான ஒரு சமுதாயமாக உருவானது. இப்போது அது தனது விருத்திக்குப் பொருத்தமான - உறுதியான - விரிவான - தளம் ஒன்றை மதீனாவிலே பெற்றுக்கொண்டது. அதன் வணக்கச் செயல்முறைகள் ஒருசீரமைக்கப்பட்டன. பகிரங்கமாக இஸ்லாத்தைப் பரப்பவும் அதன் பல்வேறு கடமைகளை அனுட்டிக்கவும் தேவையான செயல்முறைச் சாத்தியமான நடவடிக்கைகளை எத்தகைய அச்சமுமில்லாமல் எடுப்பதற்கும் முஸ்லிம்களால் முடிந்தது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சம்பவத்திலிருந்தே முஸ்லிம்களின் காலக் கணிப்பான ஹிஜ்ரி ஆண்டு கணக்கிடப்படுகிறது. இந்த ஆண்டுக் கணக்கை முதன் முதலில் கலீபா உமர் கி.பி. 637இல் ஆரம்பித்து வைத்தார்.

புதிய மாற்றம்

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஹிஜ்ரத் சம்பவம் நபி (ஸல்) அவர்களது வாழ்க்கையில் ஏற்பட்ட புதிய அவத்தை மாற்றத்தின் ஆரம்பத்தையே குறிப்பிடுகின்றது. இந்தச் சம்பவத்தோடு நபியவர்களது மக்கா வாழ்க்கைக் காலம் முடிவுற்று, மதீனா வாழ்க்கைக் காலம் ஆரம்பமானது; தோல்விகளும் சோதனைகளும் வேதனைகளும் உடற்றல்களும் நிறைந்த ஆண்டுகள் அஸ்தமித்து, வெற்றிகளும் மாண்பும் மகிமையும் நிறைந்த ஆண்டுகள் உதயமாகின; இந்தச் சம்பவம் ஆயாசத்தின் வாயிலை மூடி, ஆறுதலின் வாயிலைத் திறந்து விட்டது. மக்களால் வெறுக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்ட மனிதராகத் தமது தாயகத்தைத் துறந்த நபியவர்கள் ஒரு சமுதாயத்தின் உன்னத தலைவராக - மக்களால் விரும்பப்பட்ட மனிதராக - மதீனாவினுள் பிரவேசித்தார்கள். நபியவர்களின் மதீனப் பிரவேசத்தைக் கொண்டாடும் முகமாக அந்த நகர மக்கள் தங்கள் நகரத்தின் 'யத்ரிப்' என்ற பண்டையப் பெயரை 'மதீனதுன் நபி' (நபியின் நகரம்) என்று மாற்றினார்கள். நபியவர்களின் மகோன்னதமான பண்புகளாலும் புதிய மார்க்கத்தின் உண்மை, எளிமை ஆகியவற்றாலும் கவரப்பட்ட மக்கள், கூட்டம் கூட்டமாக வந்து இஸ்லாத்தைத் தழுவியதோடு, 'முஹாஜிரீன்' (குடியேறிகள்) என அழைக்கப்பட்ட தங்கள் மக்கத்துச் சகோதரர்களுக்கு தங்கள் வீடுகளிலும் நிலங்களிலும் பிற உடைமைகளிலும் பங்குகள் அளித்தனர். ஒருவருக்கு அதிகமான மனைவிகளை வைத்திருந்தோர் அவர்களுள் ஒருவரை மணவிலக்கு செய்து, அவரை மனைவியற்ற மக்கத்துச் சகோதரருக்குத் திருமணம் செய்து கொடுத்தனர். மக்கா முஹாஜிர்களுக்காக அவர்கள் செய்த தியாகங்கள், உதவிகள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவாசிகளுக்கு 'அல் அன்சார்' (உதவி செய்தோர்) என்ற பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தார்கள்.

மதீனா வெற்றி

'ஹிஜ்ரத்'தின் பின்னர், நபி (ஸல்) அவர்களது அதிகாரமும் அந்தஸ்தும் மதீனா மண்ணிலே மிக விரைவாக வளர்ச்சியடையத் தொடங்கின. அங்கே பகையோ எதிர்ப்போ இல்லாமையால், தமது தூதத்தை மதீனா மக்களிடையே சுதந்திரமாகப் பிரசாரம் செய்ய அவர்களால் முடிந்தது. அறியாமை இருளிலிருந்து புதிய நம்பிக்கை ஒன்றின் ஒளிக்கு வரவும் அறேபிய தீபகற்பத்தில் தமது சொந்தச் செல்வாக்கையும் மேலாதிக்கத்தையும் நிறுவவும் மிக நீண்டகாலமாக வேணவாக் கொண்டிருந்த மதீன அறேபியர் நபியவர்களையும் அவர்களது போதனைகளையும் பெரிதும் மதித்தனர். மக்காவிலே வெறும் மத போதகராக இருந்து, தமது மக்கா நகர வாழ்க்கையிலே தொடரான தோல்விகளையும் ஏமாற்றங்களையும் சந்தித்த நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் முதலில் மதீனாவை மட்டும் உள்ளடக்கியதாக இருந்து, பின்னர் அறேபியப் பேரரசாக வளர்ச்சியடைந்த நகர அரசு ஒன்றின் ஆட்சியாளரானார்கள். மனித வரலாற்றிலே அவர்கள் இணையற்ற ஓர் இடத்தைப் பிடித்துக் கொள்வதற்கான வித்து மதீனாவின் மண்ணிலே விதைக்கப்பட்டது. அங்கே அவர்கள் இஸ்லாத்தின் கோட்பாடுகளையும் செயல் முறைகளையும் மக்களுக்குப் போதித்தார்கள்; வர்க்க வேறுபாடுகளையும் குருதிப் பகைகளையும் மதீன அறேபியரின் இயல்போடு ஒட்டிப்போயிருந்த பிற தீமைகளையும் நீக்கி, இஸ்லாத்தின் கொடியின் கீழ் அவர்களை ஒற்றுமைப்படுத்தினார்கள். நபியவர்களது விடாமுயற்சியின் விளைவாக, தங்கள் பலத்தையும் அற ஒழுக்கத்தையும் இழந்திருந்த மதீனாவாசிகள் ஆன்மிக விருத்திபெற்ற ஒரு சமுதாயத்தினராக மாறினார்கள். இவ்வாறு, பிற்காலத்திலே முழு உலகினதும் சமுதாய அமைப்பையே மாற்றி விட்ட மாபெரும் சீர்திருத்தப் புரட்சி ஒன்று நபி (ஸல்) அவர்களது தலைமையிலே மதீனாவில் உருவானது.

சுதந்திரமான பிரசாரம்

நபி (ஸல்) அவர்கள் மதீனாவிலே தமது நிலைமையை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர், அவர்கள் அங்கே இஸ்லாமியப் பொதுநலவாய அரசாங்கம் ஒன்றை நிறுவினார்கள். முதலில், அவர்கள் அங்கே மக்காவின் முஹாஜிர்களுக்கும் மதீனாவின் அன்சார்களுக்குமிடையே, அவர்களைப் பொருளா தாரரீதியாகவும் சமூகரீதியாகவும் ஒரே மக்களாகவும் ஒரே தேசியத்தை உடையவர்களாயும் ஒன்றுபடவைக்கும் பொருட்டு, சகோதரத்துவப் பிணைப்பை ஏற்படுத்தினார்கள். பொதுநலவாயத்தின் அத்திவாரமாக இருந்த இந்தச் சகோதரத்துவம் அன்ஸார்களுக்கும் முஹாஜிர்களுக்குமிடையிலான உறவைப்

இஸ்லாமியப் பொதுநலவாயம்

பலப்படுத்த உதவியதோடு, அவர்களை ஒருவருக்கு மற்றவர் மிக நெருங்கியவராகவும் ஆக்கிற்று. இந்தச் சகோதரத்துவத் தளையின் கீழ், ஆதரவற்றவராக இருந்த ஒவ்வொரு முஹாஜிரும் மதீனாவாசி ஒருவரின் ஆத்மிகச் சகோதரராகப் பிரகடனம் செய்யப்பட்டார். இந்தப் பிணைப்பு நிறுவப்பட்டபோது, ஒவ்வொரு அன்ஸார் முஸ்லிமும் தமது உடைமைகளிற் பாதியைத் தம் பொருள்கள் அனைத்தையும் துறந்து வெறும் கையோடு மதீனாவுக்கு வந்த முஹாஜிர் சகோதரருக்கு அளித்தார். இவ்வாறு, முஹாஜிர்களும் அன்ஸார்களும் முழுமையான சமத்துவத்தின் உறுதியான ஆதாரத்தின்மீது ஒன்றுபடுத்தப் பட்டனர். நீதி, நேர்மை, சட்டம், ஒழுக்கம், கட்டுப்பாடு என்பன மதீனாவில் நிறுவப்பட்ட இஸ்லாமியப் பொதுநலவாயத்தின் பிரதான மூலகங்களாக இருந்தன. பிற்காலத்தில், இந்தச் சிறிய நகரப்பொதுநலவாயமே முழு முஸ்லிம் உலகையும் நிருவாகம் செய்யும் பேரரசாக விருத்தி பெற்றது.

இந்தப் பொதுநலவாயம் ஆரம்பிக்கப்பட்டபோது, அண்ணல் (ஸல்) அவர்கள் பட்டயம் ஒன்றைத் தயாரித்து வெளியிட்டார்கள். இந்தப் பட்டயத்தின் மூலம் எல்லாவிதமான வர்க்கப் பகைகளும் ஒழிக்கப்பட்டன; சட்டமறுநிலை அடக்கப்பட்டது; குடிமையின் சம உரிமைகள் அனைவர்க்கும் அளிக்கப்பட்டன. இந்த அரசியல் அமைப்பில் மதீனாவிலும் அதன் சூழலிலும் கணிசமான அளவில் வாழ்ந்த யூதர்கள், கிறித்தவர்கள் ஆகியோரும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட சமமான குடியியல் உரிமைகள் அவர்களுக்கும் அளிக்கப்பட்டன. ஆனால், அவர்களுக்கு அளிக்கப்பட்ட சம உரிமைகளுக்குப் பதிலாக வெளியாரின் தலையீட்டிலிருந்து தங்கள் நகரைப் பாதுகாப்பதில் முஸ்லிம்களுக்கு உதவும் கடப்பாடு அவர்கள் மீது சுமத்தப்பட்டது. இந்தப் பட்டயத்தின் மூலம், மதீனாவில் வாழ்ந்த யூதர்களும் கிறித்தவர்களும் பட்டயத்தின் நிபந்தனைகளுக்கு விசுவாசமாக இருந்த காலம்வரை, அவர்களும் இஸ்லாமிய பொதுநல வாயத்தின் குடிகளாகவே கருதப்பட்டனர்.

நபியவர்களின் பட்டயம்

இந்தப் பட்டயத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். இருபத்து மூன்று கூறுகளைக் கொண்ட முதலாம் பகுதி முஸ்லிம்களைப் பற்றிய விடயங்கள் சம்பந்தமானது; பத்தொன்பது கூறுகளைக் கொண்ட இரண்டாவது பகுதி முஸ்லிமல்லாதோரின் - குறிப்பாக யூதர், கிறித்தவர் ஆகியோரின்- கடமைகளையும் உரிமைகளையும் பற்றி விளக்குவது. இந்தப் பட்டயத்தின் சுருக்கம் வருமாறு:

'அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்; அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் நபியவர்களால் முஸ்லிம்

களுக்கும் முஸ்லிம்களோடு இணைந்து வாழ விரும்பும் ஏனையவர்களுக்கும் வழங்கப்பட்ட பட்டயம் இது.

1. *இந்தப் பட்டயத்தின் மூலம் முஸ்லிம்களும் மதீனாவில் வாழும் யூதர்களும் ஏனைய மக்களும் ஒரே தேசத்தவராகக் கருதப்படுவர்.*
2. *ஒவ்வொருவரும் தத்தம் மதத்தின் படி ஒழுகிவர முழுச்சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளனர்.*
3. *யூதர்களும் முஸ்லிம்களும் நட்புறவோடு வாழ்ந்து வருவர். யூதர்களோடோ முஸ்லிம்களோடோ வெளியார் போர் தொடுக்க முனைந்தால், அவர்களை விரட்டுவதில் ஒருவருக்கு மற்றவர் உதவிக் கொள்வர்.*
4. *எதிரிகளிடமிருந்து மதீனாவைப் பாதுகாப்பதில் யூதர்கள் முஸ்லிம்களோடு இணைந்து கொள்வர்.*
5. *எதிரிகளோடு போர் செய்வதாயினும் சரி, சமாதான உடன்படிக்கை செய்வதாயினும் சரி, இந்தப் பட்டயத்தை ஏற்றுக்கொள்ளும் மக்கள் ஒன்று கூடிக் கலந்தாலோசித்த பின்னரே அவ்வாறு செய்ய வேண்டும். ஆத்மிகப் போர் இதற்கு விதிவிலக்கு.*
6. *இந்தப் பட்டயத்தை ஏற்றுக் கொள்ளும் யூதரின் உரிமைகளைப் பாதுகாப்பதும் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதும் முஸ்லிம்களின் கடமையாக இருக்கும். அத்தோடு, யூதர்களின் நேசர்களாக இருப்போரின் உரிமைகளையும் முஸ்லிம்கள் பாதுகாப்பர்.*
7. *எவரும் எந்தக் காரியத்திற்காகவேனும் மக்கா நகர குறைஷ் இறைமறுப்பாளர்களுக்கு உதவி செய்யமாட்டார்.*
8. *குற்றம் செய்வோர் யாராக இருந்தபோதிலும், அவருக்குத் தண்டனை அளிக்கப்படும். குற்றம் செய்தவன் மிக நெருங்கிய உறவினனாக இருப்பினும், அவனை எவரும் காப்பாற்றவோ ஆதரிக்கவோ முயலமாட்டார்.*
9. *மதீனா நகரம் புனிதப் பிரதேசமாக இருந்து வரும்.*
10. *இந்தப் பட்டயத்தின் மூலம், முன்பிருந்த விரோதங்கள் யாவும்*

நீக்கப்பட்டு விட்டன. இந்தப் பட்டயம் தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்கு நபியவர்களது தீர்ப்பே முடிவானதாகும்.

பட்டயத்தின் முக்கியத்துவம்

மதீனாவுக்கு வந்த சில மாதங்களின் பின்னர், நபியவர்களால் வரைந்து அளிக்கப்பட்ட இந்தப் பட்டயம் அறேபியரிடையே - குறிப்பாக மதீனாவாசிகளிடையே - நிலை பெற்றிருந்த வர்க்க ஆட்சியறவுக்கு முற்றுப்புள்ளி வைத்தது; மதீனாவில் இஸ்லாமிய அரசு ஒன்றுக்கு அத்திவாரமிட்டது; முஸ்லிம்களைப் போலவே யூதர்களுக்கும் நம்பிக்கைச் சுதந்திரத்தையும் சிந்தனைச் சுதந்திரத்தையும் யாப்புறுதி செய்தது. இந்தப் பட்டயத்தின் மூலம் நிற, சமய வேறுபாடின்றிப் பாதுகாப்பு, சமாதானம், சுதந்திரம் ஆகியன எல்லா மக்களுக்கும் உறுதிப்படுத் தப்பட்டன; எல்லாவகையான குற்றங்களும் சட்டவிரோதமானவையாகவும் தண்டனைக்குரியவையாகவும் பிரகடனம் செய்யப்பட்டன; மதீனா நகரம் புனித பூமியாக்கப்பட்டது; நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மதீனாவின் இஸ்லாமியப் பொதுநலவாயத்தின் சமூக - அரசியல் தலைவராகப் பிரகடனப்படுத்தப்பட்டார்கள். பட்டய விதிகளின் படி நீதிமுறை, சட்டவாக்கம், படைபாலனம், நிறைவேற்றம் ஆகிய அதிகாரங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் பிரதிநிதியான நபியவர்கள் மீதே நிலையூன்றப்பட்டன. நபியவர்கள் முஸ்லிம்களால் மட்டுமன்றி, முஸ்லிமல்லாதோராலும் விவகாரங்களின் கட்டுப்பாட்டாளராக மதிக்கப்பட்டார்கள். இவ்வாறு, மத போதகராக இருந்த நபி (ஸல்) அவர்கள் பெரிய சமுதாயம் ஒன்றின் தலைவராகவும் ஆட்சியாளராகவும் மாறினார்கள். இந்தப் பட்டயத்தின் மூலம், 'வலிமையே சரியானது' என்ற சட்டத்தைத் தவிர வேறு எந்தச் சட்டமும் அறியாதிருந்த மக்களுக்கு அவர்கள் கட்டுக்கோப்பான அரசியல் யாப்பு ஒன்றை ஆக்கி அளித்தார்கள்; மதீனாவின் முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லா தோருக்குமிடையே நெருங்கிய நட்புறவை ஏற்படுத்தி, சமாதானத்தில் ஒன்றுபட்டு வாழவும் வெளிநாட்டுப் படையெடுப்பாளர்களிடமிருந்து தங்கள் நகரத்தைப் பாதுகாக்கவும் அவர்களைத் தயார் படுத்தினார்கள். இந்தப் பட்டயம் இஸ்லாத்தின் முதலாவது அரசியற் சாசனமாகவும் மனித இன வரலாற்றிலே முதன்முதலாக எழுதப்பட்ட யாப்பாகவும் கருதப்படுகிறது.

மஸ்ஜிதுன் நபவீ

நபி (ஸல்) அவர்கள் மதீனாவினுள் பிரவேசித்ததும், அவர்கள் மேற்கொண்ட முதற் பணி தொழுகைக்காகப் பள்ளிவாயில் ஒன்றை நிறுவியமையாகும். இதற்காக நஜ்ஜார் குலத்தைச் சேர்ந்த அநாதைச் சிறுவர் இருவருக்குச் சொந்தமான நிலத்துண்டு ஒன்று அபூ அய்யூப் அல் அன்ஸாரீ என்னும் நபித்தோழர் அளித்த நிதியுதவியினால் வாங்கப்பட்டது. 'மஸ்ஜிதுன் நபவீ

(நபியின் பள்ளிவாயில்) என அழைக்கப்படும் இந்தப் பள்ளிவாயில் அந்தக் காணியிலேயே சில வாரங்களில் கட்டிமுடிக்கப்பட்டது. இதன் அமைப்பு வேலைகளில் நபி (ஸல்) அவர்களும் தமது தோழர்களோடு சேர்ந்து ஒரு தொழிலாளியைப் போல வேலை செய்தார்கள். இந்தப் பள்ளிவாயில், கற்களால் கட்டப்பட்ட ஒரு கட்டடமாகவோ சிற்பக்கலை வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்ட ஒரு மாளிகையாகவோ இருக்கவில்லை. பரும்படியான கல்லாலும் சுடப்படாத செங்கற்களாலும் கட்டப்பட்ட ஒரு சாதாரணமான எளிய கட்டடமாகவே இருந்தது. ஈச்ச மரக்குற்றிகளாலான தூண்கள் மீது பொருத்தப்பட்டிருந்த இதன் கூரை ஈச்சமர ஓலைகளால் மூடப்பட்டிருந்தது. இதன் தரை ஆரம்பத்தில் தளம் பாவப்படாததாகவே இருந்தது. பின்னரே பொடிக்கற்களால் தளம் பாவப்பட்டது. இப்பள்ளிவாயிலின் 'கிப்லா' ஜெருசலத்திலுள்ள 'மஸ்ஜிதுல் அக்ஸா' பள்ளிவாயிலை நோக்கியதாக இருந்தது. இது முஸ்லிம் உலகில், இஸ்லாத்தின் தோற்றத்திற்குப் பின்னர் கட்டப்பட்ட இரண்டாவது பள்ளிவாயில் ஆயினும், இதன் முக்கியத்துவத்தைப் பொறுத்தவரை இஸ்லாமிய வரலாற்றில் இதுவே முதலாவது பள்ளிவாயிலாகும்.[37] இப்பள்ளிவாயில் வழிபாட்டு ஆலயமாக மட்டுமன்றிக் கல்விக்கூடமாகவும், நீதிமன்றமாகவும் தூதுக்குழுக்களை வரவேற்கும் மண்டபமாகவும் அரசியல் நடவடிக்கைகளின் மத்திய தலமாகவும் சமூக நிலையமாகவும் பொதுத் திறைசேரியாகவும் இருந்து வந்தது. இஸ்லாமிய இயக்கத்தின் தலைமையகமாக இருந்த இப்பள்ளிவாயிலிலிருந்தேதான் புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட வர்க்கங்களுக்கு இஸ்லாத்தின் கோட்பாடுகளையும் செயல்முறைகளையும் போதிப்பதற்காக ஆசிரியர்களும் சமய ஊழியர்களும் அனுப்பிவைக்கப்பட்டனர். பிற்காலத்தில் தோன்றிய உலகளாவிய இஸ்லாமிய பேரரசின் அடித்தளம் இந்தப் பள்ளிவாயிலிலேயே போடப்பட்டது. சுருங்கச் சொன்னால், இப்பள்ளிவாயிலே நபியவர்களது இருப்பிடமாகவும் முழுச் சமூகத்தினதும் பொதுச் சந்திப்பிடமாகவும் விளங்கியது.

பின்னர், நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ரி இரண்டாம் ஆண்டில், முஸ்லிம்களைக் கூட்டுத் தொழுகைக்கு அழைப்பதற்காக 'அதான்' கூறும் முறையை அறிமுகப்படுத்தினார்கள். அதுவரை முஸ்லிம்களைத் தொழுகைக்கு அழைப்பதெற்கென எத்தகைய அழைப்பு முறையும் இல்லாமையால், கூட்டுத் தொழுகை ஒழுங்காக நடைபெறவில்லை. மக்கள் தாமே தொழுகை நேரத்தை அறிந்து, பள்ளிவாயிலுக்கு வந்து, தனித்தனியாக தொழுகையை

37. இஸ்லாம் தோன்றிய பின்னர் கட்டப்பட்ட முதலாவது பள்ளிவாயில் குபாஃ பள்ளிவாயில் ஆகும். அது மதீனாவின் தென் கிழக்கே சுமார் ஆறு மைல் தூரத்திலுள்ள குபாஃ என்ற இடத்தில் அமைக்கப்பட்டது. மதீனாவுக்கு 'ஹிஜ்ரத்' மேற்கொண்டபோது நபியவர்கள் இங்கே இரண்டு வார காலம் தங்கியிருந்தார்கள். இக்காலத்தின் போதுதான் இப்பள்ளிவாயில் கட்டப்பட்டது. இது மஸ்ஜிதுத் தக்வா (பயபக்திப் பள்ளிவாயில்) என்றும் அழைக்கப்படுகிறது.

நிறைவேற்றிவிட்டுச் சென்றனர். நபியவர்கள் மதீனாவில் குடியேறிய பின்னர், அவர்கள் முஸ்லிம்களைத் தொழுகைக்கு அழைக்கும் விவகாரம் குறித்து அதிகமாகக் கவலையுற்றார்கள். அழைப்பு முறை ஒன்றின் அவசரத்தேவையை உணர்ந்த அவர்கள் இது பற்றித் தமது தோழர்களோடு ஆலோசனை நடத்தினார்கள். சிலர் குழல் ஊதலாம் என்று ஆலோசனை கூறினர்; வேறு சிலர் மணி அடிக்கலாம் என்றனர். ஆனால், இவை முறையே யூதர்களினதும் கிறித்தவர்களினதும் ஆசாரங்களாக இருந்தமையால், நபியவர்கள் இவற்றை நிராகரித்து விட்டனர். இறுதியில் அப்துல்லாஹ் பின் ஸைத், உமர் ஆகியோரின் ஆலோசனைமீது 'அதான்' கூறும் முறை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. ஆரம்பகால முஸ்லிம்களுள் ஒருவரான பிலால் முதலாவது 'முஅத்தின்'ாக நபியவர்களால் நியமிக்கப்பட்டார். 'அதான்' கூறும் முறை புகுத்தப்பட்டதைத் தொடர்ந்து, முஸ்லிம்கள் தமது ஐங்காலத் தொழுகையைப் பள்ளிவாயில்களில் கூட்டாக நிறைவேற்றி வரலாயினர்.

'அதான்' அறிமுகம்

ஹிஜ்ரி இரண்டில், இதே காலப்பகுதியிலேயே அல்லாஹ்வின் ஆணைக்கேற்ப 'கிப்லா' திசை மாற்றப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்தபோது புனித, 'க.'.பா'வின் திசையில் நின்றே தமது தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள்.[38] ஆனால், அவர்கள் மதீனாவில் குடியேறிய பின்னர், அங்கு வாழ்ந்த யூதர்களைத் திருப்தி செய்வதற்காக நபி ஸுலைமான் (அலை) அவர்களால் ஜெருசலத்தில் நிறுவப்பட்ட 'பைத்துல் முகத்தஸ்' பள்ளிவாயிலின் திசைக்கு 'கிப்லா'வை மாற்றுமாறு அல்லாஹ்வால் ஆணையிடப்பட்டார்கள். பைத்துல் முகத்தஸ் இஸ்ரவேலர்களின் நபிமார்களினதும் அவர்களைப் பின்பற்றியோரினதும் 'கிப்லா'வாக இருந்தது. எனவே, நபியவர்களும் அவர்களது சீடர்களும் ஜெருசலத்தின் திசையை நோக்கி நின்று, தங்கள் தொழுகைகளை நிறைவேற்றி வந்தனர். ஆனால், யூதர்கள் தமது மதத்தையே நபி முஹம்மத் பின்பற்றிவருகிறார் என்றும் அதனாலேயே அவர் ஜெருசலம் நகரைத் தமது 'கிப்லா'வாகத் தெரிவு செய்திருக்கிறார் என்றும் கருதி, அவர் தங்களது உதவியையும் வழிகாட்டலையும் எதிர்பார்த்து நிற்கிறார் என்று கற்பனை செய்யலாயினர். எனவே, நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்து பதினாறு அல்லது பதினேழு மாதங்களின் பின்னர், ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு ரஜப் அல்லது ஷ.'.பான் மாதத்தில், 'கிப்லா'திசை மீண்டும் ஒரு முறை - ஆனால் நிரந்தரமாக - 'பைத்துல் முகத்த'ஸிலிருந்து மக்காவிலுள்ள புராதன ஆலயமான

கிப்லா மாற்றம்

38. ஆரம்பத்தில் நபியவர்கள் 'கஃபா'வின் திசை நோக்கி நின்றே தொழுது வந்தார்கள் என்றும் பின்னர், தமது வணக்கத்தின் போது அதே 'கஃபா'வின் திசையில் முகங்களைத் திருப்பி வந்த இறைமறுப்பாளர்களிலிருந்து தம்மை வேறுபடுத்திக் கொள்வதற்காக அவர்கள் ஜெருசலத்தை நோக்கியவாறுள்ள 'மகாம் இப்றாஹீம்'என்னும் இடத்தின் திசையை நோக்கி நின்று தமது தொழுகைகளை நிறைவேற்றி வந்தார்கள் என்றும் சிலர் கூறுகின்றனர்.

'க.'.பா'வுக்கு மாற்றப்படவேண்டும் என்று அண்ணல் அவர்கள் அல்லாஹ்வால் ஆணையிடப்பட்டார்கள். இந்த மாற்றம், நபி முஹம்மத் (ஸல்) அவர்களது தோற்றத்தோடு பனூ இஸ்ராஈல் நபிமார்களது யுகம் முடிந்து விட்டது என்பதன் தெளிவான அத்தாட்சியாகவே அமைந்தது.

நோன்பும் ஷகாத்தும்

அதே ஆண்டு ஷ.'.பான் மாதத்தில், ரம்ழான் மாதத்தில் நோன்பு நோற்றல் முஸ்லிம்கள்மீது அல்லாஹ்வால் கடமையாக்கப்பட்டது. முஸ்லிம்களுக்கு முன்பு வாழ்ந்த சமுதாயங்களைச் சேர்ந்த மக்கள்மீதும் நோன்பு நோற்றல் விதியாக்கப்பட்டிருந்தது. அதே ஆண்டில் சுதந்திரமும் புத்தித் தெளிவும் வசதியும் கொண்ட முஸ்லிம்கள்மீது 'ஷகாத்' என்ற ஏழைகளுக்குரிய கொடுப்பனவை அளித்தலும் கடமையாக்கப்பட்டது. 'ஈதுல் பித்ர்', ஈதுல் அழ்ஹா' ஆகியவை முறையே மகிழ்ச்சியையும் தியாகத்தையும் குறிக்கும் கொண்டாட்ட தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டன. இந்த மாற்றங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் ஆணைகளைக் கொண்டே செய்யப்பட்டன.

மதீனா வெற்றியின் காரணங்கள்

இவ்வாறு, மக்காவிலே தமது சொந்த மக்களான குறைஷ்களால் நிராகரிக்கப்பட்டுக் கைவிடப்பட்ட முஹம்மத் (ஸல்) அவர்கள் மதீனாவிலே மிகக் குறுகிய காலத்தில் சமூக - அரசியல் தலைவராகவும் ஆட்சியாளராகவும் மாறினார்கள். தமது சொந்தத் தாயகத்தில் பதின்மூன்று ஆண்டுகளாகத் தாம் கொண்டுவந்த தூதைப் பரப்ப முயன்று தோல்வியுற்ற நபியவர்கள் மதீனாவிலே ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவராகவும் வீர நாயகராகவும் மாறினார்கள். மதீனாவிலே அவர்கள் பெற்றிருந்த அந்தஸ்து மக்காவில் அவர்களுக்கு இருந்த அந்தஸ்தை விடவும் முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. மக்கா வாழ்க்கையின் போது, தாம் சந்தித்த ஒவ்வொரு மனிதராலும் நிந்திக்கப்பட்டு, ஜீவ மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த ஒரு போதகர் என்ற அந்தஸ்திலிருந்து விடுபட்டு, அவர்கள் பெரிய நகரம் ஒன்றை முழு அதிகாரத்தோடு ஆளும் ஆட்சியாளரானார்கள். மதீனாவிலே, அவர்கள் முழு அறேபியாவும் முன்னொரு போதும் கண்டிராத மாபெரும் சீர்திருத்தப் புரட்சி ஒன்றை அல்லாஹ்வின் உதவியோடு உருவாக்கி, அல் குர்ஆனின் மகோன்னதமான தூய கருத்துக்களின் அடிப்படையிலே மதீனா அறேபியரின் சமய, சமூக, கலாசார, அரசியல் வாழ்க்கையை மாற்றி அமைத்தார்கள். உண்மையில், இது மனித இன வரலாற்றில் முன்னொரு போதும் ஏற்பட்டிராத ஒரு மாபெரும் வெற்றி ஆகும். நபியவர்களுக்கு மதீனாவில் கிடைத்த இந்த வெற்றிக்குச் சில முக்கிய காரணங்கள் இருந்தன.

மக்காவில் இருந்தது போல மதீனாவில், உருவ வணக்கத்தில்

சிறப்புரிமையுள்ள வகுப்பாரின்மை

நிலையுன்றிய பற்றுக்களுள்ள உயர்குடிக் குருத்துவ வகுப்பாரோ சிறப்புரிமையுள்ள மக்களோ இருக்கவில்லை. மதீனாவாசிகள் இத்தகைய பகட்டிலிருந்து முற்றாக விடுபட்டவர்களாக இருந்தனர். அதனால், தமது தூதத்தை அங்கே எத்தகைய எதிர்ப்புமில்லாமல் பிரசாரம் செய்வதற்கு நபி (ஸல்) அவர்களால் முடிந்தது. மக்கா குறைஷ்கள், உருவ வழிபாட்டின் மீது அவர்கள் காட்டிய விசுவாசத்தின் காரணமாக நபியவர்களையும் அவர்கள் கொண்டுவந்த சன்மார்க்கத்தையும் எதிர்க்கவில்லை. ஆனால், நபியவர்களது பிரசாரம் அவர்களது பொருளாதார, சமூக, அரசியல் நலன்கள் மீது ஏற்படுத்தவிருந்த - குறிப்பாக நபியவர்கள் போதித்த ஏகத்துவக் கோட்பாடு அவர்களது பொருளாதார சொத்துக்களான ஆலயங்கள் மீது ஏற்படுத்தவிருந்த - விளைவுகளைப் பயந்தமை காரணமாகவே எதிர்த்து வந்தார்கள். மேலும், அவர்கள் பகுத்தறிவுக்கேற்ற மதமான இஸ்லாத்தைத் தாங்கள் ஏற்றுக்கொண்டால், அது தங்களது சில்லோராட்சிச் சமுதாயத்தில் எதிர்க்க முடியாத புதிய அரசியல் அதிகார முறை ஒன்றை அறிமுகம் செய்து விடும் என்பதை நபியவர்களுக்கு முன்பே உணர்ந்திருந்தார்கள். வேறுவிதமாகச் சொன்னால், நபியவர்கள் மீதும் அவர்களது தூதத்தின் மீதும் மக்கா குறைஷ்கள் காட்டி வந்த எதிர்ப்பு பிரதானமாகப் பொருளாதார, அரசியல் காரணங்களையே அடிப்படையாகக் கொண்டிருந்தது எனலாம். மதீனாவாசிகளைப் பொறுத்தவரை, அவர்களுக்கு இத்தகைய நிலையுன்றிய பற்றுக்களோ தாழ்ந்த நோக்கமோ இருக்கவில்லை. எனவே, தயக்கமின்றிச் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளவும் தங்களது சமய, சமூக, அரசியல் தகுதிகளை உயர்த்தவல்ல தலைவர் ஒருவரின்கீழ் ஒன்றுபடவும் அவர்களால் முடிந்தது.

மதீனாவாசிகளின் தெளிந்த நோக்கு

கஹ்தானின் வழிவந்தவர்களும் யமனைத் தாயகமாகக் கொண்டவர்களுமான மதீன்வில் வாழ்ந்த அவ்ஸ், கஷ்ரஜ் ஆகிய இரு வர்க்கங்களையும் சேர்ந்த மக்கள் அறிவு ரீதியில் மக்காவாசிகளை விடவும் மேம்பட்டவர்களாகவும் வளர்ச்சியடைந்தவர் களாகவும் இருந்தனர். அவர்களது மனோபாவம் மக்காவாசிகளின் மனோபாவத்தை விடவும் சிறந்த பண்பாடுடையதாய் இருந்தது. மேலும் அவர்கள் வேதத்தையுடைய சமயம் ஒன்றைத் தழுவி வாழ்ந்த யூதர்களோடும் கிறித்தவர்களோடும் மிக நெருங்கிய தொடர்பு வைத்திருந்தமையால், அவர்கள் மக்காவாசிகளை விடவும் அதிக தெளிவும் சிறந்த விளக்கமும் உடையவர் களாக இருந்தனர். யூதர்களோடும் கிறித்தவர்களோடும் அவர்களுக்கு இருந்து வந்த நெருங்கிய தொடர்பின் விளைவாக, இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்பே அவர்கள் ஏகத்துவம்,

வேதவெளிப்பாடு முதலியவைபற்றிய கருத்துக்களோடு பரிச்சயமுள்ளவர்களாக இருந்தனர். எனவே, அவர்களது இதயங்களையும் நிலத்தையும் எத்தகைய போராட்டமும் இன்றி வெற்றி கொள்ள நபியவர்களால் முடிந்தது.

நடுவர் ஒருவரின் தேவை

அவ்ஸ் வர்க்கத்தாரும் கஷ்ரஜ் வர்க்கத்தாரும் நீண்டகாலமாகச் செய்து வந்த போர்கள் மூலம் உருவாகியிருந்த நிலையான குடியியல் பிணக்கால் மதீனா நகர மக்கள் களைப்படைந்து, பலவீனமுற்றிருந்தனர். பயத்திலும் உறுதியின்மையிலும் வாழ்ந்த அவர்கள் தங்கள் நகரத்தில் அமைதியும் ஒழுங்கும் ஏற்படவேண்டும் என்று பேராவல் கொண்டனர். போரில் ஈடுபட்டிருந்த அவ்ஸ், கஷ்ரஜ் வர்க்கங்களைச் சேர்ந்த மக்களும் தங்கள் பிணக்குகளைத் தகுதியான ஒருவர் மூலம் தீர்த்துக் கொள்ளவும் அமைதியான வாழ்க்கை வாழவும் ஆவலுற்றிருந்தனர். அவர்கள் முதன் முறையாக நபி முஹம்மத் (ஸல்) அவர்களை மக்காவில், அல் அகபா கணவாயில் சந்தித்த போது, தங்கள் நீண்டகாலப் பிணக்குகளை நேர்மையாகத் தீர்த்து வைப்பதில் இருபக்கத்தாரும் நம்பிக்கை வைக்கவல்ல விழுமிய பண்புகளைக் கொண்ட மனிதப் புனிதர் ஒருவரை அவர்கள் அண்ணல் அவர்களிலே கண்டனர். இஸ்லாத்தையும் அதன் ஒழுக்க வாழ்வையும் ஏற்றுக் கொள்வதன் மூலம், தங்கள் நகர மக்களைப் பற்றியுள்ள பிணிகளுக்குப் பரிகாரம் தேடமுடியும் என்றும் அவர்கள் நம்பினர். எனவே, அவர்கள் நபி (ஸல்) அவர்களைத் தமது நடுவராக மட்டுமன்றித் தங்கள் வழிகாட்டியாகவும் இஸ்லாத்தைத் தங்கள் மார்க்க மாகவும் ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்து, புதிதாகச் சுவீகரித்துக் கொண்ட மதத்தின் பொருட்டு நபியவர்களிடம் தங்கள் வாழ்வையும் தங்கள் மண்ணை யும் ஒப்படைத்தார்கள்.

மேலாதிக்க விருப்பம்

மதீனா நகர மக்கள் மக்கா குறைஷ்களின் ஏற்றத்தின் மீது பொறாமையுற்றிருந்தனர். க.ஃபாவின் மூலம் முழு அறேபியத் தீபகற்பத்திலும் சமய ஆதிக்கம் ஒன்றை நிறுவியிருந்த மக்காவின் உயர்குடி வர்க்கத்தினரான குறைஷ்களின் சமயத் தலைமையை அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. முழுத் தீபகற்பத்தையும் தழுவிய குறைஷ்களின் இந்தச் சமயத்தலைமை மதீனா வாசிகளுக்குப் பொறாமையை அளித்தது. அதனால், அவர்கள் மக்காவின் ஆதிக்கத்தை வீழ்த்தி விட்டு, அறபு நாடெங்கும் தங்களது சொந்தச் செல்வாக்கையும் மேலாதிக்கத்தையும் நிறுவத் தீர்மானித்தனர். நபி முஹம்மத் (ஸல்) அவர்களைத் தங்கள் தலைவராகவும் வழிகாட்டியாகவும் ஏற்றுக் கொண்டால், தங்கள் இலட்சியத்தை இலகுவாக அடையப்பெறலாம் என்று அவர்கள் எண்ணி, தமது இதயங்களையும் பதியையும் அண்ணல் அவர்களுக்கு அளிக்க முடிவு செய்தனர். எனவே,

நபியவர்கள் ஆட்சித்தலைவராக மதீனாவினுள் பிரவேசித்து, தமது நபித்துவப் பணியில் வெற்றிபெற்றார்கள்.

இத்தகைய காரணங்களால் நபியவர்களின் போதனைகளுக்கும் சாதனைகளுக்கும் சாதகமான சூழ்நிலை ஒன்று மதீனாவிலே உருவானது. அதனால், மனித இனத்தின் வழிகாட்டலுக்காகப் பொதுத் தூது ஒன்றுடன் அல்லாஹ்வால் அனுப்பிவைக்கப்பட்ட நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் அங்கே தமது உயர்ந்த கருத்துக்களைப் போதிக்கவும் தமது தூதத்தின் இறுதி இலக்கை அடையவும் முடிந்தது. அண்ணல் அவர்கள் மதீனாவில் அடைந்த வெற்றியே அவர்கள் இறந்து சில ஆண்டுகளின் பின்னர், அவர்களது சீடர்கள் பெற்ற உலகளாவிய வெற்றிகளுக்கு ஆரம்பமாகவும் அடித்தளமாகவும் அமைந்தது.

போர்கள்

நபி முஹம்மத் (ஸல்) அவர்களும் அவர்களது சீடர்களும் மதீனாவுக்குப் புலம் பெயர்ந்து சென்றுவிட்ட பின்னர், மக்கா குறைஷ்கள் சிறிது காலம் திருப்தியுற்றவர்களாய் இருந்தனர்; தங்கள் நகரப் புதல்வர் முஹம்மத் பின் அப்துல்லாஹ்வையும் அவர் பிரசாரம் செய்த புதிய மார்க்கத்தையும் பற்றிய கசப்பான நினைவுகளை மறக்கவும் அவர்கள் முயன்று கொண்டிருந்தனர். ஆனால், அவர்களது அமைதியும் ஆனந்தமும் நிலையானவையாய் இருக்கவில்லை. மதீனாவில் இஸ்லாம் நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து வந்ததையும் நபி முஹம்மத் (ஸல்) அவர்களை யூதர்கள் கூட பொருத்தனை ஒன்றின் மூலம் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டமை யையும் அவர்கள் அறிந்தவுடனேயே பழிவாங்கும் ஆசை அவர்களது கொடிய இதயங்களிலே மீண்டும் ஒருமுறை கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. நபியவர்கள் மதீனாவிலே அடைந்து வந்த பெருவெற்றி தங்கள் ஏற்றத்தினதும் ஆதிக்கத்தினதும் ஆணிவேரையே அசைத்துக் கொண்டிருந்த மையை உணர்ந்த மக்கா குறைஷ்கள் இஸ்லாத்தின் துரித வளர்ச்சியும் ஓங்கிக் கொண்டிருந்த மதீனாவின் செல்வாக்கும் எத்தகைய குறுக்கீடுகளும் இல்லாமல் பல தலைமுறைகளாகத் தாங்கள் பேணிவந்த தங்கள் கீர்த்திக்கும் அதிகாரத்திற்கும் சமாதி கட்டிவிடலாம் என்று எண்ணினர். எனவே, அவர்கள் மதீனாவிலே நிறுவப்பட்ட இஸ்லாமிய புரட்சி அரசை வேரோடு அழித்துவிடத் தீர்மானித்தனர். மக்கா குறைஷ்களின் இந்தத் தீர்மானம் போர்களிலே முடிவுற்றது.

மதீனாவில் வாழ்ந்த மக்கள் யாவரும் இஸ்லாத்தை ஏற்று ஆதரித்த போதிலும், அதன் வளர்ச்சியை விரும்பாத நயவஞ்சகர் சிலரும் அங்கே இருந்தார்கள். அவர்கள் புறத்தே இஸ்லாத்தை ஏற்றிருந்த போதிலும், அகத்தே

இஸ்லாத்திற்கு எதிராகச் செயற்பட்டு வந்தனர். அப்துல்லாஹ் பின் உபய் என்பானின்[39] தலைமையில் அணி திரண்டிருந்த அவர்கள் இஸ்லாத்தின் துரித வளர்ச்சியையும் வளர்ந்து வந்த அதன் செல்வாக்கையும் கண்டு பொறாமையுற்றிருந்தனர். இஸ்லாமிய வரலாற்றில் இவர்கள் 'முனாபிகீன்' (நயவஞ்சகர்கள்) என்று அழைக்கப்பட்டனராயினும், இவர்கள் இஸ்லாம் மார்க்கத்திற்கு முற்றிலும் எதிரானவர்களாகவே இருந்தனர்.

வஞ்சகரின் சூழ்ச்சி

இறுதியில் இவர்களை எப்படியோ இஸ்லாத்திற்குத் திருப்பிவிடலாம் என்று நம்பிய நபியவர்கள் இவர்கள்பால் பொறுமையும் சகிப்புத் தன்மையுமே காட்டி வந்தார்கள். ஆயினும், இவர்கள் மதீனாவில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு மிகப் பெரும் ஆபத்தாக மாறிக்கொண்டிருந்தனர். வதந்திகளைப் பரப்புதலும் ஒத்துழையாமையும் இவர்களது ஆயுதங்களாக இருந்தன. மதீனாவின் இஸ்லாமியப் பொதுநலவாயத்தை முளையிலேயே கிள்ளி எறியச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மக்கா குறைஷ்கள் இந்த நயவஞ்சகர்களைப் பற்றிக் கேள்வியுற்று, இவர்களோடு நட்புறவை ஏற்படுத்திக் கொண்டனர். இவர்களின் உதவியோடு மக்காவாசிகள் மதீனாவின் எல்லைப் புறங்களுக்கு வந்து, அங்கு வாழ்ந்த முஸ்லிம்களுக்குத் தொல்லைகள் கொடுக்கலாயினர்; மதீனாவுக்கு வெளியே இருந்த முஸ்லிம்களின் விளை நிலங்களையும் தோட்டங்களையும் அழித்து, அவர்களது கால்நடைகளையும் ஓட்டிச் சென்றனர்.

மேலும், புனித க.ாபாவின் பாதுகாவலர் என்ற வகையில் தீபகற்பத்தின் அனைத்து வர்க்கங்களாலும் மதிக்கப்பட்ட மக்கா குறைஷ்கள் மக்காவுக்கும் மதீனாவுக்குமிடையே வாழ்ந்த வர்க்கங்கள் மீது தமது செல்வாக்கைப் பிரயோகித்து, நபியவர்களுக்கும் அவர்களது சீடர்களுக்கும் எதிராகப் பகையையும் வெறுப்பையும் அந்த வர்க்கங்களைச் சேர்ந்த மக்களின் இதயங்களில் ஏற்படுத்திவிட்டனர்.

மக்காவாசிகளின் சூழ்ச்சி

அவ்வாறே மக்காவுக்கும் சிரியாவுக்குமிடையே அடிக்கடி பிரயாணம் செய்த அவர்களது வர்த்தகக் கூட்டங்களும் இஸ்லாத்திற்கெதிராகப் பிரசாரங்களை மேற்கொண்டு, அவர்களது சமய ஆதிக்கத்தின் கீழிருந்த மக்களை நபியவர்களுக்கும் நபித்தோழர்களுக்கும் எதிராகத் திருப்பிவிட்டன. இவ்வாறு, ஏறக்குறைய முழு அறேபியாவையும் இஸ்லாத்திற்கெதிரான பகையினதும்

39. அப்துல்லாஹ் பின் உபய் பின் ஸலூல் என்பது இவனது முழுப்பெயர். கஷ்ரஜ் வர்க்கத் தலைவனாக இருந்த இவனை மதீனாவாசிகள் ஹிஜ்ரத்துக்கு முன்பு தமது அரசனாக்க ஆயத்தங்கள் செய்தனர். ஆனால் நபியவர்களின் ஹிஜ்ரத்தும் இஸ்லாத்தின் துரித வளர்ச்சியும் இவனது இந்தக் கனவைக் கலைத்து விட்டன. பெரும் நயவஞ்சகனாக இருந்த இவன் வாயளவில் தன்னை ஒரு முஸ்லிமாகக் காட்டிக்கொண்ட போதிலும், சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் விசுவாசிகளின் முதுகில் குத்த இவன் தயங்கவில்லை. தனது வாழ்வின் இறுதிவரை இவ்வாறே இருந்த இவன் நயவஞ்சகனாகவே மரணித்தான். இவனது மகன் அப்துல்லாஹ் நபித்தோழர்களுள் ஒருவராக இருந்து, இறைமறுப்பாளர்களை எதிர்த்துப் போராடியவராவர்.

வெறுப்பினதும் நஞ்சினால் மக்கா குறைஷ்கள் மாசுபடுத்தியிருந்தனர்.

ஒருமுறை, நபித்தோழர்களுள் ஒருவரும் அவ்ஸ் வர்க்கத்தலைவருமான ஸ.்த் பின் முஆத், 'உம்ரா' கடமையை நிறைவேற்றுவதற்காக மக்காவுக்குச் சென்றிருந்தார். அவர் அங்கே நபியவர்களின் கொடிய விரோதியும் குறைஷ் தலைவர்களுள் ஒருவனுமான உமய்யா பின் கலப் என்பானின் இல்லத்தில் தங்கியிருந்தார். ஒரு நாள் மதியம், அவர் தமது சிநேகிதனான உமய்யாவோடு க.ாபாவுக்குச் சென்று, 'தவாப்' செய்தார். அப்போது, அபூஜஹ்ல் அங்கே உமய்யாவைக் கண்டு, ''உம்மோடு இருக்கும் மனிதர் யார்?'' என்று கேட்க அவன், ''இவர் எனது நண்பர் ஸ.்த்'' என்று கூறினான். உடனே அவன் ஸ.்தின் பக்கம் திரும்பி, ''தங்கள் மார்க்கத்தை மாற்றிவிட்ட மக்களுக்கு நீங்கள் அபயம் அளித்திருக்கிறீர்கள். இப்போது நீங்கள் மக்காவிலே பாதுகாப்பாக உலவிக் கொண்டிருப்பதைக் காண்கிறேன். அல்லாஹ்வின் மீது சத்தியமாக, இப்போது உம்மோடு உமய்யா இல்லாதிருந்தால், நீர் உமது குடும்பத்தாரிடம் பாதுகாப்பாகத் திரும்பிச் செல்லமுடியாது'' என்று கூறினான். அதற்கு ஸ.்த் தமது குரலை உயர்த்தி, ''அல்லாஹ்வின் மீது சத்தியமாக, இந்தச் சடங்கை நிறைவேற்றவிடாமல் நீர் என்னைத் தடுத்தால் மதீனாவினூடாகச் செல்லும் உங்கள் வர்த்தகப் பாதையை நான் தடுத்து விடுவேன்'' என்று சூடாகப் பதிலளித்தார். (புகாரீ) இதன் பின்னர் அவர் கனத்த இதயத்தோடு மதீனாவுக்குத் திரும்பிச் சென்றார். ஸ.்துக்குச் செய்யப்பட்ட இந்த நிந்தை நபியவர்களையும் மதீனாவின் முழு முஸ்லிம் சமுதாயத்தையும் அதிர்ச்சியடைய வைத்தது.

ஸ.்த் பின் முஆத் நிந்திக்கப்பட்டமை

இந்த நிலையில், நபி (ஸல்) அவர்கள் எதிரிகளின் தீய திட்டங்களை முறியடிப்பதற்கு உடனானவையும் வாஸ்தவமானவையுமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். இந்த விடயத்தில் அவர்கள் இரண்டு திட்டங்கள் பற்றிச் சிந்தித்தார்கள். ஒன்று மக்காவிலிருந்து மதீனாவினூடாக சிரியாவுக்குச் செல்லும் வர்த்தகப் பாதையை குறைஷிகளுக்கு மூடி விடுதல். இதனால் அவர்கள் முஸ்லிம்களோடு சமாதானமான முறையில் ஒத்துப்போக நிர்ப்பந்திக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. மற்றது மதீனாவின் சுற்றுப்புறங்களில் வாழ்ந்த பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த மக்களோடு சமாதான ஒப்பந்தங்கள் செய்து கொள்ளல். இதற்காக நபியவர்கள் அயல் வர்க்கங்களிடம் அவர்களோடு நட்புறவை ஏற்படுத்திக் கொள்வதற்காகப் பயணவெழுச்சிகள் (expeditions) சிலவற்றை அனுப்பி வைத்தார்கள். இரண்டொரு தடவை நபியவர்களே நேரில் சென்று, அவர்களோடு தொடர்பு கொண்டார்கள். குறைஷ்களின்

நபிகளாரின் முன்னேற்பாடுகள்

வர்த்தகக் கூட்டங்களை இடைமறிப்பதற்காகவும் சில படையெழுச்சிகள் அனுப்பப்பட்டன.

இத்தகைய படையெழுச்சிகளுள் முதலாவது மதீனாவிலிருந்து சுமார் முப்பது மைல் தூரத்தில் வாழ்ந்த ஜுஹைனா வர்க்கத்தாரிடம் அனுப்பப்பட்டது. ஹம்ஷா பின் அப்துல் முத்தலிபின் தலைமையில் சென்ற இந்தக் குழுவினர்

சமாதான உடன்படிக்கைகள்

ஜுஹைனா வர்க்கத்தாரோடு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனர். குறைஷ்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான விவகாரங்களில் நடுநிலைமை வகிக்க அவர்கள் இணங்கினர். ஹிஜ்ரி இரண்டு ஸபர் மாதத்தில் (ஆகஸ்ட் 623இல்), நபி (ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்து சுமார் எண்பது மைல் தூரத்தில் உள்ள அல் அப்வா.ஃ. என்னும் இடத்திற்குச் சென்று, அங்கு வாழ்ந்த ழம்ரா வர்க்கத்தாரோடு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அதே ஆண்டு ஜுமாதல் ஆகிரா மாதத்தில் (டிசம்பர் 623இல்), சிரியாவுக்குப் பிரயாணம் செய்து கொண்டிருந்த குறைஷ்களின் வர்த்தகக் கூட்டத்தை இடைமறிப்பதற்காகச் சென்ற நபியவர்கள் யன்பு.ஃவுக்கு அருகேயுள்ள துல் உஸைரா என்னும் இடத்தில் தங்கியிருந்த போது, அங்கு வாழ்ந்த முத்லிஜ் வர்க்கத்தாருடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் குறைஷ்களின் பகைமைக்கு எதிராக மக்கள் சக்தியை ஒன்றுதிரட்டும் பொருட்டு அயல் வர்க்கங்களோடு சமாதான ஒப்பந்தங்கள் செய்வதில் ஈடுபட்டிருந்த அதேவேளையில், எதிரிகளின்

காவல் நடவடிக்கைகள்

அசைவுகள் பற்றித் தாம் உடனுக்குடன் அறிந்து கொள்வதற்காக அவர்கள் வேவு பார்க்கும் காவல் உலாத் திட்டம் ஒன்றையும் ஆரம்பித்திருந்தார்கள்; மதீனாவின் எல்லைப்புறங்களை மக்கா குறைஷ்களின் படையெடுப்பிலிலிருந்து பாதுகாப்பதற்காக ஒற்றர் குழுக்களையும் அடிக்கடி அனுப்பி வைத்தார்கள். இவ்வாறு பாதுகாவற் பணியில் அனுப்பப்பட்டவர்கள் எதிரிகளோடு சண்டையில் ஈடுபடக் கூடாது என்றும் குறைஷ்களின் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை மட்டுமே சேர்த்து வரவேண்டுமென்றும் நபியவர்களால் கண்டிப்பாகப் பணிக்கப்பட்டிருந்தனர்.

வழக்கம் போல ஹிஜ்ரி 2 றஜப் மாதத்தில் (ஜனவரி 624இல்), நபியவர்கள் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் என்பாரின் தலைமையில் குறைஷ்களின் நடமாட்டங்களை அவதானிப்பதற் காக முஹாஜிர்கள்

நக்லாச் சண்டை

பன்னிருவரைக் கொண்ட சிறிய குழு ஒன்றை அனுப்பி வைத்தார்கள். மதீனாவுக்கு அண்மையிலுள்ள நக்லா எனும் இடத்தில், சிரியாவிலிருந்து வர்த்தகப்

பொருள்களோடு திரும்பிக் கொண்டிருந்த குறைஷ்களின் வியாபாரக் கூட்டம் ஒன்றை அவர்கள் தற்செயலாகச் சந்தித்தனர். அவர்கள் வேவு பார்ப்பதற்காக மட்டும் நபியவர்களால் அனுப்பப்பட்டபோதிலும், தவிர்க்க முடியாத நிலையில் அவர்கள் அந்த வர்த்தகக் கூட்டத்தினரைத் தாக்கிவிட்டனர். இந்தச் சண்டையில் குறைஷ்களுள் ஒருவரான அம்ர் பின் அல் ஹழ்ரமீ கொல்லப்பட்டார்; உத்மான் பின் அப்துல்லாஹ், அல் ஹகம் பின் கய்ஸான் ஆகிய இருவரும் முஸ்லிம்களால் கைது செய்யப்பட்டனர். பின்னர், முஸ்லிம்கள் கைதிகள் இருவரோடும் கைப்பற்றப்பட்ட பொருள்களோடும் மதீனாவுக்குத் திரும்பி, நடந்தவற்றை நபியவர்களிடம் தெரிவித்தபோது, அண்ணல் அவர்கள் அவர்களைக் கண்டித்ததோடு, அல்லாஹ்வால் போர் செய்வதற்குத் தடுக்கப்பட்ட மாதங்களுள் ஒன்றான ரஜபில் சண்டை நடைபெற்றமையால், அவர்கள் கொண்டு வந்த கொள்ளைப் பொருள்களை ஏற்றுக்கொள்ளவும் மறுத்து விட்டார்கள். இந்தச் சம்பவத்தை மதீனாவின் யூதர்களும் நயவஞ்சகர்களும் முஸ்லிம்களுக்கு எதிரான தமது பிரசாரத்திற்குக் கிடைத்த அரிய வாய்ப்பாக எடுத்துக் கொண்டனர்; புனித மாதங்களில் கூட இந்த முஸ்லிம்கள் குருதி சிந்தத் தயங்குவதில்லை என்று கூறி, அவர்களை இழித்துரைக்கலாயினர். இந்தச் சமயத்திலே அல்லாஹ் பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை அருளி, 'நக்லா'ச் சண்டையில் ஈடுபட்ட முஸ்லிம்களை வீண் பழியிலிருந்து விடுவித்ததோடு, வருடத்தின் எந்த மாதத்திலும் இறைமறுப்பாளருக்கு எதிராகப் போரிட முஸ்லிம்களுக்கு அனுமதியும் அளித்தான். *"(நபியே!) தடுக்கப்பட்ட மாதங்களில் போர் செய்வதைப்பற்றி உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர். நீர் கூறும்: 'அவற்றில் போர் புரிதல் பெரும் பாவம். ஆனால், அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் சேர்வதைத் தடுப்பதும் அவனை நீங்கள் நிராகரிப்பதும் மஸ்ஜிதுல் ஹராமுக்கு (வரவிடாமல்) தடுப்பதும் அதில் வசிப்போரை அதிலிருந்து வெளியேற்றுவதும் மிகப் பெரும் பாவங்களாக இருக்கின்றன. தவிர, விஷமம் கொலையை விட மிகக் கொடியது. மேலும், அவர்களுக்குச் சாத்தியப்பட்டால் உங்களை உங்களுடைய மார்க்கத்திலிருந்து திருப்பி விடும் வரையில், உங்களுடன் ஓயாது போர் செய்து கொண்டே இருப்பார்கள்....."* (2:217)

இதற்கு இரண்டு மாதங்களுக்குப் பின்னர் நிகழ்ந்த 'பத்ர்' போர் நக்லாவில் நிகழ்ந்த இந்தச் சண்டையின் விளைவே ஆகும். அறபு வரலாற்றாசிரியர்களுள் ஒருவரான அல் தபரீ கூறுவது போல ''முஸ்லிம்களுக்கும் இறைமறுப்பாளர்களுக்கும் இடையே நிகழ்ந்த பத்ர்போருக்கும் அதன் பின்னர் நடைபெற்ற போர்களுக்கும் காரணமாய் அமைந்த விவகாரம் இப்ன் அல் ஹழ்ரமீயின் மரணமே ஆகும்.''[41]

41. அல் தபரீ, தாரீக் அல் ருஸுல் வல் முலுக், பாகம் i பக்கம் 1274

நக்லாச் சம்பவம் குறைஷ்களைக் கோபமடையச் செய்ததோடு, மக்காவாசிகளிடையே பரவலான தேசிய உணர்வையும் தூண்டிவிட்டது. இந்தச் சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டவுடனேயே, நபியவர்களுக்கும் அவர்களது சீடர்களுக்கும் எதிராகப் போர்ப் பிரகடனம் செய்த குறைஷ்கள் மதீனாவின் மீது தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு ஆயத்தங்கள் செய்யலாயினர். படையெழுச்சிகளின் செலவுகளைச் சமாளிப்பதற்கு அதிக பணம் தேவைப்பட்டமையால், அவர்கள் தங்கள் குலத்தலைவரான அபூஸுப்யானைத் தங்களது வணிகப் பொருள்களோடு வர்த்தகத்திற்காக சிரியாவுக்கு அனுப்பினர். இந்தச் சமயத்திலேயே, குறைஷ்களின் செல்வத்தோடு சிரியாவிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த அபூ ஸுப்யானின் வர்த்தகக் கூட்டத்தை முஸ்லிம்கள் இடைமறித்துத் தாக்கியதாக ஒரு வதந்தி மக்காவில் பரவலாயிற்று. இந்த வதந்தியின் விளைவாக, குறைஷ்கள் சீற்றம் கொண்ட புயலாகச் சீறி எழுந்து, ஆயுதம் தரித்த ஆயிரம் வீரர்களைக் கொண்ட படை ஒன்றை அபூஜஹ்லின் தலைமையில் மதீனாவைத் தாக்கி, அபூஸுப்யானின் வர்த்தகக் கூட்டத்தை விடுவிக்க அனுப்பி வைத்தனர். குறைஷ்களின் இந்த நடவடிக்கை பற்றி ஒற்றர்கள் மூலம் அறிந்த நபியவர்கள் தமது தோழர்களோடு ஆலோசனை நடத்திய பின்னர், சிரியாவிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த அபூஸுப்யானின் வர்த்தகக் கூட்டத்தை இடைமறித்துச் சிறைப்பிடிக்கத் தீர்மானித்தார்கள்.

போர் ஆயத்தங்கள்

அவ்வாறே நபி (ஸல்) அவர்கள் நிராயுதபாணிகளான 313 முஸ்லிம்கள் கொண்ட ஒரு படையைத் திரட்டிக் கொண்டு, மதீனாவுக்குத் தென் மேற்கே சுமார் இருபது மைல் தூரத்திலுள்ள 'பத்ர்' பள்ளத்தாக்கிற்கு ஹிஜ்ரி 2 றமழான் பன்னிரண்டில் புறப்பட்டுச் சென்றார்கள்.[42] அவர்கள் 'பத்ர்'க்கு அருகிலுள்ள 'தபிரான்' பள்ளத்தாக்கை அடைந்தபோது, குறைஷ்களின் வர்த்தகக் குழுவினர் அண்மையில் வந்து கொண்டிருந்தமை பற்றி அறிந்து, புதிய தகவல்களைத் திரட்டி வருவதற்காக ஹழ்ரத் அலீயின் தலைமையில் முஸ்லிம்கள் சிலரை அனுப்பி வைத்தார்கள். 'பத்ர்' கிணறு வரை சென்ற அலீயும் அவரது குழுவினரும் சிறுவர் இருவரோடு திரும்பி வந்தனர். அந்தச் சிறுவர்கள் மூலம் குறைஷிப் படையொன்று மலைக்குப் பின்னால் பதுங்கியிருப்பதையும் குறைஷ் தலைவர்கள் அனைவரும் அங்கு

42. இந்தப் படையெடுப்பில் பங்குபற்றிய முஸ்லிம்களின் சரியான எண்ணிக்கை என்ன என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. அவர்களின் எண்ணிக்கை 313 என்றும் அவர்களுள் முஹாஜிர்களின் எண்ணிக்கை 74 என்றும் எஞ்சியோர் அன்ஸார்கள் என்றும் எண்மர் படையெடுப்பில் பங்குபற்றவில்லையாயினும், அவர்களுக்கும் கொள்ளைப் பொருள் பங்கு கொடுக்கப்பட்டது என்றும் இப்ன் ஸஃத் கூறுகிறார். அவர்களது எண்ணிக்கை 314 என்றும் அவர்களுள் முஹாஜிர்களின் எண்ணிக்கை 83 என்றும் அன்ஸார்களின் எண்ணிக்கை 231 என்றும் இப்ன் இஸ்ஹாக் கூறுகிறார். ஸஹீஹுல் புகாரீயில் வரும் ஒரு அறிவிப்பில் முஹாஜிர்களின் எண்ணிக்கை அறுபதுக்கு மேல் என்றும் அன்ஸார்களின் எண்ணிக்கை இருநூற்று நாற்பத்தொன்பதுக்கு மேல் என்றும் காணப்படுகிறது.

இருப்பதையும் அறிந்து கொண்ட நபியவர்கள் குறைஷ்களின் வர்த்தகக் கூட்டத்தை இடைமறிக்கும் தமது எண்ணத்தைக் கைவிட்டு, பகைவர்களைப் போர்க்களத்திலே சந்திக்கத் தீர்மானித்தார்கள். இதே சமயம், சிரியாவிலிருந்து மக்காவுக்குத் திரும்பிக் கொண்டிருந்த அபூ ஸுப்யான் முஸ்லிம்களின் வருகை பற்றி அறிந்து, வழக்கமான தமது பாதையைக் கைவிட்டு, மேற்குப்புறக் கடற்கரை வழியாகத் தப்பிச் சென்றுவிட்டார்.

முஸ்லிம்கள் பத்ர் பள்ளத்தாக்கை அடைந்த போது, குறைஷ்கள் அவர்களுக்கு முன்பாகவே அங்கு சென்று, மிக வசதியான ஓர் இடத்தில் முகாமிட்டு இருந்தமையை அவர்கள் கண்டனர். எனவே, அவர்கள் கிணறோ ஊற்றோ இல்லாத ஓர் இடத்தில் முகாமிட்டு, முழுக்க முழுக்க ஆயுதம் தரித்த - மிகத்திறமை வாய்ந்த - போர் வீரர்களைக் கொண்டிருந்த குறைஷ்களின் படையைச் சந்திக்கத் தம்மை ஆயத்தப்படுத்தினர். முஸ்லிம்களின் குருதியைக் குடிக்க அடங்காத் தாகம் கொண்டிருந்த குறைஷ்களே ஹிஜ்ரி 2 ரமழான் பதினேழாம் நாள் காலையில், முதன் முதலாகப் போரைத் தொடக்கினர். இந்தப் போரில், குறைஷ் படை வீரர்களின் எண்ணிக்கை முஸ்லிம் படை வீரர்களின் எண்ணிக்கையை விட மூன்று மடங்குகள் அதிகமாக இருந்தபோதிலும், அவர்களை எத்தகைய போர்ப் பயிற்சியுமற்ற முஸ்லிம்கள் மிகக் குறுகிய நேரத்தில் தோற்கடித்தனர். நபி முஹம்மத் (ஸல்) அவர்களையும் அவர்களது தோழர்களையும் ஓட்டம் காட்டத் தமது படையணிகளின் வெறும் காட்சி ஒன்றே போதும் என்று கற்பனை செய்திருந்த குறைஷ்கள் தங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டு, போர்க்களத்திலிருந்து தப்பி ஓடினர். அவர்களின் தலைவர்களான அபூ ஜஹ்ல், உத்பா, உமய்யா, வலீத் உட்பட எழுபது குறைஷ்கள் கொல்லப்பட்டனர். வேறு எழுபது குறைஷ்கள் முஸ்லிம்களால் போர்க்கைதிகளாகச் சிறைப்பிடிக்கப்பட்டனர். முஸ்லிம்களின் பக்கத்தில் பதின்மூவர் மட்டுமே கொல்லப்பட்டனர். மனிதத் தன்மையோடு நடத்தப்பட்ட குறைஷ் கைதிகளுள் வசதியானோர் பின்னர் மீளிறை மீது விடுவிக்கப்பட்டனர்; வசதியற்றோர் மீளிறை இல்லாமலேயே விடுவிக்கப்பட்டனர். எழுத வாசிக்கக் கற்றிருந்த கைதிகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மதீனக் குழந்தைகளுக்குப் படிப்பறிவைக் கற்றுக் கொடுத்து விட்டுத் தங்கள் விடுதலையைப் பெற்றுக் கொண்டனர்.

பத்ர் போர்

ஒரே நாளில் நடந்து முடிந்த இந்தப் போர் இஸ்லாத்தின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாகக் கருதப்படுகிறது. இந்த முதற் போரில் முஸ்லிம்கள் தோல்வியுற்றிருந்தால், இஸ்லாம் உலகிலிருந்து முற்றாக அழிந்து போயிருக்கும்; முஸ்லிம்களைப் பற்றிய ஒரு வரலாறே இல்லாது போயிருக்கும். இந்தப் போரில் முஸ்லிம்கள் அடைந்த வெற்றி அறேபியரின் சமய,

பத்ர் வெற்றியின் விளைவுகள்

அரசியல் நிலைமைகளில் பல விளைவுகளுக்குக் காரணமாய் அமைந்தது. உண்மையில், அது உருவ வழிபாட்டின் மீதான இஸ்லாத்தின் முதல் வெற்றியாகவும் முன்னேற்றத்தை நோக்கிய இஸ்லாத்தின் முதற்படியாகவும் இருந்தது. குழந்தைப் பருவத்திலிருந்த இஸ்லாத்தை குறைஷ் உருவத் தொழும்பர்களின் பயங்கரக் கரங்களிலிருந்து காப்பாற்றி, அறபு நாடெங்கும் இஸ்லாம் தனது சொந்த ஆதிக்கத்தை நிறுவிக் கொள்ள அது உதவியது. அறேபியத் தீபகற்பமெங்கும் பரவியிருந்த உருவத் தொழும்புக்கு அது மரண அடியைக் கொடுத்து, முஸ்லிம்களின் உறுதிப்பாட்டைப் பலப்படுத்தவும் இஸ்லாத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்கு வழி சமைக்கவும் துணை புரிந்தது. தீபகற்பத்திலே நபி (ஸல்) அவர்களது அந்தஸ்தை உறுதிப்படுத்தி, அறபு வர்க்கங்களிடையே அவர்களுக்குப் புதிய கீர்த்தியை அது பெற்றுக் கொடுத்தது. இஸ்லாமிய இயக்கத்திற்கு அது புதிய உற்சாகத்தை அளித்ததோடு, அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கு மனத்திண்மையையும் அவர்களது புகழ்பூத்த எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் கொடுத்தது. மதீனாவில் பயத்தோடும் உறுதியின்மை யோடும் வாழ்ந்துகொண்டிருந்த முஸ்லிம்கள் ஊக்கத்தோடும் உறுதியோடும் கீர்த்தியோடும் வாழ ஆரம்பித்தனர். மிகக் குறைவான எண்ணிக்கையில் போர் அனுபவம் இல்லாத முஸ்லிம்களைக் கொண்ட சிறிய படை ஒன்றால் அடையப்பெற்ற இந்த வெற்றி இஸ்லாத்தை நம்ப மறுத்த மக்களுக்கு அதன் உள்ளார்ந்த ஆன்மா பற்றிய விளக்கத்தை வழங்கியது; இஸ்லாம் மார்க்கத்தின் தெய்விகத் தன்மையை நிரூபித்து, அதனை எதிர்த்த மனித சக்திகளைப் பலவீனப்படுத்தியது. கீழைத் தேசவாதிகளுள் ஒருவரான அல்பிரட் கில்லாமீ கூறுவது போல, ''பிற்காலத்தில் ஏற்பட்ட முஸ்லிம் படைகளின் வெற்றிகளுக்கெல்லாம் அத்திவாரமாக இந்தச் சண்டையே கருதப்படல் வேண்டும்''.[43]

மக்கா குறைஷ்கள் 'பத்ர்' போரில் தோல்வியுற்ற போதிலும், உதவியற்ற ஏழை முஸ்லிம்களின் கரங்களில் தாம் தோல்வியுற்றமையை அவர்களால் மறக்கமுடியவில்லை. அது அவர்களுக்கு ஒரு மாபெரும் அவமானமாக இருந்தமையால், அடிபட்ட அரவம் போல அவர்கள் பழிக்குப்பழி வாங்கும் வேட்கையால் சீறிக் கொண்டிருந்தனர். அவர்களது சீற்றமும் பகைமையும் எல்லை கடந்து வளர்ந்தன. ஒவ்வொரு மக்கத்துக் குழந்தையும் பழிவாங்கும் பசியால் துடித்து அழுதது. அவர்களது கவிஞர்கள் மக்காவாசிகளின் பழிவாங்கும் உணர்வுகளுக்குத் தமது தீ நாக்குகளால் சூடேற்றிக் கொண்டிருந்த அதேவேளையில், அவர்களது பெண்கள் தமது ஒப்பாரியாலும் வஞ்சப் புகழ்ச்சியான குறிப்புக்களாலும் மற்றொரு புதிய

பழிவாங்கும் வேட்கை

43. *Alfred Guillaume, Islam, p.43*

போருக்குத் தங்கள் ஆண்களைத் தயார்படுத்தலாயினர். இவ்வாறு, மக்கா குறைஷ்கள் புதிய போர் ஒன்றுக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த அதேசமயம், முஸ்லிம்கள் வெற்றிக் களிப்பில் தம்மை மறந்து விடவில்லை. ஒருமுறை உறையிலிருந்து உருவப்பட்ட எதிரியின் வாள், அது முற்றாக உடைக்கப்படும் வரை அமைதி கொள்ளாது என்பதைத் தெளிவாக உணர்ந்திருந்த நபி (ஸல்) அவர்கள் எதிரிகளின் திடீர்த் தாக்குதலை எந்த வேளையிலும் எதிர்கொள்வதற்கு ஏற்றவாறு தமது சீடர்களை ஆயத்த நிலையில் வைத்துக் கொண்டார்கள்.

ஹிஜ்ரி 3இல், மக்கா குறைஷ்கள் ஆயுதம் தரித்த 3200 வீரர்களைக் கொண்ட ஒரு படையை 'பத்ர்' போர்க்களத்தில் அடைந்த படுதோல்விக்குப் பழிவாங்குவதற்காகத் தயாரித்தனர். மூவாயிரம் ஒட்டகைகளைக் கொண்ட இந்தப் படையில் எழுநூறு கவச வீரர்களும் இருநூறு குதிரை வீரர்களும் இடம்பெற்றிருந்தனர். அவர்களோடு வீரர்களைப் புகழவும் கோழைகளை இகழவும் அவர்களது பெண்களும் சேர்ந்து கொண்டனர். குறைஷ்களின் தலைவரான அபூ ஸுப்யானின் தலைமையில் மதீனாவை நோக்கிப்புறப்பட்ட இந்தப் படையினர் மதீனாவுக்கு வடக்கே சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ள உஹுத் மலைக்கு அருகே வசதியான இடம் ஒன்றில் முகாம் இட்டனர். மக்காவிலே தங்கியிருந்த தமது சிறிய தந்தை அப்பாஸின் மூலம் குறைஷ்களின் இந்தப் படையெடுப்புபற்றி அறிந்த நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களையும் அண்ணல் அவர்களால் வெளியிடப்பட்ட பட்டயத்தின் மூலம் நகரத்தைப் பாதுகாப்பதில் முஸ்லிம்களுக்கு உதவக் கடமைப்பட்டிருந்த யூதர்களையும் கூட்டி ஆலோசனை நடத்தினார்கள். குறைஷ்களிடமிருந்து நகரைப் பாதுகாக்கும் முறை குறித்து ஆராயப்பட்டது. முஸ்லிம்கள் நகருக்குள்ளிருந்தே தமமைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் எதிரிகள் தாக்குதலை ஆரம்பித்தால் உள்ளிருந்தவாறே தற்காப்புப் போர் செய்யவேண்டும் என்றும் அண்ணல் அவர்கள் கருத்துக் கூறினார்கள். இதனை யூதர்களும் முஸ்லிம் முதியோரும் ஏற்றுக்கொண்டனர். நயவஞ்சகர் தலைவனான அப்துல்லாஹ் பின் உபய் கூட இந்தக் கருத்துக்குத் தலைசாய்த்தான். ஆனால், 'பத்ர்' களத்தில் போராடி, போரின் சுவையை அறிந்த முஸ்லிம்களும் அந்தப் போரில் பங்கு கொள்ளாத முஸ்லிம் இளைஞர்களும் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளத் தயங்கினர். சுவர்களுக்குப் பின்னால் ஒட்டிக்கொண்டிருப்பது கோழைத்தனம் என்று கருதிய அவர்கள் நகருக்கு வெளியே சென்று, திறந்த வெளி ஒன்றில் எதிரிகளைச் சந்தித்துப் போரிடுவதையே விரும்பினர். நகருக்கு வெளியே சென்று, பகைவர்களைச் சந்திக்க விரும்பியோரின் எண்ணிக்கை அதிகமாக இருந்தமையால், அவர்களது நம்பிக்கைக்கும்

குறைஷ்களின் புதிய படையெடுப்பு

ஆர்வத்துக்கும் கண்ணியம் அளித்து, அவர்களது கருத்தையே ஏற்றுக்கொண்ட நபி (ஸல்) அவர்கள் சுமார் ஆயிரம் வீரர்களோடு உஹுத் மலைச்சாரலை நோக்கிப் புறப்பட்டார்கள். நடுவழியிலே, முஸ்லிம்களோடு களம் நோக்கிச் சென்ற அப்துல்லாஹ் பின் உபய், முஹம்மத் அவர்கள் தமது சொந்த எண்ணப்படி செயலாற்றவில்லை என்றும் அனுபவமற்ற இளைஞர்களைத் திருப்தி செய்வதற்காகத் தமது முந்திய திட்டத்தையே மாற்றி விட்டார் என்றும் குறை கூறித் தனது 300 யூதத் தோழர்களோடு மதீனாவுக்குத் திரும்பச் சென்று விட்டான். இதனால் படை வீரர்களின் எண்ணிக்கை எழுநூறாகக் குறைந்த போதிலும், முஸ்லிம்கள் அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைத்தவர்களாக எதிரிகள் முகாமிட்டிருந்த 'உஹுத்' மலைச் சாரலை அடைந்தனர்.

அன்றிரவை அங்கே கழித்த அவர்கள் அடுத்த நாள் காலையில் சம வெளியை நோக்கி முன்னேறிச் சென்றனர். குறைஷ் குதிரை வீரர்கள் இலகுவில் நுழைய முடியாத மலைச் சரிவில் இடம்பிடித்துக் கொண்ட நபியவர்கள் குன்றின் உச்சியிலிருந்த கணவாயில் ஐம்பது வில் வீரர்களை அப்துல்லாஹ் பின் ஷுபைரின் தலைமையில் நிறுத்தி, போர்க்களத்தில் வெற்றியோ தோல்வியோ எது நிகழ்ந்தாலும், அந்த இடத்தை விட்டு நகரக் கூடாது என்றும் எதிரிகள் மீது ஓயாது அம்புகள் எய்து கொண்டிருக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டார்கள். எதிரிகள் பின்புறமிருந்து முஸ்லிம்களைத் தாக்கலாம் என்ற பயத்திலேயே நபியவர்கள் வில் வீரர்களுக்கு இவ்வாறு கண்டிப்பான ஆணை பிறப்பித்திருந்தார்கள்.

ஹிஜ்ரி 3 ஷவ்வால் ஆறாம் நாள் (மார்ச் 22, 625) போர் ஆரம்பமானது. முஸ்லிம்கள் எதிரிகளோடு போராடித் தமது வீரத்தையும் ஆற்றலையும் வெளிப்படுத்தினர். குறைஷ்களின் கொடியினை ஒருவர் பின் மற்றவராகத்

உஹுத் போர்

தாங்கி நின்ற எழுவரும் முஸ்லிம்களால் கொல்லப் பட்டனர். சினங்கொண்ட சிங்கங்களைப் போலக் கர்ச்சித்துக் கொண்டு நின்ற முஸ்லிம்களோடு சண்டையிட முடியாத குறைஷ் வீரர்கள் போர்க் களத்திலிருந்து பின் வாங்கினர். முஸ்லிம்கள் அவர்களைத் துரத்திச் சென்று தம் வாள்களுக்கு இரையாக்கினர். சந்தேகத்துக்கிடமில்லாதவாறு வெற்றி தெளிவாகத் தெரிந்தமையால், முஸ்லிம்கள் பின்விளைவுகளைப் பற்றிச் சிறிதும் எண்ணாமல், கொள்ளைப் பொருள்களைச் சேகரிப்பதில் ஈடுபடலாயினர். மலைக் கணவாயைக் காவல் செய்வதற்காக நபியவர்களால் அங்கு நிறுத்தப்பட்டிருந்த வில் வீரர்கள் இதனைக் கண்டு, போர் முடிவுற்றிருக்கலாம் என நினைத்து, நபியவர்களதுகண்டிப்பான கட்டளையையும் அவர்களது தளபதியின் எச்சரிக்கையையும் மீறிப் பகைப் பொருள்களைப் பொறுக்கக் கீழே ஓடிவந்தனர். இப்போது, மலைக் கணவாய் பாதுகாப்பற்றுக் கிடந்ததைக் கவனித்து விட்ட குறைஷ்களின் குதிரைப்படைத்

தளபதி காலீத் பின் வலீத் தமது இருநூறு குதிரை வீரர்களோடு மேலே பாய்ந்து சென்று கணவாயைப் பிடித்துக் கொண்டார். முஸ்லிம்கள் கொள்ளைப் பொருள்களைச் சேகரிப்பதிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்தமையால், கணவாயில் என்ன நடந்தது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. கணவாயைப் பிடித்துக் கொண்ட காலித், குதிரை வீரர்களின் உதவியோடு பின்புறமாகவிருந்து முஸ்லிம்களைத் தாக்கலானார். எதிர்பாராத இந்தத் தாக்குதல் முஸ்லிம்களுக்கு முற்றிலும் சாதகமாக இருந்த போரை வேறு பக்கம் திருப்பிவிட்டது. முஸ்லிம்கள் நிலைகுலைந்து சிதறலாயினர். அறபு வரலாற்றாசிரியர்களுள் ஒருவரான இப்ன் ஸஃத் கூறுவது போல ''நிமித்தம் திரும்பியது; காற்று தனது திசையை மாற்றிக் கொண்டது. கிழக்குத் திசையில் அடித்த அது மேற்குத் திசையில் வீசலாயிற்று. முஹம்மத் அவர்கள் கொல்லப்பட்டுவிட்டார் என்று ஷைத்தான் கூக்குரலிட்டான். முஸ்லிம்கள் நிலை குலைந்து, தங்கள் வழமைக்கு மாறாகப் போராடலாயினர். அவசரத்திலும் குழப்பத்திலும் அவர்கள் ஒருவரை மற்றவர் தாக்கலாயினர்''.[44] அங்கு ஏற்பட்ட குழப்பத்தில் குறைஷ்களின் புகழ்பெற்ற வீரனான அப்துல்லாஹ் பின் கமீஆ, நபி (ஸல்) அவர்களை நோக்கிக் கற்களை வீசினான். அந்தக் கற்கள் அவர்களது முன் பற்கள் இரண்டை (மற்றோர் அறிவிப்பின் படி ஒரு பல்லை) உடைத்து விட்டன. இறுதியில், மிகக் கடுமையான சண்டையின் பின்னர், முஸ்லிம்கள், எதிரிகள் நுழைய முடியாத மலைப்பக்கத்திலிருந்த ஓர் இடத்திற்குப் பின் வாங்கினர். கடைசி வரை சண்டையிட விரும்பாத குறைஷ் வீரர்களும் பின்வாங்கி, இரவோடிரவாக மக்காவுக்குத் திரும்பிச் சென்றனர்.

இவ்வாறு, இந்தப் போர் முஸ்லிம்களுக்குத் தோல்வியில் முடிந்தது. நபி (ஸல்) அவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினார்கள். நபியவர்களின் சிறிய தந்தை ஹம்ஷா உட்பட எழுபது முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்; நாற்பதின்மர் காயப்பட்டனர். மக்காவாசிகளுள் இருபத்து மூன்று பேர் மட்டுமே கொல்லப்பட்டனர்.

'உஹுதி'ல் கிடைத்த வெற்றியால் போதையுற்ற குறைஷ்கள் தங்கள் வெற்றியை அவர்களது கால மிலேச்சர்களின் பாணியில் கொண்டாடினர். 'பத்ரின் கசப்பான நினைவுகளால் சினமூட்டப் பெற்றிருந்த குறைஷ் பெண்கள்

குறைஷ் பெண்களின் மிலேச்சத்தனம்

கொல்லப்பட்ட முஸ்லிம்களின் உயிரற்ற உடல்கள் மீது தம் பழியைத் தீர்த்துக் கொண்டனர். அவர்கள் அந்த உடல்களைத் துண்டாடி, அவற்றின் காதுகளையும் மூக்குகளையும் கொண்டு வளையல்களும் மாலைகளும் செய்து, தம் கரங்களிலும் கழுத்துகளிலும் அணிந்து கொண்டனர். உத்பாவின் புதல்வியும்

44. இப்ன் ஸஃத், பாகம் II பக்கம் 42

அபூ ஸுப்யானின் மனைவியுமான ஹின்த் தமது தந்தையை 'பத்ர்' களத்தில் கொன்ற ஹம்ஷாவின் வயிற்றைப் பிளந்து, ஈரலை வெட்டியெடுத்து, அதனை மென்று உமிழ்ந்தார்.[45] சுருங்கச் சொன்னால், குறைஷ் பெண்களும் ஆண்களும் தங்கள் பழிவாங்கும் உணர்வுப் பசியைத் தணித்துக் கொள்வதற்காகக் கொல்லப்பட்ட முஸ்லிம்களின் உயிரற்ற சடலங்களோடு வெறி நாய்களைப் போல நடந்து கொண்டனர்.

தோல்வியின் காரணம்

'உஹுத்' போரில் முஸ்லிம்கள் தோல்வியுற்றமைக்கு ஒழுக்காற்றில் அவர்கள் விட்ட தவறே காரணமாகும். இதுபற்றி அல்லாஹ் தனது அல் குர்ஆனில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்: *"அல்லாஹ்வுடைய கட்டளைப்படி, நீங்கள் சத்துருக்களைச் சம்ஹாரம் செய்து கொண்டிருந்த சமயத்தில், நீங்கள் விரும்பியதை அவன் உங்களுக்குக் காண்பித்த பின்னரும், நீங்கள் மாறு செய்து, அவ்விடயத்தில் நீங்கள், உங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டு தோல்வியுற இருந்த சமயத்தில், அல்லாஹ் தன்னுடைய வாக்கை நிச்சயமாக நிறைவேற்றி வைத்தான். உங்களில் இவ்வுலகை விரும்புவோரும் உண்டு; உங்களில் மறுமையை விரும்புவோரும் உண்டு. ஆகவே, உங்களைச் சோதிக்கும் பொருட்டு உங்களை அவர்களுக்குப் பின்னடையும் படி செய்தான். நிச்சயமாக, அவன் உங்களை மன்னித்து விட்டான். ஏனெனில், அல்லாஹ் விசுவாசிகள்மீது அருள் புரிவோனாக இருக்கிறான். தூதர் உங்கள் பின்னிருந்து கொண்டு உங்களை அழைத்துக் கொண்டிருந்த சமயத்தில், நீங்கள் ஒருவரையுமே திரும்பிப் பாராது வெருண்டோடிக் கொண்டிருந்ததையும் நினைத்துப் பாருங்கள். இத்துக்கத்தின் காரணமாக உங்களுக்கும் துக்கத்தையே பிரதிபலனாகக் கொடுத்தான். உங்களிடமிருந்து தவறிவிட்ட சமயத்திலும் உங்களுக்குக் கஷ்டம் ஏற்பட்ட சமயத்திலும் நீங்கள் துக்கத்தில் ஆழ்ந்து விடாமல் இருப்பதற்காகவே (இத்தகைய துக்கத்தை உங்களுக்குக் கொடுத்தான்) நீங்கள் செய்பவற்றை எல்லாம் அல்லாஹ் நன்கறிந்தே இருக்கிறான்".* (3:152–3)

முஸ்லிம்கள் - குறிப்பாகக் கணவாயில் நிறுத்தப்பட்டிருந்த வில் வீரர்கள் - நபி (ஸல்) அவர்களின் ஆணைக்கு முழுமையாகப் பணிந்திருந்தால், 'பத்ர்'யில் கிடைத்த வெற்றியை விடவும் மிகப் பெரிய வெற்றி ஒன்றைஅடைந்திருப்பார்கள்; உருவ வழிபாடு அறேபியாவிலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்டிருக்கும். 'உஹுத்' போரும் அதன் விளைவுகளும் முஸ்லிம்களுக்கு மிகப் பெரிய பாடத்தையும் நபியவர்களின் ஆணைக்கு

45. ஹிஜ்ரி 8இல் நிகழ்ந்த மக்கா வெற்றியின் போது இந்த ஹின்த் தமது கணவர் அபூ ஸுப்யானோடு இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்.

முற்றாகக் கட்டுப்படல் வேண்டும் என்ற ஞானத்தையும் கற்பித்தன. முஸ்லிம்கள் மறக்க முடியாத இந்தப் பாடத்தால் முழுமையான பயன் பெற்றார்கள் என்பதற்குப் பிற்காலச் சம்பவங்களும் வெற்றிகளும் சான்றாய் நின்றன.

வர்க்கங்களின் கிளர்ச்சியும் படுகொலைகளும்

'உஹுத்' போரில் முஸ்லிம்கள் பெற்ற தோல்வி, பாலைவன வர்க்கங்களிடையேயும் மதீன யூதர்களிடையேயும் அவர்கள் சம்பாதித்திருந்த கீர்த்தியை வெகுவாகக் குறைத்து விட்டதோடு, முஸ்லிம்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யவும் அவர்களைத் தூண்டிவிட்டது. 'பத்ர்' வெற்றியின் பின்னர் முஸ்லிம்களுக்கு ஆதரவு காட்டிய நாடோடி வர்க்கங்களைச் சேர்ந்தவர்கள் இப்போது 'உஹ்தி'ல் பெற்ற முற்றுப்பெறாத வெற்றியின் மூலம் உருவத் தொழும்பர்களிடையே தமது கீர்த்தியைத் தற்காலிகமாக வளர்த்துக் கொண்ட குறைஷ்களைச் சார்ந்து கொண்டனர். கொள்ளையடித் தலையும் வழிப்பறியையும் தமது தொழிலாகக் கொண்டிருந்த இந்த நாடோடி வர்க்கங்களைச் சேர்ந்த அறேபியர் இஸ்லாம் ஏற்றம் பெற்று அரசு அமைத்து விட்டால், தமது கூடா வாழ்க்கை வழிகள் யாவும் தங்களுக்கு நிரந்தரமாக மறுக்கப்பட்டுவிடும் என்று எண்ணினர். மேலும், மக்கா குறைஷ்கள் புனித க.்.பாவின் எசமானர்கள் என்ற வகையில், இந்த வர்க்கங்கள் மீது மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தனர். ஹஜ் காலத்தின் போது இந்த வர்க்கங்களைச் சேர்ந்தவர்கள் மக்காவுக்கு வந்த சமயங்களில், குறைஷ்கள் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிராகக் கிளர்ந்தெழ அவர்களைத் தூண்டினர். எனவே, அவர்கள் இஸ்லாத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்யலாயினர். நபித் தோழர்கள் சிறு சிறு குழுக்களாக மதீனாவுக்கு வெளியே சென்றபோதெல்லாம், அவர்கள் இந்த நாடோடிகளால் இரக்கமின்றிக் கொல்லப்பட்டனர். ஹிஜ்ரி 4 ஸபர் மாதத்தில், கிலாப் வர்க்கத்தினருக்கு இஸ்லாத்தைப் போதிப்பதற்காக அவர்களது வேண்டுகோளின்மீது நபியவர்களால் அனுப்பப்பட்ட எழுபது முஸ்லிம்களை ஆமிர் வர்க்கத்தைச் சேர்ந்தோர் பி.்.ர் மஊனா என்ற இடத்தில் மிலேச்சத்தனமாகக் கொன்றனர். அதே காலப்பகுதியில் சன்மார்க்க போதனைக்காக நபியவர்களால் அனுப்பப்பட்ட பதின்மரைக் கொண்ட ஒரு குழுவினரை இடைமறித்த லிஹ்யான் வர்க்கத்தினர் அவர்களுள் எண்மரை ரஜீ.் என்னுமிடத்தில் கொலை செய்தனர்; குபைப் பின் அதீ, ஷைத் பின் ததின்னா ஆகிய இருவரையும் மக்கா குறைஷ்களுக்கு அடிமைகளாக விற்றுவிட்டனர். அவர்கள் இவர்களை மக்காவில் பகிரங்கமாகக் கொன்று விட்டனர்.

ஆரம்பத்தில் இருந்தே மக்கா குறைஷ்களோடு இரகசிய நட்புறவு வைத்திருந்த யூதர்களும் முஸ்லிம்களுக்குத் தொல்லைகள் கொடுக்கத்

தொடங்கியிருந்தனர். நாடோடி வர்க்கங்களினதும் யூதர்களினதும் இத்தகைய தீய நடவடிக்கைகள் காரணமாக அவர்களைத் தண்டிக்கும் விதத்தில் உடனான எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நபி (ஸல்) அவர்கள் பலவந்தப்படுத்தப்பட்டார்கள். முதலில், அவர்கள் முஸ்லிம்களோடு செய்திருந்த உடன்படிக்கையை மறந்து, இஸ்லாத்திற்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்திருந்த மதீன யூதர்களைத் தண்டிக்கத் தீர்மானித்தார்கள்.

யூதரின் சதி

மதீனாவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அரண் செய்யப்பட்ட கோட்டைகளில் வாழ்ந்து வந்த யூதர்கள் பனூ கைனுகா:., பனூ நழீர், பனூ குரைளா என மூன்று வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். பெரும்பாலும் அவர்கள் நிலக்கிழார்களாகவும் வர்த்தகர்களாகவும் ஆற்றல் வாய்ந்த கைவினைஞர் களாவும் இருந்தனர். நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் இஸ்லாமியப் பொது நலவாயத்தை ஆரம்பித்து வைத்தபோது, அன்னிய படையெடுப்பாளர்களிடமிருந்து மதீனாவையும் அதன் மக்களையும் பாதுகாப்பதில் தாங்கள் உதவியும் ஒத்துழைப்பும் அளிப்பதாக யூதர்கள் உடன்படிக்கை ஒன்றின் மூலம் முஸ்லிம்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தனர். ஆனால், இஸ்லாத்தின் படர்ச்சியும் அதன் செல்வாக்கு வளர்ச்சியும் அவர்களது பொறாமை உணர்வைத் தூண்டிவிட்டன. அவர்களது தீயொழுக்கத்தையும் கூடாத பண்புகளையும் கண்டித்து, அவ்வப்போது அருள்பட்ட அல்குர்ஆன் வசனங்களும் அவர்களிடையே இஸ்லாத்திற்கு எதிராகக் காழ்ப்புணர்வைத் தோற்றுவித்தன. இவற்றின் விளைவாக, அவர்கள் மக்கா குறைஷ்களோடு இரகசியமாக இணைந்துகொண்டு, இஸ்லாத்திற்கும் அதன் நபிக்கும் எதிராகச் சதி முயற்சிகளில் ஈடுபடலாயினர்; 'உஹுத்' போரின் போது, அவர்கள் நயவஞ்சகர்களோடு சேர்ந்து கொண்டு, நபியவர்களையும் அவர்களது தோழர்களையும் நடுவழியிலே கைவிட்டனர்; மக்கா குறைஷ்களுக்கு ஒற்றர்களாகச் செயற்பட்டு, அவர்களோடு இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடத்தி, மதீனாவைத் தாக்குமாறு அவர்களைத் தூண்டினர்; இயன்ற எல்லா வழிகளிலும் முஸ்லிம்களிடையே குழப்பத்தையும் அமைதி யின்மையையும் ஏற்படுத்த அவர்கள் முயன்றனர்; கூடாத கருத்தைத் தரத்தக்க விதத்தில் அல் குர்ஆனின் சொற்களை மாற்றி மொழிந்து, இறை வேதத்தை இழிவு செய்தார்கள். இஸ்லாத்தில் எதுவுமே இல்லை என்ற கருத்தைத் திணிப்பதற்காக யூதர்கள் சிலர் இஸ்லாத்தைத் தழுவி, அடுத்த நாள் அந்த மார்க்கத்தைத் துறந்தனர். ஆபாசமான சொற்கள் அனைத்தையும் பயன்படுத்தி, அவர்கள் நபியவர்களையும் அவர்களது சீடர்களையும் நையாண்டி செய்தனர். ஒரு காலத்தில் தங்களுக்குள்ளேயே போரிட்டு மடிந்து கொண்டிருந்த அவ்ஸ், கஷ்ரஜ் வர்க்கங்கள் ஒன்றுபட்டமையே இஸ்லாத்தின் வெற்றிக்குக் காரணம் என்பதை உணர்ந்திருந்த யூதர்கள் மீண்டும் ஒருமுறை அவர்களிடையே பிளவை ஏற்டுத்துவதற்காக வேற்றுமையினதும்

பகைமையினதும் வித்துக்களை அவர்களது இதயங்களிலே தூவப் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். இஸ்லாம் மார்க்கத்தையும் அதன் பொது நலவாயத்தையும் மதீனாவின் மண்ணிலிருந்து வேரோடு பிடுங்கி எறிவதே அவர்களது ஒரே நோக்கமாக இருந்தது. ஆனால், சகிப்புத்தன்மையின் உறைவிடமாக இருந்த அண்ணல் அவர்கள் யூதர்களின் தீங்குகள் அனைத்தையும் பொறுமையோடு தாங்கிக் கொள்ளுமாறு தமது சீடர்களைப் பணித்திருந்தார்கள்.

கைனுகா: யூதர்

நபி (ஸல்) அவர்களோடு உடன்படிக்கை முடித்திருந்த யூதர்களுள் முதலில் ஒப்பந்த விதிகளை மீறி, இஸ்லாத்திற்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தவர்கள் கைனுகா:. வர்க்க யூதர்களாவர். மற்ற இரு வர்க்கத்தாரை விடவும் அதிக ஆற்றலும் திறமையும் வாய்ந்தவர்களாக இருந்த இவர்கள் தொழிலால் பொற்கொல்லர்களாக இருந்தனர். நயவஞ்சகர் தலைவனான அப்துல்லாஹ் பின் உபையின் நேசர்களாக இருந்த இவர்கள் 'பத்ர்' போரின் போது, தங்கள் குரோதத்தையும் துரோக உணர்வையும் வெளிப்படுத்தி, நபியவர்களோடு செய்திருந்த உடன்படிக்கையை முறித்து விட்டனர்.

இந்த யூதர்களின் சந்தையில் நிகழ்ந்த எதிர்பாராத ஒரு சம்பவம் பகைமைத் தீய்க்கு எணணெய் வார்ப்பதாய் அமைந்தது. ஒரு நாள், அன்ஸார் முஸ்லிம் ஒருவரைத் திருமணம் செய்திருந்த நாடோடிப் பெண் ஒருத்தி தனது ஆபரணத்தைத் திருத்தி அமைப்பதற்காக பனூ கைனுகா:.வின் குடியிருப்புப் பகுதியில் இருந்த யூதர்களின் சந்தைக்குச் சென்றிருந்தாள். அங்கே பொற்கொல்லன் ஒருவனின் கடைக்குச் சென்ற அப்பெண், தனது ஆபரணத்தை அவனிடம் கொடுத்து விட்டு, அவனுக்குப் பக்கத்தே குந்திக்கொண்டாள். அப்போது, அங்கே அரட்டையடிப்பதில் ஈடுபட்டிருந்த யூத இளைஞர்கள் சிலர் அவளைக் கேலிசெய்ய ஆரம்பித்ததோடு, அவளது முகத்திரையை மேலே உயர்த்தவும் முயன்றனர்; அவள் அவர்களது ஒழுக்கமற்ற இடக்கான செயலைச் சினத்தோடு கண்டித்தாள். அப்போது, அவர்களது கேலியை வெகுவாக இரசித்த பொற்கொல்லன் அவளுக்குத் தெரியாமல் அவள் பின்னால் சென்று, அவளது பாவாடையை கடைச்சுவரோடு ஒரு ஊசியால் இணைத்துவிட்டான். அந்தப் பெண் அங்கிருந்து புறப்படுவதற்காக எழுந்த போது, அவளது பாவாடை கீழே இழுக்கப்பட அவளது உடலின் கீழ் பகுதி நிர்வாணமாயிற்று. இந்தக் காட்சியைக் கண்டு அங்கிருந்த யூத இளைஞர்கள் சிரிக்க, அவள் வெட்கத்தாலும் அவமானத்தாலும் பலமாக அலறினாள். அந்தச் சமயம் அங்கு வர நேர்ந்த முஸ்லிம் ஒருவர் நடந்தவற்றைக் கண்டு கோபமடைந்தார்; ஆத்திரத்தோடு அந்தப் பொற்கொல்லன் மீது பாய்ந்து, அவனை அந்த இடத்திலேயே கொன்று விட்டார். அப்போது, அங்கே நின்றிருந்த யூதர்கள் அந்த முஸ்லிம்மீது பாய்ந்து, அவரைக்

கொன்று விட்டனர்.

இந்தக் குறும்புச் சம்பவத்தின் பின்னர், கொல்லப்பட்ட முஸ்லிமின் உறவினர்களுக்கும் பனூ கைனுகா.:. யூதர்களுக்குமிடையே சண்டை வெடித்தது. துரதிர்ஷ்டவசமான இந்தச் சம்பவம் பற்றி அறிந்த நபியவர்கள் அந்த யூதர்களிடம் சென்று, சமாதான ஒப்பந்தத்தைப் பேணும் வகையில் தாக்குதலை நிறுத்துமாறும் இல்லையேல், குறைஷ்கள் 'பத்ர்' களத்தில் பெற்றது போன்ற அல்லாஹ்வின் தண்டனையை சந்திக்கத் தயாராகுமாறும் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், அந்த யூதர்கள் நபியவர்களின் கோரிக்கையையும் சாபத்தையும் பழித்து, ''நாங்கள் குறைஷ்களைப் போன்றவர்களல்லர்; அல்லாஹ் மீது சத்தியமாக, நீர் எம்மோடு மோத வரும்போது போர் என்றால் என்ன என்பதை நாம் உமக்குப் புரிய வைப்போம்'' என்று அகங்காரத்தோடு கூறினர். உண்மையில் அவர்களது இந்தப் பதில் நபியவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் எதிரான அவர்களது போர்ப் பிரகடனமாகவே இருந்தது.

யூதர்களின் இந்தப் போர்ப் பிரகடனத்தைத் தொடர்ந்து, நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் 'பத்ர்' போரின் பின்னர், ஹிஜ்ரி 2 ஷவ்வால் மாதத்தில் (மார்ச் 624இல்), பனூ கைனுகா.:. யூதர்களுக்கு எதிராகப் படை நடத்திச் சென்றார்கள். முஸ்லிம் படையின் வருகை பற்றி அறிந்த அந்த யூதர்கள் அவர்களது ஒரே புகலிடமாக இருந்த கோட்டையினுள் புகுந்து தாழிட்டுக் கொண்டனர். மதீனாவில், முஸ்லிம்களுக்கெதிராகத் தம்மைக் கிளர்ந்தெழத் தூண்டிய தமது நண்பர்கள் தமக்காகப் பேசி, விடயத்தை சிநேகபூர்வமாகத் தீர்த்து வைப்பார்கள் என்று அவர்கள் நம்பினர். ஆனால், அவர்களது விவகாரத்தில் தலையிட எவருமே முன்வரவில்லை. அவர்களது மீறலுக்காகவும் வன்செயல்களுக்காகவும் அவர்களைத் தண்டிக்க விரும்பிய நபியவர்கள் தமது தோழர்களை அவர்களது கோட்டையை முற்றுகையிடவும் உணவும் நீரும் அவர்களை அடையாமல் தடுக்கவும் அனுப்பி வைத்தார்கள். இந்த முற்றுகை பதினைந்து நாள்கள் வரை நீடித்தது. இறுதியில், தம்மை விடுவித்துக் கொள்ள வழிதெரியாத அந்த யூதர்கள் நிபந்தனையின்றிச் சரணடைந்து, நபியவர்களின் தீர்ப்புக்குக் கட்டுப்பட இணங்கினர். நபியவர்கள் அந்த யூதர்கள் அனைவரையும் வாள்களுக்கு இரையாக்கவே விரும்பினார்கள். ஆனால், அப்போது அங்கே தோன்றிய நயவஞ்சகர் தலைவனான அப்துல்லாஹ் பின் உபை தனது நேசர்களுக்காகப் பரிந்து பேச முன்வந்தான். அண்ணல் அவர்கள் அந்த நயவஞ்சகனுக்குப் பதில் கூற விரும்பவில்லையாயினும், 'மூன்று தினங்களுக்குள் தங்கள் பொருள்களைக் கைவிட்டு மதீனாவிலிருந்து வெளியேறிவிட வேண்டும்' என்ற நிபந்தனை மீது அந்த யூதர்களை விடுவிக்கச்

கைனுகா:: யூதர் வெளியேற்றம்

சம்மதித்தார்கள். இறுதியில்,அவர்கள் சிரியாவிலுள்ள - யூதர்கள் குடியேறி வாழ்ந்து வந்த - அத்ரிஆத் என்னும் இடத்திற்கு நாடு கடத்தப்பட்டனர். இவ்வாறு நாடு கடத்தப்பட்ட யூதர்களின் எண்ணிக்கை சுமார் எழுநூறு ஆகும்.

மதீனாவில் வாழ்ந்த மற்றொரு யூத வர்க்கத்தார் பனூ நழீர் யூதர்களாவர். இவர்கள் பாலைவனச் சோலையின் தென் கிழக்கு மூலையில், அரணால் சூழப்பட்ட பலம்வாய்ந்த கோட்டைகளில் வாழ்ந்து வந்தனர். பிற வர்க்கங்களைச் சேர்ந்த யூதர்களைப் போலவே இவர்களும் இஸ்லாத்தின் செல்வாக்கு வளர்ச்சியையும் விரைவான படர்ச்சியையும் காணச் சகிக்காமல் பொறாமையுற்று, நபியவர்களோடு முடித்திருந்த உடன்படிக்கை விதிகளை மீறும் விதத்தில் செயலாற்றலாயினர். மக்காவின் இறைமறுப்பாளர்களோடு இரகசியமாக இணைந்துகொண்ட இவர்கள் மதீனாவில் அமைதியாக வாழ்ந்த முஸ்லிம்களின் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் குலைப்பதற்குத் தம்மால் இயன்ற வஞ்சகமான வழிகளிலெல்லாம் அவர்களுக்கு உதவினர்; சில சமயங்களில் நபியவர்களை இரகசியமாகக் கொல்வதற்கும் முயன்றனர்.

பனூ நழீர் யூதர்கள்

ஒரு நாள், பனூ நழீர் யூதர்களின் நேசர்களாக இருந்த ஆமிர் வர்க்கத்தைச் சேர்ந்த இருவரை அன்ஸார் முஸ்லிம்களுள் ஒருவரான அம்ர் பின் உமய்யா என்பார் தவறுதலாகக் கொன்றுவிட்டார். இந்தக் கொலைகளுக்குரிய குருதிமுதல் இன்னும் செலுத்தப்படவில்லை. யூதர்கள் நபியவர்களோடு செய்திருந்த ஒப்பந்தப்படி குருதிமுதலின் ஒருபகுதியை பனூ நழீர் யூதர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். எனவே, குபா.:.வுக்கு அருகே வாழ்ந்து வந்த அந்த யூதர்களிடம் நபி (ஸல்) அவர்கள் ஹழ்ரத் அபூபக்ர், ஹழ்ரத் உமர், ஹழ்ரத் அலீ ஆகியோர் உட்படத் தமது தோழர்கள் பதின்மரோடு சென்று, குருதி முதலின் ஒரு பகுதியைச் செலுத்துமாறு கோரினார்கள். மிக நீண்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர், அவர்கள் குருதிமுதலின் தங்கள் பாகத்தைச் செலுத்த இணங்கினார்கள். அதே நேரம், சற்றுத் தூரத்தில் பாதுகாப்பான ஓர் இடத்தில் நின்று கொண்டிருந்த நபியவர்களுக்கு எதிராக ஏதோ ஒரு சதி அங்கே நிகழ்ந்து கொண்டிருந்ததையும் கவனிக்கக் கூடியதாக இருந்தது. அந்த யூதர்கள் அம்ர் பின் ஜிஹ்ரஸ் என்ற மற்றொரு யூதனைக் கோட்டையின் மேல்மாடிக்குச் செல்லுமாறும் அங்கிருந்து பாறைக்கல் ஒன்றை நபியவர்களின் தலைமீது உருட்டி விடுமாறும் இரகசியமாகப் பணித்திருந்தனர். அப்போது நபியவர்கள் கோட்டைக்கு வெளியே மேல்மாடிக்குக் கீழ் இருந்த சுவரில் சாய்ந்தவாறு நின்றிருந்தார்கள். வரவிருந்த ஆபத்தை எப்படியோ உணர்ந்து கொண்ட நபியவர்கள் 'இயற்கைக் கடனை' நிறைவேற்றச் செல்லும் ஒருவரைப்

நபியவர்களுக்கு எதிரான சதி

போல அங்கிருந்து மெல்ல நழுவி, மதீனாவுக்கு வந்து விட்டார்கள். சிறிது நேரத்தில் அவர்களது தோழர்களும் மதீனாவுக்குத் திரும்பி விட்டனர்.

இந்தச் சம்பவத்துக்குச் சில தினங்களுக்குப் பின்னர், நபியவர்கள் பனூ நழீர் யூதர்களின் நேச வர்க்கம் ஒன்றைச் சேர்ந்த முஹம்மத் பின் மஸ்லமா என்ற அன்ஸாரீத் தோழரை அந்த யூதர்களிடம் அனுப்பி, பத்துத் தினங்களுக்குள் தமது உடைமைகளோடு மதீனாவை விட்டுச் செல்லுமாறு அவர்களைப் பணித்தார்கள். அவர்களும் நபியவர்களின் ஆணைக்குப் பணிய இணங்கினர். ஆனால், அப்போது நயவஞ்சகர் தலைவனான அப்துல்லாஹ் பின் உபய் நாடுகடத்தல் தண்டனையிலிருந்து அவர்களை விடுவிக்க முன்வந்தான்; சரணடைய வேண்டாம் என்றும் முஸ்லிம்களை எதிர்க்குமாறும் அவன் அந்த யூதர்களுக்கு ஆலோசனை வழங்கினான்; சகோதர யூதர்களான பனூ குறைளா யூதர்களும் அவர்களது உதவிக்கு வருவார்கள் என்றும் தானும் தனது கூட்டத்தாரோடும் தனது நேச வர்க்கமான பனூ ஘தபான் வர்க்கத்தாரோடும் வந்து அவர்களுக்கு உதவிசெய்வதாகவும் ஆசை வார்த்தைகள் கூறி, அவர்களை முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டான். ஆனால் அவர்களது எதிர்பார்ப்பு பூஜ்யத்திலேயே முடிந்தது. முஸ்லிம்களால் அவர்கள் முற்றுகையிடப்பட்டபோது, அவர்களது நம்பிக்கை நட்சத்திரமாக இருந்த அப்துல்லாஹ் பின் உபய்யோ பனூ குறைளா யூதர்களோ அவர்களுக்கு உதவி செய்யத் தமது விரலைக் கூட அசைக்கவில்லை.

அப்துல்லாஹ் பின் உபய்யின் பொய்யான வாக்குறுதிகளால் கவரப்பட்ட பனூ நழீர் யூதர்களின் தலைவனான ஹுயய்யி பின் அக்தப் என்பான் நபி (ஸல்) அவர்களுக்கு 'நாங்கள் எங்கள் வீடுகளை விட்டு வெளியேற மாட்டோம்' என்றும் 'நீங்கள் விரும்பியதைச் செய்து கொள்ளலாம்' என்றும் செய்தி அனுப்பி, இஸ்லாத்திற்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தான். எனவே, நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 4 றபீஉல் அவ்வல் மாதத்தில் (செப்டம்பர் 625 இல்), அந்த யூதர்களுக்கு எதிராகப் படையெடுத்துச் சென்று, அவர்களது கோட்டைகளை முற்றுகையிட்டார்கள். இந்த முற்றுகை பதினைந்து தினங்கள் நீடித்தது. பின்னர், அப்துல்லாஹ் பின் உபய்யினால் கைவிடப்பட்ட யூதர்கள் முஸ்லிம்களிடம் சரணடைந்தனர். இறுதியில், அவர்கள் அசையாச் சொத்துக்களையும் ஆயுதங்களையும் தவிர, அவர்களது உடைமைகள் அனைத்தோடும் மதீனாவிலிருந்து நாடுகடத்தப்பட்டனர். அவர்களுட் பலர் மதீனாவுக்கு வடக்கே இருந்த யூதக் குடியேற்றப் பிரதேசமான கைபருக்குச் சென்றனர். ஏனையோர் தமது யூதச் சகோதரர்கள் வாழ்ந்த சிரியாவில் குடியேறினர்.

யூதர்கள் நாடு கடத்தப்படல்

உஹுத் போர் முடிவுற்ற பின்னர், குறைஷ்கள் மக்காவுக்குத்

திரும்பினர். அந்தப் போரில் அவர்களுக்கு வெற்றி கிடைத்த போதிலும், அதற்காக அவர்கள் பெற்ற இழப்புக்கள் பயங்கரமானவையாகவும் ஈடுசெய்ய முடியாதவையாகவும் இருந்தமையால், அவர்கள் அதனை ஓர் உண்மையான வெற்றியாகக் கருதவில்லை. எனவே, அவர்கள் ஹிஜ்ரி 5 (கி.பி. 627) இல், இஸ்லாத்தின் வேரை அறுக்க மற்றொரு பாரிய படையெடுப்பு முயற்சியில் இறங்கினர். இம்முறை அவர்கள் புகழ்பெற்ற நாடோடி வர்க்கமான ஘தபான்களோடும் தங்கள் துரோகத்திற்காக மதீனாவிலிருந்து நாடுகடத்தப்பட்ட பனூ நழீர் யூதர்களோடும் வேறு சில நாடோடி வர்க்கங்களோடும் கூட்டுச் சேர்ந்திருந்தனர். நாடோடிகள் நகர மக்களோடு கூட்டுச் சேர்ந்து கொண்டமை அறேபியாவின் படை வரலாற்றில் ஒரு புதிய தோற்றப்பாடாகும். பதினாயிரம் வீரர்களையும் அறுநூறு குதிரைகளையும் கொண்ட இந்தக் கூட்டுப்படைகள் அபூ ஸுப்யானின் பொதுத்தலைமையின்கீழ் மதீனாவை நோக்கிப் புறப்பட்டன. பயங்கரமான இந்தக் கூட்டினைப்பு பற்றியும் அவர்கள் மக்காவிலிருந்து மதீனா நோக்கிப் புறப்பட்டமை பற்றியும் அறிந்த நபியவர்கள் தமது தோழர்களை அவசரமாகக் கூட்டி, மதீனாவின் பாதுகாப்பு சம்பந்தமாக ஆலோசனை நடத்தினார்கள். பாரசீகப் போர் நுட்பங்களோடு பரிச்சயமுடையவராக இருந்த பாரசீகரும் நபித்தோழருமான ஸல்மான் அல் பாரிஸீ 'நகரத்தைச் சூழ அகழ் ஒன்றை வெட்டி மதீனாவைப் பாதுகாக்கலாம்' என்று ஆலோசனை கூறினார். அவரது ஆலோசனை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்படவே, அகழ் வெட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அகழ்ப் போர்

மதீனா நகரம் தெற்கு, மேற்கு, கிழக்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் எரிமலைக் குழம்புப் பாறைச் சமவெளி (ஹர்ரா) களாலும் குன்றுகளாலும் இயற்கையாகவே பாதுகாக்கப்பட்டிருந்தது. ஆங்காங்கே வீடுகள் அமைந்து, திறந்தவெளியாகக் காணப்பட்ட வடக்குப் பக்கம் மட்டும் எத்தகைய இயற்கைப் பாதுகாப்பும் இன்றி இருந்தது. இந்தப் பக்கத்தை மட்டும் பாதுகாப்பதற்காக நபியவர்கள் ஆழமான நீள் அகழ் ஒன்றைத் தோண்ட ஆணையிட்டார்கள். வேலை ஆரம்பமாயிற்று. எதிரிகள் வருவதற்கு முன்பே அகழை அவசரமாகத் தோண்டி முடித்து விட வேண்டும் என்னும் எண்ணத்தில், சிறுவர்கள் உட்பட அனைவரும் இந்த வேலையில் ஈடுபட்டனர். நபி முஹம்மத் (ஸல்) அவர்களும் தமது தோழர்களோடு சேர்ந்து வேலை செய்து, அவர்களை ஊக்குவித்தார்கள். ஆறு தினங்களில் அகழ் வெட்டி முடிக்கப்பட்டது. நபியவர்கள் ஸுல.·. மலைப்பக்கத்தில், அகழிக்குப் பின்னால் தமது மூவாயிரம் தோழர்களோடு நின்று கொண்டார்கள். பெண்களும் குழந்தைகளும் பாதுகாப்புக்காக யூதக் குடியிருப்புப் பகுதியில் அமைந்திருந்த கோட்டைகளுக்கு அனுப்பப்பட்டனர். பனூ குறைளா யூதர்கள் அவர்களைத் தாக்கக் கூடும் என்ற அச்சம் இருந்தமையால், ஸலமா பின் அஸ்லம் என்ற நபித்தோழரின் தலைமையில் இருநூறு வீரர்களும் காவலுக்காக அங்கே நிறுத்தப்பட்டனர்.

இதற்கிடையில், மதீனாவை நோக்கிப் படையெடுத்துவந்த பகைவர்கள் முஸ்லிம்களை 'உஹுதி'ல் சந்திக்கலாம் என்ற நம்பிக்கையில் அங்கு சென்றனர். ஆனால், அங்கு எவரும் இல்லாமையால், மதீனா நகரை நோக்கி அவர்கள் வந்தனர். அங்கே தமக்கு முன்னால் கடக்கமுடியாத ஆழமான அகழ் வெட்டப்பட்டிருந்தமையைக் கண்டு, அதிர்ச்சியடைந்த அவர்கள் புதுமையான இந்தப் போர் உத்தியினால் வெறுப்புற்றனர். நகரினுள் நுழைய வழி எதுவும் இல்லாமையால், அவர்கள் அகழிக்கு முன்னால் முகாமிட்டு, அகழியைக் காவல் செய்து கொண்டிருந்த முஸ்லிம்களை அம்புகளால் தாக்கலாயினர். அவர்கள் அகழியைக் கடக்க முயன்ற போதெல்லாம் முஸ்லிம் வில்வீரர்கள் தமது அம்புகளால் அவர்களை அடித்து விரட்டினர். எதிரிப் படையணிகளின் இந்த முற்றுகை வாரக்கணக்கில் நீடித்தது. இந்த முற்றுகையின் போது முஸ்லிம்கள் பசியாலும் பயத்தாலும் பெரிதும் வருந்தினர். பின்னாலிருந்து யூதர்கள் தாக்கலாம் என்ற பயம் ஒரு புறம்; முன்னாலிருந்து கூட்டுப் படைகள் தாக்கலாம் என்ற பயம் மறுபுறம். ஆயினும், நிலைமை எதிரிகளுக்குச் சாதகமாக இருக்கவில்லை. அவர்களது போர்ச் செலவுகள் அதிகமாயின; அவர்களது உணவுப்பொருட்களும் தீர்ந்து போய்க் கொண்டிருந்தன. நீண்டகால முற்றுகை அவர்களைக் களைப்படையச் செய்தது. இதே சமயம், மூன்று தினங்களாகக் கடலிலிருந்து வீசிய கடும் புயல் அவர்களது நிலைமையை மேலும் மோசமாக்கிற்று. கடும் மழையோடு வீசிய புயற் காற்றில் அவர்களது கூடாரங்கள் பறந்தன; கயிறுகள் அறுந்தன; முளைகள் உடைந்தன; அவர்களது குதிரைகளும் ஒட்டகைகளும் மடிந்தன. இறுதியில் சுமார் ஒருமாதகால முற்றுகையின் பின்னர், குறைஷ்களும் அவர்களது கூட்டாளிகளும் மனச் சோர்வும் உடற் களைப்பும் அடைந்தவர்களாக, இரவின் இருளோடு இருளாகக் களத்திலிருந்து பின் வாங்கிச் சென்றனர். இந்தப் போர் இஸ்லாமிய வரலாற்றில் 'ஙஷ்வதுல் கன்தக்' (அகழ்ப் போர்) என்று அழைக்கப்படுகிறது. இந்தப் போரில், இஸ்லாத்திற்கு எதிராகப் பல வர்க்கங்களைச் சேர்ந்த அறேபியர் இணைந்திருந்தமையால், இது 'ஙஷ்வதுல் அஹ்ஷாப்' (கூட்டிணைந்தோரின் போர்) என்றும் அழைக்கப்படுகிறது. இது ஹிஜ்ரி 5 துல் க.'.தா மாதத்தில் (பெப்ரவரி 627இல்) நிகழ்ந்தது.

குறைளா யூதர் வெளியேற்றம்

இந்தப் போரின் போது, மதீனாவில் எஞ்சியிருந்த பனூ குறைளா யூதர்கள் தங்கள் நடுநிலைப் போக்கைக் கைவிட்டு, எதிரிகளை இரகசியமாக ஆதரித்தனர். மதீனாவின் தென் கிழக்குப் பகுதியில் வாழ்ந்து வந்த இந்த யூதர்கள் ஏனைய யூதர்களைப் போல நபி (ஸல்) அவர்களோடு சமாதான உடன்படிக்கை செய்திருந்தனர். ஆனால், அவர்கள் அந்த உடன்படிக்கை விதிகளுக்கு மதிப்பு அளிக்கவில்லை. உடன்படிக்கை விதிகளின்படி, வெளியாரின் படையெடுப்புக்கு எதிராக முஸ்லிம்களுக்கு உதவி செய்ய

அவர்கள் கடமைப்பட்டிருந்தனர். ஆனால், அகழ்ப் போரில், முற்றுகையின் போது, இந்த யூதர்கள் உடன்படிக்கையை மீறவும் குறைஷ்களோடு இணைந்து கொள்ளவும் மக்காவாசிகளாலும் ஏற்கனவே நாடுகடத்தப்பட்ட பனூ நழீர் யூதர்களாலும் தூண்டப்பட்டனர். கோட்டைகளில் பாதுகாப்புக்காகத் தங்கியிருந்த முஸ்லிம் பெண்களையும் குழந்தைகளையும் கொன்றுவிட்டு, அகழியைக் காவல் செய்து கொண்டிருந்த முஸ்லிம் வீரர்களைத் தாக்குவதற்கும் இவர்கள் ஏவப்பட்டிருந்தனர். இவர்களது துரோக உணர்வின் விளைவாக உருவான நிலைமை முஸ்லிம்களுக்கு மிகப் பயங்கரமானதாக இருந்தது. முன்னாலிருந்து எதிரிகளின் தாக்குதல் அபாயத்தை எண்ணிப் பயந்த அதேவேளையில், முஸ்லிம்கள் பனூ குறைளா யூதர்களிடையே பாதுகாப்புக்காகக் கோட்டைகளில் தங்கியிருந்த தமது பெண்களையும் குழந்தைகளையும் எண்ணிக் கலங்கிக் கொண்டிருந்தனர். இந்த யூதர்களின் துரோகம் எந்த வேளையிலும் மதீனாவின் அழிவுக்கு வழிகோலலாம் என்று நபியவர்கள் பெரிதும் பயந்தார்கள். எனவே, அவர்கள் அகழ்ப் போரிலிருந்து திரும்பிய உடனேயே, பனூ குறைளா யூதர்களைத் தண்டிக்கும் எண்ணத்தோடு அவர்களுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தார்கள்.

நபியவர்களின் போர்ப் பிரகடனம் பற்றிக் கேள்விப்பட்டவுடனேயே, தங்கள் குற்றத்தை ஏற்கனவே உணர்ந்திருந்த அந்த யூதர்கள் தங்கள் கோட்டைகளுக்குள் புகுந்து தாழிட்டுக் கொண்டனர். முதலில், அவர்கள் உடன்படிக்கையை மீறியமைக்குக் காரணம் காட்டுமாறு நபியவர்களால் கேட்கப்பட்டனர். அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்படவே, அந்த யூதர்கள் முஸ்லிம்களால் முற்றுகையிடப்பட்டனர். சுமார் ஒரு மாதகால முற்றுகையின் பின்னர், நிபந்தனையின்றிச் சரணடைந்த அந்த யூதர்கள் தாம் நட்புறவு வைத்திருந்த அவ்ஸ் வர்க்கத்தின் தலைவர் ஸ.'.த் பின் முஆத் என்பவராலேயே தமது தலைவிதி தீர்மானிக்கப்படல் வேண்டும் என்று கோரினர். அவர்களது கோரிக்கை நபியவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அகழ்ப் போரில் பெற்ற படுகாயங்களின் விளைவாக, அடுத்த நாள் மரணிக்கவிருந்த ஸ.'.த் பின் முஆத் நபித் தோழர்களால் அங்கே கொண்டுவரப்பட்டார். மரணப்படுக்கையில் படுத்தவாறே அவர் யூதர்களின் 'தௌராத்' வேதத்தின்படி, யூதர்களுள் வளர்ந்த ஆண்கள் கொல்லப்படல் வேண்டும் என்றும் அவர்களது பெண்களும் சிறுவர் - சிறுமியரும் அடிமைகளாக்கப்படல் வேண்டும் என்றும் அவர்களது உடைமைகள் பறிக்கப்படல் வேண்டும் என்றும் தீர்ப்புக் கூறினார்.[46] இந்தத்

46. "நீ ஒரு பட்டணத்தின் மேல் யுத்தம் பண்ண நெருங்கும் போது, அந்தப் பட்டணத்தாருக்குச் சமாதானம் கூறக் கடவாய். அவர்கள் உமக்கு சமாதானமான உத்தரவு கொடுத்து வாசலைத் திறந்தால், அதிலுள்ள ஜனங்கள் எல்லாரும் உனக்குப் பகுதி கட்டுகிறவர்களாகி, உனக்கு ஊழியம் செய்யக் கடவர்கள். அவர்கள் உன்னோடே சமாதானப்படாமல் உன்னோடே யுத்தம் பண்ணுவார்களானால், நீ அதை முற்றுகை போட்டு, உன் தேவனாகிய கர்த்தர் அதை உன் கையில் ஒப்புக் கொடுக்கும் போது, அதிலுள்ள புருஷர்கள் எல்லாரையும் பட்டயக் கருக்கினால் வெட்டி, ஸ்திரீகளையும் குழந்தைகளையும் மிருக ஜீவன்களையும் மாத்திரம் உயிரோடே வைத்து, பட்டணத்திலுள்ள எல்லாவற்றையும் கொள்ளையிட்டு, உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு ஒப்புக் கொடுத்த உன் சத்துருக்களின் கொள்ளைப் பொருளை அநுபவிப்பாயாக" (உபாகமம் 20:10–14)

தீர்ப்பை அவர் மொழிந்த போது, நபி (ஸல்) அவர்கள், ''அல்லாஹ்வின் தீர்ப்பைக் கொண்டு நீர் அவர்களுக்குத் தீர்ப்பளித்து விட்டீர்'' என்று கூறினார்கள். (புகாரீ)

அடுத்த நாள், பனீ குறைளா யூதர்களுள் வளர்ந்த ஆண்கள், ஒருவர் பின் மற்றவராகத் தலை துண்டிக்கப்பட்டு, மதீனாவின் சந்தையில் தோண்டப்பட்ட அகழ்களில் புதைக்கப்பட்டனர். இவ்வாறு கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை இப்ன் ஸ.்.தின் கூற்றுப்படி அறுநூற்றுக்கும் எழுநூற்றுக்கும் இடைப்பட்டதாகும்.[47] இவர்களுள் ஒருவர் மட்டுமே பெண். முற்றுகையின் போது, கல்லாத் பின் ஸுவைத் என்ற நபித்தோழரை அவர்மீது கோட்டையின் மேல் தளத்திலிருந்து மாவரைக்கும் கல் ஒன்றை உருட்டி விட்டுக் கொன்றமைக்காக அவள் கொல்லப்பட்டாள். இந்த யூதர்களின் பெண்களும் குழந்தைகளும் அடிமைகளாக்கப்பட்டனர். அவர்களது உடைமைகள் அனைத்தும் சுவீகாரம் செய்யப்பட்டன. பனூ குறைளா யூதர்கள் கொல்லப்பட்டமை உண்மையில், மக்கா குறைஷ்கள்மீது விதிக்கப்பட்ட ஒரு தண்டனையாகவே இருந்தது. இந்தச் சம்பவம் ஹிஜ்ரி 5 துல் ஹஜ் மாதத்தில் (மார்ச் 627 இல்) நிகழ்ந்தது.

நபி (ஸல்) அவர்கள் இந்த யூதர்கள் விடயத்தில் இவ்வாறு நடந்து கொண்டமை குறித்து மேலை நாட்டு விமர்சகர்கள் சிலர் காரசாரமாக விமர்சித்து, அவர்கள் மீது குற்றம் சுமத்தியிருக்கின்றனர். இந்த விடயத்தில்

கீழைத்தேசவாதிகளின் குற்றச்சாட்டு

நபியவர்கள் இரக்கமற்றவர்களாக நடந்து கொண்டார்கள் என்பது அவர்களது குற்றச்சாட்டு. ஆனால், அவர்களது குற்றச்சாட்டு ஆதாரமற்றதும் உண்மைக்கு அப்பாற்பட்டதுமாகும். இந்தத் தண்டனை பற்றி கீழைத் தேசவாதிகளுள் ஒருவரான ஸ்டான்லி லேன் பூல் என்பார் தமது 'குர்ஆனிலிருந்து தெரியப்பட்டவை' (Selections from the Koran) என்ற நூலில் குறிப்படுகையில், ''அது, புறச் சமயிகளுக்கு எதிரான குருவாட்சிப் படைத் தளபதிகளுக்கு அல்லது தூய்மைவாதத்தைக் கொண்ட ஆகஸ்தீனிய யுகத்தின் செயல்களுக்கு உரிய ஒரு கொடிய தண்டனையே ஆகும். ஆனால், இந்த மனிதர்கள் இழைத்த குற்றம் முற்றுகைக் காலத்தில் அரசுக்கு எதிராகச் செய்யப்பட்ட துரோகம் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். மேலும், வெல்லிங்டனின் படையினர் தம்மைக் கைவிட்டவர்களோடும் சூறையாடியவர்களோடும் எப்படி நடந்து கொண்டு, அவர்களின் உடல்களை மரங்களில் தொங்கவிட்டனர் என்பதைப் படித்திருப்போர் துரோகம் இழைத்த ஒரு கிளைக் குலத்தாருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமை குறித்து

47. பெரும்பான்மையான வரலாற்றாசிரியர்கள் இவ்வாறு கொல்லப்பட்ட யூதர்களின் எண்ணிக்கை 600 என்றே குறிப்பிட்டுள்ளனர். ஆனால், நம்பத் தகுந்த 'ஹதீத்'களில் இவர்களின் எண்ணிக்கை 400 என்று காணப்படுகிறது.

ஆச்சரியப்படத் தேவையில்லை'' என்று எழுதுகிறார்.[48] மேலும், அவர் தமது 'நபி முஹம்மதின் சொற்பொழிவுகளும் மேசைப் பேச்சும்' என்ற நூலின் நூன்முகத்தில் ''முஹம்மத் தமது அரசில் கலகக் குழுக்களை அடக்குவதற்காக மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகளுக்காகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்; யூதர்கள்மீது அவர் விதித்த நாடுகடத்தல் தண்டனைகளும் மரண தண்டனைகளும் (அவரது) பழிவாங்கும் இயல்பின் சான்றுகளாகவும் கருதப்பட்டு வருகின்றன. ஆனால், இந்த விடயம் பற்றிய உண்மைகளைப் பக்க சார்பின்றி ஆராய்ந்தால், முஸ்லிம்களின் சமயத்தையும் அரச நிறுவனத்தையும் பாதுகாப்பதற்குக் கடுமையான இந்த நடவடிக்கைகள் தேவைப்பட்டன என்பதும் ஆரம்பத்திலேயே முஹம்மதால் கலகத்திற்குக் கொடுக்கப்பட்ட பலத்த அடிகளே பின்னர் குருதி சிந்துதலைத் தடுத்தன என்பதும் தெரியவரும்'' என்று எழுதியிருக்கிறார்.[49] உண்மையில், அகழ்ப்போரின் போதும் கோட்டை முற்றுகையின் போதும் இந்த யூதர்கள் முஸ்லிம் அரசுக்கெதிராக மேற்கொண்ட சதி முயற்சிகள் வெற்றி பெற்றிருந்தால், மதீனா அரசும் இஸ்லாமிய இயக்கமும் முற்றாக அழிந்து போயிருக்கும்.

பனூ குறைளா யூதர்கள் அழிக்கப்பட்ட பின்னரே, மதீனாவில் நிலைமை நபியவர்களுக்கும் அவர்களது தோழர்களுக்கும் முற்றிலும் சாதகமானதாய் அமைந்தது. மதீனாவுக்கு உள்ளேயும் புறத்தேயும் முஸ்லிம்கள் முழுமையான பாதுகாப்போடு வாழும் நிலை உருவானது; இஸ்லாம் தீபகற்பம் எங்கணும் விரைவாகப் பரவத் தொடங்கிற்று; இஸ்லாம்

கிறித்தவர்களுக்கு பட்டயம்

ஓர் உண்மையான தெய்விக மதம் என்பதை உணர்ந்து, மக்கள் வர்க்கம் வர்க்கமாக நபியவர்களிடம் வந்து, இஸ்லாத்தைத் தழுவிச் சென்றனர்; மதீனாவின் சுற்றுப்புறங்களில் வாழ்ந்த பல்வேறு வர்க்கத்தாருடன் புதிய நட்புறவுகள் செய்யப்பட்டன; இஸ்லாத்தின் அரசியல், சமூக, சமய ஆதிக்கம் அறேபியாவில் சிறிது சிறிதாக வளர்ந்தது.

நபியவர்கள் ஹிஜ்ரி 6 (கி.பி. 628) இல், கிறித்தவர்களுக்கென பட்டயம் ஒன்றைத் தயாரித்து வழங்கினார்கள். அது அவர்களுக்கு எல்லா உரிமைகளையும் அளித்தது. அந்தப் பட்டயத்தின் மூலம் கிறித்தவர்களையும் அவர்களது கோயில்கள், துறவு மடங்கள், மதகுருமார் இல்லங்கள் ஆகியவற்றையும் அவர்களது பிற உடைமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பை நபி (ஸல்) அவர்கள் தாமே ஏற்றுக்கொண்டதோடு, தமது சீடர்கள் மீதும் அதனைக் கடமையாக்கினார்கள். அந்தப் பட்டயத்தில்

48. Quoted in Dr.Ahamed A. Galwash's The Religion of Islam, Vol.I p.70
49. S. Lane-Poole, The Speeches and Table -Talk of the Prophet Muhammad , p.27

மேற்றிராணியாரோ கிறித்தவத் துறவிகளோ அவர்களது இடங்களிலிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள் என்றும் எந்தக் கிறித்தவனும் அவனது மதத்தைத் துறக்க வற்புறுத்தப்படமாட்டான் என்றும் அவர்களது கோயில்கள் அழிக்கப்படவோ பள்ளிவாயில்களாக மாற்றப்படவோ மாட்டா என்றும் முஸ்லிம்கள் அளிக்கும் பாதுகாப்புக்குப் பதிலாக நியாயமான தலைவரி (ஜிஷ்யா) செலுத்தப்படல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தன. கிறித்தவர்களின் ஆலயங்களையும் துறவு மடங்களையும் திருத்தி அமைக்கும் பணிகளில் முஸ்லிம்கள் அவர்களுக்கு உதவுவர் என்றும் அதில் கூறப்பட்டிருந்தது. உண்மையில், இது முஸ்லிம்கள் அவர்களது மார்க்கத்தை அங்கீகரித்ததன் அடையாளமாகவன்றி, முஸ்லிம்களின் நேசர்கள் என்ற வகையில் செய்யப்படும் வெறும் உதவியாகவே கருதப்பட்டது. இந்தப் பட்டயம் முஸ்லிம்களைத் திருமணம் செய்து கொண்ட கிறித்தவப் பெண்கள் தொடர்ந்தும் தமது சொந்த மதத்திலேயே இருக்க அவர்களை அனுமதித்தது; பலவந்தமாக மத மாற்றம் செய்யப்படமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தையும் அவர்களுக்கு அளித்தது. இந்தப் பட்டயத்தைப் பேணுவதும் அதன் விதிகளை மீறாதிருப்பதும் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாக்கப்பட்டது.

ஹிஜ்ரி 6 இல், ஒருநாள் நபி (ஸல்) அவர்கள் தாமும் தமது தோழர்களும் மக்காவினுள் பிரவேசித்து, புனித க.்.பாவை இடம் சுற்றுவதைப் போலக் கனவு கண்டார்கள்.[50] இந்தக் கனவை அல்லாஹ்வால் தமக்கு இடப்பட்ட ஓர் ஆணையாகக் கருதிய நபியவர்கள் இது பற்றித் தமது தோழர்களுக்கு அறிவித்து, மக்காவுக்குச் செல்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளலானார்கள். அதே ஆண்டு துல் க.்.தா மாதம் (மார்ச் 628), நபி (ஸல்) அவர்கள் 400 பெண்கள் உட்பட 1400 தோழர்களோடும் பலிப் பிராணிகளோடும் 'உம்ரா' கடமையை[51] நிறைவேற்றுவதற்காக மக்காவை நோக்கிப் பயணமானார்கள். அறேபியரின் வழக்கப்படி பிரயாணத்தின் பிரிக்க முடியாத ஒரு பகுதியாகக் கருதப்பட்ட உறையில் போடப்பட்ட வாளைத் தவிர, வேறு எந்த ஆயுதத்தையும் தம்மோடு கொண்டுவரக் கூடாது என்று நபியவர்கள் முஸ்லிம்களுக்கு ஏற்கனவே ஆணை பிறப்பித்திருந்தார்கள். அவ்வாறே அவர்களும் நிராயுதபாணிகளாகவே நபியவர்களோடு மக்காவுக்குச் சென்றனர். முஸ்லிம்கள் மீது இன்னமும் காழ்ப்பும் கோபமும் உடையவர்களாக இருந்த மக்கா குறைஷ்கள் நபியவர்களின் வருகை பற்றி அறிந்து, அவர்களை

ஹுதைபிய்யா உடன்படிக்கை

50. தப்ஸீர் அல் தபரீ, பாகம் XXVI, பக்கம் .107;

51. உம்ரா என்பது ஹஜ் கடமையைப் போன்ற ஒரு வணக்கமாகும். ஹஜ் கடமையைப் போல இந்த வணக்கத்தை துல் ஹஜ் மாதத்தில் மட்டுமே நிறைவேற்ற வேண்டுமென்றில்லை. எந்த மாதத்திலும் எந்த நேரத்திலும் இதனை நிறைவேற்றலாம். கஃபாவைச் சுற்றி வருதல், மினா – மர்வா குன்றுகளுக்கிடையில் ஓடுதல், தலை முடியைக் கத்தரித்தல், ஆகியவற்றைக் கொண்டது இந்த வணக்கம்.

நகரினுள் பிரவேசிக்க விடாமல் தடுப்பதற்காகப் படை ஒன்றை அவசர அவசரமாகத் திரட்டினர். முஸ்லிம்கள் தமது நகரத்தைத் தாக்கிவிடலாம் என்று அந்த குறைஷ்கள் பயந்தனர். துல் க.்.தா மாதத்தைப் போரோய்வு காலமாகக் கருதி அமைதியாக இருத்தல் அறேபியரின் மிகப் பண்டைய வழக்கமாக இருந்தமையால், அவர்கள் அப்போது சண்டையிடுவதற்கு ஆயத்தமாகவும் இருக்கவில்லை. எனவே, அவர்கள் நபியவர்களை நகரினுள் நுழையவிடாமல் தடுக்க வந்தனர். முஸ்லிம்கள் மக்காவுக்குத் தென்மேற்கே சுமார் ஐந்து அல்லது ஆறு மைல் தொலைவில் - நகரின் ஒரு விளிம்பில் - அமைந்துள்ள அல் ஹுதைபிய்யா என்ற இடத்தை அடைந்தபோது, குறைஷ்கள் நபியவர்களைத் தடுத்து, மதீனாவுக்குத் திரும்பிச் செல்லுமாறு வேண்டினர். நபியவர்கள் குஷாஆ வர்க்கத்தைச் சேர்ந்தவரும் பின்னர், ஹிஜ்ரி 8 இல் மக்கா வெற்றியின் போது இஸ்லாத்தைத் தழுவியவருமான புதைல் பின் வர்கா.். என்பாரை, குறைஷ் தலைவர்களிடம் அனுப்பி, தாங்கள் 'உம்ரா' கடமையை நிறைவேற்றவேயன்றிப் போர் செய்யும் எண்ணத்தோடு வரவில்லை என்று தெரிவித்தார்கள். ஆனால், அச்சமுற்றிருந்த அவர்கள் முஸ்லிம்கள் நகரினுள் பிரவேசிப்பதை அனுமதிக்க விரும்பவில்லை. எனவே, அவர்கள் தங்கள் தூதராக உர்வா பின் மஸ்ஊத் அல் தகபீ என்பாரை சமாதான உடன்படிக்கை ஒன்று செய்யும் எண்ணத்தோடு அதன் நிபந்தனைகள் பற்றிக் கலந்துரையாட நபியவர்களிடம் அனுப்பி வைத்தனர். நபியவர்கள் தங்கியிருந்த முகாமில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. பேச்சுவார்த்தையின் போது, ஒரு தடவை உர்வா நபித்தோழர்களின் விசுவாசத் தன்மை பற்றித் திருப்தியற்ற குறிப்பு ஒன்றை வெளியிட்டதோடு நபியர்களின் தாடியையும் பிடிக்க முயன்றார். இது ஹழ்ரத் அபூபக்ருக்கும் ஹழ்ரத் முஃகீரா பின் ஷு.்.பாவுக்கும் ஆத்திரத்தைத் தரவே பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தன. நபித்தோழர்கள் நபியவர்கள் மீது காட்டிய வியத்தகு ஈடுபாட்டால் கவரப்பட்ட உர்வா, குறைஷ்களிடம் திரும்பிச் சென்று, "நான் கிஸ்ராவின் அரசவைக்கும் கைஸரின் அரசவைக்கும் நஜாஷீயின் அரசவைக்கும் சென்றிருக்கிறேன். ஆனால், அல்லாஹ்வின் மீது சத்தியமாக, முஹம்மதின் தோழர்கள் முஹம்மதுக்குக் கண்ணியம் செய்யும் அளவுக்கு எந்த அரசரையும் அவரது பிரதானிகள் கண்ணியம் செய்ததை நான் கண்டதில்லை. அவர் எச்சில் உமிழ்ந்தால், அவரது தோழர் எவரேனும் அதனைத் தம் உள்ளங்கையில் பெற்றுத் தமது முகத்திலும் உடலிலும் தடவிக் கொள்கின்றனர். அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டால் அதனை அவர்கள் விரைந்து செய்கின்றனர். அவர் அங்க சுத்தி (வுழு) செய்தால், அங்க சுத்தி செய்த நீருக்காக அவர்கள் போட்டியிடுகின்றனர். அவர் முன்னால் அவர்கள் பேசும் போது

தங்கள் குரலைத் தாழ்த்திக் கொள்கின்றனர். அவருக்குக் கண்ணியம் அளிக்கும் பொருட்டு அவர்கள் அவரைத் தம் விழிகளை உயர்த்திக் கூடப் பார்ப்பதில்லை. நிச்சயமாக, அவர் உங்களுக்கு நேர்வழியையே நல்குகிறார். அதனை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறினார். (புகாரி)

பைஅதுர் ரிழ்வான்

இறுதியில், நபி (ஸல்) அவர்கள் தமது மருகர் ஹழ்ரத் உத்மான் பின் அப்பானை சமாதான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ள குறைஷ்களைத் தூண்டும் பொருட்டு தமது தூதமைச்சராக அவர்களிடம் அனுப்பிவைத்தார்கள். ஆனால், குறைஷ்கள் அவரைக் கைது செய்து, தடுப்புக் காவலில் வைத்து விட்டனர். முஸ்லிம்கள் ஹழ்ரத் உதுமானின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த வேளை, குறைஷ்கள் அவரைக் கொன்று விட்டனர் என்றொரு வதந்தி அவர்களை எட்டியது. இதனால் நிலைகுலைந்து போன முஸ்லிம்கள் அங்கிருந்த மரத்தின் கீழ் அமர்ந்து ஒய்வு எடுத்துக்கொண்டிருந்த நபியவர்களிடம் சென்று, ''நாங்கள் ஹழ்ரத் உதுமானின் கொலைக்குப் பழி வாங்குவோம்"என்று அவர்கள் கரம்பற்றிச் சூள் உரைத்தனர். இஸ்லாமிய வரலாற்றில் இந்தச்சூள் 'பைஅதுர் ரிழ்வான்' என்று அழைக்கப்படுகிறது. இந்தச் சூள் பற்றி அல்லாஹ் தனது அல் குர்ஆனில், *''அந்த மரத்தினடியில் உம்மிடம் வாக்குறுதி செய்த விசுவாசிகளைப்பற்றி அல்லாஹ் திருப்தி அடைந்தான். அவர்களின் இதயங்களிலிருந்ததை நன்கறிந்து, ஆறுதலையும் அவர்கள் மீது சொரிந்தான். விரைவான ஒரு வெற்றியையும் அவர்களுக்குக் கொடுத்தான்''* (48:18) என்று கூறுகிறான். குறைஷ்கள் முஸ்லிம்களின் இந்தச்சூள் பற்றிக் கேள்வியுற்றதும், ஹழ்ரத் உதுமானை விடுதலை செய்து விட்டனர்.

பின்னர், குறைஷ்கள் 'கதீபுல் குறைஷ்' (குறைஷ்களின் பேச்சாளர்) என அழைக்கப்பட்ட ஸுஹைல் பின் அம்ர் என்பாரைத் தமது தூதராக நபியவர்களோடு சமாதான உடன்படிக்கை செய்து கொள்வதற்கு வேறு சிலருடன் அனுப்பிவைத்தனர். இறுதியில், நீண்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர், முஸ்லிம்களுக்கும் குறைஷ்களுக்குமிடையே சமாதான உடன்படிக்கை ஒன்று முடிக்கப்பெற்றது. இந்த உடன்படிக்கை பின்வரும் நிபந்தனைகளை உள்ளடக்கியதாக இருந்தது.

1. முஸ்லிம்கள் இந்த ஆண்டு 'உம்ரா' கடமையை நிறைவேற்றாமல் மதீனாவுக்குத் திரும்பி விடல் வேண்டும்.
2. அடுத்த ஆண்டு அவர்கள் உறைகளில் போடப்பட்ட வாள்களைத் தவிர, வேறு எந்த ஆயுதமும் இல்லாமல்

மக்காவுக்கு யாத்திரை மேற்கொண்டு வரலாம். ஆனால் மூன்று தினங்களுக்கு மேல் அவர்கள் அங்கு தங்கியிருத்தல் கூடாது. அத்தினங்களில் மக்காவாசிகள் நகருக்கு வெளியே சென்று விடுவர்.
3. அடுத்த பத்து ஆண்டுகளுக்கு இருதிறத்தாருக்குமிடையே உள்ள சகல பகைமைகளும் நிறுத்தப்படல் வேண்டும்.
4. மக்காவிலிருந்து எவரேனும் ஒருவர் தமது பாதுகாவலரின் அல்லது வர்க்கத் தலைவரின் அனுமதியின்றி மதீனாவுக்குச் சென்று விட்டால், அவரை மக்காவுக்குத் திருப்பி அனுப்பி விடல் வேண்டும். ஆனால் முஸ்லிம்களுள் ஒருவர் மக்காவுக்கு மதீனாவிலிருந்து வந்தால் அவர் மதீனாவுக்குத் திரும்ப அனுமதிக்கப்படமாட்டார்.
5. மதீனாவினூடாகச் செல்லும் குறைஷ் வர்த்தகக் குழுவினர் துன்புறுத்தப்படமாட்டார்.
6. ஏதாவது ஒரு வர்க்கத்தினர் குறைஷ்களுடன் அல்லது முஸ்லிம்களுடன் நல்லுறவு ஒப்பந்தங்கள் செய்ய விரும்பினால், அதற்கு பூரண சுதந்திரம் உண்டு. ஆனால், ஒருதிறத்தார் மற்றத் திறத்தாரின் நேசர்களுக்கு எதிராகப் போர் தொடுக்கக் கூடாது.

இவ்வாறு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டதன் பின்னர், நபி முஹம்மத் (ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் 'உம்ரா' கடமையை நிறைவேற்றுவதற்காக மக்காவினுள் நுழையாமலேயே மதீனாவுக்குத் திரும்பினர். இஸ்லாமிய வரலாற்றில் இந்த உடன்படிக்கை 'முஸாலஹதுல் ஹுதைபிய்யா' (ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கை) என்றும் இந்த உடன்படிக்கைக்கு வழிகோலிய சம்பவம் 'ஙஷ்வதுல் ஹுதைபிய்யா' (ஹுதைபிய்யாச் சம்பவம்) என்றும் அழைக்கப்படுகின்றன.

தெளிவான வெற்றி

மேலெழுந்த வாரியாக நோக்கும்போது, இந்த உடன்படிக்கை முஸ்லிம்களுக்கு ஒரு பெரும் தோல்வியாகவே இருந்தது. ஏனெனில், முஸ்லிம்களால் தமது சுதேச நகரினுள் நுழையவோ தாங்கள் எண்ணிச் சென்ற கடமையை நிறைவேற்றவோ முடியவில்லை. உடன்படிக்கையின் நிபந்தனைகள் கடுமையானவையாகவும் முஸ்லிம்களுக்குப் பாதகமானவையாகவும் இருந்தன. ஹழ்ரத் உமர் உட்பட முஸ்லிம்கள் சிலர் தமது அதிருப்தியை வெளிப்படையாகவே தெரிவித்தனர். புறத்தே இந்த உடன்படிக்கை இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு எதிரான ஒரு மாபெரும் தடையாகவும் ஆத்திரமூட்டக் கூடிய கடினமான நிபந்தனைகளைக் கொண்ட ஓர்

ஒப்பந்தமாகவுமே தோன்றியது. ஆனால், உண்மையில் அது முஸ்லிம்களுக்கும் அவர்களது மார்க்கத்திற்கும் கிடைத்த ஒரு மாபெரும் வெற்றியாகவே அமைந்தது. இப்னு கல்தூன் கூறுவது போல *''இந்த வெற்றியை விடவும் மாபெரும் வெற்றி ஒருபோதும் இருந்ததில்லை.''* நபி (ஸல்) அவர்கள் இந்த உடன்படிக்கையின் பின்னர், ஹுதைபியாவிலிருந்து மதீனாவுக்குத் திரும்பியபோது அருளப்பட்ட அல்குர்ஆனின் 'அல் பத்ஹ்' (வெற்றி) என்ற அத்தியாயம் இந்த ஒப்பந்தத்தை 'பத்ஹ(ன்) முபீன(ன்)' (தெளிவான வெற்றி) என்று வருணித்தது.[52] உண்மையில், ஹுதைபிய்யா வெற்றியை விடவும் முக்கியத்துவம் வாய்ந்த மாபெரிய வெற்றி ஒன்றை மனித இன வரலாற்றில் ஒருபோதும் சந்திக்க முடியாது. அது போரில்லாத ஒரு பொது வெற்றி மட்டுமன்றி, குருதி சிந்தாமல் உருவத் தொழும்பர்களுக்குக் கிடைத்த மாபெரும் தோல்வியுமாகும்.

நபி (ஸல்) அவர்களுடைய செய்முறை அரசறிவின் மிகச் சிறந்த சாதனையான இந்த உடன்படிக்கை அவர்களது அசாதாரண சூழியல் ஆற்றலுக்குச் சான்றாக அமைந்தது. இந்த உடன்படிக்கை மூலம் மக்கா குறைஷ்கள், முஸ்லிம்களுடனான நீண்டகால நெகிழ்ச்சியற்ற முரண்பாட்டின் பின்னர், முதன்முதலாக இஸ்லாம் மார்க்கத்தையும் மதீனாவின் இஸ்லாமிய அரசையும் அங்கீகரித்தனர். மேலும், இந்த உடன்படிக்கை முஸ்லிம்களுக்கு அவர்களது தாயகத்தைத் தரிசிக்கும் அரிய சந்தர்ப்பத்தையும் அடுத்த ஆண்டில் அளித்தது.

உடன்படிக்கையின் முக்கியத்துவம்

இந்த உடன்படிக்கையால் ஏற்பட்ட சமாதானம் மதீனா முஸ்லிம்களும் மக்காவின் முஸ்லிமல்லாதோரும் சுதந்திரமாகக் கலந்துறவாடுவதற்கேற்ற மிக அரிய சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுத்தது. இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகத் துண்டிக்கப்பட்டிருந்த குடும்ப உறவுகளும் வர்த்தகத் தொடர்புகளும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டன. மக்காவாசிகள் மதீனாவுக்கு வரவும் மாதக் கணக்கில் அங்கு தங்கியிருந்து மதீனாவாசிகளோடு பழகவும் முடிந்தது. அவ்வாறே மதீனா முஸ்லிம்கள் மக்காவுக்குச் செல்லவும் அங்கே தங்கியிருக்கவும் முடிந்தது. இதற்கு உடன்படிக்கையின் நான்காவது விதி வசதி செய்து கொடுத்தது. கட்டுப்பாடற்ற இந்தக் கலப்புறவு மக்கா குறைஷ்களுக்கும் ஏனைய வர்க்கங்களைச் சேர்ந்த மக்களுக்கும் இஸ்லாத்தின் பல்வேறு அம்சங்களைப் பற்றியும் அறிவு ரீதியாகச் சிந்திப்பதற்கேற்ற சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுத்தது. இந்தக் கலப்புறவைத் தொடர்ந்து, முஸ்லிமல்லாதோர் புதிய மார்க்கத்தில் ஆர்வம்கொண்டதோடு, முஸ்லிம்களைச் சந்தித்தபோதெல்லாம் இஸ்லாத்தைப் பற்றியும் அதன் போதனைகள் பற்றியும் விசாரித்து அறியவும் ஆரம்பித்தனர்.

52. *''நிச்சயமாக நாம் உமக்கு தெளிவான ஒரு வெற்றியைத் தந்தோம்.'' (குர்ஆன் 48:1)*

ஒவ்வொரு வீட்டிலும் இஸ்லாமிய கருத்தியலே உரையாடலின் பொதுவான தலைப்பாயிற்று. இவ்வாறு ஏற்பட்டஅனுகூலங்களின் விளைவாக, அறபு வரலாற்றாசிரியர்களுள் ஒருவரான இப்னு ஹிஷாம் கூறுவது போல, *''1400 தோழர்களோடு ஹுதைபிய்யாவுக்குச் சென்ற நபியவர்கள் இரண்டு ஆண்டுகளின் பின்னர், மக்கா வெற்றி நிகழ்ந்த ஆண்டில், 10,000 தோழர்களோடு மக்காவுக்குச் சென்றார்கள்.''* இந்தப் போரோய்வு காலப்பகுதியிலேதான் குறைஷ்களின் இரு பெரும் வீரர்களான காலித் பின் வலீதும் அம்ர் பின் அல் ஆஸும் இஸ்லாத்தைத் தழுவினர். இந்த உடன்படிக்கை குறைஷ்கள் மீது மட்டுமன்றி, அறேபியாவின் பிற உள்ளூர்க் குலங்கள் மீதும் வியத்தகு விளைவுகளைத் தோற்றுவித்தது. அந்த வர்க்கங்களைச் சேர்ந்த மக்கள் மதீனாவுக்கு வந்து, நபி (ஸல்) அவர்களோடு நட்புறவை உருவாக்கிக் கொண்டனர்; பலர் இஸ்லாத்தைத் தழுவினர். உண்மையில், நபி (ஸல்) அவர்களுக்கும் அவர்களது தோழர்களுக்கும் ஒரு தெளிவான வெற்றியாக அமைந்த இந்த உடன்படிக்கை முழு அறேபியாவிலும் பின்னர் அங்கிருந்து முழு உலகிலும் இஸ்லாம் விரைவாகப் பரவுவதற்கு ஏற்ற வாயில்களைத் திறந்து விட்டது.

அயல் நாடுகளுக்குத் தூதமைச்சர்கள்

ஹுதைபிய்யா உடன்படிக்கையின் விளைவாக உருவான சமாதானமும் அமைதியும் அயற் பிரதேசங்களில் இஸ்லாத்தைப் பரப்பவும் வெளிநாடுகளுக்கு அதன் பொதுவான தூதை அறிவிக்கவும் பொருத்தமான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தன. இந்தக் காலப் பகுதியிலேயே அல்லாஹ், நபி முஹம்மத் (ஸல்) அவர்களது தூது சர்வதேசங்களுக்கும் பொதுவானது என்ற உண்மையை 'வஹீ' மூலம் அறிவித்தான். ஒருநாள், நபியவர்கள் தமது தோழர்களை அழைத்து, ''மக்களே! அல்லாஹ் என்னை மனித குலத்திற்கோர் அருட்கொடையாக அனுப்பியிருக்கிறான். ஆகவே, நீங்கள் உங்களுக்குள் பிணக்குற்று, மர்யமின் மகன் ஈஸா (அலை) அவர்களின் சீடர்கள் அவருக்குப் பின்னர் பிரிந்து விட்டதைப் போலப் பிளவுபட்டு விடாதீர்கள். நீங்கள் என்னிடமிருந்து தெய்விகத் தூதை எடுத்துச் செல்லுங்கள்'' என்று கூறினார்கள்.[53] பின்னர், ஹிஜ்ரி 7 முஹர்ரம் மாதத்தில் (மே 628 இல்), நபி (ஸல்) அவர்கள் பைசாந்தியப் பேரரசன் ஹிரக்ளியஸ், பாரசீகப் பேரரசன் கிஸ்ரா பர்வேஷ், எகிப்து மன்னன் முகவ்கஸ், அபிசீனிய அரசர் நஜாஷீ ஆகியோரையும் அறேபியாவில் ஆங்காங்கே ஆதிக்கம் செலுத்திய சிற்றரசுத்தலைவர்களையும் இஸ்லாத்தின்பால் அழைத்து, அவர்களுக்குக் கடிதங்கள் எழுதி, அரச தூதர்கள் மூலம் அனுப்பி

53. *Shibli Nu'mani op.cit. vol.II p.146*

வைத்தார்கள்.[54] அவர்களுட் சிலர் நபியவர்களது அழைப்பை ஏற்று இஸ்லாத்தைத் தழுவினர். பலர் கண்ணியத்தோடு கடிதத்தைப் பெற்றுப் பதில் அளித்தனர். சிலர் கண்ணியமற்ற முறையில், மிகவும் கீழ்த்தரமாக நடந்து கொண்டனர். அபிசீனிய மன்னர் நஜாஷீ கடிதத்திற்கு மதிப்பளித்து, நபியவர்களது தூதத்தின் சத்தியத்திற்குத் தாம் சான்றுரைப்பதாகப் பதில் கடிதமும் எழுதினார். எகிப்து மன்னர் முகவ்கஸ் பதில் கடிதம் வரைந்ததோடு, அடிமைப் பெண்கள் இருவர் உட்படப் பரிசுப்பொருள்கள் சிலவற்றையும் அனுப்பி வைத்தார்.[55] கடிதங்களைப்பெற்ற அறேபியாவின் சிற்றரசுத் தலைவர்கள் கூட பல்வேறு விதங்களில் பதில் எழுதினர். ஆனால், பாரசீகப் பேரரசன் கிஸ்ரா பர்வேஷ் கடிதத்தைப் பல துண்டுகளாகக் கிழித்து வீசியதோடு, கடிதம் கொண்டு வந்த தூதரையும் அவமதித்து விரட்டி விட்டான். பைஸாந்தியரின் மேலாட்சியின் கீழ் புஸ்ராவை ஆண்ட கிறித்தவ ஆட்சியாளனுக்குக் கடிதம் கொண்டு சென்ற தூதர் அல் ஹாரித் பின் உமைர், பல்கா. பிரதேச ஆட்சியாளன் ஷுரஹ்பீலால் இடைமறிக்கப்பட்டு, கொடூரமாகக் கொல்லப்பட்டார். உமானின் ஆட்சியாளர் ஜய்பர் பின் அல் ஜுலன்தா, பஹ்ரைன் ஆட்சியாளர் முன்திர் பின் ஸாவா, ஹஸ்ஸான் ஆட்சியாளர் ஜபலா பின் அல் அய்ஹம்[56] முதலானோர் நபியவர்களின் அழைப்பை ஏற்று இஸ்லாத்தைத் தழுவினர்.

மதீனாவில் வாழ்ந்த யூதர்கள், முஸ்லிம்களோடு அவர்கள் செய்திருந்த உடன்படிக்கையை மீறி, குறைஷ்களோடு சேர்ந்து கொண்டு முஸ்லிம்களுக்குச் செய்த துரோகத்திற்காக ஏற்கனவே நாடுகடத்தப்பட்டிருந்தனர்.

54. கடிதங்களைக் கொண்டு சென்ற தூதர்களின் பெயர்கள்:
1. பைஸாந்தியப் பேரரசன் ஹிரக்ளியஸிடம் திஹ்யத் பின் கலீபா அல் கல்பீ
2. பாரசீகப் பேரரசன் கிஸ்ரா பர்வேஷிடம் அப்துல்லாஹ் பின் ஹுதாபா அல் ஸஹ்மீ
3. எகிப்து மன்னர் முகவ்கஸிடம் ஹாதிப் பின் அபூ பல்தஆ
4. அபிசீனிய அரசர் நஜாஷீயிடம் அம்ர் பின் உமய்யா
5. யமாமாவின் ஆட்சித்தலைவர் ஹவ்தத் பின் அலீயிடம் ஸலீத் பின் அம்ர்
6. பஹ்ரைன் ஆட்சியாளர் அல் முன்திர் பின் ஸாவாவிடம் அலாஃ பின் அல் ஹழ்ரமீ
7. சிரியாவின் ஆட்சித்தலைவன் ஹாரித் அல் ஹஸ்ஸானீயிடம் ஷுஜாஃ பின் வஹ்ப் அல் அஸதீ
8. உமானின் ஆட்சியாளர் ஜய்பர் பின் அல் ஜுலன்தாவிடம் அம்ர் பின் அல் ஆஸ்
9. யமன் அரசர் அல் ஹாரித் அல் ஹிம்யரீயிடம் இப்ன் உமய்யா அல் மக்ஷூமீ
10. புஸ்ரா பிரதேசத் தலைவனிடம் அல் ஹாரித் பின் உமைர்

இவர்களைத் தவிர வேறு சிலருக்கும் தனிப்பட்ட முறையில் அவர்களை இஸ்லாத்தின்பால் அழைத்துக் கடிதங்கள் எழுதினார்கள். (பார்க்க: இப்ன் ஸஃத் 1/258–91; ஷாதுல் மஆத் – இப்னுல் கய்யிம். iii / 60-63)

55. அவர் நபிகளின் கடிதத்தை யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட பெட்டி ஒன்றில் வைத்துப் பாதுகாத்து வந்தார். அந்தப் பெட்டியும் கடிதமும் துருக்கி இஸ்தான்புல் நகரிலுள்ள தொப் காபி (Topkapi) அரும்பொருளகத்தில் இன்றும் இருந்து வருகின்றன. (Muhammad, Encyclopaedia of Seerah Afzalur Rahman. Vol.I p.847)

56. இந்த ஜபலா பின்னர், கலிபா உமரின் ஆட்சிக்காலத்தில் இஸ்லாத்தைத் துறந்து, கிறித்தவராகி, உரோமர்களின் பிரதேசத்திற்குச் சென்றுவிட்டார். (இப்ன் ஸஃத் i / 265)

நாடுகடத்தப்பட்ட யூதரின் சதி

இவர்களுள் அதிகமானோர் சிரியா எல்லையிலுள்ள கைபர் என்ற இடத்தில் குடியேறினர். வட அறேபியாவிலே யூத வர்க்கங்கள் பலவற்றின் கோட்டையாக இருந்து வந்த கைபரில், நாடு கடத்தப்பட்ட இந்த யூதர்கள் தங்களுக்கெனப் பல அரண்களையும் அமைத்திருந்தனர். நபியவர்களைப் பழிவாங்க எண்ணிய யூதர்கள் அங்கு வாழ்ந்து வந்த சகோதர யூதர்களோடு இணைந்து கொண்டு, மதீனாவில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு எதிராகச் சதிகள் செய்யலாயினர். அவர்கள் பனூ ஹுதபான், பனூ பஷாரா ஆகிய நாடோடி வர்க்கங்களோடு நட்புறவை வளர்த்துக் கொண்டு, போர் ஒன்றுக்கும் ஆயத்தங்கள் செய்தனர். அவர்கள் தங்களது ஆரம்ப நடவடிக்கையாக, மதீனாவின் எல்லையில் வாழ்ந்துவந்த முஸ்லிம்களைத் தாக்கினர்; சிரியாவுக்குச் சென்று வந்த முஸ்லிம் வர்த்தகர்களையும் தாக்கி, அவர்களது பொருள்களைக் கொள்ளையடித்தனர்; முஸ்லிம் பிரதேசங்களுள் அத்துமீறிப் பிரவேசித்து, கால்நடைகள் முதலான உடைமைகளைச் சூறையாடியதோடு, தானிய வயல்களையும் அழித்தனர்.

அப்போது, கைபரில் வாழ்ந்த பனூ நழீர் வர்க்க யூதர்களின் தலைவனாக அபூ ராபி. ஸல்லாம் பின் ஹுகைக் என்பான் இருந்து வந்தான். இவன் அந்த யூத வர்க்கத்தின் தலைவனாக இருந்து, பின்னர் குறைளா வர்க்க யூதர்களுக்கு எதிரான போரில் கொல்லப்பட்ட ஹுயய் பின் அக்தப் என்பானுக்குப் பின்னர் பதவிக்கு வந்தவன். மிகுந்த செல்வாக்கும் செல்வமும் உடையவனாக இருந்த அவன் கைபரின் அயல் பிரதேசங்களில் வாழ்ந்த ஹுதபான் வர்க்கத்தாரையும் அறபு நாடோடிகளையும் தூண்டி, அவர்களின் உதவியோடு மதீனாவைத் தாக்குவதற்காகப் பெரும் படை ஒன்றைத் தயாரித்தான். அவனது இந்தச் சதிபற்றி அறிந்த நபி (ஸல்) அவர்கள் அவனைக் கொல்வதற்காக 'அன்ஸாரீ' முஸ்லிம்கள் சிலரை அனுப்பி வைத்தார்கள். அவ்வாறே, அவர்கள் கைபருக்கு இரகசியமாகச் சென்று, அபூ ராபி. தனது அரணில் தூங்கிக் கொண்டிருந்த வேளையில், அவனைக் கொன்று விட்டனர்.

இதன் பின்னர், நழீர் வர்க்க யூதர்கள் உஸைர் பின் ராஷிம் என்பானைத் தமது தலைவனாகத் தெரிவு செய்தனர். செல்வாக்குடையவனாக இருந்த அவனும் ஹுதபான் வர்க்கத்தாரோடும் வேறு சில நாடோடி வர்க்கங்களோடும் இணைந்து, முஸ்லிம்களுக்கு எதிரான போர் ஒன்றுக்கு ஆயத்தம் செய்தான். அவனது சதி பற்றி அறிந்த நபியவர்கள் யூதர்களோடு சமாதானம் பேசுவதற்காக அப்துல்லாஹ் பின் ரவாஹா என்பாரின் தலைமையில் முப்பது முஸ்லிம்களை கைபருக்கு அனுப்பிவைத்தார்கள். அவர்கள் உஸைரைச் சந்தித்தனர்; ''நீர் மதீனாவுக்கு வந்து நபியவர்களைச் சந்தித்தால், உம்மை கைபரின் பாலனராக (ஆமிலாக) நியமிக்கலாம்''

என்று அவனிடம் கூறினர். இது அவனுக்கு மிக இலாபமான பேரமாகப்படவே அவன் முப்பது யூதர்களோடு கைபரிலிருந்து மதீனாவுக்குப் புறப்பட்டான். முஸ்லீம்களும் அவர்களோடு புறப்பட்டனர். முற்காப்பைக் கருத்திற்கொண்டு முஸ்லிம் ஒருவரும் யூதன் ஒருவனும் இணைந்து ஒரே வாகனத்தில் பிரயாணம் செய்தனர். அவர்கள் கர்கரா திபர் என்ற இடத்தை அடைந்தபோது உஸைர் தனது எண்ணத்தை மாற்றிக் கொண்டு அவனோடு பிரயாணம் செய்த அப்துல்லாஹ் பின் உனைஸ் என்பாரின் இடுப்பில் கைபோட்டு அவரது வாளை உருவ முயன்றான். அவனது எண்ணத்தைப் புரிந்து கொண்ட அவர் அவனைக் கொன்று விட்டார். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சண்டையில் ஒருவனைத் தவிர மற்ற யூதர்கள் அனைவரும் முஸ்லிம்களால் கொல்லப்பட்டனர். ஒருவன் மட்டும் தப்பியோடி விட்டான். இந்தச் சம்பவம் ஹிஜ்ரி 6 ஸவ்வால் மாதத்தில் (பெப்ரவரி 628ல்) ஹுதைபிய்யா உடன்படிக்கைக்கு முன்னர் நிகழ்ந்தது.

இந்தச் சம்பவத்துக்குப் பின்னர் ஒருநாள், யூதர்களின் நேசர்களாக இருந்த ஹதபான் வர்க்கத்தைச் சேர்ந்த அறபு நாடோடிகள் சிலர் மதீனாவின் எல்லையில் அமைந்திருந்த தாத் கரத் புல்வெளியைத் திடீரென முற்றுகையிட்டனர். அப்போது அங்கே நபியவர்களது பெண் ஒட்டகைகள் புல்மேய்ந்து கொண்டிருந்தன. ஹழ்ரத் அபூதரின் புதல்வர் அவற்றைக் காவல் செய்து கொண்டிருந்தார். புல்வெளியினுள் அத்துமீறி நுழைந்த அந்த நாடோடிகள் அபூதரின் புதல்வரைக் கொன்றுவிட்டு, அவரது மனைவியையும் இருபது ஒட்டகங்களையும் கவர்ந்து கொண்டு ஓடிவிட்டனர். இந்தச் சம்பவங்களே பின்னர் நிகழ்ந்த கைபர் படையெடுப்புக்குக் காரணங்களாய் அமைந்தன.

யூதர்களின் பகைமையும் அவர்களது போர்ப் பிரகடனமும் மதீனாவின் மீதான புதிய தாக்குதல் எதனையும் ஆரம்பத்திலேயே அமுக்கிவிடும் வகையில் உடனடி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நபியவர்களைப் பலவந்தப்படுத்தின.

கைபர் படையெடுப்பு

எனவே, நபி (ஸல்) அவர்கள் 200 குதிரை வீரர்கள் உட்பட 1600 வீரர்கள் கொண்ட படையொன்றைத் திரட்டிக் கொண்டு, ஹிஜ்ரி 7 முஹர்ரம் மாதத்தில் மதீனாவுக்கு வடகிழக்கே சுமார் 200 மைல் தூரத்திலுள்ள கைபரை நோக்கிப் புறப்பட்டார்கள். இந்தப் படையெடுப்பில், நபியவர்களது மனைவியருள் ஒருவரான உம்மு ஸலமா உட்படப் பெருந்தொகையான பெண்களும் முஸ்லிம் வீரர்களுக்குப் பணிசெய்வதற்காகப் பங்குபற்றியிருந்தனர். கைபர் பல கோட்டைகளால் அரண்செய்யப்பட்டிருந்த மையால், இந்தப் படையெடுப்பு முஸ்லிம்களின் திறமைக்கும் ஆற்றலுக்கும்

பெரும் சவாலாக அமைந்தது. அங்கே ஆறு கோட்டைகள் இருந்தன;[57] அவை அனைத்தும் இருபதினாயிரம் வீரர்களால் நிறைக்கப்பட்டிருந்தன. முதலில், யூதர்களது பெண்களாலும் உணவுப்பொருள்களாலும் நிரம்பியிருந்த அல் நாஇம் கோட்டை முஸ்லிம்களால் தாக்கப்பட்டது. மிக நீண்ட நேரப் போராட்டத்தின் பின்னர், அந்தக் கோட்டை அவர்களால் கைப்பற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏனைய கோட்டைகளும் ஒன்றன்பின் மற்றொன்றாக முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப்பட்டன. ஆனால், மர்ஹப் என்ற புகழ்பெற்ற யூத வீரனின் பொறுப்பில் இருந்த அல் கமூஸ் கோட்டையை மட்டும் எளிதில் வெற்றிகொள்ள அவர்களால் முடியவில்லை. முஸ்லிம்கள் அதைத் தாக்கிய போதெல்லாம், அவர்களது தாக்குதல்கள் மர்ஹபாலும் 'யூதர்களின் அரசன்' என்ற பட்டத்துக்கு உரிமை கொண்டாடிய யூதத்தலைவன் கினானா என்பானாலும் முறியடிக்கப்பட்டன. இறுதியில், அந்தக் கோட்டையும் இருபது நாள் முற்றுகையின் பின்னர், நபியவர்களது மருகர் ஹழ்ரத் அலீயினால் வெற்றி கொள்ளப்பட்டது. இஸ்லாமிய வரலாற்றில் 'ஹுஷ்வதுல் கைபர்' (கைபர் போர்) என அழைக்கப்படும் இப்போரில் தொண்ணூற்று மூன்று யூதர்களும் பதினைந்து முஸ்லிம்களும் கொல்லப் பட்டனர். இந்த வெற்றியின் பின்னர், கைபர் பிரதேசம் முழுவதும் முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப்பட்டு, மதீனாவின் இஸ்லாமிய அரசோடு இணைக்கப்பட்டது. தோல்வியுற்ற யூதர்கள் மன்னிப்புக் கோரி இறைஞ்சியமையால், விளைவிற் பாதியை வரியாகச் செலுத்தும் இணக்கத்தின்மீது அவர்கள் தங்கள் விளைநிலங்களை வைத்திருக்கவும் தொடர்ந்து அங்கு வாழவும் நபியவர்களால் அனுமதிக்கப்பட்டனர். இந்தப் படையெடுப்பின் போது, நழீர் வர்க்க யூதர்களின் தலைவனாக இருந்து, பின்னர் குறைளா வர்க்க யூதர்களுக்கு எதிரான போரில் கொல்லப்பட்ட ஹுயய் பின் அக்தப் என்பானின் மகள் ஸபிய்யா போர்க் கைதிகளுள் ஒருவராகச் சிறைப்பிடிக்கப்பட்டார். பின்னர், நபியவர்கள் அவரை விடுதலை செய்து, திருமணம் செய்து கொண்டார்கள்.

அந்தப் பிரதேசத்தில், அல் பதக், தைமா.ஃ, வாதியுல் குரா ஆகிய குடியேற்றப்பகுதிகளில் வாழ்ந்து வந்த யூதர்களும் கைபர் யூதர்களுக்கு நேர்ந்த கதிகண்டு கலங்கி, எதிர்ப்பின்றியே நபியவர்களிடம் சரணடைந்தனர். அவர்களது பிரதேசமும் வெற்றி கொள்ளப்பட்டு, இஸ்லாமிய அரசுடன் இணைக்கப்பட்டது. கைபர் யூதர்களுக்கு விதிக்கப்பட்ட அதே நிபந்தனை மீது அவர்களும் தங்கள் இடங்களில் வாழவும் பயிர் செய் பூமிகளைப் பயன்படுத்தவும் அனுமதிக்கப்பட்டனர். நபி (ஸல்) அவர்களைப் பொறுத்த வரை, கைபர் சம்பவத்தோடு யூதர்களால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

57. இப்னு ஸஃதின் கருத்துப்படி, கைபரில் ஒன்பது கோட்டைகள் இருந்தன. அவை அல் நதாஹ், அல் நாஇம், அல் வாதீஹ், அல் ஸுவைலிம், அல் கமூஸ், ஸஃத் பின் முஆத் கோட்டை, கல்அத் அல்ஸுபைர் கோட்டை, அல் உபய்யி கோட்டை, நிஜார் கோட்டை என்பனவாம்.

கைபர் வெற்றியின் பின்னர், நபி (ஸல்) அவர்கள் சில தினங்கள் வரை அங்கே தங்கியிருந்தார்கள். அங்கே தங்கியிருந்த போது ஒருநாள், பனூ நழீர் யூதர்களின் தலைவனான ஸல்லாம் பின் மிஷ்கம் என்பானின் மனைவியும் மர்ஹபின் சகோதரியுமான ஷைனப் பின்த் அல் ஹாரித் என்பாள் தனது வீட்டில் விருந்துண்ண நபியவர்களை அழைத்தாள். அண்ணல் அவர்களும் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார்கள். அந்த யூதப் பெண்ணின் தந்தை, கணவன், சகோதரன் ஆகியோர் கைபர் சண்டையில் ஏற்கனவே கொல்லப்பட்டு விட்டனர். அதனால் ஆத்திரமடைந்திருந்த அவள் மற்ற யூதர்களின் தூண்டுதலால் உந்தப்பட்டு, நபியவர்களைப் பழிவாங்க எண்ணியே விருந்துக்கு ஏற்பாடு செய்தாள். நபியவர்கள் விருந்துக்குச் சென்றிருந்த போது, அவள் அவர்களுக்கு உணவு பரிமாறினாள்; நஞ்சூட்டப்பட்ட ஆட்டிறைச்சிக் கறியையும் கொடுத்தாள். நபியவர்கள் ஆட்டிறைச்சியில் சிறிதை வாயில் வைத்தபோது, அதன் சுவை சற்று வித்தியாசமானதாக இருக்கவே, அதனை அவர்கள் வெளியே துப்பிவிட்டார்கள். ஆனால், அவர்களோடு விருந்துண்ணச் சென்றிருந்த பிஷ்ர் பின் பரா.ஃ. என்பார் அந்தக் கறியை வயிறார உண்டுவிட்டார். அதனால் அவர் பின்னர் மரணித்து விட்டார். இது பற்றி அவள் விசாரிக்கப்பட்ட போது, அவள் குற்றத்தை ஒப்புக் கொண்டதோடு, மற்ற யூதர்களின் தூண்டுதலாலேயே தான் இவ்வாறு செய்ததாகவும் கூறினாள். அப்போது கூட நபியவர்கள் அவளையும் இதனோடு சம்பந்தப்பட்ட மற்ற யூதர்களையும் மன்னித்தார்கள். ஆனால், இரண்டொரு தினங்களின் பின்னர், பிஷ்ர் நஞ்சூட்டப்பட்டதன் விளைவாக மரணித்தபோதுதான் அண்ணல் அவர்கள் அவரது இறப்புக்குப் பழிவாங்கும் பொருட்டு அவளுக்கு மட்டும் மரண தண்டனை அளித்தார்கள். இந்தச் சம்பவத்தின் பின்னர், நபியவர்கள் தமது தோழர்களோடு மதீனாவுக்குத் திரும்பி விட்டார்கள்.

நபியைக் கொல்ல யூதப் பெண் சதி

மக்கா குறைஷ்களோடு செய்து கொள்ளப்பட்ட ஹுதைபிய்யா உடன்படிக்கையின் படி, நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 7 துல் க.ஃதா மாதம் (மார்ச் 629) இரண்டாயிரம் தோழர்களோடு பின்போடப்பட்ட உம்ரா கடமையை நிறைவேற்றுவதற்காக மக்காவுக்குப் புறப்பட்டார்கள். உடன்படிக்கையில் கூறப்பட்டவாறு அவர்கள் வழக்கமாக அணியும் வாளைத்தவிர, வேறு ஆயுதம் எதனையும் தம்மோடு எடுத்துச் செல்லவில்லை. முஸ்லிம்கள் மக்காவை அண்மியவுடனேயே, அதன் குடியிருப்பாளர்கள் அனைவரும் நகரத்திலிருந்து வெளியேறி, சூழவிருந்த குன்றுகளில் முகாம் அமைத்துக் கொண்டனர். முஸ்லிம்கள் தங்கள் தாயகத்தினுள் நுழைந்தபோது, அந்த நகரம் கைவிடப்பட்ட நகரம் போலக் காட்சியளித்தது. தெருக்களில் எவருமே காணப்படவில்லை; வீடுகள் பூட்டப்பட்டு வெறுமையாகக் கிடந்தன. முழு

மக்கா யாத்திரை

நகரமும் அமைதியின் ஆதிக்கத்தின்கீழ் அடங்கிக் கிடந்தது. ஸர் வில்லியம் முயிர் என்பார் தமது 'முஹம்மதின் வாழ்க்கை' (Life of Mohammad) என்ற நூலில் கூறுவது போல, ''உண்மையில் அது மிகப் புதினமான காட்சியாக - உலக வரலாற்றில் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு காட்சியாக - இருந்தது. தொன்மைச் சிறப்புமிகுந்த அந்த நகரம் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி அதன் குடியிருப்பாளர்களால் மூன்று தினங்கள் வரை கைவிடப்பட்டிருந்தது; வீடுகள் அனைத்தும் வெறுமையாகக் கிடந்தன. அவர்கள் அங்கிருந்து வெளியேறியதும், தங்கள் பிறப்பிடத்திலிருந்து பல ஆண்டுகளுக்கு முன்பு நாடுகடத்தப்பட்ட முஸ்லிம்கள் தங்கள் நேசர்களோடு பெரும் கூட்டமாக நகரினுள் நுழைந்தனர்; தங்கள் குழந்தைப் பருவத்தைக் கழித்த இல்லங்களை வெறுமையான நிலையில் மீண்டும் தரிசித்தனர். தங்களுக்கென ஒதுக்கப்பட்ட குறுகியகால இடைவெளியில் புனித யாத்திரையின் சடங்குகளை நிறைவேற்றினர். வெளியேறிய குடியிருப்பாளர்கள் சூழவிருந்த மலைகளில் ஏறி, கூடாரங்களின் கீழ் அல்லது குன்றுகளுக்கும் ஒடுக்கப் பள்ளத்தாக்குகளுக்குமிடையே இருந்த வேறு புகலிடங்களில் தஞ்சம் புகுந்து, அங்கிருந்தவாறு தரிசிக்க வந்தவர்களின் அசைவுகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர்..... உண்மையில், அது இஸ்லாத்தை ஈன்ற பிரசவ வேதனையால் மட்டும் சாத்தியமாக்கப்பட்ட ஒரு காட்சியாக இருந்தது''.[58]

நபி (ஸல்) அவர்கள் ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் தமது பிறந்த நகரத்தைப் பார்த்தமை இதுவே முதல் தடவை ஆகும். அண்ணல் அவர்களும் அவர்களது தோழர்களும் மூன்று தினங்கள் மக்காவிலே தங்கியிருந்து, பின்போடப்பட்ட உம்ரா சடங்கை முழுமையாக நிறைவேற்றினார்கள். இந்த யாத்திரையின் போதுதான் நபியவர்கள் ஹழ்ரத் அப்பாஸின் மைத்துனி மைமூனாவைத் திருமணம் செய்து கொண்டார்கள். இதுவே நபியவர்களின் கடைசித் திருமணமாகும். மூன்று தினங்களின் பின்னர், நபியவர்களும் அவர்களது தோழர்களும் மதீனாவுக்குப் புறப்பட, மக்காவாசிகள் குன்றுகளிலிருந்து தமது நகருக்குள் நுழைந்தனர். அமைதியான இந்த யாத்திரையும் யாத்திரையில் பங்குபற்றிய முஸ்லிம்களின் தற்கட்டுப்பாடும் இஸ்லாத்தைப் பற்றிய நல்லெண்ணத்தை அதன் எதிரிகளிடையே உருவாக்கின. மக்காவாசிகள் இஸ்லாத்தையும் அதன் பல்வேறு அம்சங்களையும் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். இஸ்லாத்தைத் தழுவியோரின் எண்ணிக்கை நாள் தோறும் பெருகி வந்தது. முன்பு இஸ்லாத்தின் மிகக் கசப்பான எதிரிகளாக இருந்த காலித் பின் வலித், அம்ர் பின் ஆஸ், உத்மான் பின் தல்ஹா முதலான குறைஷ் வர்க்கத் தலைவர்கள் சிலரும் நபியவர்களிடம் தாமாக வந்து இஸ்லாத்தைத் தழுவினர். இவர்கள் இஸ்லாத்தினுள்

58. Quoted in Ahamed A.Galwash, op.cit. Voi.I p.73

நுழைந்ததோடு இஸ்லாத்தின் ஆதிக்கம் கணிசமான அளவுக்கு வளர்ந்தது. நபியவர்களால் மக்கா வெற்றி கொள்ளப்படுதலும் உறுதியாயிற்று.

ஹிஜ்ரி 7 இல், நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் வெளிநாட்டு மன்னர்களையும் அறேபியாவின் சிற்றரசுத் தலைவர்களையும் இஸ்லாத்தின் பால் அழைத்துக் கடிதங்கள் எழுதிய சமயம், புஸ்ராவின் பைஸாந்திய ஆளுநருக்கும் அத்தகைய கடிதம் ஒன்றை அல் ஹாரித் பின் உமைர் அல் அஷ்தீ என்பார் மூலம் அனுப்பி வைத்தார்கள். அல் ஹாரித் புஸ்ராவுக்குச் சென்ற வழியில், மு.்.தா என்ற இடத்தில் இளைப்பாறியபோது, பைஸாந்தியப் பேரரசின் தொழும்பனாக இருந்து, சிரியாவிலுள்ள பல்கா.். பிரதேசத்தை ஆட்சி செய்த ஷுரஹ்பீல் பின் அம்ர் அல் ஙஸ்ஸானீ என்பான் அவரை இடைமறித்துக் கொன்று விட்டான். நபியவர்களின் எந்தத் தூதவரும் இதற்கு முன் ஒருபோதும் இவ்வாறு கொல்லப்படவில்லை. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, உரோமர்கள் அடிக்கடி அறபுப் பிரதேசத்தினுள் நுழைந்து, முஸ்லிம்களுக்குத் தொல்லைகள் கொடுத்து வரலாயினர். ஹிஜ்ரி 8 ரபீஉல் அவ்வலில், நபியவர்கள் சிரியாவிலுள்ள தாத் அத்லாஹ் என்ற இடத்திற்கு க.்.ப் பின் உமைர் அல் ஙிபாரி என்பாரை பதினைந்து முஸ்லிம் பிரசாரகர்களோடு அனுப்பி வைத்திருந்தார்கள். அங்கே இவர்கள் பெரும் மக்கள் கூட்டம் ஒன்றைக் கண்டு, அவர்களை இஸ்லாத்தின்பால் அழைத்தபோது, அவர்கள் இவர்களை அம்புகளால் தாக்கிக் கொன்றுவிட்டனர். ஒருவர் மட்டும் கடுங்காயங்களோடு உயிர் தப்பி, மதீனாவுக்கு வந்து, நடந்தவற்றைக் கூறினார்.[59] இந்தச் சம்பவங்கள் முஸ்லிம்களுக்குப் பெரும் ஆத்திரத்தை மூட்டின. எனவே, நபி (ஸல்) அவர்கள் இரக்கமற்ற இந்தக் கொலைகளுக்குப் பழிவாங்கும் நோக்கத்தோடு 3000 வீரர்களைக் கொண்ட படை ஒன்றைத் திரட்டி, தமது வளர்ப்பு மகன் ஷைத் பின் ஹாரித் என்பாரின் தலைமையில், சிரியாவுக்கு அனுப்பிவைத்தார்கள். காலித் பின் வலீதும் தளபதிகளுள் ஒருவராக நியமிக்கப் பட்டு, இப்படையோடு அனுப்பப்பட்டிருந்தார். இந்தப் படையெடுப்பு ஹிஜ்ரி 8 ஜுமாதுல் அவ்வல் மாதம் (செப்டம்பர் 629) நிகழ்ந்தது.

மு.்.தா போர்

முஸ்லிம்கள் சாக்கடலுக்குத் தென் கிழக்கே (இப்போதைய ஜோர்தானில்) இருந்த மு.்.தா என்ற கிராமத்தின் எல்லையை அடைந்த போது, அங்கே அவர்கள் தங்களோடு போரிடுவதற்காக ஷுரஹ்பீலின் தலைமையில் திரண்டிருந்த நூறாயிரம் அறேபிய, உரோம வீரர்களைக் கொண்ட பெரும் படை ஒன்றைச் சந்தித்தனர். அப்போது உரோமப் பேரரசன்ஹிரக்ளியஸும் பெரும் அறபுப்படை ஒன்றோடு பல்கா.். பிரதேசத்திலுள்ள மஆப் என்ற இடத்தில் முகாமிட்டிருந்தான். இரு பக்கப் படைகளும் மு.்.தாவில், நபி (ஸல்) அவர்களது தூதர் அல்ஹாரித் பின்

59.. இப்ன் ஸஃத் ii /127-8

உமைர் கொல்லப்பட்ட அதே இடத்தில் சந்தித்துப் போரை ஆரம்பித்தன. முஸ்லிம் படை அணிகளின் தலைவர் ஷைத் பின் ஹாரித் எதிரிகளின் அம்புகளால் கொல்லப்படும் வரை களத்தில் நின்று, வீரத்தோடு போரிட்டார். அவர் கொல்லப்பட்டதும், முப்பத்து மூன்று வயது இளைஞரான ஜ.்.பர் பின் அபூதாலிப் முஸ்லிம் களுக்குத் தலைமை தாங்கி, ஆவேசத்தோடு போர் செய்தார். எதிரிகள் அவரைச் சூழ்ந்து கொண்டு தாக்கிக் கொல்லவே, புகழ் பெற்ற கவிஞரும் செல்வாக்கு மிகுந்த 'அன்ஸாரீ'யுமான அப்துல்லாஹ் பின் ரவாஹா தலைமையை ஏற்றுச் சண்டை செய்தார். சிறிது நேரத்தில் அவரும் பகைவர்களால் கொல்லப்படவே, காலித் பின் வலீத் முஸ்லிம்களின் தலைமையை ஏற்றுத் தீரத்தோடு போர் புரிந்தார். ஆயினும், எதிரிகளின் பலத்தையும் வரவிருந்த ஆபத்தையும் உணர்ந்த காலித் நன்கு திட்டமிடப்பட்ட பின்வாங்கல் மூலம் முஸ்லிம் வீரர்களை அழிவிலிருந்து காப்பாற்றத் தீர்மானித்தார். இறுதியில், அவர் தொடர்ச்சியான பல தந்திரங்களைக் கையாண்டு, அதிக இழப்புக்கள் இல்லாமல் முஸ்லிம் வீரர்களைப் பின்வாங்கச் செய்து, அவர்களை மதீனாவுக்கு அழைத்து வந்தார். இந்தப் படையெடுப்பு முஸ்லிம்களுக்கு வெற்றியாக அமையா விட்டாலும், முஸ்லிம்களின் அசாதாரண ஆற்றலையும் வீரத்தையும் சிரியர்களும் உரோமர்களும் உணர்ந்து கொள்வதற்கு அரிய வாய்ப்பொன்றை உருவாக்கிக் கொடுத்தது. இந்தப் போரில் பன்னிரண்டு முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். அறேபியரின் வரலாற்றில், அறபு ஆட்சியாளர் ஒருவர் பைஸாந்தியப் பேரரசுக்கு எதிராகப் படையெடுப்பு நடத்தியமை இதுவே முதல் தடவையாகும். இந்தப் படையெடுப்போடு உலக அரங்கில் அறபு முஸ்லிம்களின் பிரவேசமும் ஆரம்பமாயிற்று. இந்தப் போருக்கு முன்னர், உண்மையில் அறேபியர் உலகுக்கு நன்கு தெரியாதவர்களாகவே இருந்தனர்.

ஹுதைபிய்யா ஒப்பந்தம் மீறப்படல்

மக்கா குறைஷ்கள் ஹுதைபிய்யா உடன்படிக்கையை அதில் குறிப்பிடப்பட்ட காலம் வரை பேணவோ காப்பாற்றவோ இல்லை. உடன்படிக்கையில் சமாதான காலமாகப் பத்து ஆண்டுகள் குறிப்பிடப் பட்டிருந்தபோதிலும், ஒப்பந்தம் செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளின் பின்னர் முஸ்லிம்களின் நேசர்களான குஷாஆ வாக்கத்தினர் குறைஷ்களின் நேசர்களான பக்ர் வர்க்கத்தாரால் தாக்கப்பட்டதன் மூலம் ஹுதைபியா உடன்படிக்கை குறைஷ்களால் முறிக்கப்பட்டது. இவ்விரு வர்க்கங்களுக்குமிடையே மிக நீண்டகாலமாகப் பகைமை நிலவி வந்தது. குறைஷ்களோடு நட்புறவு கொண்டிருந்த பக்ர் வர்க்கத்தார் முஸ்லிம்களோடு நட்பு உடன்படிக்கை செய்திருந்த குஷாஆ வர்க்த்தாரைத் தாக்கி, நியாயப்படுத்தக் கூடிய காரணம் எதுவுமில்லாமல் அவர்களுள் இருபது உறுப்பினர்களைப் புனித க.்.பாவின் பிரதேசத்தில் படுகொலை செய்து விட்டனர். குறைஷ்கள், அவர்களது நேச

வர்க்கத்தினர் முஸ்லிம்களின் நேச வர்க்கத்தினர்மீது நடத்திய தாக்குதலைத் தடுக்க எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, உடன்படிக்கை விதிகளை மதிக்காமல், தங்களால் இயன்ற உதவிகளை பக்ர் வர்க்த்தாருக்கு குறைஷ்கள் மறைமுகமாக அளித்தனர். இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, குஷாஆ வர்க்கத்தைச் சேர்ந்த நாற்பது உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவினர் மதீனாவுக்கு வந்து, நபியவர்களிடம் நடந்ததைக் கூறி, அவர்களின் உதவியையும் பாதுகாப்பையும் கோரினர். எனவே, நபி (ஸல்) அவர்கள், குஷாஆ வர்க்கத்தாருடன் தாம் செய்து கொண்ட நட்பறவு ஒப்பந்தத்தின் பிரகாரம் அவர்களுக்கு உதவும் பொருட்டு, ழம்ரா என்பாரை குறைஷ்களிடம் அனுப்பிவைத்தார்கள். அவர் அவர்களிடம் சென்று, நபியவர்கள் ஆணையிட்டவாறு, *''இது ஹுதைபியா உடன்படிக்கையை மீறும் செயலாக இருப்பதனால், கொல்லப்பட்டவர்களின் உயிர்களுக்காகக் குருதி முதல் கொடுக்கப்படல் வேண்டும்; அல்லது பக்ர் வர்க்கத்தாரோடு வைத்துள்ள நட்புறவைத் துண்டிக்க வேண்டும்; அல்லது உடன்படிக்கை இனிமேல் செல்லுபடியாகாது என்று பிரகடனம் செய்ய வேண்டும்''* என்று கூறினார். அப்போது குறைஷ்களின் சார்பில் கர்தா பின் அம்ர் என்பார், *''நாங்கள் கடைசி நிபந்தனையையே ஏற்றுக் கொள்கிறோம்''* என்று முட்டாள்தனமாகப் பதில் கூறிவிட்டார்.[60] ஆனால், அந்தத் தூதர் அங்கிருந்து மதீனாவுக்குப் புறப்பட்டுச் சென்ற பின்னரே, குறைஷ்கள் தாங்கள் அவசரப்பட்டுப் பெரும் தவறொன்றைச் செய்துவிட்டதை உணர்ந்தனர். எனவே, அவர்கள் தங்கள் செயலுக்காக மன்னிப்புக் கோரவும் உடன்படிக்கையை தாங்கள் மீண்டும் புதுப்பித்துக் கொண்டமை பற்றி அறிவிக்கவும் குறைஷ் தலைவரான அபூஸுப்யானைத் தங்கள் பிரதிநிதியாக மதீனாவுக்கு அனுப்பிவைத்தனர். ஆனால், அது மிகவும் காலம் கடந்ததாக அமைந்து விட்டது. அபூஸுப்யான் நபியவர்களிடமும் அவர்களது முக்கிய தோழர்களிடமும் வந்து, குறைஷ்களின் முட்டாள்தனமான பதிலுக்காக மன்னிப்புக் கோரினர். ஆனால், அவர்களுள் எவருமே அவருக்குப் பதில் கூறவில்லை. எந்தவிதத்திலும் நபியவர்களைச் சமாதானப்படுத்த முடியாத நிலையில், அவர் உடைந்த உள்ளத்தோடு மக்காவுக்குத் திரும்பினார்.

கசப்பான இந்தச் சம்பவங்களுக்குப் பின்னர், நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்காவின் மீது படையெடுப்பதற்குத் தேவையான ஆயத்தங்களை மேற்கொள்ளலானார்கள். தமது படையெடுப்பு வேலைகளை மிகக் கவனமான முறையில் இரகசியமாக வைத்துக்கொண்ட நபியவர்கள் குறைஷ்களோடு வைத்திருந்த சகல தொடர்புகளையும் துண்டித்து விட்டு, வடக்கே படையெடுப்பு ஒன்றை நடத்த

மக்காப் படையெடுப்பு

60. அல் ஷிர்கானீ, பாகம்: ii பக்கம் 349

ஆயத்தங்கள் செய்வதைப் போலக் காட்டிக் கொண்டார்கள். நபியவர்களின் மிக நெருங்கிய தோழர் சிலரைத் தவிர, வேறு எவருக்குமே கடைசிநேரம் வரை தெரியாத விதத்தில் இப்படையெடுப்பு வேலைகள் மிக இரகசியமாக மேற்கொள்ளப்பட்டன. கடைசி நேரத்திலேயே மக்காமீது படையெடுக்கும் நபியவர்களது திட்டம் நபித் தோழர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இறுதியில், நபி (ஸல்) அவர்கள், ஹிஜ்ரி 8 றம்ழான் பன்னிரண்டாம் நாள் (ஜனவரி 1, 630) ஆயுதம் தரித்த பத்தாயிரம் தோழர்களோடு மக்காவை நோக்கிப் புறப்பட்டார்கள். வழியிலே நேச வர்க்கங்களைச் சேர்ந்தவர்களும் அவர்களோடு இந்தப் படையெடுப்பில் சேர்ந்து கொண்டனர். எட்டு நாள் பயணத்தின் பின்னர், முஸ்லிம்கள் மக்காவுக்கு அண்மையிலுள்ள மர்ருள் ளஹ்ரான் எனுமிடத்தில் முகாமிட்டு, நபியவர்களின் ஆணைக்கேற்ப அங்கே பத்தாயிரம் தீபங்களை ஏற்றினர். அந்தத் தீபங்கள் பாலைவனத்தை ஒளிவயலாக மாற்றின. நபியவர்கள் எல்லாவற்றையும் கடைசி நிமிடம் வரை மிக இரகசியமாகச் செய்தமையால், மக்கா குறைஷ்கள் மலை உச்சியிலிருந்து வீசிய பத்தாயிரம் தீபங்களின் ஒளியைக் காணும் வரை, முஸ்லிம்களின் படையெடுப்பு பற்றிய எந்தத் தகவலையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை.

முன்னறிவிப்பு எதுவும் இல்லாமல் உருவான நிலைமையின் பயங்கரத்தை உணர்ந்து கொண்ட உடனேயே, குறைஷ்கள் அபூஸுப்யானை ஹகீம் பின் ஹிஷாம், புதைல் பின் வர்கா.ஃ ஆகிய இருவரோடு தகவல்கள் சேகரிக்கவும் முஸ்லிம்களின் படை பலத்தை மதிப்பீடு செய்யவும் அவர்கள் முகாமிட்டிருந்த பகுதிக்கு அதே இரவு அனுப்பிவைத்தனர். அவர்கள் நபியவர்களின் கூடாரத்தை நோக்கிச் சென்ற வேளையில், கூடாரத்தைக் காவல் செய்து கொண்டிருந்த நபித் தோழர்களால் கைது செய்யப்பட்டு, நபியவர்களின் முன்னால் கொண்டுவரப்பட்டார்கள். உமய்யாக்களின் அதிபதியும் கர்வம் பிடித்த குறைஷ் குலத்தலைவரும் நபியவர்களின் மிகக் கொடிய எதிரிகளுள் ஒருவருமான அபூஸுப்யான் அவரால் இருபது வருடங்களுக்கு அதிகமாக மிகக் கடுமையான துன்பங்களுக்குட்படுத்தப்பட்ட மனிதர் ஒருவரின் கருணையை எதிர்பார்த்துக் கொண்டு நின்றிருந்த காட்சி உணர்ச்சியைத் தூண்டுவதாய் இருந்தது. ஹழ்ரத் உமர் முதலான தோழர் சிலர் அவரைப் பழிவாங்கத் துடித்தனர்; மற்றத் தோழர்கள் நபியவர்கள் தமது எதிரிக்கு அளிக்கவிருந்த தண்டனையை ஆவலோடு எதிர்பார்த்தவாறு பொறுத்திருந்தனர். ஆனால், அண்ணல் அவர்கள் மனிதத் தன்மையற்ற விதத்தில் தம்மோடு நடந்து கொண்ட தமது கொடிய பகைவர் மீது காட்டிய கருணையைக் கண்டு தோழர்கள் அனைவரும் வியப்புற்றனர். அண்ணல் அவர்கள் கடந்த காலத்தில் அபூஸுப்யானால் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும் குற்றங்களையும் மறந்து, அவரை மன்னித்தார்கள். நபியவர்களது இந்தப் பெருந்தன்மை அபூ ஸுப்யானின் கல் நெஞ்சத்தைக் கரைக்கவே, அடுத்த நாள் காலை அவர் தாமாக முன்வந்து இஸ்லாத்தைத்

தழுவிக்கொண்டார். பின்னர் அவர் நபியவர்களின் பிரவேசத்திற்கு நகரத்தை ஆயத்தம் செய்வதற்காக மக்காவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

மக்கா வெற்றி

இறுதியில், றம்ழான் இருபதாம் நாள் (ஜனவரி 11, 630) வியாழக் கிழமை, மற்றோர் அறிவிப்பின்படி வெள்ளிக் கிழமை), முஸ்லிம்கள் வெறிச் சோடிக்கிடந்த மக்காவின் தெருக்களுள் முஹம்மத் (ஸல்) அவர்களின் தலைமையில்நுழைந்தனர். மக்காவாசிகள் அனைவரும் தங்கள் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு, முஸ்லிம்களிடம் மிக அமைதியாகச் சரணடைந்தனர். அபூ ஜஹ்லின் மகன் இக்ரிமா, உமையாவின் மகன் ஸப்வான் ஆகியோரின் தலைமையில் தீவிரவாதிகள் சிலர் மட்டும் நகரின் ஒரு மூலையில் இருந்து எதிர்ப்புக் காட்டினர். ஆயினும், காலித் பின் வலித் சிறிய சண்டை ஒன்றில் இவர்களைத் தோற்கடித்தார். இந்தச் சண்டையில் மூன்று அல்லது நான்கு முஸ்லிம்களும் பதின்மூன்று அல்லது இருபத்து நான்கு பகைவர்களும் கொல்லப்பட்டனர். இந்த ஒரேயொரு தடையைத் தவிர, நபி (ஸல்) அவர்கள் எட்டு ஆண்டு களுக்கு முன்பு அவர்களை 'தவ்ர்' குகையிலிருந்து மதீனாவுக்குச் சுமந்து சென்ற அதே 'அல் கஸ்வா' ஒட்டகையில் அமர்ந்து, எத்தகைய எதிர்ப்பு மின்றி, வெற்றியாளராக மக்காவினுள் நுழைந்தார்கள். அவர்களது தூதத்தைப் பார்த்து எள்ளி நகைத்த நகரம் - அவர்களையும் அவர்களது ஏழைச் சீடர்களையும் இரக்கமில்லாமல் இம்சைப்படுத்திய நகரம் - அவர்களைத் தங்கள் பிறந்த இடத்திலிருந்தே விரட்டி அடித்த நகரம் - இறுதியாக அவர்களினதும் அவர்களது தோழர்களினதும் உயிர்களை உறிஞ்சுவதற்குச் சூளுரைத்த நகரம் - இப்போது நபியவர்களது கருணையை எதிர்பார்த்து, அவர்களது பாதத்தில் பணிந்து கிடந்தது. அவர்களது பாதங்களில் முற்றாகச் சரணடைந்து வீழ்ந்து கிடந்த அவர்களது பழைய எதிரிகள் தங்களது கடந்த காலக் குற்றங்களுக்கு வழங்கப்படவிருந்த தண்டனையை எதிர்பார்த்து நின்றனர். ஆனால், மனித இனத்துக்கு மாபெரும் அருட்கொடையாக அனுப்பப்பட்ட அண்ணல் அவர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கினார்கள்.

மக்காவினுள் பிரவேசித்த நபி (ஸல்) அவர்கள், 'அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்' (அல்லாஹ் மிகப் பெரியவன், அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று மிகப் பலத்த குரலில் கூறிக்கொண்டு, முதலில், புனித க.்பாவுக்குச் சென்றார்கள்; ''**சத்தியம் வந்தது; அசத்தியம் மறைந்தது; நிச்சயமாக, அசத்தியம் மறைந்தே தீரும்...**'' (அல்குர்ஆன் 17:81) என்று கூறியவாறு அங்கு வைக்கப்பட்டிருந்த சிலைகள் அனைத்தையும் உடைத்தெறிந்தார்கள். பின்னர், க.்பாவின் கூரையிலிருந்து எழுப்பப்பட்ட முஸ்லிம்களின் முதலாவது தொழுகை அழைப்பு (அதான்) மக்காவின் நான்கு திசைகளிலும் எதிரொலித்தது.

ஸ்டான்லி லேன் பூல் என்பார் கூறுவது போல, ''நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தம் எதிரிகள் மீது பெற்ற வெற்றி, அவர் மீதே அவர் ஈட்டிய பெருவெற்றியாகவும் இருந்தது. அவர், குறைஷ்கள் பல ஆண்டுகளாக அளித்த துன்பங்களையும் தூற்றிய பழிச் சொற்களையும் மறந்து, அவர்களை மன்னித்தார். மக்காவில் வாழ்ந்த மக்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கினார். தமது கசப்பான எதிரிகளின் நகரினுள் வெற்றியாளராகப் பிரவேசித்தபோது, நான்கு குற்றவாளிகளுக்கு மட்டுமே தண்டனை அளித்தார்.[61] அவரது முன்மாதிரியைப் பின்பற்றி அவரது படையினரும் அமைதியாக மக்காவினுள் நுழைந்தனர். எந்த வீடும் கொள்ளையடிக்கப் படவில்லை; எந்தப் பெண்ணும் நிந்திக்கப்படவில்லை''.[62]

வெற்றியின் முக்கியத்துவம்

மக்கா வெற்றி 'அல் பத்ஹுல் அ.்ளம்' (மகத்தான வெற்றி) என்று அழைக்கப்படுகிறது. இஸ்லாமிய வரலாற்றில் அது மிக முக்கியத்துவம் வாய்ந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. மக்கா வீழ்ச்சியுற்றதையும் தங்களுக் கெனச் சமயத்தலைமை ஒன்றைப் பிடித்து வைத்திருந்த குறைஷ்கள் இஸ்லாத்தைத் தழுவியமையையும் தொடர்ந்து, முழு அறேபியா வும் உருவத் தொழும்பின் உறுதியான பிடியிலிருந்து விடுதலை பெற்றது; தனியாட்சி, இஸ்லாத்தின் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது; சத்தியத் தூதத்தின் பரவலுக்கு எதிராக இருந்து வந்த பெரும் தடை அகற்றப்பட்டு, இஸ்லாத்தின் விரைவான வளர்ச்சிக்குரிய பாதைகள் திறக்கப்பட்டன. வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்த இந்த வெற்றியின் விளைவாக, நபியவர்களின் மிகக் கசப்பான எதிரிகளாக இருந்தவர்கள் அவர்களது மேம்பாட்டை ஏற்று, அவர்கள் மீது மிகுந்த ஆர்வம் காட்டும் ஆதரவாளர்களாயினர். சத்தியத்தை உணர்ந்த பின்னரும் குறைஷ்களோடு வைத்திருந்த நட்புறவின் காரணமாக அல்லது அவர்கள் மீது கொண்டிருந்த

61. பெரும்பான்மையான வரலாற்றாசிரியர்களின் கருத்துப்படி நபியவர்களால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பத்தாகும். அவர்களுள் அறுவர் அல்லது எழுவர் பின்னர் இஸ்லாத்தைத் தழுவியதன் மூலம் மன்னிப்பு பெற்றுக் கொண்டனர். அவர்களுள் மூவர் அல்லது நால்வர் மட்டுமே தண்டனை நிறைவேற்றத்துக்கு உள்ளாகினர். அவர்களுள் அப்துல்லாஹ் பின் கத்தல், மிக்யஸ் பின் ஸுபாபா ஆகிய இருவரும் ஆரம்பத்தில் முஸ்லிம்களாக இருந்தவர்கள்; பின்னர், கொலை செய்து விட்டு மதம் மாறிச் சென்றனர். கொலை செய்தமை, மதம் மாறியமை ஆகிய குற்றங்களுக்காக இவர்கள் இருவருக்கும் மரண தண்டனை அளிக்கப்பட்டது. ஹுவைரித் பின் அல் அஸ்லத் என்பார் நபியவர்களின் மகள் ஸைனப் மக்காவிலிருந்து மதீனாவுக்குப் பிரயாணம் செய்துகொண்டிருந்த போது அவரை இம்சைப்படுத்தினார். அதனால், கருவுற்றிருந்த அவருக்கு பின்னர் கருச்சிதைவு ஏற்பட்டது. இந்தக் குற்றத்திற்காக அவருக்கும் மரண தண்டனை அளிக்கப்பட்டது. (பின்னர் இவர் இஸ்லாத்தைத் தழுவியமையால், தண்டனையிலிருந்து இவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது என்று சிலர் கூறுகின்றனர்.) இப்ன் கத்தலின் அடிமைப் பெண்ணான குறைபா நபியவர்கள்மீது வசைப் பாடல்கள் பாடி வந்தாள். அதனால், அவளுக்கும் மரண தண்டனை அளிக்கப்பட்டது. இவர்களது தண்டனைகள் மக்காவிலேயே நிறைவேற்றப்பட்டன.

62. Stanly Lane Poole, op. cit., p.29

பொருளாதாரச் சார்தல் காரணமாக அல்லது அவர்களது சமய - அரசியல் ஆதிக்கத்தின் அச்சம் காரணமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளத் தயங்கிய அறேபிய வர்க்கத்தவர்களெல்லாம் மிகுந்த ஆர்வத்தோடு அந்த மார்க்கத்தைத் தழுவலாயினர். நபியவர்களின் தாயகமான நகரம் - முதலாவது வேத வெளிப்பாட்டைப் பெற்ற நகரம் - இஸ்லாமிய பிரசாரத்தின் முதலாவது களமாக அமைந்த நகரம் - பதின்மூன்று வருடகால இம்சைகளின் பின்னர், நபியவர்களையும் அவர்களது தோழர்களையும் விரட்டியடித்த நகரம் - மதீனாவின் இஸ்லாமிய பொதுநலவாயத்தின் ஒரு பகுதியாகவும் உலகளாவிய முஸ்லிம்கள் அனைவராலும் கொண்டாடப்படும் ஒரு புனித நகராகவும் மாறிற்று. இந்த வெற்றியைப் பற்றி பேராசிரியர் பிலிப் கே. ஹித்தி குறிப்பிடுகையில், ''பண்டைய வரலாறுகளிலுள்ள எந்த ஒரு வெற்றிப் பிரவேசத்தையும் அந்த வெற்றியோடு ஒப்பிடுதல் கடினமாகும்'' என்று எழுதுகிறார்.[63] உண்மையில், இது ஒரு மாபெரும் வெற்றியாகும். இந்த வெற்றியின் போது, நபியர்கள் காட்டிய பெருந்தன்மை குறைஷ்களினதும் மற்ற மக்களினதும் இதயங்களை வென்றது. அதனால், அவர்கள் இஸ்லாமியக் கொடியின் கீழ் ஒன்றிணைந்து, மற்ற முஸ்லிம்களோடு சேர்ந்து கொண்டு, சன்மார்க்கப்பாதை மீது முழு உலகையும் வென்றெடுக்கப் புறப்பட்டார்கள்.

மக்காவின் வீழ்ச்சி, பல நூற்றாண்டுகாலமாக குறைஷ்களின் உள்ளங்களிலே ஊறிப் போயிருந்த உருவத் தொழும்பின் - விக்கிரக வழிபாட்டின் - வீழ்ச்சியையே குறித்து நின்றது. அறபுநாட்டில் மக்கா நகரமே உருவ வழிபாட்டுக்குப் புகழ்பெற்ற இடமாக இருந்தது. பகட்டோடும் படாடோபத்தோடும் அங்கு வாழ்ந்த குறைஷ்களே மூடநம்பிக்கைகளையும் விக்கிரக வழிபாட்டையும் பின்பற்றுவதில் பிரபல்யம் பெற்றவர்களாக விளங்கினர். மக்கா நகரம் முஸ்லிம்களின் கரங்களில் வீழ்ந்ததும் அறியாமை இருள் அகன்றது; இஸ்லாம் எனும் புதிய நம்பிக்கையின் ஒளி தனது பிரகாசமான கதிர்களை நாடெங்கும் பரப்பிற்று. இஸ்லாத்தின் ஏற்றம் உறுதிப்படுத்தப்பட்டது. மக்காவின் வெற்றியே இஸ்லாத்தின் பிற்கால வெற்றிகளின் வரலாற்றைத் தொடக்கி வைத்தது.

இந்த வெற்றியின் பின்னர், நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இரண்டு வாரகாலம் தங்கியிருந்தார்கள். இக்காலத்தில் அவர்கள் மக்காவின் சுற்றுப்புறங்களில் வாழ்ந்த நாடோடி வர்க்கங்களிடையே இஸ்லாமிய தூதைப் பிரசாரம் செய்வதற்காகவும் அல்லாஹ்வுடைய சத்திய மார்க்கத்தின்பால் அவர்களை அழைப்பதற்காகவும் தமது தோழர்களைப் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தார்கள்.

ஹவாஷின்களும் தகீப்களும்

63. *Philip K. Hitti, History of the Arabs, p.118*

குறைஷ்களின் வீழ்ச்சியால் ஏமாற்றமுற்று, மக்காவின் சுற்றுப்புறங்களில் சிறு கலகங்களில் ஈடுபட்ட நாடோடி வர்க்கங்களை அடக்குவதற்கும் சிறு அளவிலான படையெடுப்புகள் அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக நபியவர்கள், ஹவாஷின் வர்க்கத்தாரின் வடிவில் எதிர்பாராத பேராபத்து ஒன்றுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். பல கிளைகளைக் கொண்ட ஹவாஷின் வர்க்கத்தினர் தங்களுக்குள் கூட்டிணைப்பு ஒன்றை உருவாக்கி, நபியவர்களுக்கு எதிராகக் கிளர்ந் தெழுந்தனர். தாஇப் நகரத்தின் போர்க்குணமுள்ள வர்க்கமான பனூ தகீப் களுடனும் அவர்கள் கூட்டுச் சேர்ந்திருந்தனர். குறைஷ்களுக்குப் பிறகு மிக ஆற்றல் வாய்ந்த வர்க்கத்தினராகக் கருதப்பட்ட ஹவாஷின்கள் அவர்களது மிகப் பழைய விரோதிகளாக இருந்தனர். நபியவர்களின் கரங்களில் மக்கா வீழ்ச்சியடைந்தமை, தாஇபில் உருவாகியிருந்த குறைஷ்களுக்கு எதிரான இயக்கத்திற்குப் புதிய உத்வேகத்தை அளித்தது. எனவே, நட்பாளர் இருவரும் புனித க.்பாவைக் கைப்பற்றும் நோக்கத்தோடு நான்காயிரம் வீரர்களைக் கொண்ட ஒரு படையுடன் புறப்பட்டுவந்து, தாஇபுக்கும் மக்காவுக்குமிடையே,மக்காவின் கிழக்கே சுமார் பதினான்கு மைல் தூரத்திலுள்ள ஹுனைன் பள்ளத்தாக்கில் முகாமிட்டனர்.

இது பற்றி அறிந்த நபி (ஸல்) அவர்கள் புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய இரண்டாயிரம் மக்காவாசிகள் உட்பட 12,000 வீரர்களோடு ஹிஜ்ரி 8 ஷவ்வால் மாதத்தில் (ஜனவரி - பெப்ரவரி 630 இல்), ஹுனைன் பள்ளத்தாக்கை நோக்கிப் புறப்பட்டார்கள். தங்களது எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பதால், பகைவர்களை வெகு எளிதில் வென்று விடலாம் என்று முஸ்லிமகள் தங்களுக்குள் நம்பிக்கையை வளர்த்திருந்தனர்; சிலர் படைபலத்தைப் பார்த்து இறுமாந்து போயிருந்தனர். ஆனால், தங்களுக்காக என்ன களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருக்கவோ கற்பனை செய்து பார்க்கவோ இல்லை. முஸ்லிம்களின் இந்த மனப்பாங்கு பற்றி நபியவர்கள் அறிந்திருந்த போதிலும், அவர்கள் எதுவுமே பேசவில்லை.

மூன்று அல்லது நான்கு நாள் பிரயாணத்தின் பின்னர், முஸ்லிம்கள் ஹுனைன் பள்ளத்தாக்கில் எதிரிகளைச் சந்தித்தனர். ஹுனைன் பள்ளத்தாக்கு பற்றி முழுமையாக அறிந்திருந்த எதிரிகள், முஸ்லிம்கள் அங்கு வருவதற்கு முன்பே, ஒடுக்கமான பள்ளத்தாக்கின் இருபக்கங்களிலுமுள்ள குன்றுகளில், மிகப் பொருத்தமான - வசதியான - இடங்களைப் பிடித்துக் கொண்டனர். முஸ்லிம்கள் ஹுனைனின் ஒடுங்கியபள்ளத்தாக்கினூடாக அணிவகுத்துவர ஆரம்பித்த துமே, குன்றுகளில் பதுங்கியிருந்த எதிரிகள் - குறிப்பாக வில்வித்தையில் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்த ஹவாஷின் வர்க்க வீரர்கள் - அவர்கள் மீது திடீரெனப் பாய்ந்து, ஆவேசத்தோடு அம்புமாரி பொழியலாயினர். எதிர்பாராத

ஹுனைன் போர்

இந்தத் தாக்குதல் முஸ்லிம் அணிகளுக்கிடையே பெரும் அச்சத்தையும் குழப்பத்தையும் எற்படுத்தி விட்டது. அவர்களுட் பலர் பின்வாங்கிச் சிதறி ஓடலாயினர். பெரும்பாலும், முஸ்லிம்கள் அனைவருமே நபியவர்களின் அழைப்பைக்கூடக் கவனிக்காமல், அவர்களைக் கடந்து அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தனர். பகை வில்வீரர்களின் போர்த்திறமையால் அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர் என்றே கூறவேண்டும்.[64] ஆயினும், நபி (ஸல்) அவர்களும் அவர்களது தோழர்கள் சிலரும் அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைத்தவர்களாக இடம்பெயராமல் நின்று, பகைவர்களை எதிர்த்துப் போர் செய்தனர். நபியவர்களின் தைரியத்தையும் உறுதியையும் கண்ட பின்வாங்கிய முஸ்லிம்கள் திரும்பவும் போர்க்களம் புகுந்து, தியாக சிந்தையோடு சண்டை செய்யலாயினர். இறுதியில் பகைவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். இந்தப் போரில் எழுபது இறைமறுப்பாளர் கொல்லப்பட்டனர்; ஆயிரக்கணக்கானோர் சிறைப்பிடிக்கப்பட்டனர். முஸ்லிம்களின் பக்கத்திலிருந்து நால்வர் மட்டுமே உயிர் நீத்தனர். மனித பலத்தில் நம்பிக்கை வைக்கக் கூடாது என்ற அரிய பாடத்தை இந்தப் போர் முஸ்லிம்களுக்குக் கற்றுக் கொடுத்தது. இந்தப் போரில் எதிரிகள் கவண், கல்லெறியும் பொறி முதலான புதிய போர்க் கருவிகளைப் பயன்படுத்தினர். அவர்களிடமிருந்து இத்தகைய கருவிகளைப் பயன்படுத்தும் முறையை முஸ்லிம்கள் கற்றுக் கொண்டனர். இஸ்லாமிய வரலாற்றில் இந்தப்போர் 'ஷவ்வத் ஹுனைன்' (ஹுனைன் போர்) என்று அழைக்கப்படுகிறது.

ஹுனைன் போர்க்களத்திலிருந்து தப்பியோடிய எதிரிகள் - குறிப்பாக தகீப் வர்க்கத்தவர்கள் - நன்கு அரண் செய்யப்பட்ட கோட்டைகளைக் கொண்ட தாஇப் நகரத்தில் தஞ்சம் புகுந்தனர். முஸ்லிம்கள் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று, சுமார் பதினொரு ஆண்டுகளுக்கு முன்பு நபியவர்களைச் சொற்களாலும் கற்களாலும் அடித்து, தனது எல்லைக்கப்பால் விரட்டிய தாஇப் நகரத்தை முற்றுகையிட்டனர். முற்றுகை இருபது நாள்கள் வரை நீடித்தது. ஆயினும், எதிரிகள் சரணடையும் அறிகுறிகள் தென்படவில்லை. இந்த முற்றுகையின் போதுதான் முஸ்லிம்கள் முதன் முறையாக நகரத்தின் கோட்டைச் சுவர்களை உடைப்பதற்காக கவண், கல்லெறியும் பொறி, உடை கருவிகள் முதலான உபகரணங்களைப் பயன்படுத்தினர். எதிரிகள் வெப்பமான இரும்புக் கோல்களைப் பொறிகள் மூலம் எறிந்து, முஸ்லிம்களைத் தாக்கினர். அதனால் அதிகமானோர் காயமுற்றனர். இறுதியில் முற்றுகையை

தாஇப் நகர முற்றுகை

64. இந்தச் சம்பவம் பற்றி அல் குர்ஆனிலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. "அநேக காலங்களில் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்திருக்கிறான். எனினும், ஹுனைன் யுத்தத்தன்று உங்களை அகமகிழச் செய்து கொண்டிருந்த உங்களுடைய அதிகமான (சனத்) தொகை உங்களுக்கு யாதொரு பயனும் அளிக்கவில்லை. பூமி இவ்வளவு பரந்திருந்தும், உங்களுக்கு மிக்க நெருக்கமாகி விட்டது. அன்றி, நீங்கள் புறங்காட்டி ஓடவும் தலைப்பட்டீர்கள்" (9:25)

மேலும் நீடிக்கவிரும்பாத நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களுள் ஒருவரான நௌபல் பின் முஆவியா அல் தீலீ என்பாரைக் கலந்தாலோசித்த பின்னர், முற்றுகையைக் கைவிட்டுத் தமது தோழர்களை அழைத்துக் கொண்டு மக்காவுக்கு திரும்பினார்கள். திரும்பிச் சென்ற வழியில் தகீப் வர்க்கத்தாருக்கு எதிராக இறைவனிடம் பிரார்த்திக்குமாறு நபித்தோழர்கள் நபியவர்களை வேண்டிக்கொண்டபோது, அவர்கள், *''அல்லாஹ்வே! தகீப் வர்க்கத்தாருக்கு வழிகாட்டுவாயாக! அவர்களை நேர்பாதைக்குக் கொண்டு வருவாயாக!''* என்று பிரார்த்தனை செய்தார்கள்[65] அதிக காலம் செல்வதற்கு முன்பே அவர்களது பிரார்த்தனை நிறைவேறியது. அடுத்த ஆண்டு, அவர்கள் தாமாகவே முன்வந்து இஸ்லாத்தைத் தழுவினர்; தாஇப் நகரமும் குருதி சிந்தல் இல்லாமலே முஸ்லிம்களிடம் சரணடைந்தது. தாஇப் நகர முற்றுகையின் போது நிகழ்ந்த சண்டைகளில் முஸ்லிம்கள் பன்னிருவர் கொல்லப்பட்டனர்.

தாஇப் நகரிரிலிருந்து திரும்பிய நபியவர்கள் மக்காவுக்குச் செல்லாமல், மக்காவிலிருந்து தாஇபுக்குச் செல்லும் பாதையில் இருந்த ஜி.ரானா என்ற இடத்திற்குச் சென்றார்கள். அங்கேயே நபியவர்கள் ஹுனைன் போரில் சிறைப்பிடிக்கப்பட்ட போர்க்கைதிகளையும் கிடைத்த கொள்ளைப் பொருள்களையும் விட்டு வந்திருந்தார்கள். அங்கே 24,000 ஒட்டகைகள், 40,000 ஆடுகள், 4000 ஊகியா (அவுன்ஸ்) வெள்ளி ஆகியவற்றோடு 6000 போர்க்கைதிகளும் இருந்தனர்.[66] கொள்ளைப் பொருள்கள் அல் குர்ஆனின் ஆணைப்படி ஐந்து பங்குகளாகப் பிரிக்கப்பட்டன. வழக்கம் போல நான்கு பங்குகள் போர் வீரர்களுக்கிடையே வினியோகிக்கப்பட்டன. ஐந்தாவது பங்கு ஏழைகளுக்கும் தேவையுடையோருக்குமென ஒதுக்கி வைக்கப்பட்டது. புதிதாக இஸ்லாத்தை ஏற்று, போரில் பங்குபற்றிய மக்கா குறைஷ்களுக்கும் கொள்ளைப் பொருள்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அபூ ஸுப்யான், அவரது புதல்வர்களான முஆவியா, யஸீத் ஆகியோருக்கு ஒவ்வொருவருக்கும் நூறு ஒட்டகைகளும் நாற்பது ஊகியா வெள்ளியும் கொடுக்கப்பட்டன. போர்க்கைதிகள் அனைவரும் நபியவர்களின் ஆணைமீது விடுதலை செய்யப்பட்டனர். இதன் பின்னர், மக்காவுக்குச் சென்ற நபியவர்கள் அத்தாப் பின் உஸைத் என்பாரை மக்காவின் ஆளுநராக நியமித்து விட்டு, ஹிஜ்ரி 8 துல் க.தா இருபத்தேழாம் நாள் (மார்ச் 18, 630) மதீனாவுக்குத் திரும்பினார்கள்.

கொள்ளைப் பொருள் வினியோகம்

அதேசமயம், மு.தாவில் வெற்றி தோல்வியின்றி முடிந்த போரினால் பைஸாந்தியப் பேரரசன் ஹிரக்ளியஸ் மனம் குழம்பித் துடித்துக்

65. இப்ன் ஸஃதே, ii /159
66. மேற்படி ii /152

கொண்டிருந்தான். முஸ்லிம்களின் துணிச்சலும் வீரமும் அவனுக்குப் பெரும் சவாலாக அமைந்தன. தெற்கிலே ஏற்பட்டுக்கொண்டிருந்த முஸ்லிம் பொதுநலவாயத்தின் செல்வாக்கு வளர்ச்சியும் அவனுக்கு அமைதியின்மையை அளித்தது. முஸ்லிம்களால் அடையப் பெற்ற வெற்றிகளும் முஸ்லிம் பேரரசின் விரைவான படர்ச்சியும் அவனது பொறாமையைத் தூண்டின; அடிபட்ட நாகம் போலச் சீறினான். எனவே, அவன் இஸ்லாத்தையும் அதன் பொதுநலவாய அரசாங்கத்தையும் நசுக்கிவிடத் தீர்மானித்து, அவனோடு நட்பறவு கொண்டிருந்த லக்ம், ஜுதாம், ஆமிலா, ஙஸ்ஸான் ஆகிய வர்க்கங்களைச் சேர்ந்த தலைவர்களின் உதவியோடு இருபது அல்லது முப்பது ஆயிரம் வீரர்களைக் கொண்ட பெரும் படை ஒன்றைத் திரட்டிப் போருக்கு ஆயத்தமானான். பைஸாந்தியப் பேரரசனின் போர் ஆயத்தங்கள் பற்றிய செய்தி அறிந்த நபியவர்கள் 10,000 குதிரை வீரர்கள் உட்பட 30,000 வீரர்களைக் கொண்ட பலம் வாய்ந்த படை ஒன்றைத் திரட்டிக் கொண்டு, உரோமர்களை அவர்களது எல்லைப் புறத்திலேயே சந்திக்கப் புறப்பட்டார்கள். பைஸாந்தியப் பேரரசின் எல்லையில், மதீனாவிலிருந்து சுமார் இரு நூற்றைம்பது மைல் தூரத்திலுள்ள தபூக் என்ற நகரத்தை முஸ்லிம்கள் அடைந்தபோது, அந்த நகரம் அமைதியாக இருந்ததைக் கண்டு அவர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். முஸ்லிம் படையணிகளின் பலத்தை ஒற்றர்கள் மூலம் அறிந்த பைஸாந்தியப் பேரரசன் முஸ்லிம்களைத் தாக்கும் எண்ணத்தைக் கைவிட்டு, அவர்கள் அங்கு வருவதற்கு முன்பே தனது படையணிகளோடு அங்கிருந்து ஓடிவிட்டான்.

தபூக் படையெடுப்பு

நபியவர்களும் அவர்களது தோழர்களும் இருபது தினங்கள் வரை தபூக்கில் தங்கியிருந்து, சிரியாவின் எல்லைவரை சென்று பார்த்தனர். பகைவரின் நடமாட்டம் எதுவும் காணப்படவில்லை. இதற்கிடையில், அந்தப் பிரதேசத்திலிருந்த உள்ளூர் சிற்றரசர்கள் சிலர் மதீனா ஆட்சியாளரின் ஆற்றலையும் முஸ்லிம்களின் படை பலத்தையும் உணர்ந்து தெளிந்து, நபியவர்களிடம் வந்து, சமாதான உடன்படிக்கைகள் செய்துகொண்டனர். அகபா குடாவின் முடிவிலிருந்த அய்லா என்ற சிறிய பட்டினத்தின் கிறித்தவச் சிற்றரசனான யூஹன்னா என்பான் ஆண்டொன்றுக்கு முந்நூறு தீனார் ஜிஷ்யா (தலை வரி) செலுத்துவதாகக் கூறி, நபியவர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டான். ஜர்பா.., அத்ருஹ் ஆகிய இடங்களின் தலைவர்களும்நபியவர்களிடம் வந்து, சமாதான உடன்படிக்கைகள் செய்து கொண்டனர். 'தூமதுல் ஜன்தல்' என்ற பாலைவனச் சோலையின் கிறித்தவத் தலைவனான உகைதிர் பின் அப்துல் மலிக் என்பான் மட்டும் சற்று எதிர்ப்புக் காட்டினான். அவனது எதிர்ப்பு காலித் பின் வலீதால் நசுக்கப்பட்டது. பின்னர்,

சிற்றரசுகள் வெற்றி

அவனும் ஜிஷ்யா செலுத்துவதாகக் கூறி, சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டான். வடக்கில் கிடைத்த இந்த வெற்றிகளோடு, நபியவர்கள் தமது தோழர்களுடன் மதீனாவுக்குத் திரும்பினார்கள். இஸ்லாமிய வரலாற்றில் 'ஙஷ்வத் தபூக்' (தபூக் படையெடுப்பு) என்று அழைக்கப்படும் இந்தப் படையெழுச்சி ஹிஜ்ரி 9 றஜப் மாதத்தில் (நவம்பர் 630) நிகழ்ந்தது.

இஸ்லாத்தின் வரலாற்றில் ஹிஜ்ரி ஒன்பதாம் ஆண்டு 'ஆமுல் வுபூத்' (பேராட் குழுக்கள் ஆண்டு) என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், இந்த ஆண்டிலிருந்து அறேபியத் தீபகற்பத்தில் வாழ்ந்த பல்வேறு வர்க்கத்தவர்கள் நபியவர்களுக்குத் தங்கள் மரியாதையைச் செலுத்தவும் இஸ்லாத்தின்பால் தாங்கள் கொண்ட விசுவாசத்தைத் தெரிவிக்கவும் தூதுக்குழுக்களை மதீனாவுக்கு அனுப்ப ஆரம்பித்தனர். அவர்களது வருகை நபியவர்களது மரணம் வரை நீடித்தது. இவ்வாறு, நபியவர்களிடம் வந்த பேராளர்களுள் சுமார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, மக்கா குறைஷ்களால் துன்புறுத்தப்பட்டு, அபயம் தேடிச் சென்ற அண்ணல் அவர்களுக்கு அடைக்கலம் அளிக்க மறுத்து, தங்கள் நகரத்தைவிட்டே விரட்டியடித்த தாஇப் நகர மக்களும் இருந்தனர். அவர்கள் தங்களுள் மிகுந்த மதிப்பும் கெட்டித்தனமும் வாய்ந்த சிலரைத் தெரிவு செய்து, தங்கள் தவறுக்காக மன்னிப்புக் கோரவும் நபியவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தவும் அவர்களை மதீனாவுக்கு அனுப்பி வைத்தனர். மதீனாவுக்கு வந்த பேராட்குழுக்கள் யாவும் கேட்போர் கூடமாகவும் சமய, அரசியல் விவகாரங்கள் சம்பந்தமாகக் கலந்துரையாடல் நடத்தும் இடமாகவும் இருந்த ''மஸ்ஜிதுல் நபவீ' பள்ளிவாயிலின் முற்றத்தில் நபியவர்களால் அன்போடு வரவேற்கப்பட்டன. அறபு வரலாற்றாசிரியர்களின் கருத்துப்படி, ஹிஜ்ரி ஐந்துக்கும் பன்னிரண்டுக்கும் இடைப்பட்ட எட்டு ஆண்டு காலத்தில் இத்தகைய எழுபத்திரண்டு தூதுக்குழுகள் மதீனாவுக்கு வந்தன. நபியவர்களின் ஏழைத்தோழர்களும் மதீனாவின் தலைமைக் குடிகளும் பேராட்குழு உறுப்பினர்களை அறேபியருக்கே உரிய பழைமைச் சிறப்பு வாய்ந்த விருந்தோம்பும் பண்பாட்டிற்கேற்ப நன்கு உபசரித்தனர். அவர்கள் விடைபெற்றுச் சென்றபோது, அவர்களது பிரதேச மக்களுக்கு இஸ்லாத்தையும் அதன் கோட்பாடுகளையும் போதிப்பதற்காகப் போதனாசிரியர்களும் அவர்களோடு அனுப்பிவைக்கப்பட்டனர்.

பேராட் குழுக்கள் ஆண்டு

சுருங்கச் சொன்னால், பேராட்குழுக்கள் ஆண்டில், தென் அறேபியாவிலுள்ள யமன், பாரசீகக் குடாவிலுள்ள உமான் ஆகியவற்றிலிருந்து பாரசீக, சிரியா எல்லைகள் வரை வாழ்ந்த மக்கள் தொகுதி தொகுதியாக இஸ்லாத்தைத் தழுவினர். அறேபியரின் மலட்டு உள்ளப் பூமிகளில் நபியவர்களால் தூவப்பட்ட ஏகத்துவ விதைகள் இனிய

பழங்களைத் தர ஆரம்பித்தன. அல்லாஹ்வின் சத்திய மார்க்கம் அறேபிய தீபகற்பத்தின் உள்ளேயும் வெளியேயும் மிக உத்வேகத்தோடு பரவலாயிற்று. வேற்றுமையிலும் உருவத் தொழும்பிலும் வாழ்ந்த மக்கள் இஸ்லாமியக் கொடியின் கீழ் புதிய வாழ்க்கை ஒன்றை ஆரம்பித்தனர். உண்மையில், பேராட்குழுக்களின் ஆண்டு நபி (ஸல்) அவர்களது வாழ்வில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காலப்பகுதியாக அமைந்தது.[67]

ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டு இறுதியில், முஸ்லிமல்லாதோர் புனித க.·. பாவினுள் நுழைவதைத் தடை செய்யும் ஆணை ஒன்று அல்லாஹ்வால் அருளப்பட்டது.[68] இது 'பராஅத்' (விலக்கல்) பிரகடனம் என்று அழைக்கப்படுகிறது. இந்த இறை ஆணை வழங்கப்பட்ட உடனேயே, நபி (ஸல்) அவர்கள் இந்தக் கட்டளையின் ஒரு பிரதியைத் தூதுவர் ஒருவர் மூலம், ஹஜ் யாத்திரிகர்களுக்குத் தலைமை தாங்கி மக்காவுக்குச் சென்றிருந்த ஹழ்ரத் அபூபக்ருக்கு அனுப்பிவைத்தார்கள்; இந்த ஆணையைத் தாங்கிய பிரதி ஹழ்ரத் அலீயால் ஹஜ்ஜுக்காக மக்காவுக்கு வந்த மக்கள் கூட்டத்திற்கு வாசித்துக் காட்டப்படல் வேண்டும் என்றும் பணித்திருந்தார்கள். அவ்வாறே, அல்லாஹ்வின் ஆணை ஹழ்ரத் அலீயால் மக்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டது. அறேபியாவில் காலூன்றியிருந்த விக்கிரக வழிபாட்டின் முடிவைக் குறித்து நின்ற இந்தப் பிரகடனத்தின் விளைவாக, உருவத் தொழும்பும் அதனை அடியொற்றி எழுந்த மூட நம்பிக்கைகளும் தீபகற்பத்திலிருந்து முழுமையாகப் பிடுங்கி எறியப்பட்டன; முஸ்லிமல்லாதோர் நிராகரிக்கப்பட்டு, புனித நகரங்களின் எல்லைகளுக்கப்பால் விலக்கி வைக்கப்பட்டனர். அவ்வாண்டு ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்காவில் பெருமளவில் திரண்டிருந்த முஸ்லிமல்லாதோர் இந்தப் பிரகடனத்தைச் செவியுற்றதும், தத்தம் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர். அவர்களுட் பலர் அடுத்த ஆண்டு முடிவதற்கு முன்பே இஸ்லாத்தைத் தழுவினர்.

விலக்கற் பிரகடனம்

யமனுக்கும் சிரிய எல்லைக்கும் இடைப்பட்ட பிரதேசங்களெல்லாம் இப்போது இஸ்லாத்தின் சுயேச்சையான ஆட்சியின்கீழ் வந்து விட்டன. பலவீனமான முஸ்லிம்கள் சிலரோடு தட்டுத்தடுமாறி நடந்து கொண்டிருந்த இஸ்லாம் இப்போது நூறாயிரத்துக்கும் அதிகமான பலம் மிகுந்த ஆதரவாளர்களோடு வெற்றிப் பாதையிலே ஓட ஆரம்பித்தது. நபி

67. இதுபற்றி அல் குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது: "அல்லாஹ்வுடைய உதவியும் வெற்றியும் கிடைத்து, அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் ஜனங்கள் கூட்டங் கூட்டமாக நுழைவதையும் நீர் கண்டால், உமது இறைவனைப் புகழ்ந்து துதி செய்து, அவனுடைய மன்னிப்பையும் கோருவீராக; நிச்சயமாக, அவன் மன்னிப்புக் கோருதலையும் அங்கீகரிப்பவனாக இருக்கிறான்". (110:1–3)

68. ஸூரதுத் தவ்பா (ஒன்பதாம் அத்தியாயம்) வசனங்கள் 1 – 29. "நிச்சயமாக இணைவைத்து வணங்குவோர் அசுத்தமானவர்களே. ஆகவே அவர்கள் இவ்வருடத்திற்குப் பின்னர் சிறப்புற்ற இப்பள்ளியை நெருங்கவேண்டாம்....."(9:28)

முஹம்மத் (ஸல்) அவர்களது புதிய தூதத்தை எதிர்த்த மக்கள் இப்போது அவர்களது தீவிர ஆர்வலர்களாக மாறி, அவர்களுக்காகத் தங்கள் உயிர், உடல், பொருள் முதலிய அனைத்தையும் அர்ப்பணிக்க ஆயத்தமாகிவிட்டனர். உருவத்தொழும்பர்களான அறேபியரால் முடிசூட்டப்பட்டிருந்த 'மார்க்க மின்மை' இப்போது 'தௌஹீத்' என்ற ஏகத்துவத்தின் பூமியிலே உயிரோடு புதைக்கப்பட்டு விட்டது.

பிரியாவிடை ஹஜ்

ஹிஜ்ரி 10 ஆம் ஆண்டில் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது பணி வெற்றிகரமாக முடிவடைந்து விட்டது என்பதையும் தமது வாழ்வின் முடிவு நெருங்கி விட்டது என்பதையும் உணர்ந்தார்கள். எனவே, மக்காவுக்குச் சென்று பிரியாவிடை ஹஜ்ஜை நிறைவேற்ற அவர்கள் தீர்மானித்தார்கள்; தமது எண்ணத்தைத் தோழர்களுக்கும் அறிவித்தார்கள். இந்தச் செய்தி மதீனாவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் காட்டுத் தீ போலப் பரவிற்று. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பயணத்தில் பங்குகொள்ள ஒவ்வொரு முஸ்லிமும் விரும்பினர். ஹிஜ்ரி 10 துல் க.·.தா மாதம் இருபத்தைந்தாம் நாள் (பெப்ரவரி 23, 632) நபியவர்கள் தமது மனைவியர்களோடும் பெருந் தொகையான தோழர்களோடும் மதீனாவை விட்டுப்புறப்பட்டு, துல் ஹஜ் ஐந்தாம் நாள் (மார்ச் 3) மக்காவை அடைந்தார்கள். நபியவர்கள் மக்கா வந்த செய்தி தீபகற்பமெங்கும் பரவவே, அறேபியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு வந்து கூடலாயினர். இவ்வாறு மக்காவில் அந்த ஆண்டு ஹஜ்ஜுக்காக கூடிய முஸ்லிம்களின் எண்ணிக்கை 1,24,000 முதல் 1, 30,000 வரை இருந்தது என்று அறிவிக்கப்படுகிறது.[69] வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நபியவர்களின் இந்த ஹஜ் 'ஹஜ்ஜதுல் வதா.·.' (பிரியாவிடை ஹஜ்) என்று அழைக்கப்படுகிறது.[70]

69. ஸய்யித் அபுல் ஹஸன் அல் நத்வீ, பக்கம் 442. (அடிக்குறிப்பு 3)

70. இஸ்லாமிய வரலாற்றில் இந்த ஹஜ் நபியவர்களின் முதலாவது ஹஜ்ஜாகவும் முதலாவது இஸ்லாமிய ஹஜ் (ஹஜ்ஜதுல் இஸ்லாம்) ஆகவும் கருதப்படுகிறது. ஏனெனில், நபித்துவம் அருளப்பட்ட பின்னர், நபியவர்கள் ஒருமுறையேனும் ஹஜ்ஜை நிறைவேற்றியதில்லை; நபி இப்றாஹீம் (அலை) அவர்களால் தாபிக்கப்பட்ட மூலவடிவில் ஹஜ் கிரியைகள் நிறைவேற்றப்பட்டமையும் அதுவே முதல் தடவையாகும். அன்றியும், முந்திய ஆண்டுகளில் முஸ்லிம்களோடு உருவத் தொழும்பர்களும் சேர்ந்து ஹஜ் கடமையை நிறைவேற்றினர். புனித பிரதேசத்தினுள் நுழைய விடாமல் அவர்களைத் தடுப்பதற்கு இறை ஆணை எதுவும் அப்போது இருக்கவில்லை. இதற்கு முந்திய ஆண்டில், ஹழ்ரத் அபூபக்ரின் தலைமையிலான ஹஜ் யாத்திரிகர் கூட்டம் மக்காவுக்குப் புறப்பட்டுச் சென்ற பின்னரே இது பற்றிய ஆணை அல்லாஹ்விடமிருந்து அருளப்பட்டது; ஹஜ் சடங்குகள் முடிவுற்ற பின்னரே இந்த ஆணையைத் தாங்கிய ஓலை மக்காவில் கூடியிருந்த யாத்திரிகர்களுக்கு வாசித்துக் காட்டப்பட்டது. அதனால், முந்திய ஆண்டின் ஹஜ்கூட நபி இப்றாஹீம் அவர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட மூல வடிவில் அனுட்டிக்கப்படவில்லை. முஸ்லிமல்லாதோர் 'மஸ்ஜிதுல் ஹரம்' பிரதேசத்தினுள் நுழைவதைத் தடைசெய்யும் ஆணை அல்லாஹ்வால் அருளப்பட்ட பின்னர், நபியவர்களால் அனுட்டிக்கப்பட்ட பிரியாவிடை ஹஜ்ஜே அதன் மூலவடிவில் நிறைவேற்றப்பட்ட முதலாவது ஹஜ் ஆகும். இந்தக் காரணங்களுக்காக இந்த ஹஜ் அல் குர்ஆனால் 'ஹஜ்ஜுல் அக்பர்' (மாபெரும் ஹஜ்) என்று வருணிக்கப்படுகிறது.

இறுதிப் பிரசங்கம்

நபி (ஸல்) அவர்கள், மக்கா நகரம் முன்னொருபோதும் கண்டிராத மாபெரும் மக்கள் கூட்டத்தோடு ஹஜ்ஜின் சடங்குகளை நிறைவேற்றினார்கள். மக்காவில் நான்கு நாள்கள் தங்கியிருந்தார்கள். ஐந்தாம் நாள் (துல்ஹஜ் எட்டாம் நாள்) வியாழக்கிழமை, மினாவுக்குச் சென்று, அன்றிரவை அங்கே கழித்தார்கள். அடுத்த நாள் வெள்ளிக் கிழமை, வைகறைத் தொழுகையைத் தொழுத பின்னர், தமது விருப்புக்குரிய 'அல் கஸ்வா' ஒட்டகையில் ஏறித் தோழர்கள் புடைசூழ 'அரபாத்'திற்குச் சென்று, அங்கே செய்யவேண்டிய சடங்குகளை நிறைவேற்றினார்கள். அங்கே தரித்திருந்தபோது, துல்ஹஜ் ஒன்பதாம் நாள், அரபாத் மலையின் சிகரத்தில், தமது ஒட்டகையில் அமர்ந்தவாறே அங்கு வெள்ளமெனத் திரண்டிருந்த மக்கள் முன்னால் தமது இறுதிப் பேருரையை நிகழ்த்தினார்கள்:

மனிதர்களே! என் வார்த்தைகளுக்குச் செவி கொடுங்கள். இந்த ஆண்டுக்குப் பின்னர், நான் உங்களை இதே இடத்தில் மீண்டும் சந்திப்பேனா என்பது எனக்குத் தெரியாது.

இன்று என்ன நாள் என்று உங்களுக்குத் தெரியுமா? இறைவனுக்காக அர்ப்பணம் செய்யும் தியாகத் திருநாள் (யவ்முன் நவ்ர்) ஆகும். இது என்ன மாதம் என்பது உங்களுக்குத் தெரியுமா? புனிதமான துல்ஹஜ் மாதமாகும். இது எந்த நகரம் என்று உங்களுக்குத் தெரியுமா? தூய (மக்க) மாநகரமாகும். புனிதமான இந்தத் தினத்தையும் புனிதமான இந்த மாதத்தையும் புனிதமான இந்த நகரத்தையும் போலவே உங்கள் குருதியும் உடைமைகளும் நீங்கள் உங்கள் இறைவனைச் சந்திக்கும் வரை மீறப்படாதவை ஆகும். நிச்சயமாக, நீங்கள் உங்கள் இறைவனைச் சந்திப்பீர்கள். அப்போது நீங்கள் உங்கள் செயல்களைப் பற்றி வினவப்படுவீர்கள்.

நான் உங்களை எச்சரிக்கிறேன். உங்களுள் எவர் மற்றொருவரின் நம்பிக்கைப்பொருளை வைத்திருக்கிறாரோ அவர் அதனை அதற்குரியவரிடம் ஒப்படைத்து விடவேண்டும். வட்டிக் கடப்பாடுகள் யாவும் (இன்று முதல்) ஒழிக்கப்பட்டு விட்டன. ஆனால், உங்கள் முதல் உங்களுக்கு உண்டு. நீங்கள் அநீதி செய்யவோ அநீதி செய்யப்படவோ வேண்டாம். வட்டி எடுக்கக் கூடாது என்று அல்லாஹ் ஆணையிட்டிருக்கிறான். அப்பாஸ் பின் அப்துல் முத்தலிபுக்கு நீங்கள் கொடுக்க வேண்டிய வட்டிப் பாக்கிகள் யாவும் நீக்கப்பட்டு விட்டன. அறியாமைக்காலத்தில் செய்யப்பட்ட கொலைகளுக்குப் பழிவாங்கும் உரிமையும் இன்று முதல் அகற்றப்பட்டு விட்டது. இவ்வாறு நான் நீக்கும் முதலாவது பழிவாங்கல் உரிமை (லைத் வர்க்கத்தாரிடையே வளர்ந்து, ஹுதைல் என்பாரால் கொல்லப்பட்ட) ரபீஆ பின் அல் ஹாரித் பின் அப்துல் முத்தலிப் என்பாரின் கொலைக்குரியதாகும்.

மக்களே! இன்று உங்களின் இந்த நாட்டிலே, 'நான் இனி ஒருபோதும் வழிபடப்படமாட்டேன்' என்பதை எண்ணி, வைத்தான் ஏமாற்றம்

அடைந்து போயிருக்கிறான். ஆனால், நீங்கள் மிக அற்பமாக நினைக்கும் விவகாரங்களில் நீங்கள் அவனுக்கு வழிபட்டால் கூட அவன் மிகச் சந்தோஷப்படுவான். ஆகவே, உங்களுடைய மார்க்கத்தில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என்று நான் உங்களை எச்சரிக்கிறேன்.....

மக்களே! உங்கள் மனைவியர் மீது உங்களுக்கு உரிமைகள் இருக்கின்றன. அவ்வாறே உங்கள் மீதும் அவர்களுக்கு உரிமைகள் இருக்கின்றன.....பெண்களை அன்போடு நடத்துங்கள். ஏனெனில், அவர்கள் உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட - தங்கள் மீது எத்தகைய ஆதிக்கமும் இல்லாத - கைதிகளாவர். நீங்கள் அவர்களை அல்லாஹ்விடம் இருந்து அடைக்கலப் பொருள்களாகப் பெற்றிருக்கிறீர்கள்....உங்கள் அடிமைகளைப் பற்றியும் எச்சரிக்கிறேன். நீங்கள் உண்பதைக் கொண்டே அவர்களுக்கும் உணவூட்டுங்கள். நீங்கள் அணிவதைக் கொண்டே அவர்களையும் அணிவியுங்கள். அவர்கள் ஏதாவது குற்றம் செய்து, அதனை மன்னிக்க நீங்கள் விரும்பாவிட்டால், அவர்களை விற்று விடுங்கள். ஏனெனில், அவர்கள் அல்லாஹ்வின் அடியார்களாவர். அவர்களை வதை செய்யாதீர்கள்.

மக்களே! நான் சொல்வதை கவனித்து விளங்கிக் கொள்ளுங்கள். முஸ்லிம்கள் ஒருவருக்கு மற்றவர் சகோதரர் ஆவர். ஒருவருக்குச் சொந்தமானது அவரது சகோதரருக்கு ஆகுமானதன்று. அவராக மனம் விரும்பித் தந்தால் மட்டுமே ஆகுமானது. அநீதி செய்வதிலிருந்து உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

இறைவன் ஒவ்வொருவருக்கும் மரபு வழிச் சொத்துப் பங்கை விதித்திருக்கிறான். எனவே, வாரிசுகளுக்கு மாறாக எழுதப்படும் உயில் செல்லுபடியாகாது. குழந்தை அதன் பெற்றோருக்குச் சொந்தமானது. திருமண பந்தத்தை மீறி, விபசாரம் செய்தவனுக்குரிய தண்டனை அவனைக் கற்களால் எறிந்து கொல்வது தான்.

மக்களே! உருவ வழிபாட்டைப் பற்றி நான் உங்களை எச்சரிக்கிறேன். திருடாதீர்கள். பொய் கூறாதீர்கள். விலக்கப்பட்ட எதனையும் செய்யாதீர்கள். எல்லா விதமான பாவங்களிலிருந்தும் விலகி இருங்கள்.

முஸ்லிம்களே! உங்கள் தலைவர்களுக்கு மதிப்பளியுங்கள். கறுப்பு அடிமை ஒருவர் உங்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு, அவர் உங்களை அல்லாஹ்வின் வேதத்திற்கு ஏற்ப வழிநடத்தினால், அவருக்குக் கீழ்ப்படியுங்கள்.

மக்களே! உங்கள் இறைவன் ஒருவன்; உங்கள் மூதாதையும் ஒருவரே. நீங்கள் அனைவரும் மண்ணிலிருந்து படைக்கப்பட்ட ஆதத்தின் சந்ததிகளே. அல்லாஹ்வின் முன்னிலையில் மிகவும் கண்ணியத்திற்குரியவர் அல்லாஹ்வை மிகவும் அஞ்சுபவரே. அறேபியன் அறேபியனல்லாதவனைவிடவோ அறேபியனல்லாதவன் அறேபியனைவிடவோ உயர்ந்தவனல்லன். அப்படி முன்னுரிமை

ஏதாவது இருந்தால், அல்லாஹ்வைப் பற்றிய அச்சத்தின் அடிப்படையில் மட்டுமே உண்டு.

நான் உங்களிடையே அல்லாஹ்வின் வேதத்தையும் அவனது தூதரின் ஸுன்னாவையும் விட்டுச் செல்கிறேன். நீங்கள் அவற்றைப் பற்றிப் பிடித்திருக்கும் காலம்வரை, நீங்கள் ஒருபோதும் வழிதவறிச் செல்லமாட்டீர்கள்.☆ நிச்சயமாக எனக்குப் பின்னர் எந்த நபியும் வரமாட்டார். நபிமார்களுள் இறுதியானவன் நானே.

இங்கே வந்திருப்பவர்கள் வராதவர்களுக்கு எனது சொற்களைத் தெரியப்படுத்தட்டும்.[71]

நபி (ஸல்) அவர்கள் தமது பேருரையை, ''***அல்லாஹ்வே! நான் உனது தூதைத் தெரிவித்து, எனது பணியைப் பூர்த்தி செய்து விட்டேன்***'' என்று கூறி முடித்தார்கள். அப்போது, அங்கு திரண்டிருந்த மக்கள் ஏககுரலில், ''***ஆம்! நாங்கள் அதனை உறுதிப்படுத்துகிறோம்***'' என்று சொல்ல, நபியவர்கள் தமது முகத்தை வானத்தின் பால் உயர்த்தி, ''***இதற்கு நீயே சான்று அல்லாஹ்வே!***'' என்று கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்களது இந்த இறுதிப் பேருரை இஸ்லாத்தின் வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கிறது. பல சிறப்புக்களையும் முக்கியத்துவங்களையும் கொண்ட இந்தப் பேருரை இஸ்லாத்தால் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளினதும் கடமைகளினதும் மகா பட்டயமாக இருந்தது. அது, அக்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த மனித உரிமைகள் பற்றிய கருத்தை மாற்றி, முன்னர் ஒருபோதும் மனித இனத்திற்குத் தெரியாதிருந்த புதிய பரிமாணங்களை அதற்கு அளித்தது; இன, நிற, தேசிய வேறுபாடின்றி முழு மனித குலத்திற்கும் எல்லா வகையான உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் வழங்கியது; மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே பன்னெடுங்காலமாக இருந்து வந்த ஒற்றுமையின்மையை வேரோடு அறுத்தெறிந்தது; சமுதாயத்தில் புரையோடிப்போயிருந்த தீமைகள் அனைத்தையும் அகற்றி, சகோதரத்துவத்தினதும் சமத்துவத்தினதும் அடிப்படையில் அமைந்த நீதியான சமுதாயம் ஒன்றை நிறுவ வழிகோலியது. முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள் என்று பிரகடனம் செய்ததன் மூலம் அந்தப் பேருரை முஸ்லிம்களிடையே ஒற்றுமைப் பிணைப்பு ஏற்பட அடித்தளம் இட்டது. இந்த ஒற்றுமை அவர்களை உலகிலே மிகவும் வலிமைவாய்ந்த ஒரு சக்தியாக மாற்றியது.

பேருரையின் முக்கியத்துவம்

★ நம்பத்தகுந்த ஹதீத் தொகுப்புக்களில் வரும் ஹதீத்களில் "நான் உங்கள் இடையே இரண்டை விட்டுச் செல்கிறேன். ஒன்று அல்லாஹ்வின் வேதம்; மற்றது எனது குடும்பம் (அஹ்லுல் பைத்). இரண்டையும் நீங்கள் பற்றிப் பிடித்துக் கொள்ளும் வரை வழிதவற மாட்டீர்கள்" என்றே காணப்படுகிறது. (முஸ்லிம், திர்மிதீ) இதுவே மிகவும் நம்பத் தகுந்த கூற்று ஆகும்.

71. இப்ன் ஹிஸாமின் ஸீராவிலிருந்து தொகுக்கப் பெற்றது. பாகம் IV பக்கம் 248 – 49

நபி (ஸல்) அவர்களின் இறுதிப்பேருரை, நிலையூன்றிய பற்றுக்களுக்காகத் தங்களுக்குள் பல தலைமுறைகள் வரை போராடிக் கொண்டிருந்த அறேபியரின் பகைமையைப் போக்கி, இஸ்லாமியக் கொடியின் கீழ் அவர்களை ஒன்றுபடுத்தியதோடு, உலகிலேயே மிகவும் சக்திவாய்ந்த ஒரு சமுதாயமாகவும் அவர்களை மாற்றியது. முஸ்லிம்கள் மீது இஸ்லாம் விதித்த கடமைகளையும் கடந்த இருபத்து மூன்று ஆண்டுகளாக அவர்களது சமூக, கலாசார உயர்ச்சிக்காகப் போதிக்கப்பட்ட நபியவர்களது போதனைகளையும் அது அவர்களுக்கு நினைவூட்டியது. இலட்சிய முஸ்லிம் சமுதாயம் சம்பந்தமாக நபியவர்கள் கொண்டிருந்த மகோன்னதமான கருத்துக்களையும் சகோதரத்துவம், சமத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த நீதியான சமுதாயம் பற்றிய அவர்களது தத்துவத்தையும் அந்தப் பேருரை வெளியிட்டது. அந்த உரை இஸ்லாமிய இலக்கியத்தின் இணையற்ற ஒரு பகுதியாகவும் எல்லாக் காலங்களையும் எல்லா நாடுகளையும் சேர்ந்த மக்களுக்கு மறக்க முடியாத ஒரு பாடமாகவும் அமைந்து விட்டமையால், அது கலாசார முக்கியத்துவம் உடையதாகவும் இருந்தது. சுருங்கச் சொன்னால், இஸ்லாமிய கோட்பாடுகளின் சத்தாகவும் சுருக்கமாகவும் அமைந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்தப் பேருரையின் மூலம் நபி (ஸல்) அவர்கள் சகோதரத்துவமும் சமத்துவமுமே இலட்சிய முஸ்லிம் சமுதாயத்தின் உயிர் நாடிகள் என்ற கருத்தை வலியுறுத்தினார்கள்.

பிணியும் மரணமும்

நபி (ஸல்) அவர்கள் ஹஜ்ஜின் சடங்குகள் அனைத்தையும் ஒழுங்காக நிறைவேற்றிய பின்னர், தமது தோழர்களோடு மதீனாவுக்குத் திரும்பி, மாகாணங்களினதும் வர்க்க சமூகங்களினதும் அமைப்பைச் சீர்செய்வதில் ஈடுபட்டார்கள். இஸ்லாத்தின் ஆணைகளை மக்களுக்குப் போதிக்கவும் நீதி செய்யவும் ஷகாத் முதலான வரிகளைச் சேகரிக்கவும் மாகாணங்களுக்கும் பல்வேறு வர்க்கத்தவர்கள் வாழ்ந்த பகுதிகளுக்கும் அலுவலர்கள் (ஆமில்கள்) அனுப்பிவைக்கப்பட்டனர்.

ஹிஜ்ரி 11 ஸபர் மாதக் கடைசியில் (மே 26, 632இல்), மக்காவுக்கு மேற்கொண்ட நீண்டதூரப் பிரயாணத்தினாலும் தொடராகச் செய்த போர்களாலும் ஏற்கனவே களைப்புற்றிருந்த நபியவர்கள் காய்ச்சலாலும் கடுமையான தலைவலியாலும் பீடிக்கப் பட்டார்கள். நோயுற்றிருந்த போதிலும் கூட சுகதேகிபோலக் காணப்பட்ட அவர்கள் வழக்கம் போலப் பள்ளிவாயிலுக்குச் சென்று, தொழுகைக்குத் தலைமை தாங்கி வந்தார்கள். முடிந்த வரை தமது அறைக்கு அருகே இருந்த பள்ளிவாயிலில் தொழுகை நடத்தி வந்த போதிலும், அவர்கள் பல சமயங்களில் பேச முடியாத அளவுக்குப் பலவீனமுற்றுக் காணப்பட்டார்கள். சில தினங்களின் பின்னர், அவர்களது

நோய் அதிகரிக்கவே, தமது பிரதம சீடர் ஹழ்ரத் அபூபக்ரை ஐவேளைத் தொழுகைகைத் தலைமை தாங்கி நடத்துமாறு கேட்டுக் கொண்டார்கள். அவ்வாறே அபூபக்ர் மூன்று தினங்கள் பதினேழு வேளைத் தொழுகைகளில் மக்களுக்குத் தலைமை தாங்கினார். பின்னர், நபியவர்களது மண்ணுலக வாழ்வின் இறுதி நாளான திங்கட்கிழமை அதிகாலை, நோயின் வேகம் சற்றுத் தணிந்து காணப்படவே, அவர்கள் தமது பலத்தையெல்லாம் திரட்டி எழுந்து, ஹழ்ரத் அலீயினதும் ஹழ்ரத் அப்பாஸினதும் தோள்களில் சாய்ந்தவாறு பள்ளிவாயிலினுள் நுழைந்தார்கள். அப்போது ஹழ்ரத் அபூபக்ர் வைகறைத் தொழுகையை நடத்திக் கொண்டிருந்தார். தொழுகை முடிந்ததும், நபியவர்கள் அங்கே கூடியிருந்த மக்களுக்குச் சிறிய ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். *''இந்த உலகத்தையோ தன்னிடமுள்ள பேறுகளையோ தெரிந்தெடுத்துக் கொள்ளுமாறு அல்லாஹ் தன் அடியானுக்குக் கூறினான். அடியான் பிந்தியதைத் தெரிந்தெடுத்துக் கொண்டான்''* என்று தமது சொற்பொழிவின் இடையே அவர்கள் கூறி, தமது முடிவின் அண்மையைச் சூசகமாகத் தெரிவித்தார்கள். இந்தச் சொற்களின் உட்கருத்தைப் புரிந்து கொண்ட ஹழ்ரத் அபூபக்ர் குழந்தையைப் போலத் தேம்பித் தேம்பி அழுதார்.

பின்னர், நபியவர்கள் பள்ளிவாயிலிலிருந்து தமது அறைக்குத் திரும்பியதும், அவர்களது உடல் நிலை மோசமாயிற்று. தமது மனைவியருள் ஒருவரான ஹழ்ரத் ஆஇஷாவின் மடியில், அவர்கள் தலைவைத்துப் படுத்துக் கொண்டார்கள். அவர்களது பிரிய புதல்வி பாத்திமா அவர்களுக்கு அருகே இருந்து, அழுது கொண்டிருந்தார். அவர்களது தோழர்கள் சிலரும் நீர் வடியும் கண்களோடு அவர்களுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தனர். சில நிமிடங்களின் பின்னர், தாம் தமது பலம் அனைத்தையும் இழந்து கொண்டிருப்பதை உணர்ந்த நபியவர்கள், அங்கே நின்றிருந்த தோழர்களைப் பார்த்து முறுவலித்து, *''அல்லாஹ்வே! மேன்மை மிக்க தோழர்களின் தோழமையை நாடுகிறேன்''* என்று தமது பலமிழந்த கரங்களை உயர்த்தி மூன்று முறை முணுமுணுத்தார்கள். இந்தச் சொற்களைக் கூறிக் கொண்டே புதியதும் நிலையானதுமான தூதினால் உலகத்தைச் சீர்திருத்திய - மனித இனத்தின் இரட்சகராகப் பிறந்த - மனித குலத்தின் மேம்பாட்டுக்காகச் சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாகி, அவர்களுக்காக உலகாயத ஊதியம் எதனையும் எதிர்பாராமல் தமது வாழ்வை அர்ப்பணித்த, இறை தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது விருப்புக்குரிய மனைவி ஹழ்ரத் ஆஇஷாவின் மடியிலே உயிர் நீத்தார்கள். அவர்களது மரணம் ஹிஜ்ரி 11 றபீஉல் அவ்வல் பன்னிரண்டாம் நாள் (ஜூன் 8, 632) நிகழ்ந்தது.[72] அப்போது அவர்களது வயது அறுபத்து மூன்று.

72. நபியவர்கள் மரணமான தினம் பற்றி வரலாற்றாசிரியர்களுக்குள் கருத்தொற்றுமை இல்லை. ஆயினும், றபீஉல் அவ்வல் பன்னிரண்டாம் நாள் என்பதே பெரும்பாலானோர் ஏற்றுக்கொண்ட கருத்தாகும்.

மரணம்

நபி (ஸல்) அவர்களது மரணச் செய்தி மதீனாவெங்கும் காட்டுத் தீ போலப் பரவியது. நபியவர்கள் மரணமடைந்து விட்டார்கள் என்பதை அறிந்ததும் மக்கள் அதிர்ச்சியடைந்து, மதீனாப் பள்ளிவாயிலுக்கு விரைந்தனர். ஹழ்ரத் உமர் பயங்கரத் துயரத்தால் வெற்றிகொள்ளப்பட்டு, நபியவர்களின் மரணம் பற்றிய கசப்பான உண்மையைச் சீரணிக்க முடியாமல் துடித்தார். மதீனாப் பள்ளவாயிலின் முற்றத்தில் கூடி நின்ற மக்களுக்கிடையே புகுந்து, *''நபியவர்கள் மரணிக்கவில்லை. நபி மூஸா (அல்லாஹ்வைக் காணச்) சென்று, நாற்பது தினங்கள் தமது மக்களிலிருந்து மறைந்திருந்து விட்டு, 'அவர் இறந்து விட்டார்' என்று கருதப்பட்ட பின்னர் திரும்பி வந்ததைப் போல நபியவர்கள் தமது இறைவனிடம் சென்றிருக்கிறார். அல்லாஹ்வின் மீது சத்தியமாக, அவர் திரும்பி வந்து, 'நபியவர்கள் இறந்து விட்டார்' என்று கூறிய மனிதரின் கைகளையும் கால்களையும் துண்டிப்பார்கள்''* என்று சத்தமிட்டுக் கூறினார். அப்போது நபியவர்களது அறையிலிருந்து வந்து, பள்ளிவாயிலினுள் நுழைந்த ஹழ்ரத் அபூபக்ர், ஹழ்ரத் உமரிடம் அமைதியாக இருக்குமாறு கூறினார். அவர் உணர்ச்சி மேலிட்டவராகப் பேசிக் கொண்டிருக்கவே, ஹழ்ரத் அபூபக்ர் மக்களை நோக்கி, ''மக்களே! முஹம்மதை நீங்கள் வழிபடுபவராக இருந்தால், அவர் மரணித்து விட்டார் என்பதை அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வை நீங்கள் வழிபடுபவராக இருந்தால், அவன் மரணிக்கவில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். அவன் ஒருபோதும் மரணிக்கவுமாட்டான்'' என்று கூறிவிட்டுப் பின்வரும் அல் குர்ஆன் வசனத்தையும் ஓதிக்காட்டினார். *''முஹம்மத் தூதரேயன்றி அல்லர்; அவருக்கு முன்னரும் தூதர்கள் பலர் சென்றிருக்கின்றனர். அவர் இறந்துவிட்டால் அல்லது வெட்டப்பட்டு விட்டால் நீங்கள் புறங்காட்டிச் சென்று விடுவீர்களோ? எவனேனும் புறங்காட்டிச் சென்று விட்டால், அதனால் அவன் அல்லாஹ்வுக்கு ஒன்றும் தீங்கிழைத்து விடமாட்டான். நன்றியறிவோர்க்கு அல்லாஹ் அதிசீக்கிரத்தில் கூலியைத் தருவான்''* (3: 144). இதன் பின்னரே ஹழ்ரத் உமர் அமைதியானார்.

இவ்வாறு முழு மனித இனத்தினதும் இலௌகிக, ஆத்மிக உயர்ச்சிக்காக அர்ப்பணிக்கப்பட்ட நபியவர்களின் இவ்வுலக வாழ்க்கை முடிவுற்றது. அவர்கள் இந்த உலகை விட்டுப் பிரிந்த போது, பண்பாட்டு விருத்தியடைந்த ஒரு சமுதாயத்தின் தலைவராகவும் ஆட்சியாளராகவும் இருந்தார்கள்.

ஒரு மதிப்பீடு

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மக்கட்சாகியம் ஒருபோதுமே தோற்றுவித்திராத மாபெரும் சீர்திருத்தவாதியாக விளங்கினார்கள். அவர்களது தூதத்தின் இருபத்து மூன்று வருடகாலப் பகுதியில், ஒருகாலத்தில் உருத்தொழும்பின் குடிகளாக இருந்த அறேபியரின் சமய, சமூக, அரசியல், பொருளாதார, கலாசார நிலைமைகளைச் சீர்திருத்தி அமைத்ததன் மூலம், அறேபியாவில் உறுதியான மாற்றம் ஒன்றை அவர்கள் ஏற்படுத்தினார்கள். இந்த மாற்றம் பிற்கால உலகின் தலைவிதியையே நிர்ணயித்தது. மனித குலத்தின் வழிகாட்டலுக்காக அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நபிமார்களுள் இறுதியானவரான அவர்கள் நபித்துவத்திற்கு முத்திரை இட்டார்கள். அல் குர்ஆன் இந்த உண்மையைப் பின்வருமாறு குறிப்பிடுகிறது: *".....அவர் அல்லாஹ்வுடைய தூதராகவும் நபிமார்களுக்கு (க் கடைசி) முத்திரையாகவும் இருக்கிறார். அல்லாஹ் யாவற்றையும் நன்கு அறிந்தோனாக இருக்கிறான்"* (33:40). நபியவர்களும் *''நான் நபிமார்களின் முத்திரையாவேன்; எனக்குப் பின்னர் நபி இல்லை"* என்று கூறியிருக்கிறார்கள்.

இறுதி நபி

உலகிலே பிறந்த நபிமார்களும் இறைதூதர்களும் வெவ்வேறு சமுதாயங்களுக்கு அல்லது நாடுகளுக்கு வெவ்வேறு கால கட்டங்களில், அவ்வக்கால சமூக, ஆத்மிகத் தேவைகளைத் திருப்திப்படுத்துவதற்காக அல்லாஹ்வால் அனுப்பப்பட்டனர். சிலர் ஒரு குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தாருக்கு அல்லது மக்கள் கூட்டத்தாருக்கு நபியாக அனுப்பப்பட்டனர்; வேறுசிலர் குறிப்பிட்ட ஒரு தேசத்திற்கு நபியாக அனுப்பப்பட்டனர். ஆனால், முஹம்மத் (ஸல்) அவர்கள் நிற, இன, தேசிய, மொழி வேறுபாடில்லாமல், உலகளாவிய தூது ஒன்றோடு முழு மனித இனத்திற்கும் நபியாகவும் தூதராகவும் அனுப்பப்பட்டார்கள். அவர்களது தூது அறேபியருக்கு மட்டும் உரியதன்று; முழு மனித குலத்திற்கும் எல்லாக் காலத்திற்கும் உரியதாக இருந்தது. இது பற்றி அல் குர்ஆன், ***"(நபியே!) நாம் உம்மை சகல மனிதர்களுக்குமே நன்மாராயம் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பி வைத்திருக்கிறோம். எனினும், மனிதருட் பெரும்பாலோர் (இதனை) அறிந்து கொள்ளவில்லை"*** (34:28) என்று கூறுகிறது. அவர்களது தூதின் இந்தப் பொதுத்தன்மை காரணமாகவே உலகில் வியத்தகு உறுதியான மாற்றம் ஒன்றை அவர்களால் தோற்றுவிக்க முடிந்தது. ஜோஸப் ஹெல் என்பார் கூறுவது போல ''இஸ்லாத்தைப் போல வேறெந்த மதமும் இவ்வளவு

நபிகளாரது தூதின் பொதுத் தன்மை

துரிதமாகவும் நேராகவும் உலகிலே மாற்றங்களை ஏற்படுத்தியதில்லை. மேலும், முஹம்மதைப் போல வேறெந்தப் புதிய மதத்தின் அமைப்பாளரும் தமது காலத்தினதும் மக்களினதும் பூரணத்துவம் வாய்ந்த தலைவராக இருந்து வந்ததில்லை".[73]

உண்மையில், நபி (ஸல்) அவர்கள் தோற்றுவித்த புரட்சி மனித இன வரலாற்றிலேயே இணையில்லாத ஒன்றாக இருந்தது. பொதுவாக, உலகிலே தோன்றிய பல்வேறு சீர்திருத்தவாதிகளால் தோற்றுவிக்கப்பட்ட புரட்சிகளெல்லாம் சமயம், அரசியல் முதலானவற்றுள் ஏதாவது ஒருதுறையைச் சார்ந்தவையாகவும் குறுகிய ஆயுளை உடையவையாகவுமே இருந்தன. ஆனால், முஹம்மத் (ஸல்) அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட புரட்சி சமயம், அரசியல் ஆகிய துறைகளில் மட்டுமன்றி, மானிடரின் இலௌகிக, ஆத்மிக வாழ்வின் சகல அம்சங்களிலும் நிலையான மாற்றங்களை ஏற்படுத்தின. அவர்களது புரட்சி மனிதனை மகோன்னத அந்தஸ்துக்கு உயர்த்தி, பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக அவனை அறிமுகப்படுத்தியது. அவர்களது புரட்சி உலகளாவியதாகவும் தூர நோக்குடையதாகவும் இருந்தது. எதிர்கால உலகுக்கு ஒரு மாதிரியாக அமையத்தக்க இலட்சிய சமுதாயம் ஒன்றுக்கு அது அத்திவாரமிட்டது.

நபிகளாரின் புரட்சி

ஒரு போதகர் என்ற வகையில் முஹம்மத் (ஸல்) அவர்கள், நபி மூஸாவினாலும் நபி ஈஸாவினாலும் ஆரம்பித்து வைக்கப்பட்ட சமய நெறிக்கோவையை முழுமைப்படுத்தினார்கள். முழுமையில்லாதிருந்த அக்கால மக்களின் சமய வாழ்க்கையைத் தமது புதிய சீர்திருத்தங்கள் மூலம், பூரணத்துவம் பெறச்செய்தார்கள். தமது போதனை மூலம் பல்வேறு வகையான வேற்றுமைகளாலும் கடவுட்கொள்கைகளாலும் பிளவுபட்டிருந்த உலகுக்கு ஏகத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அறிமுகப்படுத்தினார்கள்.

போதகராக

அல்லாஹ்வின் ஆணைகளையும் அவற்றின் பகுத்தறிவுக்கேற்ற கருத்துக்களையும் மக்களுக்கு விளக்கிய நபியவர்கள், அவர்களது சிந்தனைகளையும் செயல்களையும் தூய்மைப்படுத்தி, அவர்களில் நல்ல பண்புகளையும் நல்லொழுக்கங்களையும் விருத்தி செய்தார்கள். அவர்கள் முழு உலகுக்கும் அனுப்பப்பட்ட நபியாகவும் தூதராகவும் இருந்தமையால், விசுவாசிகளுக்கு மறுமைநாளில் கிடைக்கவிருக்கும் நற்பேறுகள் பற்றி அவர்களுக்கு நற்செய்தி கூறிய அதேவேளையில், முஸ்லிமல்லாதோர் அல்லாஹ்வின் தூதை ஏற்க மறுப்பதனால் பெற இருக்கும் தீய விளைவுகள் பற்றியும் அவர்களை எச்சரித்தார்கள்.

73. Joseph Hell. op.cit. p.17

அல்லாஹ்வால் அருளப்பட்டு நபியவர்களால் போதிக்கப்பட்ட இஸ்லாம், சடங்குகளைக் கொண்ட ஒரு சமயம் மட்டுமன்று; செயல்முறைப் பெறுமானங்களுள்ள ஒரு மார்க்கமும் ஆகும். இஸ்லாத்தின் கோட்பாடுகளும் செயல்முறைகளும் ஆடம்பரமில்லாதவை; மிக எளிமையானவை. அதேசமயம் அவை பயன்தர வல்லவையாகவும் அறிவுக்குப் பொருத்த மானவையாகவும் இருக்கின்றன. கடினமான - செயல்படுத்த முடியாத - சடங்குகளைப் புகுத்தி, அது தன்னைச் சார்ந்தவர்களை மதத்தின்பால் வெறுப்படையச் செய்யவில்லை. மாறாக, அது தனது எளிய போதனை களாலும் செயல்முறைகளாலும் பிற மதத்தவர்களைக்கூடக் கவர்ந்து கொண்டிருக்கிறது. இஸ்லாத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழுகை, நோன்பு, ஷகாத், ஹஜ்ஜு முதலான கடமைகள் யாவும் இஸ்லாமிய கருத்தியலின் அடிப்படைகளாய் அமைந்த சகோதரத்துவத்திற்கும் சமத்துவத்திற்கும் உயிரூட்டுகின்றன.

இத்தகைய சிறப்புகள் பொதிந்த இஸ்லாம் மார்க்கத்தைப் போதிப்பதில் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு முன்னரோ பின்னரோ வேறெந்த மதத்தாபகரும் கடைப்பிடித்திராத எளிய - ஆனால், பயன்தரவல்ல - நடைமுறையைப் பின்பற்றினார்கள். நபியவர்கள் இஸ்லாத்தைப் பரப்புவதற்காக வாளைப் பயன்படுத்தினார்கள் என்று கீழைத்தேசவாதிகள் சிலர் அவர்கள் மீது குற்றம் சுமத்தியிருக்கின்றனர். ஆனால், இது ஓர் ஆதாரமற்ற குற்றச்சாட்டா கும். உண்மையில், நபியவர்களது எளிய - ஆனால் பயன்தரவல்ல - போதனாமுறை, தமது சீடர்கள்பால் காட்டிய தீவிர ஈடுபாடு, அவர்களது இனிய இயல்பு, அல்லாஹ் மீது அவர்களுக்கு இருந்து வந்த ஆழமான நம்பிக்கை, அவர்களது இடையறாத முயற்சி முதலியனவே இஸ்லாம் துரிதமாகப் பரவியமைக்குக் காரணங்களாக இருந்தன. அவர்களது எளிய - இனிய சொற்கள் அவர்களது காலத்தைச் சேர்ந்த மக்களை வெகுவாகக் கவர்ந்தன. அதனால், அவர்கள் நிர்ப்பந்தம் இல்லாமலேயே கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தைத் தழுவினர். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், நபியவர்களது வாள் போர்க்களங்களில் வெற்றிகளை ஈட்டியது; ஆனால், அவர்களது மென்மையான இனிய சொற்கள் மனித இதயங்களை வென்றெடுத்தன.

நபி முஹம்மத் (ஸல்) அவர்களிடம் சமய போதகர் ஒருவருக்கு மிக இன்றியமையாத நல்ல இயல்புகள் யாவும் அமைந்திருந்தன. சகிப்புத்தன்மை, எளிமை, மன்னிக்கும் மனப்பான்மை, நேர்மை, இரக்கம், பணிவு, பெருந்தன்மை முதலான பண்புகளைக் கொண்ட அவர்களது களங்கமற்ற சீலம் மக்களிடையே அவர்களின் மதிப்பை உயர்த்திவிட்டிருந்தது. அவர்களிடம் அமைந்திருந்த வாய்மை அவர்கள் என்ன சொன்னாலும் அதனை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு மக்களின் நம்பிக்கையை வளர்த்திருந்தது.

நபியவர்களிடம் அடைக்கலமடைந்திருந்த இவ்வுயரிய பண்புகள் இஸ்லாத்தைப் போதிப்பதிலும் பரப்புவதிலும் அவர்களுக்கு முழுமையான வெற்றியை அளித்தன. ஸய்யித் அமீர் அலீ என்பார் கூறுவதுபோல, ''மறுநாளே தமது பிறந்த நகரிலிருந்து துரத்தப்பட்டு, அல்லாஹ்வுடைய வார்த்தைகளைப் போதிப்பதற்கு முயற்சி மேற்கொண்டு சென்ற நகரத்தால் கல்லெறியப்பட்ட பணிவார்ந்த போதக(ரான பெருமானா) ர் மிகக் குறுகிய ஒன்பது ஆண்டு காலத்துள் தமது மக்களை ஒழுக்க, ஆன்மிக நிலையிறக்கத்தின் பாதாளத்திலிருந்து விடுவித்து தூய்மை, நீதி ஆகியவற்றின் கருத்து நிலைக்கு உயர்த்தினார்கள்''.[74]

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் மூலம் உலகிலே இலட்சிய சமுதாய அமைப்பு ஒன்றை நிறுவினார்கள். இஸ்லாத்தின் சமூக அமைப்பு உண்மையில், உலகம் ஒருபோதும் சந்தித்திராத ஒரு மாபெரும்

சீர்திருத்தவாதியாக

புரட்சியாக இருந்தது. நபியவர்கள் சமமின்மையினதும் அநீதியினதும் தொட்டிலாக இருந்த உலகுக்கு நீதியின் அடிப்படையில் அமைந்த முழுச் சமத்துவத்தை அறிமுகப்படுத்தினார்கள். இஸ்லாமிய சமுதாய அமைப்பில் உயர் பிறப்பு, உயர் அந்தஸ்து, செல்வம், குருத்துவம் முதலான போலிப் பீடுகளுக்கு இடமில்லை. எல்லாவற்றினதும் ஏகசொந்தக்காரனான அல்லாஹ்வின் இறைமையின்கீழ் உள்ள இந்த உலகிலே, மனிதர்கள் அனைவரும் - அவர்களது நிறம், மொழி, இனம், தேசியம் எதுவாக இருந்தாலும் - சமமானவர்கள் என்றும் அவர்கள் அனைவரும் ஒரே சுதந்திரத் தையும் ஒரே உரிமையையும் அனுபவிக்க வேண்டும் என்றும் அண்ணல் அவர்கள் போதித்தார்கள். அவர்களது சமூக சீர்திருத்தங்களால் அறேபியரின் சமுதாயத்திலே ஆழமாக வேரூன்றியிருந்த தீமைகள் அனைத்தும் புதைக்கப்பட்டன; ஒழுக்கங்கள் மீளக்கட்டி எழுப்பப்பட்டன; வட்டி, விபசாரம், சூதாட்டம், கொலை, மதமாற்றம் (ரித்தா), கலகம் செய்தல், களவு, அவதூறு, பதுக்குதல், கறுப்புச் சந்தை வியாபாரம், மது அருந்துதல் முதலான சமூக விரோதச் செயல்கள் யாவும் சட்டவிரோதமானவை எனப் பிரகடனம் செய்யப்பட்டன.

நபியவர்கள் செய்த சமூக சீர்திருத்தங்களின் விளைவாகப் பெண்ணினத்தின் பெருமையும் அந்தஸ்தும் உயர்ந்தன. 'சாபப் பிறவிகள்' என்ற நிலையிலிருந்து மனித இனத்தின் 'சோபனப் புறாக்கள்' என்ற நிலைக்கு அவர்கள் உயர்த்தப்பட்டார்கள்; அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். அசையும் சொத்துக்களாகவும் காம விளையாட்டுக்குரிய பொருள்களாகவும் கருதப்பட்ட அவர்கள் எல்லாவற்றிலும் ஆண்களுக்குச் சமமான மனித ஜீவன்களாக மதிக்கப்படலாயினர். அவர்களுக்குப் பீடும் மதிப்பும்

74. Ameer Ali, The Spirit of Islam, p.91

அளிக்கப்பட்டன; சொத்துரிமை உட்பட எல்லா வகையான உரிமைகளும் சிறப்புரிமைகளும் வழங்கப்பட்டன. இத்தகைய சீர்திருத்தங்களின் விளைவாக அவர்கள் சமுதாயத்தில் பெருமைக்கும் மதிப்புக்குமுரிய ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டனர். ''மாதாவின் பாதத்தின்கீழ் சுவனம் இருக்கிறது'' என்று கூறி, நபியவர்கள் பெண்களின் அந்தஸ்தை மேலும் உயர்த்தினார்கள். நபியவர்களால் பெண்களுக்கு வழங்கப்பட்ட உயர்ந்த அந்தஸ்து இன்றும் கூட உலகத்தால் போற்றப்படுகிறது. உண்மையில், நவீன உலக வரலாற்றில், பெண்களுக்கு உண்மையான சுதந்திரத்தையும் விடுதலையையும் பெற்றுக் கொடுத்த முதலாவது சீர்திருத்தவாதி முஹம்மத் (ஸல்) அவர்களே ஆவர்.

நபியவர்களது சமூக சீர்திருத்தங்கள் மூலம் அடிமைகளின் நிலைமையிலும் மாற்றம் ஏற்பட்டது. அடிமைத்துவம் மனிதனின் நினைவுக்கெட்டாத காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது. இஸ்லாத்திற்கு முன்னர் தோன்றிய எந்த மதமும் அதனை முற்றாக ஒழிக்க முயற்சி எடுக்கவில்லை. இஸ்லாத்திற்கு முந்திய அறேபியாவில், அடிமைத்துவம் ஒழிக்க முடியாத அளவுக்கு வேருன்றி இருந்தது. அதனால், முஹம்மத் (ஸல்) அவர்கள் அதனை அடியோடு ஒழிக்க உடனானதும் தீவிரமானதுமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. ஆயினும், அவர்கள் உலகத்திலிருந்து - குறிப்பாக அறேபியரின் சமுதாயத்திலிருந்து - அடிமைத்தனத்தை ஒழிக்க திட்டமிடப்பட்ட, செயல்முறைச் சாத்தியமான நடவடிக்கைகள் பலவற்றை ஒழுங்காகவும் படிப்படியாகவும் எடுத்து வந்தார்கள். இஸ்லாம் தோன்றும் வரை அறேபிய சமுதாயத்தில் சுதந்திரமாகவும் பரவலாகவும் நடைபெற்று வந்த அடிமை வியாபாரத்திற்கு அவர்கள் முற்றுப்புள்ளி வைத்தார்கள். ''அடிமைகளை விடுதலை செய்தல் முஸ்லிம்களின் புனித கடமைகளுள் ஒன்று'' என்று கூறி, அடிமைகளின் விடுதலைக்கு வழிவகுத்தார்கள். தமது அடிமையாக இருந்த ஸைத் பின் ஹாரித் என்பாரை விடுதலை செய்து, தாம் மற்றவர்களுக்குக் கூறியதைத் தாமே செயலில் செயற்படுத்திக் காட்டினார்கள். அடிமைகள் மீது அன்பும் இரக்கமும் உடையவர்களாக இருந்த நபியவர்கள் அடிமைகளைத் தங்களுக்குச் சமமாக நடத்துமாறும் அவர்கள் மீது கருணை காட்டுமாறும் தமது தோழர்களுக்கு ஆலோசனை கூறினார்கள். அடிமைகளை அடிமைகள் என்றும் அடிமைப் பெண்கள் என்றும் அழைப்பதையும் தடைசெய்தார்கள். இறுதியாக, முஸ்லிம்கள் அடிமைப்படுத்தப்படக் கூடாது என்று சட்டம் வகுத்து, அடிமைத்தனத்தை முற்றாக ஒழிக்க நடவடிக்கை எடுத்தார்கள். உண்மையில், உலக வரலாற்றிலே, அடிமைத்தனத்தை முற்றாக ஒழிப்பதற்கு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்து, அடிமைகளின் விடுதலைக்காகப் போராடிய முதலாவது மனிதப் புனிதர் நபி முஹம்மத் (ஸல்) அவர்களே ஆவர்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு தேசத்தின் தந்தையாகவும்

அல்லாஹ்வின் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகத் தாம் நிறுவிய அறேபியாவின் பொதுநலவாய அரசாங்கத்தின் தாபகராகவும் இருந்தார்கள். குறுகிய கால இடைவெளியான பத்து ஆண்டுகளில், அவர்கள் அவர்களுக்கு

ஆட்சியாளராக முன்னரோ பின்னரோ அறேபியாவில் நிறுவப்பட்டி ராத குடியாட்சிப் பொதுநலவாய அரசாங்கம் ஒன்றை நிறுவி, அதன் முதலாவது ஆட்சியாளரானார்கள்; வேற்றுமையில் மூழ்கிக்கிடந்த மக்களை சகோதரத்துவம், ஒற்றுமை ஆகிய பிணைப்புகள் மூலம் இஸ்லாமியக் கொடியின்கீழ் ஒரே மக்களாக ஒன்றுபடுத்தி, நாட்டில் நிலையான அமைதியையும் ஒழுங்கையும் நிலைநிறுத்தினார்கள். இந்தப் பிணைப்புகள் பல்வேறு வர்க்கங்களைச் சேர்ந்த மக்களிடையே உறவுகளை ஒன்றிணைக்கவும் அவர்களிடையே குடியாட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்கவும் உதவின.

தீவிர குடியாட்சியாளராக இருந்த நபியவர்கள் சகோதரத்துவம், சமத்துவம், நீதி, சுதந்திரம் ஆகிய குடியாட்சி அம்சங்களின் அடிப்படையிலே அறேபியாவில் தமது பொதுநலவாயத்தை நிறுவினார்கள். இஸ்லாத்திற்கு முந்திய அறேபியாவில் மக்கா குறைஷ்களே ஆளும் வர்க்கமாக இருந்தனர்; ஆனால், நபியவர்கள் அதே உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் மதீனாவாசிகளுக்கும் வழங்கினார்கள். தமது இஸ்லாமிய அரசில் சகல உரிமைகளோடும் வாழ யூதர்களையும் கிறித்தவர்களையும் நபியவர்கள் அனுமதித்தார்கள்; தமது சொந்தக் குடிகளைப் போலவே அவர்களையும் நீதியோடும் சமத்துவத்தோடும் நடத்தினார்கள். தனியாள் சுதந்திரத்தையும் பொதுச் சுதந்திரத்தையும் அங்கீகரித்த அவர்கள் தமது குடிகளையும் அவர்களது உடைமைகளையும் பாதுகாத்ததோடு, குடியியல் ஒழுக்கங்களின் வளர்ச்சியையும் பேணிவந்தார்கள்.

நபியவர்களால் நிறுவப்பட்ட இஸ்லாமிய அரசில், குர்ஆனிய சட்டங்களே நடைமுறைப்படுத்தப்பட்டன. அரசாங்கத்தின் யாப்பு அல் குர்ஆனாகவே இருந்தது. நேர்மைக்கும் நீதிக்குமே நபியவர்கள் முதலிடம் அளித்தார்கள். குற்றம் இழைத்தோர் நபியவர்களின் மிக நெருங்கிய உறவினர்களாக இருந்த போதிலும்கூட, எத்தகைய பாரபட்சமுமின்றி அல்குர்ஆனின் சட்டங்களுக்கேற்ப அவர்கள் தண்டிக்கப்பட்டனர். வழக்குகள் யாவும் நிற, மத, குல, தேசிய வேறுபாடின்றி நீதியாகவும் நேர்மையாகவும் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டன. வழக்கு விசாரணைகளில் அவ்வாறே நடந்து கொள்ளுமாறு நபியவர்கள் தமது தோழர்களையும் பணித்தார்கள். நபியவர்களின் பயங்கர எதிரிகளாக இருந்த யூதர்கள்கூட தங்கள் பிணக்குகளைத் தீர்வுக்காக அவர்களிடம் கொண்டுவருமளவுக்கு அவர்கள் நீதிக்குப் பிரபல்யம் வாய்ந்தவர்களாக விளங்கினார்கள்.

நபியவர்களால் அறேபியாவில் நிறுவப்பட்ட இஸ்லாமியப்

பொதுநலவாயம் இஸ்லாத்தின் கோட்பாடுகளை அடித்தளமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. அந்த அரசில் கடன் வாங்கப்பட்ட கொள்கைகளுக்கு இடம் இருக்கவில்லை. ஆட்சியாளர் என்ற வகையில் நபியவர்கள் நீதியை நிலைநிறுத்தி, அறேபியாவின் சமூக, அரசியல் ஒழுங்கை முழுமையாக மாற்றியமைத்தார்கள். குலைவு நிலையைச் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றாலும் அநீதியை நீதியாலும் வர்க்கப் பகைமைகளை ஒற்றுமை, கட்டுப்பாடு ஆகியவற்றாலும் வகுப்பு வேறுபாடுகளைச் சமத்துவத்தாலும் போட்டி மனப்பான்மையைப் பரஸ்பர சகோதரத்துவத்தாலும் மாற்றி வைத்தார்கள். போஸ்வேர்த் ஸ்மித் என்பார் கூறுவது போல, ''சமயத்தினதும் அரசினதும் தலைவர் என்ற வகையில், அவர் சீஸராகவும் பாப்பரசராகவும் இருந்தார். ஆனால், பாப்பரசரின் ஆடம்பரங்களில்லாத பாப்பரசராகவும் சீஸரின் படையணிகளில்லாத சீஸராகவும் அவர் விளங்கினார். ஒரு நிலையற்படை இல்லாமலும் மெய்ப்பாதுகாவலர் இல்லாமலும் ஒரு மாளிகை இல்லாமலும் ஒரு நிரந்தர அரசிறை இல்லாமலும் நேரான தெய்விக வழிகாட்டலைக் கொண்டே தாம் ஆட்சி புரிந்ததாக கூறிக் கொள்ளும் உரிமையை எவரேனும் எப்போதாவது பெற்றிருந்தாராயின், அவர் முஹம்மதாகவே இருந்தார். ஏனெனில், அவர் எல்லாவிதமான அதிகாரத்தையும் அதன் கருவிகளின்றியும் அதன் உதவிகளின்றியும் பெற்றிருந்தார்''.[75]

சுருங்கச் சொன்னால், நபியவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இஸ்லாமியப் பொதுநலவாயம் இஸ்லாத்தின் கலப்படமில்லாத - தூய - கோட்பாடுகளின் அடிப்படையிலேயே அமைக்கப்பட்டிருந்தது. இயல்பில் முழுக்க முழுக்கக் குடியாட்சிப் பண்புகளைக் கொண்டிருந்த அது பிற்காலத்தில், உலகின் பல்வேறு நாடுகளில் உருவாக்கப்பட்ட குடியாட்சி அரசாங்கங்களின் மாதிரியாக அமைந்தது.

அண்ணல் முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சமூக - அரசியல் தலைவராக மட்டுமன்றி, பூரணத்துவம் வாய்ந்த ஒரு மனிதராகவும் விளங்கினார்கள். இந்த உலகம் ஒரு துறையில் அல்லது மற்றொன்றில்

மனிதராக

பெரும் சாதனைகள் படைத்த ஆயிரக்கணக்கான மகான்களைக் கண்டிருக்கிறது; ஆனால், மனித நடவடிக்கைகளின் எல்லாத் துறைகளிலும் பெரும் சாதனைகள் படைத்த - மானிடனின் கூட்டு மொத்தமான வாழ்க்கையில் முழுமையான செல்வாக்கு செலுத்திய - முஹம்மத் (ஸல்) அவர்களைப் போன்ற ஒரு மனிதரை அது ஒரு போதுமே சந்தித்ததில்லை. அவர்களது வாழ்க்கை, எல்லாக் காலங்களையும் எல்லா நாடுகளையும் சேர்ந்த மக்கள் தங்களது தனியாள் வாழ்விலும் கூட்டுவாழ்விலும் நன்மைகளையும் வெற்றிகளையும் ஈட்டிக் கொள்ளும் வண்ணம் பின்பற்றுவதற்கு ஏற்ற மாதிரியாகவும்

75. *Bosworth Smith, Mohammed and Mohammedanism, p.92*

உதாரணமாகவும் அமைந்திருந்தது. அவர்களது சீலத்தினதும் ஆளுமையினதும் தரம் மற்ற மனிதர்களின் தரத்தை விடவும் மேம்பட்டதாக இருந்தது. பூரணத்துவம் வாய்ந்த மனிதர் ஒருவரிடம் இருக்க வேண்டிய மகோன்னதமான பண்புகள் அனைத்தையும் அவர்கள் பெற்றிருந்தார்கள்.

நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் நற்குணங்களும் சாந்தமும் நல்ல ஆசாரங்களும் உடைய ஒரு மனிதராக இருந்தார்கள். ஏழை - செல்வன், நண்பன் - பகைவன், எசமான் - அடிமை, கறுப்பன் - வெள்ளையன் என்ற வேறுபாடின்றி மக்களோடு அவர்கள் ஒரே விதமாகவே நடந்து கொண்டார்கள். எல்லாரோடும் நாகரிகமாகவும் மரியாதையாகவும் பழகினார்கள்; அவ்வாறே மக்களோடு நடந்து கொள்ளுமாறு தமது சுய முன்மாதிரி மூலம் தமது தோழர்களுக்கும் போதித்தார்கள். மக்களின் எல்லா வகுப்பாரோடும் அன்பாகவும் மிருதுவாகவும் நடந்து கொண்ட அவர்கள் தமது கொடிய எதிரிகளுக்குக் கூட அன்பு காட்டி வந்தார்கள். அவர்களது அன்பு எல்லைகள் அனைத்தையும் கடந்ததாக இருந்தது. விலங்குகளுக்குக்கூட அவர்கள் அன்பு காட்டி வந்தார்கள்.

அண்ணல் (ஸல்) அவர்கள் அனைவரையும் நேசிக்கும் சால்புடையவர்களாகவும் அனைவர்மீதும் கருணை காட்டும் குணமுடையவர் களாகவும் இருந்தார்கள். தமது உறவினர்களையும் நண்பர்களையும் ஆழமாக நேசித்து வந்த அவர்கள், அவர்களோடு கருணையுடன் நடந்து கொண்டார்கள். கருணை காட்டுவதில் அவர்கள் மனிதனுக்கும் மனிதனுக்கு மிடையே வேறுபாடு காட்டியதில்லை. அவர்களது கருணை மனிதனை மட்டுமன்றி, உயிருள்ள சிருட்டிகள் அனைத்தையும் சூழ்ந்ததாக இருந்தது. அவர்கள் அன்பினதும் கருணையினதும் சின்னமாக விளங்கினார்கள். அல்லாஹ் தனது திரு குர்ஆனில் கூறுவது போல முஹம்மத் (ஸல்) அவர் கள், **''உலகத்தார் அனைவருக்கும் அனுப்பப்பட்ட ஓர் அருளாகவே''** இருந்தார்கள். (21:107)

நபியவர்களிடம் காணப்பட்ட மன்னிக்கும் மனப்பான்மை வரலாற்றுப் புகழ்வாய்ந்தது. சொந்தக் காரணங்களுக்காக அவர்கள் எவரையுமே பழிவாங்கியதில்லை. தமது பயங்கர எதிரிகளைக்கூட மனப்பூர்வமாக மன்னித்தார்கள். மன்னிக்கும் மனப்பாங்கின் உதாரணமாக விளங்கிய அண்ணல் அவர்கள் தவறுகள் செய்வோரை மன்னித்துவிடுமாறு தமது தோழர்களுக்குப் போதித்தார்கள். அவர்கள் மிகவும் பெருந்தன்மை யுடையவர்களாக இருந்தார்கள். தம்மிடம் உதவி கேட்டுவந்த எவரையும் 'இல்லை' என்று கூறி, வெறுங்கையோடு திருப்பி அனுப்பிவிட விரும்பாத அளவுக்கு அவர்களது தயாளம் விசாலமானதாக இருந்தது. அவர்களது தயவை நாடிவந்த அனைவர்க்கும் எதையாவது வழங்கும் வழக்கம் அவர் களிடம் எப்போதும் இருந்து வந்தது. கொடுப்பதற்கு எதுவுமே இல்லாதிருந்த

போது, கிடைக்கும் சமயம் உதவுவதாக உறுதியளித்து வந்தார்கள். அவர்களது தயாளமும் பெருந்தன்மையும் வசியம் போல மக்களை அவர்கள் பால் ஈர்த்தன. அவர்கள் தமது எதிரிகள்பால் காட்டிய பெருந்தன்மையும் யூதர், கிறித்தவர் முதலான பிற மதத்தார்பால் காட்டிய சகிப்புத்தன்மையும் வரலாற்றுப் புகழ்வாய்ந்தவை. உண்மையில், அவர்களிடமிருந்து வெளிப்பட்ட மகோன்னத குணங்களே அவர்களை மனித இனத்தின் தலைவராகவும் பூரணத்துவம் வாய்ந்த ஒரு மனிதராகவும் உயர்த்தி நின்றன.

முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு நபியாக இருந்த போதிலும், மற்ற மனிதர்களைப் போன்ற ஒரு மனிதராகவே வாழ்ந்தார்கள். முழு மனித இனத்தினதும் நேர்வழிகாட்டலுக்காக ஒரு நபியாகவும் தூதராகவும் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அவர்கள் மக்களுக்கு ஆத்மிகத்தைப் போதித்த அதே வேளை, ஆத்மிகத்தையும் உலகாயதத்தையும் இணைக்கும் ஒரு பாலமாகவும் விளங்கினார்கள். குடும்ப வாழ்வில் ஈடுபட்ட அவர்கள் மனிதர்களுக்கு அல்லாஹ்வால் ஆகுமாக்கப்பட்ட அனைத்திலிருந்தும் பயன்பெற்று வந்தார்கள். தமது தோழர்களுக்கு வாழ்வில் ஆகுமாக்கப்பட்ட சுகங்கள் அனைத்தையும் அளவோடு அனுபவிக்குமாறு போதித்த அவர்கள் விலக்கப்பட்டவற்றிலிருந்து மட்டும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு பணித்தார்கள்; திருமண வாழ்வில் ஈடுபடுமாறும் வாழ்க்கை வழியைத் தேடிக் கொள்ளத் தொழில் புரியுமாறும் அதேவேளை ஆத்மிக உயர்ச்சியை அடைந்து கொள்ளும் பொருட்டு நல்ல செயல்களை அதிகம் அதிகம் இயற்றுமாறும் ஊக்கப்படுத்தினார்கள்.

நபி முஹம்மத் (ஸல்) அவர்களது வாழ்க்கை மிக எளிமையானதாக இருந்தது. அவர்களது வாழ்வில் ஆடம்பரமோ பகட்டோ இருக்கவில்லை. பேரீச்சமரக் கிளைகளாலும் களியாலும் கட்டப்பட்ட குடிசை ஒன்றிலேயே அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். தமது வேலைகள் அனைத்தையும் தாமாகவே செய்தல் அவர்களது வழக்கமாக இருந்தது. வீட்டுப் பணிகளில், அவர்கள் தமது மனைவியர்களுக்கு உதவினார்கள். கிழிந்த தமது ஆடைகளை அவர்களே சீராக்கிக் கொண்டார்கள்; தமது பாதணிகளைக் கூட அவர்களே திருத்திக் கொண்டார்கள். ஸ்டான்லி லேன் பூல் என்பார் கூறுவது போல, *"அவர்கள் தம்மீது பெரும் கவனம் செலுத்தினார்கள். ஆயினும், தமது பழக்கங்களில் மிக எளிமையானவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் அதிகாரத்தின் உச்சத்தை அடைந்த போது கூட அவர்களது உண்ணல், பருகல், ஆடை, தளபாடம் ஆகியன அவற்றின் புராதன நிலையிலேயே இருந்தன. அவர்கள் மிக உயர்வாக மதித்த ஆயுதங்களைத் தவிர, அவர்கள் பயன்படுத்திய ஒரே ஒரு போகப்பொருள் அபிசீனிய அரசர் நஜாஷீ அன்பளிப்புச் செய்த ஒரு சோடிச் சப்பாத்துக்களே. ஆயினும் நறுமணப்*

எளிய வாழ்க்கை

பொருள்களை மிக ஆசையோடு நேசித்தார்கள்." [76]

வெற்றி வாய்ந்த சமயத்தலைவராகவும் வீரமும் திறமையும் உள்ள படைத் தளபதியாகவும் தூரநோக்குடைய சூழியல் அறிஞராகவும் விளங்கிய முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது அசாதாரணப் பண்புகளாலும் வெற்றி களாலும் உலக மாந்தர் அனைவரையும் விட மேம்பட்டவர்களாக இருந்தார்கள். அவர்களின் இந்த அற்புதப் பண்புகளுக்காகவே அவர்கள் காலத்தை வென்ற மகத்தான இலட்சிய புருடராகவும் பூரணத்துவம் வாய்ந்த மனிதராகவும் கருதப்படுகிறார்கள். உண்மையும் அதுவே ஆகும். புகழ் பெற்ற பிரஞ்சுக் கவிஞரான லாமர்டைன் கூறுவது போல, ''தத்துவஞானி, பேச்சாளர், தீர்க்கதரிசி, சட்டமியற்றுநர், கருத்துக்களின் வெற்றியாளர், பகுத்தறிவுக்கேற்ற சித்தாந்தங்களை மீட்டுத் தந்தவர்; உருவங்கள் இல்லாத வழிபடு மரபு ஒன்றைத் தந்தவர்; இருபது நிலப் பேரரசுகளையும் ஒரு ஆத்மிகப் பேரரசையும் நிறுவியவர்; அவர் தான் முஹம்மத். மனித மேன்மையை அளவிடக்கூடிய நியமங்கள் அனைத்தாலும் அளந்த போதிலும், அவரை விடவும் பெரிய மனிதர் எவரேனும் இருக்கமுடியுமா என்று தான் கேட்கத் தோன்றுகிறது".[77] நபியவர்களது மகோன்னதமான பண்புகளையும் திறமைகளையும் கருத்திற் கொண்டே தான் ஒருமுறை அறிஞர் பெர்ணாட் ஷா, ''இன்றைய உலகின் சர்வாதிகாரத்தை முஹம்மதைப் போன்ற மனிதர் ஒருவர் ஏற்றுக் கொள்வாராயின், மிக அத்தியாவசியமாகத் தேவைப்படும் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் உலகுக்குத் தரும் ஒரு வழியில் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அவர் வெற்றி அடைவார் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு" என்று கூறினார்.[78] இத்தகைய உன்னத மனிதர் கொண்டு வந்த இஸ்லாத்தின் வரலாறு அன்னாரின் மரணத்தோடு அதன் இயக்கத்தை நிறுத்தி விடவில்லை. அது காலச் சக்கரத்தோடு சேர்ந்து சுழன்று கொண்டே வருகிறது. மறுமை நாள் வரை அதன் இயக்கம் கண நேர ஓய்வு கூட இல்லாமல் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

☆ ☆ ☆

76. S.Lane - Poole, op. cit. p.17
77. Quoted in Afzalur Rahman. op. cit. I/185
78. A Collection of writings of some of the Eminent Scholors. (Published by the Workig Muslim Mission. 1935) p.77



மக்காவினதும் மதீனாவினதும் சுற்றுப்புறங்கள்





உசாத்துணை நூல்கள்

ஆங்கிலம்

1. Ameer Ali, Syed: A Short History of the Saracens
2. Ameer Ali, syed: The Spirit of Islam
3. Bashumail, Muhamad Ahmed: The Great Battle of Badr
4. Broklemann, K: History of Islamic People
5. Bukhsh, Khuda: Contribution to the History of Ialamic Civilization. vol. i
6. Buksh, K: A History of Islamic People (Translation of a German Work)
7. Cambridge History of Ialam, The, Vol. I A
8. Fidai, Rafi Ahmed: Concise History of Muslim World. Vol. I
9. Galwash, Ahmed A: The Religion of Islam. Vol. I
10. Gibb, H.A.R.: Mohammadanism
11. Gibb & Kramers (Ed) : Shorter Encyclopaedia of Islam
12. Glubb,Sir, J.B.:The Life and Times of Muhammad
13. Guillaume, Alfred: Islam
14. Haykal, Muhammad Hussain: The Life of Muhammad
15. Hell, Joseph: The Arab Civilization (Eng.Trans.)
16. Hitti, Philip K. : History of the Arabs
17. Hitti, Philip K. : The Arabs
18. Hussaini, S.A.Q. : Arab Administration
19. Iqbal,Afzal: Culture of Islam
20. Landau, Rom: Islam and the Arabs

21. Lane - Poole, Stanley: The Speeches and Table - Talk of the Prophet Muhammad
22. Lewis, Bernard: The Arabs in History
23. Nicholson, R.A A Literary History of the Arabs
24. Nu'mani, Shibli : Siratun Nabi (Eng. Trans.) Vol. i - iii
25. Ockley : The Saracens
26. O'Leary, De Lacy : History of Arabia Before Muhammad
27. Rahim, A. : A Short History of Islam
28. Rahman, Afzalur : Mohammad, Encyclopaedia of Seerah Vol : I & II
29. Rodinson, Maxime : Muhammad (Eng. Trans.)
30. Smith, Bosworth : Mohammad and Mohammadanism
31. Watt, W.M.Muhammad, Prophet and Statesman

அறபு

32. அபுல் ஹஸன் அலீ அல் நத்வி : ஸீரதுந் நபவிய்யா.
33. இப்ன் கதீர் : அல் பிதாயா வந் நிஹாயா, பாகம் i - V
34. இப்ன் கய்யிம் : ஷாதுல் மஆத், பாகம் ii
35. இப்ன் அல் தய்பங் : ஹதாஇகுல் அன்வார் வ மதாலிஉல் அஸ்ரார்
36. இப்ன் ஸஃத் : தபகாதுல் குப்ரா : பாகம் i - ii
37. இப்ன் ஹிஷாம் : ஸீரதுந் நபவிய்யா
38. தஹபீ, அல் : துவலுல் இஸ்லாம்
39. பலாதுரீ, அல் : புதூஹுல் புல்தான்
40. முஹம்மத் அல் ஙஷ்ஷாலீ : பிக்ஹுல் ஸீரா
41. ஷுர்கானீ, அல் : ஷர்ஹுல் மவாஹியுல் லதுன்யா, பாகம் i, ii
42. ஹமவீ, யாகூத் அல் : அல் முஃஜமுல் புல்தான்
43. மிஸ்காதுல் மஸாபீஹ்
44. ஸஹீஹுல் புகாரீ
45. ஸஹீஹுல் முஸ்லிம்
46. தப்ஸீர் அல் குர்துபீ
47. தப்ஸீர் இப்ன் கதீர்
48. தப்ஸீர் அல் தபரீ

ஆசிரியரின் பிற நூல்கள்

1. பரீட்சைகளிற் சித்தி பெறுவதெப்படி?
2. அறிவுத்துறையில் முஸ்லிம்கள்
3. மதுக்கலசம்
4. பாலியற் பிரச்சினைகள்
5. கவிதாஞ்சலி (கவிதை)
6. இஸ்லாமிய வரலாறு II
7. இஸ்லாமிய வரலாறு III
8. இஸ்லாமிய வரலாறு IV
9. அறிவியல் வளர்த்த முஸ்லிம்கள் I
10. நான் (கவிதை)
11. நீ (கவிதை)
12. நம்பிக்கை மணிகள் (கவிதை)
13. முறையீடு (கவிதை)
14. ஸூபிகள் I
15. பாலியலும் இஸ்லாமும்

ISBN 955 - 96577 - 0 - 4